சட்டம் 9 (1) ஆவது பிரிவின் விளக்கத்தை அனுசரித்துள்ள ஜமீன்தாரின் சொந்த சொத்து மாற்றப் பெற்றவரின் சொந்த சொத்து முதலில் விற்கப்பட்டு அதன் பின்னரும் பாக்கி தீர்க்கப் படாமலிருக்குமேயானால் நிலம் விற்கப்பட வேண்டும்.

30—8—1864 தேதி, 5613, வ.து.க.செ.
5—3—1873 தேதி, 260, அ.ஆ.
14—6—1913 தேதி, 155, வ.து.க.செ.

குறிப்பு.—கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினர் ஒருவரின் தனித்த முறையில் உள்ள கடமைக்காகச் செலுத்தப்பட வேண்டிய பாக்கிகளை வசூலிப்பதற்கு அக் கூட்டு குடும்பத்தின் பாகப் பிரிவினையாகாத சொத்தின் மீது 1864 ஆம் ஆண்டு ஆவது சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடாது.

21—9—1956 தேதி, 3598, அ.ஆ.வரு.பல.

4. விவசாயிகளின் சொத்துக்களில் குறிப்பிடப்பட்ட சில வற்றைப் பொருத்தமட்டில் விதிவிலக்கு.—ஒவ்வொரு விவசாயி யின் விவசாயக் கருவிகளும், ஒரு ஜதை உழவுக் கால்நடைகளும், வழக்க முறை அல்லது சமயக் கொள்கையை அனுசரித்து ஒரு மாதினிடமிருந்து எடுத்துவிடத் தகாதனவையாகிய "தாலி" அல்லது "திருமண மோதிரம்" போன்ற உடலணிகலன்களும் தீர்வை பாக்கிகளுக்காக ஜப்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப் படுவதிலிருந்து விதி விலக்களிக்கப்பட்டவையென அரசினர் தங்கள் தனிற ஆணை ஒன்றில் கட்டளையிட்டிருக்கிறார்கள். வீடு களின் கதவுகளையும் ஜன்னல்களையும் ஜப்தி செய்வது சட்ட விரோதமாகிறது.

27—6—1934 தேதி, 82, வ.து.க.செ.
21—2—1907 தேதி, 59, வ.து.க.செ.
11—11—1892, தேதி, 656, வ.து.க.செ.
25—3—1893 தேதி, 146, வ.து.க.செ.
21—9—1956 தேதி, 3598, அ.ஆ.வரு.பல.

குறிப்புகள்.—(1) இராமத்தில் சொந்தமாக (அ) நிலங்களில்லாதவர்கள் நிலத்தை அனுமதி பெறுமல் விவசாயம் செய்து கொண்டிருப்பவர்களாயின் அவர் களுக்கும் மேற்சொன்ன விதி விலக்கு அளிக்க வேண்டும். (அ)

(2) (அ) ஒரு குடியானவர் வசம் சொந்தமான பல (அ) உடைமைகள் இருக்கு மானால் ஒவ்வொரு தடவையிலும் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படும்போது ஒவ் வொரு ஜதை உழவு கால்நடைகளைப் பொருத்த வரையில் மட்டுமே அவ்விதி விலக்குப் பொருந்தும்.

(3) பலர் ஒன்று சேர்ந்து (அ) நில உடைமைகளைக் கூட்டு முறையில் (அ) தங்களிடம் வைத்துக் கொண்டிருப்பார்களேயானால் அவர்களில் ஒவ்வொருவரும் தமக்காக விதி விலக்குப் பெறுவதற்குத் தகுதியுண்டு.

11—11—1892 தேதி, 656, வ.து.க.செ.
(அ) 2—8—1928 தேதி, 1738, அ.ஆ.வரு.
(அ) 31—8—1888 தேதி, 87, வ.து.க.செ.

5. பாக்கிகளுக்கு விதிக்கப்படும் வட்டி.—7-வது பிரிவின் கீழ் உள்ள பாக்கிகளுடன் ஆண்டுக்கு ஆறு சதவீத வட்டியும் கூடும். ஆனால் ஜமீன் நிர்வைகளும் இனம் கிராமங்களின் நீங்கலாக, கலெக்டர் அல்லது கோட்ட ஆட்சியாளரின் ஆணை களாலன்றி, பசலி ஆண்டு முடிவடையும் வரையில் நிலத் தீர்வை பாக்கிகளுக்கு வட்டி விதிக்கலாகாது.

30—8—1864 தேதி, 5613, வ.து.க.செ.
(5) 28—11—1884 தேதி, 4105, வ.து.க.செ.

6. ஜப்தி நடைமுறை.—அசையும் பொருளை ஜப்தி செய் வதில் அனுசரிக்கவேண்டிய விதிகள் 8 முதல் 21 பிரிவுகளில் உள்ளன. பொதுவாக, தாசில்தார் அல்லது தாலுகா தலைமைக் கணக்காளர் ஜப்தி ஆணையை (அதாவது எண் I கேட்பு அறிவிப்பை) பிறப்பிப்பார். தாசில்தாராயினும், தலைமைக் கணக் காளராயினும், இவ்வகையில் கலெக்டரால் அதிகாரம் வழங்கப் பட்டிருக்க வேண்டும். இவ்வகையில் நடவடிக்கை எடுக்கத் தக்க அலுவலர்களுக்கு அளிக்கப்படும் அதிகாரம் கலெக்டரால் பிறப்பிக்கப்படும் போது ஆணையில் வழங்கப்பட வேண்டும் என்பது முறை. ஒவ்வொன்றிலும் விதித்த தொகையைப் பற்றிய அறிவிப்பை எழுத்து வடிவில் ஜப்தி செய்வோருக்குக் கொடுக்க வேண்டும். அவர் இவ்வறிவிப்பை தொகை செலுத்தத் தவறியவரிடம் காண்பிக்க வேண்டும். பாக்கித் தொகை முதலி யவை உடனடியாகச் செலுத்தப்படாவிட்டால், மேற்கொண்டு அறிவிப்பு கொடுக்காமலே ஜப்தி நடவடிக்கை எடுக்க அவ் வறிவிப்பே ஜப்தி செய்பவருக்கு அதிகார ஆதாரமாக இருக்கும்.

குறிப்பு.—நில வருவாய் ஆய்வாளர்களும் தங்கள் பிர்க்காவின் கிராமங்களி பாக்கியாக நிற்கும் தொகைகளைப் பொருத்த மட்டில் கேட்பு அறிவிப்புகளைப் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறார்கள்.

30—8—1864 தேதி, 5613, வ.து.க.செ.
9—12—1923 தேதி, 2234, அ.ஆ.வரு.பல.
14—11—1898 தேதி, 680, அ.ஆ.
18—12—1933 தேதி, 134, வ.து.க.செ.
21—9—1956 தேதி, 3598, அ.ஆ.வரு.பல.

7. ஜப்தி செய்யப்பட்ட சொத்து விற்பனை செய்யப் படுவது.—ஜப்தி செய்யப்பட்ட சொத்து விற்பனை செய்வதில் அனுசரிக்க வேண்டிய விதிகள் 22 முதல் 24 வரையுள்ள பிரிவுகளில் உள்ளன. விற்பனை நடைபெற வேண்டுமானால் விற்பனை அறிவிப்பு உரிய முறையில் விளம்பரம் செய்யப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்கள் கழிந்திருக்க வேண்டும். விற்பனை நாளுக்கு முந்திய நாளில் சூரியன் மறைவதற்கு

முன்னர் பாக்கிகள் செலவுத் தொகைகளுடன் செலுத்தப்படுமே யானால் 10 ஆவது பிரிவின்கீழ் பாக்கியை செலுத்தத் தவறியவரின் சொத்து விடுதலை செய்யப்பட வேண்டும்.

30—8—1864 தேதி, 5613, வ.து.க.செ.
414—7—1893 தேதி, 414, வ.து.க.செ. 4

1839 ஆம் ஆண்டு ஆவது 2 ஆவது பிரிவின்கீழ் வருவாய் பாக்கிகளுக்காக ஜப்தி விற்பனை செய்யத்தக்க ஆணையாளர்களுக் குரிய அதிகாரங்கள் தாசில்தார்களுக்கும் வழங்கப்பட்டிருக் கின்றன. ஜப்தி செய்யப்படும் சொத்து விற்பனை செய்வதற்கு வேண்டிய அதிகாரத்தை சட்டத்தின் 6 ஆவது பிரிவின்கீழ் நில வருவாய் ஆய்வாளர்களுக்கும் தனிப்பட்ட சிலவற்றில் கிராமத் தலைமை அலுவலருக்கும் தாசில்தார்கள் பொது ஆணை மூலம் ஒப்பளிக்கலாம். அதே சமயத்தில் அவர்கள், ஜப்தி செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளவர் விற்பனைகளில் நேரிடும் முறைகேடுகளுக்குப் பொறுப்பாளி ஆக்கப்படுவார் எனவும், கடுமையான தண்டனைக்கும், பாதிக்கப்படுபவர் அடையும் இழப் புகளுக்கு உள்ளாவர் எனவும், ஜப்தி செய்ய அதிகாரம் அளிக்கப் பட்டிருப்பவர் எடுக்கும் நடவடிக்கை மாவட்டக் கலெக்டருக்கும் கோட்ட ஆட்சியாளருக்கும் உரிய பொது கட்டுப்பாட்டு அதி காரங்களுக்கும் கண்காணிப்பிற்கும் உட்படும் எனவும் தெளிவுற அறிவுறுத்தப்படவேண்டும். மேலும் நடத்தப்பட்ட விற்பனைகள் முறை தவறி இருப்பின் அத்தகைய விற்பனைகளை ரத்து செய்து அச்சொத்தினை மூந்தின உரிமையாளர்களுக்குத் திரும்பக் கொடுத்து விடுவதற்கு அவருக்கு அதிகாரம் உண்டு. அவர் நடத்தும் விற்பனைகளில் அசையும் பொருளை விற்பதற்குரிய விளம்பரத்தில் (3 என் படிவத்தில்) தாமே கையொப்பமிட வேண்டும். அதில் தாசில்தாராயினும், தாலுகாத் தலைமைக் கணக்காளராயினும் கையெழுத்து செய்யக் கூடாது.

12—8—1942 தேதி, 270, வ.து.க.செ. அச்சு.

8. நில ஜப்தி.—6, 7 பத்திகளில் முன்னமே சொல்லப்பட் டுள்ள சட்டத்தின் பிரிவுகள் அசையும் பொருள் ஜப்தியை குறிப்பிடுகின்றன. பின்னர் அச்சட்டம் 25 முதல் 35 வரை உள்ள பிரிவுகளில் நிலத்தின் ஜப்தியைப் பற்றியும் அந்நிலத்தின் நிர்வாகத்தைப் பற்றிய விதிகளைக் குறிப்பிடு கின்றது. நிலத்தை ஜப்தி செய்வதற்கு முன் கேட்பு அறிவிப்புத்

தொகை செலுத்தத் தவறியவருக்குச் சேர்ப்பிக்கப்படுவதும் தவிர அதன் நகல் ஒன்று அவருக்குக் கொடுக்கவேண்டும்; ஜப்தி செய்த பிறகு விவரங்களடங்கிய அறிவிப்பு ஒன்று நிலத்தில் நன்கு தெரியுமாறு எடுப்பான இடத்தில் ஒட்டி வைக்க வேண்டும். ஜப்தியைப் பற்றி அரசாங்க அறிவிப்பு நிலத்தில் ஒட்டி வைத்து விளம்பரம் செய்வதுடன் மாவட்ட அரசிதழிலும் பகிரங்கமாக வெளியிடப்பட வேண்டும். நிலம் ஏல விற்பனைக்கு கொண்டு வருமுன்னரே இத்துவக்க நடைமுறைகளெல்லாம் தவறாமல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

30—8—1864 தேதி, 5613, வ.து.க.செ.
21—9—1956, 3598, தேதி அ.ஆ.வரு.பல.

குறிப்புகள்.—(1) ஜப்தி அறிவிப்பு இயன்ற வரையில் தொகை செலுத்தத் தவறியவரிடம் நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வாறு செய்வதற்கு இயலாவிடின் இது தமுக்கடிப்பினுல் கிராமத்தில் விளம்பரம் செய்யப்பட வேண்டும் தவிர, பட்டியல் ஒன்று கிராமச் சாவடியில் அல்லது கிராம தேவதையின் கோவில் அல்லது பொது மக்கள் கூடும் வெளிரு இடத்திலாவது ஒட்டி வைக்கப்படவேண்டும்.

6—6—1923 தேதி, 889, அ.ஆ.வரு.பலவ.
13—6—1923 தேதி, 1[illegible], வ.து.க.செ.பலவ.

(2) படைச் சேவையில் இன்னும் பணி புரிந்து கொண்டிருக்கும் போர் வீரருக்குத் தனிப்பட்ட வகையில் அல்லது கூட்டுப் பட்டா முறையில் நிலம் சொந்தமாக இருப்பினும் அல்லது அது யுத்த காலத்தில் அவர் புரிந்த படைச் சேவைக்காக ஒப்படை செய்யப்பட்டது எனினும் அல்லது அந் நிலம் அவர் வழியுரிமையில் அடைந்த நிலமாக இருப்பினும் அல்லது அந்நிலம் விற்பனை அல்லது நன்கொடை அல்லது வேறு வகையில் அடைந்த நிலம் எனினும், தீர்வை செலுத்தத் தவறியதாக நிலத்தை விற்பனைக்குக் கொண்டு வருவதற்கு முன் நில வருவாய் அலுவலர் அந்த நிலத்தின் தீர்வைத் தவணை தவறியும் செலுத்தப்படாமலிருக்கிறதென்றும், இரண்டு மாதத்திற்குள் அது செலுத்தப்படாவிட்டால் நிலம் விற்பனைக்குக் கொண்டு வரப்படும் என்றும் தொகை செலுத்தத் தவறியவருக்கு அவரது படைத் தல அதிகாரி வழியாகத் தெரிவிக்க வேண்டும். படைச் சேவையில் பணி செய்து கொண்டிருக்கும் யாதொரு படைவீரரின் நிலத்தைத் தீர்வை பாக்கிக்காக விற்பனை செய்வதற்கு முன்பாகக் கலெக்டரின் தனிப்பட்ட ஒப்புதல் பெற வேண்டும். இதில் ஒப்பனிக்கு முன்னர் கலெக்டர் வருவாய்த் துறைக் கழகத்தின் ஆணைகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

29—1—1932 தேதி, 212, அ.ஆ.வரு.பல.
9—2—1931 தேதி, 13, வ.து.க.செ. (இரக).
21—9—1956 தேதி, 3598, நி.ஆ.வரு.பல.

9. ஜப்தியான நிலத்தை மேலாண்மை செய்வது.—ஜப்தி செய்யப்பட்ட யாதொரு காலத்திலும் நில உடைமையை மேலாண்மை செய்வதற்கு உரிய ஏற்பாடு 28-விருந்து 33 ஆவது வரையிலுள்ள பிரிவுகளில் வகுக்கப்பட்டுள்ளது. செய்யப்பட்ட ஜப்திக்கும் விற்பனைக்குமுள்ள இடைக் காலத்தில் மேலாண்மை செய்வது இன்றியமையாததென்று தோன்றினு

வன்றி அல்லது விதிக்குப் புறம்பான சூழ்நிலைகளில் இம்முறை யை மேற்கொள்ள அவசியம் ஏற்படுமாயின் அதற்குரிய கார ணங்களை முற்றிலும் விளக்கம் செய்து வருவாய்த் துறைக் கழ கத்தின் ஒப்பளிப்பைப் பெற்றலன்றி அத்தகைய நிர்வாகத்தை மேற்கொள்ளக்கூடாது. பாக்கிகள் தீர்ந்தவுடன் எஸ்டேட்டுகளைத் திரும்பக் கொடுத்துவிடலாமென்ற நோக்கத்துடன் பாக்கிகள் அதிகமாகக் குவியுமாறு விடப்பட்டுள்ள எஸ்டேட்டுகளை மேலாண்மை செய்யும் பழக்கம் மிகவும் ஆட்சேபனையானது. ஆதலால் தனிக் காரணங்கள் இருந்தாலன்றி இது அனுமதிக்கப்பட மாட்டாது. தவணைத் தொகை செலுத்தத் தவறிய நில முடையவரின் அசையும் பொருளையோ அசையாப் பொருளையோ விற்பனை செய்து எல்லாப் பாக்கிகளையும் உடனடியாக கைவரப் பெறுவதற்கு வகுக்கப்பட்டுள்ள சட்ட முறைகளை எல்லாம் மேற்கொள்ளவேண்டும். ஜமீன்தார்கள் எஸ்டேட்டு களிலும் மிட்டாதார்களின் எஸ்டேட்டுகளிலும் பாக்கிகள் நிற் கும்போது, கலெக்டர் அவ்வெஸ்டேட்டுகளின் மேலாண்மையை ஏற்றுக்கொள்ள மாட்டார் எனவும், ஆனால் அவற்றைச்சட்டத்தில் குறிப்பிட்ட வகையில் அப்பாக்கியை கைவரப் பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

ஜப்தி செய்யப்பட்ட எஸ்டேட்டுகளை மேலாண்மை செய்வ தற்கு அவசியமான தற்காலிகப் பணியாளரை நியமிப்பதற்குரிய யோசனைகளை வருவாய்த் துறை கழகத்தின் வழியாக அரசினருக்கு அனுப்ப வேண்டும்; அரசினர் ஒப்பளிப்பு பெறுவதற்கு முன்னதாகப் பணியாளரைக் கலெக்டர் அமர்த்தக்கூடாது.

12—4—1939 தேதி, 895, அ.ஆ.அச்சு.
8—3—1940 தேதி, 18, வ.து.க.செ. அச்சு.
30—8—1864 தேதி, 5613, வ.து.க.செ.
20—12—1902 தேதி, 1121, வி.ஆ.நிதி.
24—2—1903 தேதி, 23, வ.து.க.செ.

10. அக்கறை கொண்டுள்ளவர்களால் பாக்கிகள் செலுத்தப் படுவது.—1897-ஆவது ஆண்டு சென்னை 1-ஆவது சட்டத்தினால் திருத்தப்பட்ட 35, 37 பிரிவுகளின் கீழ்ப் பாக்கிகளுக்காக ஜப்தி செய்யப்பட்டுள்ள அல்லது விற்பனை செய்யப்படும் தருணத்தில் உள்ள நிலத்தில், அக்கறை கொண்டுள்ள குடிகளோடு உண்மையில் அடமானம் பெற்றிருப்பவர்களும், அனுபோக பாத்தியதையில்

லாவிட்டாலும் தொகை செலுத்தத் தவறியவருக்கு எதிராக உரிமை கொண்டாடுபவர்களும் பாக்கித் தொகையைச் செலுத்தி நிலத்தை மீட்டுக் கொள்ள வாய்ப்பு அவர்களுக்கு அளிக்கப் பட்டுள்ளது. அந்நிலத்தில் தங்களுக்குள்ள உரிமையைக் காப் பாற்றிக் கொள்ளும் பொருட்டு நியாயமான வசதிகளை எல்லாம் அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

*30—6—1864 தேதி, 5613, வ.து.க.செ.

குறிப்புகள்.—கிராமத்தில் குடியிருப்பில்லாத குடியானவர்களும் சொத்தில் வில்லங்க உரிமை உடையவர்களும் ஒரு ரூபாய் ஆண்டுக் கட்டணம் செலுத்தித் தங்கள் முகவரிகளையும் தாங்கள் உரிமை கொண்டாடும் நிலங்களின் அளவை எண்களையும் பதிவு செய்து கொள்ளலாம்; அந்நில அளவை எண்கள் ஒரு தாலூ காவில் பல கிராமங்களின் பல்வேறு கைப்பற்றுகளில் சேர்ந்திருந்த போதிலும் அவை எல்லாவற்றிற்குமே ஒரே கட்டணம் போதுமானது. நீர்வை பாக்கி களுக்காக இந்த அளவை எண் நிலங்களில் எவற்றையேனும் விற்பனை செய்வ தற்காக விளம்பரம் செய்யப்படுமானால் இது பற்றி தக்க காலத்தில் முகவரி பதிவு செய்து கொண்டவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். இவ்வறிவிப்பு வித் தகையோர்க்கு வேறொரு வர் வழியாக அனுப்பப்படுமானால் அது பெற்றுக் கொள் ளப்பட்டதென்பதற்காகப் பற்றுச் சீட்டு சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து வாங்கிக் கொள்ள வேண்டும். அஞ்சல் வழியாக அனுப்புப்படும்போது பற்றுச் சீட்டு பெறும் வகையில் பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும். பதிவுக் கட்டணம் முன்னமே வாங்கப்பட்டிருக்கும் காரணத்தால் அஞ்சல் செலவு அல்லது வேறு எத்தகைய செலவுத் தொகையும் வசூலிக்கக் கூடாது.

2—7—1935 தேதி, 1494, அ.ஆ.வரு.பல.
6—6—1923 தேதி, 889, அ.ஆ.வரு.பல.
8—7—1935 தேதி, 82, வ.து.க.செ.
13—6—1923 தேதி, 1309, வ.து க.செ. பலவ.

11. நில விற்பனை செய்வதற்குரிய நடைமுறை.—36 முதல் 45 வரையுள்ள பிரிவுகள் நில விற்பனையையும் அத்தகைய விற் பனையின் விளைவுகளையும் பற்றியதாகும். சென்னத்தி மில்கியாத் இஸ்திம்ரார் என்னும் உரிமைப் பட்டய ஜமீன் கிராமங்களைத் தவிர மற்ற இன நிலத்தை விற்பனை செய்வதற்கு வருவாய்த் துறையின் முன் அனுமதி பெற வேண்டியவசியமில்லை. அத் தகைய ஜமீன் கிராமங்கள் உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுத் தனியாய்ப் பதிவு செய்யப்பட்ட பாகங்களும் வருவாய்த் துறையின் முன் அனுமதியின்றி விற்பனை செய்யப்படலாம். ஆனால் தொகை செலுத்தத் தவறியவரின் நிலத்தை ஜப்தி செய்யும்போது வெளியிடப்படவேண்டிய விற்பனை அறிவிப்புடன் 36 ஆவது பிரிவு 2ஆவது உட்பிரிவில் சொல்லப்பட்டுள்ள விவரங் களைக் கொண்ட இன்னுமொரு விற்பனை அறிவிப்பையும் வெளியிடவேண்டும். இது ஆங்கிலத்திலும் மண்டல மொழியிலும் தயாரிக்கப்பட்டு விற்பனைக்குக் குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்னதாகக் கலெக்டர் அலுவலகத்திலும் குறிப்பிடப்பட்ட

இதர இடங்களிலும் ஒட்டி வெளியிடப்பட வேண்டும். விற்பனைக் காலத்தில் அந்த அறிவிப்பு முழுமையும் பகிரங்கமாய் படித்துக் காட்டப்பட்டு அவ்வாறு படித்துக் காட்டப்பட்டதென்று எழுதி சுருக்கொப்பமும் செய்யப்படவேண்டும். விற்பனை தேதிக்குக் குறைந்தது இரண்டு வாரத்துக்கு முன்னதாக 11-ஆவது இணைப்பில் காட்டப்பட்டுள்ள 7-அ படிவத்தில் ஒரு அறிவிப்பு மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யப்பட வேண்டும். 1911 ஆம் ஆண்டு IV -வது சட்டத்தின் கீழ்ப் பதவி மாற்றப் பெற்றவரின் எஸ்டேட் அல்லது அதன் ஒரு பாகம் தீர்வை பாக்கிக்காக நடவடிக்கை தொடரப்படும்போது, விற்பனைக்கு ஒரு மாதத்திற்கும் குறைந்துவிடாத கால அளவிற்கு முன்னதாக அவ்வறிவிப்பின் நகல் ஒன்றை எஸ்டேட்டின் உரிமையாளரிடமும் சேர்ப்பித்துவிடவேண்டும். 'விற்பனை செய்வதற்கு முன், நில வருவாய் ஆய்வாளரின் பதவியினும் கீழ்நிலையில் இல்லாத அதிகாரி ஒருவர் நிலத்தைப் பார்வையிட்டாக வேண்டும். விற்பனையை செய்யும் அதிகாரி தாமே அறிவிப்பைப் படித்துக் காட்டி அவ்வாறு செய்யப்பட்டதாகத் தாம் அனுப்பும் விற்பனை அறிக்கையிலும் சான்றிட வேண்டும்.

30—8—1864 தேதி, 5613 வ.து.க.செ.
24—3—1903 தேதி, 46, வ.து.க.செ.
230—11—1877, தேதி, 333, அ.ஆ.
59—7—1919 தேதி, 1874, வ.து.க.செ. வாலாயம்.
224—1—1878 தேதி, 202, வ.து.க.செ.
24—3—1878 தேதி, 579, வ.து.க.செ.
914—6—1912 தேதி, 155, வ.து.க.செ.
611—10—1929 தேதி, 3067, வ.து.க.செ. பலவ.
21—9—1956 தேதி, 3598, அ.ஆ.வரு.

குறிப்புகள்.—(1) முற்றிலும் இன்றியமையாமல் இருந்தாலன்றி பழங்காலத்திய ஜமீன் ரொமங்களைக் கலெக்டர்கள் விற்பனை செய்யும் யோசனையைத் தவிர்க்க வேண்டும்.

(2) நிலையாக வரியமைந்த பெரிய எஸ்டேட்டுகளைப் பொருத்த மட்டில் அவற்றின் விற்பனை விரசினருடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்குட்பட்ட அதிகாரி அல்லது ஒரு டிப்டி கலெக்டரின் முன்னிலையில் செய்ய வேண்டும். சொற்பப் பாக்கிகளுக்காக சிறிய விற்பனைகளைத் தாசில்தார் முன்பாக அல்லது கலெக்டரால் இதற்காக நியமிக்கப்படக் தக்க வேறொரு பணியாளர் முன்பாகத் தாலூகாக் கச்சேரியில் நடத்தலாம்.

(3) கைப்பற்று நிலம் விற்பனையாவதற்கு முன்னர்எப்போதாவது பாக்கித் தொகை செலுத்தத் தவறியவர் இறந்து விட்டனர் என்றால் முதலில் அவர் வாரிசுகளின் பெயரில் பதிவை மாற்றுவதற்காக நடதவடிக்கைகளை விரைவினில் எடுக்க வேண்டும் விற்பனை நட வடிக்கைகளைப் புதிதாக ஆரம்பிக்க வேண்டும்.

2—4—1842 தேநி, 843, அ.ஆ.வரு.பல.
17—7—1842 தேநி (மா) வா.து.க.செ.அச்சு.
326—10—1837 தேநி, வ.து.க.செ (மா. தொகுதி பக். 238).
429—5—1843 தேநி, வ.து. க.செ. (மா. தொகுதி பக். 337 குறிப்பு 3).
45—10—1855 தேநி, வ.து.க.செ (ம.தொகுதி 1855-ம் ஆண்டு பக்.90).
411—2—1895 தேநி, 45 வ.து.க.செ.
422—8—1893 தேநி, 481 வ.து.க.செ.

2. ஏலத்தில் யார் யார் விலை கூறலாம் என்பது.—நில விற்பனையில் பாக்கித் தொகை செலுத்தத் தவறியவர் உட்பட எவருமே ஏலத்தில் விலை கூறலாம். ஆனல் அரசுப் பணியாளர்கள், அரசுப் பணியாளர்கள் நடத்தை விதிகளை அனுசரித்துத்தான் அவ்வாறு செய்துகொள்ள முடியும்.

21—9—1856 தேநி, 3598 அ.ஆ.வரு.பல.

13. விற்பனைகளை உறுதி செய்வது.—பொறுப்பிலிருக்கும் சார் நிலைக் கலெக்டர் அல்லது டிப்டி கலெக்டர் அல்லது உதவிக் கலெக்டர் 1864-ம் ஆண்டு ஆவது சட்டம் 38 ஆவது பிரிவின் கீழ் விற்பனைகளை உறுதி செய்யவும் சான்றுப் பத்திரங்களை கொடுக்கவும் அதிகாரம் பெற்றிருக்கின்றனர். ஆனல் இவ்வலுவலர்கள் விற்பனைகளை உறுதி செய்தோ அல்லது ரத்து செய்தோ பிறப்பிக்கக்கூடிய ஆணைகள், 1828 ஆம் ஆண்டு VII ஆவது ஒழுங்கு விதியின்கீழ் கலெக்டர்கள் செலுத்தத்தக்க ரிவிஷன் அதிகாரங்களுக்கும் கட்டுப்பாட்டு அதிகாரங்களுக்கும் உட்பட்டவையாகும். இத்தகைய அதிகாரங்களைக் கலெக்டர் தாமாகவோ அல்லது சம்பந்தப்பட்ட கட்சிகாரர்களில் ஒரு கட்சியினர் கேட்டுக் கொண்டதினலோ செலுத்தலாம். இத்தகைய அதிகாரங்கள் இன்ன கால வரம்பிற்குள்தான் செலுத்தத்தக்கன என்பதுதான் யாதொரு வரம்பும் சட்டத்தால் விதிக்கப்படவில்லை.

குறிப்பு.— ஒரு பெரிய விற்பனையில் விலைக்கு வாங்கப்பட்ட எல்லா நிலங்களுக்கும் ஒரே சான்றுப் பத்திரம் விளிக்கலாம். அது ஆங்கிலத்திலோ அல்லது மண்டல மொழியிலாவது இருக்கலாம். ?

17—8—1838 தேநி, 2061 அ.ஆ.வரு.
3—9—1879 தேநி, 2516, வ.து.க.செ.
17—2—1891 தேநி, 109, வ.து.க.செ.
21—9—1956 தேநி, 3578, அ.ஆ.வரு.
14—9—1939 தேநி, 101, வ.து.க.செ.
13—9—1906, தேநி, 254, வ.து.க.செ.
3—5—1880 தேநி, 613, வ.து.க.செ.

14. ஜமீன் கிராமங்களிலுள்ள சிறு இனம்களுக்குரிய பாக்கிகளை வசூலிப்பது.—நிலக் கிழார் பயிரிடுபவர் இவர்களுக்குள் எத்தகைய தொடர்பு இருக்கிறதோ அத்தகைய தொடர்பு ஜமீன்தார்களுக்கும் அவர்களின் எஸ்டேட்களில் இனம் கமிஷனல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள இனம் உரிமையாளர்களுக்குமிடையில் ஏற்படுவதில்லை. ஆகையால் அத்தகைய இனம்களுக்குரிய விடுவரியை 1864 ஆம் ஆண்டு II ஆவது சட்டத்தின் கீழேயே வசூலிக்க வேண்டும். இத்தகைய விடுவரி அல்லது நிலத்தில் மேல் வரி வசூலிக்கும் பொறுப்பு ஜமீன்தார்களுக்கு அளிக்கப்பட்டிருந்தால், தவணைத் தொகைகளைச் செலுத்தத் தவறிய இனம்தார்களிடமிருந்து பாக்கியை 1864 ஆம் ஆண்டு II ஆவது சட்டத்தின்கீழ் வசூலிக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட ஜமீன்தார்கள் கலெக்டரைக் கேட்டுக்கொள்ள வேண்டும். ஆனால் இவ்வாறு செய்து கொள்ளும் விண்ணப்பங்கள் சிவில் மன்றங்களில் வழக்கு தொடர்ந்து வசூலிக்க முடியுமாதல் போன்றே விண்ணப்பங்கள் செய்துகொள்ளும் ஆண்டை ஒட்டிய முந்திய மூன்று பசலிகளுக்குரிய பாக்கிகளை மட்டும் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

14—10—1880 தேதி, 1512, வ.து.க.செ.
25—8—1892 தேதி, 468, வ.து.க.செ.

15. எவ்வளவு பரப்புள்ள நிலம் விற்பனை செய்யப்பட வேண்டும்.—தீர்வை பாக்கிகளுக்காகத் தீர்வைத் தொகை செலுத்தத் தவறியவர் கைப்பற்று நில முழுவதையுமோ அல்லது எதாவதொரு பாகத்தையோ விற்பனை செய்ய, 44 ஆவது பிரிவின்கீழ்க் கலெக்டருக்கு அதிகாரமுண்டு அதாவது உண்மையில் பாக்கிக்குச் சம்பந்தப்பட்ட நில முழுவதும் அல்லது அதன் பின்னர் மட்டுமல்லாமல் தொகை செலுத்தத் தவறியவரின் கைப்பற்று நிலம் முழுவதையும் அல்லது அதன் ஒரு பாகத்தை விற்பனை செய்யலாம். ஆனாலும் செலவுத் தொகைகளுடன் பாக்கியைத் தீர்ப்பதற்கு அந்த நிலத்தில் எவ்வளவு பாகம் விற்கப்பட வேண்டுமோ அத்தகைய "பாக"த்திற்கதிகமாய் நிலம் விற்பனை செய்யக் கூடாதென்று அச்சட்ட பிரிவின் பிந்திய உட்பிரிவில் விதிக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாய்த் தொகை செலுத்தத் தவறியவர் தானொருவரே தனித்து அனுபவிக்கக் கூடிய தனி அளவை எண் உடைய பதிவான புலமாயிருக்கும் நிலத்திற்குக் குறைந்துள்ள பாகத்தை விற்பனை செய்யக் கூடாதென்பது முறை. இம் முறையை அனுசரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(*)இந்தியச் சட்ட வெளியீடு XIII. சென்னை, பக்கம் 479.
(*)30—8—1864 தேதி, 5613, வ.து.க.செ.

16. பாக்கிகளைச் செலுத்துவதற்குரிய பிணை.—பாக்கிகளைச் செலுத்துவதற்காகக் கொடுக்கப்படும் பிணையை ஒப்புக் கொள்ளவும், பாக்கி செலுத்தத் தவறியவரின் சொத்து விற்பனையைத் தள்ளி வைக்கவும் 47 ஆவது பிரிவின்கீழ்க் கலெக்டருக்கு அதிகாரமுண்டு.

30—8—1864 தேதி, 5613, வ.து.க.செ.

17. தொகை செலுத்தத் தவறியவரைச் சிறை வைப்பது.—பாக்கி செலுத்தத் தவறியவராகிலும் அவருக்குப் பிணை கொடுத்தவராகிலும் வேண்டுமென்றே பாக்கிகளைச் செலுத்தாமல் வைத்திருக்கிறாரென்று அல்லது செலுத்த வேண்டியதை ஏமாற்றித் தப்பித்துக்கொள்ளும் நோக்கத்தில் மோசடி நடவடிக்கை மேற்கொண்டாரென நம்புவதற்குக் காரணமிருந்தால், 48, 49 பிரிவுகளின்படி அன்னார் சிறைப்படுத்தப்படக் கலெக்டர் ஏற்பாடு செய்யலாம். அரசினருக்குச் செலுத்த வேண்டிய பாக்கிகளைச் செலுத்தத் தவறியதால் இவ்வாறு சிறை செய்யப் பட்டவர்களுக்கு சிவில் நடைமுறைத் தொகுப்பின் விதிகளை அனுசரித்துத் தீர்ப்பான கடனாளிகளுக்குக் கொடுக்கத்தக்க விதத்தில் பிழைப்புப்படி கொடுக்க வேண்டும். தல நிதிகளின் பாக்கிகளுக்காகச் சிறையில் வைக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப் படும் பிழைப்புப்படியை அந்நிதிகளின்கீழ் செலவெழுதிவிட வேண்டும். இவ்விதிகள் இந்தியப் படை அதிகாரிகள், படை வீரர்கள் அல்லது படையில் பணி புரிபவர்களுக்குப் பொருந்தா. ஏனெனில் இவர்களுக்குச் சிறைப்படுதலினின்றும் விலக்களிக்கப் பட்டுள்ளது. இவர்கள் பாக்கிகள் விட்டுவைத்திருப்பார்களெனில் 1817 ஆம் ஆண்டு VIII ஆவது விதிகளின 9 ஆவது பிரிவில் விதிக்கப்பட்ட நடைமுறையைக் கலெக்டர்கள் அனுசரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

30—8—1864 தேதி, 5613, வ.து.க.செ.
(5)12—9—1879, தேதி 2589, வ.து.க.செ.
(6)1—6—1893 தேதி, 291, வ.து.க.செ.
21—9—1856 தேதி, 3598, அ.ஆ.வரு.பல.

18. நிலத்தில் நிற்கும் பயிர்களை நிலமுடையவர் அப்புறப் படுத்துவதில் தலையிடக்கூடாது.—ஒரு விலக்கு.—51 ஆவது பிரிவில் கண்டுள்ள தனி விதிகளின்கீழ் அல்லாமல் சட்ட முறையில் ஜப்தி செய்யப்பட்டிருந்தால் அன்றி நிலமுடையவர் தம் நிலத்திலுள்ள விளைச்சலை அப்புறப்படுத்துவதில் தலையிடக் கூடாது. இக் காலத்தில் அரிதாய்விட்ட தானிய வடிவில் தீர்வை செலுத்தும்

முறை நடைமுறையில் இருக்குமானால், பயிரைப் பங்கீடு செய்யும் வரையில் அல்லது அரசினரின் பங்கிற்காகப் பிணை கொடுக்கப்படும் வரையில் அல்லது அரசினரின் பங்கிற்காகப் பிணை கொடுக்கப்படும் வரையில் பயிரை அப்புறப்படுத்துவதை தடுக்க இப்பிரிவு அதிகாரம் அளிக்கின்றது.

30—8—1864 தேதி, 5613, வ.து.க.செ.

19. நிலத் தீர்வையைத் தவிர இதர வருவாய்ப் பாக்கிகளை வசூலிப்பது.—நில வருவாயைத் தவிர இதர வருவாய்ப் பாக்கிகளையும், வருவாயை உத்தேசித்து அரசாங்க நிதியிலிருந்து வருவாய் சம்பந்தமான காரியங்களுக்காகக் கொடுக்கப்படும் முன் பணங்களும் வருவாய்ப் பணிகளிலும் போலீஸ் அலுவல்களிலும் ஈடுபட்ட கிராமப் பணியாளருக்கு கொடுக்க வேண்டிய கட்டணங்கள் முதலியவற்றையும் ஒப்பந்த முறியின் வினவாக நேரிடும் இழப்புக்காக அல்லது அழிவுக்காக கொடுக்கப்பட வேண்டிய ஈடுகளையும் மாநில அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய சட்ட முறையில் அமைந்த மற்ற மேல் வரிகளையும் நிலத் தீர்வை பாக்கிகளைப் போலவே 52 ஆவது பிரிவின்கீழ் வசூலிக்கலாம். சென்னை மதுத் துறைச் சட்டம் போன்ற பற்பல தனிச் சட்டங்களிலும் இதுபோன்ற விதி வருக்கப்பட்டிருக்கிறது. ஆனபோதிலும் இவ்விதி சாலுகளே அந்த பாக்கிகளை நில வருவாய் பாக்கியாக மாற்றிவிடாதகையால் 2, 42 பிரிவுகளில் உள்ள தன்மைகள் இவற்றிற்கு வந்தடையா. ஆகையால் நில ஆக்கிரமிப்புச் சட்டம் போன்ற சில தனிச் சட்டங்களில் பாக்கித் தொகை 'நில வருவாயாக' கருதப் படுமென்ற தனி விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கிராமப் பணியாளருக்குரிய கட்டணங்களை வசூலிப்பதற்காகச் செய்யப் படும் விண்ணப்பங்கள் கலெக்டருக்கு அனுப்பப்படும். அவை அவ்வாண்டினை ஒட்டிய மூந்தின மூன்று பசலிகளின் பாக்கி களுக்கு மட்டுமே உட்பட்டிருக்க வேண்டும்.

15—11—1943 தேதி, 2920, அ.ஆ.வரு.பல.
25—11—1843 தேதி, 1533, வ.து.க.செ.பலவ.
30—8—1864 தேதி, 5613, வ.து.க.செ.
21—9—1856 தேதி, 3598, அ.ஆ.வரு.பல.

20. பற்றுச் சீட்டுகள் யாரால் கையெழுத்துச் செய்யப்பட வேண்டும்.—56 ஆவது பிரிவின்கீழ்க் கலெக்டராயினும் அவரால் இதன் பொருட்டு அதிகாரம் அளிக்கப் பெற்ற வேறு அலுவலராயினும் பற்றுச் சீட்டில் கையெழுத்து செய்து, தீர்வை

செலுத்துபவர் எல்லோருக்கும் கொடுக்க வேண்டும். அத்தகைய பற்றுச் சீட்டு II ஆவது இணைப்பில் கண்டுள்ள 12 எண் படிவத்திலிருக்க வேண்டும்.

30—8—1864 தேதி, 5613, வ.து.க.செ.

21. இதர மாவட்டங்களிலோ இதர தாலூகாக்களிலோ சேர்ப்பிக்கப்பட வேண்டிய நிறைவேற்றக் கட்டளைகள்.—1914 ஆம் ஆண்டு VIII ஆவது சட்டத்திலுள்ள திருத்தப்பட்ட 57 ஆவது பிரிவிலே அனுசரித்துக் கலெக்டர்கள் தங்கள் அதிகாரங்கள், கடமைகளெல்லாவற்றையுமோ சிலவற்றை மட்டுமோ தங்களுக்குச் சார்ந்திருக்கிறவுள்ள துணைத் தாசில்தார் பதவியிலும் தாழ் நிலையில் இல்லாத யாதொரு வருவாய் அதிகாரிக்கும் ஒப்புவிக்கலாம். இதர மாவட்டங்களிலோ அதே மாவட்டத்தில் இதர தாலூகாக்களிலோ வசூலிக்க வேண்டிய பாக்கிகளுக்காக 57 ஆவது பிரிவிற்கு இணங்க அனுப்பும் விண்ணப்பங்கள் கூடுமானவரை மிகக் குறைந்த எண்ணிக்கையிலிருக்க வேண்டும். இன்னொரு மாவட்டத்திற்கோ மாவட்டத்துக்குள்ளே இன்னொரு தாலூகாவிற்கோ அசையும் பொருளை ஜப்தி செய்வதற்காகக் கேட்பு அறிவிப்பு அனுப்ப நேரிடுமபோதெல்லாம் பாக்கி ஏறபட்ட தாலூகாவின் தாசில்தாராயினும் துணைத் தாசில்தாராயினும் தம் தாலூகாவில் தொகை செலுத்தத் தவறியவருக்குள்ள நிலத்தின் மீது அதே சமயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனெனில் இறுதியில் நிலத்தைப் பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமேற்பட்டால் அந் நடவடிக்கையைக் கால தாமதமின்றி நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

2—5—1895 தேதி, 127, வ.து.க.செ.
23—3—1915 தேதி, 108, வ.து.க.செ.
25—9—1929 தேதி, 1964, அ.ஆ.வரு.பலவ.
5—10—1929 தேதி, 3017, வ.து.க.செ. பலவ.

22. வயதடையாதவர்களின் சொத்து.—கிரமமான வாரிசு உரிமை வழியாய் வயதடையாதவர்களுக்கு கிடைக்கப் பெற்ற நிலச் சொத்து அவர் கைக்கு வந்ததற்குப் பின்னர், அதற்கு ஏற்படும் தீர்வைகளுக்காக வயதடையாதிருக்கும் காலத்தின் சட்டத்தின் 6 ஆவது பிரிவினையும் 1831 ஆம் ஆண்டு X ஆவது ஒழுங்குமுறை விதியினையும் அனுசரித்து விற்பனை செய்யக் கூடாது.

6-6-1923 தேதி. 889 அ. ஆ. வரு. பலவ.
13-6-1923 தேதி. 1309 வ. து. க. செ. பலவ.

23. நிறைவேற்றக் கட்டளை நிறைவேற்றுதலுக்குரிய கால வரம்பு.—1864 ஆம் ஆண்டு II ஆவது சட்ட ஏற்பாடுகளின் கீழ்ச் சேர்ப்பிக்கப்படவோ அல்லது நிறைவேற்றப்படவோ அனுப்பப் படும் கட்டளைகளுக்கு அச் சட்டத்தில் கால வரம்பு யாதொன்றும் விதிக்கப்படவில்லை என்றாலும் அரசினருக்குச் சேர வேண்டிய வருவாயைத் தீவிரமாய் வசூலிப்பதற்கும், நெறி பிறழ்ந்து தவறுதல் இழைக்கும் கட்டளைச் சேவகர்கள் எடுக்கக் கூடிய நடவடிக்கையினின்றும் செலுத்தத் தவறியவருக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் ஏதாவதொரு கால வரம்பு அமைக்க வேண்டியது அவசியமாகிறது. ஆகையால் வருவாய்த் துறைக் கழகம் இருபது நாள் கால வரம்பை நிர்ணயம் செய்திருக்கிறது. யாதொரு கட்டளையை இருபது நாளுக்குள் சேர்ப்பிக்கவோ அல்லது நிறைவேற்றவோ தவறிய கட்டளையைச் சேவகர் அதைத் திருப்பி அனுப்பும்போது அதைச் சேர்ப்பிப்பதற்கு அல்லது நிறைவேற்றத் தவறியதற்குக் காரணத்தை விளக்க வேண்டும்.

3—6—1892 தேதி, 247, வ.து.க.செ.

24. நில வருவாய் வசூல் சட்டத்தை விளம்பரம் செய்வது.—கலெக்டர்கள் நில வருவாய் வசூல் சட்டத்தைப் பொதுவாக எல்லோரும் அறியுமாறு விளம்பரம் செய்ய வேண்டும். மேலும், சார்நிலை அலுவலர்களேயன்றி வசூலுக்காக நியமனம் செய்யப்படும் தாலூகாப் பணியாளர்களும் கிராமப் பணியாளரும் இச் சட்டத்தை நன்றாக அறிந்துகொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்த வேண்டும்.

30—8—1864 தேதி, 5613, வ.து.க.செ.

25. சட்டத்தின் வகுக்கப்பட்டுள்ள படிவங்கள்.—இச் சட்டத்தின் கீழ் உள்ள படிவங்கள் II ஆவது இணைப்பில் உள்ளன.

26. 1864 ஆம் ஆண்டு ஆவது சட்டத்தின்கீழ்ச் சட்டத்திற்கு விரோதமானவைகளும் முறைகேடுகளும்.—சென்னை நில வருவாய் வரி வசூல் சட்டமாகிய 1864 ஆம் ஆண்டு II ஆவது சட்டத்தின் கீழ் நடைபெறும் விற்பனை நடவடிக்கைகளை ரத்து செய்யப்படக் காரணமாகவுள்ள சட்ட விரோதமானவற்றின் பட்டியல் ஒன்றும் அவ்வப்போது ஆட்சி முறையை மட்டும் ஒட்டி வெளியிடப்படும் அறிவுரைகளை மீறுவதால் நிகழக்கூடிய முறைகேடுகள் இன்னவை எனக்

காட்டும் பட்டியல் ஒன்றும் சார்நிலை அலுவலர்கள் அத்தகைய வற்றைத் தவிர்க்க வேண்டும் என்ற கருத்தில் [1] ஆவது இனைப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

26—5—1936 தேதி, 62, வ.து.க.செ.அச்சு.
11—11—1938 தேதி, 148, வ.து.க.செ.அச்சு.
23—7—1942 தேதி, 8(கா.), வ.து.க.செ.அச்சு.நிர்.

42. விற்பனை நடவடிக்கைகள்—(i) பொது விதிகள்—அரசினருக்கும் இடைநிலையிலிருப்பவருக்கும் சேரவேண்டிய பாக்கிகள் யாவற்றிற்காகச் செய்யப்படும் சொத்து ஜப்தி விற்பனை நிலை தளராத உறுதியுடைத்தாயிருக்க வேண்டும். வஞ்சக உடந்தை நிகழாதவாறு கவனிப்பதற்கு தக்க மேற்பார்வையுடன் விற்பனை நடைபெறச் செய்விப்பது கலெக்டரின் கடமையாகும். விற்பனையை ஒத்திவைப்பதற்கும் தாமதத்திற்கும் இடம் கொடாமல் விற்பனை அறிவிப்பின் நிபந்தனைகளை அனுசரித்து விற்பனை குறித்த காலத்தில் நடைபெறுமென விற்பனைக்கு முன்னதே நன்றாக விளங்குமாறு அறிவித்துவிட வேண்டும்.

(ii) விற்பனைகளை ஒத்தி வைத்தல்.—ஒரு தடவையில் ஏல விற்பனையின் ஒரு பகுதியைத் தொடங்கிய பின்னர் அதை ஒத்தி வைப்பதுதான் இங்கு கண்டிக்கப்படுகிறது. செய்ய வேண்டிய ஏல விற்பனைகள் பல எண்ணிக்கையில் இருக்குமானால் அவற்றை ஒரே நாளில் ஏலத்தில் விற்பனை செய்ய இயலாதெனில், அலுவலர் நேரத்திற்குப் பின்னர் விற்பனையை நிறுத்திக்கொண்டு அடுத்த அலுவல் நாளில், அந்நாள் எது என்றும் எந்நேரத்தில் விற்பனை நடைபெறும் என்றும் உரிய முறையில் அறிவிப்பு செய்து, அவ்வாறே, விற்பனையைத் தொடர்ந்து நடத்த வேண்டும். பட்டியலில் எவ்வரிசையில் விற்பனை பகுதிகள் உள்ளனவோ, அவ்வரிசை தப்பாமல் அப்பகுதிகளை ஏல விற்பனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

30—4—1855 தேதி, வ.து.க.செ. (மா தொகுதி 1855 ஆம் ஆண்டு 55 ஆவது பக்.).

42-அ. ஒதுக்கக் காடுகளில் உள்ள நிலத்தின் அல்லது அவற்றை ஒட்டியுள்ள நிலத்தின் விற்பனை.—ஒதுக்கக் காடுகளில் உள்ள சொந்த நிலத்தின் அல்லது அவற்றை ஒட்டியுள்ள சொந்த நிலத் தீவை பாக்கிகளுக்காக விற்பனைக்கும் வரும் தருணத்தில் மாவட்ட வன அலுவலருக்கு அறிவிக்க வேண்டும். வனத்துறைக் காரியங்களுக்காக நிலம் விற்பனையில் வாங்கிக் கொள்வது நலமென

மாவட்ட வன அலுவலருக்குத் தோன்றுமானால் அவர் அதுபற்றிக் கலெக்டருக்குத் தெரிவிக்க வேண்டும். கலெக்டர் வன பாதுகாவலரைக் கலந்தாலோசனை செய்து கொண்டு அரசினர் சார்பில் ஏலத்தில் விலை கூறி எடுப்பதா அல்லது பேச்சுவார்த்தை நடத்தி அந்நிலத்தைப் பெறுவதா இவற்றில் எது சிறந்ததென்பதைப் பற்றி வருவாய்த் துறைக் கழகத்தின் ஆணையைப் பெறுவர்.

16—11—1912 தேதி, 3352, அ.ஆ.

43. தொகை செலுத்தத் தவறியவரால் மற்றவர்களுக்கு முன்னமே பாத்தியம் செய்யப்பட்ட நிலத்தை விற்பனை செய்வது.—பதிவு செய்யப்பட்டுள்ள நிலமுடையவரின் தீர்வைப் பாக்கிகள் எந்நிலத்திற்குரியனவோ அந்நிலத்தை விற்பனைக்குக் கொண்டு வராமல் பாக்கிகளுக்குச் சம்பந்தமில்லாததும் மற்றொருவருக்குப் பாத்தியம் செய்யப்பட்டதுமான நிலத்தை அப்பாத்தியம் வழக்கத்திற்கு இசைந்த முறையில் செய்யப் படாதெனினும் விற்பனை செய்வது விரும்பத் தகாதது. பதிவு செய்யப்பட்ட நிலமுடையவரின் சுவாதீனத்திலுள்ள எல்லா நிலங்களையும் சொத்துக்களையும் விற்பனை செய்வதற்கு முன்னர் அல்லது பாத்தியம் பெற்றவரே செலுத்தத் தவறியதால்தான் பாக்கி ஏற்பட்டது என்றுலன்றி கலெக்டர்கள் பாத்தியம் பெற்றவரின் சுவாதீனத்திலுள்ள நிலத்தை விற்பனை செய்யக்கூடாது. விற்கப் படவேண்டிய நிலம் பதிவு செய்யப்பட்டுள்ளவரின் சுவாதீனத்திலிருக்கிறதா என்பதையும் பாக்கியை பதிவு செய்யப்பட்டுள்ள நிலமுடையவர்கள்தான் செலுத்த வேண்டுமா அல்லது பாத்தியம் செய்யப்பட்ட பாகத்துக்குப் பாத்தியம் பெற்றவர் செலுத்த வேண்டுமா என்பதையும் தல விசாரணையில் தெரிந்துகொள்ள வேண்டும்.

18—8—1874 தேதி, 2296, வ.து.க.செ.
13—10—1874 தேதி, 2971, வ.து.க.செ.
8—9—1874 தேதி, 1150, அ.ஆ.

44. ஒருவர் கொண்டாடும் நில உரிமை சந்தேகத்திற்கு இடமளிக்கும் போது மேற்கொள்ள வேண்டிய நடைமுறை.—ஒருவர் நில உரிமை சந்தேகத்திற்கிடமானதெனில் தொகை செலுத்தத் தவறியவரின் அசையும் பொருளின் மீது அல்லது அவரது அசையாப் பொருளின்மீது கலெக்டர் தமது விருப்பத்திற்குகந்தவாறு நடவடிக்கை எடுக்க முடியும். ஒருவரது நில உரிமை சந்தேகத்திற்கிடமாக அல்லது வழக்கு வாதத்திற்குட்பட்டதாக இருக்குமானால், எந்த நிலத்திற்காக பாக்கி நிற்கிறதோ

அந்த நிலத்தை ஜப்தி செய்து அந்நிலத்தை விற்பனை செய்வதே சரியான முறை. உரிமையாளர் எவராயினும் பாக்கி செலுத்த வேண்டிய பொறுப்பு கேள்விக்கிடம் தராது. உரிமை அளிக்கப் பெற்ற இனம்களுக்காகச் செலுத்தப்பட வேண்டிய விடுவிரி வசூலிப்பதிலும் அவ்வினம் சொத்துக்களில் ஒருவரது உரிமை சந்தேகத்திற்கிடமாக இருக்கும்போதும் இதே முறையைத்தான் மேற்கொள்ள வேண்டும்.

20—11—1861 தேதி, 6405, வ.து.க.செ.

45. **அரசினர் சார்பில் ஏல விற்பனையில் வாங்கிக் கொள்வது.**— 1. **பொது நடைமுறை.**—வருவாய் பாக்கிகளுக்காக நடத்தப்படும் நில ஏல விற்பனையில் குடிமக்கள் ஒன்று சேர்ந்ததினாலோ அல்லது வேறு காரணத்தினாலோ ஏலத்தில் எவரும் விலை கூறவில்லை எனில் அந்நிலத்தை அரசினர் சார்பாக பெயரளவில் ஒரு சிறிய விலைக்கு வாங்கிக்கொண்டு அவ்வாறு வாங்கியதற்குரிய ஏலத் தொகையை அதற்குரிய அதிகாரம் பெற்றுள்ள அதிகாரியின் அனுமதி பெற்று கணக்குகளிலிருந்து வசூலிக்க இயலாத பாக்கியாகக் கருதித் தள்ளுபடி செய்ய வேண்டும். கீழே கண்டுள்ள இனங்களில் கோட்ட ஆட்சியாளர் ஏல விற்பனைத் தொகையைக் கணக்குகளிலிருந்து வசூலிக்க இயலாததாக கருதி தள்ளுபடி செய்வதற்கு அதிகாரம் பெற்றிருக்கிறார்:—

(அ) 15 ஆவது நில ஆணை 22 ஆவது பத்தி (1) (அ), (ஆ), (இ) உட்பத்திகளின் கீழ் வருகின்ற இனங்களில் 2½ ஏக்கருக்கு மேற்படாத பரப்புள்ள நன்செய் அல்லது விலை மதிப்புள்ள வேறுவகை நிலம்;

(ஆ) மற்ற வகை நிலங்களில் 5 ஏக்கருக்கு மேற்படாத பரப்புள்ளவை. மற்றெல்லா இனங்களிலும் கலெக்டருக்கு இவ்வதிகாரம் உண்டு.

நிலத்தின் முழு மதிப்புத் தொகையைப் பெற முடியாதவாறு விற்பனையில் கலந்து கொண்டவர் ஒன்று சேர்ந்தனர் என்று சந்தேகிப்பதற்குத் தக்க காரணம் இருக்குமானால் நிலத்துக்குரிய ஆண்டுத் தீர்வைக்குக் குறைந்த விலை கூறும்போது அரசினர் சார்பில் ஏல விற்பனை செய்பவர் நிலத்தின் ஆண்டுத் தீர்வைக்கு அதிகமாகாத தொகைக்கு அரசினர் சார்பில் நிலத்திற்கு விலை கூறலாம். நிலம் அரசினரால் விலைக்கு வாங்கப்படும்போது கொடுக்கப்பட வேண்டிய சான்றுப் பத்திரம் அரசினர் பெயரில் கொடுக்கப்பட வேண்டும்.

27—7—1857 தேதி, 3077, அ.ஆ.வரு.

2. அரசினர் வாங்கிக் கொண்டுள்ள நிலத்தைப் பற்றிய நடவடிக்கை.—தீர்வைப் பாக்கிகளுக்காகச் செய்யப்படும் ஏல விற்பனைகளில் அரசினர் விலைக்கு வாங்கிக் கொண்டுள்ள நிலங்களுக்கு அரசினருக்கு முழு உரிமை உண்டு. இத்தகைய நிலங்கள், ஒப்படைக்காகக் குடிகள் மனுக்கள் செய்து கொண்டோ அல்லது அனுமதி பெறுமலோ அனுபோகம் செய்யப்படுவதற்குரிய சிராமந்தின் தரிசுதான் என்று முதல் முதலிலே கருதக் கூடாது. ஆனல் அவை [1]தாலுக்கா [2]18 [1] பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். இந்நிலங்கள் இப்பதிவேட்டில் சேர்க்கப் பட்டுள்ளவரையில் ஒப்படை விதிகளின்கீழ் இந்நிலங்களைப் பற்றி நடவடிக்கை எடுக்கப்படமாட்டாதெனவும் இத்தகைய நிலத்தில் செய்யப்படும் யாதொரு ஆக்கிரமிப்பும் [3]வரம்பு மீறி நிலத்தில் பிரவேசித்தவரை 1905 ஆம் ஆண்டு III ஆவது சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள ஏற்பாட்டிற்குட்படுத்தும் எனவும் கிராம அலுவலர்கள் தெளிவாகத் தெரிந்து கொண்டு குடியானவர் களுக்கும் இதை எடுத்துரைக்க வேண்டும். [3] 26 ஆவது நிலை ஆணையிலுள்ள அறிவுரைகளை அனுசரித்து 1905 ஆம் ஆண்டு III ஆவது சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கத் தக்கதாகும்.

[1] 9—10—1906 தேதி, 279, வ.து.க.செ.
19—3—1932 தேதி, 14, வ.து.க.செ. அச்சு.
[3] 7—2—1901 தேதி, 25, வ.து.க.செ.

3. அரசினர் வாங்கிக் கொண்டுள்ள நிலத்தில் வரம்பு மீறி பிரவேசித்தால் அதில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை.—இந்தப் பதிவேட்டில் நிலம் பதிவாகி இருக்கும் காலத்தில் மூந்திய உரிமையாளராகிலும் வேறு யாராகிலும் வரம்பு மீறி அந்நிலத்தில் பிரவேசித்து அனுபோகம் செய்வார் எனில் அவ்வாக்கிரமிப்பை பற்றி 26 ஆவது நிலை ஆணையிலுள்ள அறிவுரைகளை அனுசரித்து [1]1905 ஆம் ஆண்டு III ஆவது சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளில் எவற்றை அவ்வச் சூழ்நிலையில் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்தல் தக்கதென கோட்ட ஆட்சியாளரோ [3]தாசில்தாரோ துணைத் தாசில்தாரோ கருதுகிறாரோ அவ்வாறு நடவடிக்கை எடுக்க அவருக்கு உரிமை உண்டு. அந்நிலம் உண்மையில், அதிக விலை மதிப்புள்ளது அன்றெனினும் அதை அனுபோகம் செய்வதற்குரிய அனுமதியைப் பெறுதது அநியாமை யால் நிகழ்ந்து விட்டதெனத் தெரிய வந்தாலும் [4] நிலத்தை அனுபோகம் செய்து வருபவரிடமே விட்டு வைத்து அனுபோகம் செய்யப்பட்டுள்ள பரப்பிற்குரிய தரத் தீர்வையுடன் [1]1905 ஆம் ஆண்டு VII ஆவது [4]சட்டத்தின்கீழ் ஒரு சிறிய தொகையைப்

பெயரளவில் தண்டமாக விதித்தலே போதுமானதாகும். ஆனால் I நிலம் விலை மதிப்புள்ளதென்றால், வரம்பு மீறி நிலத்தில் பிரவேசித்தவரை நிலத்திலிருந்து அப்பாற்படுத்த 1905 ஆம் ஆண்டு II[4] ஆவது சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இந்நோக்கம் நிறைவேற்றப்பட்ட பின்னர், நிலங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும். ஆயினும் அத்தகைய நிலத்தை மறுமுறை விற்பனை செய்யும் வரையில் அந்நிலத்தின் முந்திய உரிமையாளர் (தொகை செலுத்தத் தவறியவர்) அல்லது அவரது குடும்பத்தில் பாகப் பிரிவினை செய்து கொள்ளாத உறுப்பினர் அல்லாத மற்றவருக்கேனும் இரண்டு மடங்கு தீர்வைக்கும் குறைந்திராத தொகைக்கு ஆண்டுதோறும் குத்தகைக்கு விடுவதற்குக் கோட்ட ஆட்சியாளருக்கு உரிமை உண்டு. ஒவ்வொன்றிலும் அதனதன் தகுதிகளை அனுசரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2—10—1932 தேதி, 2075, அ.ஆ.வரு.பலவ.
10—11—1931 தேதி, 89, வ.து.க.செ.
[7] 24—3—1902 தேதி, 66, வ.து.க.செ.
[8] 18—3—1927 தேதி, 504, அ.ஆ.வரு.
25—3—1927 தேதி, 814, வ.து.க.செ.பலவ.
[4] 9—10—1906 தேதி, 279, வ.து.க.செ.

4. அரசினர் வாங்கிக் கொண்டுள்ள நிலங்களை முடிவு செய்து கொடுத்தல்.—(1) அரசாங்கத்தால் வாங்கப்பட்ட நிலங்களை ஒப்படை செய்வதில் அயலாரைவிட முந்திய உரிமையாளர்களோ அவர்களின் வாரிசுகள் என்பதில் தகராறு இல்லாத நிலையிலுள்ளவர்களாயிருக்கும் அவ்வாரிசுகள் முதலுரிமை பெறத்தக்கவர்கள் என எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் முந்திய உரிமையாளர் வேண்டுமென்றே தீர்வையைச் செலுத்தாமல் பாக்கியாக விடவில்லை என்பதாகவும் அவரது கட்டுப்பாட்டிற்கடங்காத சூழ்நிலைகளினாலே அவர் தீர்வை செலுத்தத் தவறிவிட்டார் என்பதாகவும் மன நிறைவு கொள்ளும் வகையில் கோட்ட ஆட்சியாளர் கருதுவார் எனினும் அவருக்கு ஒப்படை செய்தல் மற்ற வகையில் ஆட்சேபனை எனினும் இவ்வாறு ஒப்படை செய்யலாம். முந்திய உரிமையாளர் ஒருவருக்கு மேற்பட்ட வாரிக்கள் இருப்பாரெனில் அவர்களில் எவர் நிலத்தின் மறுமுறை ஒப்படை பெறுவதற்குத் தகுதியுடையவர் என்பதை ஒப்படை செய்யும் அதிகாரி முடிவு செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார். நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகையின்றி நிலம் ஒப்படை செய்யப்படும். ஆயினும் எத்தீர்வை பாக்கி

களுக்காக நிலம் அரசினரால் விலைக்கு வாங்கிக் கொள்ளப் பட்டதோ அப்பாக்கிகளையும் அவற்றிற்குரிய வட்டியையும் சேர்த்து செலுத்துவாரெனில் மாத்திரமே அவருக்கும் நிலம் மறுமுறை ஒப்படை செய்யப்படும். நிலம் அரசினரால் விலைக்கு வாங்கப்பட்ட ஆண்டிலிருந்து ஒப்படை செய்யப்பட்ட ஆண்டு வரையிலும் உள்ள ஆண்டுகளுக்கு அல்லது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு இவற்றில் எந்தக் காலத்தின் அளவு குறைந்திருக் கிறதோ அக்காலத்தின் ஆண்டுகளுக்குரிய சென்ற காலத் தீர்வை செலுத்தப்பட வேண்டும். அரசினர் விலைக்கு வாங்கி நிலத்தை மறுமுறை ஒப்படை செய்யப்படும் ஆண்டிற்கு அடுத்து முந்திய 12 ஆண்டுகளில் ஏதாவது ஒரு காலத்தின் அளவிற்கு நிலம் முந்திய உரிமையாளர் அனுபோகத்தில் அல்லது அவர் வழியுரிமையாளர் அல்லாதவரின் அனுபோகத்திலிருந்ததெனில், அத்தகைய காலத்தின் அளவை விலக்கிவிட்டு எஞ்சியுள்ள சென்ற காலத்திற்கு மாத்திரமே தீர்வை வசூலிக்கப்பட வேண்டும். அரசினர் சார்பில் அந்நிலம் ஏல விற்பனையில் விலைக்கு வாங்கிக் கொள்ளப்படுவதற்கு முன்னர் அந்நிலம் ஈடாக வைக்கப்பட்டு அதன்மீது முந்திய உரிமையாளருக்குத் தற்காலிகக் கடன் கொடுக்கப்பட்டிருந்து அந்தக் கடன் முழுமையும் திரும்பச் செலுத்தப்படாதிருப்பின், அக்கடன் தொகை அல்லது செலுத்தப்பட வேண்டிய அதன் பாக்கியை வட்டியுடனே, அக்கடன் பாக்கிகள் வசூலிக்க முடியாதவையென கணக்கிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்டிருந்தபோதிலும், முந்திய உரிமையாளரோ அவர் வாரிசோ என்பதில் தகராறு இல்லாத நிலையில் உள்ள வழியுரிமையாளருக்கு நிலம் மறுமுறை ஒப்படை செய்யப்படுவதற்கு முன்னதாக அன்னாரிடமிருந்து வசூலித்துவிட வேண்டும்.

(2) மேலே உள்ள அறிவுரைகளை செயற்படுத்தும் பொருட்டுக் கீழ்க்கண்டுள்ள நடைமுறை விதிக்கப்பட்டிருக்கிறது:—

மேலே (1) ஆவது பந்தியிலுள்ளவாறு அரசினர் சார்பில் நிலத்தை ஏல விற்பனையில் விலைக்கு வாங்கிக் கொள்ளப்பட்டு ஏலத்தொகையை கணக்குகளிலிருந்து தள்ளுபடி செய்யப் பட்டவுடனே அந்நிலத்தை ஒப்படை செய்வதற்கு யாதொரு ஆட்சேபனையுமில்லையெனில் தொகை செலுத்தத் தவறியவர் பாக்கிகளையும் சென்ற காலத்திற்குரிய தீர்வையையும் கடன் பாக்கி முதலியவை எவையேனும் இருப்பின் அவற்றையும் செலுத்தித் தமக்கு அறிவிப்பு சேர்பிக்கப்பட்ட தேதியிலிருந்து

ஓராண்டிற்குள் தாசில்தாருக்கு விண்ணப்பம் செய்துகொண்டால் நிலம் அவ்வாறு ஒப்படை செய்யப்படுமென்று தாசில்தார் தொகை செலுத்தத் தவறியவருக்கு எழுத்து வடிவில் ஒரு அறிவிப்பு கொடுக்க வேண்டும். அவர் செலுத்த வேண்டிய பாக்கிகளும் சென்ற காலத்திற்குரிய நீர்வையும் இயன்றபோதெல்லாம் அப்பாக்கிகளுக்குரிய வட்டியும் அவ்வறிவிப்பில் விவரிக்கப் பட்டிருக்க வேண்டும். 1366 ஆம் பசலிக்கு முன்னதாக அரசினர் சார்பில் விலைக்கு வாங்கிக் கொள்ளப்பட்ட நிலங்களைப் பொருத்த வரையில் 1958 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் தேதி வரையில் அல்லது வருவாய்த் துறைக் கழகம் பொது அறிவுரை விடுத்துத் தெரிவிக்கக்கூடிய வேறேரு தேதி வரையில் கால அவகாசம் கொடுக்கத் தக்கதாகும். இத்தகையவற்றிற்குச் சம்பந்தப்பட்ட முந்திய உரிமையாளர் இறந்து விட்டனர் எனில் அவரின் வாரிசு என்பதில் தகராறில்லாத நிலையில் உள்ள வழிஉரிமையாளருக்கு அவ்வறிவிப்பு கொடுக்கப்பட வேண்டும்.

மறுமுறை ஒப்படைக்காக விண்ணப்பம் வரப் பெற்றவுடன், தாசில்தார் எல்லாப் பாக்கிகளும் சென்ற காலத்திற்குரிய நீர்வை முதலியனவும் பாக்கிகளுக்குரிய வட்டியும் விண்ணப்பம் செய்திருப்பவர் முந்திய உரிமையாளராக இல்லாவிடின் அவர் முந்திய உரிமையாளரின் வாரிசு என்பதில் தகராறு இல்லையா என்பதையும் சரி பார்க்க வேண்டும். பின்னர், தாசில்தார், தமது பரிந்துரையுடன் அவ்விண்ணப்பத்தைக் கோட்ட ஆட்சி யாளருக்கு மேலனுப்புவார்.

கோட்ட ஆட்சியாளர்—

(அ) 15 ஆவது நில ஆணை 22 ஆவது பத்தி 1 (அ), (ஆ), (இ) உள் பத்திகளின்கீழ் உள்ள இனங்களில் 2½ ஏக்கர் பரப்பிற்கு மேற்படாத நன்செய் அல்லது மற்ற விலையுயர்ந்த நிலத்தையும்,

(ஆ) 5 ஏக்கருக்கு மேற்படாத வேறு வகை நிலங்களும் பொருத்த வரையில்,

தாமாகவே ஆணை பிறப்பிப்பார்.

மற்றெல்லா இனங்களிலும் கோட்ட ஆட்சியாளர் விண்ணப்பத்தை கலெக்டரின் ஆணைக்கு அனுப்புவார்.

குறிப்பிட்ட காலத்திற்குள் மறு ஒப்படைக்காக விண்ணப்பம் வாப்பெருவிடின் அல்லது முந்தின உரிமையாளராயினும் அவரது வாரிசு என்பதில் தகாறு இல்லாத நிலையிலுள்ளவர் தமக்கு நிலம் தேவையில்லை எனத் தாசில்தாருக்குத் தெரியப்படுத்தினால் அல்லது விசாரணை செய்ததில் முந்தின உரிமையாளரை அல்லது அவர் வாரிசு என்பதில் தகாறு இல்லாத நிலையில் உள்ள ஒருவரை கண்டுபிடிக்க இயலவில்லை எனில், இதைப் பற்றித் தாசில்தார், கோட்ட ஆட்சியாளருக்கு அறிக்கை செய்ய வேண்டும். அதன் பின்னர், மிகப் பரவலாக விளம்பரம் செய்யப்பட்டுச் சம்பந்தப் பட்ட நிலம் மறுமுறை விற்பனை செய்யப்படுவதற்குக் கோட்ட ஆட்சியாளர் கட்டளை பிறப்பிக்கலாம். மறுமுறை விற்பனை செய்வதற்குரிய ஒப்பளிப்பு கோட்ட ஆட்சியாளரிடமிருந்து கிடைக்கப் பெற்றவுடன் தாசில்தார் தாமே அந்த நிலத்தை விற்பனை செய்யலாம் அல்லது அவர் துணைத் தாசில்தாரையாயினும் வருவாய் ஆய்வாளரையாயினும் விற்பனை அதிகாரியாக நியமிக் கலாம். விற்பனை கோட்ட ஆட்சியாளர் செய்வதற்குட் பட்டதாகும். ஆனாலும் புதிதாக நடத்தப்படும் ஏல விற்பனையில் சம்பந்தப்பட்ட நிலத்திற்குப் பத்து ரூபாய்க்கு அதிகமான ஏலத் தொகை கிடைக்காது என மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் கோட்ட ஆட்சியாளர் கருதுவாரெனில் அவர் அந்நிலம் 18 (அ) என் தாலுகாப் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டுச் நீக்கப்பட்டுச் சாதாரண கிராமத் தரிசாக மாற்றப்பட கட்டளைப் பிறப்பிக்கலாம். அதன் பின்னர், அவ்வப்போது மாற்றி யமைக்கப்படும் 15 ஆவது நில ஆணையின் ஒப்படை விதிகளை அனுசரித்து அந்நிலங்கள் ஒப்படை விதிகளை அனுசரித்து அந்நிலங்கள் ஒப்படை செய்யப்படும்.

அரசினர் சார்பில் விலைக்கு வாங்கிக் கொள்ளப்பட்ட நிலங்களை முடிவு செய்து கொடுக்கப்படுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறதா என்பதைக் கோட்ட ஆட்சியாளர் ஜமாபந்தியில் 18 (அ) என் பதிவேட்டை ஆய்ந்து பார்க்க வேண்டும்.

27-7-1857 தேதி, 3077 அ.ஆ.வரு.பல.

குறிப்பு.—அரசினரின் முன் அனுமதியுடன் கலெக்டரால் வருவாய்த் துறைக் கழகத்தாலன்றி அரசினருக்குரிய எந்த நிலத்தையும் இந்த நில ஆணையின்கீழ், இந்தியக் குடியல்லாத எவருக்கும் விற்பனை செய்யக்கூடாது. இந்த நில ஆணையின்கீழ் செய்யப்படும் ஒவ்வொரு விற்பனைக்கும் சம்பந்தப்பட்ட நிலம் அரசினர் ஒப்பளிப்பில்லாமல் இந்தியக் குடியல்லாத வேறொரு வருக்கு நிலம் பாத்தினைப்படுத்தப்படுமாயின், விற்பனை சட்ட முறையில் செல்லாததாகும் என்ற நிபந்தனைக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

இந்த நிலை ஆணையின்கீழ் அரசினருக்குச் சொந்தமான நிலத்தின் விற்பனை ஒப்படைக்காக கம்பெனி, அசோசியேஷன் அல்லது கூட்டுச் சங்கம், 1956 ஆம் ஆண்டு செய்து கொள்ளும் வண்ணப்பம் அந்தக் கம்பெனி, அசோசியேஷன் அல்லது கூட்டுச் சங்கம் 1956 ஆம் ஆண்டு கம்பெனிகளின் சட்டத்தின் (1956 ஆம் ஆண்டு I ஆவது மத்திய அரசுச் சட்டம்) 3 (1) (i) பிரிவில் கண்டுள்ள அச்சொல்லின் பொருளுக்குட்பட்டு வந்தாலன்றி அல்லது 1860 ஆம் ஆண்டு சங்கங்களின் பதிவுச் சட்டம் (1860 ஆம் ஆண்டு XXI ஆவது மத்திய அரசுச் சட்டம், 1880 ஆம் ஆண்டு சமய சங்கங்களின் சட்டம் (1880 ஆம் ஆண்டு I ஆவது மத்திய அரசுச் சட்டம்), 1932 ஆம் ஆண்டு சென்னைக் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் (1932 ஆம் ஆண்டு சென்னை VI ஆவது சட்டம்), 1942 ஆம் ஆண்டு பலவகைப் பொருள்கள் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் (1942 ஆம் ஆண்டு V ஆவது மத்தியச் சட்டம்), 1938 ஆம் ஆண்டு சட்டுறுதிச் சட்டம் (1938 ஆம் ஆண்டு VI ஆவது மத்தியச் சட்டம்) அல்லது இந்திய யூனியன் பார்லிமெண்டு கள் யூனியன்கள் சட்டம் (1926 ஆம் ஆண்டு ஆவது மத்திய சட்டம்) அல்லது இந்திய யூனியன் பார்லிமெண்டு அல்லது இந்திய யூனியனில் உள்ள மாநிலச் சட்டப் பேரவையின் சட்டம், ஆகிய இவற்றின்கீழ் பதிவு செய்யப் பெற்றிருந்தாலன்றி கவனிக்கப்பட மாட்டாது. மேலே கண்ட ஆணைக்கு இணங்கப் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது உரோமன் கத்தோலிக் திருத்துவக் கோவில்கள், சமய ஆட்சிப் பகுதிகள் ஏனைய உரோமன் கத்தோலிக் திருத்துவக் குழுக்கள், காங்கிரஸ் அமைப்புகள் இவற்றிற்குப் பொருந்தாது.

21—9—1956 தேதி, 3598, அ.ஆ.வரு.பல.

5. 4 ஆவது பத்தியின்கீழ்ச் செய்யப்படும் மறுமுறை விற்பனைக்குரிய அறிவிப்புப் படிவமும் ஏல விற்பனையில் விலைக்கு வாங்கிக் கொண்டவருக்குக் கொடுக்கப்படும் உரிமைப் பத்திரத் தின் படிவமும்.—வருவாய்த் துறைக் கழக 15, 21 நிலை ஆணைகளில் குறிப்பிட்ட ஏல அறிவிப்புப் படிவத்தையும் ஒப்படை ஆணைப் படிவத்தையும் சூழ்நிலைக்குத்தக்கவாறு தனிப்பட்ட இனங்களில் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமாக மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.

21—8—1941 தேதி, 1926, அ.ஆ.வரு.
13—12—1941 தேதி, 139, வ.து.க.செ.அச்சு.

46. வருவாய் பாக்கி வசூலிப்பதற்காக நிறைவேற்றக் கட்டளை களைச் சேர்ப்பிக்கும் முறை.—1. நிறைவேற்றக் கட்டளைகளைச் சேர்ப்பிப்பவர்.—இயன்ற வரையில் அரசுக் குடிமுறை நியாயம்

களிலும் தனி உரிமையுள்ள ஜமீன்களிலும் 1864 ஆம் ஆண்டு சென்னை II ஆவது சட்டத்தின்கீழ்ப் பாக்கிகளுக்காகப் பிறப்பிக்கும், நிறைவேற்றக் கட்டளைக் கிராமத் தலைமை அலுவலரே இயன்ற போதெல்லாம் சேர்ப்பிக்கவும், நிறைவேற்றக் கட்டளையைக் கொண்டு கைப்பற்றி ஜப்தி செய்யவும் வேண்டும்; இவை அவர்களின் நியாயமான கடமைகளாததால் அவர்கள் ஜாதியத்தை எதிர்பாராமல் இக்கடமைகளைச் செய்ய வேண்டும்.

8—1—1869 தேதி, 62, வ.து.க.செ.
29—12—1876 தேதி, 585, வ.து.க.செ.
5—9—1902 தேதி, 203, வ.து.க.செ.

2. கடைநிலைப் படி பணியாளரை அமர்த்துவது.—ஆனாலும் உண்மையான தேவையை அனுசரித்து கலெக்டர் அனுமதியுடன் படிப் பணியாளரை அமர்த்திக் கொள்ளலாம்; ஆனால் ஏழ்மை நிலையிலுள்ள கச்சேரி ஆட்களைப் படிப் பணியாளராக நியமிக்கக் கூடாதென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். கிராமத் தலைமை அலுவலர் முன்னிலையிலேயன்றி யாதொரு கட்டளையையும் படிப் பணியாளர் நிறைவேற்றக் கூடாதென்பதை ஒரு விதியாகக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு தாலுகாவுக்குத் தேவையான படிப் பணியாளர்களின் எண்ணிக்கையைக் கோட்ட ஆட்சியாளர்கள் நிர்ணயித்து அவர்களைப் பற்றிய பதிவேடொன்றை எழுதி வைத்துக் கொள்ள வேண்டும், இவர்கள் பெயர்கள் பதிவேட்டில் இருக்கும் வரிசை என்ற முறையில் இவர்களுக்கு வேலை கொடுத்து இவர்களை அனுப்ப வேண்டும். இவர்களுக்கு நடப்பு நிலையை அனுசரித்துச் சம்பளம் கொடுக்கக் கலெக்டர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆண்டில் வசூலாகும் மொத்தத் தொகைக்குள் செலவு அடங்கத்தக்கதாக ஒவ்வொரு தாலுகாவுக்கும் படிப் பணியாளரின் எண்ணிக்கை நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும்; இந்த எண்ணிக்கையைத் தேவைகளுக்குத் தகுந்தவாறு அவ்வப்போது கோட்ட ஆட்சியாளரின் ஆணையை ஆதாரமாகக் கொண்டு மாற்றிக் கொள்ள வேண்டும். அனுபவத்தை ஒட்டி கட்டளைப் படிப் பணியாளர்களை ஒரு தாலுகாவிலிருந்து மற்றொரு தாலுகாவிற்கு மாற்றலாம்.

26—6—1896 தேதி, 232, வ.து.க.செ.
29—6—1920 தேதி, 1559, அ.ஆ.வரு.
24—4—1874 தேதி, 971, வ.து.க.செ.
17—7—1920 தேதி, 52, வ.து.க.செ.
5—9—1902 தேதி, 203 வ.து.க.செ.

3. தனிக் கட்டளை படிப் பணியாளர்களை நியமனம் செய்வதும் அவர்களை வேலையிலிருந்து விலக்குவதும்.—தனிக் கட்டளைப் படிப் பணியாளர்களை அமர்த்தவும் விலக்கவும் அவர்களுக்கு விடுப்பு கொடுக்கவும் தாசில்தார்களுக்கும் தனி நிலத் துணைத் தாசில்தார்களுக்கும் அதிகாரம் உண்டு. தாசில்தார்களும் துணைத் தாசில்தார்களும் இந்தப் பத்தியின்கீழ்ப் பிறப்பிக்கும் எல்லா ஆணைகளும் கோட்ட ஆட்சியாளர்கள் அவ்வாணைகளைப் பொதுவாக மாற்றி அமைப்பதற்குச் செலுத்தத்தக்க அதிகாரத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டவையாகும்.

14—11—1898 தேதி, 680, அ.ஆ.
17—12—1908 தேதி, 3406, அ.ஆ.
21—7—1909 தேதி, 1981, அ.ஆ.
6—8—1909 தேதி, 171, வ.து.க.செ.

4. படி வீதம்.—நிறைவேற்றக் கட்டளைகளைச் சேர்ப்பிப்பதற்கு 25 நயா பைசாவும், சொத்து கைப்பற்றப்படுவதற்கு அல்லது விற்கப்படுவதற்கு 50 நயா பைசாவும் பெறுமம் படியாகும். இச்சட்டத்தின்கீழ்த் தனியாக நியமிக்கப்பட்ட படிப் பணியாளர் சேர்ப்பிக்கும் கட்டளையைச் சார்ந்த இனங்களுக்கு மட்டுமே படி விதிக்கத்தக்கது. அவ்வாறு விதிக்கப்படும் படி தொக்கமாக வசூலிக்கப்பட்டு " VII (எ) —நில வருவாய்—பல்வகை—இதர இனங்கள் " என்ற தலைப்பின்கீழ் வரவு வைக்கப்பட வேண்டும். கட்டளைகளை உண்மையில் தொகை செலுத்தத் தவறியவர்களுக்குச் சேர்ப்பிப்பதற்கு முன்னர் பாக்கிகள் செலுத்தப்பட்டால் படி வசூலிக்கக்கூடாது. வருவாய் நீதிமன்றங்கள் பிறப்பிக்கும் நிறைவேற்றக் கட்டளைகளைச் சேர்ப்பிப்பதற்கு மன்றக் கட்டண வில்லைகளாக வசூலிக்க வேண்டிய கட்டணை வீதம் 200 ஆவது நில ஆணையில் விதிக்கப்பட்டிருக்கிறது.

11—9—1933 தேதி, 1626, அ.ஆ.வரு.
1—5—1879 தேதி, 942, அ.ஆ.
30—6—1879 தேதி, 1904, வ.து.க.செ.
3—4—1891 தேதி, 214, வ.து.க.செ.
20—9—1933 தேதி, 90, வ.து.க.செ. அச்சு.
29—2—1876 தேதி, 585, வ.து.க.செ.
25—11—1891 தேதி, 668, வ.து.க.செ.
3—6—1893 தேதி, 302, வ.து.க.செ.
1—2—1957 தேதி, 498, அ.ஆ.வரு.பல.

குறிப்புகள்.—(1) இந்தப் பத்தியில் விதிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் பெறுமம் வீதங்களாம் படி அமீன்களின் சம்பளத்திற்கு மேற்படாமல் எவ்வளவு தேவையோ இயன்ற

வரையில் அதற்குத் தகுந்தவாறு கட்டணங்களை அமைத்துக் கொள்ள வேண்டும்.

24—4—1874 தேதி, 971, வ.து.க.செ.
20—7—1894 தேதி, 308, வ.து.க.செ.

(2) கட்டளை சேர்ப்பிப்பதும் ஜப்தியும் ஒரே காலத்திலேயே நடை பெறும்போது 5 நயா பைசாவாகிய உயர்ந்த கட்டணமுமே விதிக்க வேண்டும்.

20—7—1894 தேதி, 308, வ.து.க.செ.

5. அ கட்டளைக் கட்டணங்கள்.—அ நீர்வை வசூலுக்காக எடுக்கப்பட்ட கட்டாய நடவடிக்கைகளைப் பற்றிக் கலெக்டர்கள் தங்கள் நிலவரித் திட்ட அறிக்கைகளில் குறிப்பிடும்போது, சம்பந்தப்பட்ட ஆண்டில் இச்சட்டத்தின் கீழ் அ நியமிக்கப்பட்ட பணியாளர்களுக்காக வசூல் செய்யப்பட்டு கொடுக்கப்பட்ட அ கட்டளைக் கட்டணங்களின் மொத்தத் தொகையைத் தனியாகக் குறிப்பிட வேண்டும்.

30—6—1879, தேதி, 1904, வ.து.க.செ.
22—10—1925 தேதி, 1645, அ.ஆ.வரு.
28—8—1879 தேதி, 1767, அ.ஆ.
6—10—1925 தேதி, 2189, வ.து.க.செ.

6. தாலூகா அலுவலகங்களில் எழுதி வைத்துவர வேண்டிய நிறைவேற்றக் கட்டளைப் பதிவேடுகள்.— IV ஆவது இணைப்பில் காட்டப்பட்டுள்ள படிவங்களை அனுசரித்து மூன்று பதிவேடுகளை நிறைவேற்றக் கட்டளைகளைப் பற்றி தாலூகா அலுவலகத்தில் எழுதி வைத்துவர வேண்டும். ஒவ்வொரு நாளும் இப்பதிவேடு களைத் தாசில்தாராயினும், தாலூகா தலைமைக் கணக்காளராயினும் ஆய்ந்து பார்த்துக் கட்டளைப் பணியாளர்கள் நிறைவேற்றக் கட்டளைகளை சரியான காலத்தில் நிறைவேற்றுமாறு கட்டாயப் படுத்த வேண்டும். நிலத் நீர்வைத் தவணை மாதங்களில் இக்கடமையில் மூக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

17—7—1897 தேதி, 243, வ.து.க.செ.
29—5—1901 தேதி, 125, வ.து.க.செ.
21—9—1956 தேதி, 3598, அ.ஆ.வரு.பலவ.

47. சிவில் நீதி மன்றத்தால் ஜப்தி செய்யப்பட்ட நிலத்திற்குரிய நீர்வைப் பாக்கிகளை வசூலிப்பது.—1. சிவில் நீதி மன்றத்தில் செய்யும் ஜப்தியினால் ஏற்படக்கூடிய விளைவு.—நீர்ப்புக்கு முன்போ பின்போ சிவில் நீதி மன்றங்கள் செய்யும் நில ஜப்தியானது நிலத் நீர்வை பாக்கிகளுக்காகச் செய்யும் ஜப்திக்குத் தடையாகாது. நீர்வை பாக்கிகளுக்காக நிலத்தையும் அதில் உள்ள பயிர்களையும் ஜப்தி செய்வதற்கும் அவற்றை விற்பனை

செய்வதற்கும் கலெக்டர்களுக்குரிய, அதிகாரம் சிவில் நீதி மன்றம் செய்யும் அந்நில ஜப்திக்கு முன்னர் எத்துணை உண்டோ அத்துணை அதிகாரம் அத்தகைய ஜப்திக்குப் பின்னரும் உண்டு. ஏனெனில் நிலத்திலும் அதிலுள்ள பயிர்களிலும் நீரப்புக் கடனளிகளுக்குள்ள உரிமை சுதந்திரம், பாத்யதை இவற்றை மட்டுமே சிவில் நீதி மன்றங்கள் ஜப்தி செய்து விற்பனை செய்கின்றன; வருவாய் அதிகாரிகளோ நிலத்தையும் அதிலுள்ள பயிர்களையும் விற்பனை செய்வர்.

2. **சிவில் நீதி மன்றங்களுக்கு அறிவிப்பு.**—தீர்வை பாக்கிகளுக்காக நிலத்தையும் அதிலுள்ள பயிர்களையும் ஜப்தி செய்யும் போது அவற்றின் தொகை செலுத்தத் தவறியவரின் உரிமை, சுதந்திரம், பாத்தியதை இவற்றை முன்னதாகவே சிவில் நீதி மன்றம் ஜப்தி செய்திருப்பதாகத் தெரிய வந்தால், தீர்வை பாக்கிகளுக்காக வருவாய்த் துறைப் பணியாளர்கள் ஜப்தி செய்திருப்பதையும், பாக்கிகள் முற்றிலும் செலுத்தப்படாவிடில் நிலத்தையும் அதிலுள்ள பயிர்களையும் விற்பனைக்குக் கொண்டுவர உத்தேசித்திருப்பதையும், ஜப்தி கட்டளை பிறப்பித்த சிவில் நீதி மன்றத்திற்கு வருவாய் அதிகாரிகள் அறிவிக்க வேண்டும்.

19—6—1879 தேதி, 1765, வ.து.க.செ.
16—8—1879 தேதி, 1711, அ.ஆ.

48. **சிவில் நீதி மன்றங்கள் விற்பனை செய்த நிலத்திற்குரிய தீர்வைப் பாக்கிகளை வசூலிப்பது.**—சிவில் நீதி மன்றத்தின் நிர்ப்பிணைச் செய்யப்படும் நிலக்கிரய ஏலத்தின் விற்பனைத் தொகையிலிருந்து தீர்வை பாக்கிகளை வசூலித்துக் கொள்வதற்கு யாதொரு நடவடிக்கையும் எடுக்கலாகாது. உரிமை மாறுவதில் கவனம் செலுத்தாமல், அரசினருக்கு செலுத்தப்பட வேண்டிய நடப்புத் தீர்வையையும் பாக்கிகளையும் வசூலிப்பதற்குச் சம்பந்தப்பட்ட நிலத்தின் மீது நிறைவேற்றக் கட்டளையைப் பிறப்பிப்பதற்குரிய அதிகாரம் நில வருவாய்ச் சட்டத்தில் இருக்கிறது. நீதி மன்ற ஏல விற்பனையில் நிலத்தை விலைக்கு வாங்குபவர் அதன் வில்லங்கங்களுக்குட்பட்டுத்தான் வாங்குகிறார்; ஆதலால், அவர் எல்லா மாவட்டங்களிலும் இது சம்பந்தமாக விளம்பரம் செய்யப்படும் விற்பனை விளம்பரத்தை அனுசரித்து அவர் தாலுக்காருக்கு விண்ணப்பம் செய்து அரசினர் சம்பந்தப்பட்ட வரையில் வில்லங்கங்கள் யாவை என்பதைக் கேட்டறிந்து கொள்ள இயலும்.

21—10—1865 தேதி, 2578, அ.ஆ.
22—11—1865 தேதி, 2973, அ.ஆ.
22—12—1865 தேதி, 8282, வ.து.க.செ.

49. நில வருவாய் சம்பந்தமான மோசடிகளைப் பற்றிக் கொடுக்கக் கூடிய தகவலுக்குரிய பரிசுகள்.—விளைவித்த பயிர்களைப் பற்றியாவது அல்லது ஆண்டு நிலத் தீர்வை நிர்ணயத்திற்குச் சேர்ந்த வருவாய் இனங்களில் யாதொன்றையாவது மறைத்துக் கிராமக் கணக்கர்கள் செய்த மோசடிகளைக் குறித்து, ஆண்டுதோறும் நிலத் தீர்வை நிர்ணயம் நடைபெறும்போது அதற்கு முன்னதாக அல்லது அதற்குப் பின்னர் நியாயமான ஒரு கால அளவிற்குள் எவராயினும் கொடுத்த தகவல் உண்மையென மெய்ப்பிக்கப்படுமாறுள் தகவல் கொடுத்தவருக்குச் சம்பந்தப்பட்ட நிலத் தீர்வை அல்லது சம்பந்தப்பட்ட வேறு வருவாயின் இனத்தின் ஐம்பது சதவிதத்திற்கு மேற்படாமல் பரிசாகக் கொடுக்க வேண்டுமென்று கலெக்டர் வருவாய்த் துறைக் கழகத்திற்கு சிபாரிசு செய்யலாம். [1]இத்தகைய பரிசளிப்பை பற்றிய விண்ணப்பங்களைக் கலெக்டர்கள் V ஆவது இணைப்பில் காட்டப்பட்டுள்ள படிவத்தில் அனுப்ப வேண்டும்[2].

[1] 27—5—1850 தேதி, வ.து.க.செ. (மா. தொகுதி I பக். 523–524).

[2] 23—6—1863 தேதி, 3748, வ.து.க.செ.

[3] 24—10—1891 தேதி, 634, வ.து.க.செ.

21—9—1856 தேதி, 3598, அ.ஆ.வரு.பல

50. (ரத்து செய்யப்பட்டது).

6—4—1922 தேதி, 657 அ.ஆ.வரு.பல

11—4—1922 தேதி, 33, வ.து.க.செ.

51. (ரத்து செய்யப்பட்டது).

II ஆவது அத்தியாயத்தின் இணைப்புகள்

இணைப்பு 1.

35 ஆவது நில ஆணை 1 ஆவது பத்தி.

அரசுக்குடி முறை நிலத் தீர்வைத் தவணை.

மாவட்டம்.	ஒவ்வொரு மாதமும் செலுத்த வேண்டிய ஆண்டுத் தீர்வையின் விதாச்சாரம்.							
	ஜனவரி.	பிப்ரவரி.	மார்ச்.	ஏப்ரல்.	மே.	ஜூன்.	டிசம்பர்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
		நை.	நை.	நை.	நை.	நை.	நை.	நை.
செங்கற்பட்டு		25	25	25	25			100

(1965-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 29-ஆம் நாளும் 3,531 எண்ணுமிட்ட நில அ. ஆ. வரு).

(1966-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 20-ஆம் நாளும் 56 எண்ணுமிட்ட (கே) நில வ. வா. செ.)

II ஆவது அத்தியாயத்தின் இணைப்பு நாள்
இணைப்பு 1.

35 ஆவது நிலை ஆணை 1 ஆவது பத்தி.

அரசுக்குடி முறை நிலத் தீர்வைத் தவணை.

மாவட்டம்.	ஒவ்வொரு மாதமும் செலுத்த வேண்டிய ஆண்டுத் தீர்வையின் வீதாச்சாரம்.							
(4) ஓய்வூதிய பாக்கிகளைக் கொடுப்பதற்குச் சம்பந்தப் பட்ட எல்லாப் பற்றுச் சீட்டுக்களிலும் ஓய்வூதியத்திற்காக விண்ணப்பம் வரப்பெற்ற தேதியைப் பணம் கொடுக்கும் அலுவலர் தெளிவாய்க் குறித்துக்கொள்ள வேண்டும். விண்ணப்பம் செய்திருப்பவரைப் பணம் கொடுக்கும் அலுவலர் நேரில் விசாரித்ததாகவும், நேரில் செல்வதிலிருந்து விதிவிலக்களிக்கப் பட்டவராயிருந்தால், அவரது அடையாளத்தைத் தாம் வேறு விதமாகத் தெரிந்து மனநிறைவு கொண்டதாகவும் (3 ஆவது உப விதியைப் பார்க்க) ஒரு சான்றுப் பத்திரம் இணைக்க வேண்டும்.

(5) ஓய்வூதியம் அல்லது படி கொடுப்பதற்கான நிலையான ஆணை எண் ஒவ்வொரு உறுதிச் சீட்டின் மீதும் தெளிவாய்க் குறிக்க வேண்டும்.

(6) ஓய்வூதியங்களோ படிப் பணங்களோ ஏன் வாங்கப் படாமல் விட்டு வைக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பணம் கொடுக்கும் அலுவலர் கூடிய விரைவில் ஆராய்ந்தறிய முயற்சி

செய்ய வேண்டும். ஓய்வூதியம் பெறுபவர் இறந்துவிட்டால் இறந்த தேதியையும், தன்மையையும், அதற்கேற்பட்ட பதிவேட்டில் குறித்துக் கொண்டு அவ்விவரங்களைத் தாமதம் செய்யாமல் அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும். அதனுடன் ஓய்வூதியம் அல்லது படிப்பணம் கொடுப்பதற்குரிய நிலையான ஆணையையும் அவருக்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டும்.

(7) ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்டு வாங்கப்படாத ஓய்வூதியம் அல்லது வேறு பணப் படிகளைப் பட்டியலிலிருந்து அடித்து நிலுவை பாக்கியையும் அரசாங்கத்திற்குச் சேர்த்துவிட வேண்டும். ஆனால் நிலையம் பாதுகாக்கப்பட்டு, பணி சரிவர நடந்து கொண்டிருந்தால் அந்நிலையங்களுக்குச் சேர வேண்டிய படிப் பணங்களை நில வருவாய்த் துறைக் கழகம் புதுக்கி நிலுவைத் தொகையைக் கொடுக்கலாம். பணி நடக்காதிருந்தாலும் நடக்காமலிருப்பதற்கும், ஏற்பட்ட பாடைப் பொருமல் இருப்பதற்குக் காரணம் இயலாமையன்றிக் கவனக் குறைவு அன்றென்று வருவாய்த் துறைக் கழகம் மனநிறைவு அடைந்திருந்தால் இழக்கப்பட்ட படியையும் பெறுகாக்கலாம். ஆனால் நிலுவைப் படித் தொகையைக் கொடுப்பதற்கு அரசாங்கத்தின் ஒப்புவிப்புப் பெற வேண்டும்.

2. ஓய்வூதியம் பெறுபவர்கள் இறந்துவிடுவாரெனில் அவர்களின் பிரதிநிதிகளிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பம்.— (1) ஓய்வூதியம் பெறுபவர்கள் இறந்தனரெனில் அவர்களின் சட்ட முறைப் பிரதிநிதி என ஒருவர், நிலுவையிலிருக்கும் ஓய்வூதியத்தை அல்லது பணத் தொகையைக் கேட்டு விண்ணப்பம் செய்து கேட்டுக் கொண்டால் அவர் அந்தத் தொகையைப் பெறுவதற்கு உரிமை உள்ளவர் என மெய்ப்பிக்கக் கூடிய எழுத்து வடிவிலான பிரமாண வாக்குமூலம் அல்லது உறுதிமொழி அளிக்குமாறு பணம் கொடுக்கும் அலுவலர் அன்னாரைக் கேட்க வேண்டும்.

குறிப்பு.—1889-ம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (1889-ம் ஆண்டு II-வது சட்டம்) I-வது அட்டவணையின் கீழ் மேலே கண்ட பிரமாண வாக்கு மூலமும் உறுதி மொழியும் முத்திரை வரியிலிருந்து அலக்களிக்கப்பட்டவையாகும்.

(2) குறிப்பிட்ட கால அளவுக்கு ஏற்பட்ட ஓய்வூதியங்களும் ஒக்கப் படிகளும் அந்தக் கால அளவு கடந்த உடன் கொடுக்கப்பட வேண்டும். அதிலிருந்து ஒரு மாதம் அவை நடப்புச் செலவுகளாகவும் அதன் பின்னர் நிலுவையாகவும் கருதப்படும்.

உதாரணம்.—1942 டிசம்பர் மாதத்திற்குரிய படி 1943 ஜனவரி 1 ஆம் தேதியில் பெற உரித்தானது. அது 1944, ஜனவரி 1 ஆம் தேதிக்கு முன் கேட்கப்பட்டால் நடப்புச் செலவாகவும் அந்தத் தேதியிலும் அதற்குப் பின்னர் நிலுவையாகவும் கொடுக்கப்படும்.

(3) நிலுவை ஓய்வூதியங்களும் இதர நிலுவைப் பண படிகளும் நடப்புத் தொகையுடன் இரண்டு ஆண்டுகளுக்கு முழுவதுமாகக் கொடுக்கப்படும்.

உதாரணம்.—1943 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதியில் கொடுக்கப்பட வேண்டிய படிப் பணம் 1945 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி வரை கேட்கப்படாமலிருந்தால் 1945 ஆம் ஆண்டு டிசம்பர் முடிவு வரை அந்தத் தொகையும் 1943 ஆம் ஆண்டு ஜனவரிக்குப் பின்னரும் 1946 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு முன்பும் கொடுக்கப்பட வேண்டிய மாதாந்தர கால் ஆண்டு, அரை ஆண்டு அல்லது ஆண்டுப் பணம் முழுவதும் சேர்த்துக் கொடுக்கப்படும்.

(4) ஓய்வூதியங்களிலும் இதரப் படிப் பணங்களிலும் பாக்கி இருக்கும் பாகங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு அதிகமாக நிலுவையாக இருந்தால் அடியில் கண்டுள்ளவாறு கொடுக்கப்படும்.

நடப்பு ஆண்டுக்கு	முழுவதும்.
நிலுவை 1-ஆவது ஆண்டுக்கு	முழுவதும்.
நிலுவை 2-ஆவது ஆண்டுக்கு	முழுவதும்.
நிலுவை 3-ஆவது ஆண்டுக்கு	10 சதவிகிதம் குறைத்து.
நிலுவை 4-ஆவது ஆண்டுக்கு	15 சதவிகிதம் குறைத்து.
நிலுவை 5-ஆவது ஆண்டுக்கும் அல்லது மற்ற ஆண்டுகளில் யாதொரு ஆண்டுக்கும்	20 சதவிகிதம் குறைத்து.

உதாரணமாக 1938 ஆம் ஆண்டுக்குக் கொடுக்கப்பட வேண்டிய படிப் பணத்திற்கு 1943 ஆம் ஆண்டில் விண்ணப்பம் வாப் பெற்றால் கீழ்க்கண்டவாறு அது கொடுக்கப்படும்.

நடப்பு	1943 முழுவதும்.
நிலுவை	1942 முழுவதும்.
	1941 முழுவதும்.
	1940—10 சதவிகிதம் குறைத்து.
	1939—15 சதவிகிதம் குறைத்து.
	1938—20 சதவிகிதம் குறைத்து.

(5) திருநெல்வேலி, ராமநாதபுரம் மாவட்டங்களில் அமலில் உள்ள ஈவுத் திட்டப் படிகளுக்கு 1 ஆவது விதியின் கீழ் உள்ள (1) முதல் (6) வரை துணை விதிகள் பொருந்தா. அவற்றிற்குத் தனியாக விதிமுறை எற்படுத்தப்பட்டிருக்கிறது. உரிமை அளிக்கப் பெற்ற சொந்த ஈவுத் திட்டப் படிகளுக்கு இவ்விதியின் 7 ஆவது துணை விதி பொருந்தாது.

(6) ஜாரி பிரும்மதாயப் படி என்பது ஓய்வூதியம் அல்லது சாதாரண இனம் போன்ற கருணை காரணமாகக் கொடுக்கப்பட்ட தன்று. அது விலக்கு வாங்கப்பட்ட ஆண்டுத் தொகையானதால் அதைப் பெற்றவருக்கு மறுக்க முடியாத முழு உரிமை உண்டு. இது வாரிசு அற்றுலன்றி அரசினரைச் சாராது. மற்றும் 4 ஆவது துணை விதியில் குறிப்பிட்டுள்ளவாறு இதற்குச் சதவிகிதக் கழிவும் கிடையாது. ஆனல் காலாவதியான காரணத்தால் சிவில் வழக்குகள் தொடர முடியாதவாறு இருக்குமானல் அவற்றைக் கொடுக்க வேண்டியதில்லை அல்லது காலாவதியான தொகையைக் குறைத்துக் கொண்டு எஞ்சியதைக் கொடுக்கலாம்.

3. அரசிறைக் கழிவு.—வரி வசூல் மாதங்களில் தவணைகளாகக் கொடுக்கும் வழக்கம் இருந்தாலன்றி அரசிறைக் கழிவு பசலியின் கடைசித் தீர்வை வசூல் மாதத்தில் கொடுக்கப்படும்.

7—12—1942 தேதி. 2739, அ.ஆ.வரு.பல.
6—4—1943, தேதி. 15 வ.து.க.செ.அச்சு.

4. கால வரம்பின் அளவு.—ஓய்வூதியங்களின் நலுவையைக் கோரும் உரிமைக்கு ஓய்வூதியம் உரிதான தேதியிலிருந்து மூன்று ஆண்டுக் கால வரம்பு உண்டு ஆனல் ஒரு தவறுதலினல் இந்தக் கால அளவு உரிமை கொண்டாடப்பட்டாதிருந்தால் அத்தவறு கண்டுபிடிக்கப்பட்ட தேதியிலிருந்து கால வரம்பு மூன்று ஆண்டு உண்டு. இந்த விதியில் குறிப்பிட்ட கால அளவு கடந்த பிறகு, சிவில் நிலுவை ஓய்வூதியங்கள் கோரும் விண்ணப்பங்களில் கலெக்டர்கள் சான்றிதழ்கள் வழங்கலாகாது.

இந்த விதியில் கண்ட எதுவும் மத்திய அரசினரின் ஓய்வூதியங்களுக்குப் பொருந்தாது.

15—9—1942, தேதி. 1559, வ.து.க.செ.
6—8—1956, தேதி. அ.ஆ.வரு.பல.

68. அனுமதி பெற்றுச் செல்லும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்குப் பணம் கொடுத்தல்.—[1] மெக்கா முதலிய தலங்களுக்கு யாத்திரை செய்ய இயோமியா பெறுவோர்களை அனுமதிக்கலாம். அவர்கள் அவ்வாறு யாத்திரையிலிருக்கும்பொழுது ஏழு ஆண்டுகளுக்கு அவர்கள் ஓய்வூதியம் வாங்கலாம். என்றாலும் மெக்காவுக்குச் செல்பவர்கள் தங்கள் விண்ணப்பங்களை அரசாங்கத்தின் ஒப்புதலிபபிற்கு அனுப்ப வேண்டும். [3] அவர்கள் இங்கு இல்லாத போது மோசடி நடக்காதிருக்கும் பொருட்டுக் கருநாடக உதவிப்

பணம் பெறுபவர் ஒவ்வொருவர் அல்லது ஓய்வூதியம் பெறுபவர் தல யாத்திரை புறப்படும் முன் அவருடைய தற்கால வயது, தோற்றம் முதலியவற்றைக் கண்டு ஒரு சரியான விவரப் பட்டியல் குறிப்பிட்ட படிவத்தில் தயாரிக்க வேண்டும். இவ்விவரப் பட்டியலின் பிரதிகளை அவர்கள் செல்லும் வெவ்வேறு நாடுகளில் உள்ள இந்திய அரசியல் பிரதிநிதிகளுக்கு அனுப்ப வேண்டும்.

அவர்கள் முன்பாக ஓய்வூதியம் பெறுபவர் நேரில் செல்ல வேண்டும். [3] பணி புரியும் இயோமியாக்களாயிருந்தால் இந்த விதியை அவர்கள் அனுசரிக்க வேண்டியதில்லை. ஏனெனில் இயோமியா பெறுபவர் இல்லாதிருக்கும்போது அவருக்குப் பதிலாக இங்குப் பணி புரிபவருக்கு இந்த இயோமியாத் தொகை கொடுக்கப் படும். ஓய்வூதியம் பெறுபவர்கள் சாதாரணமான வெளியில் செல்ல அனுமதி கேட்கும்போது அரசாங்கத்திற்குத் தொல்லை கொடுக்காமலே சந்தர்ப்பத்திற்கேற்ப ஒவ்வொன்றிலும் ஓய்வூதியம் கொடுப்பதற்கு அவசியமென்று கலெக்டருக்குத் தோன்றும் விதிகளுக்குட்பட்டுக் கலெக்டர்களே அனுமதி கொடுக்கலாம்.

[6] கிரிமினல் நடைமுறைத் தொகுப்பு 488 ஆவது பிரிவின் கீழ்க் குற்ற விசாரணை நீதிபதி ஓய்வூதியம் பெறுபவர் மீது வாழ்க்கைத் தீர்ப்புச் செய்திருந்தால், அந்தத் தீர்ப்பை அனுசரித்து வாழ்க்கைத் தொகை செலுத்துவதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டாலன்றி அந்தக் குற்ற விசாரணை நீதிபதியின் அதிகார எல்லைக்கு வெளியே செல்ல அனுமதி கொடுக்கலாகாது. [6]

[1] 7—1—1822 தேதி, ல.து.க.செ. (மா. தொகுதி 1, பக். 12–13).
[2] 7—5—1849 தேதி, வ.து.க.செ. (மா. தொகுதி 1, பக். 490).
[3] 10—5—1847 தேதி, வ.து.க.செ. (மா. தொகுதி 1, பக். 419–420).
[4] 25—4—1850 தேதி, வ.து.க.செ. (மா. தொகுதி 1, பக். 522).
[5] 4—3—1864 தேதி, 1357, வ.து.க.செ.
[6] 10—3—1864 தேதி, 1473, தேதி, வ.து.க.செ.
[7] 11—9—1890 தேதி, 583, வ.து.க.செ.

69. நீக்கிவிடப்பட்டது.

6—8—1856 தேதி, 3077 அ.ஆ.வரு.பல.

70. இறந்தவர்களைப் பற்றிய அறிக்கை.—1. அறிக்கை அனுப்ப வேண்டிய அலுவலர்கள்.—66 ஆவது நியமனம் 4 ஆவது பத்தியில் குறிப்பிட்ட உயிர் சான்றுப் பத்திரங்களுக்கு மேலொப்பம் செய்யும் பொறுப்புள்ள அலுவலர்கள் ஓய்வூதியம் பெறுபவர்கள் இறந்த தகவலைச் சரியாக அறிக்கை செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

26—5—1877 தேதி, 2,401 ல.து.க.செ.

2. தகவல் கொடுப்பவருக்குப் பரிசுகள்.— [8] சிவில் துறைக்குச் சொந்த ஓய்வூதியம் பெற்றவர்கள் இறந்த தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் அவர்கள் இறந்தது பற்றி அறிவிக்கப்படாமலிருந்து அந்தத் தகவலை ஓய்வூதியம் கொடுத்து வரும் அலுவலருக்கு முதன் முதலாகத் தெரியப்படுத்துபவருக்குச் சந்தர்ப்பத்திற்கேற்ப 5 ரூபாய் முதல் 50 ரூபாய வரையில் பரிசு அளிக்கப்படும்.

உதவிப் பணம் பெற்று வருவதானது, ஒருவர் திருமணத்தினாலோ, பொதுப் பணியில் அமர்வதினாலோ அல்லது வாழ்க்கையில் சம்பவிக்கக் கூடிய காரணத்தினாலோ பாதிக்கப்படக் கூடியதாக இருந்தால் அவற்றைப் பற்றித் தகவல் கொடுப்பதற்கும் இந்த விதி பொருந்தும்.

[8] 15—11—1841 தேதி, வ.து.க.செ. (மா. தொகுதி 1, பக். 317).

[8] 17—6—1847 தேதி, வ.து.க.செ. (மா. தொகுதி 1, பக். 423).

[9] 25—8—1847 தேதி, மாநில அரசிதழ் 474-ஆம் பக்கத்தில் உள்ள அறிக்கை.

3. ஓய்வூதியம் பெறுபவர்களின் பட்டியலை மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்தல்.—இறந்ததினாலும் காலக் கழிவினாலும் ஏற்படக் கூடிய பிழைகளைத் தடுக்கும் பொருட்டு எல்லாவித ஓய்வூதியங்கள், இயோமியாக்கள், இதர பணப் படிகளைப் பெறுபவர்களின் பட்டியலை மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்ய வேண்டும். அதன் பின் ஏற்படும் மாறுதல்களைப் பற்றித் திருத்திய பட்டியலை ஒவ்வொரு ஆண்டும் அதற்காகக் குறிப்பிட்ட படிவத்தில் விளம்பரம் செய்ய வேண்டும்.

30—1—1877 தேதி, 408, அ.ஆ.

71. உதவித் தொகைகளைத் தொகுத்துப் பெறல்—1. பொது.— ஓய்வூதியங்களை மாற்றிக்கொள்வதற்காக இதனுடன் இணைக்கப் பட்டிருக்கும் விதிகளைக் கலெக்டர்கள் கவனிக்க வேண்டும். [1] சிவில் பணி ஒழுங்கு விதிகளுக்குட்பட்ட ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்ற எல்லாவகை ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் நிரந்தரமாகவோ அல்லது ஆயுட் காலத்திற்கோ ஓய்வூதியம் அளிக்கப்பட்டிருந்த போதிலும் இவ்விதிகள் பொருந்தும். ஆனால் 5 (i) ஆலயங்கள், பள்ளி வாசல்கள் முதலிய சமயக் கட்டளைகள் (ii) சத்திரங்கள், உணவளிக்கும் நிலையங்கள் முதலியவற்றிற்கு அளிக்கப்பட்ட அறக்கட்டளைகள் (iii) பணியோனியோ படிகள் இவற்றிற்கு இவ்விதிகள் பொருந்தா. ஆண்டு ஒன்றுக்கு 180 ரூபாய்க்கு அதிகமான ஓய்வூதியம் ஆ, இ மாற்றிக்கொள்வதற்கில்லை. ஆனால், தனியே பிரிந்து வாழும் மாதர்களின் ஓய்வூதியம் ஆண்டொன்றுக்கு 40 ரூபாய்க்கு மேற்படாவிட்டால் இவ்விதிகளின் கீழ் அவற்றை

மாற்றிக் தொகுத்துப் பெற்றுக் கொள்ளலாம். உதவிப் பணங்களை மாற்றித் தொகுத்துப் பெறுதற்கு அத்தொகை ஆதாயமான தொழிலில் ஈடுபடுத்துமாறுள்ள மனப்பான்மை உதவிப் பணம் பெறுபவர்களுக்கு இருக்குமானால் அதற்கு ஊக்கமளிப்பது மிகவும் அவசியம். ஆகையால் விண்ணப்பம் செய்பவரின் நடத்தை மதிப்புடைதாகவும் பணம் வீண் செலவுக் கல்லாமல் ஆதாயான தொழிலில் ஈடுபடுவதற்கு உதவும் எனவும் தெரியவருமானால் ஓய்வூதியத்தை மாற்றித் தொகுத்துப் பெறுவதை ஊக்குவிக்க வேண்டும் கருநாட்க உதவிப் பணத்தை மாற்றித் தொகுத்துப் பெறுவதற்காகக் கொடுக்கும் பணத்தை மாற்றி விண்ணப் பங்களைச் சென்னையில் உள்ள கருநாடக உதவிப் பணம் கொடுக்கும் அலுவலர் வழியாக அனுப்ப வேண்டும்.

[1] 28—7—1857 தேதி, வ.து.க.செ. (மா. தொகுதி III, பக். 58–1857)
[2] 23—6—1859 தேதி, வ.து.க.செ. (மா. தொகுதி III, பக். 138–1859
[3] 28—1—1916 தேதி, 31, வ.து.க.செ.
[4] 5—4—1859 தேதி, வ.து.க.செ. (மா. தொகுதி III, பக். 89–90–1859).
[5] 28—3—1860 தேதி, 1967, வ.து.க.செ.
[6] 6—11—1856 தேதி, வ.து.க.செ. (மா. தொகுதி 111, பக். 107–1856)
[7] 18—8—1862 தேதி, 5427, வ.து.க.செ.
[8] 1—6—1907 தேதி, 154, வ.து.க.செ.
[9] 6—8—1956 தேதி, 3077, அ.ஆ.வரு.பல.

2. ஓய்வூதியங்களை மாற்றித் தொகுத்துப் பெறுவதற்குரிய கொள்கைகள்.—மாற்றித் தொகுத்துப் பெறுவதற்குரிய முக்கியக் கொள்கைகள் கீழே விவரிக்கப்பட்டிருக்கின்றன :—

(i) பொதுவாய் ஓய்வூதியங்கள் (அ) ஆயுட்கால உதவித் தொகை (ஆ) பகிர்மானம் செய்யக் கூடிய ஓய்வூதியங்கள் (இ) பரம்பரை ஓய்வூதியங்கள் (ஈ) நிலையான ஓய்வூதியங்கள் என வகுக்கப்பட்டிருக்கின்றன.

(ii) (அ) வகுப்பைச் சேர்ந்த ஆயுட்கால உதவித் தொகையும் அதன் கீழ் வரும் கருணைப் படிகளும் மாற்றித் தொகுதியாகப் பெறுவதற்கு அமைக்கப்பட்ட பின் இறுதியாக முடிவடைந்துவிடும்.

(iii) (ஆ), (இ), (ஈ) வகை ஓய்வூதியங்கள் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு அற்றதன்று, மாற்றித் தொகுத்துப் பெறுவதால் இவை இறுதியாய் முடிவடைகின்றன என்பது உதவித் தொகை

பெறுவதற்குரிய நிபந்தனைகளைப் பொறுத்தது. அதைத் தீர்மானிப்பதற்குரிய பொதுவான கொள்கைகள் கீழே கொடுக்கப் பட்டிருக்கின்றன.

(1) அ—என்பவருக்கும் அவர் வாரிசுகளுக்கு ஓய்வூதியம் கொடுக்கப்பட்டிருந்தால், வாரிசுகளுக்குக் கொடுக்கப்படுதல் வரையறுக்கப்பட்ட உதவித் தொகையேயாகும். ஏனெனில், அ—மரணமெய்தியதற்குப் பின்னர் ஓய்வூதியம் இருந்தால் அன்றி அவர் வாரிசுகளுக்கு அதில் பாத்தியமிராது. அ—தம் வாழ் நாளிலேயே அரசாங்கத்தின் ஒப்பளிப்பிலுல் ஓய்வூதியத்தை மாற்றித் தொகுத்துப் பெற்றுக்கொண்டனர் என்றால் அது முடிவுறும். ஆகையால் அ—என்பவர் மரணம் எய்திய பின்னர் வாரிசுகளுக்கு ஓய்வூதியம் உண்டா என்ற கேள்விக்கே இடமில்லை.

(2) ஒரு உத்தியோகம் அல்லது பதவி வகிப்பதின் பொருட்டு உதவித் தொகை ஒருவருக்கு அளிக்கப்பட்டு அவருக்குப் பின் அதே உத்தியோகம் அல்லது பதவி வகிப்பவருக்கு உரிமை உண்டு என்ற நிபந்தனைகளின்மீது அவ்வுதவித் தொகை கொடுக்கப் பட்டிருந்தால் அது அவ்வல் பற்றிய தன்மை வாய்ந்ததாகும். முதல் முதலாக உதவித் தொகை பெற்றவருக்கு இருந்த உரிமை அவருக்குப் பின் வருபவர்களுக்கும் உண்டு. ஆகையால் தற்காலம் இத்தகைய பதவியில் இருப்பவர் தமக்குச் சேர்ந்த தமது ஆயுட் காலத்திய பாத்தியதையை மட்டும் தாம் விரும்புவாரெனில் உதவித் தொகையை மாற்றித் தொகுத்துப் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு மாற்றித் தொகுத்துப் பெற்றுக்கொள்ளும் தொகை ஓய்வூதியம் பெறுபவரின் உத்தேச ஆயுட் காலத்தை எதிர்நோக்கிக் கணக்கிட வேண்டும். அவர் இறந்த பிறகு அந்த ஓய்வூதியம் முழுவதையும் மறுமுறையும் அவரது வழியுரிமை உடையவர்களுக்கு வழங்கப்படும்.

(iv) (அ) வகுப்பு ஓய்வூதியம் பெறுபவர்கள் சம்பந்தப் பட்ட வரையில் அவ்வப்போது பணி ஓய்வூதியங்களை மாற்றித் தொகுத்துப் பெறுவதற்காகக் குறிப்பிட்ட அட்டவணையை அனுசரித்துக் கழிவில்லாமல் மாற்றல் தொகையைக் கணக்கிட வேண்டும்.

(v) (iii)—(1) பிரிவின்கீழ் வரும் ஓய்வூதியங்களுக்கு ஓய்வூதியம் பெறுபவரின் வாரிசுகளுக்கு ஓய்வூதியத் தொகை கழிவில்லாமல் கொடுக்க வேண்டுமென்றிருந்தால் மாற்றித் தொகுத்துப் பெறும் தொகையைப் பின்வருமாறு கணக்கிட

வேண்டும். ஓய்வூதியம் மாற்றித் தொகுத்துப் பெற வேண்டிய ஆணையில் பொது வருங்கால வைப்புத் தொகைக்கும், அதைப் போன்ற பிற நிதி களுக்கும் ஏற்பட்ட வட்டி விகிதத்தைக் கொண்டு நூறு என்னிக்கையால் வகுத்துவரும் எண் எத்தனை ஆண்டுத் தொகைக்கு ஓய்வூதியத்தை மாற்றலாம் என்பதைக் குறிக்கும். அந்த எண்ணிக்கையை ஆண்டு ஓய்வூதியத் தொகையைப் பெருக்கினால் ஓய்வூதியத்தை மாற்றித் தொகுத்துப் பெறுவதனால் ஆகும் ஓய்வூதியம் வாரிசுகளுக்கு இறங்கும்போது கழிவுக்குட்படுமாறு கொடுக்க வேண்டிய தொகையைப் பற்றி அரசினர் ஆணையைப் பெற வேண்டும்.

(iv)—(2) பிரிவில் கூறப்பட்டுள்ள ஓய்வூதியத்தைத் தற்காலம் பெறுபவர் மாற்றித் தொகுத்துப் பெறுவார் எனில் மாற்றுத் தொகையை மேலே கூறப்பட்டுள்ள (iv) ஆவது பிரிவில் கண்டுள்ளவாறு கணக்கிட வேண்டும்.

1—4—1937 தேதி, 33, வ.து.க.செ. அச்சு.

குறிப்பு.—மத்திய அரசினரின் ஆணைக்கு அனுப்பப்படும் ஒவ்வொன்றிலும் அடியில் கண்ட விஷயப் பட்டிக்குப் பதிலும் அனுப்ப வேண்டும்.

(i) அதிகாரம் பெற்ற அலுவலரின் ஒப்பளிப்பில் ஓய்வூதியம் பெறுபவர் தம் விருப்பம் போல் ஓய்வூதியத்தை மாற்றித் தொகுத்துப் பெற இறுதியாய் முடிவடையக் கூடுமா ?

(ii) ஓய்வூதியம் பெறுபவர் அவர் உரிமையை அல்லது அவருடைய ஆயுள் உரிமையை மாதந்திரம் மாற்றித் தொகுத்துப் பெற விரும்புகிறாரா அல்லாமல் அவரது வழியுரிமையையும் அவரது வாரிசுகளின் உரிமையையும் சேர்த்து மாற்றித் தொகுத்து பெற விரும்புகிறாரா :

(iii) கூடுமித் தொகை அளிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை அனுசரித்தும் (கட்டுப்பாடுகளைக் குறிப்பிட வேண்டும்) ஏற்றுக் கொண்ட மேலாண்மை முறையை ஒட்டியும், குறிப்பிட்ட பரம்பரையின் நிலைமையை முன்னிட்டும் ஆயுட்காலத்திய உரிமையை மாத்திரமா அல்லது பின்வரும் வாரிசுரிமைகளையும் சேர்த்து ஓய்வூதியத்தை கொடுத்துப் பெறுவதற்காகக் கவர்னர் பரிந்துரை பகர்கின்றனரா :

(iv) ஓய்வூதியம் முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியையோ வழி உரிமையை அனுசரித்து அடையச் சுதந்திரமுள்ள ஒவ்வொருவரின் பிறந்த தேதியும் அவர் ஆண், பெண் என்பதும்.

(v) சாதாரணமாக ஓய்வூதியம் பெறுபவர்களின் வாரிசுகள் உரிமை வழியாய் அனுபவிக்கக் கூடிய ஓய்வூதியத் தொகை.

(vi) ஓய்வூதியம் மாற்றித் தொகுத்துப் பெற ஒப்பளிக்கப்படுமாறு வாரிசுகளுக்குக் கிடைக்கக் கூடிய ஓய்வூதியத் தொகை.

7—4—1941 தேதி, 829, அ.ஆ.வரு.பல
12—5—1941 தேதி, 52, வ.து.க.செ. அச்சு.
6—2—1956 தேதி, 3077, அ.ஆ.வரு.பல.

5. ஓய்வூதியத்தை மாற்றித் தொகுத்துப் பெறுவதற்குரிய விதிகள்.—(1) தல அதிகாரிகளின் அறிக்கையையும் ஓய்வூதியம் பெற்றுக் கொள்பவர்களின் இசைவையும் அனுசரித்துப்

பதவியிலிருந்து எடுத்துவிடப்பட்ட பாகீயக்காரர்களாயினும் ஓய்வூதியம் பெறும் இராஜாக்களாயினும் அவர்களுக்குரிய ஆண்டொன்றுக்கு 20 ரூபாயும் அதற்குக் குறைவான வாரிசு பரம்பரை ஓய்வூதியங்களையும், மாலிக்கானுக்களையும் மாற்றித் தொகுத்துப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதிப்பார்கள். மேலே சொல்லப்பட்ட (v) ஆவது பகுதியில் கண்டிருக்கும் நடைமுறையை அனுசரித்து மாற்றித் தொகுத்துப் பெறத் தக்க தொகையைக் கணக்கிட வேண்டும்.

1—4—1937 தேதி, 33, வ.து.க.செ. அச்சு.

(2) அரசினருக்கு அனுப்பப்பட்ட குறிப்பிட்ட அறிக்கையின் மீது வாரிசுரிமை ஓய்வூதியம் என அரசினரால் தீர்மானிக்கப்பட்டு ஆண்டொன்றுக்கு 20 ரூபாய்களையும் அதற்குக் குறைந்த சொந்த ஓய்வூதியங்களையும் அதே விதத்தில் மாற்றித் தொகுத்துப் பெற்றுக் கொள்ளுவதையும் அரசினர் அனுமதிப்பார்.

11—9—1890 தேதி, 583, வ.து.க.செ.

(3) வாரிசுரிமை பெற்றதாகக் கருதப்படாதவையும் காலம் கடந்ததால் ஓய்வூதியக் குறைப்புக்கு அல்லது திரும்ப எடுத்துக் கொள்ளுதலுக்கு உட்பட்டவையுமான தர்க்காக்கள், கோரிகள், தக்கிகள் அல்லது மகந்துகள் பராமரிப்புக்காகக் கொடுக்கப்பட்ட உதவிப்பணம் சம்பந்தப்பட்டவரை ஓய்வூதியம் பெறுபவர்களின் வயதை அனுசரித்தும், அவர்களின் ஆயுட்காலத்திற்குப் பின்னர் அப்படிகள் நீடிக்கப்படுவதற்கு உண்டான எதிர்காலச் சூழ்நிலைகளைக் கவனித்தும் 15 ஆண்டுகளுக்குரிய தொகைக்கு மேற்படாமல் மாற்றித் தொகுத்துப் பெறுவதற்குக் கலெக்டர்கள் அரசினருக்குப் பரிந்துரை பகரலாம்.

(4) தல அதிகாரிகளின் அறிக்கையை அனுசரித்தும் தொகை பெறுபவர்களின் இசைவை அனுசரித்தும் ஆண்டொன்றுக்கு 20 ரூபாயும் அதற்குக் குறைந்துள்ள ஆயுள் ஓய்வூதியங்களும் மேலே 5 ஆவது விதியில் குறிப்பிட்ட விதத்தில் மாற்றித் தொகுத்துப் பெறுவதற்கும் அரசினர் அனுமதிப்பார்கள்.

(5) ( ) ஓய்வூதியத்தை மாற்றித் தொகுத்துப் பெறுவதற்கு அரசினர் கட்டாயப்படுத்தும் சந்தர்ப்பங்களைத் தவிர மற்ற எல்லா அரசியல் ஓய்வூதியம் பெறுபவராயினும், வருவாய் ஓய்வூதியம் பெறுபவர்களாயினும் அவர்கள் ஆணாலும், பெண்ணாலும் அவர்களின் ஆயுட் காலத்திய ஓய்வூதியத்தை அல்லது அரசியல் அல்லது வருவாய் ஓய்வூதியத்தில் அவர்களுக்குரிய ஆயுட்கால உரிமையை மாற்றித் தொகுத்துப் பெறுவதற்கு விண்ணப்பம்

செய்துகொள்வார்கள் எனில், அவர்களும் ஓய்வூதியங்களையும் மாற்றித் தொகுத்துப் பெறுவதற்கு மத்திய அரசினர் ஏற்படுத்தி இருக்கும் ஒழுங்குமுறை விதியை அனுசரித்து மருத்துவப் பரிசோதனைக்குட்பட வேண்டுமென அரசினர் தீர்மானித்திருக் கிறார்கள். இந்த நிலை ஆணைக்குட்பட்டு ஓய்வூதியத்தை மாற்றித் தொகுத்துப் பெறுவதற்கு ஓய்வூதியம் பெறுபவர் சாதாரணமாய் வசிக்கும் எல்லைக்குரிய சிவில் மருத்துவ அலுவலர், மாவட்ட மருத்துவ அலுவலர், சென்னை மாநகர் மாவட்ட மருத்துவ அலுவலர்கள் இவர்களில் ஒருவரிடமிருந்து சான்றுப் பத்திரம் கட்டாயமாய்ப் பெற வேண்டும். பதிவு செய்யப்பட்டுள்ள ஆங்கிலக் கல்வித் தகுதியுடைய பெண் வைத்தியர்கள் இந்தியப் பல்கலைக் கழகத்தின் வைத்தியப் பட்டம் பெற்ற மாதர்கள் ஓய்வூதியம் பெறும் மாதர்களைப் பரிசோதிக்கலாம். ஓய்வூதியம் முதலாக மாற்றித் தொகுத்துப் பெறுவதற்குரிய விண்ணப்பங்களை மேலே அனுப்புவதற்கும் முடிவு செய்வதற்கும் தற்காலம் கையாளப்படும் நடைமுறையையே அனுசரிக்கலாம். ஆனால் ஆவது இணைப்பில் குறிப்பிட்டுள்ள படிவத்தை எல்லா வற்றிலும் பூர்த்தி செய்ய வேண்டும். எல்லாவற்றிலும் மாற்றித் தொகுத்துப் பெறுவதற்கான தொகை கொடுக்கப்பட்ட பின்னர் இதன் அமைப்பு எக்காரணத்திற்காகவும் மாறுவதற்கில்லை.

20—6—1938 தேதி. 1573, அ.ஆ.வரு.பல
6—7—1938 தேதி. 75, வ.து.க.செ. அச்சு.
6—8—1956 தேதி. 3077, அ.ஆ.வரு.பல.

(ii) இதைப் பற்றி, இதற்கு முன் உள்ள எல்லா ஆணைகளுக்கும் பதிலாகப் பணி ஓய்வூதியத்தைத் தொகுத்துப் பெறுவதற்குரிய விதிகளின் 7 ஆவது விதியை அனுசரித்து அவ்வப்போது மத்திய அரசினரால் நிர்ணயிக்கப்பட்ட அட்டவணையையே அரசியல் அல்லது வருவாய் ஆயுள் ஓய்வூதியங்கள், மற்ற ஆயுட் கால உரிமை அரசாங்க ஓய்வூதியங்கள் வருவாய் ஓய்வூதியங்கள் இவற்றில் எதற்காயினும் கழிவில்லாமல் அனுசரிக்க வேண்டுமென அரசினர் தீர்மானித்திருக்கின்றனர்.

6—8—1956 தேதி. 3077, அ.ஆ.வரு.பல.

(iii) 1935 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதியிலும் அதற்குப் பின்னரும் அனுமதிக்கப்படும் ஆயுள் ஓய்வூதியம் அல்லது ஆயுள் உரிமை பெற்ற அரசாங்க வருவாய் சம்பந்தமான வேறு ஓய்வூதியத்தை மாற்றித் தொகுத்துப் பெறுவதற்கு இவ்வாணைகள் பொருந்தும்.

(6) மாதம் 15 ரூபாய்க்கு அதற்குக் குறைந்த தொகை உள்ள உயிர் வாழ்க்கைக்கு நிலையான பண உதவிகளையும், அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்களுக்கும் வீடுகளுக்கும் பதிலாக அளிக்கப்பட்ட ஈட்டுத் தொகைகள் மேலே குறிப்பிட்ட தொகை வரம்புக்குட்பட்டிருக்குமானால் அவற்றையும் தற்போது ஓய்வூதியம் பெறுபவர் இறந்தவுடன் கட்டாயமாக 1905 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து மாற்றித் தொகுத்துப் பெற வேண்டுமென அரசினர் ஆணை பிறப்பித்துள்ளார்கள். அத்தகையோர்களுக்கு உடனடியாக ஓய்வூதியத்தை மாற்றித் தொகுத்துப் பெறும் உரிமை அளிக்கப்படும் என்றும், அவர்கள் தங்கள் ஓய்வூதியங்களை அவ்வாறு மாற்றிக்கொள்ளத் தவறினால் அவர்கள் இறந்ததும் ஓய்வூதியம் பெற்றவரது குடும்பத்தின் அப்போதைய நிலைமையை உத்தேசித்து மாற்றுதலை இன்னும் சிறிது காலம் தள்ளி வைப்பது நலமென்று அரசினர் கருதுவாரெனில் அன்றி அது கட்டாயமாய் மாற்றப்படும் என்றும், ஓய்வூதியம் பெறுபவர் எல்லாருக்கும் கலெக்டர்கள் அறிவிக்க வேண்டும். மூன்றுள்ள (1) ஆவது விதியில் கண்டுள்ளவாறும் அதே விதத்திலும் ஓய்வூதியத்தை மாற்றித் தொகுத்துப் பெறும் தொகையைக் கணக்கிட வேண்டும். இந்த ஆணையை அனுசரித்துத் தொகுத்துப் பெறுவதை அமலாக்காத திட்டங்களுக்கு அரசினரின் ஆணை பெற வேண்டும். மதுரையில் அமலில் உள்ள மாலிகானா பண உதவிகளுக்கும், திருநெல்வேலியிலும், ராமநாதபுரத்திலும் அமலில் உள்ள ஈவுப் படிகளுக்கும் திட்டப் படிகளுக்கும் இந்த விதியிலிருந்து விதி விலக்களிக்கப்பட்டிருக்கிறது.

6—8—1956 தேதி, 3677 அ.ஆ.வரு.பல.

(7)) ஓய்வு பெறுபவரின் மனைவி அனுசரித்து ஓய்வுத் தொகையை மூலதனமாக மாற்றப்பட்டுப் பணம் கொடுக்கும்போது, மாற்றித் தொகுத்து பெறத்தக்க தொகையைக் கொடுக்கும் தேதி வரையிலுள்ள அவரது ஓய்வூதியத்தையும் கொடுக்க வேண்டும்.

(ii) ஓய்வூதிய மூலதனமாகக் கட்டாயமாய் மாற்றித் தொகுத்துப் பெறும் பணமாகக் கொடுக்கும்போதும், மாற்றப்பட்ட தொகை கொடுக்கப்படும் தேதி வரையில் சேர வேண்டிய ஓய்வூதியத் தொகையையும் கொடுக்க வேண்டும்.

(iii) ஓய்வூதியம் பெறுபவரது அடுத்த பிறந்த நாளுக்கு முன்னமே மாற்றப்பட்டுத் தொகுத்துப் பெறுவதற்குரிய தொகையைக் கொடுக்கப்படாவிட்டாலும் அல்லது தொகை கொடுக்கப்படும் முன், தொகை நிர்ணயத்திற்கு அனுசரிக்கப்பட்ட பொது வருங்கால வைப்புத் தொகை மூதலியவற்றின் வட்டி விகிதத்தில் மாறுதல் ஏற்பட்டாலும் ஓய்வூதியத் தொகை மாற்றித் தொகுத்துப் பெறுவதற்குரிய தொகையைத் திருத்தி அமைக்க வேண்டும்.

1—4—1937 தேதி. 33, வ.து.க.செ. அச்சு.

(8) முன் கூறப்பட்டுள்ள விதிகளை அனுசரித்து முழு ஓய்வூதியத்தையோ அதன் ஒரு பகுதியையோ மூதலில் மாற்றப் பட்ட ஓய்வூதியங்களுக்கு மோசடியாகவோ அல்லது தவறுகவோ ஓய்வூதிய ஆணைகள் மறுமுறையும் சிவில் கணக்கு விதித் தொகுப்பு II ஆவது தொகுதி 327 ஆவது விதியின் கீழ் அமைக்கப்பட்ட 40 என் படிவத்தில் உள்ள ஓய்வுத் தொகைப் பதிவேட்டில் ஓய்வுத் தொகைகள் தொகுத்துப் பெற மாற்றப்பட்டதைக் கலெக்டர்கள் குறித்துக் கொள்ள வேண்டும். ஓய்வூதியம் மாற்றப்படுவதற்காக வரப் பெறும் ஒவ்வொரு மனு சம்பந்தமாகவும் இத்தப் பதிவேட்டைப் பார்வையிட வேண்டும் என்பதோடல்லாமல் அரசினரின் ஆணை பெறுவதற்காக அனுப்பப்படும் ஒவ்வொரு மனு சம்பந்தமாகவும் இப்படிவேடு சோதிக்கப்பட்டது என்று தெளிவாகக் கூற வேண்டும்.

24—10—1934 தேதி. 154, வ.து.க.செ. அச்சு.

(9) ஓய்வூதியம் "பெறுபவர்" பெறுபவர்கள் இப்பதங்கள் ஓய்வூதியத் தொகையின் பங்குக்குரிய ஓய்வூதியம் பெறுபவரின் குடும்பத்தில் மற்றவர்களைக் குறிக்காமல் மாவட்டப் பட்டியலில் பதிவு செய்யப்பட்டவராயின் அவர்களை மட்டும் குறிக்கும். இவ்விதிகளின் கீழ் ஓய்வூதியங்களை மாற்றித் தொகுத்துப் பெறுவதற்குக் குடும்பத் தலைவரோ, பதிவேட்டில் கண்ட ஓய்வூதியம் பெறுபவரோ இத்தகையவர் இரண்டு மாத்திரம் போதுமானதாகும். ஆனால் கலெக்டருக்குக் காரணமிருந்தால் ஓய்வூதியம் பெறும் குடும்பத்தினர்கள் எந்த விதாச்சாரத்தில் ஓய்வூதியத் தொகையை வழக்கமாகப் பிரித்து எடுத்துக் கொண்டிருந்தார்களோ அதே விகிதத்தில் மாற்றித் தொகுத்துப் பிரித்துக் கொடுக்குமாறு அவர் ஆணை பிறப்பிக்கலாம்.

(10) இவ்வாணைகளை ஒப்புதியம் பெறுபவர்கள் எல்லாருக்கும் தெரியப்படுத்தி மிகச் சொற்பத் தொகையான ஒப்புதியங்களை எல்லாம் இவ்விதியை அனுசரித்து வாங்கிக் கொள்ளுவதற்குக் கலெக்டர்கள் முயற்சி செய்ய வேண்டும். இத்தகைய மிகச் சொற்பத் தொகை கொடுப்பதிலும், அவற்றில் ஏற்படும் கடிதப் போக்குவரத்திலும் கணக்குகள் வைப்பதிலும் கலெக்டர்களும், அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவரும் அரசினரும் வீணைக் கழிக்கும் அதிக காலத்தைப் பயன் தரும் வேறு வழியில் உபயோகிக்கலாம். மேலும் இவற்றில் அநேக ஒப்புதியங்களும் அவற்றின் பங்கீட்டினால் கிடைக்கும் தொகைகளும் ஒப்புதியம் பெறுபவர்களின் வாழ்க்கைக்கு முற்றிலும் போதாதனவாக அவ்வளவு குறைவாக இருக்கின்றன. ஆதலால் இங்கே அளிக்கப் பட்ட சாதகமான நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளுவதற்கு அநேகர் மனமுவந்து முன்வருவார்கள்.

72. ஒப்புதியங்களின் பாதீனமும் உப்பிரிவு செய்தலும்.—உப்பிரிவு செய்தல் பொதுவாய்த் தடுக்கப்பட்டிருக்கிறது.—பணி இயோமியாக்களில் உப்பிரிவு செய்தல் முற்றிலும் தடை செய்யப் பட்டிருக்கிறது. இயோமியாக்களில் உப்பிரிவு செய்தலுக்கு இடம் கொடுத்தால் எக்கருத்தையொட்டி இயோமியா முதலில் கொடுக்கப் பட்டதோ அக்கருத்து கொஞ்ச காலத்தில் சிதைந்து போய் விடும். இயோமியா ஒப்புதியங்களைப் போலவே பணி புரிவதற்கல்லாமல் ஒருவருக்கோ அவர் குடும்பப் பாதுகாப்பிற்கோ கொடுக்கப்பட்ட ஒப்புதியங்களிலும் அவற்றின் கருத்து நிறைவேறுது ஆகையால் அவற்றையும் சாதாரணமாய் உப்பிரிவு செய்வதற்கில்லை. தங்களுக்குரிய ஒப்புதியத்தின் பகுதியைக் கொடுக்கவில்லை என்றே அல்லது ஒப்புதியத் தொகையில் தங்கள் பாதுகாப்பிற்குரிய தொகையைக் கொடுக்கவில்லை என்றே இயோமியாக் குடும்பத்தினர்கள் ருறை தெரிவித்தால், குடும்பத் தலைவர்களான ஒப்புதியம் பெறுபவர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றுமாறு கலெக்டர் எச்சரிக்க வேண்டும். அவ்வாறு எச்சரிக்கப்பட்டும் ஒப்புதியம் பெறுபவர் தங்கள் கடமையை நிறைவேற்றவில்லையானால், 1871 ஆம் ஆண்டு ஒப்புதியச் சட்டத்தின் கீழ் ஒப்புதியம் பெறுபவர் மீது வழக்குத் தொடரும் பொருட்டு ஒப்புதியம் பெறுபவரின் குடும்பத்தில் பாதிக்கப்பட்டவருக்குச் சான்றுப் பத்திரம் கொடுக்க வேண்டும். அரசினரின் பிரத்தியேக அனுமதியின்றி இயோமியாவை உப்பிரிவு செய்யக்கூடாது. தவிர்க்க முடியாத காரணங்களுக்காக மாத்திரமே இதை உப்பிரிவு செய்வதற்கு அரசாங்க அனுமதியைக் கோர வேண்டும். பரம்பரை

ஒப்வுதியத்தின் எப்பகுதியையும் ஒப்பிட்ட மூலம் பராதீனம் செய்வது 1871 ஆம் ஆண்டு *ஒய்வுதியச் சட்ட நோக்கத்திற்குப் புறம்பானதாகையால் அதன் ஒப்படையை அங்கீகரிக்கவோ அல்லது அமல்நடத்தவோ கலெக்டர்கள் கடமைப்பட்டவர்கள் அல்லர்.

6—1—1916 தேதி, 11, வ.து.க.செ.

*குறிப்பு.—உரிமை அளிக்கப் படாத இனங்களுக்கு 1871 ஆம் ஆண்டு XXIII ஆவது ஒய்வுதியச் சட்டம் பொருந்துமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

8—8—1891 தேதி, 472. வ.து.க.செ.

2. 1871 ஆம் ஆண்டு XXIII ஆவது சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிகள்.—1871 ஆம் ஆண்டு ஆவது ஒய்வுதியச் சட்டத்தின்கீழ் அரசாங்கத்தின் ஒப்பளிப்புப் பெற்று வருவாய்த் துறைக் கழகம் கீழ்க்கண்டுள்ள விதிகளைப் பிறப்பித்திருக்கிறது :—

(1) 73 ஆவது நில ஆணையின் 4 ஆவது பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள வருவாய்த் துறைக் கழகத்தின் அதிகார வரம்பிற்கும் மீறி ஆணையைப் பிறப்பித்து ஒய்வுதியச் சட்டம் 3 ஆவது பிரிவின்கீழ் அளிக்கப்பட்டுள்ள உதவித் தொகை அல்லது ஒய்வுதியம் பெறுபவரின் உரிமையைக் கலெக்டர் தீர்மானிப்பதற்கான நிலைமை ஏற்பட்டால் அவ்வோய்வுதியம் அல்லது உதவித் தொகையைத் தொடர்ந்து கொடுக்கப்படுவதற்கோ அல்லது அது அரசாங்கத்தால் திரும்ப எடுத்துக் கொள்ளப் படுவதற்கோ இவ்வகையில் அதிகாரம் பெற்றவரின் முன் அங்கீகாரத்தைச் சமர்ப்பிப்பதற்கு ஏற்றவாறு கலெக்டர் பெற வேண்டும்.

(2) அதே போல் ஒய்வுதியம் அல்லது உதவித் தொகை தொடர்ந்து கொடுத்துத் தம்மால் அனுமதிக்கத் தமக்கு அதிகாரம் இல்லாதபோது, அதிகாரம் பெற்ற மேல் அதிகாரியின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக் கொடுத்திருந்தால் அந்த உரிமையைப் பற்றிக் கோரும் சிவில் நீதிமன்ற விசாரணைக்கு 3 ஆவது பிரிவின்கீழ்ச் சான்றிதழ்கள் அளிக்க வேண்டும்.

(3) அற்ப கெட்டவரின் நோக்கத்திற்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு ஒய்வுதியத்தில் அல்லது உதவித் தொகையில் அல்லது நில வருவாயில் உண்மையாக வாரிசு பாத்தியம் அல்லது பங்கு தமக்கு உண்டென்று ஒருவர் கொண்டாடும்போதும் மேலே சொல்லப்பட்ட சான்றிதழ் சாதாரணமாகக் கொடுக்கப்படும்.

ஆனால் அந்த உதவித் தொகையை ஏற்படுத்துவதில் அல்லது அதைத் தொடர்ந்து கொடுப்பதில் அரசாங்கத்தின் கருத்திற்கும் நோக்கத்திற்கும் விரோதமாகத் தற்காலிக அறநிலையப் பாதுகாப்பாளராயினும் ஆயுள் காலத்திற்கு அனுபவித்து வருபவர் அவர்களுக்குப் பாத்தியம் செய்த ஓய்வூதியத்தையோ தொகையையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ திரும்ப எடுத்துக் கொள்வதைப் பற்றி உரிமை வாதம் இருக்குமானால் ஓய்வூதியம் அல்லது உதவித் தொகையை அரசாங்கத்தில் திரும்ப எடுத்துக்கொள்ள ஆணை பிறப்பிக்கத் தகுதியுள்ள அலுவலரின் முன் ஒப்புவிப்பில்லாமல் சான்றிதழ் அளிக்கக் கூடாது.

(4) 3 ஆவது விதியின் கீழ் விசாரிக்கப்பட்ட வழக்குகளின் தீர்ப்புக் கொண்டாடப்பட்ட உரிமையின் அல்லது அதன் ஒரு பகுதியின் நேர்மையை ஒத்துக்கொள்வதாயிருந்தால், மேலே கண்டுள்ள அத்தீர்ப்பை நிறைவேற்ற வேண்டும். (அ) ஓய்வூதியத் தொகை சொக்கமாகவோ அல்லது அரசிறைக் கழிவாகவோ கொடுக்கப்படுவதாயிருந்தால், கருவூலத்திற்கோ அல்லது கிராம அலுவலர்களுக்கோ உரிமை உடையவர் என்று தீர்மானிக்கப் பட்டவருக்குக் கருவூலத்திலிருக்கும் தொகையிலிருந்தோ அல்லது இனி கொடுப்பதற்காக உண்டாகும் தொகையிலிருந்தோ கொடுக்குமாறு ஆணை பிறப்பிக்க வேண்டும். (ஆ) உதவித் தொகை நில வருவாயாக இருந்தால் இனம் உடையவராக உள்ள என்பவருக்குச் சாதகமாக உரிமை முடிவு செய்யப்பட்டதாகக் கோர்ட்டில் விளம்பரம் செய்து, நிலத்தை அனுபவிக்கும் குடியானவர்களுக்கு எழுத்து வடிவில் அறிவிப்பு அனுப்ப வேண்டும். உரிமை போலப் பாவனை செய்துகொண்டு ஓய்வூதியம் அல்லது இனம் யாதொன்றைத் தவறுதலான முறையில் முன்னமே பெற்றுக் கொண்டிருப்பவர்கள் மீது வழக்குத் தொடர்வதற்குரிய அதிகாரம் அளிக்கும் சான்றிதழை இனம் உடையவராக அங்கீகரிக்கப்படவருக்குக் கொடுக்க வேண்டும்.

17—5—1915 தேநி. 146. வ.து.க.செ.

73. ஓய்வூதியங்களைத் தொடர்ந்து கொடுப்பதற்கும் புதுப்பிப்பதற்கும் உரிய பொது நடைமுறை.— உதவித் தொகை பெறுபவர்கள் இறந்ததும் உதவித் தொகை நிலையாக அரசாங்கத்தைச் சேர்ந்துவிடுவதாக ஒப்புகொள்ளப் பட்டிருந்தாலும் நிதாய் உரிமை கொண்டாடுபவர் சட்டத்தையும் பழக்க வழக்கங்களையும் *அனுசரித்து இறந்தவருக்கு வாரிசு

ஆவார் எனில் பெயரைப் பதிவேட்டில் தாக்கல் செய்து அவருக்கு ஒப்வுஇடம் கொடுக்கப்பட வேண்டும். மற்றும் பின்வரும 4 ஆவது பத்தியில் குறிப்பிட்ட விதிகளை அனுசரித்து [1] அரசாங்கத்திற்கோ அல்லது [3] வருவாய்த் துறைக் கழகத்திற்கோ அவர்களின் உதவி ஆணையைக் கோரிச் சந்தர்ப்பங்களை எடுத்துக் கூறி ஓறிக்கை அனுப்ப வேண்டும். இவ்வாறு அரசினரின் அல்லது வருவாய்த் துறைக் கழகத்தின் ஆணையை நாடும்பொழுது அதற்குரிய படிவத்தில் [2] அசல் பட்டயம் இருந்தால் அதையும் அதன் மொழி பெயர்ப்புடன் சேர்த்து அனுப்ப வேண்டும். [24] அரசாங்கத்தின் நன்மைக்காக வழிபாடு செய்யப்படுவதற்காக அளிக்கப்பட்ட யோமியாக்கள் வாரிசு பரம்பரைப் பாத்தியமுள்ளவை எனக் கருதலாகாது. படியைப் புதுப்பிப்பதற்கு ஏழ்மை நிலையை ஒரு நியாயமான காரணமாக ஒத்துக் கொள்ளப்படமாட்டாது. [43] தொடையைப் புதுப்பிப்பதற்கு விண்ணப்பம் செய்வதில் கால தாமதம் ஏற்பட்டால், அதற்கு முழுக் காரணங்கள் கூற வேண்டும். முதன் முதலாகக் கொடுக்கப்பட்ட தொகைக்கும் இப்போது பரிந்துரை செய்யப்பட்ட தொகைக்கும் வித்தியாசம் இருந்தால் அவ்வித்தியாசத்திற்கு காரணம் கூற வேண்டும். [5]

பாத்தியதை கொண்டாடும் எல்லா விசுவாசிகளின் வயதையும் காட்ட வேண்டும். பட்டத் தொகை ஒரு தலைமுறைக்கு மட்டும் புதுப்பிக்கப்பட்டிருந்தால் அதை உதவி பெறுபவருக்குத் தெரிவாய் விளங்க வேண்டும்.

1 3—7—1851 தேதி, வ.து.க.செ. (மா. தொ. II, பக். 26—1851).
2 29—9—1845 தேதி, வ.து.க.செ. (மா. தொ. I, பக். 383).
3 29—3—1847 தேதி, வ.து.க.செ. (மா. தொ. I, பக். 418—419).
4 12—3—1857 தேதி, வ.து.க.செ. (மா. தொ. III, பக். 14. 1857).
5 17—5—1915 தேதி, 146, வ.து.க.செ.
6 27—2—1851 தேதி, வ.து.க.செ. (மா. தொ. II, பக். 3—4, 1851)
7 8—3—1852 தேதி, வ.து.க.செ. (மா. தொ. II, பக். 53. 1852).
8 27—6—1856 தேதி, 3551 வ.து.க.செ.

*குறிப்பு.—ஒப்வுரியம் பெறுபவர்கள், இயோமியா பெறுபவர்கள் இறந்து விட்டால் இவர்களின் வாரிசுகளைப் பற்றிய விசாரணைகளைப் பொதுவாகத் தாசில்தார் நடத்துவார். தகுமை நடத்தில் தாசில்தார் இல்லாதிருக்கும்போது, தகுமைத் தாலுகா கணக்காளர் விசாரணை செய்யலாம், ஆனால், தாசில்தாரின் ஏற்பின்றி ஒன்றிலும் முடிவான ஆணை பிறப்பிக்கலாகாது.

14—11—1898 தேதி, 680, அ.ஆ.

2. அரசியல் உதவிப் பணம் பெறுபவர் இறந்த பின் அவர் வாரிசுகளைத் தேவையான ஏற்பாடு செய்வது பற்றிய ஒழுங்கு முறைகள் முதலியன.—அரசியல் உதவிப்பணம் பெறுபவராயினும்

அத்தகைய குடும்பத்தினர்களாயினும் இறந்துவிட்டால் அத்தகைய உதவிப் பணத்தைப் பற்றி மாநில அரசாங்கம் கவனிக்க வேண்டும். இறந்துவிட்ட உதவிப் பணம் பெற்றவரின் வாரிசுகளுக்கோ அவரைச் சார்ந்துள்ளவர்களுக்கோ அல்லது அவர் எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவரோ அக்குடும்பத்திற்கு ஏதேனும் இனி உதவிப் பணம் அளிக்க வேண்டியிருந்தால், மைசூர் குடும்பத்திற்குத் தயாரிக்கப்பட்ட விதிகளின் உட்கருத்தை அனுசரித்துக் கொடுக்கப்படுவதற்கு விதிமுறைகள் தொகுக்கப் பட வேண்டும். மைசூர் விதிகளை III ஆவது அட்டவணையில் காணலாம்.

13—6—1857 தேதி, வ.து.க.செ. (மா. தொகுதி III, பக். 43, 1857).

3. காலம் கடந்த அரசியல் ஓய்வூதியத்தை ஓய்வூதியம் பெற்றவரின் விதவைக்குத் தொடர்ந்து கொடுத்தல்.—அரசியல் ஓய்வூதியம் பெறுபவரின் விதவைக்குக் காலங்கடந்த ஓய்வூதியத்தின் பாதித் தொகையை அன்னூர் பாதுகாப்பிற்காகத் தொடர்ந்து கொடுப்பதின் தகுதியைப் பற்றிக் கலெக்டர்களுடைய அறிக்கையின் மீது அரசினர் கவனிப்பார்கள்.

3—3—1859 தேதி, வ.து.க.செ. (மா. தொகுதி பக். 38, 1859).

4. அரசினரின் அதிகாரங்களும் அவர்களின் சார் நிலையிலுள்ளவர்களின் அதிகாரங்களும்.—இயோமியாக்களையும், ஓய்வூதியங்களையும், மற்ற உதவித் தொகைகளையும் கொடுப்பதும் தொடர்ந்து கொடுப்பதும் அல்லது திரும்ப எடுத்துக்கொள்வதும் பற்றிய விதிகளைக் கீழே காணலாம் :—

(1) அரசியல் ஓய்வூதியங்கள், உதவித் தொகைகள் இவற்றின் விளக்கம் : இவை அரசுப் பணியாளர் அல்லாத மற்றவர்களின் பணி, பரம்பரை அல்லது குடும்பத் தொடர்பு இவற்றின் பொருட்டுப் பொது ஆட்சி முறைக் கொள்கையில் ஒருவகை உதவியோ அல்லது மதிப்போ அளிப்பது விரும்பத் தக்கதென்ற முறையில் அரசினரால் கொடுக்கப்பட்ட ஓய்வூதியங் களும் உதவித் தொகைகளுமாகும்.

(2) இயோமியா ஊதியங்களையும் இதர பணப்படித் தொகைகளையும் அதிகப்படுத்தவும், குறைக்கவும் மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்துக்கு உரிய அரசியல் ஓய்வூதியம் பெறுபவர்களுக்காக மீள ஏற்படாத செலவுகளைச் செய்யவும் மாநில அரசினர் அதிகாரங்களைக் கீழே காணலாம்.

கீழ்க்கண்டவற்றை மாநில அரசினர் ஒப்பளிக்கலாம் :—

(i) இந்திய அரசாங்கத்திடமிருந்து வரப் பெற்ற 1909 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ஆம் தேதி 222 என் அரசாங்க நிதித் துறை அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ள நடைமுறை விதியை அனுசரித்து இறந்துவிட்ட ஓய்வூதியம் பெற்றவரின் வாரிசுக்கும் மற்றப் பிரதிநிதிகளுக்கும் குறைந்த அரசியல் ஓய்வூதியம் கொடுத்தல்.

(ii) ஆண்டொன்றுக்கு 200 ரூபாய்வரை புதிய அரசியல் ஓய்வுக்கால ஓய்வூதியம் கொடுத்தல்.

(iii) அதிகப்படுத்துவதால், ஓய்வூதியத் தொகை ஆண்டொன்றுக்கு 200 ரூபாய்க்கு மேற்படாமலிருக்குமாயின் நடப்பிலுள்ள அரசியல் ஓயுட்கால ஓய்வூதியத்தை அதிகரித்தல்.

(iv) ஒருவருக்கே ஓய்வூதியமும் உதவித் தொகையும் கொடுக்கலாகாது என்றும் நிபந்தனைக்குட்பட்டு 1,000 ரூபாய்க்கு மேற்படாத அரசியல் உதவித் தொகை கொடுத்தல்.

(v) உத்தரகிரையைச் செலவு, ஒரு பெண்ணுக்கு சீதனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு பயணத்தின் 'செலவு போன்றவற்றில் ஒவ்வொருவருக்கு 1,000 ரூபாய்க்கு மேற்படாமல் அரசியல் ஓய்வூதியம் பெறுபவருக்கு மீள ஏற்படாத செலவுக்காகக் கொடுத்தல்.

9—11—1942 தேதி, 2517, அ.ஆ. வரு.
20—1—1943 தேதி, 4 (நிர்.), வ.து.க.செ. அச்சு.

(3) அரசாங்கத்திற்கு பணி புரியும்போதோ அல்லது அதில் ஈடு பட்டதின் விளைவாகவோ காயமடைந்தவரான அரசுப் பணியாளரல்லாதவருக்கும் அல்லது கொல்லப்பட்டவர் அரசாங்கப் பதவியில் இல்லாதவர் எனில் அவர் குடும்பத்திற்கும் அல்லது அரசாங்கத்திற்காகச் சிறப்பான பணிபுரிந்தவர் காயமடையாவிட்டாலும் அவருக்கு ஓய்வூதியம் அல்லது உதவித் தொகையை அரசினர் ஒப்பளிக்கலாம்.

(4) குறிப்பிட்ட பணி நடந்து கொண்டிருக்கும் வரை காலக் கழிவுகளுக்குள்ளாகிய பணி யோமியாக்களை கலெக்டர்கள் சாதாரணமாய்க் கொடுத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அந்தப் பணி இனித் தேவையில்லை என்று கலெக்டர் கருதுவாரெனில் அதைப்பற்றி அவர் அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும்.

அரசினர் தங்கள் யுக்தம்போல் அந்த உதவித்தொகை கொடுப்பதை அல்லது தொடர்ந்து கொடுப்பதை அல்லது அதைத் திரும்ப எடுத்துக்கொள்வதைப் பற்றித் தீர்மானிப்பார்கள்.

(5) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தலைமுறைகளுக்கு அளிக்கப்பட்ட வாழ்க்கை யோபியாக்கள், எவர்களுக்காக அளிக்கப்பட்டனவோ அவர்கள் இறந்ததும் காலாவதியடையும் என்றால் விண்ணப்பம் செய்தவர்களின் ஏழமை நிலைமை போன்ற மிகத் தனிப்பட்ட காரணங்களுக்காக, அரசாங்கம் இவ்வோய்வு நியங்களைத் தொடர்ந்து கொடுக்கலாம். அப்போது பொதுவாக உதவித் தொகை குறைக்கப்படுவதும் தவிர அதைப் பெறுகிறவர் களுக்கு அரசாங்கத்தின் கருணைக் கொடைகள் அவர்களின் வாழ் நாட்களுக்குப் பின்னர் நீடித்துக் கொடுக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்க வேண்டும். இத்தனை தலைமுறைகளுக்கென்று குறிப்பிட்டு வழங்கப்படாத ஓய்வூதியங்களை அவை கடைசியில் நிறுத்தப்படும் என்ற நோக்கத்துடன் காலக் கழிவு ஏற்படும்போ தெல்லாம் குறைத்துக் கொண்டே வர வேண்டும்.

(6) அறநிலையங்களுக்கு அளிக்கப்பட்ட பண உதவிகளை அறம் நடந்து கொண்டிருக்கும் வரையிலும் கலெக்டர்கள் கொடுக்க லாம். [1] அறம் செய்யப்படாவிட்டால், உதவித் தொகையைத் திரும்ப அரசினர் எடுத்துக் கொள்ளும்பொருட்டு வருவாய்த் துறைக் கழகத்திற்குத் தகவல் கொடுக்கப்பட வேண்டும். அவற்றின்மீது வருவாய்த் துறைக் கழகம் முடிவாக நடவடிக்கை எடுக்கும்.

(7) [2] திரும்ப எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்களுக்கும், பதவிகளுக்கும், உரிமைகளுக்கும் பதிலாக அளிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகைகளை, ஒவ்வொன்றிலும் உதவித் தொகை அளிக்கப்பட்ட கொள்கைகளை அனுசரித்தும் 1871 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் தேதி இந்திய அரசாங்க நிதித் துறை 3418 எண் மேலெழுத்தில் விவரிக்கப்பட்ட விதிகளை அனுசரித்தும் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தவாறு படிகள் கொடுக்க வருவார் அல்லது வருவாய்த் துறைக் கழகம் அவற்றைத் திரும்ப எடுத்துக் கொள்ளக் கூடும். அதாவது, ஓய்வூதியம் சொந்த சொத்துப் போலிருந்தால் அல்லது அரசாங்கத்திற்குக் கொடுக்கப் பட்ட சொத்துக்குப் பதிலாக அளிக்கப்பட்ட நிலையான உதவித் தொகையாயிருந்தால் சட்ட பூர்வமான வாரிசுகளுக்கும், இந்து மதத்தினராயிருந்தால் சுவீகார வாரிசுகளுக்கும், கலெக்டர்கள்

அவற்றைத் தொடர்ந்து கொடுக்கலாம். ஆனல் வாரிசு உரிமையில் விவாதமிருக்குமானல் வருவாய்த் துறைக் கழகத்தின் தீர்மானத் திற்கு அனுப்ப வேண்டும். ஓய்வூதியம் சொந்த சொத்துப்போல் இல்லாமல் ஆனல் அரசாங்கம் அவ்வோய்வூதியம் பெறுபவர்கள் வாரிசுப் பாம்பரையாக இருக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்திருந்தால் வாரிசு பாத்தியதையைச் சுவிகார வாரிசுகள் சட்ட முறையில் பெறுவதற்கில்லை. ஆனல், சிறப்பான காரணங்கள் இருக்குமானல் அரசாங்கம் அவ்வோய்வூதியத்தை அவ்வாரிசு களுக்குக் கொடுக்கலாம். அதற்காக அரசாங்கத்தின் ஆணை பெற வேண்டும் [1]

குறிப்பு.—உப்பு இழப்பு ஈட்டுச் சான்றுப் பத்திரங்களில் ஏற்படும் மாறுதலின் சட்ட முறை வாரிசுகளின் அல்லது மாற்றப்படுபவர்களின் பாத்தியதையில் சந்தேக மில்லாவிட்டால் கலெக்டர்கள் பதிவு மாறுதல்கள் செய்ய வேண்டும். ஆனல், சந்தேக முள்ளவற்றை வருவாய்த் துறைக் கழகத்திற்குத் தெரிவிக்க வேண்டும். வருவாய்த் துறைக் கழகம் சென்னையிலுள்ள மத்திய அரசாங்க ஆயத் துறைக் கலெக்டரைக் கலந்து இது பற்றி முடிவு செய்யும்.

10—6—1941 தேதி, 1331, அ.ஆ.வரு.பல.
30—7—1941 தேதி, 78, வ.து.க.செ. அச்சு.

(8) குறிப்பிட்ட நிலங்கள் அல்லது கிராமங்களின் தீர்வையி லிருந்து கொடுக்கப்படும் [4] சிவில் அல்லது படைத் துறை, சமய அற அல்லது [4] சொந்த நிலவருவாய் ஒப்படைகள் எல்லாம் அரசினர் அனுமதிக்கும் தீர்வை தள்ளுபடிக்கும் அல்லது நிறுத்தி அதாவது ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் தள்ளுபடி செய்யப் பட்டாலும் நிறுத்தி வைக்கப்பட்டாலும் அதனல் ஏற்படக் கூடிய இழப்புகள் உதவி பெறுபவர்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். [4]

1 17—5—1915 தேதி, 146, வ.து.க.செ.
2 10—9—1915 தேதி, 264, வ.து.க.செ.
3 11—12—1917 தேதி, 4014, அ.ஆ.
4 3—11—1922 தேதி, 1936, அ.ஆ.வரு.பலவ.
1—8—1928 தேதி, 1712, அ.ஆ.வரு.பலவ.
3 8—7—1918 தேதி, 2563, அ.ஆ.பலவ.
3 7—1—1918 தேதி, 8, வ.து.க.செ.
3 1—8—1918 தேதி, 146, வ.து.க.செ.
4 8—11—1922 தேதி, 2117, வ.து.க.செ. பலவ.
3 15—8—1928 தேதி, 2710, வ.து.க.செ.பலவ.
5 21—9—1921 தேதி, 2092, அ.ஆ.வரு.பல.
5 21—6—1921 தேதி, 34, வ.து.க.செ.
5 29—9—1921 தேதி, 69, வ.து.க.செ.பல.
6—8—1956 தேதி, 3077, அ.ஆ.வரு.பலவ.

5. சிவில் அல்லது படைத் துறையில் பணி புரிந்ததற்காகக் கொடுக்கப்பட்ட நிலக் கொடைகளுக்குரிய நிபந்தனைகள்.—பணி புரிந்ததற்காகக் கொடுக்கப்பட்ட எல்லாச் சிவில் படைத் துறை நிலக்கொடைகள் ஜாகிர்கள் நில வருவாய் ஒப்படைகள் பிரத்தி யேகமான ஓய்வூதியங்கள், அவை போன்று தொடர்ந்து கொடுக்கப் பட்டுவரும் வெகுமானத் தொகைகள். குழப்பம் அல்லது விபத்துக் காலங்களில் அரசாங்கத்திற்கு விசுவாசமாக நடந்து கொண்டு அரசாங்கத்திற்கு ஊக்கமாக உதவி செய்ய வேண்டுமென்ற நிபந்தனைகளுக்குட்பட்டிருக்க வேண்டும். இந்நிபந்தனைகள் மீறப்பட்டிருக்கின்றவா என்பதையும் அவ்வாறு மீறப்பட்டிந்தால் நிரந்தாமாகவோ, அல்லது தற்காலிகமாகவோ கொடை முழுவதை யுமோ அல்லது அதன் ஒரு பகுதியையோ அரசாங்கத்தின் நீர்மானத்தை அனுசரித்துத் திரும்ப எடுத்துக் கொள்வதில் மாநில அரசாங்கத்தின் ஆணையே இறுதி என்பதைத் தெளிவாக்கு மாறு இக்கொடையின் நிபந்தனைகள் வகுக்கப்பட வேண்டும்.

4—6—1918 தேதி, 2141, அ.ஆ.வரு.
6—8 1956 தேதி, 3077, அ.ஆ.வரு.பலவ.

IV ஆவது அத்தியாத்தின் இணைப்புகள்

இணைப்பு

66-ஆவது நிலை ஆணை, 7 (ii)-ஆவது பத்தி

அரசாங்கப் பணியாளர்கள் ஓய்வூதியம் பெறுபவர்கள் இவர் களின் விரல் பதிவுகளை எடுப்பதற்கும் அவற்றை உபயோகிப் பதற்கும் வகுக்கப்பட்டுள்ள விதிகள்.—

I ஆவது பாகம்—கைவிரல் பதிவு அடையாங்கள் எடுக்கும் விதம்

1. பணிப் பதிவேடு வைக்கப்பட வேண்டியவரான புதிதாய் வேலையில் அமர்த்தப்பட்ட ஒவ்வொரு அரசிதழ் பதிவில்லாத அலுவலர்க்கும் அவரது ஓய்வுக்கு முன்னதாகப் பதிவேடு வைக்கப்பட்டிருந்த ஓய்வூதியம் பெறுபவர் ஒவ்வொருவருக்கும் அவருடைய இடது கையின் விரல்களின் கட்டை விரல் உட்படப் பதிவு அடையாளங்களை எடுத்து ஒரு நிலையான பதிவு இனிமேல் வைக்கப்படும்.

2. கால் பாகத்திலிருக்கும் பணிப் பதிவேட்டுப் புத்தகத்தின் முதல் பக்கத்திலும், அரைத் தாளிலிருக்கும் பணிப் பதிவேட்டுப் புத்தகத்தில் அடையாளக் குறிகளுக்குரிய பகுதியிலும், அரசாங்க அலுவலில் புதிதாக அமர்த்தப்படும் ஒவ்வொருவருடைய இடக்கைக் கட்டை விரலின் பதிவையும் மற்ற விரல்களின் பதிவுகளையும் எடுக்க வேண்டும். அலுவலகத்தின் தலைமை அலுவலர் அல்லது பணிப் பதிவேட்டில் எழுதப்படும் பதிவுகளுக்கு அத்தாட்சிக் கையொப்பமிடப் பொறுப்புள்ள அலுவலரின் முன்னிலையிலும் அவர் நேர் பார்வையிலும் விரல் பதிவுகள் எடுக்க வேண்டும்.

ஓய்வூதியம் பெறுபவர்களின் விரல் பதிவுகள் ஓய்வூதிய விண்ணப்பத்தின் முதல் பக்கத்தின் வலக்கை விளிம்பில் அல்லது அடிப் பாகத்தில் (ஆ) நிலையான ஓய்வூதிய ஆணையின் வெற்றிடப் படிவத்தின் கலெக்டர் பகுதியில் முதல் பக்கத்தின் அடிப்பாகத் திலும் எடுக்க வேண்டும். அவ்வாறு எடுக்கும்போது ஒவ்வொரு விரலுக்கும் கட்டை விரலுக்கும் தனித்தனி இடம் விட்டும், ஒவ்வொரு இடமும் எந்தெந்த விரலுக்கு ஏற்பட்டதென்று குறிப்பிட்டும் எழுத வேண்டும். ஓய்வூதிய விண்ணப்பத்தைத் தயாரிக்கும் அலுவலரே விரல் பதிவுகளை எடுப்பதற்குப் பொறுப் பாளியாவார். ஓய்வூதியம் அளிக்கும் அதிகாரமுள்ள அலுவலருக்கு ஓய்வூதிய விண்ணப்பத்துடன் விரல் பதிவுகளையும் அனுப்ப வேண்டும். ஒவ்வொரு ஓய்வூதிய மனுவுடன் விரல் பதிவுகளின் ஓய்வூதியம் விண்ணப்பத்தின் முதல் பக்கத்தின் நகலையும் அனுப்ப வேண்டும். ஓய்வூதியம் அளித்த அரசாங்க ஆணையுடன் சேர்த்து வைப்பதற்காக இந்த நகல் அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும்.

குறிப்பு.—(i) உதவித் தொகைக்காகச் செய்து கொள்ளப்படும் மனுவுக்கு இந்த விதி பொருந்தாது. தொழு நோய் அல்லது வேறு காரணத்தினால் ஓய்வூதியத்திற்காக விண்ணப்பம் செய்பவரின் விரல் பதிவுகள் எடுப்பது முடியாவிட்டால் இந்த விதி வற்புறுத்துவதற்கில்லை.

4—6—1907 தேதி, 157, வ.து.க.செ.

(ii) நுனி விரல் பதிவுகளைத் தனிக் காகிதத் துண்டுகளில் எடுத்து அவற்றை ஓய்வூதிய விண்ணப்பத்தில் ஒட்டி வைக்கக் கூடாது. விரல் பதிவுகளை ஓய்வூதிய விண்ணப்பத்தின் முதல் பக்கத்தின் வலப் பாகத்திலாவது அல்லது அதன் அடிப்பாகத்திலாவது எடுக்க வேண்டும்.

(iii) தமிழ் நாடு கருவூல விதித் தொகுப்பின் 16-ஆவது விதியின் கீழ் உள்ள 78வது துணை விதியில் கண்டுள்ள ஓய்வூதியம் பெறுபவர்களைத் தவிர மற்ற ஓய்வூதியம் பெறுபவரின் ஒவ்வொரு ஆண்டிலும் முதல் முதலில் ஏப்ரல் மாதம் முதல் தேதி அல்லது அதன், பிறகு நேரில் செல்லும் போது, ஓய்வூதியப் பட்டியில் அவருடைய கட்டை விரலின் பதிவையும் மற்ற விரல்களின் பதிவுகளையும் ஓய்வூதியம் கொடுக்கும் அலுவலர் எடுக்க வேண்டும். பின்னர் அவர் தம்மிடமுள்ள ஓய்வூதியம் கொடுப்பதற்குரிய ஆணையின் பிரதியில் கண்டுள்ள அல்லது கணக்குத் தணிக்கைப் புத்தகத்தில் உள்ள விவரங்களைக்கொண்டு ஓய்வூதியம் பெறுபவரின் அடையாளத்தைக்கண்டுகொள்ள வேண்டும்.

இதர வழிகளால் ஓய்வூதியம் பெறுபவரின் அடையாளத்தைத் திட்டமாய்க் கண்டுகொள்ள முடியாவிட்டால், பட்டியலில் எடுக்கப்பட்ட அவருடைய விரல் பதிவுகளையும் கணக்குத் தணிக்கைப் புத்தகத்திலோ அல்லது ஓய்வூதியம் கொடுப்பதற்குரிய ஆணையிலோ ஒட்டப்பட்டிருக்கும் விரல் பதிவுகளையும் ஒப்பிட்டுப் பார்த்து ஓய்வூதியம் பெறுபவரின் அடையாளத்தைக் கண்டுகொள்ள வேண்டும். மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய்க்கு அதிகமாக பெற்று வரும் இம்மாதிரி ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இவ்விதிகளிலிருந்து விலக்களிக்கப்படும்.

28—9—1917 தேதி, 165, வ.து.க.செ.

23—12—1941 தேதி, 4227, ரூ 41—1 அ. குறிப்பு.

20—1—1943 தேதி, 4 (நிர்.) வ.து.க.செ. அச்சு.

(iv) அலுவலகத்தின் தலைமை அலுவலரின் முன்பாகச் செல்வதில் ஏதாவது இடைஞ்சல் இருந்தால் அல்லது அதனால் ஓய்வூதியம் பெறுபவருக்கு அவசியமில்லாத செலவு ஏற்படக்கூடியதாயிருந்தால் அலுவலகத் தலைமை அலுவலரின் சம்மதத்தில் ஓய்வூதிய விண்ணப்பம் செய்துள்ளவரின் அடையாளத்தைப் பற்றிக் குற்ற விசாரணை நீதிபதி மன நிறைவு கொள்வாரெனின் அவ்வோய்வூதியம் பெறுபவரின் விரல் பதிவுகள் அத்தகைய நீதிபதியின் முன்னர் எடுக்கப்பட வேண்டும். அவ்வாறு தாம் மன நிறைவு கொண்ட பின்னர் விரல் பதிவுகள் தம் முன்பாக எடுக்கப்பட்டதாகக் குற்ற விசாரணை நீதிபதி அதில், சான்று செய்ய வேண்டும்.

3. வேலைக்காவது விடுப்புக்காவது அல்லது ஓய்வூதியத்திற் காவது மருத்துவப் பரிசோதனை செய்யப்பட விண்ணப்பம் செய்து கொண்டவர் அனுப்பப்பட்டால் அன்னாரைப் பரிசோதித்து அவருடைய இடக்கைப் பெருவிரலின் பதிவை மருத்துவச் சான்றிதழில் மருத்துவ அலுவலர் எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்விரல் பதிவுகளைச் சம்பந்தப்பட்டவரின் பணிப்பதிவேட்டில் உள்ளவற்றுடன் அலுவலகத்தில் தலைமை அலுவலர் பின்பு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். வேலைக்காக விண்ணப்பம் செய்த வராயிருந்தால் அவருக்குப் பணிப் பதிவேடு இராது. ஆனால் அவர் வேலைக்கு நியமிக்கப்பட்டால் அவருக்குப் பணிப் பதிவேடு உடனடியாகத் தயாரித்து அதில் எடுக்கப்பட்ட அவருடைய இடக்கைக் கட்டை விரல் பதிவை மருத்துவச் சான்றிதழிலுள்ள பதிவுடன் ஒத்திட்டுப் பார்க்க வேண்டும்.

6—8—1956 தேதி. 3077 அ.ஆ. வரு. பலவ.

4. விரல் பதிவுகள் ? எடுப்பதற் க் கீழ்க்கண்ட பொருள்கள் வேண்டும்:—

ஒரு அங்குலம் கனம் உள்ள மரப்பலகையில் திருகு ஆணி களால் மூலைகளில் பதிக்கப்பட்ட 10½ அங்குல நீளமும் 7 அங்குலம் அகலமும் உள்ள தகரம் அல்லது செப்புத் தகடு. தகட்டின் அளவுகளை அனுபவத்திற்கு ஏற்றவாறு உள்ளதான சாதாரண அச்சக உருளை, ஒரு டின் அச்சு மை ஒவ்வொரு தடவையும் உபயோகித்த பிறகு தகட்டையும் உருளையையும் மண்ணெண்ணெயால் சுத்தம் செய்து துடைத்துத் தூசி படாமல் வைக்க வேண்டும்.

5. பதிவுகளை எடுக்க வேண்டிய விதம் கீழே விவரிக்கப்பட்டிருக்கிறது:—

(i) தகட்டின்மீது ஒரு சொட்டு மையைவிட்டுத் தகட்டில் மை சமமாய் நன்கு பாவுமாறு உருளையைக் கொண்டு தேய்க்க வேண்டும். தகட்டில் வர்ணம் தோன்றுமாறு மையை அவ்வளவு மெல்லியதாகத் தடவ வேண்டும்.

(ii) பிறகு இடக் கைச் சுண்டு விரலை எடுத்து அதன் உட்புற நுனியை மை தடவிய தகட்டில் மெதுவாகப் புரட்டி எடுத்து, அந்த விரலுக்காகக் குறிப்பிட்ட கடிதத்தின் பாகத்தில் விரலை மறுமுறையும் புரட்டுக. அதே போல் மற்ற விரல்கள் ஒவ்வொன்றையும் கட்டை விரலையும் புரட்டிக் குறிப்பிட்ட இடத்தில் விரல் பதிவுகளை எடுக்க வேண்டும்.

குறிப்பு.—ஒன்று அல்லது இரண்டு சொட்டு மண்ணெண்ணெய்யை மையுடன் சேர்த்தால் அது தளர்ந்துவிடும், மை தொடப்பட்ட விரலை மாத்திரம் ஒரே தடவை ஒரு புறத்திலிருந்து மற்றொரு புறமாகப் புரட்ட வேண்டும். பின்னர்க் கடிதத்தில் பதிவு செய்யப்பட்ட பதிவு மாதிரியைக் களங்கப்படுத்தாமல் விரலைச் சுத்தமாய் எடுக்க வேண்டும். அடையாளம் கண்டு பிடிப்பதற்கு வேண்டிய வாய்ப்பு அளிப்பதற்கு, விரல், [அல்லது கட்டை விரல்] நுனி முழுவதும் நுனியிலிருந்து முதல் ரேகைக் கோடு வரையில் உள்ள பாகத்தின் பதிவை எடுக்க வேண்டும்.

6. இவ்வாறு எடுக்கப்பட்ட விரல் பதிவுகளுக்குக் கீவ்க்கண்ட வகையில் சான்று ஒன்று இணைக்க வேண்டும்:—

"எவருடைய பணிகள் இப்பதிவேட்டில் எழுதப்பட்டிருக்கின்றனவோ", அல்லது "விண்ணப்பத்தில் எவருடைய ஒப்பு சம்பந்தப்பட்டதோ" அல்லது "எவருடைய ஒப்புப் பெயர் நிலையான பணம் கொடுப்பதற்கான ஆணையில் எழுதப்பட்டிருக்கின்றதோ அவர் இடக்கையிலிருந்து மேலே கண்ட விரல் பதிவுகள் என் முன்னிலையிலும் என்னுடைய நேர்பார்வையிலும் எடுக்கப்பட்டன".

II-ஆவது பாகம் விரல் பதிவுகளை உபயோகித்தல்

7. முன்னர் 1 ஆவது விதியில் கண்டுள்ளவாறு எடுக்கப்பட்ட விரல் பதிவுகளின் முக்கிய உபயோகங்கள் கீழ்க்கண்டுள்ளவை:—

(i) எவருக்கும் முன் பின் தெரியாத தாமான இடத்திற்கு அரசாங்க அலுவலர் மாற்றப்பட்டால் அல்லது அவர் முன் பின் பார்த்திராத ஒரு அலுவலர் முன்பாக மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பப் பட்டால் அந்த அரசாங்க அலுவலரின் அடையாளத்தை யாதொரு சந்தேகத்திற்கும் இடமில்லாமல் மெய்ப்பிப்பதற்கு விரல் பதிவுகள் ஒரு நம்பத்தக்க வழி அமைத்துத் தருகின்றன.

(ii) ஓய்வூதியம் கொடுக்கும் பொறுப்பேற்ற அலுவலர் களுக்கும் ஓய்வூதியம் பெறுவோர்களைச் சோதிக்கும் அலுவலர் களுக்கும், பொய்யான ஆள் மாறுட்டம் செய்வோர்களைக் கண்டு பிடிக்கத் தவறு ஏற்படாத ஆதாரமாக இது விளங்குகிறது. ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமை கோருபவரின் அடையாளத்தில் சந்தேகம் ஏற்பட்டபொழுதெல்லாம் இம்முறையை மேற்கொள்ள வேண்டும்.

(iii) ஓய்வூதியம் பெறும் கோஷா மாதர்களைச் சோதிப்பதில் இப்போது எடுக்கும் பிரத்தியேக நடவடிக்கைகள் அவசியமில்லை யென்ற நிலை ஏற்படக்கூடும். அத்தகைய நிலைகளில், புதிதாய் எடுக்கப்பட்டவிரல் பதிவுகளும் உயிருடன் இருப்பதாகக் கூறும் சான்றும், ஓய்வூதியம் பெறுபவரை அடையாளம் கண்டுகொள்ளப் போதுமான சாட்சியாகும்.

8. விரல் பதிவுகள் தெளிவான, தனித்தனி வகைப்பட்டவை என்பதும் அவை ஒரு பொழுதும் மாறு என்பதும் அவற்றை அழிக்க முடியாதென்பதும் எடுக்கப்பட்ட விரல் பதிவுகளைச் சோதித்து அடையாளம் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டிருக்கும் அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு வருதல் அவசியமாகிறது. ஒவ்வொருவரது விரல்கள் பதிவும் தனிப்பட்ட அடையாளங்களைக் கொடுக்கிறது. மற்றொரு கையிலிருந்து எடுக்கப்பட்ட விரல் பதிவுகளின் வித்தியாசத்தைக் காணச் சற்று உற்று நோக்கினால் போதும். "பின்னல் வேலையில் காணப்படும் வளைக் கண்கள் வெளுக்கப்பட்டு அகலமாக்கப்பட்ட பின்னரும் வடிவத்தில் சிறிது மாறுபட்டிருந்தாலும் வளைக் கண்கள் மாறினியே இருப்பதுபோல ஒரே கையிலிருந்து வாழ்நாளில் வெவ்வேறு காலங்களில் எடுக்கப் பட்ட பதிவுகள் காலம் கடந்து செல்வதாலும் சூழியில் மாறுபடு வதில்லை." விரல் பதிவுகள், வளைவுகள், வளையங்கள், வட்டங்கள் என மூன்று முக்கிய வகையின. 1-ஆவது தட்டில் மாதிரிகளைக் காணலாம்.

பின்புறம் திருகாமலும், பின்வளைவு கொடுக்காமலும் மத்தியில் உயர்வுள்ள வரிகள் உருண்டையின் இருபுறமிருந்து மற்றொருபுறம் ஓடும்போது அது வளைவு எனப்படும். திருகல் இல்லாமல் ஒரு பின் வளைவு மட்டும் உள்ளது 'வளையம்' எனப்படும். ஒரு வட்டமாவது கூடின பிறகு திருகல் இருந்தால் அது 'வட்டம்' எனப்படும். மற்றும் விரலின் நுனியில் உள்ள வளையங்கள் கட்டைவிரல் பக்கம் விரியும்போது 'உள் வளையங்கள்' என்றும், சுண்டுவிரல் பக்கம் விரியும்போது 'வெளிவளையங்கள்' என்றும் ஆள்காட்டி விரலில் உள்ள வளையங்களை வேறுபடுத்தலாம் (தட்டுகள் I, II).

பலவற்றில் எடுக்கப்பட்ட விரல் பதிவுகளை இனவாரியாகத் தொகுப்பதற்காக ஒரு விவரமான தனி முறையை காவல் துறையில் ஏற்படுத்துவது வழக்கம். "குற்றவாளிகளின் அடையாளத்தைக் கண்டு பிடிக்க மனித வர்க்க சாஸ்திரம்" என்னும் தலைப்புள்ள திருத்தி அமைக்கப்பட்ட காவல் துறை நடைமுறை நூலின் 11 முதல் 13 வரையில் உள்ள விதிகளில் இதன் முறை விரிவாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றிலும் முன்னமே எடுக்கப்பட்ட விரல் பதிவுகளில் பதித்துக் காட்டப் படுகிற வகைக்கு ஒத்திருக்கிறதா எனத் தெரிந்துகொள்ளச் சாதாரணமாகக் கண்களினாலோ அல்லது மிகைப்படுத்திக் காட்டக் கூடிய பூதக் கண்ணாடியாலோ ஒவ்வொரு விரல் பதிவுகளையும் சோதித்தல் இவ்விதிகளுக்குச் சம்பந்தப்பட்ட வரையிலும் போதுமானது. இரண்டாவது தட்டில் காணப்படுவன இடக் கையின் நீலயான பதிவுகளென வைத்துக்கொண்டால், நான் காவது அல்லது சுண்டுவிரலின் வகை 'வளையங்கள்' எனவும், மூன்றாவது விரலின் வகை 'வட்டம்' எனவும், இவ்விதமாகவே நிர்மானிக்கப் புதிதாய் எடுக்கப்பட்ட விரல் பதிவுகளோடு ஒத்திட்டுப் பார்க்கவேண்டியது அவசியம். ஏதாவது ஒன்றில் வித்தியாசம் காணப்பட்டால் பொய்யான ஆள் மாறாட்டம் செய்ய முயன்றதாக்க கருதுவதற்குச் சந்தேகமே இல்லை. பொது வகைகள் ஒத்திருந்தால் குறிப்பிட்ட விரல் பதிவுகளில் காணப் படும் ஒவ்வொரு கோடும் நீலயான பதிவுக் கட்டில் உள்ள அந்த அந்த கோடுகளுடன் தோற்றத்தில் ஒத்திருக்கிறதா என்று அவசியமானால் (பூதக் கண்ணாடியைக் கொண்டோ அல்லது சாதாரணமாகவோ) பார்வையிடலாம்.

9. இவ்விதிகளை இன்னும் விளக்குவதற்காக காவல் துறை தலைவர் அலுவலகத்தில் III முதல் V வரை விரல் பதிவுத் தட்டுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. 5½ ஆண்டுகள் இடை வெளியில் எடுக்கப்பட்ட வலக் கையின் கட்டை விரல், மற்ற விரல் பதிவுகளை III ஆவது தட்டில் IV ஆவது தட்டில் காணலாம். முதலாவது, இரண்டாவது விரல்களில் ஒத்திருக்கிற மிகைப் படுத்தப்பட்ட தோற்றம் காட்டப்பட்டிருக்கிறது. V ஆவது தட்டில் உள்ள பதிவுகள் IV ஆவது தட்டில் உள்ள பதிவுகளின் வரி வடிவம், அது கோடுகளின் வரியை எண்ணிக்கையிடப்பட்ட குறிப்புகளுடன் காண்பிக்கின்றன

இணைப்பு II.

[71 ஆவது நிலை ஆணை (5) ஆவது பத்தி.]

விண்ணப்பத்தின் படிவம்

என்னும் நான், *மாதம் ஒன்றுக்கு ரூ. காசு. ஆகிய என் *மாத ஓய்வூதியத்தில் ரூ. காசை மாற்றித் தொகுத்துப் பெற விரும்புகிறேன். கீழ்க்கண்ட எல்லாக் கேள்விகளுக்கும் தனித்தனியே சரியான பதிலளித்திருக்கிறேன் எனச் சான்று பகர்கிறேன்.

கையொப்பம்.

இடம் :

வேலையின் பெயர்.

தேதி :

கேள்விகள்.	பதில்கள்.
1. பிறந்த தேதி	
2. உங்கள் ஓய்வூதியத்தில் எவ்வளவு தொகையை நீங்கள் மாற்றித் தொகுத்துப் பெற விரும்புகிறீர்கள்?	
3. (அ) இதற்கு முன் உங்கள் ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மாற்றித் தொகுத்துப் பெற்றிருக்கிறீர்களா? அவ்வாறுஎனில் அதன் விவரங்களைக் குறிப்பிடுக.	
(ஆ) ஓய்வூதியத்தை மாற்றித் தொகுத்துப் பெறுவதற்கு உங்கள் விண்ணப்பம் எப்போதாவது நிராகரிக்கப்பட்டிருக்கிறதா? அல்லது உங்கள் சரியான வயதுடன் கூடுதல் ஆண்டுகளைச் சேர்த்துக் கொள்ளுமாறு மருத்துவ அதிகாரி பரிந்துரை பகர்ந்ததை ஒப்புக்கொண்டு ஓய்வூதியத்தை மாற்றித் தொகுத்துப் பெற்றிருக்கிறீர்	

கேள்விகள். பதில்கள்.

களா? அல்லது அவ்வாறு ஓய்வூதியம் மாற்றித் தொகுத்துப் பெறுவதற்கு மறுத்திருக்கிறீர்களா? அவ்வாறானால் விவரங்களைக் கொடுக்க.

4. எந்தக் கருவூலத்தில் நீங்கள் உங்கள் ஓய்வூதியத்தைப் பெற்று வருகிறீர்கள்? அல்லது ஓய்வூதியத்தைப் பெற்று வரவும் மாற்றித் தொகுத்துப் பெறவும் உத்தேசித்திருக்கிறீர்கள்?

5. இந்திய நாட்டுக்கு வெளியே உள்ள வேறு இடத்தில் நீங்கள் ஓய்வூதியத்தை பெற்றுக் கொண்டிருந்தால் அவ்விடத்தில் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு எந்தக் கணக்குத் துறை அலுவலர் அதிகாரம் அளித்தார்?

6. முன்னமே நீங்கள் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொண்டிருந்தால் உங்கள் ஓய்வூதியக் கொடை ஆணையின் எண் குறிப்பிடுக.

6–8–1956 தேதி, 3077 அ.ஆ.வ.ரு.பல.

7. (i) அரசாங்கப் பணிக்கு உங்களை முதலில் அமர்த்தியபோது உங்கள் நிலையான இருப்பிடம் ஆசியா அல்லாத நாடு என்று நீங்கள் பாத்தியம் கொண்டாடியிருக்கிறீர்களா?

(ii) அக்காலத்தில் உங்கள் நிலையான இருப்பிடம் ஆசியா அல்லாத நாடு என்று நீங்கள் பாத்தியம் கொண்டாடியது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் எந்த ஆணையில் அது ஏற்றுக் கொள்ளப்பட்டது என்ற விவரத்தைக் குறிப்பிடுக.

(iii) அப்போது நீங்கள் ஆசியா அல்லாத நாட்டின் நிலையான குடியிருப்புள்ளவர் என்று பாத்தியம் கொண்டாடியிருந்

கேள்விகள். பதில்கள்.

தால் அப்பாத்தியம் நாளது வரையில் ஏற்கப்படாதிருந்தால் உங்கள் பாத்திபதைக்கு ஆதாரமான சான்றை இங்கே குறிப்பிடுக.

8. எந்த இடத்தில் நீங்கள் சாதாரணமாய்க் குடியிருக்கிறீர்களோ அந்த இடத்திற்கு அருகில் எவ்விடத்தில் நீங்கள் மருத்துவ சோதனை செய்யப்பட வேண்டுமென நீங்கள் விரும்புகிறீர்கள்?

தேதி:

கையொப்பம்

இடம்:

(கணக்குத் துறை அலுவலர் பெயரையும் முகவரியையும் இங்கே குறிப்பிடுக.)

.....க்கு அறிக்கை அனுப்பப்பட்டது.

கையொப்பம்

இடம்:

வேலையின் பெயர்.

தேதி:

---

*ஒய்வூதியம் பெறுபவரின் வகுப்பு (அரசியல் அல்லது வருவாய்) என்பதைக் கண்டெழுத வேண்டும். தொகை தெரியாவிட்டால் படிவத்தில் தகுந்தவாறு மாறுதல் செய்து கொள்ளவும்.

விண்ணப்பம் செய்பவர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய படிவம்.

கேள்விகள்.	பதில்கள்.
1. முழுப் பெயர் (தலைப்பு எழுத்தில்)	
2. பிறந்த தேதி	
3. மருத்துவச் சான்றில் உங்களுக்கு எப்போதாவது விடுப்புக் கொடுக்கப் பட்டிருக்கிறதா? அவ்வாறு இருப்பின் விடுப்பின் அளவையும் வியாதியின் தன்மையும் குறிக்க.	
4. உங்கள் ஆயுள் காப்புறுதி மனு எப்போதாவது நிராகரிக்கப்பட்டிருக்கிறதா? அல்லது அதிகப்படியான கட்டணத்துடன் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறதா?	
5. உங்கள் சிறுநீரில் சர்க்கரை அல்லது உப்பு இருந்ததென்று உங்களுக்கு எப்போதாவது சொல்லப்பட்டதா? இரவில் சிறுநீர் கழிக்க நீங்கள் எழுந்திருக்கிறீர்களா? உங்கள் உடல்நலத்தை உத்தேசித்துப் பிரத்தியேக உணவுண்டு நீங்கள் இருந்ததுண்டா? அல்லது இப்போது இருக்கிறீர்களா? சென்ற மூன்று ஆண்டுகளில் உங்கள் எடை கவனிக்கத்தக்க அளவுக்கு அதிகமாக இருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா? அவ்வாறுஎல் எவ்வளவு?	
6. சென்ற மூன்று மாதங்களுக்குள் எந்த மருத்துவரிடமாயினும் சிகிச்சையில் நீங்கள் இருந்தீர்களா? அவ்வாறுஎல் எந்த வியாதிக்காக?	

விண்ணப்பம் செய்பவரின் உறுதிமொழி

(மருத்துவ அதிகாரியின் முன்பாக கையொப்பமிடப்பட வேண்டும்.)

மேலே அளிக்கப்பட்ட பதில்களெல்லாம் எனக்குத் தெரிந்த வரையில் உண்மையென்றும் சரியென்றும் நான் உறுதி கூறுகிறேன்.

எனது உடல் நலத்தைப் பற்றியும், தகுதியைப் பற்றியும் எனக்குத் தெரிந்தவரை எல்லாச் சந்தர்ப்பங்களையும் மருத்துவ அதிகாரியிடம் தெரிவித்தேன்.

வேண்டுமென்றே பொய்யான வாக்குமூலத்தை அளித்தாலும் அல்லது உரியதை மறைத்தாலும், விண்ணப்பத்தில் நான் கேட்டுக் கொண்டிருக்கிற ஓய்வூதியத்தை மாற்றித் தொகுத்துப் பெறும் தொகையை நான் இழப்பதையும் தவிரச் சிவில் அலுவலர் விதிகளின் 351 ஆவது விதியின் கீழ் என் ஓய்வூதியம் நிறுத்தப்படுவதற்கும் அல்லது ஓய்வூதியத்தை முற்றிலும் இழப்பதற்கான இடருக்கும் நான் உள்ளாவேன் என்று நான் நன்கு உணர்வேன்.

முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

விண்ணப்பம் செய்பவரின் கையொப்பம்.

மருத்துவ அதிகாரியின் கையொப்பமும், வேலையின் பெயரும்.

பரிசோதிக்கும் மருத்துவ அதிகாரி பூர்த்தி செய்ய வேண்டிய படிவம்.

1. வெளிப்படை வயது .. ..

2. உயரம் .. ..

3. எடை .. ..

4. நாபியிருக்குமிடத்தில் வயிற்றின் சுற்றளவு .. .. ..

5. நாடியின் வேகம் .. .. ..

உட்கார்த்திருக்கும்போது ..

நின்றுகொண்டிருக்கும்போது ..

நாடியின் தன்மை என்ன?

6. இரத்தக் குழாயின் நிலை என்ன? ..

7. இரத்த அழுத்தம்—

(அ) இருதயச் சுருக்கம் ..

(ஆ) இரத்த வேகம் .. ..

8. முக்கியமான உறுப்புகளின் வியாதியின் குறி இருக்கிறதா? .. ..

(அ) இருதயம் .. .. ..

(ஆ) சுவாசாசயம் .. ..

(இ) கல்லீரல் .. .. ..

(ஈ) மண்ணீரல் .. ..

(உ) .....

9. சிறு நீரின் இரசாயன சோதனை, கீழ்க் கண்டவற்றைக் காட்டுகிறதா? ..

(i) உப்பு .. .. ..

(ii) சர்க்கரை .. ...

அடர்த்தி என் குறிப்பிடுக.

10. விண்ணப்பம் செய்திருப்பவருக்கு ஏதாவது பிளவு இருக்கிறதா? இருந்தால் அதன் வகையையும் அது குறையக் கூடியதா என்பதையும் குறிப்பிடுக .. .. ..

11. காயத் தழும்புகளிருந்தால் அவற்றையும் அடையாளக் குறிகளையும் விவரிக்க .. ..

12. தெரிவிக்கக்கூடிய கூடுதல் தகவல் ..

..... என்பவரை நான்/நாங்கள் கவனித்துப் பரிசோதித்துக் கீழ்க்கண்டவாறு அபிப்பிராயப்படுகிறேன்/அபிப்பிராயப்படுகிறோம் :—

அவர் நல்ல ஆரோக்கியமான நிலையில் இருக்கிறார்/இல்லை என்றும் அவருக்கு சராசரியான வாழ்நாள் நீடிக்கக்கூடிய காரணம் இருக்கிறது/மாற்றித் தொகுத்துப் பெறுவதற்குச் சரியானவரல்லர் என்றும் அல்லது (சீர்குலைந்த வாழ்க்கையினர் என்றுலும் அவர் பரிசோதனைக்குத் தக்கவர்) ..... என்பவர் ..... வியாதியால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும் ஓய்வூதியத்தை மாற்றித் தொகுத்துப் பெறுவதில் அவர் வயதை (அடுத்த பிறந்த நாளில்) அதாவது அவர் உண்மையான வயதைவிட ..... ஆண்டுகள் அதிகமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

சோதனை செய்யும் அதிகாரியின்
கையொப்பமும்
வேலையின் பெயரும்.

இடம் :
தேதி :

2—8—1935 தேதி 99, வ.து.க.செ.அச்ச. பல.

இணைப்பு III.

[73 ஆவது நிலை ஆணை, 2 ஆவது பத்தி.]

மைசூர் குடும்ப ஓய்வூதிய விதிகள்

திப்பு சுல்தான் குடும்பத்தின் உறுப்பினர்களுக்கு உதவித் தொகை அறிவிப்பதற்காக விதிகளை நிர்ணயிக்கும் 1857 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் தேதி இந்திய அரசாங்க வெளிநாட்டுத் துறைத் தீர்மானம்.

1 ஆவது, 1855 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4 ஆம் தேதி 16 எண் கடிதத்தில் கண்ட குறிப்புகளை அனுசரித்துத் திப்பு சுல்தானின் ஜீவித்திருக்கும் ஒரே புதல்வனை குலாம் முகமது இளவரசருக்கு அவர் தற்சமயம் பெறும் உதவித் தொகை (ரூபாய் 2,096) உடன் மாதம் ஒன்றுக்கு ரூ. 1,000 சேர்த்துக் கொடுக்கப்படும். 2 ஆவது, 1855 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26 ஆம் தேதிக்கு முன்னதாகத் திப்பு சுல்தானுடைய பேரன்மார்கள் வாங்கி வந்த ரூ. 543.50 காசு முதல் 132 ரூபாய் வரை வேறுபட்டிருந்த உதவித் தொகைகளைச் சமமாக்கினால், ஒவ்வொரு பேரனுக்கும் மாதத்திற்கு 600 ரூபாய் வீதம் அவர் வாழ்நாள் முடியக் கொடுக்கப்படும். அவருக்குப் பின்னர், அத்தொகை இறுதியாய் அரசினரைச் சேரும். 3 ஆவது, திப்பு சுல்தானுடைய பேத்திகள் இப்போது வாங்கிக் கொண்டிருக்கும் மாதம் ஒன்றுக்கு 261 ரூபாயிலிருந்து 66 ரூபாய் வரை வேறுபட்டுள்ள உதவித் தொகைகளைச் சமமாக்கி, அவர்களுடைய ஆயுட்காலம் வரை ஒவ்வொரு பேத்திக்கும் ஒரே விதத்தில் 261 ரூபாய் கொடுக்கப்படும். அவர்களுக்குப் பின் அத்தொகை இறுதியாய் அரசினரைச் சேரும்.

4 ஆவது, திப்பு சுல்தானுடைய மகன் வழித் தோன்றிய இப்போரன் பேத்திகளுடைய ஜீவதிசைக்குப் பின்னர் அவர்கள் இறக்கும் வரையில் பெற்று வந்த உதவித் தொகையைக் கொண்டு ஆதரிக்கப்பட்டு வந்தவர்களின் எண்ணிக்கை, பெயர், அவர்களுக்கும் இறந்தவர்களுக்கும் உள்ள உறவு இவற்றைப் பற்றி மைசூர் இளவரசர்களின் கண்காணிப்பாளர் இந்திய அரசாங்கத்திற்கு அறிக்கையினால் தெரிவிக்க வேண்டும். அதன் பின்னர், அப்போதுள்ள எல்லாச் சந்தர்ப்பங்களையும் கவனித்து

ஒவ்வொருவருக்கும் அல்லது அவர்களில் சிலருக்கு மட்டும் அவரவர்களுக்குக் கொடுக்கத்தக்கதெனக் கருதப்படும் ஓய்வூதியம் அல்லது ஓய்வூதியங்களைக் கொடுப்பதற்கு இந்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு. திப்பு சுல்தானுடைய புதல்வர்கள் வழித் தோன்றிய (இப்பால் அவர்கள் தந்தைகள் இறந்துவிட்டால்) கொள்ளுப் பேரர்களுக்கும், கொள்ளுப் பேத்திகளுக்கும் இப்போது கொடுத்து வரும் உதவித் தொகையைக் கீழே காணப்படும் 7, 8 துணை விதிகளின் கீழ்க் கொள்ளுப் போப் பிள்ளைகளுக்கு 200 ரூபாய் ஆகவும், கொள்ளுப் பேத்திகளுக்கு 100 ரூபாயாகவும் உயர்த்தப்படும் என்பதனால் திப்பு சுல்தானின் மகனின் மகனாகிய பேரன் எவராயினும் இறந்ததும் காவாசிகளுக்கல்லாமல் உயிருடனிருக்கும் மற்றவர் களுக்குப் பிறந்து இப்போது அவருடைய புதல்வர்களுக்கும், புதல்விகளுக்கும் முறையே மாதம் ஒன்றுக்கு 200 ரூபாயும், 100 ரூபாயும் கொடுக்குமாறும் தனிர இறந்தவரின் ஓய்வூதியத் தொகையைக் கொண்டு ஆதரிக்கப்பட்ட மற்ற உறவினர்களுக்கும் தக்கவாறு உதவித் தொகையைக் கொடுப்பதற்கு இந்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு என்றும் தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது. மற்றும் மேலே கண்டுள்ளவாறு திப்பு சுல்தானின் கொள்ளுப்பேத்தி தன் தகப்பன் ஜீவதிசையில், அக் கொள்ளுப் பேத்தி பெறக்கூடிய ஓய்வூதியம் முழுவதையும் தொகுத்து அவள் பெறுவதற்கும், தன் திருமணத்திற்காகவும், சீதனத்திற்காகவும், ஒரே தடவையில் முன் பணமாகக் கொடுக்குமாறும், இதற்காக மனு செய்து கொண்டால் அரசாங்கம் அவ்வாறு ஆணை பிறப்பிக்கலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

5 ஆவது, 1955 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26 ஆம் தேதிக்குப் பின்னர் காவாசிகளுக்குப் பிறந்த குழந்தைகள் எவ்விதமான உதவித் தொகையோ அல்லது வேறு சலுகைகளோ பெறப் பாத்தியமில்லையென்று தீர்மானித்திருப்பதை மைசூர் குடும்பத்தினர்களுக்குத் தெளிவாக விளக்க வேண்டும்.

6 ஆவது, உதவித் தொகை பெற்று வரும் பீகம்களும், காவாசிகளும் இறந்ததும் அவரவர்களுக்குக் கொடுக்கப்படும் உதவித் தொகை இறுதியாய் யாதொரு சந்தேகத்திற்கு இடமில்லாமலும் அரசினரைச் சேரும்.

7 ஆவது, தகப்பனுர்களான இழந்தவர்களான திப்பு சுல்தானுடைய புதல்வனின் புதல்வர்களான கொள்ளுப் பேரன்களுக்கு அளிக்கப்பட்டு வரும் உதவித்தொகைகளைச் சமமாக்கி ஒரே விதத்தில் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு 200 ரூபாயாக அவருடைய ஜீவிய காலம் வரையிலும் கொடுக்கப்படும்.

8-ஆவது, தகப்பனுர்களான இழந்தவர்களான திப்பு சுல்தானுடைய மகன் வழித் தோன்றிய கொள்ளுப் பேத்திகளுக்கு அளிக்கப்பட்டு வரும் உதவித் தொகையைச் சமப்படுத்தி 100 ரூபாய் வீதம் அவரவர்களே ஜீவிய காலம் வரையிலும் கொடுக்கப்படும்.

9-ஆவது, 1840-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5-ஆம் தேதி அரசாங்க ஆணையை அனுசரித்து வழங்கும் உதவித் தொகையைப் பெறும் தந்தை ஜீவித்திருக்கும் திப்பு சுல்தானின் புதல்வர்கள் வழித் தோன்றிய கொள்ளுப் பேரர்களும், கொள்ளுப் பேத்திகளும், தங்கள் தகப்பனுர்களின் ஜீவிய கால முழுவதும், அந்த ஆணைகளின் உட்கருத்தை அனுசரித்து 2-ஆவது நிர்மானத்தின் கீழ் அவர்களின் தகப்பனுருக்குக் கிடைக்கக் கூடிய இப்பொழுது உயர்த்தப்பட்ட உதவித் தொகையின் மூன்றில் ஒரு பங்கு மொத்தத்தில் ஜீவனும்சமாகப் பெறுவார்கள். அதற்கு மேலில்லை. ஆனல் அவர்கள் தகப்பன் இறந்த பின்னரும் இவ்விதியின் 4-ஆவது பிரிவின் கீழ் தொகுக்கப்பட்ட விதி, அத்தகைய கொள்ளுப் பேரர்களுக்கும், கொள்ளுப் பேத்திகளுக்கும் பொருந்தும்.

10-ஆவது, தனிச் சலுகைகளினுல் திப்பு சுல்தானுடைய மருமகனை நவாப் குலாம் அலியும், அவருடைய சகோதரியும், இறந்த நவாப் கரீம் ஷாவின் விதவையான அவர்களுடைய தாயாரும் வாங்கி வந்த உதவித் தொகைகள் கீழ் வருமாறு மாற்றி அமைக்கப்படும் :—

நவாப் குலாம் அலிக்கு மாதம் ஒன்றுக்கு	1,000 ரூபாய்.
அவருடைய சகோதரிக்கு மாதம் ஒன்றுக்கு	200 ரூபாய்.
அவர்களுடைய தாயாருக்கு மாதம் ஒன்றுக்கு	200 ரூபாய்.

குறிப்பு.—இவ்விதிகளின் 2 ஆவது இனத்தில் குறிப்பிட்ட 543 ரூபாய் 8 அணு என்னும் தொகை 1957ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதியிலிருந்து 543·50 ரூபாய் என்று கொள்ளப்பட வேண்டும்.

8—1—1957 தேதி, 112, அ.ஆ.வரு.பல.
13—6—1857 தேதி, வ.து.க.செ. (மா. தொகுதி 111 பக். 46–19).
6—8—1956 தேதி, 3077, அ.ஆ.வரு.பல.

அத்தியாயம் V .

பொது நலக் கட்டளைகள்.

74. பயணம் செய்யும் இந்தியர்களுக்குரிய சத்திரங்கள்.

1. கலெக்டர்களின் கடமை.—நிலக்கொடை அளிக்கப்பட்ட சத்திரங்கள் சரியான நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதிலும் பயணம் செய்பவர்களின் வசதிக்காக வேண்டிய பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா என்பதிலும் அவ்வப் போது கேட்டறிந்து கொள்வது கலெக்டர்களுடைய கடமை யாகும். சத்திரம் கட்டப்பட்டதின் நோக்கம் கைவிடப் பட்டால், அதற்காகக் கொடுக்கப்பட்ட நிலக்கொடையைத் திரும்ப எடுத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

20—8—1829 தேதி, வ.து.க.செ.மா. தொ. I பக். 99–100.

2. சத்திரங்களை அனுபவித்தல்.—சத்திரங்கள் ஆரம்பத்தில் எவர்களுக்காக ஏற்பட்டனவோ அவர்களால் அல்லாமல் அவை முழுமையுமோ அல்லது அவற்றின் ஒரு பகுதியோ அனுபவிக்கப் படக் கலெக்டர்கள் அனுமதிக்கலாகாது. சாதாரணமாகச் சத்திரங்களை அரசாங்க அலுவல் சம்பந்தமாய் உபயோகிக்க லாகாது.

6—3—1860 தேதி, 1150, வ. து. க. செ.

3. தனிப்பட்டவர்கள் நடத்தும் சத்திரங்களுக்கு அறக்கட் டளையாகத் தரிசு நிலம் கொடுத்தல்.—சத்திரங்கள் கட்டத் தனிப்பட்டவர்களை ஊக்குவித்தல் அவசியமெனக் கருதப்பட்ட முற்காலங்களில், அச்சத்திரங்களுக்குச் சாதாரணமாகத் தரிசு நிலங்கள் கொடையாக அளிக்கப்பட்டிருந்தபோதிலும் தனிப் பட்டவர்கள் கட்டக்கூடிய சத்திரங்களின் உதவிக்கென்று தரிசு நிலத்தை இக்காலத்தில் நன்கொடை செய்வதை அரசினர் தடை செய்திருக்கிறார்கள். தனிப்பட்ட உதவி அளிக்க வேண்டிய பிரத்தியேகமான சூழ்நிலைகள் இருந்தாலன்றி, இக்காரியத் திற்காகச் செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களைக் கலெக்டர்கள் கவனிக்கக் கூடாது அத்தகைய சூழ்நிலைகள் இருக்குமானால் 24-ஆவது நிலை ஆணையின் கீழ் அவசியமான ஒப்பளிப்பைப் பெற வேண்டும்.

27—8—1893 தேதி, 496, வ.. க. செ.

75. சமயபோதனைப் பள்ளிகள்.—நன்கொடை அளித்தவர்களுடைய கருத்துக்கு மாறுக நன்கொடை வருமானத்தைத் தவறுக உபயோகிப்பதைத் தடுப்பது கலெக்டர்களின் கடமையாகும். ஆனால், முந்திய அரசாங்கங்கள் அளித்த உதவியைக் கொண்டு பாதுகாக்கப்படும் இந்து அல்லது முகமதிய சமய போதனைக்காக ஏற்பட்ட பள்ளிகளில் தலையிடுவதில், இத்தலையீடு இப்பயன் எய்துவதற்கு முற்றிலும் தேவையான அளவுக்கு மேற்படாமலிருக்குமாறு கலெக்டர்கள் கவனித்துக் கொள்ள வேண்டும்.

8—3—1841 தேதி, ல.து.க.செ. (மா. தொகுதி I பக். 298.)
76, 77, 77 அ நீக்கிவிடப்பட்டன.
9—5—1956 தேதி, 1819, அ.ஆ.வரு.பல.

78. கோவில் பணிப் படிகள் கொடுத்தல்—

1. எவருக்குக் கொடுத்தல் வேண்டும்.—வட்டாரக் குழுவின் நிர்வாக அதிகாரத்துக்குட்பட்ட நிலையங்களைப் பொறுத்தவரையில் வட்டாரக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அறப்பாதுகாப்பாளர்களிடமும், மற்ற நிலையங்கள் சம்பந்தப்பட்டவரையில் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட அறப்பாதுகாப்பாளர்களிடமும், கோவில் பணிகளுக்காகக் கொடுக்கப்படவேண்டிய பணிப்படிகளைக் கொடுக்க வேண்டும். இதன் பொருட்டு வட்டார குழுவினர்களும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளரும், துணை ஆணையாளரும் அக்கோவில்கள் உள்ள தாலுகாத் தாசில்தாருக்குத் தங்கள் அதிகாரத்துக்கு உட்பட்ட அறப் பாதுகாப்பாளர்களின் நியமனங்களையும், அவர்களைத் தற்காலிகமாகப் பதவியிலிருந்து விலக்கி வைத்தல், பதவியிலிருந்து விலக்கல், தள்ளல் இதைப் பற்றியும் அறிவிக்கை செய்ய வேண்டும். அதன் பின்னர் அதற்கேற்ற அறிவுரைகளைத் தாசில்தார் கிராம அலுவலர்களுக்கு அனுப்புவார்.

9—5—1956 தேதி, 1819, அ.ஆ. வரு. பல.

2. கிராம வசூல் கழிவுகளை மாற்றுதல்.—சமய நிலைய கழிவுத் தொகைகள் பெற்றுக் கொண்டிருக்கும் அறநிலையங்களின் பாதுகாப்பாளர்கள் விண்ணப்பம் செய்து கொண்டால் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குக் கிராம வசூல் கழிவைக் கோட்ட ஆட்சியாளர்கள் மாற்றலாம்.

14—4—1909 தேதி, 1031, அ.ஆ.

3. கொடுக்கப்பட வேண்டிய தொகை.—நிலங்கள் சில வற்றின் தீர்வை ஒப்படையாக மாற்றப்படாத கோவில் பணிப் படிகள். 54-11, 55-6, 73-4 (8) நிலை ஆணைகளில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு அரசாங்கம் அளிக்கக் கூடிய தீர்வைத் தள்ளு படிக்கும் நிறுத்திவைத்ததற்கும் உட்படாத அத்தகைய பணிப் படிகள் முழுமையும் அவற்றிற்கு ஏற்பட்ட காலங்களில் செலுத் தப்பட வேண்டும்.

15—7—1926 தேதி, 1160, அ.ஆ.வரு.
11—8—1926 தேதி, 1806, வ.து.க.செ.பலவ.

குறிப்பு

அ. ஆ.	— அரசினர் ஆணை (G.O.)
வரு.	— வருவாய்த் துறை (Rev.)
பல.	— பலவகை (Mis.)
வ. து. க.	— வருவாய்த் துறைக் கழகம்.
செ.	— செயல்முறை (Proceedings)
கு. நி. சு.	— கழக நிர்வாக சுற்றறிக்கை (E.M.C.)
	— பணி (Works)

அத்தியாயம்

நீர்ப்பாசனமும் மற்றப் பொறி இயல் பணிகளும்.

79. பொறி இயல் பணித் துறையுடன் தொடர்புகள் 1. பொது நடைமுறை.—சில்லி அலுவலர்களுடன் பொறி இயல் பணித் துறை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய தொடர்பைப் பற்றி அவர்களுக்கு வழிகாட்டியாக மாநில அரசினரால் ஏற்படுத்தப் பட்ட விதிகள் ஆவன :—

12—7—1956 தேதி. 2767, அ.ஆ.வரு.பல.

(i) நீர்ப் பாசன வேலைகளுக்கு வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படும்போது கலெக்டர்களுடன் கலந்து ஆலோசனை செய்ய வேண்டும்.—மாவட்ட நீர்ப்பாசன வேலைகளுக்குரிய வரவு செலவுத் திட்டங்களை வரைவதில் அவற்றில் அடங்கியுள்ள வேலைகளின் வாய்ப்பையும் குறிக்கோளையும் பற்றி முழு விளக்கத்துடன் உத்தேசிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி முறையைக் கலந்து பேசுவதற்குப் போதுமான காலம் இருக்கும்போதே மேற் பார்வைப் பொறியாளர்கள் கலெக்டர்களுடன் கலந்து ஆலோசனை செய்ய வேண்டும். ஏதாவது ஒன்றில் மேற்பார்வைப் பொறியாளர்கள் கலெக்டர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள இயலாதபோது கலெக்டர்களின் கருத்துக்களுக்கு மாறுபட்டதற்கான காரணங்களைப் பதிவு செய்து கொண்டு பதிவுக் கட்டை வரவு செலவுத் திட்டத்துடன் மேலனுப்ப வேண்டும். அதே சமயத்தில், மேற்பார்வைப் பொறியாளர் இக்காரணங்களின் நகலையும் இறுதியாகத் தாம் மேலனுப்பிய வரவு செலவுத் திட்டத்தின் நகலையும் கலெக்டருக்கும் அனுப்ப வேண்டும்.

12—7—1956 தேதி. 2767, அ.ஆ.வரு.பல.

(ii) பொறியியல் பணித்துறையின் தொழில் நுட்ப அறிவுரை.—கலெக்டர், மாவட்டத்தின் மேட்சித் தலைவராகையால் தேவையுள்ளபோது பொறி இயல் பணித் துறையின் உதவி தொழில் நுட்ப அறிவுரை முழுதும் அவர் ஆளுகையில் இருக்கிறது. அவர் கேட்கும் எந்தத் தகவலும் தாமதமில்லாமல் கொடுக்கப்பட வேண்டும். கலெக்டர் நிர்வாகப் பொறியாளருக்குப் பிரத்தியேகக் காரணத்திற்காக ஏதாவது குறிப்பான அறிவுரை அளிக்கலாம். அத்தகைய அறிவுரை பொது நன்மைக்கு

உகந்ததன்று என நிர்வாகப் பொறியாளர் கருதுவாரெனில், போதிய காலமிருந்தால், அவர் தமது கருத்தும் காரணங்களும் அடங்கிய அறிக்கை ஒன்றைக் கலெக்டருக்கு அனுப்பி, இதைப் பற்றி மேற்பார்வைப் பொறியாளருக்கு எழுதுமாறு கலெக்டரை கேட்டுக் கொள்ளலாம். கலெக்டர் அவ்வாறே உடனே நிர்வாகப் பொறியாளரின் கருத்தும் காரணங்களும் அடங்கிய அறிக்கையின் நகலை அனுப்பி, மேற்பார்வைப் பொறியாளரை எழுதிக் கேட்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் கலெக்டரின் கருத்திற்கு மாறுபடுவாரெனில் அவர் இந்த விஷயத்தை அரசினரின் ஆணையைப் பெறத் தலைமை பொறியாளர் வழியாக அனுப்பி கலெக்டருக்கும் இதைப் பற்றித் தெரிவிக்க வேண்டும். இவ்வாறில்லாவிட்டால் கலெக்டரின் அறிவுரைகளுக்கு இணங்க நடத்தல் வேண்டும்.

12—7—1956 தேதி. 2767, அ.ஆ. வரு.பல.

(iii) பிரிவு II திட்டங்கள்.—பொறி இயல் பணித் துறையின் கட்டிட, சாலைப் பகுதிகளுக்கான சிறு வேலைகளின் நிகழ்ச்சி முறையும் வருவாய்த் துறைக் கட்டட வேலைகள் சம்மந்தப்பட்ட வரையில் வருவாய்த்துறைக் கழகத்தால் வரையப்படும். இதற்காக, அடுத்த வரும் நிதி ஆண்டில் செயலாக்கப்பட வேண்டிய சிறு வேலைகளையும் பெரிய வேலைகளையும் (பிரிவு II திட்டங்கள்) பற்றிய பட்டியல்களை வருவாய்த் துறைக் கழகத்திற்குக் கலெக்டர்கள் மேலனுப்ப வேண்டும். இப் பட்டியல்களைத் தயார் செய்து மேல் அனுப்பவேண்டிய தேதிகளைப் பற்றிய அறிவுரைகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

12—7—1956 தேதி. 2767, அ.ஆ. வரு.பல.

(அ) சிறு வேலைகள்.—குடியிருப்பில்லாத புதிய கட்டட வேலைகளை அவற்றின் முக்கியத்தையும், அவசரத்தையும் அனுசரித்து முதன்மை கொடுத்து வரிசைப்படுத்தி, அம் முதன்மைக்கான காரணங்களுடன் பட்டியல்களைக் கலெக்டர்கள் வருவாய்த் துறைக் கழகத்திற்கு ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் 15-ம் தேதிக்குப் பிற்படாமல் குறிப்பிட்ட படிவத்தில் அனுப்ப வேண்டும். பின்னர் மாநிலம் முழுவதற்குரிய சிறு வேலைகளுக்கான தொகுப்பு நிகழ்ச்சி முறையை வேலைகளின் முக்கியத்தையும் அவசரத்தையும் அனுசரித்து, வருவாய்த் துறைக் கழகம் தயாரிக்கும். இப் பட்டியலின் நகல் எல்லாக் கலெக்டர்களுக்கும் கூற்றறிவிக்கப் படும். இதற்குப் பிறகு கழகத்தின் பட்டியலில் சேர்க்கப்பட்ட

வேலைகளில், பொறி இயல் பணித் துறை விதித் தொகுப்பு (1952-வது பதிப்பு) 438, 440 பத்திகளை அனுசரித்துக் கலெக்டர்கள் ஆட்சி ஏற்பு அளிக்கக் கூடியவற்றிற்கு அவர்கள் அவ்வாறு ஏற்பு அளிக்கலாம். இதர வேலைகளுக்கு அமைப்புப் படங்களும் மதிப்புப் பட்டிகளும் வருவாய்த் துறைக் கழகத்தின் ஏற்பிற்காக மேல் அனுப்பப்பட வேண்டும். மேற்கூறிய பட்டியலுடன் நடந்து கொண்டிருக்கும் சிறு வேலைகளைப் பற்றியும் அவற்றிற்கு அடுத்த ஆட்சியாண்டில் தேவையாகும் நிதியளவைப் பற்றியும் மற்றொரு பட்டியலைக் கலெக்டர்கள் அனுப்ப வேண்டும். ஒன்று சேர்க்கப்பட்ட பட்டியல்களை (கட்டடங்கள் சாலைகளின்) தலைமைப் பொறியாளருக்கு அக்டோபர் மாதம் 15-ம் தேதிக்குள் வருவாய்த் துறைக் கழகம் அனுப்பும். அந்த ஆண்டு நடப்பில் செய்யப்பட்ட மாறுதல்களையும் வருவாய்த் துறைக் கழகம் தெரிப் படுத்தும்.

12—7—1956 தேதி. 2767 அ.ஆ.வரு.பல.

(ஆ) பெரிய வேலைகள்.—அவசரத்தை அனுசரித்து வரிசைப்படுத்தப்பட்ட பெரிய வேலைகளின் பட்டியலைக் கலெக் டர்கள் குறிப்பிட்ட படிவத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதம் 15-ம் தேதிக்குள் வருவாய்த் துறைக் கழகத்திற்கு மேலனுப்ப வேண்டும். அப்படியலின் குறிப்புரைக் கட்டத்தில், அதில் சேர்க்கப்பட்டுள்ள வேலைகளின் மதிப்புப் பட்டியல்கள் எந்நிலைகளில் உள்ளன என்பதையும், அவற்றிற்குத் தேவை யான நிலம் பயன்படுத்தத் தயாராக இருக்கின்றனவா என்ப தையும் ஏனையவைகளையும் பற்றிக் குறிப்பிட வேண்டும். பின்னர் வருவாய்த் துறைக் கழகம் அப் பட்டியல்களை ஒன்று சேர்த்து ஒவ்வோராண்டும் அக்டோபர் மாதம் முதல் தேதிக்குள் அரசினருக்கு மேலனுப்புவதோடு அதன் நகலைக் கட்டடங்கள் சாலைகள் பிரிவின் தலைமைப் பொறியாளருக்கும் அனுப்ப வேண்டும்.

12—7—1956 தேதி. 2767 அ.ஆ.வரு.பல.

(iv) பொறி இயல் பணித் துறை அலுவலர்களும், வருவாய்த் துறை அலுவலர்களும் ஒத்துச் செயலாற்ற வேண்டும்.—கலெக்டர் தம் வட்டாரத்திலுள்ள பொறி இயல் பணித் துறை விஷயங்கள் சம்பந்தமானவற்றில் எதைப்பற்றியாவது சிபாரிசுகள் செய்யலாம். அவை உரிய முறையில் கவனிக்கப்பட்டுத்

தாமதமில்லாமல் பதில் கூறப்பட வேண்டும். பெரிய வேலை களின் காலாண்டு முன்னேற்ற அறிக்கையின் நகலையும், வருவாய்த் துறையின் எல்லாச் சிறிய வேலைகள் பெரிய வேலைகள் இவற்றின் மாதாந்தர X -வது படிவ முன்னேற்ற அறிக்கையின் பகுதி நகலையும், நிர்வாகப் பொறியாளர் கலெக்டருக்கு அனுப்ப வேண்டும். மேற்பார்வைப் பொறியாளருக்கும் நிர்வாகப் பொறியாளர்களும், பொறி இயல் பணிகளின் நன்மையைப் பற்றியும் மாவட்டத் தேவைகளைப் பற்றியும் இயன்ற அளவிற்கு கலெக்டர்களையும் கோட்ட ஆட்சியாளர்களையும் நேரில் கலந்தா லோசித்தல் விரும்பத்தக்கது. மேலும் பொறி இயல் பணித் துறை அலுவலர்களும் வருவாய்த் துறை அலுவலர்களும் மனப் பூர்வமாகவும் யாதொரு தயக்கமின்றியும் ஒத்துச் செயலாற்ற வேண்டும். தண்ணீர்ப் பங்கீடு பற்றியாவது அல்லது பொறி இயல் பணித் துறை ஆட்சிப் பகுதி யாதாவதொன்றில் முக்கிய மாறுதல்கள் பற்றிய தேவைக் கோரிக்கைகள் மேற்பார்வைப் பொறியாளரின் ஒப்பளிப்பிற்கு அல்லது அரசாங்கத்தின் ஒப் பளிப்பிற்கு அனுப்புமுன், கலெக்டருக்குக் குறிப்புரைக்காக அனுப்பப்படவேண்டும். அது மட்டுமன்றி முடிவு செய்யப் பட்ட அம்மாறுதல்களை அமலுக்குக் கொண்டு வருவதற்கு முன்னர் கலெக்டருக்குத் தெரிவிக்க வெண்டும்.

12—7—1956 தேதி, 2767, அ..ஆ.வரு.பல.

(V)பொறி இயல் பணித் துறையினர் எல்லாத் துறைத் தலைமை அலுவலர்களுக்கும் உதவி செய்ய வேண்டும்.—பொறி இயல் பணித் துறை அலுவலர்கள் எல்லாத் துறைத் தலைமை அலுவலர்களுக்கும் ஆலோசனையையும் தகவல்களையும் அவர்கள் கேட்கும்போது தாமதமின்றிக் கொடுத்துதவுவதுடன், கருத்து வேறுபாடுகள் இருக்கும் விஷயங்களில் அவர்களுடன் முற்றிலும் கலந்து பேசவேண்டும்.

25—6—1925 தேதி, 870, அரசாங்க பணி ஆணையும்.
31—7—1925 தேதி, 3558, இ.25, வருவாய்த்துறை அரசாங்க மேல்குறிப்பும்.
25—8—1925 தேதி, 1883, வ.து.க.செ.பல.
3—8—1929 தேதி, 2179, அ.ஆ. பணி.
30—8—1929 தேதி, 2604, வ. து.க. செ. பல.
~~22—4—1931 தேதி, 277, பே.ஆ.நிதி.~~
16—9—1931 தேதி, 2360, அ ஆ. பணி.
25—9—1934 தேதி, 1914 அ.ஆ.வரு.பல.
13—12—1934 தேதி, 180 வ.து.க.செ.
12—7—1956 தேதி, 2767, அ.ஆ.வரு.பல.

2. நிர்வாகப் பொறியாளருடன் கலந்து ஆலோசனை செய்தல்.—புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கோ உள்ளவற்றிற்கு மேம்பாடுகள் செய்வதற்கோ வேண்டிய திட்டங்களை கலெக்டர்கள் மேலனுப்புமுன், அவ்வேலையின் அவசியம் முழுவதையும் விளக்கிச் சம்பந்தப்பட்ட நிர்வாகப் பொறியாளரைக் கலந்து ஆலோசனை செய்ய வேண்டும். தேவையான அமைப்புப் படங்களையும் மதிப்புப் பட்டியல்களையும் தயாரிக்க ஏற்பாடு செய்யுமாறு நிர்வாகப் பாறியாளரைப் பின்னர் கேட்டுக் கொள்ளலாம். ஒரு துறைத் தலைவருடன் முன்பே கலந்து ஆலோசனை செய்திருந்தாலன்றி, பொறி இயல் பணித் துறைக்குப் பிரதிகூலமான முறையீடுகளை ஒருபோதும் செய்யக் கூடாது.

3. உட்கோட்ட அலுவலருக்கு முகவரி செய்யத்தக்க கடிதங்கள்.—தாலூகா பார்வையாளரின் கண்காணிப்பிலுள்ள வேலைகள் நடந்துவருவதைப் பற்றிய வருவாய்த் துறையினரின் குறிப்புரைகளும், தகவல்கள் அல்லது அறிக்கைகள் வேண்டுமெனச் செய்து கொள்ளப்படும் கோரிக்கைகள் உட்கோட்ட அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

12—8—1921 தேதி, 1838, அ.ஆ. வரு.பல.
19—8—1921 தேதி, 52, வ.து.க.செ.

4. பொருள்கள் வழங்கப்படுதலும் தொழிலாளர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும்.—பொறி இயல் பணித்துறை வேண்டும் பொருள்கள் பெறுதலிலும் தொழிலாளர்களைச் சேர்ப்பதிலும் இவை போன்ற மற்றவற்றிலும் எல்லா நியாயமான உதவிகளை வருவாய்த் துறை அலுவலர்கள் அளிக்க வேண்டும். தாலூகா அலுவலர்கள் எவரேனும் நேராகவோ மறைமுகமாகவோ பொறி இயல் பணித் துறை வேலைக்கு இடைஞ்சல்கள் செய்வார்களெனில், அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்.

29—4—1857 தேதி, 817, பொ. ப.து.க.நி.சு.

5. பொறி இயல் பணப் பெட்டியின் பொறுப்பு.—பொறி இயல் பணித் துறை நிர்வாக அலுவலர்களின் பணப் பெட்டிகளைத் தாலூகாக் கருவூலத்தில் வைப்பதற்கு அனுமதி கேட்கப்பட்டால் கலெக்டர் அதற்கு அனுமதி கொடுக்க வேண்டும். தவிரவும் பொறி இயல் பணித் துறையினர் சார்நிலைப் பணியாளர்களுக்குப் பணம் அனுப்புவதில் கலெக்டர் தம் துறையினர் திறமைக்குப் பங்கம் விளையாதவாறு எத்தகைய அளவில் அளிக்கக்கூடுமோ அத்தகைய உதவியையும் அளிக்க வேண்டும்.

23—12—1958 தேதி, 2793, பொ.ப.து.க.நி.சு.
2—7—1956 தேதி, 2757, அ.ஆ.வரு.பல.

80. பொறி இயல். பணித் துறைக்குக் கொடுக்கப்பட்ட தொகையின் செலவில் செய்யப்படத்தக்க வேலைக்கும் பழுது பார்க்கப்படத்தக்க வேலைகளுக்குரிய ஒப்பளிப்பு அதிகாரங்கள்.—

1. பாசன வேலைகளின் பாதுகாப்பிற்கான மிக அவசர வேலைகள்.—மழைக் காலத்தில் அல்லது வெள்ளப் பெருக்கு ஏற்படும்போது நீர்ப் பாசன வேலைகள், சாலைகள், பாலங்கள், ஆற்றின் கரைகள் இவற்றின் பாதுகாப்பு அல்லது இவற்றைப் பழுது பார்க்கும் அவசர வேலையைப் பொறி இயல் பணித் துறைப் பிரிவு அலுவலரின் பதவிக்குச் சமநிலையில் அல்லது அவரது பதவிக்கு மேல் நிலையில் உள்ள அலுவலர் இல்லாத போது, கலெக்டரோ அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட தாசில் தார் பதவிக்கும் கீழ் நிலையில் இல்லாத பதவியில் உள்ள சார்நிலை அலுவலர்களோ, செலவு வரம்பைப் பற்றிக் கவனிக்காமல் வருவாய்த் துறையில் நிறைவேற்றப்பட ஒப்பளிக்கலாம். அவ் வாறு செய்யப்பட வருவாய்த்துறை அலுவலரால் ஆணையிடப் பட்ட வேலை, பொறி இயல் பணித் துறையினர் பேணுதற்குட் பட்டதாக இருக்குமெனில், அதற்குரிய நிதியை வழங்குவது நிர்வாகப் பொறியாளரின் கடமையாகும். இருப்பினும், பொறி இயல் பணித் துறையைச் சேர்ந்த எத்தரத்திலுள்ள அலுவலரா யினும் அவ்விடத்தில் இருப்பாரெனில், அவ்வேலைகள் நிறை வேற்றப்படுவதை அவரிடம் விட்டுவிடடு, வருவாய்த் துறை அலுவ லர்கள் தம்மால் இயன்ற வரையில் தொழிலாளர்களையும் வேலைக்கு வேண்டிய பொருள்களையும் சேகரித்துத் தருவதோடு நின்று கொள்ள வேண்டும். இத்தகையவற்றில், பொறி இயல் பணித் துறைக்குச் சேர்ந்த தகுதியான ஒருவர் அவ்விடத்தில் இல்லை என்றலன்றி, வருவாய்த்துறை அலுவலருக்கு மேற்கண்டவாறு செயலாற்ற அதிகாரமில்லை.

7—1—1870 தேதி, 6527 வ.து.க.செ.
12—7—1956 தேதி, 2767, அ.ஆ.வரு.பல.

2. நீர்ப்பாசன வேலைகளுக்கான சாதாரண மராமத்துக்கள்.—பொறி இயல் பணித் துறை வரவு செலவுத் திட்டத்தின் கீழ் வரும் நீர்ப்பாசன வேலைகள், வருவாய்த் துறைக் கூட்டங்கள் முதலியவற்றிற்குத் தேவையான சாதாரண மராமத்து வேலைகள் பற்றிக் கலெக்டர்களுக்குரிய ஒப்பளிப்பு அதிகாரங்கள் பொறி இயல் பணித் துறை விதித் தொகுப்பில் விவரிக்கப்பட்டுள்ளன.

12—7—1956 தேதி, 2767, அ.ஆ. வரு.பல.

81. பொறி இயல் பணித் துறைக்குக் கொடுக்கப்பட்ட தொகையின் செலவில் செய்யப்படத்தக்க வேலைகளைச் செயலாக்கல் —1. அவ் வேலைகளைப் பொறி இயல் பணித் துறையினாலோ இதர துறையினாலோ செயலாக்குவதற்கு முன்னர் செய்யப்பட வேண்டிய முன் ஏற்பாடுகள்.—இவ் வகுப்பு வேலைகளில் ஏதேனும் பொறி இயல் பணித் துறையினரால் தொடங்கப்படுவதற்கு முன், கீழ்க்காணும் முன்னேற்பாடுகளைச் செய்து முடித்தல் வேண்டும்.

(அ) வேலை செய்வதற்கான தேவைக் கோரிக்கை அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட துறையாலோ அல்லது ஒப்பளிக்க அதிகாரம் பெற்றுள்ள சிவில் அலுவலராலோ ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்க வேண்டும். ஏற்பு, அமைப்புப் படங்களிலும் மதிப்புப் பட்டிகளிலும் மேற் கையொப்பமிட்டுத் தெரிவிக்கப் பட்டிருக்க வேண்டும். அரசாங்க அலுவலகங்களில் சிறிய, புறக் கட்டடங்கள் அமைப்பதற்குத் தடையில்லை. ஆனால் அவை ஒவ்வொன்றிற்கும் அதிகாரம் பெற்ற அலுவலரின் ஆட்சி முறை ஏற்பு தேவையாகும். ஆட்சிமுறை ஏற்பு அளிக்கும் அதிகாரம், ஒவ்வொரு திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ஒன்றை மட்டும் பொறுத்ததேயன்றி, அத்திட்டம் புதிய கட்டடத்தைப் பற்றியதா, முன்னதாகவேயுள்ள அமைப்புக்குக் கூடுதலாகச் செய்யப்பட வேண்டியவையா அல்லது மேம்பாடுகள் செய்யப்பட வேண்டியாவையா என்பதில் வேறுபாடு காட்ட வேண்டியதில்லை. அரசினர் தங்களது ஒப்பளிப்பின்றி மேற்கு கரை மாவட்டங்களில் தவிர மற்ற இடங்களில் யாதொரு குடியானவர் கொட்டகையும் கட்டுவதை அனுமதிக்கத் தங்களுக்கு உத்தேசமில்லை என்று விதித்துள்ளார்கள். அத்தகைய கொட்டகைகள் அவ்வாறு கட்டப்படுவதற்காக அரசினரது ஒப்பளிப்பைப் பெற வேண்டும்.

பொறி இயல் பணித் துறையினரால் கட்டப்படும் வருவாய்த் துறைக்குச் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு வேலை சம்பந்தமாகவும் கலெக்டர்களுக்கு 5,000 ரூபாய் வரையிலும், வருவாய்த் துறைக் கழகத்திற்கு 10,000 ரூபாய் வரையிலும் ஆட்சி ஒப்பளிப்பு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விரு அதிகார ஒப்படைப்புகள் கீழ்க் கண்ட கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவையாகும்:—

(i) தமிழ்நாடு பொறி இயல் பணித் துறை விதித் தொகுப்பு (1952 பதிப்பு) 264, 439, 440 பத்திகளில் கீழ் வரும் மூலதனக் கணக்கிற்குச் செலவு எழுதத்தக்க அரசாங்க அலுவ

லர்கள் உறைவிடக் குடியிருப்புக் கட்டடங்களுக்குரிய செலவுத் தொகைக்கு அரசாங்கத்தின் ஒப்பளிப்பு பெற வேண்டும். ஆயினும் தற்போதுள்ள குடியிருப்புக் கட்டடங்களின் மேம்பாடு களுக்குரிய திட்டம் ஒவ்வொன்றிற்கும், அக்கட்டடங்களின் தரப்படுத்தப்பட்ட வாடகை எந்த வகுப்பாரின் குடியிருப்புக்குக் கட்டப்பட்டனவோ அவர்கள் சராசரி சம்பளத்திற்குப் பத்து சதவிகிதத்திற்கு அதிகமாகாத வரையில் கலெக்டர்களும் வருவாய்த் துறைக் கழகத்தாரும் 500 ரூபாய் வரை ஆட்சி முறை ஏற்பு அளிக்க அதிகாரம் பெற்றிருக்கிறார்கள்.

12—7—1956 தேதி, 2767, அ.ஆ.வரு.பல.

(2) குடியிருப்புக் கட்டடங்கலல்லாத மற்றவை ஒவ்வொன் றிற்கும் மின்சார வேலை நிமித்தம் ஆட்சி முறை ஒப்பளிக்க வருவாய்த் துறைக் கழகமும் கலெக்டர்களும் 1,000 ரூபாய் வரை ஏற்பு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் முதன் முதலாக எற்படுத்தப்படும் மின்சார அமைப்புகளுக்கு இவ் வதிகாரம் பொருந்தாது. குடியிருப்புக் கட்டடங்களின் மின்சார வேலை ஒவ்வொன்றிற்கும் அதற்குச் செலவாகும் மூலதனத் தொகையில் 10½ சதவீதம் மின்சாரத் தீர்வையாகவும் நடப்பு உபயோகிப்பு மின்சாரச் செலவும் குடியிருப்பவரிடமிருந்து வசூலிக்கப்படுமென்று நிபந்தனைக்குட்பட்டு 500 ரூபாய் வரை அவர்கள் ஆட்சி ஒப்பளிப்பு செய்யலாம். மேற்கூறப்பட்ட வேலைகளைத் தவிர மற்றவற்றிற்கு அரசாங்கத்தின் ஒப்பளிப்பு தேவை.

அரசாங்கத்தின் ஆட்சி முறை ஒப்பளிப்பு தேவையாக இருக்கும்போது கலெக்டர் வருவாய்த் துறைக் கழகத்திற்கு எழுத வேண்டும்.

(ஆ) ஏற்கப்பட்ட அமைப்புப் படங்களும் மதிப்புப் பட்டிகளும் அரசாங்கத்தின் பொறி இயல் பணித் துறையாலோ அல்லது மதிப்புப் பட்டியை ஒப்பளிக்கும் அதிகாரம் பெற்ற பொறி இயல் பணித் துறை அலுவலராலோ ஒப்பளிக்கப் பட்டிருக்க வேண்டும். ஆட்சி முறை ஒப்பளிப்பிற்கு முன்ன தாக அமைப்புப் படங்களும் மதிப்புப் பட்டிகளும் இறுதியாக ஆய்ந்து பார்க்கப்படுமாறும் பின்னர் ஆட்சிமுறை ஒப்பளிப்பு கிடைக்காவிடில் இவ்வேலை வீணாகுமாதலால் இறுதியாக ஆய்ந்து பார்த்து ஒப்பளிக்கும் வேலை ஆட்சி முறை ஒப்பளிப்பு கிடைக்கப் பெற்ற பின்னரே பொதுவாகச் செய்யப்படும்.

(இ) நிதி அளிக்கத்தக்க அதிகாரம் பெற்ற அதிகாரியால் ஆட்சி முறை ஏற்பு ஆகாதென்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

பொறி இயல் பணித் துறை அலுவலர்கள் செய்ய வேண்டிய வேலைகளை அவர்களின் அதிகாரம் பெறுமல் மற்றவர் கள் செய்வார்களானால் அவற்றிற்கு ஏக்காரணத்தை முன்னிட்டும் பொறி இயல் பணித் துறை அலுவலர் எத்தொகையும் செல வழிக்கக் கூடாது என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். இவ் வாணைகளை மீறி நடக்கும் சம்பந்தப்பட்ட அலுவலர் அரசாங்கத் தின் கடுமையான வெறுப்பு மதிப்பெண்ணுக்கு உட்படுவாரென் பதோடு அப்படிச் செய்யப்பட்ட அதிகாரமற்ற செலவுகளுக்கும் அவரே தனிப்பட்ட பொறுப்பாளராக்கப்படுவார்.

[1]14—3—1904 தேதி, 901, அ.ஆ.பொ.க.அ.பணி.
30—5—1865 தேதி, 2827, வ.து.க.செ.
17—6—1904 தேதி, 121, வ.து.க.செ.
13—3—1913 தேதி, 64, வ.து.க.செ.
16—10—1913 தேதி, 295, வ.து.க.செ.
[5]5—9—1913 தேதி, 245, வ.து.க.செ.
13—7—1921 தேதி, 194, வ.து.க.செ.
[7] 19—12—1913 தேதி, 374, வ.து.க.செ.
20—8—1913 தேதி, 232, வ.து.க.செ.
[14]15—7—1915 தேதி, 210, வ.து.க.செ.
[16]22—10—1920 தேதி, 1638, அ. ஆ. பணி.
[16]25—11—1920 தேதி, 93, வ.து.க.செ.
[19]5—10—1925 தேதி, 1574, அ.ஆ.பணி.
23—11—1925 தேதி, 2594, வ.து.க.செ.பலவ.

2. அரசாங்கப் பொதுக் கட்டடங்களுக்கு மனைகள் தெரிந் தெடுத்தல்.—மத்திய அரசாங்கத்திற்கு 5,000 ரூபாய்க்கு அதிக மாகவும், மாநில அரசாங்கத்திற்கு 10,000 ரூபாய்க்கு அதிக மாகும் செலவில் கட்டடம் கட்டப்பட வேண்டுமானால், அதற்குச் சம்பந்தப்பட்ட துறை அலுவலர் துவக்க நடவடிக்கைகளை ஆரம் பித்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களை முதலில் தெரிந்தெடுக்க வேண்டும். பின்னர் அதை அந்த இடம் அல்லது இடங்களின் வரைப்படத்துடன், நிர்வாகப் பொறியாளருக்குத் தெரிவிக்க வேண்டும். நிர்வாகப் பொறி யாளர் பின்னர் நில அளவைகளையும், மட்டத்தின் அளவுகளையும் எடுக்கவும் மாதிரிக் குழிகளை தோண்டிப் பார்க்கவும், தரை மட்டத்தின்கீழ் உள்ள மண்ணை ஆராய்ந்து பார்க்கவும், வேண்டிய

நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வார். பொறியியல் கொள்கையை அனுசரித்து அந்த இடம் அல்லது இடங்கள் தகுதி பற்றவை என நிர்வாகப் பொறியாளர் கருதுவார் எனில், அவர் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களையும் கலந்தாலோசித்து வேறு இடங்களைத் தெரிந்தெடுத்து அவற்றைப் பரிசீலனை செய்ய வேண்டும். இப்பூர்வாங்க பரிசீலனையின் விளைவு மனநிறைவு அளிக்குமெனில் நிர்வாகப் பொறியாளர் அந்த இடத்தின் அமைப்புப் படத்தை அறிக்கையுடன் கலெக்டருக்கு அனுப்பி, கீழ் வருமாறு அமைக்கப்படும் "இடம் தேர்ந்தெடுக்கும் குழுவின்" மற்ற உறுப்பினரின் ஏற்பைக் கலெக்டர் பெறுமாறும் அல்லது அவர் தேவையெனக் கருதினால் அதற்காக அக் குழுவைக் கூட்டுமாறும், கலெக்டரைக் கேட்டுக்கொள்ளுவார். குழுவில் கலெக்டரும், மாவட்டச் சுகாதார அலுவலரும் அலுவலர் இல்லையென்றால் மாவட்ட மருத்துவ அலுவலரும் அல்லது, சிவில் நிலையத்தின் தனி மருத்துவப் பொறுப்பிலிருக்கும் சிவில் மருத்துவ அலுவலரும் நிர்வாகப் பொறியாளரும், சம்பந்தப்பட்ட துறைக்குப் பிரதிநிதியாக ஒரு அலுவலரும் உறுப்பினராவார்கள். நகராட்சிக்குள்ளிருக்கும் இடங்களைப் பொறுத்தவரையில் அல்லது சிவில் மருத்துவ அலுவலர் இவர்களுக்குப் பதிலாக மாவட்ட சுகாதார அலுவலர், மாவட்ட மருத்துவ அலுவலர் நகராட்சி சுகாதார அலுவலர் ஒருவர் இருப்பாரெனில் அவர் குழுவின் உறுப்பினராக இருப்பார். வனத் துறைப் பொறியாளரால் கட்டப்படும் கட்டடங்களுக்கு அப்பொறியாளரே நிர்வாகப் பொறியாளருக்குப் பதிலாகக் குழுவின் உறுப்பினராக இருப்பார். நகராட்சிகளில் நகராட்சி மன்றத் தலைவரும் அக்குழுவின் உறுப்பினராக இருப்பார். தெரிந்தெடுத்த இடம், வெளிப்புற நிலையத்திலிருக்குமானால் மேலே குறிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் எவரும் தங்களுடைய சார்நிலை அலுவலர் ஒருவரை அந்த இடத்தைப் பார்வையிட்டு அதன் தகுதியைப் பற்றித் தங்களுக்கு அறிக்கை அனுப்புமாறு நியமிக்கலாம். இட அமைப்புப்படம், கைப்பற்றப்பட வேண்டிய நிலத்தின் எல்லைகள், வேலிக்கெனக் குறிப்பிட்ட இடம் எக்காரணத்தின் தேவைக்காக நிலம் கைப்பற்றப்படுகிறதோ அதற்கு அந்நிலம் தகுதியுடையது என்பதைக் காட்டுவதற்குரிய நிலமட்டங்களையும் மற்ற விவரங்களையும் தெளிவாகக்காட்ட வேண்டும். உத்தேசித்த இடத்தின் அடையாளம் தெரிந்துகொள்வதற்கு வேண்டிய நில அளவை எண்களையும் இதர விவரங்களையும் அவ்விட அமைப்புப் படம் காட்ட வேண்டும். முதன்மையான கட்டடம் மட்டுமின்றிப் புற

வீடுகள், கழிப்பிடங்கள், மற்ற அண்மைக் கட்டடங்கள் ஆகிய வற்றிற்காக உத்தேசித்துள்ள இடங்களையும் அது காட்ட வேண்டும். புற வீடுகளும் கழிப்பிடங்களும் அரசாங்கக் கட்டிடத் தின் கட்டடக் கலைத் தோற்றத்திற்கு இடையூறு செய்யாதவாறு திட்டமிடுவதற்குக் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும், அத் திட்டத்திற்கு ஆட்சிமுறை ஒப்பளிப்புப் பெறுவதற்கு விண் ணப்பம் அனுப்பும்போது இடம் தெரிந்தெடுக்கும் குழுவினரால் இறுதியாக ஏற்கப்பட்ட தரைப்படத்தின் நகலையும் பூர்வாங்க மாகத் தயாரித்த அமைப்புப்படம் மதிப்பீட்டுடன் சேர்த்து அனுப்பப்பட வேண்டும். இடம் இறுதியாகத் தெரிந்தெடுக்கப் பட்ட பின்னர் நிலத்தின் மதிப்பைக் கலெக்டரிடமிருந்தோ, கோட்ட ஆட்சியாளரிடமிருந்தோ கேட்டுத் தெரிந்து அதையும் அவ்வேலையின் பூர்வாங்க மதிப்புப் பட்டியில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

[3]14—6—1913 தேதி, 2443, அ.ஆ.வரு.
9—9—1913 தேதி, 251, வ.து.க.செ.
[4]13—10—1916 தேதி, 278, வ.து.க.செ.
[5]23—11—1925 தேதி, 1823, அ.ஆ.பணி.
[6]10—11—1972 தேதி, 2257, அ.ஆ.வரு.பலவ.
[6]27—4—1928 தேதி, 1148, அ.ஆ. பணி பலவ.
[1]19—8—1912 தேதி, 2492, அ.ஆ.வரு.
[3]12—6—1916 தேதி, 147, வ.து.க.செ.
[5]18—12—1925 தேதி, 2792, வ.து.க.செ.பலவ.
[3]9—12—1927 தேதி, 3744, வ.து.க.செ.பலவ.
[3]30—6—1928 தேதி, 2102, வ.து.க.செ. பலவ.
12—7—1956 தேதி, 2767, அ.ஆ.வரு.பல.

3. வேலைகளில் ஆட்சி முறை ஒப்பளிப்பு பெறுவதற்குரிய நடைமுறை.—புதிய கட்டடங்கள் தற்போதுள்ள கட்டடங் களுடன் சேர்த்துக் கட்டப்பட வேண்டியவைகள் கூடுதலான புற வீடுகள் இவைகளுக்கான தேவைக் கோரிக்கைகள் ஆட்சிமுறை ஏற்பு பெறுவதற்காக அரசாங்கத்திற்கோ அல்லது அதிகாரம் பெற்ற அலுவலருக்கோ அனுப்பும்போது இடத்தின் அமைப்புப் படம் மட்டுமின்றி (புதிய வேலைகளானால், அவசியப்படின் மேலே இரண்டாவது பத்தியில் கூறப்பட்டுள்ள இடம் தெரிந்தெடுக்கும் குழுவினரால் ஏற்கப்பட வேண்டும். போதுமான விவரங்களோடு அமைப்புப் படங்களையும் உடன் அனுப்ப வேண்டும். ஏனென்றால் ஆட்சி ஏற்பு அளிக்கும் அதிகாரி பொதுவான நிபந்தனைகளில்

சாதாரணமாக ஆட்சி ஏற்பு கொடுக்காமல் உத்தேசித்துள்ள இட வசதி ஏற்பாடுகள் இவைகளைப்பற்றி மதிப்பிட்டுத் தீர்மானிக்க இதனால் இயலும். கூடுதலாகக் கட்டப்படும் கட்டடங்கள், புற வீடுகள் கழிப்பிடங்கள் முதலியன முதன்மைக் கட்டடத்தின் கலைத்தோற்றத்தைக் கெடுக்காதிருக்கும் வகையில் அமைக்கப்பட வேண்டும்.

~~14—8—1913~~ தேதி, ~~2443~~, அ.ஆ.வரு.
9—9—1913 தேதி, 251, வ.து.க.செ.

4. ஆட்சி ஏற்பு பெற்றவுடன் உடனடியாக அதற்குத் தேவையான இடம் கைப்பற்றப்பட வேண்டும்.—ஒரு வேலை ஆட்சி முறை ஏற்பைப் பெற்றவுடன், அதற்கு விவரமான மதிப்புப் பட்டி ஒப்பளிக்கப்பட்டு முழுவேலைக்கும் நிதி ஒதுக்கப்படும் வரை ஏற்கப்பட்ட இடத்தைக் கைப்பற்றுவதற்கான தேவைக் கோரிக்கையைத் தாமதப்படுத்தாமல் ஏற்கப்பட்ட இடத்தின் உரிமை கைப்பற்றுவதற்கான வரைவு அறிக்கையும் கைப்பற்றுவதற்கான செலவின் மதிப்பையும் இடத்தைத் தெரிந்தெடுக்கும் குழுவினரால் இறுதியாக ஒப்புக்கொள்ளப்பட்ட இடத்தின் அமைப்புப் படத்தையும் உடனே மேலனுப்ப வேண்டும். மதிப்புப் பட்டி அனுமதிக்கப்பட்டு இடத்தைக் கைப்பற்றுவதற்கு வேண்டிய நிதி ஒதுக்கப்பட்டதும் இவ்வறிக்கை நேரடியாக விளம்பரம் செய்யப்படும்.

19—8—1912 தேதி, 2492, அ.ஆ.

5. வருவாய்த் துறை அலுவலர்களுக்கு நியமித்தலும் அவர்கள் வைத்திருந்து மேலனுப்ப வேண்டிய கணக்குகளும் விவர அறிக்கைகளும்.—பொறி இயல் பணித் துறை வரவு செலவுத் திட்ட நிதிக்குச் செலவு செய்து சாட்டப்பட வேண்டிய பொறி இயல் பணித் துறை வேலைகளாக இருந்தும் சிவில் அலுவலர்கள் பொதுப்பணி பட்டுவாடா அலுவலர்களாகச் செயலாற்றி செய்யப்படும் வேலைகளுக்காக நிதி வாங்குவதற்கும் வைத்துக் கொண்டு மேலனுப்ப வேண்டிய கணக்குகள் விவர அறிக்கைகள் முதலியவற்றிற்கும் ஆன நடைமுறை விதிகள், தமிழ்நாடு பொறி இயல் பணித்துறைக் கணக்கு விதித் தொகுப்பின் 23, 131 பத்திகளில் உள்ளன. பொறி இயல் பணித் துறை விதித் தொகுப்பின் 98, 103 பத்திகளையும் சென்னைக் கருவூல விதித் தொகுப்பின் 16ஆவது கருவூல விதியின் 1-வது துணை விதியையும் காண்க.

10—10—1928 தேதி, 2387, அ.ஆ. வரு.பலவ.
17—10—1928 தேதி, 3484, வ.து.க.செ.பலவ.
12—7—1956 தேதி, 2767, அ.ஆ.வரு.பல.

6. முடிவுச் சான்று.—ஒவ்வொரு வேலையும் முடிவுற்றதும் முடிவுச் சான்று வருவாய்த் துறை அலுவலரால் தயாரிக்கப் பட்டு, மாவட்டக் கலெக்டர் வழியாகப் பொறி இயல் பணித் துறைப் பகுதியைச் சேர்ந்த அரசாங்கக் கணக்குத் துறைத் துணைத் தலைவரின் இறுதித் தணிக்கைக்கு மேல் அனுப்பப்படும்.

19—6—1876 தேதி, 1030, அ.ஆ.

82. அரசாங்கக் கட்டடங்கள்.—1. அரசாங்கக் கட்டடங்களின் தூய்மை.—அரசாங்க அலுவலகத் தலைவர்கள் தங்கள் அலுவலகக் கட்டடங்களைத் தூய்மையாகவும் சீராகவும் வைத்துக் கொள்ளும் பொறுப்பை வகிக்கிறார்கள்.

7—10—1903 தேதி, 2855, அ.ஆ. பணி.

20—11—1903 தேதி, 228, வ.து.க.செ.

2. அரசாங்கக் கட்டடங்களுக்குத் தீ விபத்திலிருந்து பாது காப்பு.—தீ விபத்து நேராதிருப்பதற்கு எடுக்க வேண்டிய முன் எச்சரிக்கைகளையும் தீ விபத்து நேர்ந்தவுடனே எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் பற்றிய விதிகள் மாவட்ட அலுவலக நடை முறை நூல் "இ" இணைப்பில் அச்சிடப்பட்டுள்ளன. அவ்விதிகள் கண்டிப்பான முறையில் பின்பற்றப்பட்டுள்ளன. அவ்விதிகள் தில்லறைச் செலவின உதவித் தொகைக்குச் சாட்டப்பட துறைக் கிடங்கிலிருந்து, பணம் செலுத்தி வாங்கிக் கொள்ள வேண்டும். குடியிருப்புகளுக்கு வாளிகள் வழங்கப்பட மாட்டா. கண்டிப்பான முறையில் பின்பற்றப்பட வேண்டும். அவை ஆங்கி லத்திலும் மண்டல மொழியிலும் அச்சிடப்பட்டு ஒவ்வொரு அரசாங்கக் கட்டடத்தின் நன்கு தெரிகிற இடங்களில் தொங்க விடப்பட வேண்டும். எக்கட்டடங்களுக்குத் தண்ணீர்த் தொட்டிகள் தேவையோ, அத்தகைய கட்டடங்களுக்குப் பொறி இயல் பணித் துறை தண்ணீர் தொட்டிகளை வழங்கும். வாளி கள் வழங்கப்படுவதும், புதுப்பிக்கப்படுவதும், செப்பனிடுதலும், தண்ணீர் தொட்டிகள் புதுப்பிக்கப்படுவதும், செப்பனிடுதலும் கட்டடங்களை உபயோகிக்கும் அலுவலகத் தலைவர்களால் கவனிக் கப்பட்டு, அவற்றிற்காகும் செலவுகள் அவர்களுடைய அலுவலகச் சில்லறைச் செலவின் உதவித் தொகைக்குச் சாட்டப்பட வேண்டும். அலுவலகங்களாக உபயோகிக்கப்படும் வாடகைக் கட்டடங்களுக்கு வாளிகள், தண்ணீர்த் தொட்டிகள், அக்

கட்டடங்களை உபயோகிக்கும் அலுவலகத் தலைவர்களால் ஏற்பாடு செய்யப்படும். வாளிகள், சென்னைப் பொறி இயல் பணித் துறைக் கிடங்கிலிருந்து, பணம் செலுத்தி வாங்கிக் கொள்ள வேண்டும். குடியிருப்புகளுக்கு வாளிகள் வழங்கப்படமாட்டா.

[1]25—11—1912 தேதி, 1729, அ.ஆ. பணி.
4—2—1913 தேதி, 55, வ.து.க.செ.
19—8—1912 தேதி, 2494, அ.ஆ.
16—9—1912 தேதி, 244, வ.து.க.செ.
1—12—1924 தேதி, 3890, வ.து.க.செ.பலவ
[2]27—10—1938 தேதி, 2676, அ.ஆ.பணி.
[3]8—4—1939 தேதி, 1019, வ.து.க.செ.பலவ.
12—7—1956 தேதி, 2767, அ.ஆ. வரு.பல.
11—8—1943 தேதி, 976, வ.து.க. செ.பலவ. அச்சு.

3. காலி செய்யப்பட்ட கட்டடங்களைப் பற்றி [1]எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை.—( ) பொறி இயல் பணித் துறைப் பதிவேடுகளில் சேர்க்கப்படாதவையும், வனத் துறைக்குச் சொந்தமானவையுமான அரசாங்கக் கட்டடங்கள், உபயோகிக்கும் துறையினரால் காலி செய்யப்பட்டால் வருவாய்த் துறையின் பொறுப்பில் ஒப்புவிக்கப்பட வேண்டும். ஆனால் அவற்றைப் பொறி இயல் பணித் துறையினரிடம் ஒப்புவிப்பதற்குப் பிரத்தியேகச் சூழ்நிலைகள் இருப்பதாகச் சம்பந்தப்பட்ட துறையின் தலைத் தலைவர் கருதுவாரெனில் அரசினர் ஆணை பெறுவதற்கு அறிவிக்க வேண்டும்.

(ii) (அ) பொறி இயல் பணித் துறைப் பதிவேடுகளில் கண்டுள்ள அரசாங்கக் கட்டடங்கள் காலி செய்யப்பட்டவுடன் அவை பொறி இயல் பணித் துறையின் பொறுப்பிலேயே தொடர்ந்து இருந்து வரும்.

[1]28—6—1900 தேதி, 1747, அ.ஆ.பணி.
[1]29—5—1877 தேதி, 157, அ.ஆ. பணி.
31—7—1900 தேதி, 138, வ.து.க.செ.
[1]22—2—1884, தேதி, 493, அ.ஆ.பணி.
[2]20—1—1916 தேதி, 22, வ.து.க.செ.

குறிப்பு.—உபயோகிக்கப்படாமல் விடப்பட்டிருக்கும் அரசாங்கக் கட்டடங்களை அரசாங்கத் துறை ஒன்றிலிருந்து மற்றொரு துறைக்கு மாற்றிக் கொடுப்பதற்கு காரணமுள்ள அலுவலர்களைப்பற்றி வருவாய்த்துறைக் கழக 22 ஆவது நிலை ஆணையது பத்தியைக் காண்க.

[3] அ 9—11—1917 தேதி, 192, வ.து.க.செ.

4. பழைய கோட்டைகளின் மதில்களையும் அல்லது மற்றப் பழைய கட்டடங்களையும் விற்பனை செய்தல்.—பழைய கோட்டைகளின் மதில்கள் அல்லது மற்றப் பழைய கட்டடங்கள், அதன் மூலப் பொருள்கள் அரசாங்கக் கட்டடங்களுக்கோ நகராட்சி மேம்பாட்டு வேலைகளுக்கோ தேவைப்படக் கூடுமா என்பதைப் பொறி இயல் பணித் துறை அலுவலர்களை எழுதிக் கேட்டுத் தெரிந்து கொண்டாலன்றி தனிப்பட்டவர்களுக்கு விற்க முன் வரக் கூடாது.

20—4—1874 தேதி, 927, வ.து.க.செ.

*22 ஆவது நிலை ஆணையையும் காண்க.

83. சிறு கட்டட வேலைகளும் கட்டடங்களுக்குப் பழுது பார்த்தலும் (1) எந்தச் சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட துறையினர் மேற்கொள்ளலாம்.—5,000 ரூபாய்க்கு மேற்படாத சிறு கட்டடங்களைக் கட்டுவதையும் எல்லாச் சிவில் கட்டடங்களுக்கும் சாதாரணமாகப் பழுது பார்க்கப்படும் வேலைகளையும் அவற்றை உபயோகப்படுத்தும் அல்லது அவை எந்த துறைக்குத் தேவையோ அத்துறையினரே தங்களிடம் விட்டுவைக்கப்பட்டுள்ள சிவில் வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து சாதாரணமாக மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பு.—(1) மழையளவி தூண்களைப் புதியதாகக் கட்டுவதும் மழை அளவிகளைப் பராமரிப்பதும் எந்தத் துறைக்கு உரியதோ அந்தத் துறை ஏற்றுக் கொண்டு அந்த அந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும். ஆனாலும் அந்தத் துறை அலுவலர்கள் தம் யுக்தம்போல் பொறி இயல் பணித் துறை அலுவலர்களின் ஆலோசனையைக் கோரலாம்.

20—4—1937 தேதி, 815, அ.ஆ. வரு.பலவ.

13—5—1937 தேதி, 54, வ.து.க.செ. அச்சு.

12—7—1956 தேதி, 2767, அ.ஆ.வரு.பல.

(2) இந்த விதியின்கீழ் கட்டடம், ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளினால் உபயோகிக்கப்பட்டு அவற்றில் வருவாய்த் துறையும் ஒன்றாக இருக்குமானால் வருவாய்த் துறையின் அனுபவத்திலே அக் கட்டடம் இருப்பதாகவும், அப்படி இல்லையானால், சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளரின் முடிவை அனுசரித்துக் கட்டடத்தின் அதிகமான பகுதியை அனுபவிக்கும் துறையின் அனுபவத்திலே கட்டடம் இருப்பதாகவும் கருதப்படும். ஆனாலும் கட்டட உட்பாகங்களின் சிறு மராமத்துக்களை அனுபோகம் செய்து வரும் அந்தத் துறை தனது செலவில் செலவு செய்து கொள்ளலாம்.

(3) (i) குற்ற விசாரணை நீதிபதி அல்லது குற்ற விசாரணை உதவி நீதிபதி அலுவலகங்கள் தாலூகா அலுவலகக் கட்டடங்களிலேயே இருக்குமானால், அக் கட்டடம் முழுவதும் வருவாய்த் துறையின் பொறுப்பில் இருப்பதாகக் கருதப்படும். அத்தகைய கட்டட வேலைகளுக்கு, அந்தத் துறை அலுவலர்கள் தங்கள் அதிகார எல்லைக்குட்பட்ட அளவிற்கு ஆட்சி முறையில் ஒப்பளித்து "பல பொறுப்பு நிர்வாகம்" என்பதன்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து செய்ய வேண்டும்.

(ii) தனியாக அல்லது பிரித்த நிலையில் இருக்கும் கட்டடங்களில் குற்ற விசாரணை நீதிபதிகளின் அலுவலங்களில் இருக்குமானால், அக்கட்டடங்களோ மற்ற வற்றினோடு ஒரே காம்பவுண்டில் இருக்குமானால் அவற்றிற்குச் சம்மந்தப்பட்ட துறையினர் தம் அதிகார எல்லைக்குட்பட்ட அளவிற்குத் தேவைக் கோரிக்கை நிலைக்கு ஆட்சி முறை ஏற்பளித்து "நீதி ஆட்சி முறை" என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட நிலையிலிருந்து செலவு செய்ய வேண்டும்.

20—4—1937 தேதி, 815. அ. ஆ. வரு. பல.
13—5—1937 தேதி வ.து. க. செ. அச்சு.
12—7—1956 தேதி. 2767. அ.ஆ. வரு. பல.

(2) மேலே 1-ஆவது விதியில் விளக்கப்பட்டுள்ள வேலைகளைச் செயலாற்றுதலில்—

(அ) பொறி இயல் பணித் துறையின் பொறுப்பிலுள்ள கட்டடங்களின் கட்டுக்கோப்பில் யாதொரு மாறுதலும் செய்யக் கூடாது;

(ஆ) மேற்கூறைகள் சம்பந்தமான மராமத்து வேலையானது மிகச் சிறிய இனங்களோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

அதாவது, சிவில் அலுவலர்கள் பொறி இயல் பணித் துறையின் பொறுப்பிலுள்ள கட்டடங்களின் மூலதன மதிப்பைப் பாதிக்காத வகையில் சாதாரண மராமத்துக்களை நிறைவேற்றலாம். வேலைகள், கட்டடக்கட்டுக்கோப்பில் மாறுதல்கள் சம்பந்தமாகவோ கூடுதலாகக் கட்டவேண்டியவை சம்பந்தமாகவோ இருந்தால் சிவில் அலுவலர்கள் அவற்றிற்கு நிர்வாகப் பொறியாளரின் இசைவைப் பெறுவதோடு, அக்கட்டடங்களின் மூலதன மதிப்புத் தொகையின் கணக்கைச் சரிவர வைத்துக் கொள்ளும் பொருட்டு அவற்றிற்குச் செலவான தொகையையும் அவருக்குத் தெரிவிக்க வேண்டும்.

20—4—1937. தேதி. 815. அ. ஆ. வரு. பல.
12—5—1937 தேதி, வ. து. க. செ, அச்சு.

(3) பொறி இயல் பணித் துறையின் பொறுப்பிலுள்ள கட்டடங்களில் சிவில் அலுவலர் செய்யும் வேலைகளினால் கட்டடக் கட்டுக்கோப்பில் மாறுதல்களோ கூடுதல்களோ ஏற்படாதிருக்குமானால், பொறி இயல் பணித் துறை தொழில் நேர்ச்சியுடைய நுட்ப அறிவோ அல்லது தொழில் நுட்ப மேற்பார்வையோ அவ் வேலைக்குத் தேவையென்று கருதப்பட்டாலன்றி பொறி இயல் பணித் துறை அலுவலர்களின் சேவையைக் கோரக்கூடாது.

இந்தக் கருத்தை அடைவதற்குரிய காரணங்கள் ஒவ்வொரு வேலை சம்பந்தமாகவும், உதவி கோரப்படும் பொறி இயல் பணித் துறை அலுவலருக்கு தெரிவிக்கப்படவேண்டும். ஆயினும், பொறி இயல் பணித் துறை அலுவலர் அவ்வேலைக்கு நுட்ப அறிவுரையோ அல்லது தொழில் நுட்ப மேற்பார்வையோ அவசியமில்லை என்று கருதுவாரெனில், அதற்குரிய முழுக் காரணங்களையும் கூறி அவ்வேண்டுகோளைத் திருப்பி அனுப்பிவிடலாம்.

20—4—1937 தேதி, 815, அ.ஆ. வரு. பலவ.
13—5—1937 தேதி, 54, வ.து.க.செ. அச்சு.

(4) மாவட்டக் கழக அலுவலகமும், ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட அரசாங்க அலுவலகங்களும் ஒரு கட்டடத்தில் இருக்குமானால் அக்கட்டடத்தின் ஆண்டு மராமத்துச் செலவு, அதன் மூலதனச் செலவுத் தொகையில் 1½ சதவிகிதத்திற்கோ அல்லது ஒப்பளிக்கப்பட்ட வேறு எந்த விகிதத்திற்கோ அதிகமாகக் கூடாது.

(5) செலவு எவ்வளவு இருந்தாலும் பராமரிப்பு மராமத்தும் பொதுப்பணித் துறையையே சேர்ந்த கீழ்க்கண்ட கட்டடங்களுக்கு மேலே கூறப்பட்டுள்ள (1) முதல் (4) வரையிலுள்ள விதிகள் பொருந்தா :—

(i) (1) முதல் (4) விதிகள் பொருந்துவனவாக சென்னை மாநகரிலுள்ள குறிப்பிட்ட அரசாங்க மருத்துவ சாலைகளும், சிறைப்பட்டவர்களை நலவழிப்படுத்தும் நிலையமும், 100 ரூபாய் வரம்பிற்கு அதிகமாகாத பட்சத்தில் அரசாங்க அச்சகமும் நீங்கலாக சென்னை மாநகரிலுள்ள எல்லாக் கட்டடங்கள்.

(ii) மருத்துவப் பள்ளிக்கூடங்கள், தஞ்சாவூர், மதுரை, கோயமுத்தூர் ஆகிய இடங்களிலுள்ள அரசாங்கத் தலைமை யிடத்து மருத்துவச் சாலைகள்.

(iii) அலுவலர் குடியிருப்புக்களெல்லாம்.

(iv) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவையான அரசாங்கத்தின் இதர அலுவலகங்களோடு சேர்ந்துள்ள அலுவலர் குடியிருப்புக்களோ அல்லது மத்திய அரசாங்கத் துறை அலுவலகங்களோ உள்ள கட்டடங்கள்.

(v) பொறி இயல் பணித் துறையின் பிரத்தியேகமான பொறுப்பில் பாதுகாப்பிற்கும் மராமத்துக்கும் விட்டுவைக்கப் பட்ட கட்டடங்கள்.

(vi) வனத்துறை உபயோகித்து வரும் குடியிருப்பில்லாத சிவில் கட்டடங்கள் (கோயமுத்தூர் வனக் கலைக் கல்லூரிக் கட்டடங்கள், உதக மண்டலத்தில் வனத் துறை ஆராய்ச்சி அலுவலரின் வசத்திலுள்ள கட்டடங்கள் நீங்கலாக).

(vii) மத்திய அரசாங்கத் துறையினரால் முழுவதும் உபயோகப்படுத்தப்பட்டு வாடகை வசூலிக்கப்பட்டு வரும் தமிழ்நாடு அரசாங்கக் கட்டடங்கள்.

20—4—1937 தேதி, 815, அ.ஆ.வரு.பல.
13—5—1937 தேதி, 54, வ.து.க.செ.அச்சு.
12—7—1956 தேதி, 2767, அ.ஆ. வரு.பல.

2. வேலைகளின் பட்டியல்.—ஒவ்வொரு மாவட்டத்திலும் அடுத்த ஆண்டில் செய்ய உத்தேசித்திருக்கும் 5,000 ரூபாய் [1] அல்லது [2] அதற்கும் குறைந்து செலவாகும் வேலைகளின் பட்டியலைக் கலெக்டர் நிர்வாகப் பொறியாளருக்கு டிசம்பர் 31 ஆம் தேதியோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பவேண்டும். இவற்றில் நிர்வாகப் பொறியாளர் எவ்வேலைகளுக்குத் தமது துறையின் 'மேற்பார்வை தேவையென்பதையும் எவ்வேலைகளை வருவாய்த் துறையினர் செய்யலாம் என்பதையும் தீர்மானிப்பார். இது சம்பந்தமாகக் கலெக்டருக்கும் நிர்வாகப் பொறியாளருக்கும் கருத்து வேறுபாடு இருப்பனவற்றில், மேற்பார்வைப் பொறியாளர் செய்யும் முடிவு இறுதியாகும். வேலைகளைச் செயலாற்றத் தேர்ந்தெடுப்பதில் கலெக்டரால் மிக்க அவசரம் என்றும், [3] அடுத்த ஆட்சி ஆண்டிற்குள் முடிக்கப்பட வேண்டியது முற்றிலும் அவசியம் என்றும் [4] கருதப்படும் வேலைகளுக்கு முதன்மை கொடுத்து அதன் பின்னர் முன்னதாகவே தொடங்கப் பட்டு, இன்னும் முடிவு பெறுத வேலைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். எல்லா வேலைகளையும் "அசல் வேலைகள்" "மராமத்துகள்" என்ற இருவேறு தலைப்புகளில் வேறுபடுத்தி அவற்றின் செலவை "பெரிய தலைப்புக் கணக்கு" உள் தலைப்புக் கணக்கு, 'சிறிய தலைப்புக் கணக்கு' என்றவற்றின்கீழ் வரிசைப் படுத்திக் காண்பிக்க வேண்டும்.

15—2—1908 தேதி, 28, வ.து.க.செ.
[1]15—3—1909 தேதி, 721, அ.ஆ.
[2]22—10—1912 தேதி, 72, வ.து.க.செ.
[3]10—10—1928 தேதி, 2387, அ.ஆ. வரு.பல.
[4]17—10—1928 தேதி, 3484, வ.து.க.செ. பலவ.

3. நில வருவாய் வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்படும் ஏற்பாடு.—முன் பத்தியில் கூறப்பட்டுள்ள வேலைகளின் பட்டியல் நில வருவாய் வரவு செலவுத் திட்டங்கள் வருவாய்த் துறைக் கழகத்திற்கு மேல் அனுப்பப்படுமுன் தயாராக இருக்க முடியாத கையால் கலெக்டர், விவரமான பட்டியலில் சேர்க்கப்பட வாய்ப் புள்ள வேலைகளின் செலவைக் கணக்கிட்டு, அதை, இந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டுப் பட்டிகளில் ஒரு மொத்தத் தொகை ஒதுக்க வெண்டும்.

சிவில் அலுவலர்களால் செயலாக்கப்படும் கட்டுமானங்கள், மராமத்துகள் ஆகியவற்றின் செலவின் பாகுபாடுகளைக் கீழ்க் கண்ட விதிகள் ஒழுங்குபடுத்தும். (தமிழ்நாடு கணக்கு விதித் தொகுப்பு 1-ஆவது தொகுதியின் 33-ஆவது விதியையும் அதன் கீழுள்ள 2, 3 தல விதிகளையும் காண்க) :—

(1) கட்டடத்தின் நிர்வாகக் கட்டுப்பாடு பொறி இயல் பணித் துறையிடம் இருக்குமானாலும் அல்லது அவ்வேலையைச் செய்யும் சிவில் துறையிடம் இருக்குமானாலும் வேலைக்கான செலவு 5,000 ரூபாய்க்கு மேற்படாதிருக்குமானால் அவ்வேலையைச் செய்து முடிக்கும் துறையின் சில்லறைச் செலவினத்திலேயே அது செய்யப்பட்ட வேண்டும். அச்செலவு "சில்லறைச் செலவினம்—வாக்களிக்கப்பட்டது" என்ற பிரிவின்கீழ்ச் சாதாரணமாய் வகைப்படுத்தவேண்டும். ஆனால், அச்செல்வு ஒரு துறையின் முதன்மையான அல்லது அத்துறைக்குப் பொருத்தமான செயல் நடவடிக்கை பற்றியதாயிருந்தால் அதை, "மற்றச் செலவுகள்—சிறு கட்டட வேலைகளும் மராமத்துக்களும்" என்பதன்கீழ்ப் பாகுபாடு செய்ய வேண்டும்.

12—7—1956 தேதி, 2767. அ. ஆ. வரு. பல.

(2) பொறி இயல் பணித் துறை நிர்வாகக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட கட்டடங்களுக்குரிய வேலையின் செலவு 5,000 ரூபாய்க்கு மேற்படுமானால் அச்செலவைப் பொறி இயல் பணித் துறைக்கு அளிக்கப்படும் நிதிக்குச் சாட்டவேண்டும். ஆனால் உபயோகித்து வரும் சிவில் துறைகளின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள கட்டடங்களுக்கு ஏற்பட்ட வேலைகளின் செலவைச் சம்பந்தப்பட்ட துறையின் "வேலைகள்" செலவினமாகக் கருதி அதற்குரிய பெரிய தலைப்பு அல்லது பெரிய உள் தலைப்பின்கீழ் "வேலைகள்" என்ற சிறுதலைப்புக்குப் பற்று வைக்க வேண்டும்.

கலெக்டர்கள், அவர்களின் சார்நிலைப் பணியாளர்கள், தாலுகா அலுவலகங்கள் குற்ற விசாரணை உதவி நீதிபதிகள் இவர்களின் அலுவலகக் கட்டிடங்களுக்கான சிறு கட்டுமான மாமாத்துக் களின் செலவு பாகுபாடு செய்யப்படுவதில் மேற்கண்ட விதிகளை அனுசரிக்க வேண்டும்.

10—2—1928 தேதி, 102, அ.ஆ. நிதி (விதித் தொகுப்புகள்).
10—10—1928 தேதி, 2387, அ.ஆ. வரு.பல.
17—10—1928 தேதி, 3484, வ.து.க.செ.பலவ.
12—7—1956 தேதி, 2767, அ.ஆ. வரு.பல.

4. ஒவ்வொன்றிற்கும் 5,000 ரூபாய்க்கு அதிகமாகச் செல வாகும் வேலைகளுக்குரிய ஏற்பாடுகள்.—இவ்வேலைகள் சிறு வேலை களாகக் கருதப்பட்டு பொறி இயல் பணித் துறையால் வருவாய்த் துறைக்குரிய சிறு வேலைகளின் நிதித் தொகை அதாவது "50 (அ) சிவில் வேலைகள்—அசல் வேலைகள்—கட்டடங் கள்—உ. பல பொறுப்பு நிர்வாகம். 2. மற்ற வேலைகள்—வாக்களிக் கப்பட்டன—சிறு வேலைகள்" என்னும் தலைப்பின் கீழ் ஒதுக்கப் பட்ட நிதியிலிருந்து செலவு செய்யப்படும். சிறு வேலைகளின் பட்டியல் தயாரிப்பதற்கான வகுக்கப்பட்ட அறிவுரைகள், 79—1 (iii) ஆவது நிலை ஆணையில் அடங்கியுள்ளன.

20—4—1937 தேதி, 815, அ.ஆ. வரு.
13—5—1937 தேதி, 54, வ.து.க.செ.அச்சு.
12—7—1956 தேதி, 2767, அ.ஆ. வரு.பல.

5. மதிப்புப் பட்டிகளை ஒப்பளிப்பு செய்வதற்குரிய அதிகா ரங்கள் :—

(அ) கோட்ட ஆட்சியாளர்—

(i) 2-ஆவது பத்தியில் குறிப்பிடப்பட்ட பட்டியலில் உள்ள வேலை ஒவ்வொன்றிற்கும் 250 ரூபாய்க்கு மேற்படாத மதிப்புப்பட்டியை ஒப்பளிக்கலாம்.

(ii) அசல் மதிப்புப் பட்டியின் தொகையிலிருந்து 10 சதவிகிதம் மாறுபாடு அல்லது 25 ரூபாய் தொகை மாறுபாடு, இவற்றில் எது குறைவோ அதுவரை மதிப்புள்ள மாறுதல்களுக்கு ஒப்பளிக்கலாம்.

(ஆ) தாசில்தார்களும் தன்னுரிமையுள்ள பொறுப்பி லிருக்கும் துணைத் தாசில்தார்களும் 25 ரூபாய் வரை மாமாத்து வேலைகளுக்கு ஒப்பளிக்கலாம்.

(இ) கலெக்டர்கள், ஒவ்வொன்றிலும் [1] 5,000 ரூபாய்க்கு மேற்படாத புதிய வேலைகளுக்கும் மராமத்துகளுக்கும் அவை பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தாலும் சேர்க்கப்படாவிடிலும் பொறி இயல் பணித் துறையைக் கலந்துகொண்டு ஒப்பளிக்கலாம்.

(ஈ) புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு அல்லது பழைய கட்டடங்களுக்குக் கூடுதலாகக் கட்டப்படுவனவற்றிற்காகக் கேட்டுக்கொள்ளப்படும் விண்ணப்பங்களில் உத்தேசிக்கப் பட்டிருக்கும் வேலைகளின் அவசியத்தைத் தெளிவாக விளக்க வேண்டும்.

26—6—1896 தேதி, 232, வ.து.க.செ.
15—2—1908 தேதி, 28, வ.து.க.செ.
11—5—1909 தேதி, 1292, அ.ஆ.
[1] 26—8—1909 தேதி, 196, வ.து.க.செ.
[1] 22—10—1921 தேதி, 72. வ.து.க.செ.

6. வேலைகளைச் செயலாக்குவதும் நிதி ஒதுக்கீடுகளை மாற்றி அமைப்பதும்.—மதிப்புப் பட்டிகள் தேவையான ஒப்பளிப்பு பெற்றதும் வேலைகளைச் செயலாக்க ஆரம்பிக்கலாம் என்றாலும் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டை ஒரு போதும் மீறலாகாது. கலெக்டர்களுக்கு ஒரு வேலையின் ஒதுக் கீட்டை மற்றொரு வேலையின் ஒதுக்கீட்டிற்கு மாற்றுவதற்கு அதிகாரம் உண்டு. ஆனால் அத்தகைய மாறுதல்களின் தொகை 000'1 ஒழுங்ஙயாரே ரூபாய்க்கு அதிகமாகக் கூடாது என்பது அம்மாற்றுதல்கள் அதே தலைப் பிரிவின்கீழ் உத்தேசித்திருக்கும் வேலைகளுக்கே வரம்பிடப்பட வேண்டும்.

26—6—1896 தேதி, 232, வ.து.க.செ.
[3] 10—10—1928 தேதி, 2387, அ.ஆ. வரு. பலவ.
[1]17—10—1928 தேதி, 3484, வ.து.க.செ. பலவ.

7. செலவுத் தொகைகளைக் கொடுத்தல்.—"சிறு கட்டட வேலையும் மராமத்துகளும்" என்பனவற்றின் கீழ் வரும் வேலை களைச் செய்வதும் பணம் கொடுப்பதும், கூடியவரையில் பின் வரும் 87-ஆவது நிலை ஆணையில் அடங்கியுள்ள விதிகளின்படி செய்யப்படும். கலெக்டரின் அதிகாரம் பெற்று வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகைக்குள் மாவட்டக் கருவூலத்திலிருந்தோ தாலுக்கா கருவூலத்திலிருந்தோ பணம்

வாங்கிக்கொள்ளலாம். சிறு பாசன வேலைகளின் செலவுக்காக "தனி முன் பணத் தொகை" அனுமதிக்கும் முறையை சிறு கட்டட வேலை மராமத்துகளுக்கு மேற்கொள்ளுதல் இல்லை யாகையால் சிறு கட்டட வேலை, மராமத்துகளுக்காகக் கருவூலத் திலிருந்து கொடுக்கப்படும் எல்லாச் செலவுகளையும் "சிறு கட்டட வேலையும் மராமத்துகளும்" என்ற தலைப்பின் கீழ் உடனே பற்று வைக்க வேண்டும்.

8—10—1867 தேதி, 6458, வ.து.க.செ.
29—9—1868 தேதி, 6910, வ.து.க.செ.

குறிப்பு.—"சிறு கட்டட வேலையும் மராமத்துக்களும்" என்றதன் கீழ்க் கணக்கில் எழுதுவதற்குரிய செலவுகளைச் சில்லறைச் செலவினப் பட்டியல்களில் சேராதவாறு கவனித்துக் கொள்ள வேண்டும்.

8. ஒப்பளிக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துதல்.— "சிறு கட்டட வேலை மராமத்துகளுக்கு" ஒதுக்கியப் பணத்தில் ஆட்சியாண்டிற்குள் செலவு செய்யப்படாத மீதத் தொகை காலம் கடந்துவிடுமானால் பின்னர் கிடைக்காதாகையால் ஆட்சி ஆண்டிற்குள் முழுத் தொகையும் செலவு செய்வது முக்கியமானது. ஒதுக்கீட்டுத் தொகையில் எப்பகுதியாவது அந்த ஆண்டிற்குள் செலவு செய்ய முடியாதென்று நிச்சயமாகத் தெரிந்ததும் அதைப் பற்றி உடனே மாவட்டக் கலெக்டர் வருவாய்த் துறைக் கழகத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

21—5—1896, தேதி, 3557, வ.து.க.செ.,
15—2—1908 தேதி, 28, வ.து.க.செ.

84. நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர் வழங்கியதில் கட்டுப்பாடு.—

1. எவரிடம் உள்ளது.—பெரிய நீர்ப்பாசன வேலைகளில் தண்ணீரைப் பகிர்ந்தளிப்பதில் உள்ள முழுக் கட்டுப்பாடும் பொறி இயல் பணித் துறை அலுவலர்கள் வகிப்பார்கள். ஆனால், சிறு பாசனத் தண்ணீர் வழங்குதலின் மேலாண்மை வருவாய்த் துறையினரிடமே இருந்து வரும்.

23—9—1858 தேதி, 3593, வ.து.க.செ.

2. தண்ணீரைப் பகிர்ந்தளிப்பதை ஒழுங்குபடுத்துவதில் அரசினரின் உரிமை.— ஒரு அணைக்கட்டோ அல்லது மற்ற வேலையோ புதிதாகக் கட்டப்படுமானால், நில உரிமையாளரிட மிருந்து, அவர்களையும் அரசாங்கத்தையும் கட்டுப்படுத்தும் சில

நிபந்தனைகளுடன் கூடிய மூச்சிலிக்காக்கோப் பெற்றால், புதிய பாசன வேலைகளிலிருந்து தண்ணீர் பகிர்ந்தளிப்பதை ஒழுங்கு படுத்துவதற்கு அரசாங்கத்திற்குள்ள உரிமை கடுமையாகப் பாதிக்கப்படக் கூடுமாகையால் இம்முறையைத் தவிர்ப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். இது சம்பந்தமாய் தப்பு அபிப்பிராயம் ஏற்படாதிருக்கும் பொருட்டு, புதிய வேலையால் பயனடையும் சலுகை அரசாங்கத்தின் அனுமதியைப் பொறுத்திருக்கிறது எனவும் தண்ணீரைப் பகிர்ந்து அளிப்பது சம்பந்தமான முழுக் கட்டுப்பாட்டையும் ஏற்பாட்டையும் அரசினர் தங்களிடமே ஒதுக்கி வைத்துக்கொடிருக்கிறார்கள் எனவும் அச்சந்தர்ப்பங்களில் மாவட்ட அரசிதழிலும் கலெக்டர் தாசில்தார்கள் அலுவலகங்களிலும் அறிவிக்கப்பட வேண்டும்.

17—2—1872 தேதி, 1319, வ.து.க.செ.

(ii) [1] தனிப்பட்டவர்களோ தல ஆட்சிக் கழகங்களோ நகராட்சி மன்றங்களோ நீர்ப்பாசன வேலைகள் அல்லது அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட நீராடு துறைகள், இறங்கு துறைகள், பாலங்கள் முதலியவற்றைக் கட்டுவதற்குப் பண உதவி கொடுத்திருந்தால் அவ்வேலைகள் கட்டி முடிக்கப்பட்டவுடன் அவை அரசாங்க உடைமை ஆகிவிடும் எனவும் அந்நீர்ப்பாசன வேலைகளிலிருந்து தண்ணீர் வழங்கும் குழு அதிகாரத்தையும் அரசினர் செலுத்துவார்களென்றும் அவர்களுக்குத் தெளிவாகத் தெரியப்படுத்த வேண்டும்.

13—12—1894 தேதி, 544, வ.து.க.செ.
15—7—1913 தேதி, 408, அ.ஆ.பாசனம்.
1—2—1912 தேதி, 275, அ.ஆ.
20—9—1913 தேதி, 2808. அ.ஆ.வரு.
[1] 17—10—1913 தேதி, 296, வ.து.க.செ.நிர்.

3. தண்ணீர்க் குறைவு ஏற்படும் காலங்களில் பாசனக் கட்டுப்பாடு.—அரசாங்கத் தண்ணீர் வீணாகாது பார்த்துக் கொள்வதற்காகக் கலெக்டர்கள் பொறுப்பாளர்களாக இருப்பதுடன் அதன் உபயோகத்தில் முறையான சிக்கனத்தைக் கையாளுவதற்காக அவர்கள் சரியான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். தண்ணீர்க் குறைவு ஏற்படும் பருவங்களில் ஒரு குறிப்பிட்ட பாசன முறை அல்லது நீர்ப்பாசன ஆதாரத்தின்கீழ் நன்செய் ஆகப் பதிவு செய்யப்பட்ட நிலங்களில் பயிராகும் பரப்பைக் கட்டுப்படுத்தும் உரிமை அவர்களுக்கு உண்டு. ஆனால் நடைமுறையில், வயல்களுக்கான தண்ணீர் பங்கீட்டில் இந்த உரிமையை அரிதாகச் செலுத்த வேண்டும்.

வருவாய்த் துறை அலுவலர்கள் தண்ணீர்ப் பங்கீட்டை கிராமத்தோடு நிறுத்திக் கொண்டு குறிப்பிட்ட வயல்களுக்குத் தண்ணீர் பங்கீட்டு வழங்குவதைச் சாதாரண பருவ காலங்களில் கிராமத்தார்கள் எவ்வாறு செய்துகொள்வார்களோ அதுபோலவே அவர்களே தங்களுக்குள் நீர்த்துக்கொள்ளுமாறு விட்டுவிட வேண்டும். மிக அரிய சந்தர்ப்பங்களைத் தவிர மற்றச் சமயங்களில் வருவாய்த் துறை அலுவலர்கள் ஒரு கிராமத்தில் நன்செயாகப் பதிவு செய்யப்பட்ட பரப்பில் எந்த விகிதம் பயிர் செய்து கொள்ளப்பட வேண்டுமென்று முடிவு செய்து அந்த விகிதத்திற்கு அதிகமாகப் பயிர் செய்யப்பட்டால் அவ்வாறு விவசாயம் செய்யப்பட்ட பயிர் அதனால் வாடிவிடுமானால், நீர்வை தள்ளிக் கொடுக்கப்படமாட்டாதென்று குடியானவர்களை எச்சரிப்பதே போதுமானதாகும். பாப்பில் எந்தக் குறிப்பிட்ட பகுதி அல்லது எந்த குறிப்பான புலங்கள் மாத்திரமே பாசனம் செய்து கொள்ளலாமென்று குறிப்பிடுவது விரும்பத்தக்கதன்று. நன்செயாகப் பதிவான நிலங்களுக்குப் போதிய நீர் இல்லாத போது கலெக்டர்கள் புன்செய் நிலங்களுக்குத் தண்ணீர் வழங்க மறுத்துவிட வேண்டும்.

28—8—1933 தேதி, 1279, ஆ. 33—4 அரசாங்கக் குறிப்பு வரு.
9—9—1933 தேதி, 82, வ.து.க.செ. அச்சு.

85. தனிப்பட்டோர் நீர்ப்பாசன வேலைகளைப் பாதுகாத்தல்.—

1. அரசாங்க வேலைகளைப் பாதிக்கக் கூடிய தனிப்பட்டோர் ஏரிகளைப் பழுதுபார்த்தல்.—தனிப்பட்டோர் ஏரிகளைச் சரியான மராமத்தில் வைப்பதில் உரிமையாளரின் கவனக் குறைவு காரணமாகப் பொறியியல் பணித்துறையின் பொறுப்பிலுள்ள அரசாங்க வேலைகளுக்கோ, அரசாங்கச் சாலைகளுக்கோ மற்ற எந்தகைய அரசாங்கச் சொத்துகளுக்கோ சேதம் ஏற்படும் அபாயம் என்று கருதக் காரணம் இருக்குமானால் பொறி இயல் பணித் துறை அலுவலர்களோ, சம்பந்தப்பட்ட மற்ற அலுவலர்களோ அதை மாவட்டக் கலெக்டரின் கவனத்திற்கு உடனடியாகக் கொணர வேண்டும். கலெக்டர் அவ்வேரிகளைச் சரியான மராமத்து நிலையில் வைக்க விரைவான பலனளிக்கக் கூடிய நடவடிக்கைகள் எடுக்குமாறு உரிமையாளர்களைத் தூண்ட முயற்சி செய்ய வேண்டும். இவ்வகையில் மனநிறைவு கொள்ளத் தக்க நீர்வு செய்ய கலெக்டரால் இயலவில்லையானால் சட்டப்படி நடவடிக்கைகள் எடுப்பதும் ஒவ்வொன்றின் தன்மைக்கும்,

சூழ்நிலைக்கும் தக்கவாறு தேவையான ஆணையை வருவாய்த் துறைக் கழகத்திலிருந்து பெறுவதும் அல்லது இதர நடவடிக்கைகள் எடுப்பதும் கலெக்டரின் கடமையாகும்.

25—6—1909 தேதி, 2370, அ.ஆ.

2. அவசர சந்தர்ப்பங்களில் பரிகாரம்.—மேலே 1 ஆவது பத்தியில் கூறப்பட்டுள்ள மாமத்துக்கான தேவை ஏதாவதொன்றில் அவசரமாக இருக்குமானால் கலெக்டர், தம் சொந்த அதிகாரத் தன்மையில் உரிமையாளர் மீது, கிரிமினல் நடைமுறை விதித் தொகுப்பு 144 ஆவது பிரிவின் கீழ் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாம்.

23—7—1901, தேதி, 172, வ.து.க.செ.

3. இருப்புப் பாதைகளைப் பாதிக்கும் நீர்ப்பாசன வேலைகள்.—ஜமீன்தார்கள் மற்ற நிலவுரிமையாளர்கள் இவர்களுக்குரிய நிலங்களில் இருக்கும் நீர்ப்பாசன வேலைகளிலிருந்து மிகுந்துவரும் அல்லது வழிந்தோடும் தண்ணீரால் இருப்புப் பாதைக்குத் நீங்கு விளைவதைத் தடுப்பதற்காக இயற்றப் பெற்றுள்ள 1886 ஆம் ஆண்டு சென்னை மாநில IV ஆவது சட்டத்திற்குக் கலெக்டர்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது. அச்சட்டத்தின்படி அவர்கள் மேல் விதிக்கப் பட்டிருக்கும் கடமைகளை நிறைவேற்ற வேண்டிய தன்மையைப் பற்றி கலெக்டர்களுக்கு வழிகாட்டுவதற்குக் கீழ்க்கண்ட பொது அறிவுரைகள் இடப்பட்டிருக்கின்றன :—

(1) முதன் முதலில் நீர்ப்பாசன வேலை உண்மையில் பந்நிரமில்லாத நிலையில் இருக்கிறது என்பதையும், அது உடைவது இருப்புப் பாதையில் பாதுகாப்பை உத்தேசித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலையில் உள்ளது எனவும் கலெக்டர், முதன் முதலில் திருப்தியடைய வேண்டும். சட்டத்தின் கீழ் நடவடிக்கை அவசியம் என்று தான் கருதும் வேலைகளைக் கலெக்டருக்கு அறிவிப்பது சாதாரணமாக நிர்வாகப் பொறியாளரின் கடமையாகும்.

நிர்வாகப் பொறியாளர் இவ்வாறு நடவடிக்கை தொடங்காத ஒரு நீர்ப்பாசன வேலையில் நிகழ் இருப்புப் பாதைக்கு அபாயம் விளைவிக்கக் கூடியதாக உள்ளதெனக் கலெக்டருக்குத் தெரிய வந்தால், சட்டத்தின் கீழ் அவர் யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்வதற்கு முன்பாக

நிர்வாகப் பொறியாளரை (அல்லது அலகியமாளும் மேற்பார்வைப் பொறியாளரை) கலந்து ஆலோசனை செய்து கொண்டு, விரும்பத் தக்கது என்று படும் அத்தகைய விசாரணை செய்த பிறகு, சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் அமைப்புப் படங்களையும், மதிப்புப் பட்டியையும் தயாரிப்பதற்கு ஆணை பிறப்பிக்கலாமா என்பதைத் தீர்மானிப்பார். இருப்புப் பாதையின் பாதுகாப்பிற்காக இருப்புப் பாதைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் எடுக்க வேண்டிய நடவடிக்கை எல்லாம் மாவட்டத்தின் "இருப்புப் பாதையைப் பாதிக்கக்கூடிய எரிகளுக்குரிய" பட்டியலில் குறிப்பிட்டிருக்கும் தரத்தை அனுசரித்து அவற்றைப் பாதுகாத்துப் பராமரிப்பதேயாகும். இப்பட்டியலில் கண்ட தரமே அந்த எரியைத் திறமையான நிர்ப்பாசன வேலையாகப் பராமரிப்பதற்குரிய தரமாகும். செலவின் பகுதியோ முழுதுமோ நில உரிமையாளர் கொடுக்கத் கடமைப்பட்டவரல்லர் எனச் சட்டத்தின்படி நடக்கும் விசாரணையின்போது கலெக்டரைத் திருப்திபடுத்தினாலன்றி இதன் பொருட்டுச் செலவான தொகையைச் சட்டத்தின்படி சம்பந்தப்பட்ட நில உரிமையாளரிடமிருந்து திரும்பப் பெற முடியும், திரும்பப் பெற வேண்டும். வேலையின் முழுச் செலவிற்கும் நிலவுரிமையாளர் கட்டுப்பட்டவரல்லர் எனக் கலெக்டர் கருதுவார் எனில், அவர் தம் காரணங்களைத் தெளிவாக விளக்கி, நிலவுரிமையாளரைக் கட்டுப்படுத்தாத செலவினம் இருப்புப் பாதையின் பாதுகாப்பிற்கு அவசியம் என்று தாம் கருதுவதற்கான காரணங்களைப் பற்றி அவர் முழு விளக்கத்துடன் அரசாங்க ஆணைக்காக அறிக்கை அனுப்ப வேண்டும்.

(2) அமைப்புப் படங்களும் மதிப்புப் பட்டிகளும் தயாரானவுடன் சட்டத்தினால் வகுக்கப்பட்ட வழக்கத்திற் கிசைந்த நடவடிக்கைகளோத் தாமதமின்றியும் கவனிப்பாகவும் கலெக்டர் எடுப்பதோடு, அச்சட்டத்தின் 9 ஆவது பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒவ்வொரு திட்டத்தையும்,

(i) சம்பந்தப்பட்ட நிர்ப்பாசன வேலை இருப்புப் பாதையைப் பாதிக்கக்கூடியதான வேலை என்பதாகவும்,

(ii) அது பாதுகாப்பற்ற நிலையில் இருக்கிறது என்பதாகவும்,

(iii) உத்தேசித்திருக்கும் நடவடிக்கைகள் அந்த எரியிலிருந்து இருப்புப் பாதைக்கு நேரக்கூடிய அபாயத்தைத் தடுக்க அவசியமானவை என்பதாகவும்,

(iv) இந்நடவடிக்கைகள் அனைத்தும் இருப்புப் பாதையைப் பாதிக்கும் ஏரிகளுக்குரிய அச்சிடப்பட்டப் பட்டியலில் குறிக்கப்பட்டிருக்கும் தாங்களுக்கு ஒத்திருக்கின்றன என்பதாகவும்,

நிர்வாகப் பொறியாளர் அளிக்கக்கூடிய சான்றுடன் மாசனத் தலைமைப் பொறியாளர் வழியாக அரசினருக்கு மேலனுப்ப வேண்டும்.

15—8—1936 தேதி, 1781, அ. ஆ. வரு.
26—8—1936 தேதி, 111, வ. து. க. செ. அச்சு.

சட்டத்தின்கீழ்த் தாம் செய்த விசாரணைகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் சம்பந்தப்பட்ட அசல் கட்டுகள் எல்லாவற்றையும் கலெக்டர் தமது யோசனை அறிக்கையுடன் அரசினருக்கு அனுப்ப வேண்டும்.

(3) மதிப்புப் பட்டிகளைத் தயார் செய்வதற்காகச் சப்பாத்திக் கள்ளிகளை அகற்றுவது அவசியமானால் சம்பந்தப் பட்ட நில உரிமையாளரை அவ்வாறு செய்யுமாறு கலெக்டர் கேட்டுக்கொள்ளுவதோடு பொறி இயல் பணித் துறை அலுவலர்கள் மட்ட அளவு முதலியன எடுப்பதற்குத் தேவையான வகையில் அக்கள்ளிகளை அகற்றிவிட்டால், அவ்வேலை, நிலவுரிமையாளரின் செலவிலேயே அரசினரால் செய்யப்படும் எனக் கலெக்டர் எச்சரிக்கை செய்ய வேண்டும். அவ்வுரிமையாளர் அவ்வேலையை அவ்வாறு செய்யத் தவறிவிடுவாரெனில் கலெக்டர், அதை அரசினர் செலவிலேயே முடித்து, பின்னர் நிலவுரிமையாளருக்குச் சேர்ப்பிக்க வேண்டிய மதிப்புப் பட்டியலில் இதையும் சேர்த்துக் கொண்டு அவ்வேலை அரசினரால் முன்னமே செய்யப்பட்டதெனவும், அத்தச் செலவுத் தொகை அரசினருக்கு நில உரிமையாளரால் செலுத்தப்பட வேண்டும் எனவும் குறிப்புரையெழுதி, அச்செலவுத் தொகையை அவரிடமிருந்து வசூலிக்க வேண்டும். நிலவுரிமையாளர் அச்செலவுத் தொகையைச் செலுத்த ஆட்சேபனை செய்தால் அத்தொகையை வசூலிக்க அவர் மீது ஒரு வழக்குத் தொடர வேண்டும்.

(4) ஒன்றுக்கு மேற்பட்ட உரிமையாளர்களின் நிலங்களில் இருக்கும் ஏரியின் மராமத்துக்காக, 1936 ஆம் ஆண்டு இருப்புப் பாதைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் வேலைக்குள்ள தொகையை நிர்ணயிப்பதற்கு மூன்று வழிகள் உண்டு, அவையாவன :—

(i) நீர்ப்பாசன வேலியின் ஒரு பகுதி ஒரு நில உரிமையாளரின் நிலத்திலும் மற்றொரு பகுதி மற்றொரு நிலவுரிமையாளரின் நிலத்திலும் திட்டமாக இருந்து அப்பகுதிகள் பிரிக்கக்கூடியனவாகவும் இந்தச் சட்டத்தை அனுசரித்து ஒவ்வொரு நில உரிமையாளரும் செய்ய வேண்டிய வேலையானது தனித் தனியாகச் செய்யத்தக்கதாகவும் மதிப்பிடத் தக்கதாகவும் இருக்குமானால், ஒவ்வொரு நிலவுரிமையாளரும் "தமது" நிலத்திற்குரிய வேலையைத் தாமே தமது செலவில் செய்யுமாறு அன்னாரைக் கேட்க வேண்டும். இது பொதுவாக உள்ள ஒரே வேலையின் செலவுக்குக் கொடுக்கும் பங்குத் தொகை போன்றதன்று.

(ii) ஏரியின் உள்வாய் நிலத்தில் ஒவ்வொரு நில உரிமையாளருக்குமுரிய பரப்பை எவ்வளவு எனக் குறிப்பிட முடியாமலிருந்து ஏரி வரத்துத் தண்ணீருக்கு மட்டும் குறிப்பிட்ட விதத்தில் அவர்களுக்குள் பங்கு உரிமை இருக்குமானால், அவ்விதாசாரத்தையே அடிப்படையாகக் கொண்டு அவர்கள் கொடுக்க வேண்டிய பங்குத் தொகையைத் தீர்மானிக்க வேண்டும்.

(iii) நிலத்தைத் தங்கள் வசம் பொதுவாக வைத்துக் கொண்டுள்ளவர்களுக்கு, ஏரி வரத்துத் தண்ணீரில் குறிப்பான பங்குகளை எவற்றிற்கும் உரிமை இல்லையென்றால், கிராமத்தில் உள்ள அவ்வேரியின் கீழ் ஒவ்வொரு நிலமுடையவரும் நீர் பாய்ச்சிக்கொள்ளும் ஆயக்கட்டின் பரப்பு விகிதத்தில் மாத்திரமே அவர்கள் பாத்தியதை நிர்ணயிக்கப்பட்டு அவ்விகிதத்தை அனுசரித்தே பங்குத் தொகையும் நிர்ணயிக்கப்பட வேண்டும். ஒவ்வொன்றிலும் பாசன வேலையானது முதல் அல்லது இரண்டாவது தலைப்புகளின் கீழ் வருகின்றதா என முதலில் ஆராய்ந்து இவ்விரண்டில் எதாவதொன்றின்கீழும் வராவிடில் மூன்றாவது வழியை மேற்கொள்ள வேண்டும்.

(5) கலெக்டர்கள், மேற்குறித்த சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைகளில் அறிவிப்புகள் முதலியவை சம்பந்தமாக வகுக்கப்பட்ட சம்பிரதாயங்களைக் குறிப்பிட்ட வரிசைக் கிரமத்தில் சரியாக அனுசரிப்பதில் மிகுந்த கவனமாக இருக்க வேண்டும். கலெக்டர் செய்த ஆராமத்துச் செலவை நிலமுடையவர் செலுத்தத் தவறினால் அல்லது மறுத்தால் அதனைச் சிவில் நீதிமன்றம் வழியாகவே மாத்திரம் வசூலிக்க

முடியுமாகையால் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள முறைகளில் யாதேனுமொன்று உரிய முறையில் அனுசரிக்கப்பட்டால் அல்லது நடைமுறையில் யாதாவதொரு ஒழுங்கீனம் ஏற்பட்டால் அது நடவடிக்கைகள் முழுமையும் கெடுத்துவிடுவதுடன் அரசாங்கத்துப் பொருள் இழப்பையும் உண்டாக்கக்கூடும். ஒரு தடவை வழக்கத்திற்கிசைந்த முறைகள் சரிவர அனுசரிக்கப் பட்டிருந்தால் நிலமுடையவருக்கு இச்சட்டத்தின் 5 ஆவது பிரிவின்கீழ் முதலில் அனுப்பப்பட்ட மதிப்புப் பட்டியல்களின் விதங்கள் வேலிகளுக்குரிய விதங்கள் உயர்த்துவிட்ட காரணமாக அம்முறைகளை மறுமுறையும் அனுசரிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், அசல் மதிப்புப் பட்டியில் கண்டுள்ள வேலிகளின் அளவிலோ அல்லது விவரத்திலோ மாறுதல் செய்ய வேண்டுமானால், திருத்தப்பட்ட மதிப்புப் பட்டி, அமைப்புப் படம் அறிக்கை முதலியவற்றின் நகல்களை நிலமுடையவர் களுக்குத் தவறாமல் அனுப்பி, மற்ற சம்பிரதாயங்களைப் புதிதாய் மேற்கொள்ள வேண்டும். இதற்கிடையில் நடந்து கொண்டிருக்கும் வேலையை நிறுத்தி வைக்க வேண்டும். ஆனால் உத்தேசிக்கப்பட்டிருக்கும் மாறுதல், கூடுதல் வேலைகளுக்காக இருக்குமானால் அதற்குத் தனி மதிப்புப் பட்டி ஒன்று தயாரித்து, அதிலுள்ள வேலையை ஒவ்வொரு வகையிலும் தனித்ததாகவும் முதற்பட்டிக்குச் சம்பந்தமில்லாததாகவும் கருதி நடக்கலாம். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அசல் மதிப்புப் பட்டி வேலையை அதில் உள்ள அளவிற்குத் தொடர்ந்து செய்யலாம். நடைமுறையில் கீழ்க்காணும் முறைபாடுகளும் பிழைகளும் அடிக்கடி காணப்படுகின்றன. இவை நேரிடாதவாறு கலெக்டர்கள் கவனித்துக் கொள்ள வேண்டும் :—

(i) உத்தேசித்திருக்கும் வேலைகள் இருப்புப் பாதைப் பாதுகாப்புக்கு அவசியம் என்பதற்குச் சரியான சான்றிதழ் இல்லாமை, அதாவது சான்றிதழ் கொடுக்கும் அலுவலர் சிவில் நீதிமன்றத்தில் பிரமாணம் செய்து சான்று கொடுக்கத் தயாராக இருக்கக்கூடிய வகையில் அமையும் சான்றிதழ்,

(ii) இச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தில் அப்பிரிவை அனுசரித்துத் தேவையான எல்லா விவரங்களையும் கொடுக்காமல் விட்டுவிடுவது; அவையாவன, நீர்ப்பாசன வேலியின் விலாம், நிலமுடையவரின் பெயர், அவர் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய செலவின் விகிதம்,

(iii) 4 ஆவது பிரிவின்கீழ் எழுதி வாங்கப்பட்ட வாக்கு மூலத்தின் மண்டல மொழி தகல்கனைக் கிராமத்தில் ஒரு நன்கு தெரிகிற இடத்தில் பொருத்தி வைக்கத் தவறிவிடுவது,

(iv) நில உடைமையாளருக்கு மதிப்புப் பட்டிகளுடன் அமைப்புப் படங்களையும் சேர்ப்பிக்காமல் விட்டுவிடுவது,

(v) சட்டத்தின் 9 ஆவது பிரிவின் கீழ் அரசாங்க ஆணையை மாவட்ட அரசிதழில் வெளியிடம் செய்யத் தவறி விடுவது,

(vi) 11 ஆவது பிரிவின் கீழ் மிக அவசர வேலையை நிறைவேற்றிய பின்னர் சம்பிரதாயமான நடவடிக்கைகளை எடுப்பதில் தாமதம்,

(vii) ஒரே வேலையின் மதிப்புப் பட்டி திருத்தி அமைக்கப்படும் ஒவ்வொரு நடவடிக்கையிலும் அல்லது ஒருவரிடமிருந்து வேறொருவருக்கு சொத்து மாறும்பொழுது புதிதாக நடவடிக்கைகள் எடுக்கத் தவறி விடுவது,

(viii) சட்டத்தின் கீழ் அறிவிப்பு சேர்ப்பிப்பதில் தவறான முறைகள் [அறிவிப்பு, நிலமுடையவர்களுக்கு நேரில் சேர்ப்பிக்க முடியாததற்குச் சரியான காரணங்கள் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். (பிரிவு 19)].

8—5—1928 தேதி, 1002, அ.ஆ. வரு.
10—5—1928 தேதி, 1836, வ.து.க.செ.
12—7—1956 தேதி, 2767, அ.ஆ.வரு.பல.

(6) இருப்புப் பாதையைப் பாதுக்கும் ஏரியின் மராமத்தைப் பொறி இயல் பணித் துறையினர் செய்வாரெனில், அதற்குரிய நிதிகளை அத்துறை அளிப்பதுடன், அச்செலவைத் திரும்ப வசூலிப்பதையும் தமிழ்நாடு பொறி இயல் பணித் துறைக் கணக்கு விதித் தொகுப்பு 484 ஆவது பத்தியில் வகுக்கப் பட்டுள்ள அறிவுரைகளின் கீழ் அத்துறையினரே கவனித்துக் கொள்வர். அம்மராமத்தைச் சிறு பாசனப் பணியாளர் நிறைவேற்றுவாரெனில் அதன் செலவை "18 நீர்ப்பாசனம்—சாதாரண வருவாய்களிலிருந்து நிதியளிக்கப்பட்ட இதர வருவாய்த் துறைச் செலவுகள்—அ. நீர்ப்பாசன வேலைகள்—(1) வேலைகள் (வாணிப சம்பந்தமல்லாதவை). சிறு பாசனம்—பராமரிப்பும் மராமத்தும்" என்ற கணக்கிலிருந்து முதலில் செலவு செய்து, பின்னர் அதை வசூலித்துக் கொண்டு

"XVIII நீர்ப்பாசனம், கண்ணீர்ப் போக்குவரத்துக் கட்டுக் கரை, வடிகால் வேலைகள்—(வாணிப சம்பந்தமல்லாதவை)—அ. நீர்ப்பாசன வேலைகள்—சிறு பாசனம்—அ. நேரான வரவுகள்—செலவைத் திரும்ப வசூல் செய்தல்" என்ற தலைப்பின் கீழ் வரவு வைக்க வேண்டும். கீழ்க்கண்ட படிவத்தினில் ஒரு நிலையான பதிவேடு கலெக்டர் அலுவலகத்தில் எழுதி வைக்கப்பட்டு, சிறு பாசனப் பணியாளர்கள் செய்த செலவை திரும்ப வசூலிப்பதைக் கவனமாகப் பார்த்து வரவேண்டும். கலெக்டர் இப்பதிவேட்டைக் காலாண்டுக்கொரு முறையாவது சொந்த மூறையில் ஆய்ந்து பார்க்க வேண்டும்.

12—7—1956 தேதி. 2767, அ.ஆ.வரு.பல.

இருப்புப் பாதையைப் பாதிக்கும் ஏரியின் பெயரும் அது இருக்கும் ஜாமமும் தாலூகாவும்.	பொறுப்புடைய உரிமையாளர் அல்லது உரிமையாளர்கள்.	மதிப்புப் பட்டியை ஒப்பளித்த அரசாங்க ஆணையின் எண்ணும் தேதியும்.	அரசாங்க அலுவலர்கள் செய்த சேவைகளுக்கு ஏற்பட்ட செலவுகள் உட்பட மதிப்புப் பட்டியின் தொகை.	யாரால் நிறைவேற்றப் பட்டது? பொறி இயல் பணித்துறையினரால் அல்லது வருவாய்த் துறையினரால்.
(1)	(2)	(3)	(4)	(5)

சிறு பாசனப் பணியாளர்களால் வேலை செய்து முடிக்கப் பட்டிருந்தால் அரசாங்க அலுவலர்கள் செய்த சேவைகளுக்காக ஏற்பட்ட செலவுகள் உட்பட உண்மையில் செலவான தொகை.	வேலை முடிவடைந்த தேதி.	திரும்ப வசூலிக்கப்பட்ட தொகை.	வசூலிக்கப் பட்ட தேதி.	குறிப்புரை.
(6)	(7)	(8)	(9)	(10)

* பணத்தை திரும்ப வசூலிக்க வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தால் விவரங்கள் இங்கே கொடுக்க வேண்டும்.

குறிப்பு.—பொறி இயல் பணித் துறையினர் செய்யும் வேலைகளுக்கு பணத்தைத் திரும்ப வசூலிப்பதை நிர்வாகப் பொறியாளர் கவனிப்பார். ஆதலால் அத்தகைய வேலைகளுக்கு (6) முதல் (9) வரையுள்ள கட்டங்களைப் பூர்த்தி செய்ய வேண்டியதில்லை.

(7) இருப்புப் பாதைகளைப் பாதிக்கும் தனிப்பட்டோரின் வரிகளின் மராமத்தை அரசாங்கச் செலவில் சிறு பாசனப் பணியாளரே செய்வாரெனில் மராமத்திற்கு ஏற்பட்ட செலவோடு மராமத்து வேலைகள் செய்யப்பட்டநில அரசாங்க அலுவலர்களின் சேவைக்கான சதவீதச் செலவையும் சேர்த்து உரிமையாளரிட மிருந்து வசூலிக்க வேண்டும். இந்த சதவீதமானது வேலைகள் முடிவடைந்த பின்னர் கீழ்க்காணும் விதி முறையில் கணக்கிடப்படும் :—

பணியாளருக்காக.	வேலைகளின் முதலீட்டுத் தொகையில்.	10½	சதவிகிதம்
கருவிகள், தளவாடங்களுக்காக.	,,	1	,,
தணிக்கைக்காகவும் கணக்கு வைப்பதற்காகவும்	,,	1	,,
ஒய்வூதிய வகை ..	,,	1½	,,
	மொத்தம்	14	

மேற்கண்ட விதங்களில் செலவுகளுக்காகச் சதவீதம் (அ) முன்பணம் கொடுத்த வேலைகளுக்கும், (ஆ) சிவில் வழக்குத் தொடராமலேயே பின்னர் செலுத்தப்பட்டவற்றிற்கும் விதிக்கப்பட வேண்டும். வழக்குத் தொடருவது அவசியமானால் வேலைகளின் உண்மையான செலவு மூலதனச் செலவுத் தொகையில் 14 சதவிகிதத்திற்கு அதிகமாகுமானாலும், 14 சதவிகிதத்திற்கு உட்பட்ட செலவுத் தொகைக்கே வழக்கில் உரிமை வாதம் கொண்டாட வேண்டும். அதற்குத் தேவையாகும் விவரங்களை நீதி மன்றங்களில் தாக்கல் செய்ய அலை எழுதுச் சான்றுப் படிவத்தில் இருக்க வேண்டும். ஆகையால் இத்தகைய வேலைகளுக்குப் பார்வையிடும் அலுவலர்கள் பார்வையிடுவதில் கழிந்த காலம், அவர்களின் பயணப் படிகள், கருவிகள், தளவாடங்களின் வாடகைச் செலவுகள் இவை போன்ற மற்றவற்றின் சதவீதச் செலவுகள் அடங்கிய தனிக் கணக்கு ஒன்றை எழுத வேண்டும். அந்த வேலை நிறைவேற்றின வகையில் அரசினர் உண்மையிலேயே அச்செலவுகளை செய்தனர் என்றும், உரிமை கொண்டாடும் தொகை ஆதாரமில்லாமல் கேட்டதல்ல, உண்மையாகச் செலவிடப்பட்டவை என்பதைக் காட்ட நீதி மன்றத்தில் இக்கணக்கைத் தாக்கல் செய்ய

வேண்டும். அரசினர் தங்கள் உரிமைத் தொகையை என் 14 சதவீதத்திற்கு வரம்பிட்டார்கள் என்ற கேள்வி நீதி மன்றத்தில் எழுமானால், தல ஆட்சி மன்றங்களுக்காகவும் மற்றவர்களுக்காகவும் அரசினர் மேற்கொள்ளும் வேலைகளுக்கும் இதே சதவீதம் விதிக்கப்படுகிறதென்றும் சதவீதம் ஒரு படித்தாக இருக்கும்பொருட்டு இதிலும் இவ்வாறு செய்யப் பட்டது என்றும் எடுத்துக் கூற வேண்டும். அமைப்புப் படங்களையும் மதிப்புப் பட்டிகளையும் தயாரித்துத் தணிக்கை செய்வதற்கான செலவுகளை இக்கணக்கில் சேர்க்கக்கூடாது. அந்த வேலையைப் பார்வையிட்டு அளவுத் தணிக்கை செய்யும் நிர்வாகப் பொறியாளர், மேற்பார்வைப் பொறியாளர் உட்பட ஒவ்வொரு அலுவலரும், மதிப்புப் பட்டிகள் தமக்கு ஆலோசனைக்கு அனுப்பப்பட்டிருந்தால், கிழ்க்காணும் படிவத்தில் ஒரு சான்றெழுதி, அதைச் சம்பந்தப்பட்ட தாசில்தாருக்கு அனுப்ப வேண்டும். ஒவ்வொரு சுற்றுப்பாணம் முடிவடைந்ததும் அங்கங்கே அவ்வப்போது இச்சான்று அனுப்பப்பட வேண்டும். தானாகா அலுவலகத்திலும் அதே படிவத்தில் ஒரு பதிவேடு எழுதி வைக்கப்பட்டு அதில் அச்சான்றின் பதிவுகளை உள்ளவாறே எடுத்து எழுதி வைத்துவர வேண்டும். அது சம்பந்தப்பட்ட அலுவலரால் அளிக்கப்பட்ட அசல் சான்றின் "உண்மை நகல்" என்பதற்குத் தாசில்தார் தமது கையொப்பத்தையும் அதில் இட வேண்டும். பின்னர் அச்சான்றைத் தொடர்புடைய மதிப்புப் பட்டியின் பதிவுக் கட்டுடன் சேர்த்து வைக்க வேண்டும். ஒரு வேலை முடிவடைந்தவுடன் அது சம்பந்தமாகப் பல்வேறு சான்றுகளில் கொடுக்கப்பட்ட விவரங்கள் முழுவதும் தமது அலுவலகத்தில் அதே படிவத்தில் தொகுக்கப்பட்டு, தொகுக்கப்பட்ட விவரப் பட்டியல் தொடர்புள்ள மதிப்புப் பட்டியலுக்குச் சம்பந்தப்பட்ட பதிவுக்கட்டுடன் கோத்து வைக்கப்படுமாறு தாசில்தார் கவனித்துக்கொள்ள வேண்டும். பின்னர், அவ்வேலையின் செலவுடன் பணியாளர் பயணப்படி, கருவி தளவாடங்கள் இவற்றின் விதிதச் செலவுகளின் மொத்தத் தொகையைச் சேர்த்து உரிமையாளரிடமிருந்து வசூலிக்க வேண்டிய சரியான தொகையை தொகுத்த விவரப் பட்டியலின் 13 ஆவது கட்டத்தில் இறுதியாகக் கணக்கிட்டு எழுத வேண்டும். மேலே (6) ஆவது உட்பிரிவில் குறிப்பிட்ட நிலையான பதிவேட்டின் (6) ஆவது கட்டத்தைக் கலெக்டர் அலுவலகத்தில் பூர்த்தி

செய்வதற்கு முன்னர் சான்றுகளையும் தானாகா அலுவலகத்தில் தயாரித்த தொகுப்பு விவரப் பட்டியலும் கலெக்டர் அலுவலகத்தில் கவனமாகத் தணிக்கை செய்யப்பட வேண்டும்.

12—6—1936 தேதி, 73 வ.து.க.செ. அச்சு.
17—8—1936 தேதி, 105 வ.து.க.செ.அச்சு.
15—7—1936 தேதி, 1530 அ.ஆ. கு.

1886-ஆம் ஆண்டின் இருப்புப்பாதை பாதுகாப்புக்கான IV சட்டத்தின் கீழ், இருப்புப் பாதையைப் பாதுக்கும் பணிகளிலிருந்து விலக்கிக் கொள்ளும் செயலாற்றும் அல்லது மேற்பார்வை செய்யும் அலுவலர்கள் அளிக்க வேண்டிய சான்றிதழ்.

இடம் :

தேதி :

(1) ரயில்வே போலீஸ் அல்லது இருப்புப் பாதை நிர்வாகத்தின் தலைமை அதிகாரி.

(2) இருப்புப்பாதை பாதுகாப்புப் பணியாளர்கள் மற்றும் இருப்புப் பாதை ஊழியர்கள்.

(3) பயிற்சி பெறுபவர்கள், அவசர ஒப்பந்தப் பணியாளர்கள், ஏஜெண்டுகள் மற்றும் தொழிலாளர்கள்.

(4) ரயில்வே கிளார்க்குகள், கேங்மேன்கள், ரயில்வே வேலைப்பாட்டாளர்கள்.

(5) (4)-ஆவது இனத்தில் சேர்க்கப்படாத ரயில்வே ஊழியர்கள் மற்றும் ரயில்வே பொறியியல் அலுவலர்களின் ரயில்வே பொறியியல் சார்புப் பணியாளர்கள்.

(6) ரயில்வே தொழிலாளர்.

(7) ரயில்வே பொறியியல் சார்புப் பணியாளர்களின் மேற்பார்வையில் இருப்புப் பாதை பராமரிப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள், தொழிலாளர்கள் மற்றும் ஏஜெண்டுகள்.

(8) ரயில்வே பொறியியல் சார்புப் பணியாளர்களின் மேற்பார்வையில் இருப்புப் பாதை பராமரிப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், தொழிலாளர்கள் மற்றும் ஏஜெண்டுகள்.

(9) அங்கீகரிக்கப்பட்ட ரயில்வே பொறியியல் சார்புப் பணியாளர்.

(10) ரயில்வே பொறியியல் சார்புப் பணியாளர்களின் மேற்பார்வையில் இருப்புப் பாதை பராமரிப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள்.

(11) ரயில்வே நிர்வாகத்தின் பராமரிப்புக்கான தொழிலாளர்.

(12) பாதுகாப்புப் பணியாளர்களின் மேற்பார்வையில் இருப்புப் பாதை பராமரிப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்.

(7), (10), (11), (12) ஆகியோர்களுக்கு மாற்றாக.

(13) ரயில்வே நிர்வாகத்தின் பராமரிப்புக்கான தொழிலாளர்.

(14) இதில்லை.

* ரயில்வே நிர்வாகத்தினால் அனைவர்களுக்கும் (மேற்கண்ட வகைகளிலுள்ளவர்களுக்கும்) அனைவர்களுக்கும் தரப்படும் அடையாள அட்டை. இதில் அவர்களின் பெயர், தந்தையின் பெயர், வயது, அடையாளம் மற்றும் கையொப்பம் ஆகியவை இடம் பெற்றிருக்க வேண்டும்.

12—6—1936 தேதி, 73 வ.தி.க.தெ. அக்க.

"மேற்குறிப்பிட்ட பதிவுகள் சரியென்று சான்று கூறப்படுகிறது."

கையொப்பம்.
வேலையின் பெயர்

7—2—1931 தேதி, 296, ஸ.ஆ.வரு.
16—2—1931 தேதி, 15, வ.தி.க.தெ.
26—4—1944 தேதி, 794 ஸ.ஆ.வரு.
9—1—1935 தேதி, 1, வ.தி.க.தெ.

4. இருப்புப் பாதைகளைப் பாதிக்கக்கூடிய நீர்ப்பாசன வேலைகளைப் பார்வையிடுதல்.—இருப்புப் பாதைகளைப் பாதிக்கும் நீர்ப்பாசன வேலைகளைப் பொறி இயல் பணித் துறைப் பிரிவு அலுவலர்கள் ஒவ்வோராண்டும் பார்வையிட வேண்டும். அவை நன்னிலையில் வைப்பதற்கு எத்தகைய வேலை தேவை என்பதை அவற்றை மேல் நிலை அலுவலர் எவரும் பார்வையிட வேண்டிய அவசியமில்லை. யாதொரு பாசன வேலை குறிப்பிட்ட நாளிற்குக் கீழே உள்ளது என்றும் இருப்புப் பாதையின் பாதுகாப்பின் பொருட்டு அதை அதற்குரிய நிலைக்குக் கொண்டு வர வேண்டுமென்றும் அவர் தெரியப்படுத்தினால் உட்கோட்ட அலுவலர் அதைப் பார்வையிட்டு, மேலே 3 ஆவது உள்பத்தியில் கண்டுள்ள அறிவுரைகளை அனுசரித்து அப்பாசனத்தை நன்னிலையில் வைப்பதற்கு எத்தகைய வேலை தேவை என்பதைத் தீர்மானிப்பார்.

30—6—1932 தேதி, 1385, பா.அ.ஆ.பல.
8—4—1932 தேதி, 782, அ.ஆ.வரு.பல.
6—7—1932 தேதி, 2028 வ.து.க.செ.பலவ.
12—4—1932 தேதி, 1156 வ.து.க.செ.பலவ.

86. அரசாங்க நீர்ப்பாசன வேலைகளின் பாதுகாப்பு—1. கிராம அலுவலர்களுக்கு உதவியாக இருக்கும் பொருட்டு வழி காட்ட வகுக்கப்பட்டுள்ள விதிகள்.

* "இவை ஆற்று வாய்க்கால்கள், அணைக்கட்டுகள், மதகுகள் இவற்றிற்குச் சந்தர்ப்பங்களை அனுசரித்துக் கூடிய வரை பொருந்தும். பொறி இயல் பணித் துறை நேர் பொறுப்பிலுள்ளவற்றிற்கு இவை அவசியமாகப் பொருந்தும் என்பதில்லை."

21—9—1859 தேதி, சு.நி.க.

நீர்ப்பாசனம் வேலைகளின் பாதுகாப்பிற்காக வகுக்கப் பட்டுள்ள விதிகளுக்குக் கிராம அலுவலர்களின் முக்கிய கவனம் ஈர்க்கப்பட வேண்டும்.

(i) எரிக் கரைகளைக் கவனமாய்ப் பார்வையிட்டு, பொந்துகளையும் மற்றச் சிறு சேதங்களையும் வழக்க முறையில் பழுது பார்க்க வேண்டும். (கீழ் வரும் 5 ஆவது பத்தியைக் காண்க.)

(ii) கனத்த மழையின்போது, கரைகளைச் சரிவரக் கவனிக்குமாறும் அபாயங்கள் எவையேனும் தென்பட்டால் உடனே தெரிவிக்குமாறும் கிராம வெட்டி கட்டளையிடப்பட வேண்டும்.

(iii) கிராமத் தலைமை அலுவலரேனும் கிராமத்தின் மற்ற அலுவலர்களேனும் கூடுமான வரை அடிக்கடி ஏரிகளைப் பார்வையிட வேண்டும்.

(iv) உடைப்பு ஏற்படக் கூடும் என்பது தெரிய வருமாறுல் உடனடியாகக் கிராமத்தில் கூலி ஆட்களைத் தருவித்து வேலைக்கு அமர்த்தி அவ்வுடைப்பைத் தடுப்பதற்கு வேண்டிய வழக்கமான முறைகளைக் கையாள வேண்டும்.

(v) பொறி இயல் பணித்துறை அலுவலர்களின் பொறுப்பிலுள்ள ஏரிகளைப் பொறுத்தவரையில், அவற்றின் அபாய நிலையை, அதிக சமீபத்திலுள்ள அத்துறையின் அலுவலர்களுக்கோ அத்துறைச் சார்நிலைப் பணியாளருக்கோ தாமதமின்றி அறிவிக்க வேண்டும்.

(vi) உடைப்பு ஏற்பட்டுவிட்டால் வேலை கரை அமைத்துப் பயிர்களைக் காப்பாற்றுவதற்காக உடனடியாகக் கிராமத்தில் கூலி ஆட்களை வேலைக்கு அமர்த்திக்கொள்ள வேண்டும்.

(vii) மக்கள் செய்யக் கடமைப்பட்ட வேலைகளை நிறைவேற்ற மக்கள் கடமைப்பட்டுள்ளவையும், நிறைவேற்றப் படுதலைக் கட்டாயப்படுத்த வருவாய் துறை அலுவலர்கள் அதிகாரம் பெற்றவையுமான வேலைகள் நீங்கலாகப் பொறி இயல் பணித் துறையின் பொறுப்பிலுள்ள ஏரிகளின் மற்றெல்லா வேலைகளுக்குரிய முழுச் செலவையும் நிர்வாகப் பொறியாளர் கொடுத்தாக வேண்டும்.

21—9—1859 தேதி, க.நி.எ.

(viii) ஆறுகள் வாய்க்கால்களின் கரைகள் இவற்றின் உடைப்புகளை சரிசெய்வதற்கு விலை மதிப்புள்ள நிலத்திலிருந்து மண் எடுக்கப்பட்டால் அதற்கு வருவாய்த் துறை அலுவலர்களால் நிர்மாலிக்கப்படக்கூடிய தொகையை இழப்பு ஈடாக அளிக்க வேண்டும். அவ்வாறு எடுக்கப்பட்ட மண் 1858 ஆம் ஆண்டு I ஆவது சட்டம், 5 ஆவது பிரிவின் கீழ் "பொருள்கள்" என்ற தலைப்பில் வருவதாகக் கருதப்பட வேண்டும்.

—2—1863 தேதி, 664, வ.து.க.செ.

21—3—1917 தேதி. 61 வ.து.க.செ.நிர்.

ர் கடமைகளும் அவர்களின் சார்நிலைப் டமைகளும்.—தாசில்தார்களும் அவர்கள் ளர்களும் மழைக் காலத்திலும் அதற்கு கனவும் பார்வையிட்டுக் கிராம அலுவலர்கள் ட்டுள்ள ஆணைகளை நிறைவேற்றுமாறு வேண்டும். எரிகளின் பாதுகாப்பிற்குத் ரண நடவடிக்கைகள் எடுப்பதில் கவனக் னல் அதைப் பற்றித் தவறாது கோட்ட ஆட்சியாளருக்கு அறிவிப்பதோடு, அத்தகைய சூழ்நிலைகளில் தீர்வை தள்ளிக் கொடுத்ததற்கான கோரிக்கைகள் கவனிக்கப்பட மாட்டா எனவும் விவசாயிகளை எச்சரிக்க வேண்டும்.

21—9—1859 தேதி, க.நி.க.
அ 25—8—1909 தேதி, 2370 அ.ஆ.

3. அரசாங்க ஏரிகளின் கலிங்கல் மீது தற்காலிகமாக அணைகள் கட்டுதல்.—நிறை ஏரி மட்டத்திற்கு உச்சி இருக்கும் ஏரிகளின் சிற்றணைகளின் மேல் அல்லது அதன் முன்னல் கரை கட்டுவது கண்டிப்பாய்த் தடுக்கப்பட்டிருக்கிறது என்றாலும், அரசாங்க ஏரியின் கலிங்கலின் உச்சி மட்டமானது ஏரியின் நிறை மட்டத்திற்குக் குறைந்திருந்தால், கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அக்கலிங்கல் மீது குடியானவர்கள் தற்காலிக அணை கட்டிக்கொள்ளலாம். (1) கலிங்கல்களின் மேலுள்ள அணைக்கற்களுக்கு மத்தியிலுள்ள இடைவெளியை அடைக்கும் பொருள்கள் ஏரிக்கு அபாயம் நேரும்போது எளிதில் நீக்கப்படத் தக்கவையாகவோ நீரின் வேகத்தால் அடித்துச் செல்லத் தக்கவையாகவோ இருப்பதோடு, கட்டப்படும் அணையானது அவ்வேரியின் நிறை நீர் மட்டத்திற்கு 6 அங்குல உயரத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (2) நீர்க்கண்டிகளாலோ அல்லது மற்ற கடை நிலை கிராம அலுவலர்களாலோ அவ்வேரிகள் பருவ மழை கால ஆரம்பத்திலும் மற்ற மழை அல்லது புயல் காலங்களிலும் தினப்பகலாக கவனமுடன் கண்காணிக்கப்பட வேண்டும். (3) ஏரிக்கு அபாயம் விளைவிக்கும் அளவிற்குத் தண்ணீர் மட்டம் உயர்ந்துவிடுமானால் சூழ்நிலைக் கேற்றவாறு அத்தற்காலிக அணை முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியை அப்புறப்படுத்த வேண்டும். (4) அணைக் கற்களுக்கு இடையே தற்காலிகமாக வைக்கப்பட்டுள்ள பொருள்கள் எளிதில் நீக்க முடியாத அல்லது தண்ணீர் வேகத்தினால் அடித்துச் செல்ல முடியாத அளவிற்கு இறுகிவிடாதவாறு இருக்க எல்லாக்

கலிங்கல்களினின்றும் அவ்வணைகளை ஆண்டுக்கொருமுறை அப்புறப்படுத்த வேண்டும். (5) ஏரிகளின் பாதுகாப்பிற்கு அவசியமான எல்லா முன்னேற்பாடுகளும் செய்வதைப் பார்த்துக் கொள்வதற்கு நீர்க்கண்டிகளும் கிராம அலுவலர்களும் பொறுப்பாளர்களாவார்கள்.

12—7—1956 தேதி, 2767 அ. ஆ. வரு. பல.

(ii) தொடர்ச்சியாக உள்ள ஏரிகளிலும் பொதுச் சாலைகளையும் இருப்புப் பாதைகளையும் அடுத்திருக்கும் ஏரிகளிலும், இடைவிடாத காவலுக்கு நிலையான ஏற்பாடு செய்யப்பட்டாலன்றி, மழைக்காலம் வழக்கமாக ஆரம்பிக்கும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னதாகவே கலிங்கல்கள் சுத்தப்படுத்தி வைத்துக்கொள்ளப்பட வற்புறுத்த வேண்டும். இத்தகைய ஏரி ஒவ்வொன்றின் சூழ்நிலையை அனுசரித்துக் கலெக்டர்கள் மாவட்டப் பொறியாளரைக் கலந்து கொண்டு கலிங்களுக்கு அணை கட்டுவதை அனுமதிக்கலாமா என்று தீர்மானித்துத் தகுதியான நிபந்தனைகள் எனத் தமக்குத் தோன்றக்கூடியவற்றை விதிக்கலாம்.

9—7—1877 தேதி, 3182 வ. து. க. செ.

4. ஏரிக் கரைகளின் ஆக்கிரமிப்புகள்.—ஏரியின்கீழ் நிலம் உடையவர்கள் ஏரிக் கரைகளை ஆக்கிரமிப்பதை அனுமதிக்காதிருப்பதில் கலெக்டர்கள் கவனமாக இருக்க வேண்டும். அவ்வாறு விவசாயம் தொடர்ந்து பல ஆண்டுகளாகச் செய்யப்பட்டிருந்து அதனால் ஒரு முக்கிய பாசன வேலையின் பாதுகாப்பிற்கு இடைஞ்சல் இருக்குமானால், ஏரிக்குத் தீங்கு உண்டு பண்ணும் அபாயத்தை அனுமதிப்பதைவிட அந்த நிலத்தையே விலைக்கு வாங்கிவிடுவது அறிவுடைமையாகும்.

27—10—1862 தேதி, 7103, வ. து. க. செ.

5. வழக்க முறை உழைப்பு.—மாவட்டத்தின் ஒவ்வொரு கிராமத்திலுள்ள நீர்ப்பாசன வேலையிலும் 1858 ஆம் ஆண்டு ii ஆவது சட்டம் 6 ஆவது பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட படி வழக்கமுறை உழைப்பு செயலாற்றப்படுவதைக் கவனித்தல் கலெக்டர்களின் கடமை ஆகும். இந்த வழக்க முறை உழைப்பிற்குப் பதிலாகக் கிராமத்தார்கள் ஒரு மேல்வரி செலுத்த ஒப்புக் கொண்டிருந்தாலன்றி, இவ்வுழைப்பு கிராமத்தாரிடமிருந்தோ அவர்கள் செலவிலோ செய்யப் பெற வேண்டும். ஊரில் குடியில்லாத குடியானவர்களைப் பொருத்த மட்டில் அவருக்கோ அவருடைய தலப் பிரதிநிதிக்கோ அவரது வழக்கமுறை உழைப்பைப் பற்றி ஒரு சந்தேகத்துக்கிடமில்லாத

ஒரு வழியில் அறிவுறுத்த வேண்டும். பெரும் பரப்பு உடைமை யுள்ள ஊரில் குடியில்லாத குடியானவர் விஷயத்தில் இது மிக முக்கியம். இவ்வேண்டுகோளைப் பற்றிய அறிவிப்பைத் தமுக்கடிப்பினால் விளம்பரம் செய்வதுடன் கிராமச் சாவடிகளில் தொங்கவிட வேண்டும். வழக்கமுறை உழைப்பை மட்டும் பெற வேண்டுமே தவிர இதற்குரிய தொகை வரம்பு விதிப்பதற்கில்லை. பெரும்பாலான மாவட்டங்களில் அது கீழ்க்கண்டவைகளைக் கொண்டதாக இருக்கும். (1) ஏரிகள் வாய்க்கால்கள் கரைகளில் மழையாலோ அல்லது கால்நடைகள் முதலியவற்றின் நடமாட்டத்தாலோ உண்டாகும் பொந்துகளையோ அல்லது மேடு பள்ளங்களையோ நிரப்பிச் சரி செய்தல். (2) கரைகளில் சப்பாத்திக் கள்ளியோ அல்லது அதைப்போன்ற இனத்தைச் சேர்ந்த மற்றவையோ கெடுதி செய்யக்கூடிய ஏனைய செடிகளையோ வளர விடாமல் தடுத்தல். (3) நீங்கு தருபவை என்று நிர்வாகப் பொறியாளர்கள் கருதக்கூடிய மரம் செடி கொடிகளை ஏரிக் கரைகளிலிருந்து களைதல். (4) புலங்களுக்கு நீர் ஓடிப் பாய்வதற்குத் தேவையான இடைவெளி விடும் அளவில் ஏரிகளின் மதகுகளிலும் ஆற்று வாய்க்கால்களிலும் ஊற்று வாய்க்கால் களிலும் படிந்திருப்பனவற்றை அப்புறப்படுத்துதல். (5) சிறிய வாய்க்கால்களிலும், கிளை வாய்க்கால்களிலும் சரிந்து விழும் மண்ணை அப்புறப்படுத்திப் பழுது பார்த்தல், ஏரிகளிலிருந்து போகும் வாய்க்கால்களில் புலங்களுக்குச் செல்லும் நீர் ஓட்டத்தைத் தடுக்கும் குவியல்களைக் களைதல். (6) தரை வழக்கத்தில் எற்கப்பட்டிருக்கும் அளவிற்கு ஏரியின் வரத்து வாய்க்கால்களை நன்னிலையில் வைத்திருத்தல். (7) எல்லா ஏரிக் கரைகளையும் மழைக் காலங்களில் கவனித்தல்; அலையின் செயலால் ஒழுகும் கரைகளின் பாகங்களுக்குப் புல் திட்டு பதித்தல். "களிங்கல்களைத் திறத்தலும் மூடுதலும்; பொதுவாக உடைப்புகளையும், விபத்துக்களையும் தடுக்கும் பொருட்டு இதுபோன்ற வேறு சிறு கடமைகள் செய்தல்." (8) உடைப்புக் களில் வலை அணைகள் கட்டுதல்; விவசாயக் காலங்களில் தேவையான இடங்களில் ஏரிக்கரைகளைத் தற்காலிகமாகப் பலப்படுத்துதல். பொதுவாக அரசினரும் குடிகளும் அக்கறை கொண்டுள்ள நீர்ப்பாசன வேலைகளில் சமயத்தில் தடுக்காமல் போனால் பேரிழப்பையும் செலவையும் உண்டாக்கக் கூடிய சிறு தேதங்கள் நேரிடாமல் தலத்துக் குடிகளால் மட்டுமே செயல்படுத்தக் கூடிய இடைவிடாத கவனிப்பு.

9—8—1929 தேதி, 1705 அ. ஆ. வரு.
2—9—1929 தேதி, 2622 வ. து. க. செ. பலவ.

குடி மராமத்தை விவசாயிகள் ஆண்டுதோறும் ஒழுங்காகச் I ஆவது இணைப்பில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. செய்வதை உறுதிப்படுத்துவது பற்றி விரிவான அறிவுரைகள் இவ்வறிவுரைகள் சரியாக பின்பற்றப்படுகின்றனவா என்று கவனிக்கும் கடமை கலெக்டர்களையும் கோட்ட ஆட்சியாளர் களையும் சார்ந்தது.

12—7—1956 தேதி, 2767 அ.ஆ.வரு.பல.

கவனக் குறைவு தொடர்ந்து இருந்தவற்றில் வழக்க முறையில் உழைப்பினால் செய்யப்பட வேண்டியவை நிறைவேற்றப்பட கட்டாயப்படுத்துதலில் வருவாய்த் துறை அலுவலர்களும் தவறிவிட்ட காரணமாக நீர்ப்பாசன வேலையின் அவசியமான மராமத்துக்களுக்குக் கணிசமான செலவும் உழைப்பும் தேவையாகுமானால் அவற்றிற்குப் பொறி இயல் பணித் துறை நிதிகளிலிருந்தோ அல்லது சிறு பாசன நிதிகளிலிருந்தோ உதவித் தொகை அளிக்கலாம். ஆனால் அவற்றிற்கு வருவாய்த் துறைக் கழகத்திற்கும், அரசினருக்கும் ஆணைக்காக மேல் அனுப்ப வேண்டும்.

ஒரு பாசனத்தின் கீழோ அல்லது ஒரு இடத்திலோ குடி மராமத்து வேலைகளை நிறைவேற்ற ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டிருந்தால் அவ்வேலைகள் ஒழுங்காகவும் முறையாகவும் செய்யப்படுகின்றனவா என்று கவனித்துப் பார்த்தல் அதன் கடமையாகும். குடிமராமத்து வேலைகள் நிறைவேற்றப்படுவதற்காக ஒரு கூட்டுறவுச் சங்கம் நிறுவப் பட்டிருப்பது அவ்வேலைகள் முறைப்படி செய்யப்படுகின்றனவா என்று பார்க்கும் பொறுப்பிலிருந்து வருவாய்த் துறை அலுவலர்களை விடுவிக்காது. குடிமராமத்து வேலையில் எந்த இனமாவது நிறைவேற்றப்படவில்லை எனக் கண்டபோது தாசில்தார் அதைச் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கத்திற்கு அறிவிக்க வேண்டும். அதே சமயம், அச்சங்கத்தின் உறுப்பினரல்லாத, ஆனால் அத்தகைய மராமத்து வேலைகளுக்காகத் தங்கள் பங்குத் தொகையைச் செலுத்த வழக்கமாய்க் கடமைப்பட்டிருக்கும் இதர குடிகளுக்கு தாசில்தார் ஆணையின்கீழ், அல்லது மற்ற உயர்நிலை வருவாய்த் துறை அலுவலரின் ஆணையின் கீழ், கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாக இருக்கும் குடிகளோடு, தமது பங்கைச் செலுத்த அவர்களுக்கு, 1858 ஆம் ஆண்டு ஆவது சட்டத்தின்

6 ஆவது பிரிவின் கீழ் ஒரு அறிக்கை மூலம் வேலையைத் தொடங்குமுன் வாய்ப்பளிக்க வேண்டும். அவர்கள் அவ்வாறு செய்யத் தவறினால் அதே பிரிவின் கீழ் அவர்களின் பங்குத் தொகையை விதித்து, வசூலிக்கப்பட்ட தொகையை, அவ்வேலையைத் தாசில்தாரின் அறிவிப்பினை அனுசரித்து கூட்டுறவுச் சங்கம் செய்திருந்தால், அச்சங்கத்திற்குக் கொடுக்க வேண்டும். கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடமிருந்து வர வேண்டிய பணத்தை, அவசியமானால், 1932 ஆம் ஆண்டு சென்னை ஆவது கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் 51 ஆவது பிரிவின் கீழும், அதன்கீழ் வகுக்கப்பட்ட ஆவது விதியின் கீழும் வசூலிக்க வேண்டும். தாசில்தார் தாம் அளித்த நியாயமான கால அளவுக்குள் கூட்டுறவுச் சங்கம் அவ்வேலையை எடுத்துக்கொள்ளத் தவறினாலோ அல்லது புறக்கணித்தாலோ 1858 ஆம் ஆண்டு ஆவது சட்டம் 6 ஆவது பிரிவின் கீழ் மேலே குறிக்கப்பட்ட சங்க உறுப்பினர் அல்லாத குடிகளுக்கு வாய்ப்பளித்தது போல் தமது பங்கைச் செலுத்துமாறு இச்சங்க உறுப்பினர்களுக்கும் அறிக்கை மூலம் வாய்ப்பளிக்க அறிவிக்க வேண்டியது அவரது கடமையாகும். அவ்வாறு செலுத்த அவ்வுறுப்பினர்கள் தவறிவிடுவார்களெனில், அவர்களது பங்குத் தொகையை அதே சட்டப் பிரிவின் கீழ் விதித்து, வசூலித்து, கூட்டுறவுச் சங்க உறுப்பினரல்லாத குடிகளிடமிருந்து வசூலித்த தொகையுடன் இத்தொகையையும் சேர்த்து அரசினரால் செய்து முடிக்கப்பட்ட குடிமராமத்து வேலைச் செலவுகளுக்குச் சாதாரணமாக வரவு வைக்க வேண்டும்.

12—7—1956 தேதி. 2767 அ.ஆ. வரு.பல.

1858 ஆம் ஆண்டு I ஆவது சட்டத்தின் 6 ஆவது பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட தண்டனைத் தொகைகளை அப்பிரிவின் கடைசிப் பத்தியை அனுசரித்து வேலை செய்து கொடுக்கத் தவறினவர்களது கிராமத்திலுள்ளவர்கள் பொது நலனுக்காக நிறைவேற்றப்பட்ட பாசனம் அல்லது வடிகால் வேலைகளின் செலவுகளுக்குப் பயன்படுத்த வேண்டும். ஆனாலும் அவ்வேற்பாட்டின் கீழ் ஒவ்வொரு வேலைக்கும் விதிக்கப்பட்ட தண்டனைத் தொகைக் கணக்கைத் தனித்தனியே எழுதி வைத்துவர வேண்டியதில்லை. II ஆவது இணைப்பில் உள்ள படிவத்தில் பதிவேடு ஒன்று எழுதி வைத்து அதில் 6 ஆவது பிரிவின் கீழ் செலுத்தப்பட்ட அல்லது வசூலிக்கப்பட்ட எல்லாத் தொகைகளையும் பதிவு செய்ய வேண்டும். அப்பதிவுகள் வேலைக் கிரமப்படி இராமல் கிராம வரிசையில் இருக்க வேண்டும்.

இத்தொகைகளை வேலை செய்து கொடுக்கத் தவறினவர்களின் இராம நன்மைக்கென நிறைவேற்றப்படும் எந்தப் பாசன அல்லது வடிகால் வேலைகளுக்கும் செலவிடலாம். அப்பதிவேட்டை அழித்துவிடாமல் நிலையாகத் தாலூகா அலுவலகத்தில் வைத்திருக்க வேண்டும்.

6—4—1961 தேதி 1778 வ.து.க.செ.
(அ) 2—9—1922 தேதி 1614 அ.ஆ. வரு.பலவ.
(ஆ) 6—12—1927 தேதி 2534, அ.ஆ. வரு.
(இ) 24—9—1928 தேதி, 2204, அ.ஆ.வரு.பலவ.
(ஈ) 26—3—1928 தேதி 657, அ.ஆ.வரு.பலவ.
(ஈ) 22—5—1928 தேதி, 42, வ.து.க.செ.
(உ) 12—5—1928 தேதி, 1046 அ.ஆ. வரு.பலவ.
(ஊ) 17—10—1929 தேதி, 2131, அ.ஆ.வரு.பலவ.
2—8—1862 தேதி, 5024, வ.து.க.செ.
(அ) 2—9—1922 தேதி, 1827, வ.து.க.செ. பலவ.
(ஆ) 20—12—1927 தேதி, 100, வ.து.க.செ.
(இ) 1—10—1928 தேதி, 3257, வ.து.க.செ.பலவ.
(ஈ) 9—5—1928 தேதி, 1023, அ.ஆ.வரு.பலவ.
(உ) 25—5—1928 தேதி, 1685 வ.து.க.செ.பலவ.
(ஊ) 22—10—1929 தேதி 3193, வ.து.க.செ. பலவ.
12—7—1956 தேதி, 2767, அ.ஆ.வரு.பல.

6. ஏரி அல்லது வாய்க்கால் கரைகளிலுள்ள சப்பாத்திகளை அப்புறப்படுத்துதல்.—நீர்ப்பாசன வேலைகளிலிருக்கும் சப்பாத்திகளை அப்புறப்படுத்துதல் அவசியமானால், அவ்வேலையின் முழுச் செலவுமே குடியானவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமா அல்லது செய்ய வேண்டிய வேலை அளவை உத்தேசித்து, அது முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியை அரசாங்கச் செலவில் செய்ய வேண்டுமா என்பதை அவ்வேலைகள் பொறி இயல் பணித் துறையின் பொறுப்பிலிருக்குமானால் பொறி இயல் பணித் துறை அதிகாரிகளும் வருவாய்த் துறை அலுவலர்கள் பொறுப்பில் இருக்குமானால் வருவாய்த் துறை அதிகாரிகளும் முதலில் முடிவு செய்ய வேண்டும். அப்புறப்படுத்துவது முழுதுமோ அல்லது ஒரு பகுதியோ குடிகளால் செய்யப்பட வேண்டுமானால், அவ்வேலையைச் செய்யுமாறு அவர்களைத் தாசில்தார் அல்லது மேல்நிலை வருவாய்த் துறை அலுவலர் கேட்க வேண்டும். அவர்கள் அதைச் செய்யத் தவறினால் முதலில் அரசாங்கச் செலவில் அவ்வேலையைச் செய்து பின்னர் அச்செலவையும் அதற்கு மேற்படாத ஒரு தண்டத் தொகையையும் சேர்த்து சம்பந்தப்பட்ட குடிகளிடமிருந்து

வருவாய்த் துறையினர் வசூலிக்க வேண்டும். அரசாங்கச் செலவில் அல்லது குடிகளினுல் நவறுதலினுல் தொடக்கத்தில் அரசாங்கச் செலவில் செய்யப்பட வேண்டியதான சுத்தப்படுத்தும் வேலையைச் செய்வதற்கு வருவாய்த் துறை அல்லது பொறி இயல் பணித் துறை இவற்றில் எத்துறைக்கு வசதி மிகுதியாக உள்ளதோ அத்துறை தக்கவாறு அவ்வேலையைச் செய்ய வேண்டும். வருவாய்த் துறை அலுவலர்கள் பொறி இயல் பணித் துறையின் பொறுப்பிலுள்ள பாசன வேலைகளைச் சுத்தப்படுத்தி செய்வார்களெனில் அதற்கு வேண்டிய நிதியைப் பொறி இயல் பணித் துறை அளிக்க வேண்டும். அரசினரே தங்கள் பணியாளர்களைக் கொண்டு வேலையைச் செய்து முடிப்பதற்கு வசதி இருப்பதாகக் கருதுவார்கள் எனில் குடிகள் செய்ய வேண்டிய வேலைக்குப் பதிலாக அதற்குரிய பங்குத் தொகையைக் குடிகள் செலுத்துவதில் ஆட்சேபணை ஒன்றுமில்லை. முதல் முறை இவ்வாறு அரசாங்கச் செலவில் சுத்தப்படுத்திய பிறகு பின்னர் செய்யப்பட வேண்டிய சுத்தப்படுத்தல் எல்லாம் குடியானவர்கள் தமது சொந்தச் செலவிலேயே செய்து கொள்ள வேண்டும். ஏரிகளையும் பாசன வாய்க்கால்களையும் மராமத்து செய்வதிலும் ஆழப்படுத்துவதிலும் அரசினர் செலவிடுவதற்கு முன்னர் சாதாரணமாக அவ்வேரிக்கரைகளிலும் பாசன வாய்க்கால்களிலும் படர்ந்து கிடக்கும் சப்பாத்திகளை எடுத்தெறியுமாறு குடியானவர்களை நியாயமாக வற்புறுத்தலாம்.

11—4—1893, தேதி, 172, வ.து.க.செ.
18—5—1893 தேதி, 259, வ.து.க.செ.
(அ) 7—7—1893 தேதி, 188, வ.து.க.செ. நீர்.

7. **நீர்ப்பரப்பின் ஓரங்களில் மரங்கள் நடுதல்.**—ஏரிகளின் நீர்ப்பரப்பின் வெளி ஓரங்களில் "கருவேல்" போன்ற மரங்களையும் கூரைவேயும் புற்களையும் எருமைகளுக்கும் காவைப் பசுக்களுக்கும் தீவனமாகும் "தண்டன் குட்டை" என்று தமிழிலும் "கண்ட்ர கட்டி" என்று தெலுங்கிலும் சொல்லப்பட்டு வரும் புற்களையும் முன் அனுமதி பெற்று தலக்குடிகளாயினும் வனத்துறையினராலும் பயிராக்கலாம். நிலத்தை யாருக்கும் ஒப்படைக்கக் கூடாது. அந்நிலத்திலிருந்தோ மரங்களிலிருந்தோ எத்தகைய வருவாயையும் விதிக்கக்கூடாது. ஆனல் அரசாங்கம் வைத்து வளர்த்த மரங்களிலிருந்து கிடைக்கக் கூடிய வருவாயை "வனங்கள்" என்ற தலைப்பின் கீழ் வரவு வைக்க வேண்டும்.

8. ஏரி உள்வாயில் சமுதாயத்திற்குரிய தனிச் சலுகைகள்.— ஏரியில் தண்ணீர் இல்லாதபோது அதன் உள்வாய் உட்பட மேய்ச்சல் தரைகளில் கிராமத்தார்களின் சமுதாயத் தனி உரிமைகள் அக்கரையுடன் பாதுகாக்கப்பட்டு வாவேண்டியது மிகவும் முக்கியமானதாகும். ஏரியின் நீர்ப்பரப்பிலுள்ள நிலத்தில் தனிப்பட்டவர்களின் உரிமைகள் எற்படக்கூடும் எண்ணுமளவிற்கு எடுத்துக் கொள்ளப்படும் எத்தகைய நடவடிக்கையும் கவனத்துடன் தவிர்க்கப்பட வேண்டும்.

17—8—1869 தேநி, 6104, வ.து.க.செ.
(அ) —8—1928, தேநி, 1738, அ.ஆ. வரு.
21—9—1869 தேநி, க.நி.க.
11—1—1933 தேநி, 121 வ.து.க.செ.பல.

9. இருப்புப் பாதைகளைப் பாதிக்கக் கூடிய நீர்ப்பாசன வேலைகளை பார்வையிடுதல்.—இருப்புப் பாதைகளைப் பாதிக்கக் கூடிய பாசன வேலைகள் கீழ்க்காணும் பிரிவுகளில் அடங்கும் :—

(i) பொறி இயல் பணித் துறையின் பொறுப்பிலுள்ள ஏரிகள் ;

(ii) வருவாய்த் துறையின் பொறுப்பிலுள்ள ஏரிகள் ;

12—7—1956 தேநி, 2767. அ.ஆ.வரு.பல.

(i) இருப்புப் பாதைகளுக்கு இணையாக ஓடும் கரைகளையுடைய வாய்க்கால்கள் ;

(iv) இருப்புப் பாதைகளைக் கடந்து செல்லும் கரைகளையுடைய வாய்க்கால்கள்.

மேலே, vi ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ளவற்றைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய வெள்ளத்தின்போது தண்ணீர் அதிகமாகத் தேங்கி எதிர்க்காதவாறு போதுமான தண்ணீர்ப் போக்குகளை இருப்புப் பாதை அலுவலர்கள் அமைக்க வேண்டும். 85 ஆவது நில ஆணை 4 ஆவது பத்தியில் குறிக்கப்பட்டுள்ள சொந்த ஏரிகளைப் பார்வையிடுவது போல் பொறி இயல் பணித் துறை அலுவலர்கள் தமது துறையின பொறுப்பிலுள்ளவையான இருப்புப் பாதையைப் பாதிக்கும் எல்லா ஏரிகளையும் இருப்புப் பாதைகளுக்கு இணையாக ஓடும் தண்ணீர்ப் போக்குகளின் கரைகளையும் பார்வையிடுவார்கள். வருவாய்த் துறையின் பொறுப்பிலுள்ளவையான இருப்புப்

பாதையைப் பாதிக்கக் கூடிய ஏரிகளைச் சிறு பாசன அலுவலர் பார்வையிடுவார்கள். கலெக்டர்கள் தம் பொறுப்பிலுள்ள அத்தகைய ஏரிகளைப் பற்றி ஆண்டறிக்கை ஒன்று சிறு பாசன அலுவலர் அறிக்கைகளின் அடிப்படையில் தயாரித்து இருப்புப் பாதை ஆட்சியினருக்கு அனுப்ப வேண்டும். அந்த அறிக்கை III ஆவது இணைப்பில் உள்ள படிவத்தில் இருக்க வேண்டும். அந்த அறிக்கை அனுப்ப வேண்டிய தேதிகளைக் கலெக்டர்கள் சம்பந்தப்பட்ட இருப்புப் பாதை நிர்வாகத்தின் ஆட்சித் தலைமைப் பொறியாளரைக் கலந்து முடிவு செய்து கொள்ள வேண்டும்.

8—4—1932 தேதி, 782, அ.ஆ. வரு.பலவ.
12—4—1932 தேதி, 1156, வ.து.க.செ.பலவ.
12—7—1956 தேதி, 2767 தேதி, அ.ஆ. வரு.பலவ.

87. சிறு பாசன வேலைகளைப் பராமரித்தல்.—தனிப்பட்ட காரணங்களுக்காகப் பொதுப் இயல் துறையின் பொறுப்பில் விட்டு வைக்கப்பட்டவை தவிர, 200 ஏக்கர்களுக்குக் குறைந்த பாசனமுள்ள எல்லாச் சிறு பாசனங்களையும், பராமரித்துவரும் பொறுப்பு கலெக்டர்களைச் சார்ந்தது. அத்தகைய பாசனங்களைப் பராமரிப்பதில் கீழ்க்காணும் விதிகள் அனுசரிக்கப்பட வேண்டும்.

15—5—1880 தேதி, 284, அ.ஆ. பாச.

I பொது.

(i) சிறு பாசனங்களின் பட்டியல்.—தமது பொறுப்பைச் சரிவர நிறைவேற்றும் பொருட்டு கலெக்டர்கள் வருவாய்த் துறையின் பொறுப்பிலுள்ள சிறு பாசனங்களின் முழுப் பட்டியல் ஒன்று வைத்திருக்க வேண்டும். அது VI ஆவது இணைப்பில் உள்ள படிவத்தில் அச்சிடப்பட வேண்டும். அதைத் தயாரிப்பதில் அதனடியில் கொடுத்திருக்கும் அறிவுரைகளைக் கவனிக்க வேண்டும். அவ்வப்போது வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டின் கீழ்ப் புதிதாகக் கொண்டு வரப்படும் பாசனங்களை அப்பட்டியலில் சேர்த்து, அதைச் சரியாக நாளது தேதிவரை

சரியாக எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டிலிருந்து ஒரு பாசன ஆதாரம் விலக்கப் பட்டால், அப்பட்டியலில் குறிப்புரைக் கட்டத்தில் எழுத வேண்டும். அப்பட்டியல், V ஆவது இணைப்பில் இதுபற்றியதோர் குறிப்பை அதற்குரிய ஆணை விவரங்களுடன் கொடுக்கப்பட்டுள்ள சிறு பாசன ஆதாரங்களின் நிலைப் பேரேட்டிற்கு ஒரு அட்டவணையாகப் பயன்படும்.

(ii) சிறு பாசன ஆதாரங்களின் நிலைப் பேரேடு.— மாவட்டத்தில் சிறு பாசன வேலைகளைத் திறமையுடன் பராமரிக்கும் பொருட்டு அப்பாசனங்களின் நிலைப் பேரேடு ஒன்று VI ஆவது இணைப்பில் உள்ள படிவத்தில் கலெக்டர் வைத்திருக்க வேண்டும். அதில் பணம் செலவழிக்கப்படும் ஒவ்வொரு பாசனத்துக்கும் ஒப்பளிக்கப்பட்ட செலவு முதலிய விவரங்களைக் குறிக்க வேண்டும். அந்த நிலைப் பேரேட்டின் நோக்கமாவது ஒவ்வொரு பாசனத்தின் பராமரிப்பு பற்றிய வரலாற்றை ஒரு பார்வையில் தெரிந்துகொள்ளுமாறு காட்டுவதேயாகும். அப்பேரேடு மாவட்டத்திலுள்ள சிறு பாசன ஆதாரங்களின் பராமரிப்பிற்கு மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் விவரங்களைப் பற்றிய நிலையான பதிவேடாகும். இந்த நிலைப் பேரேட்டைத் தயாரித்துச் சரிவர வைத்திருக்கும் முறை பற்றிய விளக்கமான அறிவுரைகள் ஆவது இணைப்பின் கீழ்க் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவை கவனமாகப் பின்பற்றப்பட வேண்டும்.

ஒரு பாசன ஆதாரத்தின் பராமரிப்பிற்காக மதிப்புப் பட்டி கலெக்டருக்கு மேலனுப்பப்படும்போது தகாத அளவில் அடிக்கடியோ அல்லது தகாத அளவு செலவிலோ பராமரிப்புகள் செய்யப்பட்டு வருகின்றனவா என்பதையும் பட்டியை ஒப்பளிப்பதற்கு முன்னதாக மேற்கொண்டும் விசாரணை செய்ய வேண்டுமா என்பதையும் பேரேட்டிலிருந்து ஒரு பார்வையில் கலெக்டர் அறிந்துகொள்ள முடியும். மதிப்பு ஒப்பளிக்கப் பட்டவுடன் பேரேட்டின் (1) முதல் (3) வரையுள்ள கட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்ட வேண்டும். கீழுள்ள (vi) ஆவது உட்பிரிவின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டதும் பேரேட்டின் 4 ஆவது கட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். மற்றக் கட்டங்கள் ஒவ்வோராண்டிலும் அவ்வாண்டில் செலவான தொகை தெரிந்தவுடனேயே பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

(iii) வருவாய்த் துறையின் கடமைகளும் பொறுப்புகளும்.—(அ) சிறு பணியாளர்கள் செய்து முடிக்க வேண்டிய வேலைகள்.—1858 ஆம் ஆண்டு ஆவது சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்குட் பட்டுத் தமது பொறுப்பிலுள்ள பாசன வேலைகள் அனைத்தும் சீர் கேடுறுத வகையில் இருக்குமாறு முன் நடவடிக்கை எடுத்து, அவற்றை நியாயமான நன்னிலையில் வைத்திருப்பது வருவாய்த் துறையின் கடமையாகும். தனிப்பட்ட தொழில் நுட்பத் திறமையுடன் வருவாய்த் துறை மேற்பார்வை செய்து நிறைவேற்ற இயலாத அவ்வளவு அரியனவாக உள்ள வேலைகள் தவிர, குடியானவர்களால் குடிமராமத்து முறையில் செய்யப் படாத அவசியமான வேலைகளெல்லாம் சிறு பாசனப் பணியாளர்களால் செய்து முடிக்கப்பட வேண்டும். கட்டட வேலைகளையும் மண் வேலைகளையும் மராமத்து செய்வதும், சேதமடைந்த வேலைகளைப் புதிதாய்க் கட்டுவதும், வருவாய்த் துறை சிறுபாசன வேலைகளின் பராமரிப்பில் அடங்கிய முக்கியமான வேலைகள் ஆகும். புதிய மதகுகள் இல்லாமல் மராமத்துக்கள் செய்வது பயன்படாது என்று கருதப்படும்போது பொறி இயல் பணித் துறை கொடுத்திருக்கும் தரப்படுத்தப்பட்ட அமைப்புப் படங்களை அனுசரித்துப் புதிய மதகுகள் கட்டுவதற்கு வருவாய்த் துறைக்கு அதிகாரமுண்டு. இதுபோலவே சிறுபாசன வேலைகளுக்கு இதர மேம்பாடுகளையும் செய்யலாம். அச்சமயங்களிலெல்லாம் புதிய வேலைகளின் விவரங்களையும் அவசியத்தையும் சம்பந்தப்பட்டிருக்கும் வருமானத்தையும் முழுமையான விளக்கங்கள் மதிப்புப் பட்டியல்களைத் தொடரும் அறிக்கைகளில் கொடுக்கப்பட வேண்டும். மிகச் சீர்கேடுற்ற நிலையிலிருக்கும் பாசன வேலைகளை மராமத்து செய்வதற்கும் அல்லது வெள்ளத்தில் அடிபட்டுச் சேதமடைந்தவற்றைப் புதுப்பிப்பதற்குமான மதிப்புப் பட்டிகளை ஒப்புவிக்கு முன்னர் கவனமான பரிசீலிப்பு தேவை. அவற்றிற்கு ஒப்புவிப்பு செய்வதும் ஒப்புவிப்பு மறுப்பதும் அவற்றிற்கு ஏற்படும் மூலதனச் செலவையும் அதிலிருந்து வரக்கூடும் வருமானத்தையும் பெரும்பாலும் பொறுத்திருக்கும். முதலீட்டையும் வருவாயையும் கவனிக்கும்போது வெவ்வேறு தாலுகாக்களுக்குரிய பாசனப் பராமரிப்பை உத்தேசித்து நீர்ப்பாசனங்களுக்கு ஏற்படும் மூலதனத்தை அனுசரித்து இடைக்க வேண்டிய நிட்ட அளவு சதவீத வருமானத்தைக் கருத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நிதித் தன்மையில் நியாயமற்ற எச்செலவையும் சரியென்று நிரூபிக்க மிகவும் அழுத்தமான காரணங்கள் இருக்க வேண்டியது அவசியம்.

யாதொரு சிறுபாசன வேலையின் மேம்பாடு அல்லது மராமத்திற்குச் சம்பந்தப்பட்ட மதிப்புப் பட்டிகளை ஆய்ந்து பார்க்கும்போது அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட விவசாயிகளிடமிருந்து அம்மேம்பாடு அல்லது மராமத்திற்கு பங்குத் தொகை கேட்பதற்குள்ள வாய்ப்பைக் கலெக்டர்கள் மனத்தில் வைத்துக் கொள்வதோடு, உத்தேசித்திருக்கும் வேலைகளில் சிலவற்றின் அல்லது எல்லா இனங்களின் செலவின் யாதொரு பாகத்தை ஆயக்கட்டு உரிமையாளர்களிடமிருந்து வசூலிப்பதைப் பற்றித் தீர்மானிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் உதவித் தொகை கேட்பது அவசியமில்லை : ஆனால் அது கலெக்டர்களின் யுக்தத்திற்கு விடப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றிலும் அதன் சூழ்நிலைகளை முன்னிட்டு உதவித் தொகை பெறுமல் நிறைவேற்றுவது நியாயமன்று எனவும் அவசியமில்லை எனவும் கருதும் அளவிற்கு அதன் மதிப்புப் பட்டியலில் உள்ள செலவுத் தொகை உண்மையாகவே மிக அதிகமாக உள்ளதா என்பதை ஆராய்வதே வழிப்படுத்தும் கொள்கையாக இருக்க வேண்டும்.

ஏதாவது பங்குத் தொகை பெற வேண்டுமா என்பதும் எவ்வளவு பெற வேண்டும் என்பதும் கலெக்டர் முடிவு செய்வதற்கு ஏற்றவாறு மதிப்புப் பட்டியுடன் அனுப்பும் அறிக்கையில் அதற்குச் சம்பந்தப்பட்ட எல்லா விவரங்களையும் கொடுக்க வேண்டும். விவசாயிகள் ஆண்டுதோறும் குடி மராமத்து வேலைக்குச் செய்யும் செலவு அவர்களுக்கு மீதமாகும் என்பது அல்லது நிதித் தரையில், உதவித் தொகையின்றிச் செலவை மேற்கொள்வது நியாயமாகாது என்பது போன்ற காரணத்திற்காக பங்குத் தொகை நியாயமாகக் கேட்கப்படலாமென்று கலெக்டர் முடிவு செய்தால், தாம் வரப் பெற்ற விவரமான அறிக்கையின் அடிப்படையில் அத்தொகையை நிர்ணயித்து ஆயக்கட்டு உரிமையாளர்களிடம் காரணங்களை முற்றிலும் விளக்கிக் கூறி, அவர்களை அப்பணம் முழுவதையும் முன் பணமாகச் செலுத்தலாமோ அல்லது தாம் குறிப்பிடும் காலத்திற்குள் அல்லது தவணைகளில் அத்தொகையைச் செலுத்துவதற்கு வேண்டிய உடன்படிக்கை ஒன்றை எழுதித் தருமாறு அவர்களைக் கலெக்டர் கேட்க வேண்டும்.

9—9—1939 தேதி, 2337 அ.ஆ. வரு.பல.
30—3—1940 தேதி, 33, வ.து.க.செ.அச்சு.

ஒரு மாவட்டத்தின் எரி புதுப்பிக்கும் திட்டக் குழுவினர் அப்பணியில் ஈடுபட்டிருந்தால் அவர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும் எல்லைக்குள் உள்ள சிறு பாசனங்களுக்கு எரி

புதுப்பிக்கும் திட்ட மதிப்புப் பட்டிகள் வரப்பெறுவதற்குள் தேவையான அவசர மராமத்துகளை மாத்திரம் செய்வதோடு சிறு பாசனப் பணியாளர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு மராமத்து மதிப்புப் பட்டியும் ஏரி புதுப்பிக்கும் திட்ட நிர்வாகப் பொறியாளருக்கு அல்லது வட்ட மேற்பார்வைப் பொறியாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

10 ஏக்கர் பரப்பும் அதற்குக் குறைந்த பரப்பிற்குப் பாசன ஆதாரமான ஏரி மராமத்து செய்யப்படுவதற்கு இருந்த தடை நீக்கப்பட்டிருக்கிறது.

மேற்பார்வைப் பொறியாளர்களும் நிர்வாகப் பொறியாளர் களும் தம் தொழில் நுட்ப அறிவுரையும் உதவியும் வருவாய்த் துறை அலுவலர்களுக்குத் தேவையாகயிருக்கும்போது கொடுத்துதவ வேண்டும்.

26—8—1933 தேதி, 1529, அ.ஆ. வரு.பல.
15—9—1933, தேதி, 85, வ.து.க.செ.

(ஆ) ஒ பொறி இயல் பணித் துறை நிறைவேற்ற வேண்டிய வேலைகள்.—வருவாய்த் துறை நிறைவேற்ற முடியாதெனக் கலெக்டர் கருதக்கூடியவையான தனித் தொழில் நுட்ப அறிவும் மேற்பார்வையும் தேவையாகவுள்ள பாசன வேலைகள் பொறி இயல் பணித் துறையினரால் அத்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து அத்துறையில் நிறைவேற்றப்படும். பொறி இயல் பணித் துறை வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தேவையான, ஒதுக்கி வைக்கப்படுவதற்கு, கலெக்டர்கள் அத்தகைய வேலைகளைப் பற்றித் தக்க காலத்தில் நிர்வாகப் பொறியாளருக்கு அறிவிக்க வேண்டும்.

(இ) ஆலை, ஏரி புதுப்பிக்கும் திட்டக் குழுவினர் நிறைவேற்ற வேண்டிய வேலைகள்.—கைவிடப்பட்ட பாசனங்களைப் புதுப்பிப்பதற்காகவும் பதிய பாசன வேலைகளைக் கட்டுவதற்காகவுமான திட்டங்களில் விவரமான விசாரணை சாதாரணமாக ஏரி புதுப்பிக்கும் திட்டக் குழுவினரால் அல்லது வழக்கமாகவுள்ள பொறி இயல் பணித் துறைக் கோட்டத்தினரால் செய்யப்படும். ஆனால் கலெக்டர்கள் அது சம்பந்தமாக ஏற்படும் எத்தகைய துவக்க ஆய்வு வேலைக்கும் சிறு பாசனப் பணியாளரைத் தாராளமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அவர்கள் தம் பார்வைக்கு வரும் புதிய பாசன வேலைகள், மேம்பாடுகள் செய்யப்பட வேண்டிய பழைய பாசன வேலைகள் ஆகிய இவற்றின் திட்டங்களின் பட்டியல் ஒன்றை வைத்து வருவதுடன் தேவையான யாதொரு துவக்க ஆய்வு வேலையைச் சிறு பாசனப் பணியாளர்களைக் கொண்டு செய்து கொண்டு பின்னர் நம்பிக்கை அளிக்கும் திட்டங்களை விசாரணை செய்யப்பட நிர்வாகப் பொறியாளரின் ஆய்வுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வருவாய்த் துறையின் பொறுப்பிலிருப்பவையான ஏரி புதுப்பிக்கும் திட்ட வேலைகளுக்குச் சம்பந்தப்பட்ட எல்லா மதிப்புப் பட்டிகளுக்குச் சம்பந்தப்பட்ட வேலைகளில் யாதாவது ஒன்றில் தனித் தொழில் நுட்ப அறிவு தேவையென்பதற்காகப் பொறி இயல் பணித் துறையினர் நிறைவேற்ற வேண்டுமென்றும் கலெக்டர் கருதினாலன்றி அவை சிறு பாசனப் பணியாளர்களால் நிறைவேற்றப்பட வேண்டும்.

(அ) 31—3—1928 தேதி, 753, வி.ஆ. வரு.
(ஆ) 16—11—1927 தேதி, 2314, அ.ஆ. வரு.பலவ.
(இ) 27—11—1928 தேதி, 2769, அ.ஆ. வரு.பலவ.
(ஈ) 17—10—1923 தேதி, 1560, அ.ஆ. வரு.பலவ.
(உ) 27—4—1928 தேதி, 917, அ.ஆ. வரு.பலவ.
(அ) 19—4—1928 தேதி, 31, வ.து.க.செ.
(ஆ) 19—12—1927 தேதி, 97, வ.து.க.செ.
(இ) 3—12—1928 தேதி, 4071, வ.து.க.செ.பலவ.
(ஈ) 20—10—1923 தேதி, 75, வ.து.க.செ.
(உ) 1—5—1928 தேதி, 1438, வ.து.க.செ. பலவ.

(ஈ) தனிப்பட்டோர் பாசன வேலைகள்.—தனிப்பட்டோர் பாசன வேலைகளின் கட்டுமானம் மராமத்துக்காகச் சிறு பாசனப் பணியாளர்களை எக்காரணத்தை முன்னிட்டும் அமர்த்தக் கூடாது.

13—6—1930 தேதி, 1110, அ.ஆ. வரு.
25—6—1930 தேதி, 1861, வ.து.க.செ. பலவ.

II மதிப்புப் பட்டிகளும் நிதி ஒதுக்கீடும்.

(iv) ஆ. சிறு பாசன வேலைகள் மராமத்தின் நிலை உண்மையில் நிறைவேறிய வேலைகள் இவற்றைப் பற்றிய பதிவேடு.—கலெக்டர்களும் கோட்ட ஆட்சியாளர்களும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய எல்லா வேலைகளின் மதிப்புப் பட்டிகள் எதிய காலத்திற்குள் தயாரிக்கப்படுமாறு கவனிக்க வேண்டும் சீர்கெட்ட நிலையிலுள்ள வேலைகளில் மதிப்புப் பட்டிகள்

தயாராக வேண்டிய ஆனல் தயாரிக்கப்படாமல் இருக்கும் வேலைகள் எத்தனை என்பதை அறிவதும் ஒவ்வொன்றுக்கும் மதிப்புப் பட்டி தாமதமின்றித் தயாரிக்கப்படுமாறு பார்த்துக் கொள்வதும் மிக அவசியமான பூர்வாங்க வேலையாகும். இந்த வேலை, முக்கியமாகக் கோட்ட ஆட்சியாளரையும் தாசில்தாரையும் சார்ந்தது. ஒவ்வொரு ஜமாபந்தி அலுவலரும் சிறு பாசன வேலைகளின் நிலைமையைப் பற்றி விரைவாகவும் பயன் அடையத் தக்க வகையிலும் விசாரணை செய்துகொள்ள ஜமாபந்தி கொடுக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்விசாரணை முடிவுகளும், வருவாய் ஆய்வாளர்களின் நாட்குறிப்புகளிலுள்ள விவரங்களும், ஜமாபந்தி ஆய்வுக் குறிப்பில் மறைந்துவிடாமல் தொழில் நுட்பப் பணியாளர்களால் முழுமையான முறையான பரிசிலனை தொடரும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். ஏரிகளில் தண்ணீர் இருக்கும் காரணத்தால் வேலைகள் நிறுத்தி வைக்கப்படும் காலங்களைக் குறிப்பாக, இவ்விவரமான விசாரணைக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தகுந்த ஆய்வின் விளைவாக மராமத்துக்கள் அவசியமென்று தோன்றினவுடனே சிறு பாசனப் பணியாளர்கள் மதிப்புப் பட்டி தயாரிக்க வேண்டும். கலெக்டர் இவ்வேலையைச் சரிவரக் கண்காணிக்கும் பொருட்டு IV ஆவது இணைப்பில் உள்ள படிவத்தில் ஒரு பதிவேடு தாலூகா அலுவலகத்தில் எழுதி வைத்துவர வேண்டும். ஜமாபந்தியில் செய்யப்படும் விசாரணை முடிவுகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய ஆண்டு அறிக்கை ஒன்றைக் கலெக்டர்கள் வருவாய்த் துறைக் கழகத்திற்கு மேலனுப்ப வேண்டும். இப்பதிவேடு எழுதி வைத்து வருவது பற்றியும் ஆண்டறிக்கை அனுப்புவது பற்றியும் விளக்கமான அறிவுரைகள் VI ஆவது இணைப்பில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

(v) மராமத்துக்களுக்கான மதிப்புப் பட்டிகளை ஒப்பளிக்கும் அதிகாரங்கள்.—(அ) *7,500 ரூபாய்க்கு மேற்படாத சிறு பாசன மராமத்து வேலைகளுக்கு ஒப்பளிப்பு செய்யும் அதிகாரம் கலெக்டர்களுக்கு உண்டு. ஆனல், அவ்வேலைகளின் மதிப்புப் பட்டிகளை முதலில், தொழில் நுட்ப அதிகாரி ஆராய்ந்து ஏற்பு அளித்திருக்க வேண்டும். அத்தகைய ஏற்பளிக்கும் அதிகாரிகள் யாவர் என்பது கீழ்க்காணும் அட்டவணையில் தெரிந்து கொள்ளலாம்.

அ. ஏரி புதுப்பிக்கும் திட்டக் குழுவினர் ஆய்வு செய்த பாசன வேலைகள்—

தொகை.	தன்மை.	ஒப்பளிப்பு அறிவிப்பவர்.
500 ரூபாய்க்கு மேற்படாதவை.	(அ) ஏரி புதுப்பிக்கும் திட்டக் குழுவினர் குறிப்பில் உள்ள தரங்களிலிருந்து மாறுபட்ட தரம் ஏதேனும் உள்ள மதிப்புப் பட்டிகள்.	கலெக்டர் யுக்தத்தில் நிர்வாகப் பொறியாளராயினும் மேற்பார்வைப் பொறியாளராயினும்.
	(ஆ) ஏரி புதுப்பிக்கும் திட்டக் குழுவினர் குறிப்பில் உள்ள தரங்களிலிருந்து மாறுபட்டதான யாதொரு தரமில்லாத மதிப்புப் பட்டியல்கள்.	சிறு பாசன மேற்பார்வையாளர் ஒருவர் இருப்பின் அவர்; இல்லையென்றால் தொழில் நுட்ப ஏற்பு தேவையில்லை.
500 ரூபாய்க்கு அதிகமாக உள்ளவையும் ரூ. 1,000க்கு மேற்படாதவையும்.	(அ) ஏரி புதுப்பிக்கும் திட்டக் குழு குறிப்பில் உள்ள தரங்களிலிருந்து மாறுபட்ட தரம் ஏதேனும் உள்ள மதிப்புப் பட்டிகள்.	கலெக்டரது யுக்தத்தில் நிர்வாகப் பொறியாளராயினும் மேற்பார்வைப் பொறியாளராயினும்.
	(ஆ) ஏரி புதுப்பிக்கும் திட்டக் குழுவினர் குறிப்பில் உள்ள தரங்களிலிருந்து மாறுபட்டதான யாதொரு தரமுமில்லாத மதிப்புப் பட்டியல்கள்.	சிறு பாசன மேற்பார்வையாளர் ஒருவர் இருப்பின் அவர்; இல்லையென்றால் தொழில் நுட்ப ஏற்பு தேவையில்லை.

10—3—1931 தேதி, 541. அ.ஆ.வரு. பலவ.
13—3—1931 தேதி, 875, வ.து.க.செ. பலவ.

தொகை.	தன்மை.	ஒப்பளிப்பு அறிவிப்பவர்
1,000 ரூபாய்க்கு மேற்பட்டவையும், 7,500 ரூபாய்க்கு மேற்படாதவையும்.	(அ) ஏரி புதுப்பிக்கும் திட்டக் குழுவினர் குறிப்பில் உள்ள தரங்களிலிருந்து மாறுபட்ட தரம் ஏதேனும் உள்ள மதிப்பு பட்டிகள்.	கலெக்டரது யுக்தத்தில் நிர்வாகப் பொறியாளராயினும் மேற்பார்வைப் பொறியாளராயினும்.
	(ஆ) ஏரி புதுப்பிக்கும் திட்டக் குழுவினர் குறிப்பில் உள்ள தரங்களிலிருந்து மாறுபட்டதான யாதொரு தரமுமில்லாத மதிப்புப் பட்டியல்கள்.	சிறு பாசன மேற்பார்வையாளர் ஒருவர் இருப்பின் அவர்; இல்லையென்றால் கலெக்டரது யுக்தத்தில் நிர்வாகப் பொறியாளராயினும் மேற்பார்வைப் பொறியாளராயினும்.

ஆ. ஏரி புதுப்பிக்கும் திட்டக் குழுவினர் ஆய்வு செய்யாத பாசன வேலைகள் :—

500 ரூபாய்க்கு மேற்படாதவை	எல்லா மதிப்புப் படிகளும்.	சிறுபாசன மேற்பார்வையாளர் ஒருவர் இருப்பின் அவர் ; இல்லையென்றால் தொழில் நுட்பு ஏற்பு தேவையில்லை.
500 ரூபாய்க்கு மேற்பட்டவையும் *7,500 ரூபாய்க்கு மேற்படாதவையும்.	எல்லா மதிப்புப் பட்டிகளும்.	சிறு பாசன மேற்பார்வையாளர் ஒருவர் இருப்பின் அவர்; இல்லையென்றால் கலெக்டர் யுக்தானுசாரம் போல் நிர்வாகப் பொறியாளராயினும் மேற்பார்வைப் பொறியாளராயினும்.

*7,500 ரூபாய்க்கு மேற்பட்ட வேலைகளின் மதிப்புப் பட்டிகளை ஒவ்வோராண்டும் ஜனவரி மாத இறுதிக்குள் வருவாய்த் துறைக் கழகத்தின் (நில வருமானப் பகுதி) ஒப்பளிப்பிற்காகச்

சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர் வழியாக அனுப்ப வேண்டும். ஒவ்வொரு மதிப்புப் பட்டியுடனும் அந்தப் பாசனத்தின் ஆயக்கட்டு விவரங்களும், வருவாய் விவரங்களும் கொண்ட பட்டியலை VII ஆவது இணைப்பில் உள்ள படிவத்தில் அனுப்ப வேண்டும். கலெக்டருக்குரிய மொத்த ஒதுக்கீட்டுத் தொகைக்கு உட்பட்டு கலெக்டர் தாம் முன் ஒப்பளித்த மதிப்புப் பட்டித் தொகைக்கு அதிகமாகப் பத்துச் சதவீதம் வரை நமது ஒப்பளிப்பு அதிகார வரம்பிற்கு மீறினாலும் அவ்வாறு அவர் ஒப்பளிப்பு செய்ய அவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. 7,500 ரூபாய்க்கு மேற்பட்டவற்றில் வருவாய்த் துறைக் கழகம் ஒப்பளித்த வேலைகளுக்கு அவற்றின் மதிப்புப் பட்டித் தொகைக்கு 5 சதவீதம் வரையில் அதிகமாக இதேபோல கலெக்டர் ஒப்பளிக்கலாம்.

12—7—1956 தேதி, 2767, அ.ஆ.வரு.பல.
*30—12—1957 தேதி, 4793 அ.ஆ.வரு.அச்சு.
*12—5—1958 தேதி, 32 948, 3/5—3 என் அரசாங்கக் குறிப்பு வரு.
*15—9—1938 தேதி, 1123, வ.து.க.செ. வரு.பலவ.

(ஏரிக்கரைகளிலுள்ள சப்பாத்திகளை அப்புறப்படுத்தல், ஊற்று வாய்க் கால்களில் வண்டல் எடுத்தல் முதலிய) நியாயமாகக் குடிமராமத்தில் செய்ய வேண்டிய வேலைகளை அரசாங்கச் செலவில் செய்வதாக இருந்தால் அவற்றிற்கு வருவாய்த் துறைக் கழகத்தின் ஒப்பளிப்பு வேண்டும்.

மதிப்புப் பட்டிகள் ஒப்பளிக்கப்பட்டால் அவை சம்பந்தப் பட்ட தாசில்தாருக்குத் திருப்பியனுப்பப்படும். கலெக்டர் அலுவலக உபயோகத்திற்காக அதன் நகல் ஒன்றை அங்கேயே நிறுத்தி வைத்துக்கொள்ள வேண்டும்.

(ஆ) ஈ வருவாய்த் துறையின் பொறுப்பிலுள்ள *7,500 ரூபாய்க்கு மேற்பட்ட சிறு பாசன வேலைகளின் மதிப்புப் பட்டிகளை (நில வருவாய்) வருவாய்த் துறைக் கழகத்தின் ஒப்பளிப்பிற்கு அனுப்ப வேண்டும் என்ற விதியை அத்தகைய வேலைகளின் ஏரி புதுப்பிக்கும் நிட்ட மதிப்புப் பட்டிகள் விஷயத்திலும் மேற்கொள்ள வேண்டும். அத்தகைய பட்டிகள் நிர்வாகப் பொறியாளரிடமிருந்து வரப்பெற்றதும், அவற்றைக் கலெக்டர் நேராக வருவாய்த் துறைக் கழகத்திற்கு மேலனுப்ப வேண்டும். வருவாய்த் துறைக் கழகம் அவற்றிற்கு ஆட்சி ஒப்பளிப்பு அளித்ததும், அவை மேற்பார்வைப் பொறியாளரின்

இறுதித் தொழில் நுட்பத் தணிக்கைக்காகவும் ஒப்பளிப் பிற்காகவும் அவருக்கு அனுப்பும். அதன் பின்னர் மேற்பார்வைப் பொறியாளர் அம் மதிப்புப் பட்டிகளை நிர்வாகப் பொறியாளருக்கு அனுப்புவார். நிர்வாகப் பொறியாளர் அவற்றை, அவை சம்பந்தப்பட்ட வேலைகள் செய்து முடிக்கப்படுவதற்காகக் கலெக்டருக்கு அனுப்புவார்.

*12—7—1956 தேதி, 2767, அ.ஆ.வரு.பல.

*30—12—1957 தேதி, 4793, அ.ஆ. வரு. அச்சு.

*12—5—1958 தேதி, 32/948, 3/5–3, எஸ். அரசாங்கக் குறிப்பு வரு.

*15—9—1958 தேதி, 1123, வ.து.க.செ. வரு. பலவ.

(v) நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்துதலும் வேலைகளின் திட்டமும்.—நிதி ஒதுக்கீட்டை எவ்வகையில் விவரமாகப் பயன் படுத்த வேண்டுமென்பது கலெக்டர்களுக்கு விடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நிதி ஆண்டிலும் செய்ய உத்தேசித்திருக்கும் வேலை களின் நிகழ்ச்சி முறையை (VIII-ஆவது இணைப்பில் காணப்படும் படிவத்தில்) அதற்கு முந்தின ஆண்டின் டிசம்பர் மாத முதல் தேதிக்குப் பிந்தாமல் ஒரு தேதியில் அதனதன் அவசரத்தை முன்னிட்டு அவற்றை வரிசைப்படுத்தி, அவற்றிற்கு வேண்டிய நிதியையும் அதே வரிசையில் நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும். கலெக்டர் இதை முடிவு செய்வதற்கு இயலுமாறு ஒவ்வொரு ஆண்டிலும் நவம்பர் மாதம் முதல் தேதிக்குப் பிந்தாமல் ஒரு தேதியில் அடுத்த ஆண்டில் நிறை வேற்றப்பட வேண்டிய வேலைகளுக்குரிய திட்டங்களைத் தாசில்தார் கலெக்டருக்கு மேல் அனுப்ப வேண்டும். இத்தகைய திட்டங்களைத் தயாரிப்பதற்கான விவரங்கள், VI ஆவது இணைப் பில் உள்ள அறிவுரைகளை அனுசரித்துத் தாசில்தார்கள் எழுதி வைத்திருக்கும் பதிவேட்டில் உள்ளன. இத்திட்டத்தை முடிவு செய்யும்போது, ஆண்டு இறுதியில் முடிவு பெறாமல் ஒரு பகுதி வேலை மட்டும் நிறைவேற்றப்பட்டுப் பாக்கி நிற்கும் வேலைகள் நிறைவேற்ற உத்தேசமில்லை என்பதற்கு தனிப்பட்ட காரணங்கள் எவையேனும் இருந்தாலன்றி, அவ்வேலைகளைக் கலெக்டர்கள் இத்திட்டத்தில் கண்டிப்பாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென் பதைக் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இதற்குட் பட்டு இத்திட்டத்தை முடிவு செய்யும்போது, அவசர வேலை களுக்கும் மதிப்புப் பட்டி ஒப்பளிப்புப் பெற்று நிறைவேற்றப் படாது நிற்கும் வேலைகளுக்கும் கலெக்டர்கள் முதன்மை கொடுக்க வேண்டும். (மிக எளிதாகச் சென்று அடையக்கூடிய) குறிப்பான இடங்களுக்கு தகாத முறையில் அதிக ஆதாவு

காட்டாதவாறு கலெக்டர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். பொதுவாக ஒப்பளிக்கப்பட்ட மதிப்புப் பட்டிகளுள்ள வேலை களையே தெரிந்தெடுக்க வேண்டும்.

முடிவு செய்யப்பட்ட திட்டத்தையும் அவசரத்தையும் முன்னிட்டு வேலைகள் செய்யப்பட வேண்டிய வரிசைக் கிரமம், தனிப்பட்ட காரணங்களுக்காக மாற்றப்படுவது தேவை யென்று கலெக்டர் கருதினாலன்றி வரிசை முறை தவறாமல் அனுசரிக்கப்பட வேண்டும். பருவ மழை சேதம் காரண மாகச் செய்யப்பட வேண்டிய வேலைகளில், சேதமடைந்த அவ்வேலைகளின் கீழ் உள்ள பயிர்களைப் பாதுகாப்பதற்காக எத்தகைய வேலைகள் தக்க காலத்தில் செய்து முடிக்கப்படக் கூடுமோ அவ்வேலைகளுக்கென ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீடுகள் இல்லையென்றாலும் முடிவு செய்யப்பட்ட திட்டத்தில் அவ்வேலைகள் சேர்க்கப்படவில்லை என்றாலும், வேலைகள் நடந்துகொண்டிருக்கும் போது சிக்கிரத்தில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்பளிக்கப் பட்டு கலெக்டரின் நிலையான வேலைப் பேரேட்டிலும் முடிவு செய்யப்பட்ட திட்டத்திலும் சேர்க்கப்படுமாயின், அவற்றிற்குக் கலெக்டர்கள் நிதி ஒதுக்கீடு செய்யலாம் அல்லது ஒன்றுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை மற்றொன்றுக்கு மாற்றலாம்.

மாவட்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் 75 சதவிகிதம் அல்லது கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரிச் செலவில் 75 சதவிகிதம் இவற்றில் எது குறைவாக உள்ளதோ அந்த அளவு வரையில் வருவாய்த் துறைக் கழகத்தின் நிதி ஒதுக்கீட்டை எதிர் பார்த்து முன்னதாகவே கலெக்டர்கள் வேலைகளுக்கு நிதியைப் பிரித்துக் கொடுக்கலாம். ஏப்பிரல் மாத முதல் தேதிக்கு முன்னர் பணம் அளிக்கப்படமாட்டாது என்ற உடன் பாட்டின்கீழ் வேலைகளைப் பிப்ரவரி மாதத்திலிருந்தே ஒப்பந்தப் படி விடுவதற்கு இது வகை செய்யும்.

வேலைகளின் திட்டத்தையும் அவற்றிற்குப் பின்னர் செய்யப் படும் மாறுதல்களையும் பற்றிய நகல்களை ஒவ்வொரு தாசில் தாருக்கும் கோட்ட ஆட்சியாளருக்கும் கொடுக்கப்பட வேண்டும்.

ஊர் வேலைகளின் திட்டத்தையும் அவற்றிற்குப் பின்னர் செய்யப்படும் மாறுதல்களையும் பற்றிய நகல்களை அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவருக்கும் அனுப்புவதோடு முடிவு பெறுமளிருக்கும் வேலைகளைப் பொறுத்தவரையில், அவற்றின்

குறிப்புரைக் கட்டத்தில் செய்து முடித்த வேலையின் அளவையும் முன்பு செலவு செய்யப்பட்ட தொகையின் விவரத்தையும் காட்ட வேண்டும்.

(vi) சிறு பாசன ஆதாரங்களின் நிலைப் பேரேடு தாசில்தார்கள் எழுதி வைக்க வேண்டியதில்லை.—மேலே (ii)-ஆவது உட்பிரிவில் குறிக்கப்பட்டுள்ள சிறு பாசனங்களின் நிலப் பேரேடு தாசில்தார்கள் எழுதி வைத்து வரவேண்டியதில்லை. மேலே vi) ஆவது பிரிவின் கீழ்க் கலெக்டரிடமிருந்து வரப்பெறும் வேலைகளின் திட்டம் அந்த ஆண்டில் செயலாற்ற வேண்டிய மதிப்பீடுகளையும் அவற்றிற்குப் பிரித்து ஒதுக்கப்பட்ட தொகையையும் பற்றிய பதிவேடாக உதவும்.

(viii) முன்னேற்ற அறிக்கைகளை ஆய்ந்து பார்த்தல்.—கலெக்டர்கள் தாம் வரப்பெறும் முன்னேற்ற அறிக்கைகளைக் கவனத்துடன் ஆய்ந்து பார்த்து ஒதுக்கீட்டுத் தொகை முழுவதும் ஆண்டு முடிவிற்குள் செலவாவதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

(ix) ஒதுக்கீட்டுத் தொகைகளைப் பயன்படுத்த முடியாத போது கலெக்டர்கள் அனுப்பவேண்டிய அறிக்கை.—எக்காரணம் பற்றியோ, ஒதுக்கப்பட்ட தொகையின் ஒரு பகுதியைப் பயன் படுத்த முடியாவிட்டால், அப்பகுதியை மற்ற மாவட்டங்களில் செலவு செய்ய வாய்ப்பளிக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட கலெக்டர்கள் அதை மிக விரைவில் தெரிவிக்க வேண்டும். எவ்வாறாயினும் அவ்வறிக்கை ஜனவரி மாதம் 10-ஆம் தேதிக்கு முன் வருவாய்த் துறைக் கழக அலுவலகத்தைச் சேர வேண்டும்.

(ஆ) 18—10—1927 தேதி, 2066, அ.ஆ.வரு.
(இ) 12—10—1928 தேதி, 160 வ.து.க.செ.நிர்.
(இ) 27—1—1921 தேதி, 18, வ.து.க.செ. நிர்.
(இ) 8—6—1923 தேதி, 44, வ.து.க.செ.
(இ) 17—10—1923 தேதி, 1560, அ.ஆ.வரு.பலவ.
(இ) 17—12—1923 தேதி, 2771, வ.து.க.செ.பலவ.
(இ) 1—9—1927 தேதி, 2428 வ.து.க.செ.பலவ.
(ஐ) 14—10—1933 தேதி, 673, அ.ஆ.நிர்.
31—3—1928 தேதி, 753, அ.ஆ.வரு.
(ஆ) 31—10—1927 தேதி, 77, வ.து.க.செ.

(இ) 16—1—1914 தேதி, 13, வ.து.க.செ.
(ஈ) 2—11—1928 தேதி, 2579, அ.ஆ.வரு.பலவ.
(ஈ) 20—11—1928 தேதி, 3900, வ.து.க.செ.
(உ) 2—8—1928 தேதி, 1723, அ.ஆ.வரு.பல.
(உ) 8—8—1928 தேதி, 2604, வ.து.க.செ.பலவ.
(ஊ) 8—8—1928 தேதி, 2604, வ.து.க.செ. பலவ.
(எ) 24—7—1902 தேதி, 174, வ.து.க.செ.
(எ) 21—12—1933, தேதி, 136 வ.து.க.செ.
19—4—1928 தேதி, 31, வ.து.க.செ.

III வேலைகளைச் செயலாற்றல்.

(x) வேலைகளை நிறைவேற்றுவதற்கான நிறுவனம்.—ஒப்பந்தத்தால் அல்லது அரசாங்கத் துறையினரால் செயலாக்கலாம்.

(xi) உடன்படிக்கைகளும் பிணையங்களும்.—ஒப்பந்தத்தில் செய்யப்படும் வேலைகளில் இழப்பு ஏற்படாதவாறு கவனித்துக் கொள்ளும் பொருட்டுத் தாசில்தார்கள் தேவையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். தேவையானல் எழுத்து வடிவில் உடன்படிக்கைகளையும் பிணையங்களையும் ஒப்பந்தக் காரர்களிடமிருந்து பெற வேண்டும். அ. உடன்படிக்கைகள் "தனி நிதிகள் விதித் தொகுப்பு" 5 ஆவது (வேலைகளின் ஒப்பந்தக்காரரிடம் பெற வேண்டிய உடன்படிக்கைப்) படிவத்தில் இருக்க வேண்டும். படிவத்தின் நகல்கள் கலெக்டர் எழுது பொருள்கள் அச்சுத் துறை தலைவருக்கு தேவைக் கோரிக்கை அனுப்பி அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். சம்பந்தப் பட்ட பாசனத்தின் கீழ் ஆயக்கட்டு உரிமையாளர்களில் ஒருவர் அல்லது பலர், வேலையை ஒப்பந்தத்தில் எடுத்து முடிக்கத் திறமுடையவர் இருந்து அவ்வாறு முடிப்பதற்கு அவர்கள் இசைவார்களெனில், பாசன ஆதாரத்தைச் சரிவரப் பாதுகாத்து வைத்து வருவதில் அவர்களுக்குச் சொந்த அக்கறை இருக்கு மாதலால், சம்பந்தமில்லாத தொழில்முறை ஒப்பந்தக்காரர்களை விட, அவர்களுடைய உரிமையே முதலிடம் பெறும்.

26—3—1940 தேதி, 751 அ.ஆ.வரு.பல.
12—7—1956 தேதி, 2767, அ.ஆ.வரு.பல.
20—6—1917 தேதி, 154, வ.து.க.செ.நி.
11—4—1940 தேதி, 39, வ.து.க.செ.அச்ச.

(xii) செய்த வேலைகளுக்குப் பணம் கொடுத்தல்.—செய்யப்பட்ட அளவையும் மதிப்பையும் வேலையைப் பொறுப்பேற்றிருக்கும் சார்நிலை அலுவலரின் சான்றிதழை (IX- ஆவது இணைப்பிலுள்ள படிவத்தை காண்க) அனுசரித்து வேலைகளுக்கு ஒவ்வொரு மாதமும் சாதாரணமாகப் பணம் கொடுக்க வேண்டும். அப்படிவத்திலேயுள்ள அறிவுரைகளைக் கண்டிப்பாக அனுசரித்துச் சான்று பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

(xiii) பொதுக் கணக்கில் பணம் கொடுத்தல் தடை செய்யப்படுகிறது.—ஒப்பந்தக்காரருக்குக் கொடுக்கப்படும் ஒவ்வொரு தொகையும் குறிப்பிட்ட வேலையின் கணக்கில் இருக்க வேண்டும். பொதுக் கணக்கில் ஒப்பந்தக்காரருக்குப் பணம் கொடுக்கும் வழக்கம் தடை செய்யப்படுகிறது.

xiv) அளவு தணிக்கை ஆகும் வரையில் கொடுக்க வேண்டிய பணத்தில் ஒரு அளவு தொகை கொடுக்காமல் நிறுத்தி வைத்துக் கொள்ளுதல்.—தாசில்தார்களோ மற்ற மேல் நிலை அதிகாரிகளோ அளவு தணிக்கை செய்யும் வரையில் ஒப்பந்தக்காரர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தில் 10 சதவிகிதத்திற்குக் குறையாத தொகையைக் கொடுக்காமல் நிறுத்தி வைத்துக்கொள்ள வேண்டும். அளவு செய்யப்படாத வேலைகளுக்குப் பணம் கொடுப்பது தடை செய்யப்பட்டிருக்கிறது.

(xv) சிறு வேலைகளுக்குப் பணம் கொடுத்தல்.—சில வாரங்களில் செய்து முடிக்கப்படக் கூடிய சிறு வேலைகளைப் பொறுத்த வரையில் அவை முடிவடைந்ததும் அவற்றை அளவு செய்து அவற்றிற்குரிய தொகையை அளிப்பது வசதியாக இருக்கும்.

(xvi) ஒப்பந்தச் சான்றில், நிறைவேறிய வேலையின் அளவைக் குறித்தல்.—ஒப்பந்தக்காரருக்கு செய்த எந்த வேலையின் நிமித்தமாகப் பணம் கொடுக்கப்படுகிறதோ அப்பணம் கொடுக்கும் தேதி வரையில் நிறைவேறிய அவ்வேலையின் முழு அளவை ஒப்பந்தச் சான்றில், அதன் படிவத்திலுள்ள அறிவுரைகளை அனுசரித்தே எப்போதும் குறிக்க வேண்டும்.

(xvii) அளவைச் சுவடி.—செய்து முடிக்கப்பட்ட வேலையின் முழு விவரங்களையும் கொடுக்கும் பதிவுக்கட்டு அளவைச் சுவடி ஒன்றே (298 எண் பொதுப் படிவம்). எனவே, அதை எப்போதும் பூர்த்தியாக வைத்திருக்க வேண்டியது தாசில்தாரின் கடமையாகும்.

(xviii) .அளிக்கும் தொகைகளை அளவைச் சுவடியில் குறித்தல்.—பார்வையாளர் (ஆவது இணைப்பில் கண்டுள்ள படிவத்தில் இருக்க வேண்டிய) தமது அளவைச் சுவடியை ஒவ்வொரு பணப் பட்டியலோடு தாசில்தாருக்கு மேல் அனுப்ப வேண்டும். தாசில்தார் ஒவ்வொரு தடவையும் பணம் கொடுத்த பின்னர் அச்சுவடியின் தொடக்கப் பக்கத்தில் அச்சிட்டிருக்கும் சிறு பாசனத் துறைக்குரிய தனி அறிவுரைகளின் 2 ஆவது பத்தியை அனுசரித்துத் தேவையான விவரங்களை அதில் குறிக்க வேண்டும்.

(xix) வேலையை அளவு செய்ததும் தொழிலாளருக்குப் பணம் அளித்ததும்.—மேலே கண்ட விதிகள் வேலைகளின் அளவுகளை எடுப்பதையோ அல்லது செய்த வேலைகளுக்குப் பணம் அளிப்பதையோ தடுப்பதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அதற்கு மாறாக, செய்திருக்கும் வேலையின் மதிப்பிற்கு அதிகமான முன் பணம் ஒப்பந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்படாமலிருப்பதற்காக அவருக்குச் சேரவேண்டிய பணத்தைத் தாமதமின்றிக் கொடுப்பதற்கு எப்போதும் முயற்சி செய்ய வேண்டும்.

(1) 26—10—1900 தேதி, 453, வ.து.க.செ.நிர்.
(2) 10—1—1924 தேதி, 48, அ.ஆ.வரு.பலவ.
(.) 30—10—1925 தேதி, 2400, வ.து.க.செ.பலவ.
(.) 28—1—1921 தேதி, 81, அ.ஆ.நிதி.பலவ.
(.) 11—10—1931 தேதி, 145, வ.து.க.செ.நிர்.
12—7—1956 தேதி, 2767, அ.ஆ.வரு.பல.

(xx) .பணிக்கு வருபவர்களின் பெயர்ப் பட்டியலும் அதை எழுதி வைத்து வருதலும்.—நிலக் கூலி கொடுக்கப்பட்டு வேலை நடைபெற்றால் பணி செய்ய வருபவர்களின் பெயர்ப் பட்டியல் (XI ஆவது இணைப்பில் உள்ள படிவத்தைக் காண்க). அதற்கு அடிப்படையான கணக்காகும். எவ்வளவு காலத்திற்கு அதை வைத்திருக்க வேண்டுமென்பது ஆங்காங்குள்ள வழக்கம் முதலியவற்றை அனுசரித்து வேறுபடும். பணி செய்ய வருபவர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை ஒவ்வொரு வேலைக்கும் எழுதி வைக்கப்பட வேண்டும். அவை **இரட்டை** பிரதியில் ஒருபோதும் தயாரிக்கப் படக் கூடாது. பெயர்ப் பட்டியல் பதிவுகள் அனைத்தும் மையிலேயே எழுதப்பட வேண்டும். பணம் கொடுக்கப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட அத்தகைய பட்டியல்கள் தாசில்தார் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட வேண்டிய அவசியமில்லை.

7—2—1940 தேதி, 316, அ.ஆ.வரு.பல.
15—3—1940 தேதி, 28, வ.து.க.செ.அச்சு.

(xxi) பெயர்ப் பட்டியல்கள் தயாரித்தலும் அவை பற்றிய அறிவுரைகளும்—இப்பெயர் பட்டியல் படிவத்தின் பின் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அறிவுரைகளை அனுசரித்து இப்பட்டியல்கள் தயாரிக்கப்பட வேண்டும். தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய பணமும் பட்டுவாடா செய்யப்பட்ட தொகையும் காட்டப்பட வேண்டும். முறையாக அனுமதிக்கப்பட்டு, "பணியாளர் தொகுதிச் செலவுகளிலிருந்து" சம்பளம் பெறும் உழைப்பவர்களாகக் கருதி, அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத் தொகைச் செலவை எந்த வேலைக்காக அமர்த்தப்படு கிறார்களோ அவ்வேலைக்குச் சாட்ட வேண்டும். பணம் பட்டுவாடா செய்யப்பட்டதாக காட்டப்படும் மொத்தத் தொகைக்கு ஆதாரவாக, பணி செய்ய வருபவர்களின் பெயர்ப் பட்டியல்களின் அடியில் ஒரு சான்றிருக்க வேண்டும்.

(xxii). தொழிலாளர்களைக் கூட்டிப் பார்வையிடுதல்.—தினக் கூலி கொடுக்கப்பட்டு நடைபெறும் வேலைகளைப் பார்வை யிடும் தாசில்தார்களும் மற்ற மேல் நிலை அலுவலர்களும், வேலை செய்யும் தொழிலாளரைத் திரட்டி அப்பதிவேட்டில் குறிக்கப் பட்டுள்ளவர்கள் உண்மையில் வேலை செய்ய வந்திருக்கிறார்களா என்று சரிபார்க்க வேண்டும். மோசடி செய்யும் கருத்துடன் பின்னர் கூடுதலான பதிவுகள் செய்யப்படாமலிருப்பதற்காக அத்தகைய அலுவலர்கள் தாம் பார்வையிட்ட தேதி வரையில் ஒவ்வொரு தினத்திற்குரிய கட்டத்தின் கீழ், அந்த அந்த தினங்களில் வேலை செய்ய வந்த வேலை ஆட்களின் மொத்த எண்ணிக்கையைத் தங்கள் சுருக்கொப்பத்துடன் மையினால் பதிவு செய்ய வேண்டும்.

(xxiii) தினக் கூலியில் நடைபெறும் வேலைகள்.—தினக் கூலி கொடுக்கப்பட்டு நடைபெற்ற எல்லா வேலைகளின் அளவுகளும், ஒப்பந்தத்தில் நிறைவேற்றப்படும் வேலை சம்பந்தமாகச் செய்வது போலவே அளவுகளின் அடிப்படைக் கணக்கான அளவைச் சுவடியில் குறிக்கப்பட வேண்டும். அந்த அளவைச் சுவடியிலிருந்து, செய்யப்பட்ட வேலைகளின் கணக்கு இருக்க வேண்டும். அளவைச் சுவடியில் பென்சிலால் செய்யப்பட்ட குறிப்புகளை மையால் மேலெழுதாமல் அவ்வாறே விட்டுவிட வேண்டும். அதில் அழித்தல்கள் இருக்கக் கூடாது. ஆனாலும் "பரிமாணம் அல்லது பரப்பு" தவறுமல் மையினாலேயே எழுதப்

படவேண்டும். மாறுதல்கள், தவறான பதிவை அடித்துப் புதிய சரியான பதிவைச் சிவப்பு மையினால் சம்பந்தப்பட்ட அலுவலரின் சுருக்கொப்பத்துடன் செய்யப்பட வேண்டும்.

.21—3—1901 தேதி. 44,வ.து.க.செ.நிர்.

IV. சொக்கமும் பண்டகசாலையும்.

(xxiv) சொக்கமும் பண்டங்களும்.—தனி முன் பணங்கள் கருவூலத்திலிருந்து அவசியமில்லாத வகையில் பெரியத் தொகைகள் வாங்குவதைத் தடுக்கும் பொருட்டும், செலவான தொகைக்கு விவரமான பட்டியல்கள் உடனுக்குடனே வந்து சேருமாறு கவனித்துக்கொள்ளும் பொருட்டும், வேலைகளின் செலவிற்குத் தனி முன் பணங்கள் கொடுக்கும் முறையை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்.

(xxv) தாசில்தாருக்கு முன் பணம்.—இந்த முறையின் கீழ் எக்காரணத்தாலும் 500 ரூபாய்க்கு மேற்படாமல், தமது தாலூகாவிற்கு உண்மையாகத் தேவையான வரையிலும் முன் பணம் தம்மிடம் வைத்துக்கொள்ளத் தாசில்தார் அனுமதிக்கப்படுவார். ஆண்டு ஆரம்பத்தில் வேலைகள் செயலாற்றப்படுவதற்குக் கலெக்டர் ஒப்பளிக்கும் போது ஒவ்வொன்றிலும் கொடுக்கப்படக்கூடிய முன் பணத்தை நிர்ணயித்துக் கருவூல அலுவலருக்கும் தெரிவிப்பார்.

(xxvi) தனி முன் பணங்களைப் பெறும் முறையும் திருப்பிச் செலுத்தும் முறையும்.—இவ்வாறு அனுமதிக்கப்பட்ட தனி முன் பணம் முழுவதையும் கருவூலத்திலிருந்து உடனடியாகப் பெற்றுக் கொள்ளாமல் தேவையாகும் தவணைகளில் பெற்றுக் கொள்ளவேண்டுமென்பதைத் தெளிவாக உணரவேண்டும். மேலும், கையிலுள்ள தனி முன் பணத்திற்கு ஏதாவதொரு காரணமாக தேவையில்லையென்றால் (எடுத்துக்காட்டாக மழைக் கால ஆரம்பத்தில் வேலை நிறுத்தப்பட்டால்) அம் முன் பணத் தொகையை உடனே கருவூலத்தில் திருப்பிச் செலுத்தி விட வேண்டும். அலுவலர்களில் மாறுதல் ஏற்படுமானால் வேலை ஒப்புக்கொள்ளும் அலுவலரிடமிருந்து கையிலிருக்கும் முன் பணத் தொகைக்குப் பற்றுச் சீட்டு பெற வேண்டும்.

(xxvii) முன் பணங்களைப் பற்று எழுதுவது எப்படி?—இம் முன் பணங்களை, கருவூலக் கணக்குகளில் "கொடுக்கப்பட வேண்டிய முன் பணங்கள்—தனி முன் பணங்கள்" என்ற தலைப்பில் பற்று எழுதி வைத்து மேல் ஒப்பம் பெற்ற XXxVI ஆவது உட்பிரிவு) பணப் பட்டியல்களின் மீது மேலும் கொடுத்த பணத்தை சிவில் துறைக் கணக்கில் பற்று எழுத வேண்டும்.

28—11—1893 தேதி. 487. வ.து.க.செ.நிர்.

(xxviii) தாசில்தார்களே தனி முன் பணங்களை வைத்திருக்க வேண்டியவர்கள்.—இத் தனி முன் பணங்களைப் பொதுவாக வைத்திருக்க வேண்டியவர்கள் தாசில்தார்களேயன்றி அவருக்கு கீழ் நிலையிலுள்ள அலுவலர் அல்லர். தமக்கு அனுமதிக்கப்பட்ட முன்பணத் தொகையைத் தமது தாலூகாக்களில் தனித்தனி வேலைகளின் பொறுப்பிலுள்ள பார்வையாளர்களிடமும் கண்காணி களிடமும் தேவைக்கேற்றவாறு பிரித்துக் கொடுக்கும் பொறுப்பு தாசில்தார்களைச் சார்ந்தது.

(xxix) கொடுத்தல்—வாங்கல்களைப் பற்றிய நினைவுக் குறிப்பு. —தமது தனி முன் பணம் கொடுத்தல்-வாங்கல் சம்பந்தமாகத் தாசில்தார் எளிதான நினைவுக் குறிப்பு ஒன்று எழுதி வைத்து வரவேண்டும்.

V. பதிவேடுகளும் கணக்குகளும்.

(xxx) இருவகைக் கணக்குகள் வைத்து வரப்பட வேண்டும். —சிறுபாசன வேலைகளின் பதிவேடுகளும் கணக்குகளும். (1) தாசில்தார்களால் பராமரித்து அனுப்பப்பட வேண்டியவை. (2) கலெக்டர்களால் பராமரித்து அனுப்பப்பட வேண்டியவை என இருவகைப்படும்.

(xxxi) தாசில்தார்கள் வைத்திருக்க வேண்டிய பதிவேடு களும் கணக்குகளும்.—கீழ்க் கண்டவை தாசில்தார்கள் வைத்து வர வேண்டியவை—

(அ) மராமத்துகள் தேவை என்று அறிவிக்கப்பட்ட வேலைகளின் பதிவேடு (I ஆவது இணைப்பு).

(ஆ) அளவைச் சுவடிகள் (X-ஆவது இணைப்பு).

(இ) மாதப் செலவு முன்னேற்றத்தைக் காட்டும் பதிவேடு xiv -ஆவது இணைப்பு).

(xxxii) மராமத்துகள் செய்யப்பட வேண்டிய வேலைகளின் பதிவேடும், அளவைச் சுவடிகளும்.— மராமத்துகள் செய்யப்பட வேண்டிய வேலைகளின் பதிவேடு பற்றி மேலே VI -ஆவது உட் பிரிவில் காண்க.

அளவைச் சுவடிகளைப்பற்றி (xviii) (xxiii) உட் பிரிவுகளில் கூறப்பட்டுள்ளன.

.18—10—1927 தேதி, 2066, அ.ஆ.வரு.
.31—10—1927 தேதி, 77, வ.து.க.செ.

(xxxiii) கோட்ட ஆட்சியாளருக்கு விவரமடங்கிய பணப் பட்டியல்கள் அனுப்புதல்.—வேலைக்குக் கொடுப்பதற்குரிய பணம் தேவையானபோது தாசில்தார் விவரமடங்கிய பணப் பட்டியல் தயார் செய்து, தேதியும் எண்ணுமிட்டு அதை உறுதிச் சீட்டுகளுடன் (பெயர்ப் பட்டியல் ஒப்பந்தச் சான்றுகள், செலவிற்கு ஆதாவாகவுள்ள மற்ற உறுதிச் சீட்டுகள்) கோட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும்.

2—8—1904 தேதி, 272, வ.து.க.சே.நிர்.

(xxxiv) பணப்பட்டியல் ஆய்ந்து பார்த்த பின்னர் கோட்ட ஆட்சியாளரால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறை.— ஆய்ந்து பார்த்ததில் பட்டியல் சரியாக இருப்பதாகக் கோட்ட ஆட்சியாளர் கருதுவாரெனில் மேற்கையொப்பமிட்டு, அதைச் சம்பந்தப்பட்ட எல்லா உறுதிச் சீட்டுகளுடனும் கருவூல அலுவலருக்கு அனுப்புவதோடு (சம்பந்தப்பட்ட ஆண்டாகிய) "19 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதிக்குப் பின்னர் கொடுக்கப் படமாட்டாது" என்று தெளிவாக எழுதப்பட்டதாகிய ஒப்பந்தக்காரருக்கு பணம் கொடுப்பதற்குரிய ஆணையையும் தாசில்தார் வழியாக அனுப்பவேண்டும். ஒப்பந்தக்காரர் அவ்வாணையைத் தாக்கல் செய்த பின்னர் தாசில்தார் கருவூலத்திலிருந்து பணத்தைப் பெற்று ஒப்பந்தக்காரரிடம் கையெழுத்தைப் பெற்றுக் கொண்டு அவருக்குப் பணம் கொடுப்பார். பணம் கொடுக்கப் படாதபோது சம்பந்தப்பட்ட ஆணையைக் கோட்ட ஆட்சியாளர் ரத்து செய்யும் பொருட்டு ஏப்ரல் மாத முதல் தேதியில் அல்லது அதற்குப் பின்னர் தாசில்தார் மேலனுப்புவார். கோட்ட ஆட்சியாளர் பணம் கொடுக்கப் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் குறுக்கே "ரத்தானது" என்று தெளிவாக எழுதுவதோ அல்லது முத்திரையிடுவதோ செய்வதோடு கோட்ட ஆட்சியாளரின் கை

யெழுத்தையும் அடித்துவிட வேண்டும். அவ்வாறு ரத்தானதை தேதியுடன் அலுவலக நகலில் அல்லது அடிச்சிட்டில் குறிக்க வேண்டும். கோட்ட ஆட்சியாளர் புதிய ஆண்டின் ஒதுக்கீட்டு நிதியிலிருந்து பணம் கொடுப்பதற்காக புதிய ஆணையைப் பிறப் பித்து பணம் கொடுக்குமாறு பிறப்பிக்கப்பட்ட முதல் ஆணை ரத்தானது பற்றியும், பணம் கொடுப்பதற்குப் புதிதாய் அனுப் பிய ஆணை பற்றியும், கருவூல அலுவலருக்கு அறிவிக்க வேண்டும், கோட்ட ஆட்சியாளர் பணம் கொடுப்பதற்கான ஆணையில் அதற் குரிய பணப்பட்டியலின் எண்ணையும், தேதியையும் குறிப்பிடு வதோடு அந்த விவரமடங்கிய பணப் பட்டியலை கருவூல அலுவ லருக்கு அனுப்புமுன், அதன் அடியில் பணம் கொடுப்பதற்கான ஆணை அனுப்பப்பட்டது என்ற விவரத்தையும் குறிக்க வேண்டும்.

20—11—1922 தேதி, 2065 அ.ஆ.வரு.பல.

2—12—1922 தேதி, 2396, வ.து.க.செ.பலவ.

(XXXV) வேலை முடிவு பற்றிய அறிக்கை.—ஒப்பளிக்கப்பட்ட வேலை முடிந்த பிறகு எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் தாசில்தாரோ, நேரில் அவரால் வேலையைப் பார்வையிட முடியாவிடில் துணைத் தாசில்தாரோ XII-ஆவது இணைப்பில் உள்ளப் படிவத்தில் முடிவைப் பற்றியதோர் அறிக்கை கோட்ட ஆட்சியாளரின் வழியாகக் கலெக்டருக்கு மேல் அனுப்ப வேண்டும். ஒவ்வொன்றிற்கும் 1,000 ரூபாய்க்கு குறைந்த செலவான எல்லா வேலைகளைப் பற்றி தொகுப்பு அறிக்கையை (XIII -வது இணைப்பில்) அனுப்பலாம்.

3—7—1888 தேதி, வ.து.க.செ.

25—8—1909 தேதி, 591 2379 அ.ஆ.

(XXXV) செலவின் முன்னேற்றத்தைக் காட்டும் பதிவேடு.—ஒவ்வொரு குறிப்பிட்ட வேலையிலும் மாதச் செலவின் முன்னேற் றத்தைக் காட்டும் XIV-ஆவது இணைப்பில் கண்ட பதிவேட்டை தாசில்தார் எழுதிவைத்து வர வேண்டும். இதில் செலவுகளை துணைத் தலைப்புகளின் கீழ் பிரித்து எழுத வேண்டியதில்லை. (1) ஒப்பந்தத்தால் முடிவான வேலை (2) தினக்கூலி கொடுக்கப் பட்டு முடிவடைந்த வேலை என்ற இரு பிரிவுகளின் கீழ் ஒவ் வொரு வேலைக்கும் ஒவ்வொரு மாதமும் செலவான மொத்தத் தொகையை எழுதுவது போதுமானது.

(XXXVii) முன்னேற்ற அறிக்கை.—ஒவ்வொரு [3] காலாண்டின் இறுதியிலும்[3], அந்த மாதத்திலும் அந்த மாதம் முடியவும் ஒவ்வொரு வேலைக்கும் செலவான மொத்தத் தொகை அடங்கிய

முன்னெற்ற அறிக்கை இப் பதிவேட்டிலிருந்து (XV-ஆவது இணைப்பில் கொடுக்கப்பட்ட படிவத்தில்) தாசில்தார் தயார் செய்து கோட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும். கோட்ட ஆட்சியாளர் தமது கோட்டத்திலுள்ள எல்லாத் தாலூகாக்களின் வேலைகளுக்குரிய தொகுத்த அறிக்கை ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் கலெக்டருக்கு அனுப்புவார். ஆனாலும் ஆண்டின் கடைசி மூன்று மாதங்களுக்கு, முன் சொன்ன அதே படிவத்தில் மாத அறிக்கைகள் தாசில்தார் கோட்ட ஆட்சியாளருக்கு அனுப் புவதோடு அவற்றின் நகல்களை, அவ்வப்போது கலெக்டருக்கும் நேராக மேலனுப்பவேண்டும்.[1]

[1] 25—3—1909 தேதி. 2370 அ.ஆ.

(xxxviii) **கலெக்டர்கள் வைத்து வர வேண்டிய பதிவேடு களும் கணக்குகளும்.**—கலெக்டர்கள் வைத்து வரவேண்டிய பதி வேடுகளும் கணக்குகளும்—

(1) பாசனங்களின் அச்சிட்ட பட்டியல் (இணைப்பு IV).

(2) சிறு பாசன ஆதாரங்களின் நிலைப் பேரேடு (இணைப்பு V).

(3) நிறைவேற்றப்படுவதற்கான வேலைகளின் திட்டம் (இணைப்பு VIII).

இவற்றில் முதலாவது மேலே (i) உட்பிரிவிலும், இரண்டா வது (ii) உட்பிரிவிலும், மூன்றுவது (iii) உட்பிரிவிலும் ஏற் கெனவே குறிக்கப்பட்டுள்ளன.

(xxxix) **மாதாந்திரத் தொகுதிப் பட்டியல்.**—கலெக்டர்கள் மேலே குறிப்பிட்டுள்ள XXXIV உட்பிரிவை அனுசரித்து வரப் பெற்ற விவரமடங்கிய பணப் பட்டியல்களிலிருந்து மாவட்டத் திலுள்ள எல்லா வேலைகளுக்கும் தொகுக்கப்பட்ட பணப் பட்டியல் ஒன்று (XIV-ஆவது இணைப்பில் உள்ள படிவத்தில்) ஒவ்வொரு மாதமும் தயாரித்து அதைக் கருவூலக் கணக்குகளில் எழுதி வைக்கப்பட்ட செலவுகளுக்கு ஆதாரவாக, அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும். அந்தப் பட்டியலானது படிவத்திலுள்ளவாறு தினக்கூலியிலும் ஒப்பந் தத்திலும் ஏற்பட்ட செலவுகளைத் தனித்தனியாகக் காட்ட வேண்டும்.

(xi) செலவுக்கான உறுதிச் சீட்டுக்கள்.—"ஒப்பந்தம்" என்ற தலைப்பின் கீழுள்ள செலவுகளுக்கு ஒப்பந்தச் சான்றுகளை உறுதிச் சீட்டுகளாக அனுப்ப வேண்டும். தினக்கூலிச் செலவிற்குக் கொடுக்கப்படும் உறுதிச் சீட்டுகளை அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவருக்கு அனுப்ப வேண்டியதில்லை. இதற்கு, தொகுதிப் பணப்பட்டியலின் அடியில் "மேற்கூறிய பணத்திற்கான உறுதிச் சீட்டுகள் வரப்பெற்றுத் தம் அலுவலகத்தில் கோத்து வைக்கப்பட்டுள்ளன" என்ற ஒரு சான்று கலெக்டர் அளித்தலே போதும்.

(xli) அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவருக்கு முடிவு அறிக்கைகள் அனுப்புதல்.—ஒப்பந்தச் சான்றுகள் அனுப்பப் படுவது மாத்திரமின்றி (xxxv) உட்பிரிவில் கண்டுள்ளவாறு) தாசில்தார்களிடமிருந்து கிடைக்கப்பெறும் முடிவு அறிக்கைகளையும் கலெக்டர்கள் அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும்.

1—8—1904 தேதி. 272 வ.து.செ.நி.

(xiii) விவரமடங்கிய பட்டியல்களையும் பெயர்ப் பட்டியல்களையும் கோத்து வைப்பது.—தாசில்தார்களிடமிருந்து வரப் பெற்ற விவரமடங்கிய பணப் பட்டியல்கள் எளிதாக எடுத்துப் பார்க்கப்படுவதற்கு வசதியாகத் தாலுகா வரிசையில் கலெக்டர் அலுவலகத்தில் கோத்துவைக்கப்பட வேண்டும். (அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவருக்கு அனுப்ப வேண்டாதவையென முன் சொல்லப்பட்டவையான) தினக் கூலிச் செலவுகளின் ஆதாரவாக வரப் பெறும் பெயர்ப் பட்டியல்களை விவரம் அடங்கிய பணப் பட்டியல்களுடன் கோத்து வைக்க வேண்டும்.

(xliii) வருவாய்த் துறைக் கழகத்திற்கு அனுப்பவேண்டிய முன்னேற்ற அறிக்கைகள்.—கலெக்டர்கள் xvii -ஆவது இனப் பில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில்) முன்னேற்ற அறிக்கை ஒன்று வருவாய்த் துறை (நில வருவாய்ப் பகுதி) கழகத்திற்கு காலாண்டுக்கொரு முறை அனுப்ப வேண்டும். இப்படிவம் தாசில்தார்களுக்கென (XVII) -ஆவது உட்பிரிவில்) குறிப்பிட்டுள்ள படிவம் போன்றது. ஆனல் இதில் "நடைமுறை மாதச் செலவுகள்" என்ற கட்டத்தின் விவரங்கள் விடப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையானது முன்னேற்றத்திலுள்ள ஒவ்வொரு

வேலைக்கும் விவரமாகத் தயாரிக்கப்பட வேண்டியதில்லை; ஆனால் அது செலவான மொத்தத் தொகைகளை மாத்திரமே காட்ட வேண்டும்.

3—9—1887 தேதி, 318 வ.து.க.செ. நிர்.
10—12—1896 தேதி, 417 வ.து.க.செ. நிர்.
25—8—1909 தேதி, 2370 அ.ஆ.
12—7—1956 தேதி, 2767, அ.ஆ.வரு.பலவ.

88. புதிய பாசனத் திட்டங்கள்.—1. பொது.—ஒவ்வொரு நீர்ப் பாசனத் திட்டமும் பொறி இயல் பணித் துறை அலுவலர்களால் அதன் வருவாய் நிதி நிலைகளைப் பற்றி வருவாய்த் துறை அலுவலர்களிடமும், பொதுவாக, திட்டத்திற்குட்பட்ட நிலப் பகுதியின் பல பாகங்களிலும் உள்ள மண் பொருத்தத்தையும், சிறப்பாக அங்கு கிடைக்கக்கூடிய தண்ணீர் அளவினையும் அனுசரித்து எத்தகைய பயிர் விளைவிக்கத் குடியானவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதில் விவசாயத் துறை அலுவலர்களிடமும், கலந்தாலோசனை செய்து கொண்டே ஆய்வு செய்யப்படுகிறது. இந்த அலுவலர்கள் தாங்கள் ஆய்வு செய்யும்போது முடிவான கருத்துக்களை எழுதி அனுப்புமுன் தம் கருத்துக்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ள வேண்டும். ஒரு திட்டம் பெரிதாகவோ தனித்த வகையில் முக்கியம் வாய்ந்ததாகவோ இருக்குமாலல் தனி வருவாய் அலுவலர், அத்திட்டத்தின் வருவாய் நிதித் தன்மைகளைக் கவனித்துப் பார்த்து ஆலோசனை கூறுவதற்கு வழக்கமாக நியமிக்கப்படுவார். அப்போது விவசாய அம்சங்களைப் பொறுத்த வரையில், விவசாயத் துறை நெறியாளர் விசாரணை செய்வார். சிறியத் திட்டங்களைப் பொறுத்த வரையில், ஒவ்வொரு திட்டத்தின் வருவாய் நிதித் தன்மைகளைப் பற்றிய முழுவிவரங்களையும் மாவட்டக் கலெக்டர் கொடுப்பார்.

2. விசாரணைக் கட்டங்கள்.—ஒவ்வொருப் புதிய பாசனத் திட்ட ஆய்வும் (1) பூர்வாங்க ஆய்வு, (2) விவரமான ஆய்வு என்ற இரு வேறுபட்ட கட்டங்களை உடையது. பொறி இயல் பணித் துறை, வருவாய்த் துறை, விவசாயத் துறை. இத் துறைகளின் நடவடிக்கைகளை ஒருமைப் படுத்தும் நோக்கோடு "விவசாயம் பாசனம் வளர்ச்சிக் கழகம்" ஒன்றை அரசினர் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இக்கழகம் வருவாய்த் துறைக் கழக ஆணையாளர்கள் ஒருவரையும் பாசனத்தலைமைப் பொறியாளரையும் விவசாயத் துறை இயக்குநரையும் உறுப்பினர்களாகக் கொண்

டிருக்கும். வருவாய்த் துறைக் கழக இணைச் செயலாளர் அதன் செயலாளர் ஆவர். அறிவுரை கூறுவது மாத்திரமே அதன் வேலையாக இருப்பதால் வருவாய்த் துறை, பொறி இயல் பணித் துறை, விவசாயத் துறை இவற்றின் தலைவர்கள் பொறுப்பும் மற்ற அலுவலர்களின் தனிப்பட்ட பொறுப்பும் நீங்கா. ஒரு பாசனத் திட்ட ஆய்வு சம்பந்தமாக வருவாய், பாசனம், விவசாயம், ஆகிய இம் மூன்று துறைகளின் செயல்களை ஒருமைப் படுத்தும் நோக்கோடு, அத்துறைகளின் தலைவர்களை (வருவாய்த் துறைக் கழகத்தினர், பாசனத் தலைமை பொறியாளர், விவசாயத் துறை இயக்குநர் ஆகியோரை) அறிக்கைகள் அனுப்புமாறு கேட்கவும், தான் விரும்பும் ஆலோசனைகளை அவர்களுக்கு தெரிவிக்கவும் விவசாயம், பாசன வளர்ச்சிக் கழகத்திற்கு உரிமையுண்டு. பூர்வாங்க ஆய்வுக்கும் விவரமான ஆய்வுக்காக சம்பந்தப்பட்ட ஒவ்வொரு துறையின் தேவைக் கோரிக்கைகளை ஆராய்ந்து பார்த்துச் செய்யப்பட வேண்டுமென யோசனைக் கூறப்பட்ட ஆய்வுகள் மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் மிகையாகாமல் போதுமான அளவிற்குள் இருக்கின்றனவா என்பதையும் அவற்றிற்காக அத் துறை கேட்டிருக்கக் கூடிய தனிப் பணியாளர்கள் அந்த ஆய்வுக்காக உண்மையில் அவசியமா என்பதையும், அவ்விசாரணை அல்லது திட்டத்தின் பொதுவான அம்சத்தையும் மற்றத் துறைகள் செய்ய வெண்டிய வேலைகளையும் கருத்திற்கொண்டு ஒப்பளிக்கப்பட்ட தனிப் பணியாளர்களை அவர்கள் பணி தேவையாக இருக்கும் காலத்திற்கு முன்னதாகவோ அல்லது தேவையான காலத்திற்கு அதிகமாகவோ வைத்துக் கொள்ளவில்லை என்பதையும் விவசாயம், பாசனம் வளர்ச்சிக் கழகம் கவனித்துப் பார்க்கும். பூர்வாங்க ஆய்வு செய்யப்படும்போதும் விவரமான முழு ஆய்வு செய்யப்படும் போதும் வருவாய்த் துறைத் தல அலுவலர்களின் கடமைகள் கீழே கொடுக்கப் படுகின்றன.

12—7—1956 தேதி. 2767, அ.ஆ.வரு.

3. பூர்வாங்க ஆய்வு.—திட்டத்திற்குத் தோராயமாகச் செலவாகக் கூடிய தொகையின் மதிப்பை அறிவதற்கும், அதில் மேற்கொண்டு ஆய்வு செய்து முடிவில் நிறைவேற்றப்படுவதற்காக அத்திட்டம் சாத்தியமானதா என்பதையும் கண்டுகொள்ளுவதற்கும் வேண்டிய புள்ளி விவரங்களை பார்வையிடுதல் பூர்வாங்கக் களப்பணி விசாரணை செய்தல் மூலம் சேகரித்தல்

டிருக்கும். வருவாய்த் துறைக் கழக இணைச் செயலாளர் அதன் செயலாளர் ஆவர். அறிவுரை கூறுவது மாத்திரமே அதன் வேலையாக இருப்பதால் வருவாய்த் துறை, பொறி இயல் பணித் துறை, விவசாயத் துறை இவற்றின் தலைவர்கள் பொறுப்பும் மற்ற அலுவலர்களின் தனிப்பட்ட பொறுப்பும் நீங்கா. ஒரு பாசனத் திட்ட ஆய்வு சம்பந்தமாக வருவாய், பாசனம், விவசாயம், ஆகிய இம் மூன்று துறைகளின் செயல்களை ஒருமைப் படுத்தும் நோக்கோடு, அத்துறைகளின் தலைவர்களை (வருவாய்த் துறைக் கழகத்தினர், பாசனத் தலைமை பொறியாளர், விவசாயத் துறை இயக்குநர் ஆகியோரை) அறிக்கைகள் அனுப்புமாறு கேட்கவும், தான் விரும்பும் ஆலோசனைகளை அவர்களுக்கு தெரிவிக்கவும் விவசாயம், பாசன வளர்ச்சிக் கழகத்திற்கு உரிமையுண்டு. பூர்வாங்க ஆய்வுக்கும் விவரமான ஆய்வுக்காக சம்பந்தப்பட்ட ஒவ்வொரு துறையின் தேவைக் கோரிக்கைகளை ஆராய்ந்து பார்த்துச் செய்யப்பட வேண்டுமென யோசனைக் கூறப்பட்ட ஆய்வுகள் மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் மிகையாகாமல் போதுமான அளவிற்குள் இருக்கின்றனவா என்பதையும் அவற்றிற்காக அத் துறை கேட்டிருக்கக் கூடிய தனிப் பணியாளர்கள் அந்த ஆய்வுக்காக உண்மையில் அவசியமா என்பதையும், அவ்விசாரணை அல்லது திட்டத்தின் பொதுவான அம்சத்தையும் மற்றத் துறைகள் செய்ய வெண்டிய வேலைகளையும் கருத்திற்கொண்டு ஒப்பளிக்கப்பட்ட தனிப் பணியாளர்களை அவர்கள் பணி தேவையாக இருக்கும் காலத்திற்கு முன்னதாகவோ அல்லது தேவையான காலத்திற்கு அதிகமாகவோ வைத்துக் கொள்ளவில்லை என்பதையும் விவசாயம், பாசனம் வளர்ச்சிக் கழகம் கவனித்துப் பார்க்கும். பூர்வாங்க ஆய்வு செய்யப்படும்போதும் விவரமான முழு ஆய்வு செய்யப்படும் போதும் வருவாய்த் துறைத் தல அலுவலர்களின் கடமைகள் மேலே கொடுக்கப் படுகின்றன.

12—7—1956 தேதி, 2767, அ.ஆ.வரு.

3. பூர்வாங்க ஆய்வு.—திட்டத்திற்குத் தோராயமாகச் செலவாகக் கூடிய தொகையின் மதிப்பை அறிவதற்கும், அதில் மேற்கொண்டு ஆய்வு செய்து முடிவில் நிறைவேற்றப்படுவதற்காக அத்திட்டம் சாத்தியமானதா என்பதையும் கண்டுகொள்ளுவதற்கும் வேண்டிய புள்ளி விவரங்களை பார்வையிடுதல் பூர்வாங்கக் களப்பணி விசாரணை செய்தல் மூலம் சேகரித்தல்

மட்டுமே திட்டத்தைப் பற்றிய பூர்வாங்க ஆய்வுக்கு உரியன. சாதாரணமான நிலையில் தோராயமாக எவ்வளவு தண்ணீர் கிடைக்கக் கூடுமென்ற மதிப்பும் அது எப்பருவங்களில் கிடைக்கும் என்பதையும் தண்ணீர் பற்றுக்குறையாக இருக்கக் கூடிய ஆண்டுகளின் சதவிகிதமும், கடைக்காலின் தன்மையையும் மண்ணின் தண்ணீரை உரிஞ்சும் தன்மையையும் அனுசரித்து திட்டமிட்டிருக்கும் வேலைகள் செய்து முடிக்கப்படக் கூடுமா என்பதும், நீர்பாயக் கூடிய மொத்தப் பரப்பும், சாதாரண ஆண்டுகளில் பாசனம் செய்யக் கூடிய பரப்பும், வடிகால் அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் நீர்ப் பாசனம் செய்யப்பட வேண்டிய பரப்பும், அரசினர் நிறைவேற்ற வேண்டிய எல்லா வேலைகளுக்கும் ஆகக்கூடிய தோராயச் செலவு மதிப்பும், இவற்றைப் பற்றிப் பொறி இயல் பணித் துறையின் பூர்வாங்க ஆய்வு அறிக்கை தகவல் கொடுக்க வேண்டும். பொறி இயல் பணித் துறை அலுவலர்கள் இம்மதிப்புப் புள்ளி விவரங்களைத் தயார் செய்துகொண்டிருக்கும்போதே, வருவாய்த் துறையின் தல அலுவலர்கள் அவர்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ளுவதோடு, திட்டமிட்டிருக்கும் வேலைகளைப் பற்றிக் குடிகளின் மனப்போக்கு அல்லது கருத்துக்கள் என்ன என்று பொறி இயல் பணித் துறை அலுவலர்கள் கேட்கும்போது அவர்களுக்குச் சொல்லவேண்டும். விவசாயத் துறைத் தல அலுவலர்கள் எத்தகைய பாசனப் பயிர்களுக்குத் தக்கவாறாக மண் வயமை முள்ளது என்பது பற்றியும் அதிக ஆதாயம் தரக்கூடிய எத்தகைய பயிர்களை விளைவிக்கலாம் என்பது பற்றியும் விவசாயிகளுக்கு ஆலோசனை கூறலாமென்பதில் கவனித்துப் பார்த்துக் கலெக்டருக்கு அறிவிக்க வேண்டும். ஒரு லட்ச ரூபாய்க்கு அதிகம் செலவாகக் கூடிய திட்டங்களில், தல விவசாய அலுவலர் அவற்றைப்பற்றி மேலே குறிக்கப்பட்டுள்ள விவரங்கள் அடங்கிய அறிக்கையை விவசாயத் துறை இயக்குநர் அனுப்ப வெண்டும். விவசாயத் துறை இயக்குநர் அந்த அறிக்கையைத் தமது சொந்தக் குறிப்புகளுடன் கலெக்டருக்கு அனுப்ப வேண்டும். பொறி இயல் பணித் துறை நிர்வாகப் பொறியாளர் தமது அறிக்கையைக் கலெக்டருக்கு அனுப்ப வேண்டும். பொறி இயல் பணித் துறையினர் தயார் செய்த அறிக்கையில் திட்டத்தை ஆதாயம் கொடுக்கத் தக்கதாகச் செய்வதற்கு விதிக்கக்கூடிய தண்ணீர்த் தீர்வை உட்படத் திட்டத்தின் நிதித் தன்மையைப் பற்றிய முன் மதிப்பீட்டைக் கலெக்டர் தணிக்கை செய்ய

வேண்டும். அத் திட்டத்தைப் பற்றிக் குடிகளின் பொதுக் கருத்துக்களையும் உத்தேசித்திருக்கும் தண்ணீர்த் தீர்வையைப் பற்றி அவர்கள் நோக்கத்தையும் தெரிந்து, அவர்களுடன் கலந் தாலோசித்துத் திட்டத்தை விவரமான ஆய்வுக்கு எடுத்துக் கொள்வது விரும்பத்தக்கதா என்பதில் பொதுவாகத் தாம் செய்த முடிவுகளையும் அவர் பதிவு செய்ய வேண்டும். இதற்காகக் கிராம அலுவலர்களையும் சம்பந்தப்பட்ட முதன்மையான குடி களையும் அவர்களின் பிரதிநிதிகளையும் திட்டப் பகுதியின் நடு விடங்களில் பெரிய கூட்டங்களில் கூட்டுவித்து, அத் திட்டத்தால் அப்பகுதி மக்கள் அடையக் கூடிய நன்மைகளையும் மூன்று துறை அலுவலர்களும் விளக்கிக் கூறவேண்டும். கலெக்டர் தம் குறிப்புரையை நிர்வாகப் பொறியாளருக்கு அனுப்பின பின் நிர்வாகப் பொறியாளர் சம்பந்தப்பட்ட பதிவுக் கட்டுகள் எல்லா வற்றையும் மேற்பார்வைப் பொறியாளருக்கு அவரது ஒப்பளிப் பைப் பெறுவதற்கு அல்லது அவ்வவற்றிற்குத் தக்கவாறு தலைமைப் பொறியாளர் அல்லது அரசினர் ஒப்பளிப்பைப் பெறு வதற்கு அனுப்புவார்.

12—7—1955 தேதி. 2767. அ.ஆ.வரு.பல.

4. விவரமான விசாரணை.—முன் விசாரணை அறிக்கையின் மீது பின்னர் விவரமான விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அதிகாரம் பெற்ற அதிகாரி முடிவு செய்வா ரெனில், பாசன வடிகால் வேலைகளுக்கான விவரமான தரைப் படங்களையும் மதிப்புப்பட்டியல்களையும் பொறி இயல் பணித் துறை தயார் செய்வதுடன் சரியான ஆயக்கட்டையும் அப் போதே நிர்ணயிக்க வேண்டும். அத்திட்டம் முக்கியமான தாயிருக்குமானால், பொறி இயல் பணித் துறை அலுவலர்களுடன் வேலை செய்ய ஒரு தனி வருவாய் அலுவலர் அமர்த்தப்படுவார். தனி அலுவலர் நியமிக்கப்படாவிட்டால், ஆயக்கட்டைத் தீர் மானிப்பதற்குக் கோட்ட ஆட்சியாளர் தாமே நிர்வாகப் பொறி யாளருடன் நேர்முகமாகப் பணியாற்றுவார். ஆயக்கட்டைத் தீர்மானிக்கும்போது, தேவையானால், கிராமத்தார்களின் பொது உபயோகத்திற்குரிய கிராம நத்தம், இடுகாடு, களம், மேய்ச்சல் தரை முதலியவற்றிற்கும், சாலைகள் வண்டிப்பாதைகள் போன்ற மற்றப் பொது உபயோகங்களுக்கும் வேண்டிய நிலங்களை ஒதுக் குவதில் கவனம் செலுத்த வேண்டும். குடிகள் தங்கள் நிலத்தை ஆயக்கட்டில் சேர்ப்பதற்கும் விதிக்கப்படக் கூடிய தண்ணீர்த்

நீர்வைக்கும், அவர்கள் தரும் இசைவை எழுத்து வடிவில் வாக்கு மூலமாகவோ அல்லது உடன்படிக்கையாகவோ கோட்ட ஆட்சி யாளராயினும் பொறி இயல் பணித்துறையினருடன் பணி ஆற்ற நியமிக்கப்பட்ட வருவாய் அலுவலராயினும் பெறவேண்டும். இதன் பொருட்டு, மதகு அல்லது குழாய் வைக்குமிடத்தையும், அல்லது ஒவ்வொரு புலத்தின் பாசனத்திற்காகப் பொறி இயல் பணித் துறையினர் உத்தேசித்திருக்கும் மதகின் இடத்தையும், பாசன வாய்க்கால் அமைக்கப்படும் வகையையும் எந்த அளவு மட்டத் தில் பாசனத்திற்குத் தண்ணீர் வழங்கப்படுமென்பதையும் தோரா யமாகச் சம்பந்தப்பட்ட குடிகளுக்குத் தெரிவிக்க வேண்டும். ஒரு கிராமத்திலுள்ள பல நிலங்களைப் பற்றிப் பல குடிகள் ஒரே வாக்குமூலத்தில் கையொப்பமிடலாம். ஆனால், ஒவ்வொரு விவ சாயியின் கையொப்பமும் எந்த நிலம் அல்லது நிலங்களுக்கு உரியது என்பது தெளிவாக இருக்க வேண்டும். குடிகளில் ஒரு சிலர், பொதுவாக, தங்கள் நிலங்களை ஆயக்கட்டில் சேர்க்க விரும்பவில்லையானால் அவற்றிற்குப் பதிலாக மற்றொரு பகுதியை அந்த ஆயக்கட்டில் சேர்ப்பதைப் பற்றி ஆலோசிக்க வேண்டும். எல்லாக் குடிகளுமோ அவர்களில் ஒரு பெரும்பகுதியினரோ, அந்த ஆயக்கட்டில் தங்கள் நிலங்களைச் சேர்ப்பதை, அல்லது விதிக்கப்பட்ட யோசனையிலிருக்கும் தண்ணீர் நீர்வை விதிக்கப் படுவதையோ விரும்பவில்லையென்றால், திட்டத்தைப் பற்றிய விசாரணை மேற்கொண்டு தொடர்ந்து செய்ய வேண்டுமா, வேண்டாமா என்பதில் தகுதியுடைய அதிகாரியின் ஆணையைப் பெறவேண்டும். அத்திட்டம் நிறைவேற வேண்டும் என்பது குடிகளின் பொதுவான விருப்பம் என்று எழுத்து வடிவிலுள்ள வாக்குமூலங்களிலிருந்து தெரியவந்தால் அல்லது அரசினர் அவ்விசாரணையைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று ஆணை யிடுவார் எனில் ஆயக்கட்டை வரையறுத்து நிர்ணயம் செய்ய வேண்டும். 'பெரிய நிலப்பகுதிகளுக்கு' வாய்க்கால்கள் அமைப்பதற்கும், அவற்றிற்குள் சிறு பகுதிகளில் குடிகள் தங்கள் செலவில் வாய்க்கால்கள் வெட்டிக்கொள்ளுவதற்காக வேண்டிய நிலங்களின் உரிமை பெறுவதற்கும் தேவையான ஏற்பாட்டை விவர மதிப்புப் பட்டியில் சேர்க்கவேண்டும். இறுதி விசாரணை அறிக்கையில் மாற்றி அமைக்கப்பட்டதும் சரியானதுமான நிதி முன் மதிப்பீடு இருக்க வேண்டும்.

4 12—6—1941 தேதி, 1352, அ.ஆ.வரு.பல.
41—10—1941 தேதி, 112, வ.து.க.செ.அச்சு.

திட்டங்களின் விசாரணையையும், அவற்றிற்கு மதிப்புப் பட்டிகள் தயாரிப்பதையும் துரிதப்படுத்தும் நிமித்தம் கீழ்க் காணும் நடைமுறையை மேற்கொள்ள வேண்டும் :—

(i) 20,000 ரூபாய் வரை மதிப்புள்ள பெரிய பாசனத் திட்டங்களை, சம்பந்தப்பட்ட நிர்வாகப் பொறியாளரும் கலெக்டரும் முடிவு செய்து அவற்றிற்கு ஆட்சி ஒப்பளிப்பு பெறுவதற்கு அதிகாரம் பெற்ற அதிகாரிக்கு அனுப்பவேண்டும்.

(ii) 20,000 ரூபாய்க்கு அதிகமாகவும் ஆனால் ஒரு லட்சத் திற்கு அதிகமாகா மதிப்புத் திட்டங்களைப் பொறுத்தவரையில் நிர்வாகப் பொறியாளர் அவற்றின் தொழில் நுட்ப விவரங்களைப் பற்றியும் இயலுமானால் கலெக்டர் வருவாய் சம்பந்தப்பட்ட விவரங்களைப் பற்றியும் இயலுமானால் ஒரே சமயத்தில் திட்டங்களில் மாறுதல் ஏதேனுந் செய்வாரெனில், அம்மாறுதலை விசாரணை செய்து, பொறி இயல் பணித் துறைத் தலைமைப் பொறி பற்றிக் கலெக்டரின் கருத்தறிந்து, அத்திட்டத்திற்கு அரசினரின் ஒப்பளிப்பு தேவையானால், வருவாய்த் துறைக் கழகத்திற்கு எழுதாது நேராக அரசினருக்கு மேலனுப்ப வேணடும்.

12—10—1956 தேதி, 85545—அ:56. அ.குறிப்பு.

(iii) ஒரு லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட திட்டங்களை நிர்வாகப் பொறியாளரும் கலெக்டரும், ஒரே சமயத்தில் அவற் றின் தொழில்நுட்ப வருவாய் சம்பந்தப்பட்ட விவரங்களைப் பற்றி முறையே இயன்ற வரையில் விசாரணை செய்து அவற்றைப் பொறி இயல் பணித் துறைத் தலைமைப் பொறியாளருக்கு அனுப்ப வேண்டும். அவர் அத்திட்டத்தில் மாறுதல் செய்வா ரெனில் அம்மாறுதலைக் கலெக்டரின் கருத்தறிந்து பின்னர் அவற்றைப் பற்றி வருவாய்த் துறைக் கழகத்தின் வழியாக அரசினருக்கு மேல் அனுப்ப வெண்டும். நிதி விவரங்களையும், கலெக்டர் தனது கவனத்திற்குக் கொண்டு வந்த மற்ற எந்த விவரத்தையும் ஆராய்வது மாத்திரம் வருவாய்த் துறைக் கழகத் தின் கடமையாகும்.

12—7—1956 தேதி, 2767, அ.ஆ.வரு.பல.

5. இறுதித்திட்ட அறிக்கைகளுடன் சேர்த்து அனுப்ப வேண்டிய குறிப்புகள்.—( ) வருவாய்த் துறையும் விவசாயத் துறையும் கவனிக்க வேண்டிய தகவல்கள்—கீழ்க்கண்ட அம்சங் களில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் :—

முதலாவது.—பாசனம் செய்யத் திட்டமிட்டிருக்கும் நிலப் பரப்பு இருக்கிறதா? அது பாசனத்திற்குத் தகுதியாக இருக்கிறதா? விவசாய நோக்கிலிருந்து பார்க்கும்போது நிலத்தின் தன்மையும் எத்தகைய பயிர்களை அதில் விளைவிக்கலாம் என்பதையும் விவசாயத் துறையிலிருந்து பெறப்பட்ட தனி அறிக்கையைக் கொண்டு சற்று விளக்கமாக கவனித்துப் பார்க்க வேண்டும்.

இரண்டாவது.—நீர் பாய்ச்சப்படாத நிலப்பகுதிகளில் பாசன வசதி ஏற்படுத்தல் அல்லது ஒரு பகுதி நீர் பாய்ச்சப் படும் நிலங்களின் பாசனத்தை மற்ற நிலங்களுக்கும் விரிவு செய்வது மக்களால் விரும்பப்படுகிறதா அல்லது பொதுவாக பாராட்டப்படக்கூடுமா.

மூன்றாவது.—பாசன விவசாயம் தக்கதான விரைவினில் விரிவடையக் கூடிய அந்நிலப் பரப்பில் மக்கள் தொகை போதிய அளவில் உள்ளதா.

நான்காவது.—பாசனம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ள பரப்புகளுக்குள்—

(1) கைப்பற்றிலிருக்கும் அரசுக்குடி நிலங்கள்.

(2) அரசாங்கத் தரிசு நிலம்.

(3) ஜமீன்தாரி நிலங்கள்.

(4) இனம் நிலங்கள்—இவற்றின் கீழ் உள்ள தனித் தனிப் பரப்பு எவ்வளவு.

ஐந்தாவது.—தண்ணீர்த் தீர்வையின்றியே நீர்ப்பாசனத் திற்கு உரிமையுள்ள நிலங்கள் இத்திட்டப்பகுதியில் சேர்க்கப் பட்டிருந்தால் அவற்றின் பரப்பும் அமைந்திருக்கும் இடமும்.

ஆறாவது.—விதிக்க உத்தேசித்துள்ள அல்லது பரிந்துரை பகரப்பட்டுள்ள தண்ணீர்த் தீர்வையின் விதிதங்கள் யாவை.

அந்நிலப்பரப்பு முன்பே ஒரு பகுதிப் பாசனத்தில் சேர்ந்திருக்குமானால் ஒரு பகுதிப் பாசனத்திற்கு ஏற்பட்ட தண்ணீர்த் தீர்வை விகிதத்தைக் கூறவேண்டும். அல்லது தனி யாகத் தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படவில்லையென்றால், அதை

மொத்தத் தீர்வையிலிருந்து பூகித்துப் பிரித்துக் கூற வேண்டும். அவ்வாறு இல்லாவிடில் இப்பாப்பில் அதன் தன்மையைக் கொண்டு அருகிலுள்ள இதர பரப்பின் பாசனத்திலிருந்து கிடைக்கும் வருவாயுடன் இத்திட்டங்களை ஒத்துப் பார்க்க வேண்டும்.

ஏழாவது.—வேலை முன்னேறி நடைபெற்று வரும்போது பாசனமும் விரிவடைந்து வருமா? அதாவது தண்ணீர் கிடைத்ததும் அது உபயோகப்படுத்தப்படுமா? மேலும் திட்டமிடப் பட்டுள்ள முழுப் பாப்பும் பாசனத்திற்குள் பாசன வளர்ச்சியின் உத்தேச விதம் என்ன?

குறிப்பு.—மதிப்பிடப்படும் பாசனப் பரப்பின் வளர்ச்சியையும் அதன் விகிதாசாரக் வாகக் கிடைக்கக் கூடிய வருவாய் வளர்ச்சியையும் காட்டுவதற்கு ஒரு தனிப்படிவம் உள்ளது. மத்திய அரசாங்கத்தின் ஒப்பளிப்பு பெற வேண்டிய எல்லாத் திட்டங்களும் பொறுத்த வரையில், அப் படிவத்தை மாநில அரசாங்கத்தின் தலைமை வருவாய்த் துறை அதிகாரியும் (வருவாய்த் துறைக் கழகம்), பொறி இயல் துறைபணி அலுவலர்களுக்கும் பகாரித்து அதில் கையெழுத்திட வேண்டும்.

30—9—1929 தேதி, 2741–1, அ.ஆ.பொ.ப.து. தல.
12—7—1956 தேதி, 2767, அ.ஆ.பல.

எட்டாவது.—நில ஈட்டுத்தொகை கொடுப்பதற்கான ஏற்பாடு, பத்திரப் புள்ளி விவரங்களில் காட்டப்பட்டுள்ள விலைகளை அனுசரித்துப் போதுமானதாக உள்ளதா?

ஒன்பதாவது.—கட்டத் திட்டமிட்டுள்ள பாலங்களும் மற்றப் போக்குவரத்து வசதிகளும் போதுமானவையா?

பத்தாவது.—ஆயக்கட்டில் சேர்க்கப்படக் கூடிய ஜமீன் தனி உரிமை நிலங்கள் அளவை செய்யப்பட்டிருக்கின்றனவா. எஸ்டேட் நிலச் சட்ட முறையில் இந்நிலங்களுக்குப் பாசன உரிமைப் பதிவேடு தயாரிக்கப்படடுள்ளதா. இல்லையென்றால் இந்நிலப்பரப்பை அளந்து பாசன உரிமை ஆவணம் தயாரிப்பது விரும்பத்தக்கதா. இதற்குரிய மொத்தச் செலவை இறுதி அறிக்கையிலும் மதிப்புப் பட்டிகளிலும் சேர்ப்பதற்காகப் பொறி இயல் பணித் துறைக்கு அறிவிக்க வேண்டும்.

பதினொன்றாவது.—வேலை முடிவடைந்த சில ஆண்டுகளுக்குள் வருவாய் முன் மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டிருக்கும் அரசாங்கத் தரிசு நிலங்களின் இரயம் கிடைக்கப் பெறலாமென்று நியாயமாகக் கருதலாமா? பாசன வளர்ச்சி விவரப்

பட்டியில் அடுத்தடுத்த ஆண்டுகளில் எதிர்பார்க்கிறவாறு நிலங்கள் விற்பனை நடைபெறுமா? மேலே நான்காவது இனத்தில் கூறப்பட்டுள்ள அரசாங்கத் தரிசு நிலங்களில் எவ்வளவு பாப்பு நிலத்தைக் கால்நடைத் தீவனப் பயிர்கள் விளைவிக்க ஒதுக்கிவைத்து ஒப்படை செய்யலாம்.

31—8—1937 தேதி, 85(1) அ.ஆ.பொ.ப.து.தல.

22—9—1937 தேதி, 102, வ.து.க.செ.அச்சு.

பதினெண்டாவது.—திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் உண்டாகும் மாறுபட்ட சூழ்நிலைகளினால், வருவாய்க் கோட்டங்களும் தாலுகாக்களும் மாறுதல் அடையக் கூடிய அவசியம் ஏற்படுமா. பணியாளர்களை நியமிப்பதில் கூடுதலாகக் கூடிய செலவையும், புதிய கட்டடங்கள் முதலியனவற்றிற்காக மீண்டும் மீண்டும் செலவு செய்யப்படாத செலவுத் தொகையையும் குறிக்க வேண்டும்.

பதின்மூன்றாவது.—எந்த அளவிற்குத் தற்போதுள்ள (அரசாங்க அல்லது தனியுரிமை ஜமீன்) பாசன ஏரிகளை, திட்டமிட்டிருக்கும் பாசன வேலையின் ஒன்றுபட்ட பகுதியாகக் கருத வேண்டும்.

(ii) மதிப்பீடு செய்யப்பட்ட பரப்பு.—பெரிய பாசனத் திட்டங்களில் கால்வாய், வாய்க்கால், கண்ணி வாய்க்கால் இவற்றிற்கு உத்தேசிக்கப்பட்ட நேர்பாட்டையும் ஆயக்கட்டில் நிலமுடைய தனிப்பட்ட குடிகளின் விருப்பத்தையும் அனுசரித்து ஒவ்வொரு பாசன வாய்க்காலின் ஆயக்கட்டு திட்டமாய் நிர்ணயிக்கப்பட வேண்டும். விவரமான தரைப்படங்களையும் மதிப்புப் பட்டிகளையும் தயாரித்து ஆயக்கட்டையும் நிர்ணயிக்கும்போதே பொருத்தமான படிவத்தில் கிராம வரிசையில் ஆயக்கட்டுப் பதிவேடும் தயாரிக்க வேண்டும். நிலையான அனுமதிச் சீட்டுகளைக் குடிகளுக்கு பொறி இயல் பணித் துறை அல்லது வருவாய்த் துறையைச் சேர்ந்த அரசிதழ்ப் பதிவுபெற்ற அலுவலரால் அல்லது அவர் முன்னிலையில் வழங்கப்பட வேண்டும். குடிகளில் எவராயினும் அந்த அனுமதிச் சீட்டை ஏற்க மறுத்து விடுவார் எனில், அச்சீட்டைத் தள்ளுபடி செய்து அந்நிலத்தை ஆயக்கட்டுப் பதிவேட்டிலிருந்து நீக்கி விட்டு அதற்குப் பதிலாக, முடியுமானால், வேறு நிலத்தை ஆயக்கட்டில் சேர்க்க வேண்டும்.

முந்திய பாசனம் புதிய திட்டத்தினால் பாதிக்கப்பட்டு, முந்திய பாசன நிபந்தனைகளை அனுசரித்து எந்நிலங்களுக்காயினும் நிலையின்றியோ அல்லது சலுகைத் தண்ணீர்த் தீர்வை முறையிலோ நீர்ப்பாசனம் செய்துகொள்ள உரிமை இருக்குமானால் அவ்விவரங்களையும் இந்த ஆயக்கட்டுப் பதிவேட்டில் குறிக்க வேண்டும்.

(iii) நில அளவைப் படங்களில் பரப்பைக் குறியிட்டுக் காட்டுதல்.—திட்டப்படுத்தப்பட்டுள்ளவாறு நீர்ப்பாசனம் செய்யக் கூடியவையும் உண்மையில் நீர்ப் பாய்ச்சிக் கொள்ள உத்தேசித் திருக்கக் கூடியவையுமான நிலப்பகுதிகளை நில அளவைப் படங்களில் குறியிட்டுக்காட்ட வேண்டும். அவற்றில் கிராமங்களின் பெயர்களையும் அவற்றின் எல்லைகளையும் குறிக்க வேண்டும். ஆயக்கட்டுப் பதிவேட்டிலுள்ள பதிவுகளை அனுசரித்து பாசனம் செய்யப்படக் கூடிய நிலப் பகுதிகளை அவற்றின் தரைப்படங்களில் சரியாகக் குறியிட்டுக் காட்டும் பொறுப்பு வருவாய் அலுவலர்களையும், பொறி இயல் பணித் துறை அலுவலர்களையும் சாரும்.

6. புதிய பாசனத் திட்டங்களுக்குக் கொடுக்கப்படும் அரசினர் ஒப்பளிப்பு.—அரசினரால் ஒப்பளிக்கப்பட்ட திட்ட வேலை ஆரம்பித்த பின்னர் அதைப் பொறி இயல் பணித் துறையினர் நிறைவேற்றுவதில் "விவசாயம் பாசனம் வளர்ச்சிக் கழகத்திற்கு" பொறுப்பு இல்லாவிட்டாலும் ஆயக்கட்டைத் தீர்மானித்தல், குடிகள் தங்கள் நிலத்தைப் பாசனத்திற்குத் தயார் செய்வதற்காக வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளுதல், அமைக்கப்படத்தக்க சாலைகள், பாலங்கள் முதலியவற்றைத் தாமதம் செய்யாது பாசனம் தொடங்கப்படக் கூடிய காலத்திற்குள் செய்து முடிக்கப்படுமாறு கவனித்துக்கொள்ளுதல் அதன் கடமைகளாகும். வேலை செய்து முடிப்பதில், அல்லது திட்ட முறையில் அதன் முன்னேற்றத்தில் (எடுத்துக்காட்டாக நில ஒப்படையில் ஆயக்கட்டு நிர்ணயம் செய்வதில் அல்லது சாலைகள் அமைப்பதில்) இடையூறாக இருக்கக்கூடிய தாமதம் ஏதாவது ஏற்படுமாயின் அதுபற்றிச் சம்பந்தப்பட்ட துறை அல்லது தலை ஆட்சி மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வருவது அதன் கடமையாகும். அத்திட்ட நிதியின் முன் மதிப்பீடு அல்லது

பாசன வளர்ச்சி வீதம் இவை போன்றவற்றில் அவசியமென்று தான் கருதும் அல்லது விரும்பும் மாறுதல்களை அவ்வப்போது தெரிவிப்பதும் அதன் கடமையாகும்.

12—7—1956 தேதி, 2767, அ.ஆ.வரு.பல.

திட்டம் சம்பந்தப்பட்ட வேலைகள் உண்மையில் முடிவடைவதற்கு முன்னதாகவே நிலங்களைப் பாசன விவசாயத்திற்குத் தயார் செய்துகொள்ளுமாறும், சிறு நிலப் பகுதிகளின் பாசன வாய்க்கால்களுக்காக வேலை ஆரம்பிக்கப்பட்டவுடனே அரசாங்கச் செலவில் உரிமை பெறப்படத்தக்க அந்நிலங்களில் வாய்க்கால்களை வெட்டி எடுக்குமாறும் வருவாய்த் துறை அலுவலர்களும் விவசாயத் துறை அலுவலர்களும் குடிகளுக்கு அறிவுறுத்தித் தூண்டுகிறார்களா என்பதைக் கவனிப்பதும் இக் கழகத்தின் கடமையாகும். நீர்ப்பாசனம் ஆரம்பமானவுடனே, திட்ட முறையில் ஆண்டுதோறும் பாசனம் அதிகரித்து வரும் பொருட்டும் நிதியின் முன்மதிப்பீட்டை அனுசரித்து அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய தொகை கிடைக்குமாறும் பாசன வளர்ச்சி இவ்வாறு இல்லையேல், அதற்கான காரணங்களைக் கண்டறிந்து, அரசாங்கத்திற்கோ அல்லது சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கோ வளர்ச்சிக்கு நேரிட்ட தடைகளைப் போக்குவதற்காகத் தக்க நடவடிக்கைகளை அவர்கள் எடுக்குமாறு தனது கருத்தைத் தெரிவிக்க வேண்டும். திட்ட மூலதனத் தொகையில் கிடைக்க வேண்டிய வருமானத்தை அடையும் பொருட்டு தண்ணீர்த் தீர்வை விதத்தில் வேண்டிய மாறுதல்களை அவ்வப்போது எடுத்துரைக்கும் உரிமையும் விவசாயம், பாசனம் வளர்ச்சிக் கழகத்திற்குண்டு.

12—12—1934 தேதி, 2586, அ.ஆ.வரு.பல.
19—12—1934 தேதி, 184, வ.து.க.செ.அச்சு.
5—11—1931 தேதி, 2342, வ.கு.க.செ.பலவ.
21—12—1931 தேதி, 105, வ.து.க.செ
12—7—1956 தேதி, 2767, அ.ஆ.வரு.பல.

98. தற்போது இருக்கும் பாசன வேலைகளின் வருவாய் மதிப்புப் பட்டியைக் கலெக்டர்கள் ஆய்ந்து பார்த்தல்.—தற்போதிருக்கும் பாசன வேலைகளில் மேம்பாடு செய்வதற்கான மதிப்புப் பட்டி பொறி இயல் பணித் துறையிடமிருந்து வரப் பெற்றதும் அரசாங்கம் அவ்வப்போது விதித்திருக்கும் பாசன

வேலிகளின் வருமான தர வீதத்தைத் (தற்போது 4 சதவீதம்) அத்திட்டம் அளிக்குமா என்பதில் கலெக்டர், அதன் வருவாயின் தன்மைகளைக் கவனமாய் ஆய்ந்து பார்க்க வேண்டும். பாசனம் விரிவடைவதால் அல்லது பாசனத் தரத்தை உயர்த்துவதால் அல்லது நீர்வை தள்ளிக் கொடுப்பதைத் தவிர்ப்பதால் ஏற்படக் கூடிய கூடுதலான வருவாய்த்தொகை என்ன என்பதைக் கலெக்டர் தீர்மானிக்க வேண்டும். அவ்வாறு தீர்மானிக்கப் பட்ட வருவாய் அத்திட்டத்தை ஆதாயம் தரத்தக்கதாய்ச் செய் வதற்குப் போதாதென்றால், திட்டமிட்டுள்ள வேலிகள் பாசனம் சீர்கேடடைவதைத் தடுக்கக்கூடும் அல்லது பஞ்சம் அல்லது அதுபோன்ற மற்றவற்றிலிருந்து அப்பகுதிக்குப் பாதுகாப்பு அளிக்க முடியும் என்பதால் திட்டம் மேற்கொள்ளப்படுவது நியாயமென நிரூபிக்க முடியுமா என்பதைக் கலெக்டர் கவனித்துப் பார்க்கவேண்டும். பாசன வருமான தர வீதத்தைத் தளர்த்த வேண்டும் என்றால் அதற்குரிய காரணங்களைத் தெளிவாக ஆராய்ந்து கூறவேண்டும். புதிய திட்டத்தின் செலவை வேலியின் மூலதனத் தொகையுடன் சேர்த்து விடுவ தால் இழப்பு ஏற்படாதென்ற ஒரே காரணத்திற்காக எந்தத் திட்டத்திற்கும் பரிந்துரை பகரக்கூடாது. கலெக்டர் மதிப்புப் பட்டிகளுக்கு மேலொப்பமிடும்போது அத்திட்டத்தின் நிதி ஆட்சித் தன்மைகளைத் தாம் விவரமாக ஆய்ந்து பார்த்து அத் திட்டத்தினால் அடையக்கூடிய (தனிப்பட்டவர் நன்மை என்பது அல்லாத) பொது நலனைப் பற்றியும் ஒரு குறிப்பைத் தவறாது அதனுடன் சேர்க்க வேண்டும்.

20—4—1948 தேதி, 10, வ.து.க.செ. அச்சு.
28—4—1933 தேதி, 755, அ.ஆ.வரு.பல.
13—5—1933 தேதி, 32, வ.து.க.செ.அச்சு.
12—7—1956 தேதி 2767, அ.ஆ.வரு.பல்.

89. பொறி இயல் பணித் துறையினர் நிலத்தினின்றும் கல், மண் முதலியவற்றைத் தோண்டி எடுத்தல்.—1. தோண்டி எடுப் பதற்குரிய நிலங்களின் பாகுபாடு.— இந்நிலை ஆணைக்கென நிலங் களைக் கீழ்க்கண்டவாறு பாகுபாடு செய்யலாம் :—

( ) ஒதுக்கக் காடுகள்.

( ) தமிழ்நாடு வனச் சட்டத்தை அனுசரித்து ஒதுக்கி வைக்கப்படும் நிலம்.

( ) புறம்போக்குகள், தீர்வை விதிக்கப்பட்ட நிலங்கள் தீர்வை விதிக்கப்படாத நிலங்கள் போன்ற தமிழ்நாடு வனச் சட்டத்தை அனுசரித்து (தனிப்பட்ட காரியங்களுக்காகத் தேவையாக இருக்கக் கூடியவை என ஒதுக்கி வைக்கப்பட்ட நிலங்கள் உட்பட) ஒதுக்கி வைக்கப்படாத நிலங்கள்—வருவாய்த் துறைக் கழக 15-2 ஆவது நிலை ஆணையைக் காண்க.

12—7—1956 தேதி, 2767, அ.ஆ.வரு.பல்வ.

2. ஒதுக்கக் காடுகளிலும் சென்னை வனச் சட்டத்தை அனுசரித்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள நிலங்களிலும்.—ஒதுக்கக் காடுகளும், சென்னை வனச் சட்டத்தை அனுசரித்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள நிலங்களும் சம்பந்தப்பட்ட வரையில், முழுக் கட்டுப்பாடு அதிகாரங்களும் வகித்து, மேல்நிலை அதிகாரிகளின் ஆணைகளுக்குட்பட்டு, எந்த எந்த எல்லைக்குள் பொறி இயல் பணித் துறை, கல், மண் முதலியவற்றைத் தோண்டி எடுக்கலா மென்று கட்டுப்படுத்தி அவ்வெல்லையை நிர்ணயிக்கவும், வனப் பாதுகாப்பையும் அங்கு நடைபெறும் வேலைகளையும் மூன் னிட்டு, அவ்வாறு தோண்டி எடுப்பதற்காகத் தக்க நிபந்தனை களை ஏற்படுத்தவும் கல், மண் முதலியன தோண்டி எடுக்கப்படு வதற்குரிய தொகையை விதிக்கவும் வனத் துறைக்கு அதிகார மூண்டு. வன விளை பொருள்களை ஏற்றிச் செல்லப் பயன்படத் தக்க சாலையமைப்பதற்காக ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியி லிருந்து கல், மண் முதலியன தோண்டி எடுக்க வேண்டியதிருக்கு மானால், பொறி இயல் பணித் துறைத் தலைமைப் பொறியாளர் வனத்துறைப் பகுதியைப் பொறுத்தவரையில் வனத்துறைத் தலைவருடன் தனி உடன்படிக்கை செய்துகொண்டு, அரசாங்க ஆணையைப் பெற்ற பின் அப்பொருள்களை இலவசமாகத் தோண்டி எடுத்துக் கொள்ளலாம்.

3. மேலே ( ) ஆவது உட்பிரிவின்கீழ் சென்னை வனச் சட்டத்தை அனுசரித்து ஒதுக்கி வைக்கப்படாத நிலத்தில்.—அரசாங்க வேலைகளைக் கட்டி முடிப்பதற்கும் மராமத்து செய்வ தற்கும் தேவையாகவுள்ள மண், கல், சரள் முதலியவற்றை இந்நிலங்களிலிருந்து கிரயமின்றித் தோண்டி யெடுக்க, தமிழ் நாடு சுரங்க நடைமுறை நூல் -ஆவது அத்தியாயம் 5 ஆவது விதி (4) ஆவது குறிப்பில் உள்ள எற்பாடுகளை அனுசரித்துப் பொறி இயல் பணித் துறையினர் அனுமதிக்கப்படுவர். சாலைகளை அமைப்பதற்கும் மராமத்து செய்வதற்கும், ஆறுகள் வாய்க்

கால்கள், ஏரிகள் இவற்றின் கரைகள் அமைப்பதற்கும் மராமத்து செய்வதற்கும் இவை போன்ற மற்ற வேலைகளுக்கும் தேவையான உள்ள பொருள்களைத் தோண்டி எடுப்பதற்குப் பொதுவாய் கிடைக்கக்கூடிய நியங்களைப் பொறுத்தவரை கீழ்க் காணும் விதிகளை அனுசரிக்க வேண்டும் —

(1) தோண்டப்படும் நிலம் உண்மையிலேயே ஒதுக்கி வைக்கப்படாத அரசாங்க நிலமா என்பதைக் கிராம அலுவலர் களையும், கிராம மக்களையும் விசாரித்தறிந்து கொண்டு தோண்டி எடுக்கப்படக்கூடிய பாகத்தின் எல்லைகளைத் தலத்தில் குறிப்பிட்டு அவற்றிற்கு அடையாளமிட வேண்டும். அவ்வாறு செய்யும் போது ஆங்கு உள்ள சாலைகளுக்குச் சேதம் ஏற்படாதவாறும் அச்சாலைகளின் பக்கத்திலிருந்து நியாயமான தூரத்தில் குழிகள் தோண்டப்படுமாறும் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

(2) நிலையாக நெடுங்காலத்திற்குக் கிடைக்கக்கூடிய அதிக அளவுள்ள கற்கள் முதலியவை உள்ள நிலங்கள் அரசாங்கக் கற்சுரங்கமாகக் கருதப்பட்டு பொறி இயல் பணித் துறையினருக்கு ஒப்புவிக்குமாறு தாசில்தாருக்குக் கட்டளையிட வேண்டும்.

(3) தற்காலிகமாக அனுபோகத்தின் தேவைக்கு நிலங்களைத் தவிர மற்றவற்றைப் பற்றி வரப்பெறும் மனுக்களை, பொறி இயல் பணித் துறையினரோடு முதலில் கலந்து கொள்ளாமல் தாசில்தார் அவற்றைக் கொடுத்துவிட ஒப்படை ஆணை பிறப்பிக் காமல் இருக்கும் பொருட்டு அவற்றைப் பற்றித் தாசில்தாருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

(4) கிராமக் கணக்கர்களும் மணியக்காரர்களும் தங்கள் கிராமத்தில் ஒதுக்கி வைக்கப்படாத அரசாங்க நிலங்கள் சம்பந்த மான விவரங்களைப் பொறி இயல் பணித் துறை அலுவலர்கள் கேட்கும்போது கொடுப்பதோடு, வெட்டி எடுக்கும் வேலையோ அல்லது தோண்டும் வேலையோ தங்கள் கிராம எல்லையில் தொடங்கப்பட்டால் அதைப் பற்றித் தாசில்தாருக்குத் தெரிவிக்க வேண்டும். அத்தகைய வேலைகள் நடைபெறுவதில் தாசில்தாருக்கு ஆட்சேபணை ஏதேனும் இருக்குமானால், அவர் அந்த உட்கோட்டப் பொறுப்பிலுள்ள பொறி இயல் பணித் துறை அலுவலருக்கு உடனடியாக எழுதுவதோடு, கோட்ட ஆட்சி யாளருக்கும் ஓரறிக்கை அனுப்ப வேண்டும்.

(5) அரசாங்கத் தரிசு நிலங்கள் வழியாகப் புதிய சாலை ஆட்சியாளருக்கும் ஓரறிக்கை அனுப்ப வேண்டும். அல்லது கரைகள் அமைக்கப்பட்டால் அவற்றின் நடுவிலிருந்து 22 கெஜ அகலத்திற்கு இரு பக்கத்திலும் சாலை விளிம்பு குறிக்கப் பட வேண்டும்.

குறிப்பு.—(1) இந்திய அரசாங்கத்தின் சார்பாக நிறைவேற்றப்படும் வேலைகள் ஒவ்வொன்றிற்கும் காட்டு வரிகள் விதிக்கப்படவேண்டும்.
12—4—1945 தேதி 572, வ.து.க.செ.பலவ.
23—3—1945 தேதி, 1202, அ.ஆ.வளர்.
26—3—1945 தேதி, 626, அ.ஆ.பலவ.

(2) 1884-ஆம் ஆண்டு தமிழ் நாடு vi-ஆவது ஆற்றுப் பாதுகாப்புச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஆற்றின் அடித்தல நிலங்களில் கல்மண் எடுப்பதை ஆறுகளின் பாதுகாவல் முற்றிலுமே தடை செய்யலாம்; அல்லது ஒழுங்கு செய்யலாம். அத்தகைய நிலங்களில் மண் எடுப்பதற்கும் அல்லது எடுத்த பொருள்களை அப்புறப்படுத்துவதற்கும் ஆறுகளின் வளப் பாதுகாவலரைக் கலந்து கொள்ளாமல் கோட்ட ஆட்சியாளர் ஒப்பளிக்கக்கூடாது.
1—8—1935 தேதி 1765, அ.ஆ.வரு.பல.
12—8—1935 தேதி 104, வ.து.க.செ.அச்சு.

4. சொந்த நிலத்தில் பொறி இயல் பணித் துறை அலுவலர்களும் அவர்கள் ஒப்பந்தக்காரர்களும் சொந்த நிலத்தின் உரிமையாளரின் அனுமதியின்றி அந்நிலத்தில் பிரவேசிக்கக்கூடாது. இவ்வகையில் அவர்களும் அவ்வுரிமையாளர்களும் ஒரு உடன் பாட்டிற்கு ஒத்துக்கொள்ள இயலாத நிலையில், வருவாய்த் துறை அலுவலர் உதவி செய்வார்கள். தேவையானால் நில உரிமை பெறும் சட்டத்தின்கீழ் அந்த நிலத்தின் உரிமை பெற வேண்டும். மிக அவசரமான நிலைமை ஏற்பட்டதாக மெய்ப்பிக்கப்பட்டாலன்றி, சொந்த நிலத்தில் கல், மண் அகழ்ந்து எடுப்பதற்காக அரசாங்க அலுவலர் ஆக்கிரமிப்பு செய்வாரெனில், அதன் நிமித்தமாக வழக்குத் தொடரப்பட்டால் அவரே அதற்கு நேர்முகப் பொறுப்பாளராவார். சொந்த நிலத்திலிருந்து கல், மண் அகழ்ந்தெடுக்கப்பட வேண்டுமானால், பொறி இயல் பணித் துறை அலுவலர்கள் தாமதமின்றி அவ்வேலைகளின் அளவுகளை எடுக்க வேண்டும். மண் அகழ்ந்தெடுக்கப்படுவதற்கான அனுமதியை இதமான முறையில் பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தாசில்தார்கள் செய்யவேண்டும். தேவையானபோது மராமத்திற்கு வேண்டிய மண் அகழ்ந்தெடுத்துக் கொள்வதற்காக ஏரிக் கரைகளையும் மற்றக் கரைகளையும் அடுத்துள்ள இடத்தைப் பெறுவதற்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் தாசில்தார்கள் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். இயன்றபோதெல்லாம் ஏரிகளின் மராமத்துக்களுக்கு வேண்டிய மண்ணை ஏரி உள்வாய்க்கால்களிலிருந்தே அகழ்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

15—8—1872 தேதி 1596, வ.து.க.செ.
25—2—1881 தேதி 330, வ.து.க.செ.

VI ஆவது அத்தியாயத்தின் இணைப்புகள்.

இணைப்பு I

[நிலை ஆணை எண் 86 பத்தி 5.]

குடிகள் மராமத்து வேலைகளை ஒழுங்காகச் செய்கிறார்களா என்பதை நிச்சயம் செய்து கொள்வதற்கான அறிவுரைகள்.

நீர்ப் பாசன வேலைகளைப் பாதுகாத்து வருதலிலும் அவற்றைப் பழுது பார்த்து வருதலிலும் குடிகள் தங்கள் கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றுமாறு அவர்களை அலுவலர்கள் அனைவருமே சரிவர வற்புறுத்துகிறார்களா என்பதைக் கவனித்து வரவேண்டிய அவசியம் கலெக்டர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றது. குடிகள் குடிமராமத்து வேலையை ஆண்டுதோறும் ஒழுங்காகவும் செய்கிறார்களா என்பதை நிச்சயம் செய்து கொள்வதற்காக இதன் பின்னர் அறிவுரைகள் பிறப்பிக்கப் படுகின்றன.

2. கிராம 5, 20 எண் கணக்குகள் சம்பந்தமாக வருவாய் ஆய்வாளர் தமது சாதாரண அலுவல் முறையில் தமது சரகத்திலுள்ள நீர்ப்பாசன வேலைகள், பெரும் பாசனங்களாக இருப்பினும் சிறு பாசனங்களாக இருப்பினும், எல்லாவற்றையுமே பார்வையிட வேண்டும். இவ்வாறு அவர் செய்யும்போது, தாம் பார்வையிடும் யாதொரு பாசன வேலையைப் பொறுத்த வரையில், அதன் குடிமராமத்து வேலை சென்ற ஆண்டில் நிறைவேற்றப்படாமல் விடப்பட்டதா என்பதை விசாரித்து அறிந்து, அதைப் பற்றி ஒவ்வொரு பாசன வேலையில் எந்த இனம் கவனிக்கப்படாமல் விடப்பட்டதெனத் தமது இருவார நாட்குறிப்பில் எழுதி அறிக்கை செய்ய வேண்டும். அதுபோன்றே கவனிக்கப்படாமல் விடப்பட்ட குடிமராமத்து வேலைகளில் யாதாவது ஒன்றை அரசாங்க அலுவலர் எவராயினும் தமது சுற்றுப்பயணங்களில் பார்வையிடுவார்கள் எனில், அதைப் பற்றி அவர் தாசில்தார் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும். வருவாய் ஆய்வாளரின் நாட் குறிப்பு அல்லது அரசாங்க வேறொரு அலுவலரது அறிக்கை வரப் பெற்றவுடன் குடிமராமத்து வேலைக்கென்றே குறிப்பிடப்பட்டுள்ள பதிவேட்டின் (1), (2), (4). கட்டங்களில், கவனியாமல் விடப்பட்ட குடி மராமத்து வேலையின் இனங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

3. கிராமத்தில் சில குடிமராமத்து வேலை செய்யப்பட வேண்டுமென்னும் தகவல் மற்றொரு வாயிலாகக் கிடைக்கும்போது (1), (2) கட்டங்கள் முன் சொன்னவாறே பூர்த்தி செய்யப்பட்டு இச் செய்தி உண்மையா என்பதையும், அந்த வேலையைக் குடிகள் செய்யுமாறு அமல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமா என்பதையும், பார்வையிட்டு அறிக்கை செய்யுமாறு வருவாய் ஆய்வாளருக்கு ஆணையிடவேண்டும். வருவாய் ஆய்வாளர் அனுப்பிய பதிலின் தேதியையும், அவர் கருத்தின் முடிவையும் அதாவது வேலை அவசியம் அல்லது அவசியமில்லையென்பதையும் (3) ஆவது கட்டத்தில் எடுத்தெழுத வேண்டும். வருவாய் ஆய்வாளர் அவ்வேலை அவசியமில்லையென்று அறிவித்தால், மேற் கொண்டு நடவடிக்கைத் தேவையில்லை; ஆனால் இதைப் பற்றி (4) ஆவது கட்டத்தில் குறித்துக் கொள்ள வேண்டும்.

4. ஆனால், வேலை அவசியமென்று வருவாய் ஆய்வாளர் அறிவித்திருந்தால், அல்லது வருவாய் ஆய்வாளரின் நாட் குறிப்பிலிருந்தாவது அல்லது அரசாங்க வேறொரு அலுவலரின் அறிவிப்பிலிருந்தாவது ஏதாவதொரு குடிமராமத்து வேலை கவனிக்கப்படாமலிருப்பதாகத் தெரியவந்தால் தன் பதிவேட்டில் இது பதிவு செய்யப்பட்டு புதிய கோப்பொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்; மேலும் அக்கோப்பின் நடப்பு எண் குடிமராமத்துப் பதிவேட்டின் (5) ஆவது கட்டத்தில் குறிக்கப்படவேண்டும். செய்ய வேண்டிய வேலை சிறு பாசன வேலைக்குச் சம்பந்தப்பட்டதாயிருந்தால், தாசில்தார் 1858 ஆம் ஆண்டு சென்னை I ஆவது சட்டத்தின் 6-ஆவது உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அமல் செய்வதற்கான நடவடிக்கையை நேரிடையாக மேற்கொள்ள வேண்டும். செய்யப்பட வேண்டிய வேலை பொறி இயல் பணித் துறையினர் பொறுப்பிலுள்ளதொரு நீர்ப்பாசன வேலையைப் பற்றியதாயிருந்தால், தாசில்தார் கோட்ட ஆட்சியாளருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும். கோட்ட ஆட்சியாளர் பொறி இயல்பணித் துறையினருக்கு இதைப்பற்றி எழுதிக் கொள்ள வேண்டும். பின்னர் குடிமராமத்துப் பதிவேட்டின் 6-ஆவது கட்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். பொறியியல் பணித் துறையினர் அவ்வேலைகள் குடிகள் செய்ய வேண்டுமென்று தெரிவித்தால், 1858 ஆம் ஆண்டு I வது சட்டத்தின் 6 ஆவது பிரிவின்கீழ்த் தேவையான நடவடிக்கையைத் தாசில்தார் எடுத்துக் கொள்ள வேண்டும்.

தாசில்தார் 1858-ஆம் ஆண்டு ஆவது சட்டத்தின் 6-ஆவது பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கும்போது 86 ஆவது நிலை ஆணையின் 5-ஆவது பத்தியில் விதிக்கப்பட்டுள்ள நடைமுறையை மேற்கொள்ள வேண்டும். பாசன ஆதாரத்தின்கீழ் உள்ள குடிமராமத்து வேலையின் நிறைவேற்றுதலுக்காகக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டிருந்தால், 86-ஆவது நிலை ஆணையின் 5-ஆவது பத்தியின் நான்காவது உள் பத்தியில் வகுக்கப்பட்டுள்ள நடைமுறையைக் கவனமாய் மேற்கொள்ள வேண்டும்.

12—7—1956, தேதி 2657, அ.ஆ.ப.வரு.

5. செய்யப்பட்ட வேலை முடிவடைந்ததென்றும், ஒரு தனிப்பட்ட பிரதிநிதியால் செய்யப்பட்டதென்றும், கிராம அலுவர்களிடமிருந்து தகவல் கிடைக்கப்பெற்றால், தாசில்தார், 7-ஆவது கட்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். [1] வேலையைக் குடிகளே செய்து முடித்த இனங்களிலும், அல்லது கூட்டுறவுச் சங்கங்களினால் செய்து முடிக்கப்பட்ட இனங்களிலும், 8-ஆவது கட்டம் வெற்றிடமாக விடப்படும்; ஆனால், மற்ற இனங்களில் உதவித் தொகை முழுவதும் வசூலான தேதியையும், அந்த இனம் சம்பந்தமாக இறுதியாக முடிவு செய்துள்ள தாலூகாக் கோப்பின் எண், தேதி இவற்றை 8 ஆவது கட்டத்தில் குறிக்க வேண்டும். [1] [2] அக்கோப்பு முடிவுகளுக்கு "நிறுத்தி வைக்கப்பட்ட" தொடரில் எண்களளித்து, அவற்றை நிலையாக வைத்துக் கொள்ள வேண்டும். [2]

6. நீர்ப்பாசன வேலை முதலில் பார்வையிடப்பட்டு அது சம்பந்தமாகக் குடிமராமத்து வேலையொன்றும் தேவையில்லையென்று அறிவிக்கப்பட்டால், அதைப்பற்றி 1, 2 (அவசியமாயின் 3) 4 கட்டங்களில் பதிவு செய்யப்பட வேண்டுமேயன்றி 5 முதல் 8 வரையிலுள்ள கட்டங்களில் அல்ல. பின்னர் வரப்பெறும் அறிக்கைகளும் அத்தகைய வேலை அவசியமில்லையென்று காட்டுமெனில், புதிய பதிவு ஒன்றும் செய்ய வேண்டியதில்லை; ஆனால் 4-ஆவது கட்டத்தில் அறிக்கைத் தேதியைக் காட்ட வேண்டும். பின்னர் வரப்பெறும் அறிக்கை குடிமராமத்து வேலை தேவையென்று தெரிவிக்குமானால், மேலே (3)-ஆவது (4)-ஆவது பிரிவுகளில் விதிக்கப்பட்டுள்ளவாறு 1-ஆவது கட்டத்தில் புதிய பதிவு ஒன்று செய்ய வேண்டும்.

7. எத்தனை பிர்க்காக்களுண்டோ அத்தனை பிரிவுகளில் இப்பதிவேடு எழுதப்பட வேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தாள்களை ஒதுக்கி வைத்து, தேவையானால் புதுத் தாள்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

8. இவ்வாறுகத் தனிப் பதிவேடானது தாலுகாவிலுள்ள குடிமராமத்து வேலை முன்னேற்றத்தைக் காட்டும் முழுப் பதிவேடாகப் பயன்படும். தாசில்தார், கோட்ட ஆட்சியாளர், கலெக்டர் ஆகியோர் இப்பதிவேட்டை ஆராய்ந்து பார்ப்பதிலுலே, இவ்வேலை ஒழுங்காக நடைபெற்று வருகிறதா இல்லையா என்பதை தெரிந்து கொள்ளக்கூடும். இப்பதிவேட்டை அழித்துவிடாமல் தாலுகா அலுவலகத்தில் நிலையாக வைத்துவர வேண்டும்.

9. இவ்வறிவுரைகளின் நகலொன்றை இப்பதிவேட்டின் முன் பக்கத்தில் ஒட்டி வைக்க வேண்டும்.

மாவட்டம், தாலுகா சிறு பாசனங்களிலும் பொறி இயல் பணித் துறை நீர்ப்பாசனங்களிலும் செய்யப்படும் குடிமராமத்து வேலைகளைக் காட்டும் பதிவேடு.

1) பாசன ஆதாரத்தின் பெயர்.	(2) எவரால் அறிமிக்கப்பட்டதென்பதும் அறிக்கைத் தேதியும்.	(3) குடிமராமத்து வருவாய் ஆய்வாளர் அனுப்பிய தேவையான தேதியும் கருத்தும் அதாவது வேலை அவசியமா? அவசியமில்லையா என்பது.	(4) குடிமராமத்து தேவையின் தன்மை, அதாவது, சப்பாத்திக் கள்ளியை நீக்குதல் வண்டல் எடுத்தல் முதலியனா— தேவையிலுள்ளவாறு அவ் வாறு குறிக்க வேண்டும்.	(5) எடுத்துக்கொண்ட நடவடிக்கை விவரத்துடன் நடப்புப் பதிவேட்டில் இதைச் சார்ந்த எண்ணும் தேதியும்.	(6) கிராம அலுவலர்களுக்கு அனுப்பும் பின் ஆணையின் தேதியும் கோட்ட ஆட்சியாளருக்கு அனுப்பும் பின் கடிதத்தின் எண்ணும் தேதியும்.	(7) குடிமராமத்து அதாவது குடிகளால் முடிவு செய்யப்பட்ட வேலை சங்கங்களால் செய்யப்பட்டவேலை 1 டச்சி ஏல முறையில் செய்யப் பட்ட வேலை அல்லது அரசால் கத்தால் செய்யப்பட்டவேலை.	(8) டச்சு ஏல முறையில் அல்லது வேலை அரசாங்கத்தால் செய்யப்பட்டிருந்தால் பணம் எப்போது வசூலிக்கப் பட்டது.

கிராமம்.

6—12—1927 தேதி, 2534 அ.ஆ.வரு.
20—12—1927 தேதி, 100 வ.து.க.செ.
26—3—1928 தேதி, 657, அ.ஆ.வரு.பலவ.
22—5—1928 தேதி, 42 வ.து.க.செ.
9—5—1928 தேதி, 1023 அ.ஆ.வரு.பலவ.
~~23—10—1929 தேதி, 93 வ.து.க.செ.பலவ.~~
17—10—1929 தேதி, 2131 அ.ஆ.பலவ.
12—7—1956 தேதி, 2767 அ.ஆ.வரு.பல.

இணைப்பு II.

நில ஆணை எண் 86 பத்தி .

.....மாவட்டத்தில்.....தாலுக்காவில், 1858-ஆவது ஆண்டு I-வது கட்டமாகிய கட்டாய சேமிப்புச் சட்டத்தின் 6-வது பிரிவின்கீழ் வசூல் செய்யப்பட்ட தொகையையும் அதன் முடிவையும் காட்டும் விவரப் பட்டியல்.

சட்டத்தின் 6-ஆவது பிரிவின்கீழும் எந்த வேலை சம்பந்தமாகத் தொகை வசூலிக்கப்படுகிறதோ அந்த வேலையின் பெயர்.	வசூல் ஒப்பனிக்கும் ஆணையின் எண்ணும் தேதியும்.	வசூலிக்கப்பட்ட தொகை.	வசூலுக்கு கணக்குகளில் வரவு வைக்கப்பட்ட தேதி.	வேலைக்காக செய்யப்பட்ட செலவு. தேதி.	வேலைக்காக செய்யப்பட்ட செலவு. தொகை.	தாலூகா முடிவுக் கோப்பின் எண்ணும் தேதியும்.	எஞ்சியதொகை ஏதேனு மிருந்தால்.	இருப்புத் தொகைகளை பயன் படுத்தின விவரம். வேலையின் பெயர்.	செலவினத்தை ஒப்பவிக்கும் ஆணையின் எண்ணும் தேதியும்.	செலவான தொகை.	தொகை செலவிடப்பட்ட தேதி.	தாலூகா முடிவுக் கோப்பில் உள்ளது ஆகாரமாகக் குறிக்கப்பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
		ரூ. கா.			ரூ. கா.		ரூ. கா.			ரூ. கா.		

கிராமத்தின் பெயர்.

நி.க.—ஒவ்வொரு கிராமத்திற்கும் போதுமான எண்ணிக்கையுள்ள பக்கங்களை ஒதுக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

12—5—1928 தேதி, 1046 அ.ஆ.வரு.பலவ.
12—7—1956 தேதி, 2767, அ.ஆ.வரு.பலப.
25—5—1928 தேதி, 1685 வ.து.க.செ.பலவ.
8—1—1957 தேதி, 112 அ.ஆ.வரு.பல.

8—4—1932 தேதி, 781 ஸ்.ஆ.வரு.பலவ. 12—4—1932 தேதி, 1156, வ.தி.க.செ.பலவ.
12—7—1956 தேதி, அ.ஆ.வரு.பல.

(1) மாவட்டம்.

(2) தாலுகா.

(3) ஏரியின் பெயர்.

(4) இந்தியக் காடுகள் சட்டம், 1927-ன் கீழ் காப்புக் காடாக அறிவிக்கப்பட்ட நாளும் அறிவிப்பு எண்ணும்.

(5) வருவாய்த் துறை ஏரி, பொதுப் பயன்பாட்டு ஏரி, ஜமீன்தார் ஏரி, தனியார் ஏரி.

(6) சர்வே எண்.

(7) தற்போதைய அதிகாரம்.

(8) சாகுபடி வரம்பிற்கு உட்பட்ட நிலத்தின் அளவு.

(9) கரை.

(10) உபரி நீர் வடிகாலின் பொதுவாகச் சொல்லுமிடத்து திசையைக் குறிப்பிடுக.

(11) இந்திய பாசன நிர்வாகச் சட்டம் பிரிவின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளதா இல்லையா.

(12) ஏரிக்கரை மீது ஏதேனும் மரங்கள் இருந்தால் அவற்றின் விவரம்.

(13) நீர்ப்பாசனத்திற்கு உரிமை கோருவோர் பற்றிய விவரம்.

(14) பொறுப்பு அதிகாரி.

தெற்கிருப்புப் பாதையைப் பாதிக்கக் கூடிய எரிசாலைப் பகுதிகளை அறிக்கை.

இணைப்பு III.

நிலை ஆணை எண் 96, பத்தி 9.

இணைப்பு IV.

நில ஆணை எண் 87, உட்பிரிவு (1).

சிறுபாசன ஆதாரங்களின் பட்டியல்.

மாவட்டம், தாலுகா.

கிராமத்தின் எண்ணும் பெயரும். (1)	சிறுபாசன ஆதாரத்தின் பெயர். (2)	ஏரி, புதுப்பிக்கும் நிட்டத்தின் வரலாற்றுக் குறிப்பு. ஆயக்கட்டு. (3)	நிலையான பேரேடு. பாசன நிலத்தின் தாக்கின் பெயர். (4)	பக்கம். (5)	தொகுதி. (6)	பக்கம். (7)	குறிப்புரை. (8)

அறிவுரைகள்.

இப்பட்டியல் (V ஆவது இணைப்பு) நிலையான பேரேட்டிற்கு ஓரட்டணையாகும். கிராமங்களை ஒவ்வொரு தாலுகாவின் கீழ் அகர வரிசையில் அமைத்துக்கொள்ள வேண்டும். இருப்புப்பாதையைப் பாதிக்கக்கூடிய ஆதாரங்களை(2) ஆவது கட்டத்தில் அந்த ஆதாரத்தின் பெயருக்கு நேராக ஒரு நட்சத்திரக் குறியால் காட்ட வேண்டும்.

9—1—1940 தேதி, 66 அ.ஆ.வரு.பல.
27—1—1940 தேதி, 6 வ.து.க.செ.அச்சு.

இணைப்பு V.

[நில ஆணை எண் 87, உட்பிரிவுகள் (i), (ii).]

சிறு பாசன ஆதாரங்களின் நிலையான பேரேடு. ..... தாலுகா ..... கிராமம்.		நில அளவை எண் பெயர்.	ஆதாரம் எவ்வளவு நீர் கொள்ளும் என்பது.
ஆதாரத்தின் பெயர்.	ஆதாரத்தின் வகுப்பும் தன்மையும்.		

சிறிய பள்ளத்தாக்கின் பெயரும், வேலை விவரமும் ஏரி புதுப்பிக்கும் திட்டத்தின் விளக்கமான வரலாற்றுப் புத்தகத்தில் இவற்றிற்குரிய பக்கத்தின் எண்ணும் நீர் பாயக்கூடிய ஆயக்கட்டின் மொத்தமும், நீர்வையும்.

1	2	3	4	5	6	7	8
மதிப்புப் ஒப்பளிக்கப்பட்ட தொகை	மதிப்புப் ஒப்பளிக்கப்பட்ட தேதியும் எண்ணும், அதன் தன்மையும். அரசு அல்லது பாசனதாரர்	பழுது பார்க்கும் வகையில் சரும் மான வீவரம்	மதிப்புப் பற்றுரில் தொகை யும் நிதி உண்மையில் ஒதுக் கப்பட்ட தும்.	தொகை உண்மையாகச் செலவு செய்யப்பட்டது.			ஏதிர்புரை.
				ஏக். ரூ. காசு.	ஏக. ரூ. காசு.	ஏக. ரூ. காசு	

அறிவுரைகள்

இப்பேரேடாவது, ஒவ்வொரு மாவட்டத்திலும், சிறு பாசனத் துறையின் பொறுப்பிலுள்ள நீர்ப்பாசன ஆதாரங்களின் பாரமரிப்பை, அல்லது புதுப்பிக்கும் பணியைப் பற்றிய நிலையான பதிவேடாயிருக்கும்; மேலும், அது ஒவ்வொரு நீர்ப்பாசன வேலைக்கும் ஏற்பட்ட பழுதுபார்க்கும் வேலையைப் பற்றிய தொடர்ந்த வரலாற்றையும் தெரிவிக்கும். அதை ஒரு வைத்துக் கட்டப்பட்ட பேரேடாக ஒவ்வொரு தாலுகாவுக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொகுதிகளில் வைத்திருக்க வேண்டும். ஒரு ஆதாரத்திற்குப் பழுது பார்ப்பதற்கோ, மேம்பாடு செய்வதற்கோ அல்லது, புதுப்பிப்பதற்கோ, மதிப்புப் பட்டி ஒப்பளிக்கப்பட்டதும், இப்பேரேட்டில் தேவையான பதிவுகளைச் செய்து, அதற்கேற்றவாறு அச்சிடப்பட்ட ஆதாரங்களின் பட்டியலில் தொகுதியையும் பக்கத்தையும் குறித்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஆதாரத்திற்கும் ஒரு பக்கம் விட்டு வைத்து, ஒவ்வொரு மதிப்புப் பட்டிக்குரிய பதிவுகளைத் தனித்தனி வரியில் எழுத வேண்டும். பிற்காலத்தில்

ஏற்படும் திருத்தங்களைப் பதிவு செய்வதற்காகப் போதுமான இடத்தை ஒவ்வொரு வரிக்குக் கீழ் விட வேண்டும். கூடுதல் மதிப்புப் பட்டிகளின் தொகைகளைத் தொடர்புள்ள முதலாவது மதிப்புப்பட்டிகளின் தொகைகளுக்குக் கீழே குறிக்க வேண்டும். திருத்தியமைத்த மதிப்புப்பட்டிகள் இருந்தால், ரத்து செய்யப்பட்ட அசல் மதிப்புப்பட்டிகளைப் பற்றிய பதிவுகளை அடித்து விட்டுத் தேவையான விவரங்களைக் குறிக்க வேண்டும். வேலை வகையின் சுருக்க விவரம் ஒன்றை (அதாவது, 'புதிய மதகு ஏற்படுத்தல்,' 'மண் வேலை', 'கலிங்கல்களைப் பழுதுபார்த்தல்' முதலியவற்றை) (3) ஆவது கட்டத்தில் கொடுக்க வேண்டும். 'பழுதுபார்த்தல்', முதலியவற்றை) (3) ஆவது கட்டத்தில் கொடுக்க பாய்ச்சப்படக்கூடிய ஆயக்கட்டின் மொத்தமும், தீர்வையும், என்பதற்கு நேராக்க் கொடுக்கப்பட்டிருக்கும் தகவலைத் திருத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு திருத்திய ஆயக்கட்டு மதிப்பு முறையில்லாமல் உண்மையான ஆயக்கட்டாகவே இருக்க வேண்டும். திருத்தின ஆண்டை அடைப்புக்குள் "140 ஏக்கர்கள் (1930)" இவ்வாறு காட்ட வேண்டும். (2) ஆவது கட்டத்தைப் பூர்த்தி செய்யும்போது 'அ', 'ப', என்ற அடையாளங்களை, 'அசல் வேலைகள்' பழுது பார்த்தல், என்பவற்றிற்காக உபயோகிக்க வேண்டும்.

தனித் தொழில் நுட்பத் திறமையும் மேற்பார்வையும் தேவையாகும் என்ற காரணத்தைக் கொண்டு, பொறி இயல் பணித் துறை சிறு பாசன வேலைகளை நிறைவேற்றுதல் சிறு பாசன வேலைகள் சம்பந்தமான மதிப்புப் பட்டிகளையும் இப்பேரேட்டில் குறிக்க வேண்டும். 'பொறி இயல் பணித் துறையினரால் வேலை நிறைவேற்றப்பட்டது' என்ற குறிப்பைக் குறிப்புரைக் கட்டத்தில் எழுத வேண்டும்.

87 ஆவது நிலை ஆணையின் (i) ஆவது உட்பிரிவில் குறிப்பிட்ட அச்சிடப்பட்ட சிறு பாசன ஆதாரங்களின் பட்டியல் இப்பேரேட்டுக்கு ஒரு அட்டவணையாகும்.

31—3—1928 தேதி, 753 அ.ஆ.வரு.
13—4—1928 தேதி, 31 வ.து.க.செ.
~~1—10—1928 தேதி, 3240 வ.து.க.செ.பலவ.~~
9—1—1940 தேதி, 66 அ.ஆ.பலவ.
27—1—1940 தேதி, 6 வ.து.ப.செ.அச்சு.
12—7—1956 தேதி, அ.ஆ.வரு.பல.
8—1—1957 தேதி, 112 அ.ஆ.வரு.பல.

இணைப்பு VI.

[நிலை ஆணை எண் 87, உட்பிரிவு (iv)]

சிறு பாசனங்களின் சரியான நிலையையும், தயாரிக்கப்பட்ட மதிப்புப்பட்டிகளையும், உண்மையாக நிறைவேற்றப்பட்ட வேலைகளையும் பற்றிய ஆண்டறிக்கை.

ஜமாபந்தியில் செய்யப்பட்ட விசாரணைகளிலும் மற்ற வகைகளிலும், சிறு பாசனங்களின் சரியான நிலையைப் பற்றித் தகவல் சேகரிப்பதற்காக எடுத்துக்கொண்ட நடவடிக்கையும் அதைத் தொடர்ந்து செய்த ஆராய்வில் தயாரிக்கப்பட்ட மதிப்புப்பட்டிகளையும், உண்மையாக நிறைவேற்றப்பட்ட வேலைகளையும், காட்டும் ஆண்டறிக்கையொன்றை மேல்னுப்ப வேண்டும். பின்வரும் விவரங்களை இவ்வறிக்கை காட்ட வேண்டும். மேலும், ஆண்டு இறுதிக்குப் பின் வழக்கமாக வருவாய்த் துறைக் கழகத்திற்கு அனுப்பப்படும் சிறு பாசனச் செலவினத்தைப் பற்றிய ஆண்டறிக்கையுடன் இவ்வறிக்கையை இணைத்தமைக்க வேண்டும்.

(i) இவ்வாண்டில் (ஜமாபந்தியிலாவது மற்ற வகையிலாவது) மராமத்து தேவையாயிருப்பதாக அறிவிக்கப்பட்ட பாசனங்களின் எண்ணிக்கை.

(ii) மேலே (i) ஆவது இனத்தில் குறிப்பிட்டவற்றில் சிறு பாசனப் பணியாளர்கள் பார்வையிட்ட வேலைகளின் எண்ணிக்கை.

(iii) சிறு பாசனப் பணியாளர்கள் நேரில் பார்வையிட்டதில் மராமத்து தேவையில்லையென்று தெரிந்த வேலைகளின் எண்ணிக்கை.

(iv) மராமத்து தேவையென்று தெரிந்த இனங்களில் பழுது பார்த்தலுக்காக மதிப்புப்பட்டிகள் தயாரிக்கப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை.

மேலும், இவ்வறிக்கையானது, தேவையான மராமத்தை நிறைவேற்றுவதற்குப் போதுமான நிதிக்காக மனு செய்யப்பட்டுள்ளதா என்பதையும் பார்வையிடுவது, வேலையைத் தணிக்கை செய்வது ஆகியவற்றிற்கு மாவட்ட நீர்ப் பாசனப் பணியாளர்கள் போதுமா என்பதையும் பற்றித் தெளிவாகச்

சொல்ல வேண்டும். அன்றியும், அது, வருவாய்த் துறையின் பொறுப்பிலுள்ள இருப்புப் பாதையைப் பாதிக்கக் கூடிய நீர்ப்பாசன வேலைகளனைத்தும் சிறு பாசனப் பணியாளர் தொகுதி யினரால் பார்வையிடப்பட்டனவா என்பதையும், கலெக்டர்களின் ஆண்டறிக்கைகள் குறிப்பிட்ட தேதிகளிலாயினும் அவற்றிற்கு முன்னதாகவாயினும் இருப்புப்பாதை ஆட்சிக்கு அனுப்பப் பட்டனவா என்பதையும் அறிக்கையில் தெரியப்படுத்த வேண்டும்.

8—4—1932 தேதி, 782 அ.ஆ.வரு.பலவ.
12—4—1932 தேதி, 1156, வ.து.க.செ.பலவ.

கலெக்டர்கள் இவ்வறிக்கையை ஒவ்வொரு ஆண்டிலும் ஏப்ரல் 10ஆம் தேதியன்று முந்தின அலுவல் ஆண்டுக்குரிய முன்னேற்ற அறிக்கையுடன் மேலனுப்ப வேண்டும்.

2. மேலே 1ஆவது பத்தியில் நியமிக்கப்பட்டுள்ள ஆண்டறிக் கையைத் தயாரிப்பதற்குத் தேவையான விவரங்களைச் சுலபமாய் அறிந்துகொள்ளும்பொருட்டு இதனுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பதிவேடு ஒன்றைத் தாலூகா அலுவலகத்தில் வைத்து வர வேண்டும். வருவாய் ஆய்வாளரின் நாட் குறிப்புகளி லிருந்தாயினும் மனுவிலிருந்தாயினும் அல்லது ஜமாபந்தி தணிக்கைக் குறிப்பிலிருந்தாவது, அல்லது வேறெந்த அறிக்கை யிலிருந்தாவது, ஏதேனுமொரு நீர்ப் பாசன வேலைக்கு மராமத்து தேவையென்ற செய்தி கிடைத்தவுடன் அந்தப் பதிவேட்டின் (1), (2), (3) கட்டங்களைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். நடப்புப் பதிவேட்டிலுள்ள குறிப்புகளைத் தவிர இப்பதி வேட்டிலும் இவற்றைக் குறித்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், இவ்விரு பதிவேடுகளும் முற்றிலும் வேறான காரியங்களுக்குப் பயன்படுகின்றன. மராமத்து அவசியம் என்ற முதல் அறிக் கையில் எடுத்துக்கொண்ட நடவடிக்கையைப் பற்றியும் மேலும் உள்ள சகல குறிப்புகளையும் நடப்புப் பதிவேட்டிலேயே பதிவு செய்ய வேண்டும். மேலும், ஒவ்வொரு தனி வேலையைப் பற்றி எடுத்துக்கொண்ட இந்த நடவடிக்கையின் விவரங்கள் சம்பந்த மான தகவல் அனைத்தையும் நடப்புப் பதிவேட்டிலேயே காண் பிக்க வேண்டும். இப்போது குறிப்பிடப்பட்ட தனிப் பதி வேட்டின் (4) ஆவது கட்டம் வெற்றிடமாக இருந்தால், அந்த வேலை சிறு பாசனப் பணியாளர் தொகுதியினரால் சரியான தணிக்கை செய்யப்பட வில்லையென்று யூகித்துக்கொள்ள

வேண்டும்; ஏனெனில், சிறு பாசனப் பணியாளர்கள், மராமத்து அவசியமென்று ஒரு சரியான தணிக்கையிலில் வெளிப்படையாய்த் தெரிய வந்ததும், மதிப்புப் பட்டி ஒன்றைத் தயாரிக்க வேண்டும். மதிப்புப் பட்டி தாலூகா அலுவலகத்திற்கு வந்து சேர்ந்ததும் அல்லது, மராமத்து அவசியமில்லையென்று சிறு பாசனப் பணியாளர் அறிவித்ததும், இப்போது குறிப்பிட்ட தனிப் பதிவேட்டின் (4) ஆவது கட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

மராமத்து தேவை என்று அறிவிக்கப்பட்ட வேலைகளின் பதிவேடு.

பாசன வேலையின் பெயர்.	எவரால் அறிவிக்கப் பட்டதென்பதும், அறிக்கையின் தேதியும்.	நடப்புப் பதிவேட் டில் சம்பந்தப்பட்ட பதிவின் எண்ணும் தேதியும்.	மராமத்து தேவை யில்லையென்று தெரிந்த அல்லது மதிப்புப்பட்டி மேல் ஒப்பப்பட்ட தேதி
(1)	(2)	(3)	(4)

18—10—1927 ஃ தி, 2066, அ.ஆ.வரு.
31—10—1927 ஃ தி, 77 வ.து.க.செ.
1—10—1928 தேதி, 3240 வ.து.க.செ.பலவ..

இணைப்பு VII.

[நில ஆணை எண் 87, உட்பிரிவு (V) (அ)]

நிலமேற்றுவதற்காக உத்தேசிக்கும் சிறு பாசன வேலைகளின் மதிப்புப் பட்டிகள்.

(1)	திருப்பாசன அடங்கல் அல்லாத ஆயக்கட்டு.					
(2)	ஏற்கெனவே ஏரி அல்லது குளத்தின் மூலம் பாசனம் செய்யப்பட்டு வரும் ஆயக்கட்டு.					
(3)	தானியமாக மேலீர்.					
(4)	கிராமத்திற்கு மேலீர்.					
(5)	ஆதாரத்திற்கு மேலீர்.					
(6)	திர் பாய்ச்சுகையுடன் ஆயக்கட்டிற்கு மேலீர்.					
(7)	இரும்பாலையுடன் (கலப்பு இரும்பு ஆலையின் சராசரி).					
(8)	மராமத்திற்கு மட்டும் மதிப்பு.					
(9)	திர் பாய்ச்சுகையுடன் மேலீருக்கு ஆயக்கட்டிற்கு மேலீர்.	ரூ.மை.	ரூ.மை.	ரூ.மை.	ரூ.மை.	ரூ.மை.
(10)	இரும்பாலையுடன் பாசனம் பார்ப்பவர் வேலையாள்.					
(11)	இரும்பாலையுடன் பாசனம் பார்ப்பவர் உட்பட பகுதி நீர்வரையும் இறைப்பு விடு வரியும் ஐந்து பகுதி ஆய்வுகளின் சராசரி.					
(12)	மராமத்திற்கு மட்டும் மதிப்பு.					

27—1—1911 தேதி, 256, அ.ஆ.
15—5—1933 தேதி, 85, வ.நி.க.சே.

இணைப்பு VII—தொடர்ச்சி.

திரு சூசை என் 87, உப்புநீவு (V) (அ)தொடர்ச்சி].

நிலைகுலைந்துவதற்காக உத்தேசித்திருக்கும் கிறு பாசன வேலைகளின் மதிப்பும்—தொடர்ச்சி.

(1)—தொடர்ச்சி.

(13)	ரூ.				
(14)	ரூ.	கீழ்த்தஞ்சை ஆற்காலிகள் முராமத்திற்கு தொகை தொராய.			
(15)	ரூ.	19 —19 —ஆம் ஆண்டிற்கு மதிப்பீடுகளுடன் பட்டியல்.			
(16)	ரூ.	19 —19 —ஆம் ஆண்டிற்கு தொகை தொராய.			
(17)		1894-ஆம் ஆண்டு பிறப்பித்த பாசன 13-ஆம் திருத்தச் சட்டம் (மதராஸ் மதமற்ற) 82 ஆம் வகுப்பின் கீழ் அறிவிக்கப்பட்ட பாசனக் கால்வாய்களுக்கு நீர்த்தீர்வை விதிக்கும் ஆணை.			
(18)		தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை தாலுகா, திருவிடைமருதூர் கிராமம் வரைபடம்.			
(16)		தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை தாலுகா, திருவிடைமருதூர் கிராமம் வரைபடம்.			
(20)		திருவையாறு ஆற்காலிகள் முராமத்திற்கு தொகை மதிப்பீடுகள்.			

குறிப்புரை—
(1) இப்பாசன வேலைகள், எவரால், எப்போது பார்வையிடப்பட்டன?
(2) மதிப்புப் பட்டிகள் எவரால் சரிபார்க்கப்பட்டன?
(3) மதிப்புப் பட்டிகளில் முழுமையான முராமத்திற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றனவா?
(4) 15—2—1894 தேதி, 85 எண் வருவாய்த் துறைக் கழுகச் செயல் முறையை அனுசரித்து உரிய தண்ணீர்ப் போக்குகள் முறையில் ஆராய்ந்து பார்வையிடப் பட்டனவா? (21)

26—8—1533 தேதி 112, அ.சு.பல.
8—1—1957 தேதி, 1629 அ.சு.வரு.பல.

இணைப்பு VIII.

நில ஆணை என் உட்பிரிவு (vi)]

.....தாலுகாவில் நிறைவேற்ற பட வேண்டிய பாட்ட வேலைகளி ன் நிசழ்ச்சி முறை.

எண்.	கிராமம்.	இந்த மதிப்புப் பட்டிக்குச் சம்பந்தப் பட்ட ஆதாரம்.	வேலையின் விவரம் (அசல் வேலை அல்லது பராமரிப்பும் பழுது பார்த்தலும்).	ஒப்பளிக்கப்பட்ட மதிப்புப் பட்டியின் எண்ணும் தேதியும், தொகையும்.	இவ்வாண்டில் ஒதுக்கப் பட்ட தொகை.	குறிப்புரை.
(1)	(2)	(3)	(4)	(5) ரூ. காசு.	(6) ரூ. காசு.	(7)

3—3—1928 தேதி, 753, அ.ஆ.வகு.
19—4—1928 தேதி, 31, வ.து.க.செ.

இணைப்பு IX.

[நில ஆணை எண் 87, உட்பிரிவு xii)]

நிறைவேற்றப்பட்ட வேலையின் அளவையும் மதிப்பையும் பற்றிய சான்று.

அ. இறுதி ஒப்பந்தச் சான்று.

குறிப்புகள்.	கோட்டம். உட்கோட்டம்.
1. "கொடுக்க வேண்டிய தொகை களனைத்தையும் கணக்கு தீர்த்து செல் லாக" என்று அச்சிட்ட மஞ்சள் நிறத் தாளில் செய்த வேலையைக் கணக்குப் பார்த்து ஒன்று அல்லது அதற்கு மேற் பட்ட தொகைகள் ஒப்பந்தகாரருக்கு முன்னமே கொடுக்கப்பட்டு, இறுதி யாகத் தொக்க கொடுக்கும் போது, இத் தனிப் படிவத்தை உபயோகப்படுத்த வேண்டும். இந்தத் தனி படிவங்கள் ஆங் கிலத்திலும் மண்டல மொழியிலும் அச் சிடப்பட வேண்டும். ஒப்பந்தக்காரர் எழுதத் தெரிந்தவராயிருந்தால், 'கொடுக்க வேண்டிய தொகை களனைத்தையும் முற் றிலும் கணக்கு தீர்த்துக் கொடுக்கப்பட்ட தொகை' என்று அவர் தாமாக இப்படி வத்தில் எழுதிக்கொடுக்குமாறு அன் னுரைக் கேட்க வேண்டும்.	நிதி ஒப்பந்தச் சான்றிதழ். (..மாதக் கணக் குகளுடன் சேர் த்து அனுப்ப வேண்டும்.) 19 ரொக்கப் புத்தகத் தின் ரசீது எண்.
2. பணம் செக் மூலமாவது அல்லது ஏற்கப்பட்ட கூட்டு நிறுவனங்களுக்காயி னும் நிலையங்களுக்காயினும் தொகைகள் கொடுக்கப்படும்போது சான்றொப்பம் அவசியமில்லையென்று பணம் கொடுப்ப வர் கருதினால், சான்றொப்பம் வாங்க வேண்டியதில்லை.	
3. பணம் பெறுபவர் மண்டல மொழி யில் கையெழுத்துச் செய்தால், பெற்றுக் கொண்ட தொகையையும் அந்த மொழி யில் அவசியமானால் ஆங்கிலத்திலும் குறிக்க வேண்டும்.	ஒப்பந்தக்காரரின் பெயர். வேலையின் பெயர்.

குறிப்புகள். கோட்டம் உட்கோட்டம்

4. எழுதப் படிக்கத் தெரியாதவருக்குப் பணம் கொடுக்கப்படும்போது, இரண்டு தக்க சாட்சிகள் முன்னிலையில் அவர் களுக்குப் பணம் கொடுக்கும் வகையை முற்றிலும் விளக்கி, பணம் பெறுவோரின் குறியையோ அல்லது முத்திரையையோ பெற்று அவ்விரு சாட்சிகளின், சான் றொப்பமும் பெற வேண்டும்.

5. சிறுபாசன அலுவலர் பட்டியின் முக்கிய பாகத்தில் "குறிப்புரை"க் கட்டத் தில், ஒப்பந்தக் காரருக்குப் பொருள்கள் வழங்கப்பட்டு அவற்றின் மதிப்புத் தொகையை பணம் கொடுக்கும் சமயத் தில் கழிக்க வேண்டியதிருக்குமானால், அப் பொருள் களின் அளவைக் குறிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். சான்றின் எண்.

6. இந்தச் சான்று தனிப்பட்ட ஒருவ ரின் கவனத்திற்கு மாத்திரம் சம்பந்தப் பட்டதாக இருக்கும். வெவ்வேறு வகைப் பட்ட வேலையின் அல்லது பொருள்களின் அளவுகளைப் பற்றிய முழு விவரங் களை எப்பொழுதும் குறிப்பிட வேண்டும். இந்த வேலைக்காக அறிவிக்கப்பட்ட கடைசிச் சான் றின் எண்ணையும், தேதியும்.

7. இருப்புக்காக அல்லது ஒரு வேலைக் காகப் பொருள்கள் வாங்கப்பட்டனவா என்பதை, இந்த கணக்கில் எப்பொழு தும் எழுத வேண்டும்; மேலும், பொருள் களின் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அலுவலரின் பெயரையும், அவரே சான் றில் கையொப்பமிடும் அலுவலராயிருந் தாலன்றி குறிக்க வேண்டும்.

8. பட்டியலைத் தயாரிக்கும் அலுவ லரே பணம் கொடுப்பதற்கு அதிகார முள்ளவராயிருந்தால், பட்டியலின் அடி யில் ஒரே ஒரு கையொப்பம் போதுமா னது. ....ஐப் பார்க்க.

9. 20 ரூபாய்க்கு மேற்பட்ட ஒவ் வொரு தொகை கொடுக்கப்படுவதற்கும் ஒரு முத்திரை வில்லை ஒட்டப்பட்ட பற்றுச் சீட்டு வேண்டும்.

இணைப்பு IX—தொடர்ச்சி.

பகுதி.	கடைசிச் சான்றுக்குப் பின் (வழங்கின தீர்வேற்றப்பட்ட அல்லது) அளவு.	அளவைச் சுவடியை அறுதி செய்த நாளது (வழங்கின அல்லது தீர்வேற்றப்பட்ட அல்லது) அளவு.	இனங்கள்.	மீதம்.	தொகை. நாளது தேதி வரை.	தொகை. கடைசிச் சான்றுக்குப் பின்.	குறிப்புரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
	நாளது வழங்கினகளின் செய்த மொத்த கழிக்க:—	தேதிவரை பொருள் அல்லது வேலையின், மதிப்பு			ரொக்கமாக கொடுத்திடுக]. பணம் செக்கு மூலம் கொடுத்திடுக.] என்னுல் பணம் கொடுக்கப்பட்டது] என் முன்னிலையில் பணம் கொடுக்கப் பட்டது]		
	கடைசிச் சான்றில் காட்டப்பட்டவேலையின் அல்லது வழங்கின பொருள்களின் மதிப்பு. கடைசிச் சான்றுக்குப் பின் செய்யப்பட்ட வேலையின் நிகர மதிப்பு.						

ஒப்பந்தக்காரர். வேலைப்பொறுப்பிலுள்ளவர்.

அளவுகள்.....ஆல்.....ஆம் தேதியில் எடுக்கப்பட்டு..... ஆவது பண் அளவைச் சுவடியின்.....ஆவது பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தேதி பட்டியலைத் தயாரிக்கும் அலுவலர் (கையொப்பம்)
—(பதவி)
சிறு பாசனம்.

தேதி ஒப்பந்தக்காரரின் கையெழுத்து —
—

தேதி பணம் கொடுக்கும் அலுவல —(கையொப்பம்)
—(பதவி)

*பொருள்கள் வழங்கப்பட்டிருந்தால், அவற்றின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அலுவலர், அல்லது சார்நிலைப் பணியாளரின் பெயரை இந்தக் கட்டத்தில் குறிக்க வேண்டும்.

பட்டியலைத் தயாரிக்கும் அலுவலரே பணம் கொடுக்கும் அலுவலராக இல்லாவிட்டால் மாத்திரம் இரண்டாவது கையெழுத்து வேண்டும்.

இவ்வினங்களுக்குப் பொருத்தமான குறிப்புக்கு நேராகக் கட்டணம் கொடுப்பவர் கருக்கொப்பம் செய்ய வேண்டும்.

கொடுக்கப்பட்ட பணத்தொகைகளைப் பற்றிய குறிப்பு.

		ரூ. பை.	ரூ. பை.
செய்த வேலையின் மொத்த மதிப்பு ..			
....19....கணக்குகளுடன் அனுப்பப் பட்ட எண்ணும்....தேதியுமுள்ள கடைசிச் சான்றுக்குப் பின் தொடுக்கப்பட்ட முந்திய தொகைகளின் மொத்தம்			
இப்போது கொடுக்கப்படுபடும் தொகைகள்.	ரொக்கம் ரூ.....		
	எண்ணும்..... 19 தேதியுமுள்ள பணம் செக்கு மூலம்.....		
	வழங்கப்பட்ட இருப்பு சரக்கின் மதிப்பு.		
வரவேண்டிய பாக்கி ..			

இந்த வேலையின் கணக்கை அனுசரித்துக் கொடுக்க வேண்டிய தொகைகளனைத்தையும் கணக்குத் தீர்த்து இறுதிச் செல்லாக ரூபாயைப் பெற்றுக் கொண்டேன்.

முத்திரை.

சாட்சிகள்.

ஒப்பந்தக்காரர்,
(ஒப்பந்தக்காரரின் பெயர், அவசியமானால், ஆங்கிலத்தில்).

இடம் :
தேதி :
ரூபாய்:

*எண்ணாலும் எழுத்தாலும் விளக்க வேண்டும்.

இங்கே ஒப்பந்தக்காரர் தமது சொந்தக் கையெழுத்தில் "கொடுக்க வேண்டிய தொகைகளனைத்தையும் கணக்கு தீர்த்து இறுதிச் செல்லாக" என்ற சொற்களை சேர்க்க வேண்டும்.

சிறு பாசன அலுவலரின் குறிப்புரை.

[இங்கே தணிகை அளவு எடுத்த விதத்தை அல்லது வேலையை வேறு வகையாய்ச் சோதித்ததைக் குறிப்பிட்டு, அத்தகைய சோதனையின் முடிவையும் குறிக்க வேண்டும்.]

இடம்
தேதி.....19..

சிறு பாசனம்.

ஆ....ஒப்பந்தச் சான்று (முழுத் தாள்)

குறிப்புகள்.

1. இப்படிவம், நடை முறையில் உள்ள வேலைகளுக்காயினும், செயல் முறையில் பொருள்கள் கடனுகப் பற்று வரவில் வழங் கப்பட்டு வரும் போது, பணங்கள் கொடுப்ப தற்காக, ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கைப் பற்றுச் சீட்டுப் படிவத்தை, இந்தப் படிவ துக்குப் பதிலாக, பற்று வரவில் வழங்கப் பட்ட பொருள்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனுல் கணக்கைத் தீர்த்து இறுதியாகப் பணம் கொடுக்கும்போது, மஞ்சள் நிறத் தாளில் அச்சிடப்பட்ட இப் படிவத்தை தவருமல் உபயோகிக்க வேண் டும்.

2. பணம் செக்கு மூலமாகவாவது, அல் லது ஏற்கப்பட்ட கூட்டு நிறுவனங்களுக்கா யினும் நிலையங்களுக்காயினும் தொகைகள் கொடுக்கப்படும் போது பணம் கொடுப்பவர் சான்றுரப்பம் அவசியமில்லையென்று கரு நினல், சான்றுரப்பம் வாங்க வேண்டியதில்லை. மாவட்டம் தாலுகா.

3. பணம் பெறுவோர் மண்டல மொழி யில் கையெழுத்துச் செய்தால், பெற்றுக் கொண்ட தொகையையும் அந்த மொழி யிலும் ஆங்கிலத்திலும் குறிக்க வேண்டும். ஒப்பந்தச்சான்று

4. "கொடுக்க வேண்டிய தொகைகள னைத்தையும் கணக்குத் தீர்த்து இறுதிச் செல் லாக" என்று அச்சிட்ட மஞ்சள் நிறத் தாளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொகை கள் முன்னமே ஒப்பந்தக் காரருக்குக் கொடுக் கப்பட்டு, செய்த வேலையைக் கணக்குப் பார்த்து இறுதியாகத் தொகை கொடுக்கப் படும்போது, இந்தத் தனி படிவத்தை உப யோகப் படுத்த வேண்டும். இத்தனிப் படி வங்கள் ஆங்கிலத்திலும் மண்டல மொழியி லும் அச்சிடப்படவேண்டும்: ஒப்பந்தக்காரர் எழுத தெரிந்தவராயிருந்தால் "கொடுக்க வேண்டிய தொகைகளனைத்தையும் முற்றி லும் கணக்குத் தீர்த்துக் கொடுக்கப்பட்ட தொகை" என்று அவர் தாமாக இப்படிவத்தி னில் எழுதிக் கொடுக்குமாறு அன்னரைக் கேட்க வேண்டும். ரொக்கப் புத்தகத் தின் ரசீது எண்.

இந்தச்சான்றின் எண்

வேலையின்பெயர்.

5. எழுதப் படிக்கத் தெரியாதவருக்குப் பணம் கொடுக்கும்போது, தகுதி வாய்ந்த இரண்டு தக்க சாட்சிகள் முன்னிலையில் அவர்களுக்குப் பணம் கொடுக்கும் வகையை முற்றிலும் விளக்கி பணம் பெறுவோரின் அடையாளத்தையோ அல்லது முத்திரை யையொ பெற்று அவ்விரு சாட்சிகளின் சான்றொப்பமும் பெற வேண்டும். ஒப்பக்கக்காரரின் பெயர்

6. சிறு பாசன அலுவலர், பட்டியின் முக்கிய பாகத்தில் "குறிப்புரை"க் கட்டத் தில், ஒப்பந்தக்காரருக்குப் பொருள்கள் வழங்கப்பட்டு அவற்றின் விலை மதிப்புத் தொகையைப் பணம் கொடுக்கும் சமயத்தில் கழிக்க வேண்டியதாயிருந்தால், அப் பொருள் களின் அளவைக் குறிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். இந்த வேலைக்காக அளிக்கப்பட்ட கடைசி சான்றின் எண்ணும் தேதி யும்.

7. இந்தச் சான்று தனிப்பட்ட ஒருவரின் கணக்கிற்கு மாத்திரம் சம்பந்தப்பட்டதாக இருக்கும்: வெவ்வேறு வகைப்பட்ட வேலை யின், அல்லது. பொருள்களின், அளவுகளை எப்பொழுதும் குறிப்பிட வேண்டும்.

8. இருப்புக்காக அல்லது ஒரு வேலைக்காக பொருள்கள் வாங்கப்பட்டனவா என்பதை இந்தக் கணக்கில் எப்பொழுதும் குறிக்க வேண்டும்: மேலும், பொருள்களின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அலுவலரின் பெயரையும், அவரே சான்றில் கையொப்ப மிடும் அலுவலராக இருந்தாலன்றி, குறிக்க வேண்டும். . . பார்க்கவும்.

9. பட்டியைத் தயாரிக்கும் அலுவலரே, பணம் கொடுப்பதற்கு அதிகாரமுள்ளவரா விருந்தால், பட்டியலின் அடியில் ஒரு கை யொப்பம் மட்டும் போதுமானது.

10. கொடுக்கப்படும் தொகை ஒவ்வொன் றும் 20 ரூபாய்க்கு மேற்பட்டால் ஒவ்வொரு தொகை கொடுக்கப்படுவதற்கும் வருவாய் முத்திரை வில்லை ஒட்டப்பட்ட பற்றுச் சீட்டு ஒன்று வேண்டும்.

VI ஆவது அத்தியாயத்தின் இணைப்புகள்.

இணைப்பு I

[நில ஆணை எண் 86 பத்தி 5.]

குடிகள் மாமத்து வேலைகளை ஒழுங்காகச் செய்கிறார்களா என்பதை நிச்சயம் செய்து கொள்வதற்கான அறிவுரைகள்.

நீர்ப் பாசன வேலைகளைப் பாதுகாத்து வருதலிலும் அவற்றைப் பழுது பார்த்து வருதலிலும் குடிகள் தங்கள் கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றுமாறு அவர்களை அலுவலர்கள் அனைவருமே சரிவர வற்புறுத்துகிறார்களா என்பதைக் கவனித்து வரவேண்டிய அவசியம் கலெக்டர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றது. குடிகள் குடிமாமத்து வேலையை ஆண்டுதோறும் ஒழுங்காகவும் செய்கிறார்களா என்பதை நிச்சயம் செய்து கொள்வதற்காக இதன் பின்னர் அறிவுரைகள் பிறப்பிக்கப் படுகின்றன.

2. கிராம 5, 20 எண் கணக்குகள் சம்பந்தமாக வருவாய் ஆய்வாளர் தமது சாதாரண அலுவல் முறையில் தமது சரகத்திலுள்ள நீர்ப்பாசன வேலைகள், பெரும் பாசனங்களாக இருப்பினும் சிறு பாசனங்களாக இருப்பினும், எல்லாவற்றையுமே பார்வையிட வேண்டும். இவ்வாறு அவர் செய்யும்போது, தாம் பார்வையிடும் யாதொரு பாசன வேலையைப் பொறுத்த வரையில், அதன் குடிமாமத்து வேலை சென்ற ஆண்டில் நிறைவேற்றப்படாமல் விடப்பட்டதா என்பதை விசாரித்து அறிந்து, அதைப் பற்றி ஒவ்வொரு பாசன வேலையில் எந்த இனம் கவனிக்கப்படாமல் விடப்பட்டதெனத் தமது இருவார நாட்குறிப்பில் எழுதி அறிக்கை செய்ய வேண்டும். அதுபோன்றே கவனிக்கப்படாமல் விடப்பட்ட குடிமாமத்து வேலைகளில் யாதாவது ஒன்றை அரசாங்க அலுவலர் எவராயினும் தமது சுற்றுப்பயணங்களில் பார்வையிடுவார்கள் எனில், அதைப் பற்றி அவர் தாசில்தார் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும். வருவாய் ஆய்வாளரின் நாட் குறிப்பு அல்லது அரசாங்க வேறொரு அலுவலரது அறிக்கை வரப் பெற்றவுடன் குடிமாமத்து வேலைக்கென்றே குறிப்பிடப்பட்டுள்ள பதிவேட்டின் (1), (2), (4) கட்டங்களில், கவனியாமல் விடப்பட்ட குடிமாமத்து வேலையின் இனங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

3. கிராமத்தில் சில குடிமராமத்து வேலை செய்யப்பட வேண்டு மென்னும் தகவல் மற்றொரு வாயிலாகக் கிடைக்கும்போது (1), (2) கட்டங்கள் முன் சொன்னவாறே பூர்த்தி செய்யப்பட்டு இச் செய்தி உண்மையா என்பதையும், அந்த வேலையைக் குடிகள் செய்யுமாறு அமல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமா என்பதையும், பார்வையிட்டு அறிக்கை செய்யுமாறு வருவாய் ஆய்வாளருக்கு ஆணையிடவேண்டும். வருவாய் ஆய்வாளர் அனுப்பிய பதிலின் தேதியையும், அவர் கருத்தின் முடிவையும் அதாவது வேலை அவசியம் அல்லது அவசியமில்லையென்பதையும் (3) ஆவது கட்டத்தில் எடுத்தெழுத வேண்டும். வருவாய் ஆய் வாளர் அவ்வேலை அவசியமில்லையென்று அறிவித்தால், மேற் கொண்டு நடவடிக்கைத் தேவையில்லை; ஆனால் இதைப் பற்றி (4) ஆவது கட்டத்தில் குறித்துக் கொள்ள வேண்டும்.

4. ஆனால், வேலை அவசியமென்று வருவாய் ஆய்வாளர் அறிவித் திருந்தால், அல்லது வருவாய் ஆய்வாளரின் நாட் குறிப்பிலிருந் தாவது அல்லது அரசாங்க வேறொரு அலுவலரின் அறிவிப்பிலிருந் தாவது ஏதாவதொரு குடிமராமத்து வேலை கவனிக்கப்படாம லிருப்பதாகத் தெரியவந்தால் தன் பதிவேட்டில் இது பதிவு செய்யப்பட்டு புதிய கோப்பொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்; மேலும் அக்கோப்பின் நடப்பு எண் குடிமராமத்துப் பதிவேட்டின் (5) ஆவது கட்டத்தில் குறிக்கப்படவேண்டும். செய்ய வேண்டிய வேலை சிறு பாசன வேலைக்குச் சம்பந்தப்பட்டதாயிருந்தால், தாசில்தார் 1858 ஆம் ஆண்டு சென்னை I ஆவது சட்டத்தின் 6-ஆவது உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அமல் செய்வ தற்கான நடவடிக்கையை நேரிடையாக மேற்கொள்ள வேண்டும். செய்யப்பட வேண்டிய வேலை பொறி இயல் பணித் துறையினர் பொறுப்பிலுள்ளதொரு நீர்ப்பாசன வேலையைப் பற்றியதாயிருந் தால், தாசில்தார் கோட்ட ஆட்சியாளருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும். கோட்ட ஆட்சியாளர் பொறி இயல்பணித் துறையின ருக்கு இதைப்பற்றி எழுதிக் கொள்ள வேண்டும். பின்னர் குடி மராமத்துப் பதிவேட்டின் 6-ஆவது கட்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். பொறியியல் பணித் துறையினர் அவ்வேலைகள் குடிகள் செய்ய வேண்டுமென்று தெரிவித்தால், 1858 ஆம் ஆண்டு I வது சட்டத்தின் 6 ஆவது பிரிவின்கீழ்த் தேவையான நடவடிக் கையைத் தாசில்தார் எடுத்துக் கொள்ள வேண்டும்.

தாசில்தார் 1858-ஆம் ஆண்டு 2-ஆவது சட்டத்தின் 6-ஆவது பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கும்போது 86 ஆவது நிலை ஆணையின் 5-ஆவது பத்தியில் விதிக்கப்பட்டுள்ள நடைமுறையை மேற்கொள்ள வேண்டும். பாசன ஆதாரத்தின்கீழ் உள்ள குடிமராமத்து வேலையின் நிறைவேற்றுதலுக்காகக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டிருந்தால், 86-ஆவது நிலை ஆணையின் 5-ஆவது பத்தியின் நான்காவது உள் பத்தியில் வகுக்கப்பட்டுள்ள நடைமுறையைக் கவனமாய் மேற்கொள்ள வேண்டும்.

12—7—1956, தேதி 2657, அ.ஆ.பல.வரு.

5. செய்யப்பட்ட வேலை முடிவடைந்ததென்றும், ஒரு தனிப்பட்ட பிரதிநிதியால் செய்யப்பட்டதென்றும், கிராம அலுவர்களிடமிருந்து தகவல் கிடைக்கப்பெற்றால், தாசில்தார், 7-ஆவது கட்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். [1] வேலையைக் குடிகளே செய்து முடித்த இனங்களிலும், அல்லது கூட்டுறவுச் சங்கங்களினால் செய்து முடிக்கப்பட்ட இனங்களிலும், 8-ஆவது கட்டம் வெற்றிடமாக விடப்படும்; ஆனால், மற்ற இனங்களில் உதவித் தொகை முழுவதும் வசூலான தேதியையும், அந்த இனம் சம்பந்தமாக இறுதியாக முடிவு செய்துள்ள தாலுகாக் கோப்பின் எண், தேதி இவற்றை 8 ஆவது கட்டத்தில் குறிக்க வேண்டும். [1] [2] அக்கோப்பு முடிவுகளுக்கு "நிறுத்தி வைக்கப்பட்ட" தொடரில் எண்களளித்து, அவற்றை நிலையாக வைத்துக் கொள்ள வேண்டும். [2]

6. நீர்ப்பாசன வேலை முதலில் பார்வையிடப்பட்டு அது சம்பந்தமாகக் குடிமராமத்து வேலையொன்றும் தேவையில்லையென்று அறிவிக்கப்பட்டால், அதைப்பற்றி 1, 2 (அவசியமாயின் 3) 4 கட்டங்களில் பதிவு செய்யப்பட வேண்டுமேயன்றி 5 முதல் 8 வரையிலுள்ள கட்டங்களில் அல்ல. பின்னர் வரப்பெறும் அறிக்கைகளும் அத்தகைய வேலை அவசியமில்லையென்று காட்டுமெனில், புதிய பதிவு ஒன்றும் செய்ய வேண்டியதில்லை; ஆனால் 4-ஆவது கட்டத்தில் அறிக்கைத் தேதியைக் காட்ட வேண்டும். பின்னர் வரப்பெறும் அறிக்கை குடிமராமத்து வேலை தேவையென்று தெரிவிக்குமானால், மேலே (3)-ஆவது (4)-ஆவது பிரிவுகளில் விதிக்கப்பட்டுள்ளவாறு 1-ஆவது கட்டத்தில் புதிய பதிவு ஒன்று செய்ய வேண்டும்.

7. எத்தனை பிர்க்காக்களுண்டோ அத்தனை பிரிவுகளில் இப்பதிவேடு எழுதப்பட வேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தாள்களை ஒதுக்கி வைத்து, தேவையானால் புதுத் தாள்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

8. இவ்வாறுகத் தனிப் பதிவேட்டானது தாலுகாவிலுள்ள குடிமாமத்து வேலை முன்னேற்றத்தைக் காட்டும் முழுப் பதிவேடாகப் பயன்படும். தாசில்தார், கோட்ட ஆட்சியாளர், கலெக்டர் ஆகியோர் இப்பதிவேட்டை ஆராய்ந்து பார்ப்பதிலேலே, இவ்வேலை ஒழுங்காக நடைபெற்று வருகிறதா இல்லையா என்பதை தெரிந்து கொள்ளக்கூடும். இப்பதிவேட்டை அழித்துவிடாமல் தாலுகா அலுவலகத்தில் நிலையாக வைத்துவர வேண்டும்.

9. இவ்வறிவுரைகளின் நகலொன்றை இப்பதிவேட்டின் முன் பக்கத்தில் ஒட்டி வைக்க வேண்டும்.

மாவட்டம், தாலுகா சிறு பாசனங்களிலும் பொறி இயல் பணித் துறை நீர்ப்பாசனங்களிலும் செய்யப்படும் குடிமாமத்து வேலைகளைக் காட்டும் பதிவேடு.

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
பாசன ஆதாரத்தின் பெயர்.	எவரால் அறிவிக்கப்பட்டதென்பதும் அறிக்கைத் தேதியும்.	வருவாய் ஆய்வாளர் அனுப்பிய அதாவது வேலை அவசியமா? அவசியமில்லையா என்பது.	குடிமராமத்து தேவையான தலைமை, அதாவது, சப்பாத்திக் கள்ளையை நீக்குதல் வண்டல் எடுத்தல் முதலியன— தேவையில்லை யென்றும் அவ் வாறு குறிக்க வேண்டும்.	எடுத்துக்கொண்ட நடவடிக்கை விவரத்துடன் நடப்புப் பதிவேட்டில் இலக்கத்தைச் சார்ந்த எண்ணும் தேதியும்.	இராம அலுவலர்களுக்கு அனுப்பின ஆணையின் கோட்ட ஆட்சியாளருக்கு அனுப்பின எண்ணும் தேதியும்.	முடிவு அதாவது குடிகளால் செய்யப்பட்டவேலை சங்கங்களால் செய்யப்பட்டவேலை 1 ஆம் எல முறையில் செய்யப் பட்ட வேலை அல்லது அரசாங்கத்தால் செய்யப்பட்டவேலை.	டிச்ச ஏல முறையில் அல்லது அரசாங்கத்தால் வேலை செய்யப்பட்டிருந்தால் பணம் எப்போது வசூலிக்கப் பட்டது.

கிராமம்.

6—12—1927 தேதி, 2534 அ.ஆ.வரு.
20—12—1927 தேதி, 100 வ.து.க.செ.
26—3—1928 தேதி, 657, அ.ஆ.வரு.பலவ.
22—5—1928 தேதி, 42 வ.து.க.செ.
9—5—1928 தேதி, 1023 அ.ஆ.வரு.பலவ.
~~22—10—1929 தேதி, 93 வ.து.க.செ.பலவ.~~
17—10—1929 தேதி, 2131 அ.ஆ.பலவ.
12—7—1956 தேதி, 2767 அ.ஆ.வரு.பல.

இணைப்பு II.

நில ஆணை எண் 86 பத்தி .

.....மாவட்டத்தில்.....தாலுக்காவில், 1858-ஆவது ஆண்டு I-வது கட்டமாகிய கட்டாய சேமிப்புச் சட்டத்தின் 6-வது பிரிவின்கீழ் வசூல் செய்யப்பட்ட தொகையையும் அதன் முடிவையும் காட்டும் விவரப் பட்டியல்.

(1) சட்டத்தின் 6-ஆவது பிரிவின்கீழ் எந்த வேலை சம்பந்தமாகத் தொகை வசூலிக்கப்படுகிறதோ அந்த வேலையின் பெயர்.	(2) வசூல் ஒப்பளிக்கும் ஆணையின் எண்ணும் தேதியும்.	(3) வசூலிக்கப்பட்ட தொகை. ரூ. காசு.	(4) கருவூலக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்ட தேதி.	வேலைக்காக செய்யப்பட்ட செலவு. (5) தேதி.	(6) தொகை. ரூ. காசு.	(7) தாலுகா முடிவுக் கோப்பின் தாலுகா எண்ணும் தேதியும்.	(8) எந்தியதொகை ஏதேனும் திருத்தால். ரூ. காசு.	இருப்புத் தொகைகளின் பயன் படுத்தின விவரம். (9) வேலையின் பெயர்.	(10) செலவினத்தை ஒப்பளிக்கும் ஆணையின் எண்ணும் தேதியும்.	(11) செலவான தொகை. ரூ. காசு.	(12) செலவிடப்பட்ட தொகை தேதி.	(13) தாலுகா முடிவுக் கோப்பில் உள்ளதாக ஆகாரமாகக் குறிக்கப்பட்டது.

கிராமத்தின் பெயர்.

ந.க.—ஒவ்வொரு கிராமத்திற்கும் போதுமான எண்ணிக்கையுள்ள பக்கங்களை ஒதுக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

12—5—1928 தேதி, 1046 அ.ஆ.வரு.பலவ. 25—5—1928 தேதி, 1685 வ.து.க.செ.பலவ.

12—7—1956 தேதி, 2767, அ.ஆ.வரு.பலப. 8—1—1957 தேதி, 112 அ.ஆ.வரு.பல.

இணைப்பு III.

நீலி ஆணை எண் 96, பத்தி 9.

தென்னிருப்புப் பாதையைப் குடிய எரிசக்கோய் தனிக்கை அறிக்கை.

(1)	மாவட்டம்.	
(2)	தாலுகா.	
(3)	ஏரிக்கு பெயர்.	
(4)	இறுதியாக மராமத்து செய்யப்பட்ட ஆண்டு மற்றும் அதற்கான செலவு விவரம்.	
(5)	வரையறுக்கப்பட்ட ஏரியை முழு ஏரியும் பயன்படுத்தி வருகிறதா, இல்லையா என்பதை விளக்கி எழுதவும்.	
(6)	வகை.	ஏரியின் உபரிநீர் இருப்பும் பாதை மற்றும் எத்தனை இடங்களில் இருக்கிறது என்பதை விளக்கி எழுதவும்.
(7)	நீர்ப்பாசன விவரம்.	
(8)	எவ்வாறு வரப்பெறுகிறது என்பதை விளக்கவும்.	
(9)	வகை.	
(10)	உபரி நீர் வடிகால்களின் எண்ணிக்கை.	பொதுவாகச் சொல்லுமிடத்து நிலைமைகள்.
(11)	இதுவரை ஏரிக்கு நீர் வரத்து வாய்க்கால்களில் பராமரிப்பு மற்றும் அவற்றின் தன்மை.	
(12)	ஏரியின் கரை மற்றும் கலிங்கு எவ்வாறு உள்ளது.	
(13)	நிலைமையை உள்ளவாறு குறிப்பிடவும்.	மராமத்து தேவைப்படின் தேவையான தொகை தனியாக குறிப்பிடவும்.
(14)	பொதுக் குறிப்புரை.	

8—4—1932 தேதி, 781 ந.இ.வ.பக்கம்.

12—7—1956 தேதி, அ.கு.வ.பக்கம்.

12—4—1932 தேதி, 1156, வ.து.க.தொ.பக்கம்.

இணைப்பு IV.

நில ஆணை எண் 87, உட்பிரிவு (1).

சிறுபாசன ஆதாரங்களின் பட்டியல்.

மாவட்டம், தாலுகா.

கிராமத்தின் எண்ணும் பெயரும். (1)	பாசன ஆதாரத்தின் பெயர். (2)	ஆயக்கட்டு. (3)	ஏரி, புதுப்பிக்கும் நிட்டத்தின் வரலாற்றுக் குறிப்பு.		நிலையான பேரேடு.		
			ஏரியின் பெயர். (4)	பக்கம். (5)	தொகுதி. (6)	பக்கம். (7)	குறிப்புரை. (8)

அறிவுரைகள்.

இப்பட்டியல் (V ஆவது இணைப்பு) நிலையான பேரேட்டிற்கு ஓரட்டணையாகும். கிராமங்களை ஒவ்வொரு தாலுகாவின் கீழ் அகர வரிசையில் அமைத்துக்கொள்ள வேண்டும். இருப்புப்பாதையைப் பாதிக்கக்கூடிய ஆதாரங்களை(2) ஆவது கட்டத்தில் அந்த ஆதாரத்தின் பெயருக்கு நேராக ஒரு நட்சத்திரக் குறியால் காட்ட வேண்டும்.

9—1—1940 தேதி, 66 அ.ஆ.வரு.பல.
27—1—1940 தேதி, 6 வ.து.க.செ.அச்சு.

இணைப்பு V.

[நில ஆணை எண் 87, உட்பிரிவுகள் (i), (ii).]

சிறு பாசன ஆதாரங்களின் நிலையான பேரேடு. .....தாலுகா.....கிராமம்.	நில அளவை எண் பெயர்.
ஆதாரத்தின் பெயர். ஆதாரத்தின் வகுப்பும் தன்மையும்.	ஆதாரம் எவ்வளவு நீர் கொள்ளும் என்பது.

சிறிய பள்ளத்தாக்கின் பெயரும், வேலை விவரமும் ஏரி புதுப்பிக்கும் திட்டத்தின் விளக்கமான வரலாற்றுப் புத்தகத்தில் இவற்றிற்குரிய பக்கத்தின் எண்ணும் நீர் பாயக்கூடிய ஆயக்கட்டின் மொத்தமும், தீர்வையும்.

1	2	3	4	5	6	7	8
மதிப்புப்படி ஒப்பளிக்கப்பட்ட ஆண்டு.	மதிப்புப்படி ஒப்பளிக்கப்பட்ட தேதியும் எண்ணும், அதன் தன்மையும், அவை பாவல. அசல் வேலைகள் அல்லது பழுதுபார்த்தலும் பராமரிப்பும்.	பழுது பார்க்கும் வகையில் சரும் சுமான விவரம்	மதிப்புப் பட்டியின் தொகை யும் திருத்தி உண்மையில் செலவு செய்யப்பட்ட ஆண்டும்.	தொகை உண்மையாகச் செலவு செய்யப்பட்டது.			தரப்பட்ட தொகை.
				ஏக. ரூ. காசு.	ஏக. ரூ. காசு.	ஏக. ரூ. காசு.	

அறிவுரைகள்

இப்பேரேடாவது, ஒவ்வொரு மாவட்டத்திலும், சிறு பாசனத் துறையின் பொறுப்பிலுள்ள நீர்ப்பாசன ஆதாரங்களின் பராமரிப்பை, அல்லது புதுப்பிக்கும் பணியைப் பற்றிய நிலையான பதிவேடாயிருக்கும்; மேலும், அது ஒவ்வொரு நீர்ப்பாசன வேலைக்கும் ஏற்பட்ட பழுதுபார்க்கும் வேலையைப் பற்றிய தொடர்ந்த வரலாற்றையும் தெரிவிக்கும். அதை ஒரு வைத்துக் கட்டப்பட்ட பேரேடாக ஒவ்வொரு தாலுகாவுக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொகுதிகளில் வைத்திருக்க வேண்டும். ஒரு ஆதாரத்திற்குப் பழுது பார்ப்பதற்கோ, மேம்பாடு செய்வதற்கோ அல்லது, புதுப்பிப்பதற்கோ, மதிப்புப் பட்டி ஒப்பளிக்கப்பட்டதும், இப்பேரேட்டில் தேவையான பதிவுகளைச் செய்து, அதற்கேற்றவாறு அச்சிடப்பட்ட ஆதாரங்களின் பட்டியலில் தொகுதியையும் பக்கத்தையும் குறித்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஆதாரத்திற்கும் ஒரு பக்கம் விட்டு வைத்து, ஒவ்வொரு மதிப்புப் பட்டிக்குரிய பதிவுகளைத் தனித்தனி வரியில் எழுத வேண்டும். பிற்காலத்தில்

ஏற்படும் திருத்தங்களைப் பதிவு செய்வதற்காகப் போதுமான இடத்தை ஒவ்வொரு வரிக்குக் கீழ் விட வேண்டும். கூடுதல் மதிப்புப் பட்டிகளின் தொகைகளைத் தொடர்புள்ள முதலாவது மதிப்புப்பட்டிகளின் தொகைகளுக்குக் கீழே குறிக்க வேண்டும். திருத்தியமைத்த மதிப்புப்பட்டிகள் இருந்தால், ரத்து செய்யப்பட்ட அசல் மதிப்புப்பட்டிகளைப் பற்றிய பதிவுகளை அடித்து விட்டுத் தேவையான விவரங்களைக் குறிக்க வேண்டும். வேலை வகையின் சுருக்க விவரம் ஒன்றை (அதாவது, 'புதிய மதகு ஏற்படுத்தல்,' 'மண் வேலை', 'கல்லங்கல்களைப் பழுதுபார்த்தல்' முதலியவற்றை) (3) ஆவது கட்டத்தில் கொடுக்க வேண்டும். 'பழுதுபார்த்தல்', முதலியவற்றை) (3) ஆவது கட்டத்தில் கொடுக்க பாய்ச்சப்படக்கூடிய ஆயக்கட்டின் மொத்தமும், தீர்வையும், என்பதற்கு நேராக்க் கொடுக்கப்பட்டிருக்கும் தகவலைத் திருத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு திருத்திய ஆயக்கட்டு மதிப்பு முறையில்லாமல் உண்மையான ஆயக்கட்டாகவே இருக்க வேண்டும். திருத்தின ஆண்டை அடைப்புக்குள் "140 ஏக்கர்கள் (1930)" இவ்வாறு காட்ட வேண்டும். (2) ஆவது கட்டத்தைப் பூர்த்தி செய்யும்போது 'அ', 'ப', என்ற அடையாளங்களை, 'அசல் வேலைகள்' பழுது பார்த்தல், என்பவற்றிற்காக உபயோகிக்க வேண்டும்.

தனித் தொழில் நுட்பத் திறமையும் மேற்பார்வையும் தேவையாகும் என்ற காரணத்தைக் கொண்டு, பொறி இயல் பணித் துறை சிறு பாசன வேலைகளை நிறைவேற்றினால் சிறு பாசன வேலைகள் சம்பந்தமான மதிப்புப் பட்டிகளையும் இப்பேரேட்டில் குறிக்க வேண்டும். 'பொறி இயல் பணித் துறையினரால் வேலை நிறைவேற்றப்பட்டது' என்ற குறிப்பைக் குறிப்புரைக் கட்டத்தில் எழுத வேண்டும்.

87 ஆவது நிலை ஆணையின் (i) ஆவது உட்பிரிவில் குறிப்பிட்ட அச்சிடப்பட்ட சிறு பாசன ஆதாரங்களின் பட்டியல் இப்பேரேட்டுக்கு ஒரு அட்டவணையாகும்.

31—3—1928 தேநி. 753 அ.ஆ.வரு.
13—4—1928 தேநி. 31 வ.து.க.செ.
1—10—1928 தேநி. 3240 வ.து.க.செ.பலவ.
9—1—1940 தேநி. 66 அ.ஆ.பலவ.
27—1—1940 தேநி. 6 வ.து.ப.செ.அச்ச.
12—7—1956 தேநி. அ.ஆ.வரு.பல.
8—1—1957 தேநி. 112 அ.ஆ.வரு.பல.

இணைப்பு VI.

[நிதி ஆணை எண் 87, உட்பிரிவு (iv)]

சிறு பாசனங்களின் சரியான நிலையையும், தயாரிக்கப்பட்ட மதிப்புப்பட்டிகளையும், உண்மையாக நிறைவேற்றப்பட்ட வேலைகளையும் பற்றிய ஆண்டறிக்கை.

21—10—1921 தேதி, 2335, அ.ஆ.வரு.பல.

( ) தல ஆட்சி மன்றங்கள் தங்கள் காரியங்களுக்குத் தேவையான நிலத்தைத் தனிப்பட்ட முறையில் விலைக்கு வாங்குவதில் அல்லது நன்கொடைப் பத்திரம் எழுதிக் கொடுத்து அளிக்கும் நிலத்தைப் பெற்றுக்கொள்வதில் ஆட்சேபணை இல்லை. ஒவ்வொன்றிலும் தனிப்பட்ட முறையில் பேச்சு வார்த்தை நடத்தி நிலத்தை வாங்குவது அல்லது நிலத்தின் உரிமை பெறுவதற்காக மாநில அரசினரை அணுகுவது இம்முறைகளில் ஒரு முறையை மேற்கொள்ள முடிவு செய்யும் உரிமை தல ஆட்சி மன்றங்களிடம் விடப்பட்டிருக்கின்றது.

(iv) சாலைகளுக்காக நில உரிமை பெறல்.—அரசாங்கச் சாலை வேலைகளைப் பொறுத்தவரையில் அரசினருக்குத் தேவையான நிலங்களை உரிமை பெற வேண்டிய சந்தர்ப்பங்களில் நிலங்களின் உரிமையை அச்சமின்றி ஏற்றுக் கொள்ளலாம் என்றும், எத்தகைய வழக்கிலும் அரசினரை உட்படுத்தக் கூடிய இடர் நேரிடாதெனவும் தல அரசாங்க வழக்கறிஞர் சான்று அளிப்பாராகில், தனிப்பட்ட முறையில் நிலங்களைத் தங்களுக்கு மாற்றிக் கொண்டு அவற்றின் உரிமையை அரசினர் பெற்றுக் கொள்ளலாம். இருப்பினும், சாலைகளின் உபயோகங்களுக்கு வேண்டிய நிலங்களின் உரிமை பெறுவதற்கு மட்டுமே இம்முறையை மேற்கொள்ள வேண்டும்.

10— 2—1951 தேதி, 96, அ.ஆ.வரு.வாலாயம்.
5— 3—1951 தேதி, 11, வ.து.க.செ.அச்சு.

நிலங்களைத் தேர்ந்தெடுத்தல்.—நிலம் எந்தத் துறைக்குத் தேவையோ அத்துறையின் சார்பில், நிலத்தைத் தேர்ந்தெடுக்கும் அலுவலர், மாநில அரசினர் நலன்களையும், பொது மக்கள் நலன்களையும் தனிப்பட்டவர்கள் நலன்களையும் உரிய முறையில் கவனித்துப் பார்ப்பதற்கும், நிலத்தின் தேவையை முன்னிட்டு, ஏற்படக்கூடிய செலவும், துன்பமும், இழப்பும் குறைந்த அளவில் இருக்குமாறு நிலங்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், நோப்பாட்டை அமைப்பதற்கும் கட்டுப்பட்டுள்ளார். கட்டிடத்திற்காக நிலத்தின் உரிமை பெற யோசனை செய்யும்போது, மற்றவற்றோடு, கட்டட அமைப்பு கலைத்தன்மைகளைப்பற்றிக் கவனம் செலுத்த வேண்டும். எனவே, தக்கதொரு கட்டடம் முன்னமே அமைந்திராத எடுப்பான மூலை இடத்தைத் தேர்ந்தெடுப்பதோ, அல்லது மாநில அரசினர் கட்ட உத்தேசித்துள்ளது, மிகச் சிறிய மற்ற கட்டங்களால் மறைவுறுமாறு உள்ள மிகச் சாதாரண நிலத்தைத் தேர்ந்தெடுப்பதோ என்பதில், எந்த இடத்தில் கட்டடங்கள் அமைக்கப்படுமானால், அக்கட்டடம் அமைக்கப்படும் பகுதிகளின் வசதிகள் மேம்பாடு அடையுமோ அந்த இடம்தான் விரும்பத்தக்க இடமாகும்.

நிலங்களின் விலைகள் உயர்த்தப்படுவதைத் தடுக்கும் பொருட்டு, நிலத்தைக் கோறும் துறையின் அலுவலர்களுக்கும், வருவாய்த் துறை அலுவலர்க்கும் இடையே நிலத்தைத் தேர்ந்தெடுப்பதைப் பற்றி ஏற்பாடுகள் ஏதேனும் இருப்பின், அவற்றில் இயன்றபோதெல்லாம் அரசினர் நோக்கங்களை வெளிப்படுத்தாமல் மேற்கொள்ள வேண்டும்.

30— 8—1939 தேநி, 2219, அ.ஆ.வரு.பல.
2—10—1939 தேநி, 88, வ.து.க.செ.

4. எம் மாவட்டங்களில் மாநில அரசினரால் கிராம நத்தத்திற்காக ஏற்பாடு செய்யப்படலாம்.—விளிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்கள் தவிர, மற்ற மாவட்டங்களில் கிராம நத்தங்களை அரசினர் அமைப்பது வழக்கமாக ஏற்பட்டதெனச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (ஊ) உட்பிரிவில் அரசினர் அறிவித்துள்ளனர், இவ்வாறே இம்மாவட்டங்களின் அரசுக்குடி முறை பகுதிகளில் கிராம நத்தங்களை அமைப்பதற்கும் அவற்றை விரிவாக்குவதற்கும் தேவையான நிலத்தின் உரிமையைச் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை அனுசரித்து மாநில

அரசினர் பெறலாம். நிலையான வரி அமைந்த கிராமங்களில் கிராம நத்தங்களை அமைப்பதற்குரிய ஏற்பாட்டை மேற்கொள்ளும் பொறுப்பை மாநில அரசினர் சாதாரணமாக அங்கீகாரம் செய்யவில்லை.

17— 6—1895 தேதி, 196, வ.து.க.செ.
26—11—1938 தேதி, 3032, அ.ஆ.வரு.அச்சு
20— 3—1939 தேதி, 26, வ.து.க.செ.அச்சு.
15— 3—1967 தேதி, 151, அ.ஆ.வரு.வாலாயம்.

5. நில உரிமை பெறுவதற்குரிய தனி அலுவலர்.—விரிவடைந்த பொதுப் பணி ஒன்றிற்கு நிலம் வேண்டுமானபோதெல்லாம், நிலத்தின் உரிமை பெறுவது சம்பந்தமாகத் தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். இதனால் ஏற்படக் கூடிய கூடுதல் செலவிற்கும் மேலதாகச் சாதாரணமாக வாதங்கள் மிக விரைவில் தீர்த்து வைக்கப்படுதலினால், ஈட்டுத் தொகை கொடுப்பதில் அதிகச் சிக்கனம் ஏற்படுவதுடன் வட்டியும் மற்ற செலவினங்களும் தவிர்க்கப்படுகின்றன. பொதுப் பணிகளுக்காக நிலத்தின் உரிமையைப் பெறுவதற்காகவே நியமிக்கப்படும், அலுவலர், பொறி இயல் பணித் துறை அலுவலர் எவ்வாறு நிதிகளைப் பெற்று அவற்றைப் பிரித்துக் கொடுத்து அவற்றிற்குரிய கணக்குகளை ஒப்புவிப்பாரோ, அவ்வாறே நடந்துக் கொள்வர். அவர் மற்ற வகைகளில் எம்மாவட்டத்தில் பணியாற்றுகிறாரோ அந்த மாவட்டத்தின் கலெக்டரின் கட்டுப்பாட்டில் இருப்பார். இருப்பினும், கால தாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு அவர், படைத் துறை அதிகாரிகளைத் தவிர எத்துறையினருக்காக நிலத்தின் உரிமை பெறப்படுகிறதோ, அந்தத் துறை அதிகாரிகளுடன் நிலம், நிலப் படங்கள் முதலியவை பற்றி நேராகக் கடிதப் போக்குவரத்து செய்ய அனுமதிக்கப்படலாம். மேலும், அவர் நில உரிமை பெறத் தக்க சாதாரணமானவற்றில் வரைவு அறிவிக்கைகளை மாநில அரசினருக்கு நேராக அனுப்பலாம். ஆனால், குறிப்பான இடையூறுகள் உள்ளவற்றிலாயினும் கொள்கைப் பிரச்சினையுள்ள வற்றிலாயினும் அறிக்கை வருவாய்த் துறைக் கழகத்தின் வழியாக அனுப்ப வேண்டும். கம்பெனிகளுக்காகவும் தன்னாட்சி மன்றங்களுக்காகவும் நிலங்களின் உரிமை பெறப்படுவதில் தனியாளர்கள் நியமிக்கப்படுவதால் ஏற்படக்கூடிய செலவையும் மற்ற இடைநிலைச் செலவையும் நில உரிமை பெறும் சட்டத்தின் 50 (1) ஆவது பிரிவில் விதிக்கப்பட்டுள்ளவாறு

நிலத்தைக் கோரும் சம்பந்தப்பட்ட தல ஆட்சிக் கழகத்திற்குச் செலவு எழுதப்படும். மத்திய அரசாங்கத் துறைக்கு நிலத்தின் உரிமை பெறப்பட்டால் நிலத்தின் உரிமை பெறுவதற்கு ஏற்படும் செலவு (இடைநிலைச் செலவும் யாதொரு தனிப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தால் அதற்காக ஏற்படும் செலவும்) மத்திய அரசினர் செலவாகும். அரசாங்கத் துறைகளில் யாதொன்றுக்காக நில உரிமை பெறும் தனி அலுவலர் நியமிக்கப்பட்டிருப்பின், அவரது சம்பளம், படிகள், அவருடைய பணியாளர் சம்பளம், சில்லறைச் செலவு முதலியன நில உரிமை பெறும் செலவின் ஒரு பகுதியாக, நில உரிமை பெறும் அத்துறையினது செலவாகும். நில உரிமை பெறுவதற்கெனப் பிரத்யேகமாக நியமிக்கப்படாத சிவில் அலுவலர் ஒருவரால் நிலம் எடுத்துக்கொள்ளப்பட்டால் அவரது சம்பளம், படிகள், அவரது சாதாரணப் பணியாளர்கள் சம்பளம், சில்லறைச் செலவுகள் இவை நில வருவாயிலிருந்து செலவு செய்யப்படும். ஆனால் சம்பந்தப்பட்ட நிலத்தின் உரிமை பெறுவதில் பணியாளர் தொகுதியைப் பற்றியும் சில்லறைச் செலவினங்கள் முதலியவற்றிலும் நேரிடக்கூடிய தனிச் செலவுகளை நிலம் எந்தத் துறைக்கு உரிமை பெறப்படுகின்றதோ அந்தத் துறை ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலே குறிக்கப் பட்டுள்ளவாறு நியமிக்கப்படும் தனி அலுவலருக்குக் கீழே 13 ஆவது பத்தியில் குறிப்பிட்டுள்ள நில அளவை வேலைகளைச் செய்து முடிப்பதற்குப் போதுமான பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். தனி அலுவலரின் கீழ் உள்ள பணியாளர்கள் நில அளவை வேலை பிழை இன்றிச் செய்யப்படுவதற்கு அத்தனி அலுவலரே பொறுப்பாளராகிறார். ஆதலால் அந்தத் தனி அலுவலரும் நில அளவை வேலையில் பயிற்சி பெற்றிருக்க வேண்டியது அவசியமாகிறது. நில அளவை இயக்கங்கள் அந்த அந்த நிலப் பகுதிகளில் நடைமுறையிலிருக்கும் புல நில அளவை முறையின் தன்மையை பொறுத்துள்ளனவாதலால், நில அளவை வேலைகளை எவ்வெவ்வகைகளில் செயற்படுத்த வேண்டும் என்பதைப் பற்றித் தனி அலுவலர் மாவட்டக் கலெக்டரிடம்,[1] தவறாமல் கலந்தாலோசனை செய்துக் கொள்ள வேண்டும்.

(2) (அ) நில உரிமை பெறுவதற்காக நியமிக்கப்பட்ட தனி அலுவலர், கோட்ட ஆட்சியாளர்களுக்குத் தெரிவிக்காமலே அல்லது அவர்களின் தலையீடின்றியே கீழ்க் கண்டுள்ள

[1] 19—12—1925 தேதி, 72, வ.து. க.செ.

மாற்றுதல்களுக்கு ஒப்பளிப்பு செய்து அவை சம்பந்தமான மாறுதல்களை வருவாய்க் கணக்குகளில் பதிவு செய்து வைக்கலாம் :—

(i) பொது வேலைக்குத் தேவையாகவுள்ள அரசினர் வசமிருக்கும் தீர்வை ஏற்பட்ட தரிசுகளையும் புறம்போக்குகளையும் பொறி இயல் பணித் துறைப் புறம்போக்காக மாற்றிவிடுதல்.

(ii) வாய்க்கால்கள், வண்டிப் பாதைகள் அல்லது நடைபாதைகள் தனிப்பட்ட நில உடைமைகளின் தரைப் படங்களில் "விவரங்களாக" காட்டப்பட்டிருக்குமானால், அவற்றின் உரிமை பெறுமலே அவற்றை உட்பிரிவு செய்து பொது வேலை சம்பந்தமாக அவற்றை மாற்றி ஒதுக்கி வைப்பதற்கு ஆட்சேபனையிருப்பின், அதைத் தெரிவிக்குமாறு அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்ட பின்னர் அவ்வாறு உட்பிரிவு செய்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளவற்றைப் பொறி இயல் பணித் துறைப் புறம்போக்காக மாற்றிவிடுதல்.

(ஆ) தனி அலுவலர் தம் தீர்ப்பு விசாரணையையும் தீர்ப்பளிப்பையும் முடித்துக் கொண்ட உடனேயே அவர் கிராமத்தில் சுற்றுப்பயணம் செய்யும்போது ஈட்டுத் தொகைகளை கொடுத்து விடலாம்.

(இ) கோட்ட ஆட்சியாளருக்குத் தெரிவிக்காமலே தனி அலுவலர் கீழ்க்கண்டுள்ள அறிவுரைகளை அனுசரித்து கிராமக் கணக்குகளிலும் தாலுக்காக்களிலும் மாறுதல்களைப் பதிவு செய்யலாம் :—

(i) கிராமக் கணக்குகளிலும் தாலுக்கா கணக்கு களிலும் மாறுதல்களைப் பதிவு செய்து கிராமக் கணக்கரின் நில அளவைச் சுவடிகளிலும் தாலுகா நில அளவைச் சுவடிகளிலும் நாட்டுப் புதுப் படங்களைச் சேர்ப்பிக்கும்போது, பழைய படங்களை ரத்துச் செய்து கிராமப் புலப் படங்களில் புலங்களின் பக்க எண்களைத் திருத்தி அமைப்பதுடன் எல்லை வரையறுப்புப் படங்களிலும் புலக் கற்கள் பதிவேடுகளிலும் வேண்டிய மாறுதல்களையும் பதிவு செய்ய வேண்டும்.

(ii) இரு மொழிப் பதிவேட்டில் மாறுதல்களைக் குறிக்கும்போது அதன் படிவத்தை அனுசரித்து வெற்றுப் பக்கங்களில் ஒழுங்காகக் கோடிட்டு எல்லா கட்டங்களிலும் பதிவு செய்ய வேண்டும்.

(iii) நில அளவை முடிந்த உடனேயாவது தீர்ப்பு அளித்த உடனேயாவது, எழுதி வைக்கப்பட்டு வரும் நிலப் படங்களிலும் கிராமக் கணக்குகளிலும் தாலுகாக் கணக்குகளிலும் மாறுதல்கள் செய்யப்படும் வரையில் காத்திராமல், தனி அலுவலர், புதிதாகக் கொடுக்கப்பட்டுள்ள நில அளவை எண்களை நில அளவைத் துறைக் குழுவினர் களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

(iv) தனி அலுவலர், நில அளவை வட்ட அலுவலருக்கோ நில அளவை மாவட்ட அலுவலருக்கோ, எஸ்டேட்டு கிராமங்களில் எழுதி வைத்து வரவேண்டிய நிலப்படத் தொகுப்புகளை நில அளவைக் குழுவினருக்கு அனுப்பி வைத்து அம்மாறுதல்கள் அவற்றில் பதிவு செய்யப்பட்ட பின்னர், அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

(ஈ) தனி அலுவலர் 1923 ஆம் ஆண்டு சென்னை நில அளவை எல்லைகள் சட்டத்தின் 13 ஆவது பிரிவின்கீழ்ப் பிறப்பிக்க வேண்டிய அறிக்கையை மாவட்ட அரசிதழ் மாத வெளியீட்டிலன்றி, சிறப்பு வெளியீடுகளில் அறிவிக்கை செய்யலாம். 1923 ஆம் ஆண்டு சென்னை நில அளவை எல்லைகள் சட்டத்தின் 9(2) பிரிவின்கீழ்ப் பிறப்பிக்க வேண்டிய அறிவிப்பை நில உரிமை பெறும் சட்டத்தின் 9 (3) ஆவது அறிவிப்புடன் ஒன்று சேர்த்துச் சேர்ப்பிக்காமல், தீர்ப்பு அளிப்பதற்கு முன்னதாகவே சேர்ப்பித்து விடலாம். மேலும் அவர் கோட்ட ஆட்சியாளர்களின் வழியாகவன்றி நேராகவே துணைப் பத்திரப் பதிவாளர்களுக்குப் பதிவு புள்ளிவிவரங்களை அனுப்பலாம்.

26— 7—1937 தேநி, 82, வ.து.க.செ.அச்சு.
25—10—1895 தேநி, 391, வ.து.க.செ.
20— 5—1889 தேநி, 335, வ.து.க.செ.
15— 3—1888 தேநி, 249, வ.து.க.செ.
18—12—1888 தேநி, 1025, வ.து.க.செ.
28— 8—1937, தேநி, அ.ஆ.வரு.பல
17— 1—1944, தேநி, 26, அ.ஆ.வரு.
12— 3—1931 தேநி, 554, வி.ஆ.வரு.பலவ.
அ19—12—1925 தேநி, 72, வ.து.க.செ.
18— 9—1916 தேநி, 2124, அ.ஆ.வரு.
4—10—1916, தேநி 269, வ.து.க.செ.நிர்.
14— 7 1926, தேநி, 1148, அ.ஆ.வரு.
20— 4—1938 தேநி, 36, வ.து.க.செ. அச்சு.
3— 2—1944 தேநி, 4, வ.து.க.செ.
18— 3—1931 தேநி, 28, வ.து.க.செ.

பிரிவு II துவக்க நடவடிக்கைகள்

6. விண்ணப்பம்.—(i) மாநில அரசாங்கத்தில் வருவாய்த் துறை நீங்கலாக வேறு துறையினருக்கு நிலம் தேவையாயிருப்பினும், தல ஆட்சி அல்லது நகராட்சிக் காரியங்கள், அல்லது தனிப்பட்ட நிலையங்கள், அல்லது சங்கங்களின் கல்வி சம்பந்தமான அல்லது மற்றப் பொதுக் காரியங்களுக்காக நிலத்தின் உரிமை பெற வேண்டியிருப்பின், சம்பந்தப்பட்ட துறை அல்லது தல ஆட்சி மன்றம் அல்லது சங்கத்தின் அல்லது நிலையத்தின் மேலாளர், அதிகாரம் பெற்ற பிரதிநிதி குறிப்பிடப் பட்டுள்ள படிவத்தில் (XII ஆவது இணைப்பின் I ஆவது படிவம்) விண்ணப்பம் கோட்ட ஆட்சியாளருக்கு நேராக அனுப்ப வேண்டும் அதன் நகல் மாவட்டக் கலெக்டருக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தில் தேவையான சான்று கொடுக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் அச்சான்றுகளில் எவற்றையேனும் கொடுக்க இயலாதெனில், அதற்குரிய காரணங்களைத் தெளிவாக விளக்க வேண்டும். நிலையத்திற்காக அல்லது சங்கத்திற்காக நிலத்தின் உரிமை பெறப்படுவதானால் மாநில அரசினர் நில உரிமை பெறும் சட்டத்தின் 4 (1) ஆவது பிரிவின் கீழ் அறிக்கை பிறப்பிக்கும் போது, நிலங்களின் உரிமை பெறப்பட்ட பின்னர் எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு நிலங்கள் விட்டு வைக்கப்படும் என்பதைத் தீர்மானம் செய்து கொண்டு அவற்றைக் கலெக்டருக்கு தெரியப்படுத்தி, ஆங்காங்குள்ள சூழ்நிலைகளை அனுசரித்து அவற்றுடன் கூடுமான நிபந்தனைகள் எவையேனும் சேர்க்கப்பட வேண்டுமென்றால் சம்பந்தப்பட்ட தனிப்பட்டவருக்குத் தெரியப்படுத்தி அவற்றிற்கு அவரது இசைவைப் பெற வேண்டுமென கலெக்டருக்கு அறிவுறுத்த வேண்டும். இதற்குத் தனிப்பட்டவர் உடன்படாத வரையிலும், 6 ஆவது பிரிவின்கீழ் உடனிமொழியைப் பிறப்பிப்பது கூடாது. நிலத்தின் உரிமையைப் பெறுவதற்காக எடுக்கப்படுவதற்குரிய நிபந்தனைகள், நடவடிக்கைகள் துவக்கப்பட்ட பின்னரே ஏற்படுத்தப்படும். ஆதலால் நில உரிமை பெறுவதற்காக விண்ணப்பங்கள் செய்யும் நிலையம் அல்லது சங்கம் இத்தகைய விண்ணப்பம் செய்யும்போதே அது மாநில அரசினர் விதிக்கக் கூடிய நிபந்தனைகளுக்கு இசையாவிடின், நில உரிமை பெறும் சட்டத்தின் 48 ஆவது பிரிவின்கீழ், இழப்பிற்காகக் கொடுக்கப்பட

வேண்டியதென்று மாநில அரசினரால் விதிக்கப்படும் ஈட்டுத் தொகையைக் கொடுக்க இசைவதாக அதனிடமிருந்து உடன்படிக்கை ஒன்றைக் கலெக்டர் எழுதி வாங்க வேண்டும்.

19—12—1940 தேதி, 3150 அ.ஆ.வரு.பல.
31— 1—1941 தேதி, 8, வ.து.க.செ.அச்சு.
12— 6—1943 தேதி, 1963 அ.ஆ.வரு.பல.
19—7—1943 தேதி, 12, வ.து.க.செ.

வருவாய்த் துறைக்கு நிலம் தேவையாகுமெனில், கலெக்டர் தாமாக அல்லது வருவாய்த் துறைக் கழகம் அல்லது மாநில அரசினர் ஆணையின் கீழ் நடவடிக்கைகள் துவக்கலாம்.

நிலம், தல ஆட்சி மன்றத்திற்கோ, நகராட்சிக்காகவோ, தேவையாகுமானால், அவற்றிடமிருந்து (அ) எந்தக் காரியத்திற்காக நிலம் எடுக்கப்படுகிறதோ அந்தக் காரியத்திற்கு நிலத்தைப் பயன்படுத்தவும் மாநில அரசினரின் அனுமதியின்றி, அது வேறு காரியத்திற்குப் பயன்படுத்துவதில்லை எனவும் (ஆ) குறிப்பிடப் பட்டுள்ள காலத்திற்குள் காரியத்தை நிறைவேற்றபடுமெனவும் (இ) குறிப்பிட்ட காலத்திற்குள் காரியம் நிறைவேற்றப்படாவிட் டால் அல்லது எப்போதாவது மாநில அரசினர் அனுமதியின்றிக் குறிப்பிடப்பட்ட காரியத்தைத் தவிர வேறு காரியத்திற்கு நிலம் பயன்படுத்தப்பட்டால், மாநில அரசினர் நிலத்திற்களிக்கப்பட்ட ஈட்டுத் தொகையிலிருந்து கட்டாயமாக நிலத்தின் உரிமை பெற்றதற்காக அளிக்கப்பட்ட 15 சதவீதத்தைக் கழித்துக் கொண்டு எஞ்சிய தொகையையோ அல்லது நிலம் திருப்பிக் கொடுக்கப்படும்போது, அதற்குரிய விலை மதிப்புத் தொகையையோ இவற்றில் எத்தொகை குறைந்ததாக இருக்கிறதோ, அத்தொகையை அது பெற்றுக் கொண்டு நிலத்தைத் திரும்ப ஒப்புவித்திவிட வேண்டும், என அரசினர் ஆணை பிறப்பிப்பாரெனில், அவ்வாறு அரசினரிடம் நிலத்தை ஒப்புவிக்கவும் அது உடன்படுவதாக அதன் நிர்மானத்தை வாங்கிக் கொள்ள வேண்டும். நில உரிமை பெறுவதற்காகப் பரிந்துரை பகர்வதற்கு முன்னர், இந்தகைய உடன்படிக்கையை அது நிறைவேற்றுவதற்கு ஒப்புக்கொள்கிறதா என்பதைப் பற்றியும் அவ்வாறு நிறைவேற்றத்தக்க நிதி வசதி அதற்கு உள்ளதா என்பதைப் பற்றியும் விசாரித்துக் கலெக்டர் தெரிந்து கொள்ள வேண்டும்.

24— 1—1933 தேதி, 138, அ.ஆ.வரு.பல.
19— 2—1934 தேதி, 338, அ.ஆ.வரு.பல.
31— 1—1933 தேதி, 8, வ.து.க.செ.
28— 2—1934 தேதி, 33, வ.து.க.செ.

நிலம் என்ன காரியத்தின் தேவைக்காக கோரப்படுகிறது என்பதை விண்ணப்பத்தில் கண்டெழுதி நிலத்தின் எல்லைகளையும், அது எங்குள்ளது என்பதைக் கண்டுபிடிக்கத் தக்க எல்லைகளின் விவரங்களையும் அதில் குறிப்பிட வேண்டும். பல துறை அலுவலர்கள் ஒன்று சேர்ந்து பார்க்கப்படுவதற்கு உதவும் வகையில், அவ்வாறு பார்க்கப்படும் நிலத்தை அடையாளம் காட்டக் கூடியவரும், தாமாகவே அல்லது தம் மேல்நிலை அதிகாரி உறுதி செய்யப்படுவதற்குட்பட்டு, ஒன்று சேர்ந்து பார்வையிடும்போது சந்தேகங்கள் எழுக்கூடியவற்றைப் பற்றித் தாமே முடிவு செய்யத்தக்க அதிகாரமுள்ள அலுவலரின் பெயரையும், அவர் வேலையின் பெயரையும் குறிப்பிட வேண்டும்.

(ii) விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பப்பட வேண்டியவை.—தலத்தின் தரைப்படம் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். இயலும்போதெல்லாம் இத் தரைப் படம் வருவாய்ப் புல நில அளவையை அனுசரித்துள்ள அளவுகள் லிங்குகளில் குறிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பொறி இயல் பணித் துறையினரால் அனுப்பப்படும் தரைப் படங்களில் அளவுகள் அடிக் கணக்கில் குறிக்கப்பட்டிருக்கலாம். இருப்புப் பாதைகளுக்காகவோ, அல்லது பெரிய திட்டங் களுக்காகவோ நிலம் வேண்டுமானால் அத்துறையினர் திட்டத்துக்குட்பட்ட ஒவ்வொரு மாவட்டத்திலும் உரிமை பெற வேண்டிய நிலத்தின் மையக் கோட்டின் சரியான போக்கையும், பக்கத்திலுள்ள கிராமங்களையும் நகரங்களையும் காண்பிக்கும் தனிப் படம் ஒன்றும் அனுப்ப வேண்டும். இப்படம் ஒரு மைலுக்கு ஒரு அங்குலமான அளவில் வரையப்படும். நில அளவையான இடங்களில் கிராம எல்லைகளையும் காட்ட வேண்டும். இடையே உள்ள தூரங்களையும் உரிமை பெறப்படும் நிலத்தின் சராசரி அகலத்தையும் அதில் குறிப்பிட வேண்டும். நகரங்களுக்கு அண்மையிலிருப்பதாலோ அல்லது இதர காரணங்களினாலோ சிறப்பான அதிக விலை மதிப்புள்ளதாகக் கருதப்படத் தக்க நிலத்திற்கும் உரிமை பெறப்படும் நிலத்தின் எல்லைகள் சற்று ஏறத்தாழக் குறிக்கப்பட்டுள்ள படம் போதுமானதாகவுள்ள பெரிய அளவில் தயாரிக்கப்பட வேண்டும். நிலத்தின் விலையுடனே ஈட்டுத் தொகை கொடுக்கப்பட வேண்டிய

விலை மதிப்புள்ள மரங்கள், கட்டடங்கள், அல்லது இதர சொத்துக்கள் எவையேனும் இருப்பின் அவற்றைப் பற்றியும் ஒரு குறிப்பும் இதனுடன் சேர்க்கப்பட வேண்டும்.

1— 2—1896 தேநி. 43, வ.து.க.செ.

11— 5—1920, தேநி, 1079, அ.ஆ.வரு.

14— 6—1920 தேநி, 82, வ.து.க.செ.நி.

7. சட்டத்தின் 4 (1) ஆவது பிரிவின் கீழ்ச் செய்யப்பட வேண்டிய அறிவிக்கை.—(i) அறிவிக்கை—அதை விளம்பரம் செய்வதன் அவசியம்—அதன் படிவம் அதில் அடங்கியிருக்க வேண்டியவை.—1923 ஆம் ஆண்டு xxxviii ஆவது நில உரிமை பெறும் நிருத்தச் சட்டமானது நில உரிமை பெறும் சட்டத்தின் 4(1) ஆவது பிரிவின் கீழ் அறிவிக்கை விளம்பரம் செய்யப்படுவது நிலத்தில் பிரவேசிக்கு முன்னர் எடுக்க வேண்டிய துவக்க நடவடிக்கையாக இருக்க வேண்டுமெனவும், நிலத்தின் உரிமையைப் பெற உத்தேசித்திருப்பதில் நிலத்திற்குரியவர் ஆட்சேபனைகள் தெரிவித்துக் கொள்ளும் பொருட்டு ஒவ்வொன்றிலும் அது சட்ட முறையில் அமையும் ஒரு அறிவிப்பானதால், அது அவசியமானது எனவும் விதித்திருக்கிறது. நிலங்களின் உரிமை பெறப்படுவதற்கு விண்ணப்பம் அல்லது வருவாய்த் துறைக்காக நிலத்தின் உரிமை பெறுவதற்குரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு மாவட்டக் கலெக்டர் பிறப்பிக்கும் ஆணை கிடைக்கப் பெற்றதும் கோட்ட ஆட்சியாளர் நிலத்தைப் பார்வையிடவும் சட்டத்தின் 4 (1) ஆவது பிரிவின் கீழ் அறிவிக்கை தயாரிக்கவும் உடனடியாக ஏற்பாடு செய்யவும் வேண்டும். இவ்வறிவிப்பு XII ஆவது இணைப்பின் 2 (அ) அல்லது 2 (ஆ) படிவத்தில் தயாரிக்கப்பட்டு மாவட்டக் கலெக்டருக்கு அனுப்பப்பட வேண்டும். பெயரின் அளவில் நிலங்களின் உரிமை பெற்றவனவற்றில் படிவத்திலுள்ள எல்லாக் கட்டங்களையும் பூர்த்தி செய்வது இயலாமலிருக்கலாம். இத்தகைய சூழ்நிலைகளில் எப்பகுதி உரிமை பெறப்படுவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது என்பதை நில உரிமையாளரை கேட்டுத் தெரிந்து கொள்ளுவதற்கு வேண்டிய விவரங்கள் இருக்குமானால் அவையே சட்டத்திற்கிணங்கிச் செய்ய வேண்டியவற்றை நிறைவேற்று வதற்கும் போதுமானவையாகும். இவ்வறிக்கை விளம்பரம் செய்யப்பட்ட நாளில், நிலத்திற்குரிய நடப்பு விலை மதிப்புத் தொகையை அனுசரித்துக் கொடுக்கப்பட வேண்டிய சட்டத்

தொகையானது தீர்மானிக்கப்பட வேண்டியிருப்பதால் இவ்வறிக்கை அனுப்புவதில் தவிர்க்கக் கூடிய எத்தகைய கால தாமதமும் இருக்கக் கூடாது.

வரைவு அறிவிக்கை அனுப்புவதற்கு விசாரணை நடத்தும் காலத்திலேயே விரிவு மதிப்பு அறிக்கை தயாரிப்பதற்குத் தேவையான விவரங்களையும் சேகரிக்க வேண்டும். கூடிய வரையில் இவ்வறிக்கைகள் வரைவு அறிவிக்கையுடன் அனுப்பப்பட வேண்டும். இது இயலாவிட்டால், இதற்காக வரைவு அறிவிக்கையைத் தாமதிக்காமல் அது தயாரான வுடனேயே அனுப்பிவிட வேண்டும். வருவாய் அலுவலர் நிலத்தில் பிரவேசிப்பதற்கு நிலத்தின் உரிமையாளர் அல்லது அதை அனுபோகம் செய்பவர் ஆட்சேபனை செய்தால் முன்னமே தயாரிக்கப்பட்ட தகவல்களைக் கொண்டு அறிவிக்கை தயாரிக்கப் பட வேண்டும்.

சட்டத்தின் கீழ் கலெக்டரின் அலுவல்களை நிறைவேற்றத் தக்க அலுவலர் யார் என்பதை அறிவிக்கையில் குறிப்பிட வேண்டும். சட்டத்தின் 17 ஆவது பிரிவு (1) (2) உட்பிரிவை பயன்படுத்த வேண்டிய அவசியச் சூழ்நிலைகள் ஏற்படுமாயின், அவற்றைக் குறிப்பிட்டு சட்டத்தின் 5- பிரிவில் வகுக்கப் பட்டுள்ள நடவடிக்கை ஏற்பாடுகளை விடுத்து அறிவிக்கையைத் தக்கவாறு திருத்திக் கொள்ள வேண்டும். 17 ஆவது பிரிவின் 1 ஆவது அல்லது 2 ஆவது உட்பிரிவில் கண்ட ஏற்பாடுகள் பொருந்தக்கூடிய இனங்களுக்கு மட்டுமே 17 (4) ஆவது உட்பிரிவின் கீழ் 5 பிரிவு நடவடிக்கைகளினின்று விதிவிலக்கு அளிக்க முடியும் என்பதை கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். தரிசு அல்லது பயிரிடக்கூடிய நிலங்களுக்கு மாத்திரமே 17 (1) பிரிவு பொருந்தும். இருப்பினும், இதர நிலங்களில் இங்குமங்குமாக உள்ள மரங்கள் அல்லது குடிசைகள், பந்தல்கள், கொட்டகைகள் போன்ற தற்காலிகமான கட்டடங்கள் இருப்பதால் இவ்வுட்பிரிவு பொருந்தாது என்பதில்லை. நிலத்தின் உரிமையாளர்கள் நிலத்தைக் கொடுத்துவிட இசைந்த போதிலும், சட்டத்தின் 17 (1) அல்லது (2) உட்பிரிவுகள் பொருந்தக்கூடிய அவசரமான காரியமாக இருந்தால் மாத்திரமே 5 பிரிவு விசாரணையை விட்டுவிடலாம். 5 பிரிவினின்று விதிவிலக்கு கோரும் இனங்களிலெல்லாம், கோரப்பட்ட விதிவிலக்கு எவ்வகையில் 17-ஆவது பிரிவு (1) அல்லது (2)-ஆவது உட்பிரிவின்கீழ்

அடங்கும் என்பதைத் தெளிவாக விளக்க வேண்டும். (1)ஆவது உட்பிரிவிலடங்குவனவற்றைப் பற்றி அறிக்கை அனுப்பும்போது அறிவிக்கை அனுப்பும் கடிதத்தில் நிலங்கள் தரிசு அல்லது பயிர் செய்யத்தக்கவை என்பதையும் அவற்றில் கட்டடம் ஒன்றும் இல்லை என்பதையும் தெளிவாக எழுதியனுப்ப வேண்டும். இங்குமங்குமாக உள்ள மரங்கள், குடிசைகள், பந்தல்கள், கொட்டகைகள் முதலிய தற்காலிகமான கட்டடங்கள் எவையேனும் இருக்கின்றனவா, இல்லையா என்ற விவரங்களையும் அதில் குறிப்பிட வேண்டும். "பயிர் செய்யத்தக்க நிலம்" என்னும் சொல், ஆண்டுப் பயிர்கள் அல்லது பருவப் பயிர் செய்யப்படும் நிலத்தையும் குறிக்கும்.

16—3—1924 தேநி, 506, அ.ஆ.வரு.
13—8—1924 தேநி, 1248, அ.ஆ.வரு.
27—7—1949 தேநி, 23, வ.து.க.செ.அச்க.
17—5—1926 தேநி, 792, அ.ஆ.வரு.
17—6—1949 தேநி, 1573, அ.ஆ.வரு.பல.

(ii) (அ) அறிவிக்கையை மேலனுப்புதல்.—அறிவிக்கை வரப் பெற்றதும் அவ்வறிக்கை ஏற்கப்பட்டு விளம்பரம் செய்யப்படுவதற்காகக் கீழ்க்கண்ட இனங்களில் மாவட்டக் கலெக்டரால் அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட துறைக்கு நேராகவே அனுப்பப்பட வேண்டும்:—

(i) வருவாய்த் துறைக்காக நில உரிமை பெற வேண்டியவற்றைப் பொறுத்த வரையில், வருவாய்த் துறைக் கழகம் ஆட்சி முறையில் தனது இசைவைத் தெரிவித்துப் போதிய நிதி ஒதுக்கியுள்ளவை.

(ii) வேறு துறைகளுக்காக நிலத்தின் உரிமை பெறப்படும்போது நிலத்தைக் கோரும் அதிகாரியால் நிலத்தின் உரிமை பெறுவதற்கு அதிகாரம் பெற்றுள்ள அதிகாரியின் அனுமதி பெறப்பட்டிருக்கிறதென்று தெளிவாகச் சொல்லப்பட்ட இனங்கள்.

அவசரச் சூழ்நிலையில் 17 (1) அல்லது 17 (2) பிரிவுகளை அனுசரித்து 5 பிரிவு விசாரணை விட்டுவிடப்பட்ட இனங்களில், மாவட்டக் கலெக்டர் அரசாங்கத்திற்கு நேராகவே 4 (1) பிரிவின் கீழ் அறிவிக்கைகளையும் 6-ஆவது பிரிவின் கீழ் உறுதி மொழியையும் சேர்த்து விளம்பரம் செய்யப்படுவதற்காக அரசினருக்கு அனுப்பலாம்.

தனி இடையூறுகளோ கொள்கை பிரச்சினைகளோ இருக்குமானால், இவ்வினங்களில் வருவாய்த் துறை வழியாக விளம்பரம் அனுப்பப்பட வேண்டும்.

(ஆ) அறிவிக்கையை விளம்பரம் செய்தல்.—அறிவிக்கை விளம்பரம் செய்து நில உரிமை பெறும் உத்தேசத்தை அரசினர் ஏற்றுக்கொள்வாரெனில், அறிவிக்கையை விளம்பரம் செய்ய அவர்கள் கட்டளை பிறப்பிப்பார்கள். மாநில அரசிதழில், ஆங்கிலத்தில் மட்டும் வெளியிட வேண்டும். ஆங்கிலத்தில் அல்லது மண்டல மொழியில் அதை மறுமுறையும் வெளியிட வேண்டியதில்லை.

17—5—1957 தேதி, 2065, அ.ஆ.வரு.பல.

(iii) சமீப எதிர்காலத்தின் தேவைக்காக நிலத்தின் உரிமை பெறுவதற்கு யோசனைகளை அனுப்பும்போது, ஒரு திட்டம் அல்லது திட்ட ஏற்பாட்டின் சமீப பிற்கால விரிவு அல்லது வளர்ச்சி முதலியவற்றையும் ஆராய்ந்து பார்க்கப் பட்டதாவென்றும், அத்தகைய எதிர்பாராத சூழ்நிலைகளிலும் வேண்டியவாறு உத்தேசத்தில் ஏற்பாடுகள் இருக்கின்றனவா வென்றும் கலெக்டர்கள் தெரிவிக்க வேண்டும்.

22—2—1938 தேதி, 472, அ.ஆ.வரு.பல.
12—3—1939 தேதி, 35, வ.து.க.செ.இச்க.

8. வெவ்வேறு துறையினர் ஒன்று சேர்ந்து பார்த்தல்—துவக்க விலைமதிப்பு விவர அறிக்கை (.).—பார்வையிடுதல் கோட்ட ஆட்சியாளர் தாமாக அல்லது தாசில்தார் அல்லது வருவாய் ஆய்வாளர் இவர்களில் ஒருவர் மூலமாக நிலத்தைப் பார்வையிட வேண்டும். தேவையானால் பார்வையிடும் கோட்ட ஆட்சியாளருடன் நிலத்தைக் கோரும் துறை அல்லது தல ஆட்சி மன்றத்தைச் சேர்ந்த அலுவலர் ஒருவரும் உடன் செல்லலாம். ஒன்று சேர்ந்து பார்வையிடுதல் சாதாரணமாக அவசியம் என்பது விதிமுறையாயினும், அடையாளம் காட்டுவதற்காக அநேக சூழ்நிலைகளில், எடுத்துக்காட்டாக, நில அளவை செய்யப்பட்ட ஒரு முழுப் புலம் அல்லது இடத்தின் எல்லையைப் பற்றிய எவ்வித சந்தேகமோ, வழக்கமோ இல்லாதபோதும், பிழை ஏதும் நேரிட முடியாதவாறு நில அளவைப் பதிவேடுகளிலிருந்து சரியாக வரையப் பெற்ற தரைப்படமும் விண்ணப்பத்துடன் சேர்ப்பெற்றிருக்குமானால், துறையைச் சேர்ந்த அலுவலரின் வருகை அவசியமிருக்காது. இருப்பினும்,

சில சந்தர்ப்பங்களில் அதற்கு அவசியமும் இருக்கலாம்; அதாவது, நிலத்தின் உரிமை பெறுவதற்கு ஆட்சேபனைகள் இருப்பினும் அல்லது நில உரிமை பெறுவதற்கு தடையாக இருக்கக் கூடிய அதிக விலை காரணமாக நிலத்தின் உரிமை பெறுவது தடைபடக்கூடுமென்றபோதும் எல்லைகளில் சில மாறுதல்கள் செய்யப்படுமானால் அல்லது வேறு இடம் தேடிக் கொள்ளப்படுமானால் அதுவே நிகராகப் போதுமா என்பதைத் தீர்மானிப்பதற்கு அவாது வருகை அவசியமானதாக இருக்கலாம். வருவாய்த் துறை அலுவலர் பொதுவாகத் தாசில்தார் எவற்றில் சம்பந்தப்பட்ட துறை அலுவலாது வருகை அவசியமாக இருக்கும்; எவற்றில் அத்துறை அலுவலாது வருகைக்கு தேவையிராது என்பதை முடிவுசெய்யத்தக்கவராவர். ஒன்று சேர்ந்து பார்வையிடுதல் அவசியமென்றால், பார்வையிடும் அலுவலர்கள் தங்கள் வருகைக்கு முன்னரே, சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்கள், பார்வையிடும்போது வந்து சேர்வதற்காக, அவர்களுக்கு ஒரு தேதியைக் குறிப்பிட்டு அறிவிப்பு கொடுப்பார்.

குறிப்பு.—தல ஆட்சி மன்றத்திற்கு அல்லது கம்பெனிக்கு நிலத்தின் உரிமை பெறப்படும்போது தல ஆட்சி மன்றம் அல்லது கம்பெனி தானுகவே நிலத்திற்குச் சரியான அளவுள்ள கற்களைக்கொண்டு எல்லை வரையறுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் அல்லது 4(1)-ஆவது பிரிவின்கீழ் அறிவிக்கை வெளியிடப்பட்ட 3 வாரத்திற்குள் எல்லை வரையறுத்த தற்கும் ஏற்படும் செலவுத் தொகையைக் கலெக்டரிடம் செலுத்த வேண்டும். தவறினால் ,நிலத்தின் உரிமை பெறுவதில் எடுக்கப்பட்ட நடவடிக்கை யிலிருந்து பின்வாங்குவதற்கான நடவடிக்கைகளைக் கலெக்டர் எடுப்பார்.

11—5—1931 தேதி, 1017, அ.ஆ.வரு.பல.

18—5—1931 தேதி, 97, வ.து.க.செ.

(ii) துவக்க விலை மதிப்பு அறிக்கை—பொது நடைமுறை.—முதலில் நிலம் பார்வையிடப்பட்டுத் துவக்க விலை மதிப்பு விவர அறிக்கை தயாரிக்கப்படும்போது, அது முனை அடிக்கப்பட்டு எல்லை குறிக்கப்பட வேண்டும். வேறு துறையிலிருந்து வரப் பெற்ற கரைப் படந்திலிருந்து, துவக்க விலை மதிப்பு விவர அறிக்கை தயாரிப்பதற்குப் போதுமான அளவுகள் இல்லாவிடில், பார்வையிடும்போது அதற்குத் தேவையான அளவுகளைக் குறித்துக் கொள்ள வேண்டும். இந்த சமயத்தில் விவரமான நில அளவை ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. பலப்படங்களிலும் நிலம் சரியாக அடையாளம் கண்டுபிடிக்கவும் உரிமை பெறப்படும் நிலப் பகுதியின் பரப்பை ஏறக்குறைய கண்டுபிடிப்பதற்குத் தேவையான அளவுகளை மட்டும் எடுத்துக் கொண்டால் போதுமானது.

2. **சமயக் கட்டடங்கள், கல்லறை, புதைக்குமிடங்கள் இவற்றில் எவையேனும் உள்ள நிலங்கள்.**—உரிமை பெறுவதற்காக தேர்ந்தெடுக்கப்படும் நிலங்களில் சமய சம்பந்தமான கட்டடங்கள், கல்லறைகள், அல்லது புதை நிலங்கள் இருப்பின் அவற்றின் விவரங்களைப் பற்றி ஒரு அறிக்கையையும் அதனுடன் நேரிடையாகவோ, அல்லது மறைமுகமாகவோ சமயக் கொள்கைகளைப் புரிந்து பொது மக்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய கொள்கைகளை அல்லது இனி கொண்டுவரக்கூடிய ஆட்சேபனைகளைப் பற்றியும் அவற்றின் தன்மையையும் அவற்றைக் கவனிக்க வேண்டுமா என்பதைப் பற்றியும் இரகசியக் குறிப்பு ஒன்று எழுத வேண்டும். ஆட்சேபனை ஏதும் இல்லாவிடினும் இனி ஆட்சேபனை ஏற்படாது எனத் தோன்றினும், அதைப் பற்றிக் குறிப்பதுடன், நிலத்தின் உரிமை பெறப்பட்டால் கட்டடங்களை இடிக்கவோ கல்லறைகளை அழிக்கவோ அவசியம் ஏற்படுமா என்பது பற்றியும் விவரமாய்த் தெரிவிக்க வேண்டும்.

3. **விவர அறிக்கையின் படிவம்.**—பார்வையிடும்போது பார்வையிடும் அலுவலர் ஆவது இணைப்பின் 4 ஆவது படிவத்தில் குறிப்பிட்டவாறு நிலத்தின் அமைப்பு, பரப்பு உரிமை பெறுவதற்குத் தேவையான தொகை இவற்றைக் காட்டும் அறிவிக்கை ஒன்றைத் தயாரிக்க வேண்டும். பார்வையிடும்போது நிலம் கோரும் துறையினைச் சேர்ந்த அலுவலரும் இருந்தால், அவ்வறிக்கையில் அவரும் கையெழுத்திட வேண்டும். நிலங்களை மதிப்பிடும்போது, இதற்கு முந்திய மூன்று ஆண்டுகளில் இவ்விடத்தில் நிலம் விற்பனை செய்யப்பட்டிருக்கும் விவரங்களைத் தணைப் பத்திரப் பதிவு அலுவலகங்களிலிருந்து பெற்று அவற்றை எந்த மட்டில் ஒத்துக்கொள்ளலாம் என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டு நிலத்துடன் கவனமாக சரிபார்க்க வேண்டும். 2,500 ரூபாய்க்கு அதிகமான விலை மதிப்பு பெறும் என்று வருவாய் அலுவலர்களால் மதிப்பிடத்தக்க கணிசமான கட்டடங்களின் உரிமையைப் பெறுவதில் தொலைவிலுள்ள இடத்திலிருக்கும் காரணத்தினால் அல்லது உரிமையைப் பெறுவதில் தகாத காலதாமதம் ஏற்படும் என்றால் அன்றி

விலை மதிப்பு அறிக்கை வாப்பெற்றதும், அதற்கு எவ்வாறு நிதி ஒதுக்கலாம் என்பதைப்பற்றி அல்லது தேவையான நிதிகள் ஒதுக்கீட்டைப் பற்றிச் சம்பந்தப்பட்ட முழு விவரங்களுடன் சம்பந்தப்பட்ட துறையினர் அதை மாநில அரசினருக்கு

மேலனுப்புவார்கள். விலை மதிப்பு விவர அறிக்கை வரப்பெற்ற தல ஆட்சி மன்றம் அதற்கு நிதி எவ்வாறு ஒதுக்கி வைக்கலாம் என்ற முழு விவரங்களைப் பற்றி அரசாங்கச் செயலகத்தின் சுகாதாரம் கல்வி தல ஆட்சித் துறைகளுக்கு அனுப்புவார்.

குறிப்பு.—ரோம அ பதிவேட்டிலிருந்தும் தாலூகா அ பதிவேட்டிலிருந்தும் எடுக்கப்பட்ட பகுதி நகல்கள் விலை மதிப்பு விவர அறிக்கையுடன் அனுப்பப்பட வேண்டும்.

31—10—1938 தேதி, 2813, அ.ஆ.வரு.பல.
20—3—1939 தேதி, 25, அ.ஆ.து.க.செ.அச்சு.
17—5—1957 தேதி, 2065, அ.ஆ.வரு.பல.

5. இருப்புப்பாதைகள், கால்வாய்கள் முதலிய பெரிய திட்டங்களில் கொடுக்கப்பட வேண்டிய தகவல்கள்.—இருப்புப் பாதைகள், கால்வாய்கள் முதலிய பெரிய திட்டங்களில் மேலே குறிப்பிட்ட விவர அறிக்கைக்குப் பதிலாக, திட்டத்திற்குச் சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சேர்ந்த வெவ்வேறு வகை நிலங்களின் சராசரி ஏக்கர் மதிப்பு விவரத்தைக் கூடுமானவரையில் கீழ்க்கண்ட மாதிரிப் படிவத்தில் கலெக்டர்கள் கொடுக்கலாம்:—

மைல்கள்.	ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய்கள் விவசாயம் செய்யப்பட்டது. நீர்ப்பாய்ச்சப்பட்டது.	நீர்ப்பாய்ச்சப்படாதது.	விவசாயம் படாதது.	குறிப்புரை.
1)	(2)	(3)	(4)	(5)
3—15	*80	30	10	ராம்பூர் நகர நிலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட நிலம், ஏக்கர் ஒன்றுக்கு 900 ரூபாய் பெறும், நகரத்திலே உள்ள நிலம் சதுர கெஜம் 3 ரூபாய் எனச் சொல்லலாம்.
15—17	300	120	30	.....
17—27	50	25	5	தேயிலை விவசாய நிலங்கள் சராசரி ஏக்கர் 800 ரூபாய் மதிப்பாகும்.

குறிப்பு.—இருப்புப் பாதைகளைப் பொறுத்தமட்டில் இவ்விவரங்கள் குடிகளின் உரிமை உட்பட நிலத்தின் விலையை மாத்திரம் குறிக்க வேண்டும். நிலத்திலுள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் முதலியவற்றின் மதிப்பை இதில் சேர்க்கக்கூடாது.

இதன் தோராயமான மதிப்பைக் கணக்கிட்டு வருவாய்த் துறை தனியாக அனுப்ப வேண்டும். இதனுடன் நிலத்தின் உரிமை பெறும் சட்டத்தின் 23(1) ஆவது பிரிவின் கீழ்க் தொகை, ஏதாவது கொடுக்க வேண்டியிருக்கும் என்று தோன்றினால் அதையும் நிலத் தீர்வைக் கழிவினால் ஏற்படும் வருமானம் ஏதாவது நில உரிமையாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமானால் அதையும், பணியாளர் தொகுதிக்காக கூடிய செலவுகள், சில்லறைச் செலவினங்கள் இவற்றையும் பற்றிய தோராய மதிப்புப் பட்டியல் ஒன்றையும் அனுப்ப வேண்டும். தனிர வருவாய்த் துறைக் கழக 91 ஆவது நில ஆணையின் 4(5)-ஆவது பத்தியில் உள்ள அறிவுரைக்கிணங்க நிலத் தீர்வைத் தள்ளுபடியால் ஏற்படும் தொகையின் மதிப்பீட்டையும் அனுப்ப வேண்டும். இம் மதிப்புக்கள் கூடியவரையில் சரியாக இருக்குமாறு விவரங்கள் சேகரித்தலில் வருவாய்த் துறைத் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

6—6—1930 தேதி, 1000 எண். அ.ஆ.
16—6—1933 தேதி, 42, எண். வ.து.க.செ.அச்சு.

(6). 5 (A) பிரிவு விசாரணை சமயத்திலோ அல்லது அதற்கு முன்னதாகவோ அவசியமானால் கலெக்டர் தம் சார்நிலைப் பணியாளர் அனுப்பக்கூடிய விலை மதிப்பு விவர அறிக்கையை சரிபார்த்து முதலில் அனுப்பிய அறிக்கையில் மாறுதல்கள் எவையேனும் செய்யப்பட வேண்டுமெனத் தாம் கருதுவார் எனில் அவற்றைப் பற்றிச் சம்பந்தப்பட்ட துறைக்கு தெரிவிக்க வேண்டும்.

9. நில உரிமை பெறுவதற்கு எதிராகச் செய்யப்படும் ஆட்சேபனைகள்—விசாரணை.—சட்டத்தின் 4(1) ஆவது பிரிவின் கீழ் அறிக்கை விளம்பரம் செய்யப்பட்ட பின்னர், அலுவல்களைச் செய்ய நியமிக்கப்பட்ட அலுவலர் நிலத்தைப்பற்றி ஒரு அறிவிப்பு செய்து மாநில அரசினரால் 55 ஆவது பிரிவில் இயற்றப்பட்டுள்ள விதிகளின்கீழ் (ஆவது இணைப்பைக் காண்க.) ஆட்சேபனைகள் எவையேனும் செய்யப்பட்டிருக்குமானால், அவற்றைப் பற்றி விசாரணை நடத்த வேண்டும்.

ஆட்சேபனை பற்றி விசாரணை செய்யும்போது கீழ்க்கண்டுள்ள அறிவுரைகளைக் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் :—

I-ஆவது இணைப்பின் ஆவது விதியின்கீழ் அறிவிப்பு விளம்பரம் செய்வதுடன் 1894 ஆம் ஆண்டு நில உரிமை பெறும் 1 ஆவது சட்டத்தின் 9-வது பிரிவின் (3) (4) உட்பிரிவுகளில் குறிக்கப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட நிலத்திற்கு உரிமை பாராட்டுபவர்கள், உரிமை பாராட்டக் கூடியவர்களாகக் கருதப் படக்கூடியவர்கள் இவர்களில் ஒவ்வொருவருக்கும் இயன்றவரையில் தனித் தனியான அறிவிப்பு கொடுக்கப்பட வேண்டும். எல்லா நிலங்களைப் பற்றியோ நிலங்கள் எவற்றையேனும் பற்றியோ 4 (1) ஆவது பிரிவின்கீழ் அறிக்கை பிறப்பிக்கப்படும்போது, விவரித்துக் குறிக்க முடியாதவற்றில், தேவையான விவரங்கள்

கிடைத்ததும் நில உரிமையாளர் தங்கள் நிலம் ஒரு பொதுக் காரியத்திற்காகத் தேவையாகிறதென்பதைத் தெரிந்து கொள்ளுமாறும் தங்கள் ஆட்சேபனைகளைக் கூறுமாறும் ஒவ்வொருவருக்கும் 15 நாட்கள் அவகாசம் கொடுத்து தனித்தனியான அறிவிப்பு ஒன்று கொடுக்க வேண்டும்.

(2) கீழ்க்கண்ட வகையில் ஆட்சேபனைகள் வாப்பெற்றால், கலெக்டர் அவற்றைப் பற்றிக் குறிப்பாக விசாரணை நடத்த வேண்டும்:—

(அ) நிலத்தின் உரிமை பெறுவதற்காகக் குறிப்பிடப்படும் காரியம் உண்மையான பொதுக்காரியம் இல்லை.

(ஆ) அறிவிக்கையில் கண்டுள்ள நிலம் அக்காரியத்திற்கு மிகத்தகுதி வாய்ந்ததில்லை அல்லது உரிமை பெறப்படும் அக்காரியத்தின் தேவைக்கு அதிகமானது.

(இ) அந்த நிலத்தின் உரிமையையோ அல்லது அந்த இடத்திலுள்ள யாதொரு நிலத்தின் உரிமையையோ பெறுவது விரும்பத்தக்கதில்லை அல்லது யுத்தமானதில்லை.

21—11—1923 தேதி, 1718, அ.ஆ.வரு.
16—2—1926 தேதி, 196, அ.ஆ.வரு.

10. வரைவு உறுதிமொழி தயாரித்தல் முதலியன.—கலெக்டரின் அலுவல்களைச் செய்யும் அலுவலர் மாவட்டக் கலெக்டரின் வருவாய்த் துறைக் கழகத்தின் வழியாகவும் பதிவுகளையும் விசாரணைப் பதிவுகளையும் XII-ஆவது இணைப்பில் கண்டுள்ள (5-அ அல்லது 5-ஆ அல்லது 5-இ படிவத்தில்) 6 ஆவது பிரிவின்கீழ் உள்ள வரைவு உறுதி மொழியையும், மாவட்ட மண்டல மொழியில் அதன் நகலையும் அரசினருக்கு மேலனுப்ப வேண்டும். உரிய நேரிக்குப் பின்னர் வரப் பெற்ற ஆட்சேபனை மனுக்கள் சட்ட முறையில் செல்லத்தக்கன என அல்லது அவை நியாயமானவை எனக் கலெக்டர் கருதுவார் எனில், சட்டத்தின் 5 பிரிவிலும், 55 ஆவது பிரிவு 3 ஆவது விதியிலும் குறிப்பிடப்பட்ட நடவடிக்கை எடுக்கத் தேவையில்லாவிடினும், அவற்றைப் பற்றி ஒரு அறிக்கை அனுப்ப வேண்டும். நிலத்தின் உரிமை பெறுவதில் எத்தகைய ஆட்சேபனையும் வரப்பெறாவிடில் வரைவு உறுதி மொழியை நேராக மாநில அரசினருக்கே அனுப்பிட வேண்டும்.

21—11—1923 தேதி, 1718, அ.ஆ.வரு.
23—11—1950 தேதி, 3029, அ.ஆ.வரு.பல.
23—1—1951 தேதி, 4, வ.து.க.செ.விச்க.
17—5—1957 தேதி, 2065, அ.ஆ.வரு.பல.

பொறி இயல் பணித் துறைக்காக நிலத்தின் உரிமை பெறுவதற்கு மாவட்டக் கலெக்டர் 5 பிரிவின்கீழ் தமது அறிக்கையையும் 6 ஆவது பிரிவின்கீழ் வரைவு உறுதிமொழியையும் வருவாய்த் துறைக் கழகத்திற்கு அனுப்பும்போது, வரைவு உறுதி மொழியின் நகல் ஒன்றைச் சம்பந்தப்பட்ட நிர்வாகப் பொறியாளருக்கு அனுப்ப வேண்டும். அவர் 1913-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதி அரசாங்கப் பணித்துறை 1903 எண் ஆணையில் கூறியுள்ளவாறு தம் மேற்பார்வை பொறியாளர் வழியாக, மாநில அரசாங்கத்தின் பொறி இயல் பணித் துறைக்கு அதை மேலனுப்புவார்.

13—11—1925 தேதி, 1771, எண். அ.ஆ.வரு.

உரிமை பெறுவதை மாநில அரசினர் ஏற்றுக் கொள்வார் எனில், 6 ஆவது பிரிவின்கீழ் வரைவு உறுதிமொழி மாநில அரசிதழில் ஆங்கிலத்தில் உரிய முறையில் விளம்பரம் செய்யப்பட வேண்டும். அங்ஙனமின்றி மாநில அரசினர் உரிமை பெறுவதை விட்டுவிடத் தீர்மானிப்பார் எனில் நடவடிக்கையிலிருந்து பின் வாங்குவதற்கான அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட வேண்டும்.

1—11—1927 தேதி, 2173, அ.ஆ.வரு.
29—5—1941 தேதி, 1233, அ.ஆ.வரு.பல.
18—8—1941 தேதி, 84, வ.து.க.செ.அச்சு.
3—11—1943 தேதி, 839, வி.ஆ.வரு.பல.
15—11—1943 தேதி, 34, வ.து.க.செ.விச்சு.

11. தற்காலிகமான அனுபோகம்.—யாதொரு தரிசு அல்லது பயிர் விளைவிக்கத்தக்க நிலத்தை தற்காலிகமாக அனுபோகம் செய்வதற்காக மேற்கொள்ள வேண்டிய நடைமுறை நில உரிமை பெறும் சட்டத்தின் 35 முதல் 37 வரையுள்ள பிரிவுகளில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

சம்பந்தப்பட்ட துறையின் தற்காலிகமான உபயோகத்திற்கு தேவையான நிலத்தின் தரைப்படம் ஒன்றை அத்துறை அனுப்பி அந்நிலம் எந்தக் காரியத்திற்காக, எவ்வளவு கால அளவுக்குத் தேவை என்பதைக் குறித்தனுப்பி அதன் தற்காலிக உபயோகத்திற்காக அளிக்கப்பட வேண்டிய தொகையின் மதிப்பைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ள வேண்டும். கலெக்டர் XII ஆவது இணைப்பில் (12 ஆவது படிவத்தில்) குறிப்பிட்டவாறு அதன் விலை மதிப்பீட்டையும் ஒரு விண்ணப்பத்தையும்

தயாரித்து அதன் தற்காலிக உபயோகத்துக்கு ஆட்சேபணைகள் எவையேனும் வரப்பெற்றால் அவற்றையும் விசாரித்து, சம்பந்தப்பட்டத் துறைக்கு மதிப்பீட்டையும், ஆட்சேபணைகளைக் குறித்து செய்யப்பட்டுள்ள விசாரணை அறிக்கையையும் அனுப்புவார். சம்பந்தப்பட்ட துறை அந்நிலத்திற்குரிய தற்காலிக உபயோகத்திற்கு மாநில அரசினரின் ஒப்பளிப்பைப் பெற வேண்டும், இம் மதிப்பீட்டை வரப்பெறும் தல ஆட்சிக் கழகம் அதை மாநில அரசினருக்கு மாவட்டக் கலெக்டரின் வழியாக அனுப்ப வேண்டும்.

மாநில அரசினரின் ஒப்பளிப்பு பெற்றதும், 35 ஆவது பிரிவு 2, 3 உட்பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தற்காலிகமான உபயோகத்திற்காகக் கலெக்டர் ஈட்டுத் தொகையை அளித்த பின்னர் அந்நிலத்தை அவர் சுவாதீனம் செய்துகொண்டு, சம்பந்தப்பட்ட துறையிடம் ஒப்படைப்பர்.

பிரிவு III —சட்டத்தின் 6-ஆவது பிரிவின்கீழ் உறுதிமொழி விளம்பரம் செய்யப்பட்ட பின்னர் மேற்கொள்ள வேண்டிய நடமுறை.

உறுதிமொழி விளம்பரம் செய்யப்பட்ட பின்னர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை.—மேற்குறிப்பிட்ட உறுதி மொழி விளம்பரம் செய்யப்பட்ட பின்னர், கலெக்டர் அல்லது கலெக்டரின் அலுவல்களைப் புரியத் தனியாக நியமிக்கப்பட்ட அலுவலர், சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளவாறு நிலத்தின் உரிமையைப் பெறுவதற்கு நடவடிக்கையைத் தொடங்குவார். விரைவில் அறிவிப்பை அனுப்பி, அதன் பின்னர் இயன்றவரை உடனடியாகத் தீர்ப்பு அளிக்க வேண்டும். உரிமைப் பெறவேண்டிய புலங்கள் அநேகம் இருந்து அவை எல்லாவற்றைப் பற்றியும் விசாரணை முடிவடையாதிருந்தால், விசாரணை முடிவுப் பெற்ற புலங்களுக்குத் தீர்ப்பு அளித்து பிறகு எஞ்சிய புலங்களுக்குத் தனியாக தீர்ப்பு அல்லது தீர்ப்புகள் அளிக்கலாம். நிலத்தின் உரிமையைப்பற்றி வழக்கு இருக்கிறதென்ன காரணத்திற்காகத் தீர்ப்பு அளிப்பதை தாமதிக்கக் கூடாது. கலெக்டர் எந்த வகையிலும் நீதித் துறை அலுவலர் அல்லர் என்பதும் அவர் எடுக்கும் நடவடிக்கைகள் நீதிமன்ற நடவடிக்கைகள் ஆகா என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அவர் மாநில அரசினரின் பிரதிநிதியாகப் பணிப்புரிபவர் ஆகிறார். நிலத்தின் உரிமையாளர்கள் நிலத்தின் விலைமதிப்பைப் பற்றியாவது எதிர் வழக்காடுபவரின் உரிமை வாதத்தைப் பற்றியாவது நீதி மன்றத்

தீர்ப்பு தேவை என்று விரும்புவாரெனில், அவர்கள் 18 ஆவது பிரிவின்கீழ் அதைப் பெறுவதற்கு நீதி மன்றத் தீர்ப்புக்கு அனுப்புமாறு கலெக்டரைக் கேட்டுக் கொள்ளலாம். தவிர, கலெக்டர் தாமாகவே உரிமை வழக்கைப் பற்றியவற்றை 30 ஆவது பிரிவின்கீழ்ச் சிவில் நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கு அனுப்பலாம். சிக்கலான எல்லாவற்றையும் அவர் நீதிமன்றத் தீர்ப்பிற்கே அனுப்ப வேண்டும். சட்டத்தின் 11 ஆவது பிரிவின்கீழ் இருப்புப் பாதைக்காக நிலத்தின் உரிமை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும்போது நிலத்திற்கு அளிக்கப்பட வேண்டிய தொகை ஒப்பளிக்கப்பட்ட விலை மதிப்பை விட அதிகம் ஆகும் என்றுத் தோன்றினால், கலெக்டர், சம்பந்தப்பட்ட இருப்புப் பாதை ஆட்சியாளருக்கு அதைத் தெரியப்படுத்துவதுடன், மதிப்பீட்டை மாற்றி அமைப்பதற்கு வேண்டிய புது விவரங்களையும் கொடுக்க வேண்டும். தீர்ப்பானது குறிப்பிட்ட படிவத்தில் இருக்க வேண்டும். (XII ஆவது இணைப்பு 8 ஆவது) படிவத்தை நிலத்தின் உரிமையை பெறும் அலுவலர் தாமே எழுத வேண்டும் என்பதில்லை. ஆனால், அதில் அவர் கையெழுத்திட வேண்டும். அப்படிவத்தில் கண்டுள்ள பதிவுகள் சரியாக இருப்பதற்கு தாமே பொறுப்பாளர் ஆவார். அதனுடன் தீர்ப்பில் கண்ட முடிவுகளுக்குக் காரணங்களைக் கண்டு ஒரு தனி அவர் பிறப்பிக்க வேண்டும்.

2—9—1943 தேதி, 2432, அ.ஆ.வரு.பல.
21—9—1943 தேதி, 24, வ.து.க.செ.அச்சு.

குறிப்பு.—தல ஆட்சிக் கழகம் அல்லது கம்பெனிக்காக நிலத்தின் உரிமை பெறப்பட்டால், தல ஆட்சிக் கழகம் அல்லது கம்பெனி, வரைவு உறுதிமொழி விளம்பரம் செய்யப்பட்டால், மூன்று வார காலத்திற்குள் அதற்குரிய தொகையை கலெக்டரிடம் செலுத்தி விட வேண்டும். தவறினால் நிலத்தின் உரிமை பெறுதலிலிருந்து பின் வாங்குவதற்குக் கலெக்டர் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்.

11—5—1931 தேதி, 1017, அ.ஆ.வரு.பல.
10—5—1931 தேதி, 47, வ.து.க.செ.

13. தீர்ப்பிற்குரிய ஆதாரம்.—(1) தீர்ப்பு மிகுந்த கவனத்துடன் வரையப்பட்டு, சான்றின் சுருக்கத்தையும் தீர்ப்பின் ஆதாரமாகவுள்ள காரணங்களையும் அதில் குறிக்கப்பட வேண்டும். தீர்ப்பு அளிக்கும் அலுவலர் தாம் ஈட்டுத் தொகையைத் தீர்மானிப்பதில் கவனிக்க வேண்டிய எல்லாவற்றைப் பற்றியும் நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகையைப் பற்றியும் முழுவிவரங்களையும் குறிப்பிட வேண்டும். ஒவ்வொரு சாட்சியின் வாக்குமூலத்

தையும் தனித்தனியாகப் பதிவு செய்து துணைப்பத்திரப் பதிவு அலுவலகங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட நில விற்பனைப் புள்ளி விவரங்களைத் தவிர மற்றெல்லாப் பத்திரங்களும், மெய்ப்பிக்கப் பட்டு, உரிய முறையில் சான்றுத்தாள்களாகத் தாக்கல் செய்யப் பட வேண்டும். இப்புள்ளி விவரங்களை நீதி முறையில் சாட்சி களாலோ, கிரயப் பத்திரங்களைக் கொண்டோ மெய்ப்பிக்க வேண்டி யதில்லை. ஆனால் நிலத்தின் உரிமையாளர்கள் எந்த நில விற்பனை களைக் கொண்டு நீதிமன்றத்தில் வழக்காடக் கூடும் என்று தோன்று கிறதோ அவற்றை நில உரிமை பெறும் அலுவலர் ஆராய்ந்து பார்த்து அவை தமது தீர்ப்புக்கு எவ்வாறு பொருத்தமாக இருக்கும் என்பதையும் கவனிக்க வேண்டும். கலெக்டர் தம் சார்நிலை அலுவலர்களின் அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு தீர்ப்பு அளிப்பபதற்குச் சட்டத்தின் 11-ஆவது பிரிவு அதிகாரம் அளிக்கிறது. இம் முறையைக் கலெக்டர் மேற்கொள்ளும்போது தமது விசாரணையில் அவ்வறிக்கையை உரிய முறையில் சாட்சிய மாகத் தாக்கல் செய்து கொள்ள வேண்டும். அவ்வறிக்கைக்கு விளக்கம் வேண்டி இருக்குமானால் அவ்வறிக்கை அனுப்பிய அலுவலரைச் சாட்சியாக விசாரிக்க வேண்டும். கலெக்டர் யாதொரு அறிக்கையையும், ஆதாரமாகக் கொள்ளாமல், தாமே ஒரு முடிவுக்கு வருவாரெனில் தமது தீர்ப்பு நீதி மன்றத்துக்கு செல்லுங்கால் வேறு எத்தகைய அறிக்கையும் தாக்கல் செய்யப் படுவதற்கு அவசியமில்லாதவாறு அத்தீர்ப்பு முழு விவரங்களையும் கொண்டதாக இருக்குமாறு கவனித்துக் கொள்ளவேண்டும். ஒவ் வொரு தீர்ப்பைப் பொறுத்தவரையில், கலெக்டர் தாம் செய்த விசாரணை சம்பந்தமான விவரங்களெல்லாம் கவனமாகப் பதிவு செய்து வர வேண்டும். நில உரிமைப் பெற்றவற்றில் நிலத்தின் உரிமையாளர் எவராயினும், நில உரிமை பெற, இச்சட்டத்தின் 18-ஆவது பிரிவின்கீழ் நீதிமன்றத் தீர்ப்பு வேண்டும் என்று கோரு வாரெனில், அவ்வாறே செய்யவேண்டிய அவசியம் ஏற்படும். சிவில் நீதி மன்றம் அல்லது மேல் முறையீட்டு நீதி மன்றம் கொள்ளும் அபிப்பாயம் கலெக்டர் விசாரணை நடத்தி இருக்கும் வகையையும் அவர் சான்றைக் கைக்கொண்ட முறையையும் பொருத்திருக்கும். ஆகையால் அரசினரின் உரிமைக்குப் பாதகம் விளையாமல் இருக்கும் பொருட்டு, நிலத்தின் உரிமை பெறுதல் கோப்பில் (கிரிமினல், சிவில் வழக்குகளில் எழுதி வைத்து வருவது போல்) கலெக்டர் ஒவ்வொரு விசாரணைத் தேதியிலும் எடுக்கப்

பட்ட நடவடிக்கைகளைப் பற்றி இணைக்கப்பட்ட ஆணைத்தாள் ஒன்றில் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதித் தமது கையெழுத்தோ சுருக்கொப்பமோ இட்டு வைக்க வேண்டியது மிகவும் அவசியம்.

4—9—1916 தேதி, 2014, அ.ஆ.வரு.
9—6—1947 தேதி, 1400, அ.ஆ.வரு.பல.
25—7—1947 தேதி, 20, வ.து.க.செ.

உரிமை பெறப்படும் நிலத்தின் அளவை அனுசரித்து வரைந்த தரைப்படம் தம்மிடம் இருந்தாலன்றிக் கலெக்டர் எந்தத் தீர்ப்பும் அளிக்கக் கூடாது. தீர்ப்பு அளிக்கும்போது இத்தகைய தரைப் படம் தம்முன் இருந்துள்ளது எனச் சான்று கூற வேண்டும். தரைப்படம் கீழே கண்டவகையில் வரையப்பட வேண்டும்:—

(ii) (அ) உரிமை பெற வேண்டிய நிலம் நில அளவை, செய்யப்பட்ட ஒரு முழுப்புலமாகவோ அல்லது உட்பிரிவாகவோ இருப்பின் அதன் தரைப்படம் நில அளவைச் சுவடியினின்று எடுத்த நகலாகவே இருக்கும். தீர்ப்பு அளிக்கப்படுமுன் வட்ட அலுவலர் அல்லது நில அளவு மாவட்ட அலுவலர் அல்லது 5 ஆவது பத்தியின்கீழ் நியமிக்கப்பட்ட தனி அலுவலர். அது அளவு நுட்ப வகையில் சரியாக இருக்கிறதென்று சான்று கூற வேண்டும். நில அளவை செய்யப்பட்ட புலம் அல்லது உட் பிரிவின் வரைவுகள், கீழே (iii) ஆவது பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு எல்லை வரையறுக்கப்பட வேண்டும்.

21—10—1920 தேதி, 2005, அ.ஆ.வரு.பல.
17—1—1944 தேதி, 26, அ.ஆ.வரு.
11—10—1939 தேதி, 3078, வ.து.க.செ.பலவ.
3—2—1944 தேதி, 4, வ.து.க.செ.அச்சு.

(ஆ) உரிமைப் பெறப்படும் நிலம் நில அளவை செய்யப் பட்ட புலம் அல்லது உட்பிரிவின் ஒரு பகுதியாயிருப்பின் வருவாய் ஆட்சி முறையில் எல்லை வரையறுத்தல் படம் வரைதல் அவற்றின் மாறுதல்களைப் பதிவு எவ்வாறு செய்யப்பட வேண்டு மென்று விவரிக்கப்பட்டுள்ளதோ அவ்வாறு அதன் தரைப்படம் வரையப்பட வேண்டும். புதிய இருப்புப் பாதைக்காக நிலத் தின் உரிமை பெறப்படும்போது இவ்வாறே செய்ய வேண்டும். இதைப் பற்றி விவரமான அறிவுரைகள் VIII ஆவது இணைப்பில் உள்ளன.

18—7—1917 தேதி, 170, வ.து.க.செ.தி.
30—4—1934 தேதி, 58, வ.து.க.செ.
17—3—1934 தேதி, 542, அ.ஆ.வரு.
17—5—1957 தேதி, 2065, அ.ஆ.வரு.பல.

(iii) நில அளவை செய்யப்படுவதற்கு முன்னதாகவே புதிய புலங்களையும் உட்பிரிவுகளையும் குறிப்பிட்ட அளவுகள் கொண்ட உறுதியான கற்களால் எல்லை வரையறுக்கப்படக் கவனம் செலுத்த வேண்டும். VII பொறி இயல் பணித் துறைக்காக நிலத்தின் உரிமைப் பெற வேண்டியவற்றின் நிலங்களின் எல்லை வரையறுத்தல் VII ஆவது இணைப்பில் விதிக்கப்பட்டுள்ளவாறு செய்யப்படும்—அரசாங்கத்திற்கு நில உரிமை பெறப்படுவதற்காக நில அளவை செய்யப்படுவதில் மாநில அரசினர் ஏற்றுக்கொள்ள வேண்டிய எல்லை வரையறுத்தல் செலவினங்களைக் கீழ்க் கண்டவற்றைத் தவிர மற்றவற்றில், "25 பொது ஆட்சி—மாவட்ட ஆட்சி—கொ—பணியாளர் தொகுதிகள் அ. தாலுக்காப் பணியாளர் தொகுதி, 5 அலுவலகச் சில்லறைச் செலவுகள்—நில அளவையும் நிலத்தின் உரிமைபெறுவதற்குரிய செலவு" என்ற தலைப்பின் கீழ் எழுத வேண்டும்.

(அ) பொறி இயல் பணித் துறைக்காகப் பணம் கொடுக்க நியமிக்கப்பட்ட தனி அலுவலர்களால் செய்யப்பட்ட செலவுகளும்.

(ஆ) நிலத்தின் உரிமை பெறுவதற்குத் தனி அலுவலர் நியமிக்கப்பட்டிருந்தாலும், அவ்வாறு நியமிக்கப்படாவிடினும் வாணிபம் அல்லது வாணிபம் போன்ற காரியங்களுக்காக நில உரிமை பெறப்படும் போது அல்லது மூலதனம் கணக்கும், வருவாய்க்கணக்கும் தனித் தனியாய் வைக்கப்பட்டுள்ள துறைக்காக நிலத்தின் உரிமம் பெறப்படும்போது,

இவ்விரு விலக்குகளில் சொல்லப்பட்டவற்றில் ஏற்படும் செலவுகளைச் சம்பந்தப்பட்ட வேலைகளுக்கே எழுத வேண்டும்.

11—5—1920 தேதி, 1079, வி.ஆ.வரு.பல.
14—6—1920 தேதி, 82, வ.து.க.செ.நிர்.
17—5—1957 தேதி, 2065, வி.ஆ.வரு.பல.

(vi) (அ) 5-வது பத்தியின் கீழ்த் தனி அலுவலர் நியமிக்கப்பட்டிருந்தால், அவரது மேற்பார்வையில் எல்லை வரையறுத்தல், நில அளவை செய்தல், படம் வரைதல் முதலிய வேலைகள் தனிப் பணியாளர்களால் செய்து முடிக்கப்படும். அவ்வேலை முற்றிலும் சரியாகச் செய்யப்படுவதற்கு அவரே பொறுப்பாளர் ஆதலால், அவர் பணியாளர்களின் அலுவலக வேலையிலும் புலங்களைப் பற்றிய வேலையிலும் ஒரு சில சதவீதம் அவரே சரிபார்க்க வேண்டும். அவரிடம் பணிபுரியும் தனி வருவாய் ஆய்வாளர்களாயினும் நில அளவுப் பணியாளர்களாயினும் உரிமை பெறப்படும் நிலத்தை

அளவு செய்யத் தொடங்கும்போதே நில அளவை எல்லைகள் சட்டம் 6 ஆவது பிரிவின்கீழ் அறிவிப்பு செய்ய வேண்டும். இது போலவே நில அளவைச் சட்டத்தின் 9 (2)-ஆவது பிரிவின் கீழ் அறிவிப்புகளை, நில உரிமை பெறும் சட்டத்தின் 9-ஆவது பிரிவின் கீழ்ப் பிறப்பிக்கப்படும் அறிவிப்புகள் வெளிவரும் போதே, கொடுத்துவிட வேண்டும். தனிப் பணி முடிவடையும் இறுதி மூன்று மாதங்களுக்குள் அனுப்பப்படும் அறிவிப்புகளைத் தவிர மற்ற அறிவிப்புகள் சம்பந்தமாகச் செய்துகொள்ளப்படும் மேல் முறையீட்டை வரப் பெறத்தக்கவர் (தனி டெப்யூடிக் கலெக்டர் என்பவரான) நில உரிமை பெறும் அலுவலர் என்று குறிப்பிட வேண்டும். இவை நீங்கலாக மற்றவற்றில் அனுப்பப்படும் அறிவிப்புகளில் அவை சம்பந்தமாக மேல் முறையீடு வரப் பெறத் தக்க அலுவலர் தாலுகாத் தாசில்தார் என்று குறிப்பிட வேண்டும் தனி அலுவலர் தாமே விசாரணை செய்து முடிவு செய்த மேல் முறையீடுகளை எந்த எந்த கிராமங்களுக்குரியனவோ அக் கிராமங் களைப் பொறுத்த வரையில், வரப்பெற்ற எல்லாவற்றிற்கும் தீர்ப்பு கூறி, மேல் முறையீடு செய்துகொள்ளக் கூடிய கால அளவு முடிந் ததும் தாமே, நில அளவை எல்லைகள் சட்டத்தின் 13-ஆவது பிரிவின் கீழுள்ள இறுதி அறிக்கையைப் பிறப்பித்துக் கிராமங் களிலும் மாவட்ட அரசிதழிலும் விளம்பரம் செய்ய வேண்டும். இத்தகைய கிராமங்கள் அல்லாதவற்றில், சம்பந்தப்பட்ட கிராமங் களில் நில அளவை எல்லைகள் சட்டத்தின் 9 (2)-ஆவது பிரிவு அறிவிப்புகளைப் பெற்றுக் கொண்டதற்கான சீட்டுகளை நில அளவை எல்லைகள் சட்டத்தின் 13-ஆவது பிரிவின்கீழ் உரைவு அறிவிக்கைகளையும் கிராமங்களிலும் மாவட்ட அரசிதழிலும் இறுதியாக வெளியிடுவதற்காகத் தாலுகாத் தாசில்தாருக்கு அனுப்ப வேண்டும். தனிப் பணியாளர், தாலுகா நில அளவைச் சுவடியிலும் கிராமச் சுவடியிலும் சேர்க்கப்படுவதற்காக இரட்டிப்புக்கனம் கொண்டுள்ள தனி வரைவுத் தாளில் திருத்தப் பட்ட நிலப் படங்களின் இரண்டு பிரதிகளையும், அதனுடன் அதனுடன் VIII-ஆவது இணைப்பின் உள்ளடக்கத்தில் குறிப் பிட்ட படிவத்தில் உரிமை பெறப்பட்டதால் ஏற்பட்ட மாறுதல் களைப் பற்றிய விவர அறிக்கை ஒன்றையும் தயார் செய்ய வேண்டும்.

17—3—1934 தேதி, 542, அ.ஆ.வரு.பல.
30—4—1934 தேதி, 58, வ.து.க.செ.
17—1—1944 தே 26, அ.ஆ.வரு.வாலாய்.
3—2—1944 தேதி, 4வது சு.கெ.அச்சு.

(ஆ) தனி அலுவலர் நியமிக்கப்படாவிடில் இவ்வேலையை வருவாய் ஆய்வாளராயினும் தாலுகா நில அளவுப் பணியாளர் ஆயினும் செய்ய வேண்டும். அளவு எடுத்தல், படம் வரைதல், பரப்பைக் கணக்கிடுதல் ஆகிய இவை முற்றிலும் சரியாகச் செய்யப்படுவதற்கு அவரே, பொறுப்பாளராவார்—நில உரிமை பெறப்படும் நிலத்தின் அளவையைத் தொடங்கும் போதே நில அளவை எல்லைகள் சட்டத்தின் 6-வது பிரிவின் அறிவிக்கையை வெளியிட வேண்டும். ஆனால், தீர்ப்பு அளிக்கப்பட்ட பின்னர் கிராமக் கணக்குகளில் மாறுதல்களைப் பதிவு செய்வதற்காக அவருக்கு உட்பிரிவுக் கட்டு அனுப்பப்படுவதற்கு முன்னர் மேற் சொன்ன சட்டத்தின் கீழ் ஏற்றவாறு 9 (2) பிரிவு அறிவிப்பை அல்லது 10 (2) பிரிவு அறிவிப்பை வெளியிடக் கூடாது. நில அளவை செய்யப்பட்ட நகரங்களில் வருவாய் ஆய்வாளராயினும் தாலுகா நில அளவுப் பணியாளராயினும் செய்யும் அலுவல்களை நகர நில அளவுப் பணியாளர் செய்வார். இவ்வலுவலாளர்கள் வரைந்த தரைப்படங்கள் நில உரிமை பெறும் அலுவலர் வழியாக நில அளவு வட்ட அலுவலருக்காயினும் நில அளவு மாவட்ட அலுவலருக்காயினும் அனுப்பப்படும். நிலத்தின் உரிமை பெறும் அலுவலர் இத்தரைப்படங்களைத் தமது கோப்பில் வைத்துக் கொள்ளக்கூடாது. ஆனால் அத்தகைய நில உரிமை பெறும் அலுவலர் அப் படங்களிலிருந்து தமக்கு விவரம் ஏதாவது தேவையாக இருக்கும்மானால் அதைக் குறித்துக்கொண்டு அவற்றை நில அளவு வட்ட அலுவலருக்காயினும் நில அளவு மாவட்ட அலுவலருக்காயினும் அனுப்ப வேண்டும். நிலத்தின் உரிமைப் பெறும் அலுவலர் நில உரிமை பெறும் சட்டத்தின் 9-ஆவது பிரிவின்கீழ் அறிவிப்பு பிறப்பிப்பதற்கு முன்னர் இத் தரைப் படங்கள் நில அளவு வட்ட அலுவலரால் அல்லது நில அளவு மாவட்ட அலுவலரால் ஆய்ந்து பார்க்கப்படுவதற்காக அவருக்கு அவற்றை அனுப்பவேண்டும். ஏனெனில், நிலத்தின் உரிமைப் பெறும் அலுவலர் தீர்ப்பு அளிப்பதற்காக விசாரணை நடத்தும்போது இத் தரைப் படங்கள் அவர் முன்னிலையில் இருக்க வேண்டும்.

16—5—1935 தேதி, 1141, அ.ஆ.வரு.பல.
23—5—1935 தேதி, 57, வ.து.க.செ.அச்சு.
7—1—1944 தேதி, 26, அ.ஆ.வரு.
3—2—1944 தேதி, 4, வ.து.க.செ.அச்சு.

நில அளவு வட்ட அலுவலர் அல்லது நில அளவு மாவட்ட அலுவலர் தமது சுற்றுப் பயணங்களின் போது இதர வருவாய் நில உட்பிரிவுகளுடன் இத்தகைய உட்பிரிவுகளையும் நிலத்தில்

சரிபார்த்து நன்முக இல்லாத வேலை ஏதேனும் தென்படுமாயின் அது பற்றிக் கருத்திற் கொள்ள வேண்டும். நிலத்தின் நிலமைக்கும், நில அளவுப் பதிவுகளுக்கும் முக்கியமான வித்தியாசங்கள் இருக்குமாகில் அத்தகைய கடினமானவற்றில் ஆய்வாளர் செய்ய வேண்டுமென்று அவரிடம் ஒப்புவிக்கப்பட்ட வேலையை நில அளவு வட்ட அலுவலர் அல்லது மாவட்ட நில அளவு அலுவலர் தாமே செய்வதால் அல்லது வருவாய் ஆய்வாளர் வேலையை நிலத்தில் அளந்து சரிபார்த்தல் மனநிறைவு கொள்ளத் தக்கவகையில் அவசியம் என அவர் கருதுவாரெனில் அல்லது இவ்வாறு செய்யப்பட வேண்டுமெனக் கலெக்டர் ஆணை பிறப்பிப்பார் எனில் அத்தகைய அலுவலர் அவ்வாறு செய்ய வேண்டும்.

(v) நில அளவை செய்யப்படாத தனி உரிமை எஸ்டேட்டுகளில் உரிய விதி முறையில் முதலில் உரிமை பெறப்படும் நிலங்களின் எல்லைகளை வரையறுத்துக் கொண்டு பின்னர் கிரமமாக ஒரு நில அளவை செய்து புலப்படங்கள் இரண்டு பிரதிகளில் தயாரிக்க வேண்டும். ஈட்டுத் தொகை கணக்கிடுவதற்காக உடைமை நிலங்களின் பகுதிகளை உட்பிரிவுகளாகக் காட்டி இப்படங்களின் பிரதி தயாரிக்கப்பட வேண்டும். (இருப்புப் பாதை நீங்கலாக) சாலைகளுக்காகவும் கால்வாய்களுக்காகவும் நில உரிமை பெறப்படும் போது நில அளவைக்கோடுகள் கோண அளவைக் குறிகளை அனுசரித்துப் பராமரிக்கப்பட்டு வரும் கோண அளவை நிலையங்களை அல்லது தேசிய முக்கோண அளவுக்குறி நிலையங்களைத் தொடக்கமாகவும் முடிவாகவும் கொண்டதாக இருக்கவேண்டும். இம்முறை சாத்தியப்படாவிடில் குறுக்குக்கோட்டின் தொடக்கம், முடிவு, அவற்றைக் காட்டும் குறி உள்ள இடங்களையும் (அவற்றிற்கு அடுத்துள்ள இடம்) நிலையான கட்டட அமைப்பில் குறி அமைக்க வேண்டும். தனித்த இடங்கள் உரிமை பெறப்படும் போது அதாவது ஒரு மாளிகைக்காக இடம் தேவையானால், அந்த மூலை விட்டக் கோடுகளின் ஒரு முனையை, அதற்கருகில் திரிகோணக் கணக்கு அளவை முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள குறுக்குக் கோடு ஏதாவது இருப்பின் அதனை ஆதாரமாகக் கொண்டோ, அல்லது நிலையான இரண்டு குறிகள் அவையாவன, பொதுக் கட்டடங்கள் அல்லது மதகுகள், பாலங்கள் இவற்றைக் காட்டும் கோடுகளுடன் இணைக்க வேண்டும். இது சாத்தியப்படாவிடில் அந்த மூலைவிட்டக் கோட்டின் இரு முடிவுகளில் கட்டட

அமைப்பில் குறிகள் அமைத்து அதன் செலவை எல்லை வரையறுத்தல் செலவுடன் சேர்த்துக்கொள்ளவேண்டும். உரிமை பெறும் நிலங்களை அடையாளம் கண்டு பிடிப்பதற்காக அருகிலுள்ள விளக்கமான நிலத்தின் விவரங்கள் எத்தனை குறிக்க முடியுமோ அவற்றையெல்லாம் வரை படத்தில் குறிக்க வேண்டும். அரசினர் அக்கறை கொண்டுள்ள நில அளவை செய்யப்பட்ட நிலங்களின் உரிமையையும் நில அளவை செய்யப்பட்ட தனி உரிமை எஸ்டேட்டு நிலங்களின் உரிமையையும் பெறும்போது அவற்றின் எல்லை வரையறுத்தல், அளவெடுத்தல், படம் வரைதல், பதிவுகள் தயாரித்தல் ஆகியவற்றின் நடைமுறைகள் அரசுக்குடி பற்றிய நிலங்களை உரிமை பெறும்போது எத்தகைய மாநில நடைமுறையை மேற்கொள்ளத்தக்கதோ அம்முறையை மேற்கொள்ள வேண்டும். மாநில அரசினர் செலவில் பராமரிக்கப்பட்டு வராத நில அளவை செய்யப்பட்டுள்ள எஸ்டேட்டு நிலங்களின் உட்பிரிவுகளின் உரிமையைப் பெறப்படும்போது, அத்தகைய உட்பிரிவுகளைப் படமாக வரையப் போதிய அளவுகளைத் தனியாக எடுத்து அவற்றை அப்படங்களில் குறிக்க வேண்டும். இவ்வாறு தயார் செய்யப்பட்ட பதிவேடுகளை தனி அலுவலர், நில அளவு வட்ட அலுவலர், நில அளவு மாவட்ட அலுவலர் இவர்களில் எவரேனும் மேற்சொன்ன முறையில் சரி பார்க்க வேண்டும். இந்நிலப் படங்களின் பிரதியை தனி உரிமைக் கிராம நில அளவைச் சுவடிகளிலும் தாலுகாச் சுவடிகளிலும் கிராமச் சுவடிகளிலும் இணைத்து வைக்க வேண்டும். மேலும், கீழே 19 (ii)பத்தியில் கூறப்பட்டுள்ள வாறு தாலுகாக் கணக்குகளையும் கிராமக் கணக்குகளையும் திருத்தி அமைத்துக் கொள்ள வேண்டும்.

அ1—10—129 தேதி, 2005, அ.ஆ.வரு.
ஆ18—10—1929 தேதி, 3078, அ.ஆ.பல.
ஆ20—10—1929 தேதி, 2440, அ.ஆ.
ஆ28—11—1929 தேதி, 105, ல.து.க.செ.
17—3—1934 தேதி, 542, அ.ஆ.வரு.
30—4—1934 தேதி, 58, வ.து.க.செ.வாலாய.
17—1—1914 தேதி, 25, அ.ஆ.வரு.
3—2—1944 தேதி, 4, வஅது.க.செ.அச்சு.
17—5—1957 தேதி, 2065, அ.ஆ.வரு.பல.

(VI) நில உரிமை பெறும் நடவடிக்கையின் போது தரைப் படத்தில் மாறுதல் ஏதாவது செய்ய வேண்டுமென்று கலெக்டருக்குத் தோன்றுமானால் திருத்தி அமைக்கப்படும் தரைப்படம்

தயாராகும் வரையில் தீர்ப்பு அளிப்பதை ஒத்திவைக்க வேண்டும். திருத்தி அமைக்கப்படும் தரைப்படமும் அசல் படம் தயாரிக்கும் மாதிரியே தயார் செய்யப்பட்டு, சரி பார்க்கப்பட வேண்டும்.

14. தீர்ப்பளித்தல் பற்றிய கட்டளைகள்.—(i) இச் சட்டத்தின் (iii)-வது பிரிவின் கீழ் நிலத்திற்காக அளிக்கப்பட வேண்டிய ஈட்டுத் தொகை கீழ்க்கண்ட இனங்களைக் குறிக்கும்.

முழுத் தீர்வை செலுத்துவதற்குட்பட்டு, சட்டத்தின் 4 (1) பிரிவின் கீழ் அறிவிக்கை வெளியிடப்பட்ட காலத்தில் நிலத்தின் விலை மதிப்புத் தொகையும் அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் ஆகியவற்றின் விலை மதிப்புத் தொகையும் ஆகும். அதாவது அப்பொழுது சாதாரணமாக அதற்குக் கிடைக்கக் கூடிய நடப்பு விலை மதிப்புத்தொகை ஆகும்.

முழுத் தீர்வைக்குக் குறைந்த தீர்வை விதிக்கப்பட்டிருக்கும் நிலங்களைப் பற்றிய உரிமையைப் பெறும்போது தமது வரி உரிமை இழப்பின் நிமித்தம் நிலத்தின் உரிமையாளருக்கு ஒரு ஈடு பெறுவதற்குப் பாத்தியதை யிருந்தால் (அதாவது உரிமையளிக்கப்படாத பணி இனம் நிலத்தைத் தவிர மற்ற இனம் நில உரிமையாளராக இருப்பின்) அவருக்கு உரித்தான அரசாங்க வருவாய் ஒப்படைத் தொகையைப் போல் இருபது மடங்கான தொகை.

ந.க.—(1) இதனுடன் ஒவ்வொரு தொகைக்கும் நூற்றுக்குப் பதினைந்து வீதம் கூடுதல் தொகையை சட்டத்தின் 23(2)-ஆவது பிரிவின்கீழ் அளிக்க வேண்டும்.

(2) ஜமீன் நிலம் அல்லது தனி உரிமை நிலமாயிருந்தால் முதலில் எல்லா உரிமைகளையும் சேர்த்து மதிப்பிட்டு, சம்பந்தப்பட்டவர்களிடையில் அவரவர்களின் பல்வேறு உரிமைகளின் விதாச்சாரத்தில் அத்தொகையைப் பங்கீடு செய்ய வேண்டும். நிலத்தின் நடப்பு மதிப்புத் தொகைக்கும் பயிரிடுவோரின் உரிமைக்குரிய மதிப்பிற்கும் உள்ள வித்தியாசமே நிலக்கிழாரின் உரிமைத்தொகையாகும்.

9—2—1923 தேநி, 256, அ.ஆ.வரு.பலவ.
22—2—1923 தேநி, 436, வ.து.க.செ.பலவ.

(3) இனம் பெற்றவருக்கு உரிமைப் பட்டயம் ஏதாவது வழங்கப்பட்டிருந்தால் அதிலிருந்து உரித்தான அரசாங்க வருவாய் ஒப்படைத் தொகையைப் பற்றி அவர் தெரிந்து கொள்ளலாம். உரிமைப்பட்டயம் வழங்கப்படாதிருந்தால், வருவாய் ஒப்படைத் தொகையை அரசாங்கத்தின் மீட்புரிமைக்கு ஏற்றவாறு) முதலீடு

வேண்டும். இலும் பதிவேட்டில் குறிக்கப்பட்டுள்ள தீர்வையானது பின்னர் வருவாய் நிலவரித் திட்டத்தின் கீழ்த் திருத்தி அமைக்கப்பட்டிருந்தால், இலும் பெற்ற வருக்குச் சேரவேண்டிய அரசாங்க வருவாய் கோப்பை, திருத்தி அமைக்கப்பட தீர்வையை அனுசரித்து தீர்மானம் செய்யப்பட வேண்டும். அதாவது, இலும் நிலவரி திட்டத்தின் கீழ் ஆ பதிவேட்டின் 8-ஆவது சட்டத்தில் கண்டுள்ள விவரத் திற்கு ஏற்ற நடைமுறைத் தீர்வையாக இருக்க வேண்டும்.

28—8—1937 தேதி, 1763, அ.ஆ.வரு.பல.
28—4—1938 தேதி, 36, அ.வ.து.க.செ.அச்சு.
17—5—1957 தேதி, 2065, அ.ஆ.வரு.பல.

குறிப்பு.—(i) அவசரமான நிலைகளில் தவிர, நிலத்தை சுவாதீனப்படுத்திக் கொள்ளும் முன்னர் நிலத்தின் உரிமையாளர்களே நிலத்திலுள்ள பயிர்களை அறுவடை செய்து கொள்ள அனுமதியளிக்க வேண்டுமேயன்றி அவற்றின் மதிப்பைக் கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது. 7—10—1925 தேதி, 1540 எண். அ. ஆ., 3—12—1925 தேதி, 2659 எண். வ.து.க.செ.பலவ.

(ii) நிலத்தின் உரிமையாளர் அரசாங்கத்திற்கோ அல்லது சமூகத்திற்கோ புரிய வேண்டிய பணிகளை முன்னிட்டு அந்நிலத்தின் முழுத் தீர்வைக்குக் குறைந்த தீர்வை விதிக்கப்பட்டு உரிமை பெறப்படும் பரப்பிற்குரிய தீர்வையில் இலும் நிலவரித் திட்டத்தின் கீழ் இலும் பெற்றவருக்கு தள்ளிக் கொடுத்த தீர்வையைப் பற்றித் தீர்ப்பில் ஒரு முடிவு கண்டெழுத வேண்டும். நில உரிமை பெறும் சட்டத் தின் 31(3)-ஆவது பிரிவில் வகுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் எவையேனும் செய்வதாக இருந்தால் நிலத்தின் உரிமை பெறும் அலுவலர் மாவட்டக் கலெக்டர் வழியாக இத்தகைய ஏற்பாடுகளைப் பற்றி எழுதி அனுப்ப வேண்டும்.

29—3—1921 தேதி, 715, அ.ஆ.வரு.பலவ.
29—4—1921 தேதி, 24, வ.து.க.செ.

(iii) ஈட்டுத் தொகை பெறும் உரிமையைப் பற்றி அல்லது பங்கீட்டைப் பற்றித் தகராறு இருக்கும் இனங்களில், தாம் அளிக்கும் மொத்த ஈட்டுத் தொகையை உரிமையுள்ளவர்களுக்குள் பங்கு விகிதாச்சாரத்தைக் கலெக்டர் பதிவு செய்ய வேண்டுமென்று விதிக்கும் சட்டத்தின் 11(iii)-ஆவது உட்பிரிவைச் சட்டத்தின் 30, 31(2) பிரிவுகளுடன் சேர்த்து அனுசரிக்க வேண்டும். இத்தகைய சந்தர்ப்பங்களில் சுருக்கமான விசாரணை நடத்தி முடிவைப் பதிவு செய்ய வேண்டும். அல்லது தகராறு பற்றியதை 30-ஆவது பிரிவின் கீழ்ச் சிவில் நீதிமன்ற முடிவிற்கு அனுப்ப வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் எல்லாரும் தமது தீர்ப்பை ஒப்புக்கொள்ளா விட்டால், அல்லது 30-ஆவது பிரிவின் கீழ்ச் சிவில் நீதி மன்ற முடிவிற்கு அனுப்புவ தாயிருந்தால் கலெக்டர் தகராறு கூறப்படும் முழு ஈட்டுத் தொகையையும் சட்டத் தின் 31(2)-ஆவது பிரிவின் கீழ் வைப்புத் தொகையாக நீதி மன்றத்தில் செலுத்தி விட வேண்டும்.

3—12—1906 தேதி, 350, வ.து.க.செ.

16—11—1898 தேதி, 308 வருவாய்த்துறைக் கழகச் செயல் முறையில் குறிப் பிடப்பட்டுள்ள இந்திய அரசாங்கத்தின் தீர்மானத்தின் 1(2)-ஆவது பத்தி

8—2—1900 தேதி, 22, வ.து.க.செ.
24—3—1902 தேதி, 65, வ.து.க.செ.
15—12—1909 தேதி, 295, வ.து.க.செ.
19—11—1909 தேதி, 3170, அ.ஆ.

(iv) சட்டத்தின் 31(3) அல்லது (4) பிரிவின் கீழ் ஈட்டுத் தொகையை ரொக்க மாகவல்லாமல் ஈடு வழங்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தால், அத்தகைய ஈட்டின் தன்மையை 17-ஆவது இணைப்பில் குறிப்பிட்ட அ படிவத்தில் தயாரிக்கப் படும் தீர்ப்பு அறிக்கைக் குறிப்புரைக் கட்டத்தில் விளக்கமாக எழுத வேண்டும்.

23—7—1907 தேதி, 206, வ.து.க.செ.
26—7—1941 தேதி, 1698, அ.ஆ.வரு.பல.
18—9—1941 தேதி, 103, வ.து.க.செ.அச்சு.

பரிவர்த்தனையாக நிலம் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்ட சூழ்நிலை களில் அத்தகைய ஏற்பாட்டைப் பற்றித் தீர்ப்பில் குறிப்பிடாமல் அதைப் பற்றி மாவட்டக் கலெக்டருக்கு தனிப்பட்ட அறிக்கை மேலனுப்ப வேண்டும்.

10—9—1918 தேதி, 2804, வ.து.க.செ.

(i) உரிமை பெறப்படும் நிலங்களில் உரிமைகளுக்காக ஈட்டுத் தொகையைத் தவணைகளில் கொடுக்க (இந்திய) 1894-ஆம் ஆண்டு 1-ஆவது சட்டம் இடம் அளிக் கிறதில்லை. 11-ஆவது பிரிவு (ii), (iii) உட்பிரிவுகளில் கீழ் நிலத்தின் எல்லா உரிமைகளுக்குமுரிய ஈட்டுத் தொகை எல்லாவற்றையும் கலெக்டர் ஒரு வழியாகத் தீர்மானித்து அதைப் பெற்றுக்கொள்ள உரிமையுள்ளவர்களுக்குள் பங்கீடு செய்ய வேண்டும்.

13—8—1910 தேதி, 2664, அ.ஆ.
25—8—1910 தேதி, 230, வ.து.க.செ.

15. மதிப்பீடு செய்யும் அலுவலருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உரிமை.—மேலே சொல்லப்பட்டுள்ளவற்றிற்கு உட்பட்டு நிலத் தின் உரிமை பெறுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர், சட்டத்தின் 23, 24 பிரிவுகளின் ஏற்பாடுகளை அனுசரித்துத் தம் அனுபவ நுண்ணறிவுக்குகந்தவாறு நில மதிப்பையும் அதில டங்கிய பல்வேறு உரிமைகளையும் தீர்மானிக்க வேண்டும். சில தனிப்பட்ட சந்தர்ப்பங்களில் உதாரணமாக தேயிலை, அல்லது சிறப்பான விலை மதிப்புள்ள விளைபொருள் பயிர்கள் விளை விக்கப்படும் நிலங்களின் உரிமை பெறும்போது, அவற்றின் விலை மதிப்பை மாவட்டக் கலெக்டரின் தனி அறிவுரைகளை அனுசரித்து மதிப்பிட வேண்டும். மேலே 8-வது பத்தியில் குறிக்கப்பட்டுள்ள காரியங்களுக்காக நிலத்தை மதிப்பிடும் போதும் இதே நடைமுறையை மேற்கொள்ள வேண்டும்.

1—2—1896 தேதி, 43, வ.து.க.செ.
16—10—1899 தேதி, 3659, அ.ஆ.பக்.வ
2—3—1902 தேதி, 65, து.க.செ.
4—7—1899 தேதி, 432, அ.ஆ.

16. ஈட்டுத் தொகை மிகையாக வழங்கப்படாதிருப்பதற்காக வகுக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள்.—தீர்ப்புத் தொகை முதல் மதிப்பீட்டிற்கு அதிகப்படும் ஒவ்வொன்றிலும் போதிய காரணங்களைக் காட்டுவதுடன், உரிமை பெறப்பட்ட நிலங்களின், பரப்பு, மண் வயணம், எக்கர் ஒன்றுக்குத் தீர்வை விதம், மொத்தத் தொகை ஆகிய இத்தகைய விவரங்களுடன் மாவட்டக் கலெக்டருக்குத் தீர்ப்புகளைத் தெரிவிக்க வேண்டும். அசல் மதிப்பிற்கு நூற்றுக்குப் பத்து விதத்திற்கு அதிகமாகவோ அல்லது 10,000 ரூபாய்க்கு அதிகமான தொகையோ அளிக்கக் கலெக்டர் தீர்மானிக்கும்போது அல்லது சான்று மூரண்பாடாக இருக்கிறதென்று கருதும்போது அல்லது அசல் மதிப்பை விட 10 சத விதத்திற்கு அதிகமாகச் சிவில் நீதி மன்றம் மேல் முறையீட்டில் அளிக்கக்கூடிய தன்மையிருந்தால் அவைபற்றி மாவட்டக் கலெக்டருக்குத் தெரிவிக்க வேண்டும். பெரிய திட்டத்திற்காக நிலங்களின் உரிமை பெறப்படும்போது மாவட்டத்திற்குரிய மொத்த மதிப்புத் தொகை 20 சதவிதம் அல்லது அதற்கு அதிகமாகும் எனக் கலெக்டருக்குத் தோன்றுமானால், மேற்கொண்டு தீர்ப்புகள் சொல்வதை நிறுத்தி வைத்துக்கொண்டு, வருவாய்த் துறைக் கழகத்திற்கு மாவட்டக் கலெக்டர் வழியாகத் தனி அறிக்கை அனுப்ப வேண்டும். இவ்வறிக்கைகள் வரப் பெற்றதும், மாவட்டக் கலெக்டர் நிலம் உரிமை பெறும் அலுவலருக்கு (கலெக்டர் அலுவல்களைச் செய்பவருக்கு) நிலத்தின் சரியான மதிப்பைத் தீர்மானம் செய்ய உபயோகப்படக் கூடிய தகவல்களைக் கொடுக்கலாம். ஆனால், ஒரு குறித்த தொகையை ஈடாக அளிக்குமாறு மாவட்டக் கலெக்டர் அலுவல்களைச் செய்யும் அலுவலருக்கு கட்டளையிட முடியாது. நில உரிமை பெறும் அலுவலர் தமக்குக் கிடைத்த எல்லா விவரங்களையும் கொண்டு வழங்க வேண்டிய தீர்ப்பை இறுதியாக முடிவு செய்து விட்டால், நில உரிமை பெறும் அலுவலரின் தீர்ப்பின் அடிப்படையில் மேற்கொண்டு நடவடிக்கைகளைத் தொடர அரசினர் அனுமதிக்க வேண்டும் அல்லது உரிமை பெறும் நடவடிக்கையிலிருந்து பின்வாங்கிக் கொள்ள வேண்டும். இதைத் தவிர வேறு வழியொன்றுமில்லை.

இறுதியாக அளிக்கப்பட்ட ஈட்டுத் தொகையைவிட முதலில் மதிப்பிட்ட தொகை மிகவும் குறைந்திருக்குமானால், மாவட்டக் கலெக்டர் அதற்குப் பொறுப்புள்ள அலுவலர்களின் விளக்கங்களைப் பெறவேண்டும். நில மதிப்புத் தொகையை அரசாங்கத்

தின் மற்றொரு துறை செலுத்துவதாயிருந்தால், அந்நிலையிலும் உரிமை பெறும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து முடிக்க வேண்டுமா என்பதில் அத்துறையை மாவட்டக் கலெக்டர் கேட்டறிந்து கொள்ள வேண்டும்.

9—1—1950 தேதி, 65, அ.ஆ.வரு.பல.
11—5—1950 தேதி, 14, வ.து.க.செ.அச்சு.
17—5—1957 தேதி, 2065, அ.ஆ.வரு.பல.

குறிப்பு.—(1) [1]கலெக்டர் கடமைகளைச் செய்யும் அலுவலர், 1894-ஆம் ஆண்டு 1-ஆவது சட்டம் 11-ஆவது பிரிவின் கீழ் நடத்தப்படும் விசாரணைத் தேதியைப் பற்றிச் சம்பந்தப்பட்ட துறை அலுவலர், தல ஆட்சி அலுவலர் அல்லது சம்பந்தப் பட்ட கம்பெனிக்குப் போதிய முன் அறிக்கை அனுப்ப வேண்டும். ஏனென்றால் வேண்டுமானால், அவர் தாமாக நேரில் சென்று அல்லது பிரதிநிதியைக் கொண்டு நடவடிக்கையைக் கவனித்து நிலத்தின் மதிப்பைப் பற்றி சான்று தாக்கல் செய்யலாம். மேலும், அத்தகையவர் வாய்மொழியாகவோ அல்லது கடித மூலமாகவோ முறையிட்டுக் கொண்டால், நில உரிமை பெறும் அலுவலர் அதையும் கவனித்துப் பார்க்க வேண்டும்[1].

15—10—1906 தேதி, 288, வ.து.க.செ.
10 4—1957 தேதி, 1592, அ.ஆ.வரு.பல.

(2) [1]தல ஆட்சிக் கழகம் அல்லது கம்பெனியின் செலவில் நிலத்தின் உரிமை பெறப்படுவதாயிருந்து, அதில் நில உரிமை பெறும் சட்டத்தின் 20 (சி) பிரிவில் சிவில் நீதி மன்றத்திலிருந்து அறிவிப்பைக் கலெக்டர் வரப்பெற்றால், அவர் அத்தகைய தல ஆட்சிக் கழகத்திற்கு அல்லது கம்பெனிக்கு அத்தகைய அறிவிப்பில் நகலை உடனே அனுப்ப வேண்டும். [1]நீதி மன்றத்தில் ஈட்டுத் தொகை நிர்மானிக்கப்படுவதற்காகத் தல ஆட்சிக் கழகம் அல்லது கம்பெனி, தான் விரும்பும் எனில், சட்டத்தின் 50(2)-ஆவது பிரிவின் கீழ் நேரில் சான்று அளிப்பதற்கு அதற்கு வசதி அளிக்கும் வகையில் ஈடாக அளிக்கப்பட்டுள்ள தொகையின் விவரமும் கோரப்படும் தொகையின் விவரமும் அறிவிப்புடனே அல்லது அதன் பின் உடனடியாகவோ அதற்கு அனுப்ப வேண்டும். மேலும் தல ஆட்சிக் கழகம் அல்லது கம்பெனி சட்டத்தின் 50(2)-ஆவது பிரிவின் கீழ்த் தனக்குள்ள உரிமையைத் தான் பயன்படுத்திக் கொள்வதாக இருந்தாலும் அல்லது அவ்வாறு அது செய்து கொள்வதாக இல்லையெனினும், தல ஆட்சிக் கழகம் அல்லது கம்பெனியின் செலவில் அரசாங்கத்தின் சார்பில் மாநில அரசாங்கச் சட்ட அலுவலர்கள் நேரில் செல்லுமாறு அவர்கள் அறிவுருத்தப்பட்டிருக்கிறார்கள் என்று தல ஆட்சிக் கழகம் அல்லது கம்பெனிக்குக் கலெக்டர் தெரியப்படுத்த வேண்டும்.

12—4—1915 தேதி, 119, வ.து.க.செ.
28—2—1924 தேதி, 319, அ.ஆ.வரு.பலவ.
10—4—1925 தேதி, 616, அ.ஆ.வரு.பலவ.
7—5—1927 தேதி, 863, அ.ஆ.வரு.
13—2—1929 தேதி, 287, அ.ஆ.வரு.
[1]22—2—1929 தேதி, 563, வ.து.க.செ.பலவ.
[1]10—4—1967 தேதி, 1592, அ.ஆ.வரு.பல்வ.

(3). சிவில் நீதி மன்றத்திற்கு வழக்கு அனுப்பப்பட்டால் அவ்வழக்கு மாநில அரசாங்கத்திற்கு எதிராக தொடரப்பட்ட வழக்காகக் கருதப்பட்டு அதன் பிரதி வாதத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கலெக்டர் செய்யவேண்டும். நிலத்தின் உரிமையைப் பெறுக் அவர் அளித்த தீர்ப்பைச் சிவில் நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளாத வழக்குகளிலெல்லாம், சிவில் நீதி மன்றத்தில் தீர்ப்புச் சுருக்கத்திற்கு எதிராக, மேல் முறையீடோ அல்லது குறுக்கு ஆட்சேபனைக் குறிப்போ தாக்கல் செய்வதைப் பற்றிக் கலெக்டர் 95 (1) என நிலை ஆணையின் கீழ் வருவாய்த்துறைக் கழகத்தின் ஆணையைப் பெற வேண்டும். தல ஆட்சிக் கழகத்தின் மேலாண்மையிலோ, கட்டுப் பாட்டிலோ இருக்கக்கூடிய நிறுவனமோ, கம்பெனியின் நிறுவனமோ நில உரிமை பெறுவதற்காகச் செலவு செய்யப்பட்டிருந்தால், இந்த வழக்கிலும் மேல் முறையீடு செய்ய அத்தகைய தல ஆட்சிக் கழகம் மன்னது கம்பெனி செய்ய விரும்புகிறதா என்பதையும் அவ்வாறு விரும்புகிறதெனில் அதற்கு ஏற்படும் செலவை அது ஏற்றுக் கொள்ள அதன் அபிப்பிராயத்தின் நகல் சம்மதிக்கிறதா என்பதையும் தவறுமல் முதலில் அதைக் கேட்டு தெரிந்து கொண்டு 95(i)-ஆவது நில ஆணையின் கீழ் கலெக்டர் தாம் செய்யும் அறிக்கையுடன் வருவாய்த்துறைக் கழகத்திற்கு மேலனுப்ப வேண்டும். தல ஆட்சிக் கழகம் அல்லது கம்பெனி மேல் முறையீடு செய்ய விரும்ப வில்லையெனில் மாநில அரசினரின் தனி ஒப்பளிப்பின்றி யாதொரு மேல்முறையீடும் தாக்கல் செய்யக் கூடாது. தீர்ப்பு விளிக்கப்பட்ட பின்னர் சிவில் நீதி மன்றங்களில் எழும் நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் மாநில அரசினர் அவசியமானதொரு கட்சிக்காரராகின்றார். ஆதலால் தீர்ப்பைப் பற்றி வாதாடப் படக்கூடிய அத்தகைய எல்லா வழக்குகளிலும் அவர்களுடைய சட்ட அலுவலர்கள் அவர்களுக்காக நீதிமன்றங்களின் முன்பாக நேரில் செல்ல வேண்டும். அவர்கள் நீதி மன்றத்தின் முன்பாக நேரில் செல்வதற்கு ஏற்படும் செலவுகளை இச்சட்டத்தின் 50(1)-ஆவது பிரிவின் கீழ் தல ஆட்சிக் கழகம் மன்னது கம்பெனி ஏற்றுக் கொள்ள வேண்டும். தல ஆட்சிக் கழகம் அல்லது கம்பெனி, இச்சட்டத்தின் 50(2)-ஆவது பிரிவின் கீழ் அதற்குள்ள உரிமையைப் பயன்படுத்திக் கொண்டு, நேரில் சென்று சட்டுத் தொகையைத் நிர்மானிப்பதில் சான்று அளிக்க விரும்புமெனில் அதன் சட்டப் பிரதிநிதி மூலமாக வாதாடிக் கொள்ள அதற்கு உரிமை உண்டு. ஆனால், தல ஆட்சிக் கழகம் அல்லது கம்பெனி வழக்கில் உண்மையான கட்சி அன்று ஆதலால் சட்டத்தின் 50(2)-ஆவது பிரிவில் குறிக்கப்பட்டுள்ள காரியத்திற்காக அவற்றின் சட்டப் பிரதிநிதி நீதிமன்றத்திற்கு நேரில் செல்லுவதானது மாநில அரசினரின் சட்ட அலுவலர்கள் வழக்கில் சான்று அளித்து வழக்கை அரசாங்கத்தின் சார்பில் வாதாடுவதற்குப் பதிலாகாது. சென்னை மாநகரில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்றத்திற்கு சென்னை அரசாங்க சொலிசிட்டரும், மேல் முறையீட்டில் உயர் நீதிமன்றத்திற்கு அரசாங்க வழக்கறிஞரும் நேரில் செல்லுதல் அவரவர் கடமை யாகும். வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்றத்தில் அரசாங்கச் சொலிசிட்டர் தாம் நேரில் சென்று கவனித்து வழக்குகளில் மாத்திரம், மேல் முறையீட்டில் உயர்நீதிமன்றத்திற்கு நேரில் செல்லும் அரசாங்க வழக்கறிஞர்களுக்கு வழக்கைப் பற்றிய தேவையான தகவல்களைக் கொடுத்து உதவி செய்வார். இத்தகைய வழக்குகளுக்கான வழக்கறிஞர் ஊதியத்தை மேல்முறையீட்டில் நேரில் சென்ற வழக்கறிஞர் மூன்றில் இரண்டு பங்கு விகிதமும், மிகுதி ஒரு பாகத்தை அசல் நீதி. மன்றத்திற்கு நேரில் சென்றிருந்த வழக்கறிஞரும் பிரித்து கொள்ள வேண்டும்.

தலைநகரல்லாத புறப்பகுதிகளில் மாவட்ட அரசாங்க வழக்கறிஞர் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நீதி மன்றத்திற்கு நேரில் செல்வார். நீர்ப்பு அளித்த அலுவலரோ அல்லது அவருக்குப் பின் அவரது பணியை ஆற்றுபவரோ அல்லது தலைநகரல்லாத புறப்பகுதியில் உள்ள அரசாங்க வழக்கறிஞர் ஒருவருக்கோ சென்னை மாநகரில் உள்ள வழக்கறிஞருக்கோ (அரசாங்க சொலிசிட்டருக்கு) வழக்கைப்பற்றி விவரம் தெரிவிக்க வேண்டியிருந்தால் பதிவுக் கட்டில் அடங்கிய சான்று நீர்ப்பிற்கு வெற்றி காணும் வகையில் பிரதிவாதத்திற்குப் போதுமானதா என்பதைக் கவனிப்பதும், அவற்றின் குறைகள் எவையேனும் இருக்குமானால் அவற்றைப் புதிய சான்றுகளால் சரிப்படுத்துவதும் விவரம் தெரிவிப்பவரது கடமையாகும். உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு பதிவு செய்யப்பட்டால், சுப்ரிம்கோர்ட்டிலோ மாவட்ட அரசாங்க வழக்கறிஞராகிலும், வில்லது சென்னை மாநகரில் உள்ள அரசாங்க வழக்கறிஞராகிலும் (அரசாங்க சொலிசிட்டராகிலும்) அதன் ஆட்சேபனைத் தொகுப்பு வரைவைத் தயாரிக்க வேண்டும். அதைக் கலெக்டர் ஆய்ந்து பார்க்க வேண்டும். சட்ட அலுவலர்களுக்குச் சிவில் நடைமுறை விதிகளில் குறிக்கட்டுள்ள விதத்தில் உரிமை வாதத்தின் மதிப்பை அனுசரித்து வழக்கறிஞர் ஊதியம் அளிக்கப்படும். நில உரிமை பெறும் சட்டம் 25(2) பிரிவுகளின் கீழ்த் தொடரப்படும் வழக்குகளின் உரிமைவாத மதிப்புத் தொகை சிவில் நீதிமன்றத்தின் செலவுத் தொகையைக் கணக்கிடுவதற்கோ, அல்லது வழக்கறிஞர் ஊதியத்தைத் தீர்மானிக்கவோ நீதிமன்றம் எடுத்துக் கொள்ளும் தொகையேயாகும். மற்றவற்றில், நிலத்தின் உரிமை பெறும் அலுவலரின் முன்னிலையில் 9-ஆவது பிரிவின் கீழ்க் கோரிய தொகையோ அல்லது சிவில் நீதி மன்றத்திற்கு 19-ஆவது பிரிவின் கீழ் வியப்பக் கோரும் வாக்குமூலத்தில் கூறப்பட்ட தொகையோ, இவற்றில் எது குறைந்திருக்கிறதோ வித்தொகைக்கும், நில உரிமை பெறும் அலுவலர் நீர்ப்பில் அளித்துள்ள தொகைக்கும் உள்ள வித்தியாசமே உரிமை வாத மதிப்புத் தொகையாகும். மிகமிக உரிமை கேட்கப்பட்டிருந்தால் கலெக்டருக்குத் தமது யுக்தானுசாரத்தில் 97(2) என்ற நில ஆணை 6-ஆவது உள் பத்தியை அனுசரித்துக் குறைக்கப்பட்ட ஊதியம் அளிக்க அதிகாரமுண்டு. 27—10—1927 தேதி, 3149 எண். வருவாய்த்துறைக் கழகம் பலவகை செயல் முறையை விளக்கி நில உரிமை பெறும் வழக்குகளில் மாநில அரசினருக்குச் சேர வேண்டிய செலவுத் தொகையைச் சரியான முறையில் கணக்கிடுவது பற்றிச் சட்ட அலுவலர்கள் முறையீடு செய்யத் தவறியதாகத் தோன்றினால், 97(2)-ஆவது நில ஆணை 6-ஆவது உள்பத்தியை விளக்கி குறைந்த தொகையை அவருக்கு ஊதியமாய் அளிக்க அதுவே போதிய காரணமாகும்.

சட்டத்தின் 50(1) பிரிவின் கீழ் இழப்பீடுகள் தல ஆட்சிக் கழகம் அல்லது கம்பெனியால் கலெக்டர் வழியாக அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

6—10—1927 தேதி, 1962, அ.ஆ.வரு.பலவ.
27—10—1927 தேதி, 3149, வ.து.க.செ.பலவ.
21—12—1927 தேதி, 1145, அ.ஆ.வரு.வாலாய
7—1—1928 தேதி, 58, வ.து.க.செ.
17—5—1957 தேதி, 2065, அ.ஆ.வரு.பல.
10—4—1957 தேதி, 1592, அ.ஆ.வரு.பல.

17. உரிய முறையில் அறிவிக்கப்பட்ட தீர்ப்பு மாற்றி அமைக்கப்பட அனுமதிக்கப்படமாட்டாது.—( ) 11-வது பிரிவின் கீழ்த் தீர்ப்பு வழங்கப்பட்டு 12-வது பிரிவின் கீழ் உரிய முறையில் அறிவிக்கப்பட்ட பின்னர் அதில் அக்கறை கொண்டுள்ளவர்கள் அதை மாற்றி அமைக்கவோ அல்லது திருத்தவோ இசைவார் எனினும் உரிமை பெறும் அலுவலராயினும் அல்லது மாவட்டக் கலெக்டராயினும் அதை மறுமுறை மாற்றி அமைக்கவோ அல்லது திருத்தவோ கூடாது.

1—2—1896 தேதி, 44, வ.து.க.செ.

(ii) தீர்ப்பு அளித்த பின்னர், அதனுடன் சேர்ப்புத் தீர்ப்பு பிறப்பித்தல் தடை செய்யப்பட்டிருக்கிறது. அளிக்கப்பட்ட தீர்ப்பில் ஒரு நியாயமான உரிமை விடப்பட்டிருந்தாலும் அல்லது பிழை அல்லது முறைகேடு நேர்ந்திருந்தாலும் அவற்றிற்குரிய பொறுப்பாளர்களான சம்மந்தப்பட்ட அலுவலர்களின் விளக்கத்துடன் வருவாய்த் துறைக் கழகத்திற்கு கலெக்டர் அறிக்கை செய்யவேண்டும்.

13—8—1910 தேதி, 2664, அ.ஆ.
25—8—1910 தேதி, 230, வ.து.க.செ.

18. (i) நிலத்தைச் சுவாதீனம் செய்து கொள்ளுதல்.—தீர்ப்பு அளித்தபின்னர் (முன்னமே சட்டத்தின் 17-வது பிரிவின் கீழ் நிலம் எடுத்துக்கொள்ளப்படாமலிருந்தால்) ஈட்டுத் தொகை அளிக்கும் வரையிலும் விட்டுவைக்காமல் உடனடியாக நிலத்தைச் சுவாதீனம் செய்து கொள்ளத்தக்கது. ஆயினும் தீர்ப்புத் தொகைக்கும் மிக அதிகமாக உரிமைத் தொகை கோரப்பட்டிருந்தால் நிலம் எவரது தேவைக்கு எடுக்கப்பட்டதோ அவருக்குத் தெரிவிக்காமல் சுவாதீனம் செய்து கொள்ளக்கூடாது. நிலத்தை சுவாதீனம் செய்து கொண்டதும், நில உரிமை பெறும் சட்டத்தின் நடவடிக்கை நிறைவேற்றப்பட்டு நிலம் முற்றிலும் சட்ட உரிமையில் அரசினர் சொத்தாய்விடும். சட்ட முறையில் நிலத்தைச் சுவாதீனம் செய்து கொள்ளும் அந்த நேரம் வரையில், நிலத்தின் உரிமையைப்பெறும் நடவடிக்கைகளினின்றும் பின்வாங்கிக்கொள்ள அரசினருக்கு உரிமையுண்டே தவிர, அதன் பின்னர் இல்லை.

30—8—1939, தேதி, 2219, அ.ஆ.வரு.பல.
2—10—1939, தேதி, 88, வது.க.செ.

(ii) தனிப்பட்ட நிலையங்கள் அல்லது அசோஷியேஷன் களுக்கு, கல்வி அல்லது இதர பொதுக் காரியங்களுக்காகச் சட்டத்தின் கீழ் நிலத்தின் உரிமை பெறப்பட்டால், தீர்ப்பு அளித்த பின் கலெக்டர் நிலத்தை சுவாதீனப்படுத்திக் கொள்ளவேண்டும். பின்னர் அந்நிலம் முற்றிலும் சட்ட உரிமையில் அரசினரின் உடைமையாய்விடும். அதன் பின்னர் அவ்வாறு செய்ததைப் பற்றி மாவட்டக் கலெக்டருக்குத் தெரிவிக்க வேண்டும். அவர் சட்டத்தின் 6-ஆவது பிரிவின் கீழ் உறுதி மொழி வெளியிடுவதற்கு முன்னதாகவே நிச்சயப்படுத்தப் பட்டிருக்கக் கூடிய நிபந்தனைகளுக்குட்படுத்திச் சம்பந்தப்பட்ட தனிப்பட்ட நிலையம் அல்லது அசோசியேஷனிடம் நிலத்தை விட்டுவைக்க உரிய முறையில் வழக்கத்திற்கு இசைந்த ஆணையைப் பிறப்பிக்க வேண்டும். சட்டத்தின் 6-ஆவது பிரிவின் கீழ் உறுதி மொழி வெளியிட அனுப்பப்படும்போதே இவ்வாறு நிலத்தை விட்டு வைப்பதற்கு அரசினர் மாவட்டக் கலெக்டருக்கு அதிகாரம் கொடுத்திருப்பார்கள். நிலத் தீர்வை விலக்கும் அளிக்கப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டிருப்பனவற்றில் நிலத்தை விட்டு வைப்பதற்கும் நிலத் தீர்வை விலக்களிப்பதற்கும் ஒரே ஆணை போதுமானது.

ஆனல் கூட்டுறவு வீட்டு மனைச் சங்கங்களுக்காக நிலத்தின் உரிமம் பெறப்பட்டு அவற்றிற்குக் கவர்னர் சார்பில் நிலங்கள் மாற்றிக் கொடுப்பதில் உடன்படிக்கையும், மாற்றிக் கொடுக்கும் பத்திரமும் எழுதிக் கொடுக்கக் கூட்டுறவுத் துறைத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இதில் நிலம் விட்டு வைக்கப்படுவதற்காக மாவட்டக் கலெக்டர் வழக்கத்திற்கு இசைந்த ஆணை பிறப்பிக்க வேண்டும் என்பதில்லை.

19—12—1940, தேதி 3150, அ.ஆ.வரு.பல.
31—1—1941 தேதி, 8, வ.து.க.செ.அச்சு.
12—6—1943 தேதி, 1863, அ.ஆ.வரு.பல.
19—7—1943 தேதி, 12, வ.து.க.செ.அச்சு.
31—5—1950 தேதி, 1654, அ.ஆ.வரு.பல.
17—5—1957 தேதி, 2065, அ.ஆ.வரு.பல.

19. (i) நடவடிக்கைகளைப் பதிவு செய்தலும் கிராமக் கணக்கரிடமுள்ள நில அளவைச் சுவடிகளையும் வருவாய் நில அளவைப் படங்களையும் திருத்துதலும்.—உரிமை பெறும் நிலத்தைப் பற்றி ஒரு நிலையான பதிவேடு எழுதி வைக்கப்பட்டு வருவதற்காக நிலத்தின் உரிமை பெறுவதினால் ஏற்பட்ட மாறு

தல்களை வருவாய்த் துறையில் எழுதி வைத்து வரும் நிலப்பதி வேடுகளிலும் குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது. இதற் காகக் கீழ்க்கண்ட நடைமுறையை மேற்கொள்ள வேண்டும்.

(ii) தீர்ப்பு அளித்த பின்னர் நிலத்தின் உரிமம் பெறும் அலுவலர் தாமே கோட்ட ஆட்சியாளர் அல்லர் எனில், புதிய நிலப்படங்களை நில அளவைச் சுவடிகளின் கிராமத் தொகுப் பில் சேர்த்துவைத்த பின்னர் கட்டுகளைக் கோட்ட ஆட்சி யாளருக்கு அனுப்ப வேண்டும். அதனுடன் XII-ஆவது இணைப்பு 13-ஆவது படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவர அறிக்கையையும் அனுப்ப வேண்டும். கீழே (iii-ஆவது உள் பத்தியைக் காண்க. இவற்றிலெல்லாம் கைப்பற்றிலுள்ள எல்லா இனங்களிலும் அறிக்கையைக் கோட்ட ஆட்சியாளர் பத்திரப் பதிவுத் துறைக்கு அனுப்ப வேண்டும். மற்றும் தாலுகாக் கணக்குகளிலும் கிராமக் கணக்குகளிலும் மாறுதல் களையெல்லாம் பதிவு செய்யும் பொருட்டு, மேலே 13 (ii) பத்தி யில் குறிப்பிடப்பட்ட தரைப்படங்கள்; திருத்தி அமைக்கப் பட்ட புலப்படங்களின் மறு பிரதிகள்; வருவாய் ஆட்சி முறை யில் வழக்கமாக இருந்து வருகிற வருவாய்த் துறைக் கணக்கு களையும் பதிவேடுகளையும் எழுதி வைத்து வருவதற்குரிய விதிமுறைகளில் குறிப்பிட்டிருக்கும் உட்பிரிவு அறிக்கைகள் VIII இணைப்பில் குறிப்பிட்டவாறு நிலத்தின் உரிமை பெறுதலில் ஏற்பட்ட மாறுதல்களைப் பற்றிய விவர அறிக்கை அவற்றின் தீர்ப்பு எண், தேதியுடன் தாசில்தாருக்கு அனுப்பவேண்டும். இத்தகைய கட்டுகள் வரப்பெற்றவுடனே உரிமை பெறப்பட்ட நிலத்தின் இனத்தில் மாறுதல் இருப்பின், தாலுகா 7 எண் பதிவேட்டிலும் புதிய புலங்கள் அல்லது உட்பிரிவுகள் ஏற்படுத் தப்பட்டிருப்பின், தாலுகா 8 அ எண் பதிவேட்டிலும் மாறு தல்களைத் தாசில்தார் பதிவு செய்த பின்னர், உட்பிரிவு விவர அறிக்கைகளையும் உரிமை பெறப்பட்டதனால் ஏற்பட்ட மாறு தல்களைப் பற்றிய விவர அறிக்கைகளையும் அக் கிராமக் கணக்கு களில் பதிவு செய்யப்படும் நிமித்தம் வருவாய் ஆய்வாளருக் காகிலும் தாலுகா நில அளவுப் பணியாளருக்காகிலும் அனுப் புவார். இவர்கள் கிராம 3 எண் கணக்கிலும் கிராமப் பதிவேட்டி லும், மாறுதல்களைப் பதிவு செய்து நில அளவைக் கற்களைப் பற்றிய பதிவேடுகளிலும், எல்லை வரையறுப்புப் படக் குறிப்புகளிலும் தேவையான மாறுதல்களைச் செய்து திருத்தி அமைத்த பின்னர்

அவசியமான சான்றுடன் தாலூகா அலுவலகத்திற்கு அந்தப் பதிவுக் கோப்பைத் திருப்பி அனுப்புவார். பிறகு திருத்தி அமைக்கப்பட்ட புலப் படங்களின் மறு பிரதிகளுடன் இந்தக் கோப்பு நில அளவு வட்ட அலுவலருக்காயினும் நில அளவு மாவட்ட அலுவலருக்காயினும் அனுப்பப்படும். அவர், திருத்தி வைக்கப்பட்டு வரும் கிராமப் படங்களில் மாறுதல்களைக் குறிக்க ஏற்பாடு செய்வார். கோப்பு அவரிடமிருந்து திரும்பி வந்தபின், வருவாய் தரைப்பட வரைவாளர், அப்புலப்படப் பிரதிகளைத் தாலூகா நில அளவைச் சுவடிகளில் தக்க இடத்தில் இணைத்து வைப்பார். பின்னர் தாசில்தார் அம்மாறுதல்களைத் தாலூகா அப்பதிவேட்டில் குறித்து அவ்வாறு குறிக்கப்பட்ட தாகச் சான்றை அந்தக் கட்டில் பதிவு செய்து, பின்னர், அந்தத் கோப்பை கோட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும் தனிப்பட்ட பணியாளர்கள் நியமிக்கப்படாத சந்தர்ப்பங்களில் மேலே 13 (ii) பத்தியில் குறிப்பிடப்பட்ட தரைப் படங்களையும் சாதாரணமாக வருவாய் ஆட்சி முறையில் வழக்கமாக இருந்து வருகிற வருவாய்த் துறைக் கணக்குகளையும் பதிவுகளையும் வைத்து வருவதற்குரிய விதிகளை அனுசரித்து விவர உட்பிரிவு அறிக்கை களையும் நிலத்தின் உரிமை பெறுவதால் ஏற்படும் மாறுதல்கள் எவையேனும் இருப்பின், அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட தீர்ப்பு, தேதி, இவற்றைப் பற்றிக் குறிப்பிட்ட அறிக்கைகளையும் தாசில் தாருக்கு அனுப்பவேண்டும். இக்கட்டுகள் வரப்பெற்றவுடன் தாசில்தார் சம்பந்தப்பட்ட தாலூகாப் பதிவேடுகளில் மாறுதல் களைச் செய்து, சாதாரணமாக இத்தகைய மாறுதல்களைப் படங்களிலும், கணக்குகளிலும் பதிவு செய்ய வருவாய் ஆட்சி முறையில் வழக்கமாய் இருந்து வருகிற வருவாய்த் துறைக் கணக்குகளும், பதிவேடுகளும் எழுதி வைத்து வருவதற்குரிய விதிகளை அனுசரித்து வழக்கத்திற்கிசைந்த நடைமுறையை மேற்கொள்ள வேண்டும். உட்பிரிவுகள் முன்னமே அளக்கப் பட்டிருக்கிறபடியால் வருவாய் ஆய்வாளராயினும் தாலூகா நில அளவுப் பணியாளராயினும் அவற்றை மறுமுறையும் அளந்து சரி பார்க்க வேண்டியதில்லை. நில அளவை எல்லைகள் சட்டத் தில் 6ஆவது பிரிவின்கீழ் அறிவிப்புகள் முன்னமே வெளி யிடப்பட்டிருக்கிறபடியால், அவற்றை மறுமுறையும் வெளியிட வேண்டியதில்லை. ஆயினும், சந்தர்ப்பங்களுக்கேற்ப சட்டத் தின் 9 (2) அல்லது 10 (2) பிரிவின்கீழ் அறிவிப்பு கொடுக்க வேண்டும். நில அளவை செய்யப்பட்ட நகராட்சிகளில் வரு

வாய் ஆய்வாளரின் அலுவல் அல்லது தாலுகா நில அளவுப் பணியாளரின் அலுவலே நகர நில அளவுப் பணியாளர் மேற் கொள்ள வேண்டுமென்ற வேறுபாட்டைத் தவிர, இதே முறை யைக் கையாள வேண்டும். அவசியமானால், நகர நில அளவுப் பணியாளர், கிராமக் கணக்கர் வைத்திருக்கும் பதிவேடுகளில் மாறுதலைச் செய்வதுமின்றி, நகராட்சி அலுவலகத்தில் எழுதி வைக்கப்பட்டிருக்கும் பதிவேடுகளிலும் அவ்வாறே செய்வார். நகர அளவைப் பதிவுகளை எழுதி வைக்கப்பட்டுவரும் தாலுகாப் பதிவேட்டுத் தொகுப்புகளிலும் மாறுதல்கள் குறிக்கப்பட வேண்டும். இந்நடைமுறைகளையெல்லாம் முற்றிலும் அனுசரிப் பதற்கு முன்னதாக உரிமை பெறப்படுவதற்குச் சம்பந்தப்பட்ட கட்டுகளுக்கு முடிவு எண் கொடுக்கக்கூடாது.

7—5—1927 தேதி, 861, அ.ஆ.வரு.
30—4—1934 தேதி, 58 வ.து.க.செ.
17—3—1934 தேதி, 542, அ.ஆ.வரு.
28—11—1935 தேதி, 160, வ.து.க.செ.அச்சு
17—1—1944 தேதி, 26, அ.ஆ.வரு.வாலாய.
3—2—1944 தேதி, 4, வ.து.க.செ.அச்சு.
17—5—1957 தேதி, 2065, அ.ஆ.வரு.பல.

(iii) நில உரிமை பெறப்பட்ட நிலங்களின் விவரங்களைக் காட்டும் ஒரு நிலையான பதிவேடு எழுதி வைக்கப்பட்டு வருவ தற்காகச் சட்டத்தின் 16, 17 பிரிவுகளின்கீழ்ச் சுவாதீனம் செய்து கொள்ளப்பட்ட நிலங்களின் விவரத்தை XII-ஆவது இணைப்பு, 13 ஆவது படிவத்தில் பத்திரப் பதிவுத் துறைக்குத் தவறாமல் அனுப்ப வேண்டும். மறுமுறையும் நில அளவை செய்யப்பட்ட புலன்களின் பழைய நில அளவை எண்களையும் புதிய நில அளவை எண்களையும், உட்பிரிகளின் எண்களையும் விவர அறிக்கையின் 3 (இ) கட்டத்தில் குறிக்க வேண்டும். 1894 ஆம் ஆண்டு 1 ஆவது சட்டத்தின் III, IV பாகங்களின் கீழ் "நீதி மன்றம்" "கலெக்டரின்" தீர்ப்பை மாற்றி அமைத் தாலும் தீர்ப்பு அளிக்கப்பட்ட பின்னர் சட்டத்தின் 31 (3), (4) பிரிவுகளின்கீழ் வழங்கப்படும் ஈட்டுத் தொகையில் கலெக்டரால் மாறுதல் செய்யப்பட்டாலும் அவை ஒவ்வொன்றைப் பற்றியும் சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவுத் துறை அலுவலருக்குத் தெரி

யப்படுத்த வேண்டும். இந்தியப் பத்திரப் பதிவுச் சட்டத்தின் கீழ் இத் தீர்ப்புகளைத் தனியாகப் பத்திரப் பதிவு செய்யத் தேவையில்லை.

18—9—1916 தேதி, 2124, அ.ஆ.வரு.
18—7—1917 தேதி, 170, வ.து.க.செ.திர்.
16—12—1918 தேதி, 1692, வ.து.க.செ.பலவ.
2—12—1918 தேதி, 3809, அ.ஆ.வரு.
அ 20—11—1919 தேதி, 2440, அ.ஆ.வரு.
ஆ 28—11—1929 தேதி, 105 வ.து.க.செ.
17—5—1934 தேதி, 542, அ.ஆ.வரு.
30—4—1934 தேதி, 58, வது. க.செ.

பிரிவு IV ஈட்டுத் தொகை சொக்கமாக அளிக்கப்படுதல்.

20. பணத் தொகை அளித்தல் பற்றிய அறிவுரைகள்.— பொதுக் காரியங்களுக்காக உரிமை பெறப்பட்ட நிலத்திற்கு ஈடு அளிப்பதையும் அத்தகைய செலவுக் கணக்கைத் தணிக்கை செய்வதையும் ஒழுங்கு செய்வதற்கு உதவும் அறிவுரைகள் II-ஆவது இணைப்பில் உள்ளன. அவற்றில் முக்கியமானவை கீழ் வரும் பத்திகளில் அடங்கியுள்ளன.

26—7—1941 தேதி, 1698, அ.ஆ.வரு.பல.
18—9—1941 தேதி, 103, வ.து.க.செ.அச்சு.

21. சொக்கமாக ஈடு அளிப்பதில் அனுசரிக்க வேண்டிய விதிகள்.—( ) தீர்ப்பு அளித்ததும், கூடிய விரைவினில் ஈட்டுத் தொகையைக் கொடுத்துவிட வேண்டும். ஏனெனில், இச் சட்டத்தின் 34 ஆவது பிரிவின்கீழ் நிலத்தை அனுபோகம் செய்து கொண்ட தேதியிலிருந்து ஈட்டுத் தொகை கொடுக்கப் படும் தேதி வரையில் அந்த ஈட்டுத் தொகைக்கு வட்டி 4 சத வீதம் கொடுக்கப்பட வேண்டும். ஆதலால், கலெக்டராயினும் அவரது அதிகாரத்தை உரிய முறையில் பெற்றுள்ள வேறு அலுவலராயினும் 11 ஆவது பிரிவின் கீழ்த் தீர்ப்பு அளித்ததும் உடனடியாக அது சமயம் ஈட்டுத் தொகையைப் பெற உரிமை உள்ளவர்களாகிய நேரில் வந்திருப்பவர்களிடம் அல்லது அவர் களின் பிரதிநிதிகளிடம் கொடுத்துவிட வேண்டும்.

( ) அவ்வாறு நேரில் வராதவர்களுக்கு, தீர்ப்பு அளிக்கப் பட்டதையும் அவ்வகையில் கொடுக்கப்பட வேண்டிய தொகையை ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் தாங்கள் நேரில் அல்லது அதிகாரம் பெற்றுள்ள பிரதிநிதிகள் வழியாக பெற்றுக் கொள்ளாவிடில், அவ்வாறு வைப்புத் தொகையாக வைக்கப்படு மென்றும், வைக்கப்பட்ட தேதியிலிருந்து அத் தொகைக்கு வட்டி கொடுக்கப்படமாட்டாது என்றும் ஒரு அறிவிப்பு உட னடியாக அவர்கள் வசிக்கும் தாலுகா அல்லது உட்தாலுகாவின் தாசில்தார் அல்லது துணைத் தாசில்தார் வழியாக அனுப்ப வேண்டும். இவ் வறிப்பை இச் சட்டத்தின் 45 ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ளவாறு சேர்ப்பிக்க வேண்டும்.

(iii) கலெக்டர் கொடுக்கும் தொகையைப் பெற உரிமை உடையவர்கள் நேரில் வந்திருந்து பெற்றுக் கொண்டால் அல்லது அறிவிப்பை அனுசரித்தோ அல்லது அல்லாமலோ தாங்களாகவோ அல்லது தங்கள் பிரதிநிதிகள் வழியாகவோ தொகை பெற்றுக் கொள்ளுவதற்கு வருவார்களெனில் II ஆவது இணைப்பில், குறிக்கப்பட்டுள்ள 'இ' அல்லது 'இஇ' படிவத்தில் அவரிடமிருந்து பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு உடனடியாக முடியுமானால் ரொக்கமாகவோ அல்லது கருவூலத்திற்கு ஆணை பிறப்பித்தோ தொகையைக் கொடுத்துவிட வேண்டும்.

26—7—1941 தேதி, 1698, அ.ஆ.வரு.பல.
18—9—1941 தேதி, 103, வ.து.க.செ.அச்சு.

(iv) தொகையைப் பெற்றுக் கொள்ள ஏற்றுக் கொண்டவர்களுக்கு கலெக்டர் முன்பாக நேரில் வர இயலவில்லையெனில், தீர்ப்பு விவர அறிக்கையிலிருந்து 'இ' படிவப் பற்றுச் சீட்டின் அடிச்சிட்டைத் தயார் செய்ய வேண்டும். தொகை பெறுபவரின் கையெழுத்து இட வேண்டிய இடத்தை எழுதாமல் விட்டுவிட்டு "என் முன்னிலையில் இன்னாருக்குக் கொடுக்கப்பட்டது" என்பதற்குப் பதிலாக "இன்னாருக்குக் கொடுத்திடுக" என்று திருத்தி எழுத வேண்டும். அந்த அசல் பற்றுச் சீட்டைத் தொகை கொடுக்கப் படுவதற்காக தொகையைப் பெற்றுக் கொள்ள வேண்டியவர் வசிக்கும் ஊருக்குச் சேர்ந்த கீழ் நிலைக் கருவூல அலுவலருக்கு அனுப்ப வேண்டும். இத்தகைய தொகைகள் கொடுக்கப்

பட்டதைப் பற்றிக் கீழ் நிலைக் கருவூல அலுவலர் இத்தகைய ஆணைகள் அனுப்பிய அலுவலருக்குக் காலமுறை விவர அறிக்கை அனுப்ப வேண்டும்.[1]

[1]—9—1894 தேநி. 370, வ.து.க.செ.

(v) ஈட்டுத் தொகை பெற உரிமை உள்ளவர்கள் தங்களுக்குச் சேர வேண்டிய ஈட்டுத் தொகையை அஞ்சல் பண ஆணையில் அனுப்புமாறும் அஞ்சல் பண ஆணைச் செலவைத் தாங்கள் ஏற்றுக் கொள்வதாகவும், கோருவார்களெனில் அவ்வாறே அவர்கள் செலவில் ஈட்டுத் தொகையைப் பண அஞ்சல் ஆணையில் அனுப்புவதற்கு எத்தகைய ஆட்சேபனையு மில்லை. ஒவ்வொரு தனிப்பட்ட இனத்திலும் 50 ரூபாய்க்கு மேற்படாத சிறு தொகைகள் கொடுக்கப்பட வேண்டியிருக்கும் போது குறித்த தேதியில் தொகை பெற வேண்டியவர்கள் வாதிப்பார்களெனில் அல்லது அவர்கள் சட்டத்தின் 18 ஆவது பிரிவின் கீழ்ச் சிவில் நீதி மன்றத்துக்கு வழக்கை அனுப்புமாறு கோரிக்கை செய்யாதிருந்தார்கள் எனினும், அவர்களிடமிருந்து அரசினருக்கு வர வேண்டிய தொகை ஏதாவதிருந்தால், அத்தொகைக்குச் சரிகட்ட ஏற்பாடு செய்ய வேண்டும் அல்லது குறிப்பிட்ட தேதியில் அவர்கள் நேரில் வந்து தொகையைப் பெற்றுக் கொள்ளாவிடில், பண அஞ்சல் ஆணையில், அதற்குரிய செலவைக் கழித்துக் கொண்டு நிகர ஈட்டுத் தொகையை, அவர்களுக்கு அனுப்பப்படும் என்று அவர்களுக்கு அறிவிப்பு செய்ய வேண்டும். அஞ்சல் ஆணையில் தொகை அளிப்பதில் கீழ்க்கண்ட விதிகளை அனுசரித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

(1) பண அஞ்சல் ஆணைகளை உள்நாட்டுப் பண அஞ்சல் ஆணையில் தொகையளிப்பதற்கு மாத்திரமே மேற்கொள்ள வேண்டும்.

(2) அத்தகைய அஞ்சல் பண ஆணைகளின் ஒப்புதற் பகுதியில் மேற்குறித்த தொகையை "இன்ன தேதியில் பெற்றுக் கொண்டேன்" என்ற குறிப்புக்குத் தொடர்ச்சியாக எதற்காகத் தொகை அனுப்பப்படுகிறதென்பதைச் சுருக்கமாக எழுத வேண்டும். இவ்வகையில் தொகை பெறுபவரின் கையெழுத்தோ பெருவிரல் அடையாளமோ பெற்றுக் கொள்ளுவதற்குப் போதிய இடம் இருக்குமாறு இக்குறிப்பை எழுத வேண்டும். தொகை பெறுபவரால் கையெழுத்திடப்பட்ட அஞ்சல் பண ஆணையின்

பணம் பெற்றுக் கொண்டதைக் காட்டும் பகுதி கிடைத்ததும், முழு ஈட்டுத் தொகையும் அஞ்சல் பண ஆணைச் செலவும் விவரமாக குறிக்கப்பட்டுள்ள இ படிவப் பற்றுச் சீட்டுடன் இதை இணைத்து வைக்க வேண்டும். இந்தப் பற்றுச் சீட்டு இதன் பின்னர் உரிய முறையில் முடிவு செய்யப்படும் அஞ்சல் பண ஆணையின் பணம் பெற்றுக் கொண்டதாகவுள்ள சீட்டுடன் இந்தச் சீட்டைக் கணக்குத் துறையினர் அதில் குறிக்கப் பட்டுள்ள முழுத் தொகைக்கும் உரிய சரியான பற்றுச் சீட்டென ஒப்புக்கொள்வர்.

(3) 'இ' படிவ பற்றுபற்றுச் சீட்டில் "என் முன்னிலையில் ரொக்கமாக
கொடுக்கப்பட்டது" என்பதற்குப் பதிலாக
செக்காக
"அஞ்சல் பண ஆணையில் செலுத்தப்பட்டது" என்று மாற்றி எழுத வேண்டும்.

30—7—1940 தேதி, 1811, அ.ஆ.வரு.பல.
21—2—1941 தேதி, 17, வ.து.க.செ.அச்சு.
17—1—1931 தேதி, 6, வ.து.க.செ.

ஈட்டுத் தொகை அஞ்சல் ஆணையில் அனுப்பப்பட்டால், இது தீர்ப்பு விவர அறிக்கையில் குறிக்கப்பட்டு, அஞ்சல் பண ஆணையின் செலவு கழித்த எஞ்சிய தொகைக்குரிய பற்றுச் சீட்டை, அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவர் தீர்ப்பு விவர அறிக்கையில் குறிக்கப்பட்டுள்ள முழுத் தொகைக்கு உரித்தான பற்றுச் சீட்டாக ஒப்புக் கொள்வர்.

1—4—1914 தேதி, 977, அ.ஆ.வரு.பல.
25—11—1914 தேதி, 3428, அ.ஆ.வரு.பல.

(V) குறிப்பிட்டுள்ள தொகையைப் பெற உரிமையுள்ள வர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் தொகையை பெற்றுக் கொள்ளாவிடில் சட்டத்தின் 18ஆவது பிரிவின்கீழ் நீதி மன்றத் திற்கு ஈட்டுத் தொகையை வருவாய் வைப்புத் தொகையாக வைத்து, II ஆவது இணைப்பு 6ஆவது விதியில் கூறப்பட்டுள்ள வாறு உரிய முறையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

26—7—1941 தேதி, 1698, அ.ஆ.வரு.பல.
18—9—1941 தேதி, 103, வ.து.க.செ.அச்சு.
7—1—1897 தேதி, 17, வ.து.க.செ.

(vi) தொகை கொடுக்கப்பட்ட தேதி அல்லது வருவாய் வைப்புத் தொகையாக வைத்த தேதியை II ஆவது இணைப்பின் 'அ' படிவத்தில் குறிப்பிட்ட விவர அறிக்கையில் குறிக்க வேண்டும்.

26—7—1941 தேதி, 1698 அ.ஆ.வரு.பல.
18—9—1941 தேதி, 103, வ.து.க.செ.அச்சு.

(viii) சட்டத்தின் 31 (2) பிரிவில் கண்டுள்ள ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஈட்டுத் தொகையைக் கலெக்டர் நீதி மன்றத்தில் செலுத்திட வேண்டும். ஈட்டுத் தொகை முழுமையையும் பற்றி விவாதம் இருந்து, தீர்ப்புக்குச் சம்பந்தப் பட்டவர்களில் சிலர், அதை ஏற்றுக் கொண்டபோதிலும் முழுத் தொகையையும் நீதி மன்றத்திலேயே செலுத்திவிட வேண்டும். ஈட்டுத் தொகையில் ஒரு பகுதியைப் பொருத்த மட்டிலும் தகராறு இருக்குமானால் அந்தப் பகுதியை மாத்திரம் நீதி மன்றத்தில் செலுத்துவது போதும்.

எடுத்துக்காட்டு.

உரிமை பெறப்படும் நிலம் அ, ஆ, இ, ஈ என்னும் நால்வருக்கும் கூட்டுரிமையான சொத்து, முதல் மூவர், ஒவ்வொருவரும் சொத்தில் கால்பங்கு உரிமை கொண்டாடு கிறார்கள். ஆனால் ஈ என்பவர் மாத்திரம் தமக்கு அரை பங்கும், மற்ற மூவரில் ஒவ்வொருவருக்கும் ஆறில் ஒரு பங்குதான் உரிமை என்றும் வாதாடுகிறார். நில உரிமை பெறும் அலுவலர் ஈட்டுத் தொகையை அவர்கள் நால்வருக்கும் சமமாகப் பங்கிடுகிறார். அ, ஆ, இ மூவரும் தீர்ப்பை ஏற்றுக் கொள் கிறார்கள். ஆனால் ஈ என்பவர் அதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார். இங்கு முழு ஈட்டுத் தொகையைப் பற்றியும் தகராறு உள்ளது. ஏனெனில் ஈ-இன் வாதத்தை நீதி மன்றம் ஒப்புக் கொண்டால், மற்றக் கூட்டுரிமையாளர்களின் பங்கு அதற்கு ஏற்றவாறு மாறுபடும். எனவே, முழு தொகையையும் நீதி மன்றத்தில் செலுத்திவிட வேண்டும்.

எல்லா உரிமையாளர்களும் தீர்ப்பையும் அதன் பங்கீட்டையும் ஒப்புக் கொண்டு அவர்களில் ஒருவர், தாம் ஒரு பொறுப்பாளராக அல்லது வயது வராதவராக இருப்பதன் காரணமாக நிலத்தைப் பராதீனம் செய்யத் தகுதி அற்றவராக இருப்பின், அவரது பங்கை மாத்திரமே நீதி மன்றத்தில் வைப்பாக வைக்கத்தக்கது.

19—12—1940 தேதி, 3157, அ.ஆ.வரு.பல.
21—2—1941 தேதி, 17, வ.து.க.செ.அச்சு.

22. நீதி மன்றத்தில் தொகையைச் செலுத்துதல்.– II-ஆவது இணைப்பின் கீழ் அச்சிடப்பட்டுள்ள விதிகளின் 8-ஆவது விதியின் கீழ் நீதி மன்றத்தில் வைப்புத் தொகையாகச் செலுத்தப்படும் எல்லா தொகைகளிலும், நீதி மன்றத் தலைவர் பெயரில் பணச் செக்காக அனுப்பப்பட வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு கருவூல விதித் தொகுப்பின் முதல் தொகுதியின் 16-ஆவது கருவூல விதியின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள 45-ஆவது உள் விதியில் கூறப்பட்டுள்ள 10 ரூபாய் வரம்பு இத்தகைய பணச் செக்குகளுக்குப் பொருந்தாது. நிலத்தின் உரிமை பெறுவதற்கு நியமிக்கப்பட்ட தனி அலுவலர், பொறி இயல் பணித்துறையின் வழியாகத் தொகை கொடுப்பவர்களைப் போலவே கருதப்பட்டு அவர்களுக்கு கருவூல அலுவலர் மூலமாக அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவரால் செக் புத்தகங்கள் வழங்கப்படும். செக் புத்தகங்கள் வழங்கப்படாத சிவில் அலுவலர்கள் இ படிவத்தில் தங்கள் பெயர், தங்கள் வேலையின் பெயர் முதலியவற்றை எழுதித் தமது கையொப்பத்துடன் அதன் மீது கீழ்க்கண்டவாறு எழுத வேண்டும்.

யில் உள்ள நீதிமன்றத் தலைவர் அவரது ஆணை பெற்றவருக்காயினும் எழுத்தால்

எண்களால்

ரூபாய் காசு

மாத்திரம் கொடுத்திடுக.

ரூபாய்

பெறுபவர்

கருவூல அலுவலர்

தேதி வேலையின் பெயர்.

வருவாய் வாரிய நில ஆணைகள், தொகுதி 11.

திருத்தம்.

1. நில எடுப்பு நடைமுறை நூலின் 11 ஆவது பகுதியில் உள்ள வருவாய் வாரிய 90 ஆவது நில ஆணையின் 22 ஆவது பத்தியிலும் வருவாய் வாரிய நில ஆணைத்தொகுதி 11, 22 ஆவது பத்தியிலும் உள்ள

(1) "செக் புத்தகங்கள் வழங்கப்படாத சிவில் அதிகாரிகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "1894 ஆம் ஆண்டு நில எடுப்புச் சட்டம் 31(2) ஆவது பிரிவின் கீழ்க் கேட்புக் கடிதங்கள் அனுப்புவோர்களும் காசோலை மூலம் பணம் பெற்றுக் கொள்ள அதிகாரம் அளிக்கப்பெறுதவர்களும் சம்பந்தப் பட்ட நீதி மன்றம் போன்று அதே கருவூலத்தில் கணக்கு வைத்துக் கொண்டுள்ளவர்களுமாகிய அலுவலர்கள்" என்னும் சொற்கள் என்கள் அடைப்புக் குறிகளை அமைத்துக் கொள்க.

(2) கீழ்க்காணும் உற்பத்தி இறுதியில் சேர்த்துக் கொள்ளப் பட வேண்டும்:—

1893 ஆம் ஆண்டு நில எடுப்புச் சட்டம் 31 (2) ஆவது பிரிவின் கீழ்க் கேட்புக் கடிதங்கள் அனுப்புவோர்களும் காசோலை மூலம் பணம் பெற்றுக் கொள்ள அதிகாரம் அளிக்கப்பெறுதவர்களும் சம்பந்தப்பட்ட நீதி மன்றம் போன்று அதே கருவூத்தில் கணக்கு வைத்துக் கொள்ளாதவர்களுமாகிய அலுவலர்கள் சம்பந்தப்பட்ட நீதி மன்றத்தின் தலைமை அலுவலர் பெயரில் உரிய தொகைக்காக வங்கி வரைவோலை பெற்று அந்நீதி மன்றத்திற்கு அதை மூன்று பிரதிகளில் உள்ள 'ஈ' படிவத்துடன் அனுப்ப வேண்டும்.

11. 1894 ஆம் ஆண்டு நில எடுப்புச் சட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலத்திற்கு இழப்பீடு கொடுப்பதற்கான நில எடுப்பு நடைமுறை நூலின் 11 ஆவது இணைப்பு விதிகளில் உள்ள 9 ஆவது விதியிலும் 1894 ஆம் ஆண்டு 1 ஆவது நில எடுப்புச் சட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலத்திற்காக இழப்பீடு கொடுப்பதற்காக, வருவாய் வாரிய நில ஆணைகள் 11 ஆவது தொகுதி 90 ஆவது நில ஆணையில் 11 ஆவது இணைப்பின் விதிகளுள் 8 ஆவது விதியிலும் உள்ள

"சட்டத்தின் கீழ் நீதி மன்றத்தில் வைப்புத் தொகைக்காகச் செலுத்தப்படும் தொகைகள் நீதி மன்றத் தலைவருக்குச் செக் மூலம் செலுத்தப்பட வேண்டும். அவை ஆணையினுல் அளிக்கப்படத் தக்கவையாய்க் குடிமுறை நீதி மன்ற வைப்புத் தொகைக் கணக்கில் வரவு வைக்கப்பட வெண்டும். செக்குகள் மூன்று பிரதிகளில் உரிய முறையில் நிரப்பப்பட்ட "ஈ" படிவப் பற்றுச் சீட்டுடன் நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இதன் ஒரு பிரதி நீதி மன்றப் பதிவுக் கட்டில் வைத்துக் கொள்ளப்பட்டு மற்ற இரண்டு பிரதிகள் நீதி மன்றத் தலைவர் கையொப்பமுடன் மாவட்ட ஆட்சியருக்குத் திருப்பி அனுப்பப் படும். அவர் ஒரு பிரதியைத் தாம் வைத்துக் கொண்டு மற்றத் தொகை கொடுக்கப்பட்ட மாதத்திய கணக்குடன் மாநிலக் கணக்காய்வுத் தலைவருக்கு அனுப்புவார்".

என்னும் சொற்றொடர்களுக்குப் பதிலாக சட்டத்தின் கீழ் "நீதி மன்றத்தின் வைப்புத் தொகைக்காகச் செலுத்தப் படும் தொகைகள் நீதி மன்றத் தலைவருக்கு காசோலை மூலமாகவோ வங்கி மூலமாகவோ "இ" படிவச் செலவுச் சீட்டிலோ தக்கவாறுக நீதி மன்ற வைப்புத் தொகைகளுக்கு நீதி மன்றத்தின் ஆணையின்படி குடி முறை நீதி மன்ற வைப்புத் தொகையில் வரவு வைக்கப்பட்டத்தக்க வகையில் செலுத்தப்பட வேண்டும். காசோலையிலோ வங்கி வரைவோலையிலோ "இ" படிவச் செலவு சீட்டுகளோ, தக்கவாறுக மூன்று பிரதிகளில் உரிய முறையில் நிரப்பப்பட்டவையும் 'ஈ' படிவத்திலுள்ளவையுமான பற்றுச் சீட்டுகளுடன் அனுப்பப்பட வேண்டும். இவற்றில் ஒரு பிரதி நீதி மன்றத்தின் பதிவுக் கட்டில் வைக்கப்பட்டு மற்ற இரு பிரதிகள் உரிய முறையில் கையொப்பமிடப்பட்டு மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்படும். அவர் ஒரு பிரதியைத் தாம் வைத்துக் கொண்டு மற்றப் பிரதியை பணம் கொடுக்கப்பட்ட மாதத்திய கணக்குகளுடன் மாநிலக் கணக்காய்வுத் தலைவருக்கு அனுப்புவார்." என்னும் சொற்றொடர்களை அமைத்துக் கொள்க.

இந்த சீட்டு மூன்று பிரதிகளில் அலுவல் பெயர் ஈ படிவப் பற்றுச் சீட்டுடன் சம்பந்தப்பட்ட நீதி மன்றத்திற்கு அனுப்பப் படும்.

17—3—1896 தேநி, 91, வ.து.க.செ.
12—11—1941 தேநி, 2586, அ.ஆ.வரு.பல.
26—7—1941 தேநி, 1698, அ.ஆ.வரு.பல.
11—5—1896 தேநி, 164, வ.து.க.செ.
21—11—1941 தேநி, 3155, வ.து.க.செ.பலவ.
18—9—1941 தேநி, 103, வ.து.க.செ.அச்சு.
15—3—1957 தேநி, 161, அ.ஆ.வரு.வாலாய

பிரிவு ஈட்டுத் தொகையை ரொக்கமாக விற்று மற்ற வகையில் கொடுக்க நிர்ணயம் செய்தல்.

23. பொது விதிகள்.—(i) பிரிக்க முடியாத எஸ்டேட்டில் உள்ள நிலத்தின் உரிமையை நில உரிமைச் சட்டத்தின்கீழ்ப் பெறும் பொது சமயக் காரியத்திற்கு அல்லது பொது அறநெறிச் செயலுக்குப் பெறப்பட்டால் ஈட்டுத் தொகை ரொக்கமாகச் சம்பந்தப்பட்ட எஸ்டேட்டின் உரிமையாளருக்கு அளிக்கப்பட வேண்டும். ஆனல் வேறு எக்காரியங்களுக்காகவாயினும் நிலத்தின் உரிமை பெறப்பட்டால் அதற்குரிய ஈட்டுத் தொகை இச்சட்டத்தின் 31(2)-ஆவது பிரிவின்கீழ் நீதி மன்றத்தில் வைப் பாக வைக்கப்படவேண்டும்.

(ii) சட்டத்தின் II -ஆவது பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட ரொக்கத் தொகைக்குப் பதிலாக 31-ஆவது பிரிவு மூன்றாவது உட்பிரிவின்கீழும் நான்காவது உட்பிரிவுகளின்கீழும் சந்தர்ப்பத் திற்கேற்றவாறு கீழ்க் காணும் [(iii)-ஆவது பிரிவிலும் ( )-ஆவது பிரிவிலும் பொதுவாக 20-ஆவது பத்தியிலும் வகுக்கப்பட்டள்ளவாறு] பரிவர்த்தனைக்கு ஈடாக, மற்ற நிலத்தையோ அல்லது (25-வது பத்தி ( ) ஆ உட்பிரிவு) கிராம வசூல் கழிவாக (25-ஆவது பத்தியின்கீழ்) நிலத் தீர்வையை ஒப்படையாகக் கொடுக்க அல்லது தொகை பெறு பவர் இனம் பெற்றவர் அல்லது ஜமீந்தாராராக இருப்பாரெனில் (30-ஆவது பத்தியின் குறிப்பின்கீழ்) ஜமீன் உரிமை வரியை அல்லது இனம் விடுவரியை நிரந்தரமாகக் குறைக்க ஏற்பாடு செய்யலாம். உரிமை அளிக்கப்படாத எல்லாப் பணி இனம்களுக் குரிய ஈட்டுத் தொகையை, மேற்கூறப்பட்டுள்ள ஏதாவதொரு வழியில் தீர்மானிக்க வேண்டும் என்பது விதிமுறை. ஏனெனில், ஈட்டுத் தொகை ஒரே தடவையில் கொடுத்து விடுவது பணி நடைபெறுமல் நின்று விடுவதற்குக் காரணமாகக்கூடும்.

(iii) மேற்கூறப்பட்ட பிரிவின் 3-ஆவது உட்பிரிவின் கீழ் உரிமை பெறப்பட்ட நிலத்தில் ஒருவருக்கு வரையறுக்கப் பட்ட உரிமை மட்டுமே இருந்து நிலத்தைப் பற்றி எத்தகைய உடன்படிக்கையும் செய்யத் தகுதியற்றவராக அல்லது ஒரு பகுதி உடன்படிக்கை மாத்திரம் செய்யத் தகுதியுள்ளவராக அவர் இருப்பாரெனில் உதாரணமாக, ஒருவர் ஒரு கோவிலின் அறப் பாதுகாப்பாளராக இருப்பாரெனிலும் ரொக்கமாக ஈடு அளிக்கப் படுவதற்குப் பதிலாக மேற்சொன்ன ஏற்பாடுகளில் ஏதாவது படிவத்தில் மேலனுப்ப வேண்டும்.

(iv) சட்டத்தின் 31-ஆவது பிரிவின் 4-ஆவது உட்பிரிவிற்கு இணங்கக்கூடிய வகைகளில், உதாரணமாக நிலத்தின் உரிமையாளர், உடன்படிக்கை செய்துகொள்ளத் தகுதியுள்ளவராக இருந்து, கலெக்டர் அலுவல்களைச் செய்யும் அலுவலர் மாவட்டக் கலெக்டரின் முன் ஒப்பளிப்பைப் பெற்று, அரசுக்குடி முறையில் பரிவர்த்தனையில் நிலம் கொடுக்கத் தீர்மானிப்பானில் மாநில அரசினரின் ஒப்பளிப்பின்றியே கலெக்டர் தமது சொந்த அதிகாரத்தைக் கொண்டு அவ்வாறே முடிவு செய்யலாம். 'கிராமத் தொழிலாளர் அல்லது கிராம அலுவலரின் இனம் பெற்றிருப்பவர்களைப் பொறுத்த வரையில் 31 (4) பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கத் தகும். ஏனெனில் அவர்கள் இனம் நிலம் சம்பந்தமாகத் தனிப்பட்டவர்களுடன் எத்தகைய உடன்படிக்கையும் செய்துகொள்ளத் தகுதியற்றவர்களாயிருந்த போதிலும், மாநில அரசினருடன் சட்ட முறையில் செல்லத்தக்க உடன்படிக்கை செய்து கொள்ளத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்கள்'.

15—1—1845 தேதி, 10 வ.து.க.செ.
30—11—1894 தேதி, 530, வ.க.செ.
7—1—1895 தேதி, 8, அ.ஆ.
6—11—1897 தேதி, 5715, அ.ஆ.ப.ல.
1—6—1895 தேதி, 176, வ.து.க.செ.
16—11—1897 தேதி, 402, வ.து.க.செ.அச்சு.
24—3—1902 தேதி, 65, வ.து.க.செ.

(v) 1894ஆம் ஆண்டு 1ஆவது சட்டம் 31ஆவது பிரிவு (3), (4) உட்பிரிவுகளின்கீழ்ப் பரிவர்த்தனையாகக் கொடுக்கப்பட வேண்டிய நிலம் மாநில அரசினர் வசமுள்ள நிலங்களிலிருந்து சாதாரணமாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அங்கு உண்மையில் பயிர் செய்து வசித்து வரும் விவசாயிகளின் நியாயமான தேவைகள் கெடுதலாகப் பாதிக்கப்படாதிருப்பின், நில ஒப்படையில் சலுகை விதிகளின்கீழ் முதல் உரிமை பெறத்தக்க சலுகைக்காகச் செய்து கொள்ளப்படக்கூடிய உரிமைக் கோரிக்கையைத் தள்ளுபடி செய்து இவ்வாறு பரிவர்த்தனையாக நில ஒப்படை செய்யவேண்டும்.

(v)[3] உரிமை அளிக்கப்பட்ட இனம்கள், அல்லது 'உரிமை அளிக்கப்படாத சொந்த இனம்கள், ஜமீன் நிலம்' அல்லது அரசுக்குடி முறை நிலம் சட்டத்தின்கீழ் உரிமை பெறப்பட்டால் அவற்றிற்குப் பதிலாக மற்ற நிலங்களை பரிவர்த்தனையாக அளிப்பது முற்றிலும் கலெக்டரின் யுக்தத்திற்கு விடப்பட்டிருக்கிறது. இத்தகைய சந்தர்ப்பங்களில் புதிதாகக் கொடுக்கப்

படும் எல்லா நிலமும் அரசுக்குடி முறையில் வழங்கப்பட வேண்டும். 25-வது பத்தியில் கூறப்பட்டுள்ளவற்றை அனுசரித்தல்லாமல் இனம் உரிமை கிராம வசூல் கழிவு அல்லது குறிப்பிட்ட தீர்வையைத் தள்ளிக் கொடுத்தல் அல்லது மாநில அரசாங்க வருவாயினின்று நிலையான வேறெந்தக் கழிவும் ஈடாக அளிக்கப்படுதல் தடை செய்யப்பட்டிருக்கிறது.

31—6—1895 தேதி, 176, வ.து.க.செ.
6—9—1895 தேதி, 325, வ.து.க.செ.
30—7—1896 தேதி, 3482, வ.து.க.செ.பலவ.
10—6—1902 தேதி, 127, வ.து.க.செ.
24—3—1902 தேதி, 65 வ.து.க.செ.

குறிப்பு.— மேற்கூறப்பட்ட விவரங்களுடைய நிலங்களுக்குப் பதிலாகப் பரிவர்த்தனையாக அளிப்பதற்குத் தளிப்பட்டவர்களின் நிலங்களின் உரிமை பெறக் கூடாது. சமய நிலையங்களின் வசத்திலோ அல்லது அற நிலையங்களின் வசத்திலோ உள்ள அரசுக்குடி நிலங்களை இச்சட்டத்தின் கீழ்ப் பொதுக்காரியங்களுக்காக உரிமை பெறப்பட்டால், பரிவர்த்தனையால் வசதியாகக் கொடுக்கத்தக்க யாதொரு நிலமும் மாநில அரசின்ர் வசம் இல்லையெனில் இச்சட்டத்தின் 31 (2) ஆவது பிரிவின் கீழ் ரொக்கமாகக் கொடுக்கப்பட வேண்டிய ஈட்டுத் தொகையை நீதி மன்றத்தில் வைப்பாகச் செலுத்திவிட வேண்டும்.

12—5—1902 தேதி, 415, அ.ஆ.
10—6—1902 தேதி, 127, வ.து.க.செ.

(vii) கலெக்டர் பரிவர்தனையாக நிலம் கொடுக்க ஏற்பாடு செய்வதில் ஈட்டுத் தொகை அளிக்கப்பட்டவருடன் ஏற்பாட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, தொகைக்குப் பதிலாக பரிவர்த்தனையாக நிலம் பெறும் உரிமையை ஏதேனும் கைமாறு பெற்றுக்கொண்டு வேறு எவருக்கேனும் அவர் அளித்திருப்பாரெனில் அத்தகையவருடன் மேலே குறிப்பிட்ட பரிவர்த்தனை நடவடிக்கை ஏற்பாடு செய்துகொள்ளக்கூடாது.

(viii) பொதுவாக ரொக்க ஈடன்றி மற்ற வகையில் ஈடு அளிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் சட்ட முறையில் கலெக்டரின் அலுவல்களைச் செய்யும் அலுவலர் செய்யலாம். ஆனால் இத்தகைய ஏற்பாடுகளின் நிபந்தனைகள் மாவட்டக் கலெக்டரால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் அவரால் மாற்றி அமைக்கப்படுவதற்கும் உட்பட்டன. ஆனாலும், உரிமை பெறப்பட்ட நிலத்தின் உரிமை மாற்றம் முதலியவற்றின் உடன்படிக்கை செய்யத்தக்கவர்களுடன் அரசுக்குடி முறையில் பரிவர்த்தனையாக நிலம் கொடுக்க கலெக்டர் ஏற்பாடு செய்யும் வகையில் அல்லது ஈட்டுத் தொகை ஆண்டு தோறும் கொடுக்கப்படும் கிராம வசூல் கழிவுத் தொகையாக இருந்தாலும் உரிமை பெறப்பட்ட நிலத்தின் தீர்வைக்குச்

சமமாகக் குறிப்பிட்ட தீர்வை தள்ளிக்கொடுக்கப்படுவதாக இருந்தாலும், இவற்றிலன்றி மேலே குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கு ஒப்பளிக்கும் இறுதி அதிகாரம் மாநில அரசினரே வகிக்கின்றனர்.

11—2—1941 தேதி, 320, ஆ.வரு.பல.
17—3—1941 தேதி, 35, வ.து.க.செ.அச்சு.

(ix) பரிவர்த்தனையில் நிலம் அளிப்பதில் ஏற்படக்கூடிய காலதாமதத்தைக் குறைக்கும் பொருட்டு வருவாய்த் துறை அலுவலர்கள் இச்சட்டத்தின் 4-வது பிரிவின்கீழ் அறிக்கை தயார் செய்ய உரிமை பெறப்படும் நிலத்தின் பரப்பு மதிப்பு முதலிய விவரங்களைச் சேகரிக்கும்போதே, உரிமை அளிக்கப்படாத பணி இனம் பெற்றவருக்குக் கொடுக்கப்பட அதே கிராமத்திலோ அல்லது அருகிலுள்ள கிராமத்திலோ தக்க நிலம் இருக்கிறதா என்பதை விசாரித்தறிந்து கொள்ள வேண்டும். அவர் இந்த விவரத்தை உரிமை பெறப்படும் இனம் நிலத்தைப் பற்றிச் செய்யும் அறிக்கையிலோ பின்னர் உடனடியாகத் தனிப்பட்ட அறிக்கையிலோ குறிப்பாகத் தெரிவிக்க வேண்டும்.

24. **ரொக்கமாகவன்றி மற்ற வகையில் ஈடு அளிக்கும்போது வட்டி கொடுத்தல்.**—ரொக்க ஈடு அளிக்கப்படாமல் நிலத்தின் உரிமையாளருக்கு வேறு நிலங்களோ அல்லது சட்டத்தின் 31 (3) பிரிவின் கீழ் மற்ற வகையில் ஈடு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டால், அத்தகைய ஏற்பாட்டை அனுசரித்து வட்டியும் கொடுக்கப்படவேண்டும் என்றிருந்தால் மாத்திரம் நில உரிமையாளருக்கு வட்டி பெறுவதற்கு உரிமை உண்டு. ஆனால் சட்டத்தின் 31 (3) பிரிவின்கீழ்த் தீர்மானிக்கப்பட்டுள்ள ஈடு அளிப்பதில் மாநில அரசாங்கத்தால் தகாத காலதாமதம் ஏற்பட்டு அத்தாமதத்திற்கு மாநில அரசாங்கத்தார் பொறுப்பாளர் எனில் அன்றிச் சட்டத்தின் 34-வது பிரிவின்கீழ் வட்டி கேட்கக்கூடாது என்ற நிபந்தனை சட்டத்தின் 31 (3) பிரிவின் கீழ்ச் செய்துகொள்ளும் எந்த உடன்படிக்கையிலும் வழக்கமாக இருக்க வேண்டும்.

25. **உரிமை அளிக்கப்படாத பணி இனங்களுக்கு ஈடு வழங்குவதற்குரிய தனி விதிகள்.**—(i) சமய சம்பந்தமான இனங்களிலும் அறநெறி சம்பந்தமான இனங்களிலும் மாநில அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய தீர்வை ஒப்படையே முக்கிய அம்சமாகும்.

ஈட்டினைத் தீர்மானிக்கும்போது இந்த உரிமை அல்லது அதற்குச் சமமான தொகையை இனம் பெற்றவருக்குச் சேருமாறு செய்ய வேண்டும். ஆகவே, இந்தப் பத்தியில் ( )-ஆவது உட்பிரிவில் கூறப்பட்டுள்ள தனிச் சந்தர்ப்பங்களைத் தவிர இனம் பெற்றவருக்கு இனம் நிர்ணயம் செய்யப்படாததாக இருப்பின், இனம் வழங்கப்பட்ட தேதியில் அவருக்குச் சேரவேண்டியதாக உறுதியளிக்கப்பட்ட மாநில அரசாங்கத் தீர்வை உரிமையைக் கூடுதல் குறைவின்றித் தொடர்ந்து கிடைத்து வருமாறு செய்ய வேண்டியது அவசியம். இதனைக் கிராம வசூல் கழிவாகவோ அல்லது இனம் பெற்றவருக்கு உரித்தான மாநில அரசாங்கத் தீர்வைக்குச் சமமாக நிலையான தீர்வை தள்ளிக் கொடுத்தலாகவே அமைத்துக் கொள்ள வேண்டும். குடிவார உரிமைக்குச் சேர வேண்டிய ஈட்டுத் தொகையை நிலத்தைப் பற்றி உடன்படிக்கை செய்துகொள்ளத் தகுதியுள்ளவர்களுக்கு, அவர் இனம் பெற்றவராயிருப்பினும், அவ்வாறு இல்லாவிடினும் அவருக்குக் கொடுத்து விட வேண்டும். இல்லையேல், உரிமைக்கான ஈட்டுத் தொகையை நீதிமன்றத்தில் வைப்பாகச் செலுத்திப் பின்கூறிய வகையில் தற்காலிக கிராம வசூல் கழிவுக்கான யோசனைகளைக் கீழ்வரும் 28ஆவது பத்தி 2ஆவது குறிப்பை அனுசரித்து எழுதி அனுப்ப வேண்டும்.

குறிப்பு.—உரிமை அளிக்கப்படாத இனங்களாக உள்ள முழு இனம் கிராமங்களில் இனம் பெற்றவரின் நிகரத் தீர்வை உறுதியளிக்கப்பட்ட தீர்வையைக் காட்டிலும் அதிகமாக இருக்கலாம். இனம் பெற்றவரின் வருமானத்தை நில உரிமை பெறும் நடைமுறை நூலின் III-ஆவது அத்தியாயம்* 3-ஆவது பத்தியில் கூறப்பட்டுள்ளவாறு தீர்மானிக்க வேண்டும். உரிமை பெறப்பட்ட நிலத்தின் உறுதியளிக்கப்பட்ட தீர்வையைக் கிராம வசூல் கழிவாக மாற்றி அமைக்க வேண்டும். உறுதி அளிக்கப்பட்ட தீர்வைக்கும் உரிமை பெறப்பட்ட நிலத்தின் மொத்த வருமானத்துக்கும் உள்ள வித்தியாசத்தை முதலீட்டுத் தொகையாக்கப்பட்டு ஈடு ரொக்கமாக அளிக்கப்பட வேண்டும்.

5—12—1944 தேதி, 2412, அ.ஆ.வரு.பல.
22—12—1944 தேதி, 43 வ.து.க.செ.அச்சு
26—9—1928 தேதி, 2231, அ.ஆ.வரு.பல.

(ii) (அ) ஆனால் உரிமை பெற்ற அறுபது ஆண்டுகளுக்குள் கொடுக்கப்பட்டுள்ள சமயம், அறநெறி சம்பந்தமான உரிமை அளிக்கப்படாத இனங்களிலும் உரிமை அளிக்கப்படாத கிராமப் பணி அல்லது கிராமத் தொழில் இனங்களிலும், மூலப் பட்டயத்தை அனுசரித்து நிலமும் அதன் தீர்வையும் இரண்டும் அளிக்கப்பட்டன என்பதற்குத் தகுந்த காரணங்கள் இருப்பின் (உதாரணமாக அவ்வாறு அளிக்கப்பட்டபோது நிலம் யார்

*XVII ஆவது அத்தியாயம்

வசத்திலுமின்றித் தரிசாயிருந்தால்), இனம் பெற்றவருக்குச் சேரவேண்டிய தீர்வையைத் தொடர்ந்து கொடுப்பதுடன் பணி சரிவர நடைபெறும் பொருட்டு நிலத்தின் வருமானத்தையும் தொடர்ந்து அளிக்க ஒரு நிலையான வழிவகை செய்யவேண்டும். மேலே 14 ஆவது பத்தியில் குறிக்கப்பட்டுள்ளவாறு ஈட்டுத் தொகைக்குச் சமமான மதிப்புள்ள மாநில அரசினர் வசமுள்ள நிலம் ஒன்றைத் தெரிந்தெடுத்து அத்தகைய நிலத்தைக் கீழ்க்காணும் அறிவுரைக்கு ஏற்ப இனம் உரிமை முறையில் அளித்தலே மிகவும் வசதியான முறையாகும் :—

(1) தெரிந்தெடுக்கப்பட்ட நிலத்தின் தீர்வையும் சட்டத்தின் கீழ்ப் பெறப்பட்ட இனம் நிலத்தின் தள்ளிக் கொடுத்த தீர்வையும் சமமாக இருந்தால், முழுத் தீர்வையும் தள்ளிக் கொடுத்துப் புதிதாகக் கொடுக்கப்படும் நிலம் இனம் உரிமையில் அளிக்கப்படவேண்டும்.

(2) தெரிந்தெடுக்கப்பட்ட நிலத்தின் தீர்வை உரிமை பெறப்பட்ட இனம் நிலத்தின் தள்ளிக் கொடுத்த தீர்வையை விடக் குறைந்திருக்குமானால் தெரிந்தெடுக்கப்பட்ட நிலத்தை அவருக்கு எத்தகைய தீர்வையுமின்றி இனம் நிலமாகக் கொடுத்து நிகரத் தொகையை இனம் பெற்றவருக்குக் கிராம வசூல் கழிவாக அனுமதிக்க வேண்டும்.

(3) தெரிந்தெடுக்கப்பட்ட நிலத்தின் தீர்வை எடுத்துக் கொள்ளப்பட்ட இனம் நிலத்தின் தள்ளிக்கொடுத்த தீர்வையை விட அதிகமாயிருப்பின், இரண்டிற்கும் உள்ள வித்தியாசத் தொகையைப் பரிவர்த்தனையாகக் கொடுக்கப்படும் நிலத்தின்மீது ஜோடி தீர்வையாக விதிக்கவேண்டும். இதைத் தவிர அந்நிலத் திற்குத் தீர்வை இல்லை.

(ஆ) பரிவர்த்தனை நிலமாகக் கொடுக்க மாநில அரசினர் வசம் நிலம் எதுவும் இல்லையெனில் சந்தர்ப்பத்துக்கேற்ப, ஆண்டுதோறும் கொடுக்கப்படும் அரசிறைக் கழிவாகவோ அல்லது உரிமை பெறப்பட்ட இனம் தீர்வைக்குச் சமமான நிலையான் தீர்வை தள்ளிக் கொடுத்தலாகவோ தேவையானால் அதனுடன் இனம் பெற்றவர் நிலத்தைப் பற்றி எத்தகைய உடன்படிக்கையும் செய்துகொள்ளத் தகுதியுடையவராயிருப் பின், அவருக்கு ஒரே தவணையில் ரொக்கமாகவோ கொடுப்பது அல்லது நீதிமன்றத்திலோ மேலே 14-வது பத்தியின்கீழ் அளிக்கப்பட்ட தொகையையும் வைப்பாகச் செலுத்துமாறு

அதற்குப் பொருத்தமாகும். ஆனால், உரிமை பெற்ற நிலத்தின் மதிப்பு அதிகமாயிருந்தால், தனிப்பட்ட நிலத்தைச் சட்டத்தின் கீழ் உரிமை பெற்று அந்த இனம் உரிமை முறையில் மேற்கூறிய மூன்று வகைகளில் ஒரு வகையில் வழங்கலாம்.

18—6—1918 தேநி. 124, வ.து.க.செ.
26—9—1928 தேநி. 2231, அ.ஆ.வரு.பல.

26. நீர்வையின் ஒப்படை செய்வதில் நிலத்தை அனுபோகம் செய்பவரின் இசைவு தேவை.—அனுபோகம் செய்யப்பட்டு வரும் நிலத்தைப் பொறுத்தவரையில் சாதாரணமாக அனுபோகம் செய்பவரின் அனுமதியின்றி அல்லது சட்டத்தின்கீழ் எடுக்கப் பட்டதால் உரிமை அளிக்கப்படாத பணி இனம் அல்லாத வேறெதிலும் அரசினருக்குச் சேரவேண்டியதான நீர்வையின் ஒப்படையை ஈட்டுத் தொகையாகக் கொடுக்கக்கூடாது.

28—1—1897 தேநி. 137, வ.து.க.செ.
24—3—1902 தேநி. 65 வ.து.க.செ.

27. இப்பிரிவின்கீழ் நடவடிக்கைகளைப் பதிவு செய்தல்.—(i) உரிமை அளிக்கப்படாத பணி இனம் நிலத்தைத் தவிர இதர இனம் நிலத்தின் ஒரு பகுதியைச் சட்டத்தின்கீழ் உரிமை பெறப்பட்டால், இவ்வாறு உரிமை பெற்றதைப் பற்றி உரிமைப் பட்டயத்தில் பதிவு செய்ய வேண்டும். முழு நிலத்தின் உரிமையும் பெறப்பட்டால் உரிமைப் பட்டயம் ரத்து செய்யப்பட வேண்டும். அல்லது அது இல்லாவிட்டால், இதை மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்து அவ்வுரிமையைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

( ) உரிமை அளிக்கப்படாத பணி இனங்கள் முறையில் (சமய, அறநெறி சம்பந்தமான இனங்கள் உட்பட) சட்டத்தின் கீழ் உரிமை பெறப்பட்டால், உரிமைப் பத்திரத்தைத் தாக்கல் செய்யுமாறு இனம் பெற்றவரைக் கேட்கவேண்டும். அதை அவர் கொண்டு வந்ததும், அதில் கீழ்க்கண்டவாறு தக்க நிருத்தத் துடன் கலெக்டர் ஒரு சான்று எழுத வேண்டும். "இந்த உரிமைப் பத்திரத்தில் அடங்கிய நிலத்தில்—ஏக்கர் நிலம் 1894-ம் ஆண்டு —அல்லது சட்டத்தின்கீழ் மாநில அரசினரால் உரிமை பெறப் பட்ட தென்றும், அதற்கு ஈடாக இனம் பெற்றவருக்கு இந்த உரிமைப் பத்திரத்தில் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்படுத்தி

கிராமத்தின் எண் நில அளவை நிலத்தில் தீர்வை
கிராமத்தின் நில அளவை எண் நிலத்திற்கு
தீர்வையின்றி
விதிக்கப்பட்ட நிலம் கொடுக்கப்பட்டுள்ளது
இனம் விடுவரியுடன்
ஆண்டுதோறும் கொடுக்கத்தக்கதான் ரூபாய் மதிப்புள்ள
வருவாய் ஒப்படை வழங்கப்பட்டுள்ளது.

உரிமைப் பத்திரம் தாக்கல் செய்யப்படாவிடில், இதே மாதிரியான வடிவத்தில் இனம் பெற்றவருக்குக் கொடுக்கப்பட்ட நிலத்தின் உரிமையைப் பற்றியும் வருவாய் ஒப்படை பற்றியும் உள்ள நிபந்தனைகள் விவரமாக எழுதப்பட்ட ஒரு தனிப்பட்ட சான்று எழுதி இனம் பெற்றவருக்கு வழங்க வேண்டும்.

(iii) பரிவர்த்தனையாக நிலங்கள் அளிக்கும்போதெல்லாம் பத்திரம் பதிவுத்துறைப் பதிவுகளில் குறித்துக்கொள்ளப்படும் பொருட்டு, XII-ஆவது இணைப்பு 15-ஆவது படிவத்தில் கண்டுள்ள ஒரு அறிக்கையைக் கலெக்டர் அத்துறைக்கு அனுப்ப வேண்டும்.

(iv) புதிதாகக் கொடுக்கப்பட்ட நிலங்கள் சம்பந்தமான எல்லா ஆணைகளையும் 3 ஆவது எண் கிராமக் கணக்கில் பதிவு செய்யவும், நிலையான அ.ஆ. பதிவேடுகளில் தேவையான மாறுதல் களைச் செய்யும் கிராம அலுவலர்களுக்குக் கட்டளை பிறப்பிக்க வேண்டும். உரிமை பெறப்பட்ட நிலம் உள்ள கிராமத்தில் அல்லது வேறு கிராமத்தில் பரிவர்த்தனையாக நிலம் அளிக்கப்பட்டால், அதைப் பற்றி பரிவர்த்தனையாக நிலம் கொடுக்கப்பட்ட கிராமக் கணக்குகளில் பதிவு செய்வதோடு, கொடுக்கப்பட்ட புலன்களின் விவரங்களைத் தேவையானால் அ-பதிவேட்டிலும் குறிக்க வேண்டும் ஜமாபந்தி நடத்தும் அலுவலர்கள் மேற்கூறப்பட்ட அறிவுரைகளில் கண்டவாறு சரிவரக் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருக் கின்றதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

(அ) 28—11—1894 தேதி, 519. வ.து.க.செ.
24—3—1902 தேதி, 65, வ.து.க.செ.

28. தொக்கமாகவன்றி மற்ற வகையில் ஈடு அளிப்பதில் தகாத கால தாமதம் இருப்பின் மேற்கொள்ள வேண்டிய நடைமுறை :—தொக்கமாகவன்றி மற்ற வகையில் ஈடு அளிப் பதற்கு ஏற்பாடு செய்ய முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ள எந்த வகையிலும், அத்தகைய ஏற்பாடு நீர்ப்பு அளிக்கப்பட்ட ஒரு நியாயமான காலத்திற்குள் சாதாரணமாக ஆறு மாதத்திற்குள்

நிறைவேற்றப்படாவிடில், கலெக்டர் மேலே கூறப்பட்டுள்ள 23ஆவது பத்தி (vi) ஆவது உள்பிரிவின்கீழ் அது அட்ங்குமானால் ஈட்டுத் தொகையை ரொக்கமாய்க் கொடுத்திட வேண்டும். அல்லது அது மேலே கூறப்பட்ட 25 ஆவது பத்திக்கு உட்பட்டதானால், சட்டத்தின்; 31 (2) பிரிவின்கீழ் மேலே கண்டுள்ள 14 (i) (1) ஆவது பத்தியின் கீழ்த் தீர்ப்பு வழங்கப் பட்ட தொகையை நீதி மன்றத்தில் செலுத்தி மேலே கண்டுள்ள 23(ii) ஆவது பத்தியின் தீர்வை உரிமையை அவராகவே ஒப்படைக்கத் தகுதியற்றவராயிருந்தால் தீர்வை சம்மந்தமாக வருவாய்த் துறைக் கழகத்தின் ஆணையைப் பெற வேண்டும். தொகை நீதி மன்றத்தில் செலுத்தப்பட்ட பின்னர் கலெக்டருக்குச் சட்டத்தின் 32 (2) பிரிவின்கீழ் உள்ள பொறுப்பைத்தவிர மேலும் சட்ட முறையில் பொறுப்பு யாதொன்றுமில்லை, ஆனால், உபர்நீதி மன்றச்செயல் முறை அறிவுரைகளை அனுசரித்துப் புதிய நிலம் வாங்கப்பட வேண்டும் என்றால் மாவட்டக் கலெக்டரின் வழியாக நீதிமன்ற ஆணைகளை அனுசரித்து வாங்க வேண்டும். கலெக்டர் தம்மிடம் செலுத்தப்பட்ட தொகையைக் கொண்டு நிலம் வாங்கவேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கப் பட்டால் நீதி மன்றக் குறிப்பு வரப்பெற்றதும் வாங்கப்படும் நிலத்தின் உரிமை, மதிப்பு இவை சம்பந்தமான விவரங்களைக் கலெக்டர் தமது துறையின் வழியாகச் சேகரித்து இத்தகைய நடவடிக்கைகளை முடிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். சட்டத்தின் 32 (1) (a) பிரிவில் கண்டுள்ளவாறு அவ்வாறு வாங்கப்பட்ட நிலம் மேலே 25ஆவது பத்தியில் விவரிக்கப்பட்டுள்ளவாறு இனம் உரிமைக்குட்படுத்தி வழங்கப்பட வேண்டும்.

19—11—1909 தேதி, 3170, அ.ஆ.
15—12—1909 தேதி, வ.து.க.செ.
(அ) 5—12—1915 தேதி, 362, வ.து.க.செ.

குறிப்புகள்.—(1) சட்டத்தின் II-ஆவது பாகத்தில் கண்டுள்ள ஏற்பாடுகள் சட்டத்தின் 32 பிரிவின் கீழ் நீதி மன்றத்தாரால் நிலம் வாங்குவதற்கு ஆணையிட்ப் பட்டதற்குப் பொருந்த.

5—4—1907 தேதி, 97, வ.து.க.செ.

(2) இருப்புரிமைக்குரிய தொகையை நீதி மன்றத்தில் செலுத்தினதும் கலெக் டர் மேல்வார உரிமைக்குரிய சட்டித்து 23 ( ) பிரிவின் கீழ் ஏற்பாடுகளைச் செய்யத் தாமே தகுதியுள்ளவராயிருந்தாலன்றி நீதிமன்ற ஆணைகளை அனுசரித்து இதர (நிலம வாங்கப்படும் வரையிலும் தற்காலிகமாக கிராம வருவல் கழிவு கொடுப்பதற்கு லோண்டிய ஆலோசனைகளைப் பற்றி உடனே எழுதி மேலனுப்ப வேண்டும் இல் வாறு செய்யும்போது இனம் நிலம் சுவாதீனம் செய்து கொள்ளப்பட்ட பசலியின் தீர்வை ஒப்படை இழக்கப்பட்ட பாக்கியிலிருக்கிற காலத்திற்கு இனம் பெற்றவருக்கு சேர வேண்டிய தீர்வை உரிமையை இழக்காதவாறு அந்நந்த விதாச்சார ஆண்டுத் தீர்வையைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும.
அ) 5 12—1915 தேதி, 362 வ.து.க.செ.

29. மேற்கூறப்பட்டுள்ள விதிகளுக்கு உட்படாதவை—மேற் கூறப்பட்டுள்ள விதிகளுக்கு உட்படாதவற்றைப் பற்றி அல்லது ஈட்டுத் தொகையை அரசாங்க உறுதிக் கடன் பத்திரங்களில் முதலீராக ஏற்படுத்துவது விரும்பத்தக்கது என்று கலெக்டர் கருதுவாரெனில், இவ்வகையில் கலெக்டர் வருவாய்த் துறையின் ஆணையைப் பெற வேண்டும்.

24—3—1902 தேதி, 65, வ.து.க.செ.

பிரிவு VI —பலவகையின.

30. ஜமீன் உரிமை வரி அல்லது இனம் விடுவரியை வீதாச் சாரத்தில் குறைத்தல் எவ்வாறு கணக்கிடப்பட வேண்டும்.—பொதுக் காரியங்களுக்காக ஜமீன் நிலமோ, இனம் நிலமோ, ஜமீந்தாரி நிலமோ எடுத்துக் கொள்ளப்படும் போதெல்லாம் ஜமீந்தார் அல்லது இனம் பெற்றவர் தமது உரிமைக்காக ஈடு அளிக்கப்படுவதுடன், அவர்கள் செலுத்த வேண்டிய மொத்த ஜமீன் உரிமை வரி அல்லது விடுவரி வீதாச்சாரத்தில் குறைக்கப் படுவதற்குள்ளாகும், ஜமீன் அல்லது இனம் கிராமத்தில் மொத்த வருவாய்க்கும் ஜமீன் நிலையான தீர்வை அல்லது இனம் விடுவரிக்கு எத்தகைய வீதம் உள்ளதோ அவ்வீதத்தில் உரிமை பெறப்பட்ட நிலத்தின் தீர்வை குறைக்கப்பட வேண்டும்:

குறிப்பு.—மேலே குறிக்கப்பட்ட ஜமீன் உரிமை வரி அல்லது இனம் விடுவரியின் வீதமுறைக் குறைப்புக்கும் உரிமை பெறப்பட்ட நிலத்திற்கு ஈடாக, குறிப்பிட்ட தீர்வை தள்ளிக் கொடுப்பதால் ஏற்படும் ஜமீனின் நிலையான தீர்வையை அல்லது இனம் விடுவரியைக் குறைப்பதற்குள்ள வேறுபாட்டை அறிந்து கொள்ள வேண் டும். சட்டத்தின் கீழ் உரிமை பெறப்பட்டதான உரிமை அளிக்கப்படாத பணி இனம் நிலத்தின் உரிமையாளர் ஜமீந்தாராக அல்லது அவர் வேறு இனம் விடுவரி கொடுக்கும் இனம் நிலத்துக்குரிய வராயிருக்கும் வகையில் மாத்திரம் ஈட்டின் மூலமாக ஏற்படும் குறைப்பு அளிக்கத்தக்கது. 23-ஆவது பத்தி (vi) (ஆ) ஆவது உட்பிரிவையும் காண்க.

27—1—1885 தேதி, 267, வ.து.க.செ.
19—4—1885 தேதி, 1115, வ.து.க.செ.
29—8—1893 தேதி, 497, வ.து.க.செ.
9—2—1894 தேதி, 70, வ.து.க.செ.
24—3—1902 தேதி, 65, வ.து.க.செ.

31. தல ஆட்சி மன்றங்களுக்காக நிலத்தின் உரிமை பெறுதல்.—நில உரிமை பெறும் சட்டத்தின்கீழ் தல ஆட்சிமன்றத்திற் காக நிலத்தின் உரிமை பெறப்படும்போது அரசாங்கத்தின் பொது அல்லது இத்தகையவற்றிற்குப் பொருத்தமான தனிப்

பட்ட ஆணைகள் எவையேனும் இல்லையானால், நில உரிமை பெறுவதற்காக ஏற்படும் முழுச் செலவும் தல ஆட்சி மன்றத்திற்கே சாரும். இருப்பினும், இவ்விதிக்கு இரண்டு விதி விலக்குகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று, சாலைகளுக்காக நிலத்தின் உரிமை பெறப்படும்போது, ஈடு சொக்கமாகக் கொடுக்கப்படாமல் மாநில அரசினரின் வசமுள்ள வேறு நிலம் அளிக்கப்படுவதாயிருந்தால் கலெக்டர் இத்தகைய சந்தர்ப்பங்களில் மாநில அரசாங்கத்தின் செலவில் நில உரிமை பெறலாம். மற்றொன்று, தல ஆட்சி மன்றத்திற்காக உரிமை அளிக்கப்படாத பணி இனம் நிலங்களின் உரிமை பெறப்பட்டு, மேல்வார உரிமைக்காக கிராம வசூல் கழிவோ அல்லது வருவாய் ஒப்படையோ, ஈடாக அளிக்கப் பட்டால் அவ்வாறு கொடுப்பதனால் அரசாங்கத்திற்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்யும் பொருட்டு தல ஆட்சி மன்றத்தினின்றும் இத்தொகையைப் பெறத் தேவையில்லை. உரிமை அளிக்கப்படாத நிலங்கள் தல ஆட்சி மன்றத்திற்காக உரிமை பெறப்பட்டு அவற்றிற்குப் பரிவர்த்தனையாக அளிக்கப்பட வேண்டிய வேறு நிலங்களின் உரிமை பெற வேண்டியிருப்பின், அத்தகைய நிலங்களின் உரிமை பெறப்படுவதற்கு ஏற்படும் முழுச் செலவையும் தல ஆட்சி மன்றம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தல ஆட்சி மன்றத்தின் செலவில் உரிமை பெறப்பட்ட நிலத்தின் உரிமையானது அம்மன்றத்தால் நிலத்திற்கு ஈட்டுத் தொகை அளிக்கப்பட்டவுடன் அதற்குச் சேர்ந்து விடும். அரசினர் பத்திரம் எழுதி நிலத்தை தல ஆட்சி மன்றத்திடம் கொடுக்கவோ அல்லது ஒப்படை செய்யவோ தேவையில்லை. ஆனால், மாநில அரசினரின் செலவில் நிலத்தின் உரிமை பெறப்பட்டு அதற்குரிய ஈடு, சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ளவாறு ஏதாவது ஒரு வகையில் அரசினரால் கொடுக்கப்பட்டிருந்தால், உரிமை பெறப்பட்ட நிலம் அரசினர் நிலமாகிவிடும். 24-ஆவது நிலை ஆணையின் கீழ்த்தல ஆட்சி மன்றத்தின் வசம் நிலம் ஒப்புவிக்கப் படும் வரையில் அந்நிலத்தில் அம்மன்றத்திற்கு எத்தகைய உரிமையோ மன்றம் செய்யத்தக்க கட்டுப்பாடோ இல்லை.

10—4—1891 தேதி, 285 அ.ஆ.வரு.
23—6—1891 தேதி, 366. வ.து.க.செ.
16—5—1905 தேதி, 98, வ.து.க.செ.அச்சு.
28—8—1919 தேதி, 88, வ.து.க.செ.
31—1—1933 தேதி, 8, வ.து.க.செ.அச்சு.
19—12—1940 தேதி, 3149, அ.ஆ.வரு.
24—4—1941 தேதி, 1100, வ.து.க.செ.பலவ.

31. அ. விட்டுவிடப்பட்டது.

31. ஆ. முன்னேற்றம் அடைவதற்கு ஹரிஜன நலத் துறையினரிடமிருந்து உதவி பெறத் தகுதியுள்ள வகுப்பினர் களுக்காகவும் நிலமில்லாத தொழிலாளர்களுக்காகவும் கிராமங் களில் குடியிருப்பு வீட்டு மனைக்கான நிலம் உரிமை பெறுதல்.— முன்னேற்றம் அடைவதற்கு ஹரிஜன நிலத் துறையினரிடமிருந்து உதவி பெறத் தகுதியுள்ள வகுப்பினர்களுக்கும், நிலமில்லாத தொழிலாளர்களுக்குக் குடியிருப்பிற்காக நில உரிமை பெற்று வீட்டு மனைகள் கொடுக்கப்படுவதற்காகவும் அவர்களுக்கு இவ்வகையில் மாநில அரசினரால் முன் பணம் அளிக்கப்படுவதற் காகவும் அளிக்கப்பட்ட முன் பணங்களைத் திரும்ப பெறுவதற் காகவும் மேற்கொள்ள வேண்டிய விதிகளும் அறிவுரைகளும் iv ஆவது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

7—6—1941 தேதி, 1306, அ.ஆ.வரு.பல.
7—1—1957 தேதி, 102, வி.ஆ.வரு.பல.
10—7—1941 தேதி, 72, வ.து.க.செ.அச்சு.
6—5—1957 தேதி, 595, வ.து.க.செ.பலவ.
17—5—1957 தேதி, 2065அ.ஆ.வரு.பல.

31. இ. மத்திய அரசாங்கத்திற்காக நிலம் உரிமை பெறுதல்.— மத்திய அரசாங்கத்திற்காக நிலம் உரிமை பெறப்பட்டால் அது மத்திய அரசாங்கத்தின் செலவில் செய்யப்பட வேண்டும். அந் நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகையும் அதில் சட்டங்கள் எவையேனும் இருப்பின், அவற்றின் மதிப்புத் தொகையும் நில உரிமை பெறும் சட்டத்தின்கீழ் இத்தொகைகளுக்கு 15 சதவீதம் அளிக்கப்படும். ஆறுதல் ஈட்டுத் தொகையும் அத்தகைய செலவில் சேர்ந்ததாகும். மத்திய அரசாங்கத்திற்காக அவ்வாறு நில உரிமை பெறப்படுதலால், மாநில அரசாங்கத்திற்கு உண்மையில் நிலத் தீர்வை இழப்பு நேரிடுமானால், அந்நிலத் தீர்வையின் மூலதன மதிப்புத் தொகையையும் மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத் திற்குக் கொடுத்துவிட வேண்டும்.

21—9—1945 தேதி, 1725, அ.ஆ.வரு.
~~17—11—1945 தேதி வருவாய்த்துறை 3773-2 1945-1 என் குறிப்பு.~~
26—11—1945 தேதி, 35, வ.து.க.செ.அச்சு.
17—5—1957, தேதி, 2065, அ.ஆ.வரு.பல.

32. பொதுக் காரியத்திற்காக உரிமை பெறப்பட்ட நிலம் அந்தக் காரியத்திற்கு இனித் தேவையில்லை என்றால் அந்நிலத்தைக் கொடுக்க முடிவு செய்தல்:—

குறிப்பு.—(1) அரசினரின் முன் அனுமதியுடன் கலெக்டர் அல்லது வருவாய்த் துறைக் கழகத்தாலன்றி அரசினருக்குரிய எந்த நிலத்தையும் இந்த நிலை ஆணையின் கீழ், இந்தியக் குடியில்லாத எவருக்கும் கொடுக்க முடிவு செய்யக் கூடாது. இந்தப் பத்தியின் கீழ்ச் செய்யப் படும் ஒவ்வொரு கொடையும் சம்பந்தப்பட்ட நிலம் அரசினர் ஒப்பளிப்பிலலாமல் இந்தியக் குடியில்லாத வேறொருவருக்குப் பராதீனப்படுத்தப்படுமாயின் அக் கொடை சட்ட முறையில் செல்லாததாகும் என்று நிபந்தனைக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

13—5—1918 தேதி, 1867, அ.ஆ.வரு.

17—5—1957 தேதி, 2065, அ.ஆ.வரு.பல.

(2) இந்த நிலை ஆணையின் கீழ் அரசினருக்குச் சொந்தமான நிலம் விற்பனை செய்யப்படுவதற்காகக் கம்பெனி, சங்கம் அல்லது அசோசியேஷன் செய்து கொள்ளும் விண்ணப்பம் அந்தக் கம்பெனி, சங்கம் அல்லது அசோசியேஷன், 1956-ஆம் ஆண்டு கம்பெனிகளின் சட்டத்தின் 1956ஆம் ஆண்டு 1-ஆவது மத்திய அரசுச் சட்டம் (3)(1)(i) பிரிவில் கண்டுள்ள அச்சொல்லின் பொருளுக்குட்பட்டு இருந்தாலன்றி அல்லது 1860 ஆம் ஆண்டு சங்கங்களின் பதிவுச் சட்டம் (1960 ஆம் ஆண்டின் VI ஆவது மத்திய அரசுச் சட்டம்), 1880 ஆம் ஆண்டு சமயச் சங்கங்களின் சட்டம் (1880) ஆம் ஆண்டு 1-ஆவது மத்திய அரசுச் சட்டம்) 1932-ஆம் ஆண்டு சென்னை கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் (1932-ஆம் ஆண்டு சென்னை 4-வது சட்டம்). 1942-ஆம் ஆண்டு பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் (1942-ஆம் ஆண்டு 5-ஆவது மத்திய சட்டம்) 1938-ஆம் ஆண்டு ஈட்டுறுதிச் சட்டம் (1938-ஆம் ஆண்டு IV-ஆவது மத்திய அரசுச் சட்டம்). 1926-ஆம் ஆண்டு இந்தியத் தொழிலாளர்கள் யூனியன்கள் சட்டம் (1926-ஆம் ஆண்டு XVI-வது மத்தியச் சட்டம்) அல்லது இந்திய யூனியன் பார்லிமெண்டு அல்லது இந்திய யூனியனில் உள்ள மாநிலச் சட்டப் பேரவையின் சட்டம் ஆகிய இவற்றின் கீழ்ப் பதிவு செய்யப் பெற்றிருந்தாலன்றி கவனிக்கப்படமாட்டாது. பதிவு செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிடும் மேலே உள்ள ஆணை ரோமன் கத்தோலிக்கக் கோவில்களுக்கும் கிருத்துவச் சமயப் பகுதிகளுக்கும் மற்ற ரோமன் கத்தோலிக்கச் சமயக் குழுக்களுக்கும் காங்கிரஸ் அமைப்புகளுக்கும் பொருந்தாது.

12—10—1949 தேதி, 2649, அ.ஆ.வரு.பல.

19—11—1953 தேதி, 20, வ.து.க.செ.அச்சு.

12—7—1950 தேதி, 25, வ.து.க.செ.அச்சு.

17—5—1957 தேதி, 2065, அ.ஆ.வரு.பலவ.

(அ) பொதுக் காரியங்களுக்காக உரிமை பெறப்பட்ட நிலம் பின்னர் அதன் உரிமை விட்டுவிடப்பட்டால், அந்நிலத்தைக் கீழ்க் கண்டவாறு கொடுக்க முடிவு செய்ய வேண்டும்.

(i) உரிமை விட்டுவிடப்பட்ட நிலம் மறுமுறையும் பொதுக் காரியங்களுக்காகத் தேவையாகும் போலிருந்தால் அந்த அந்த சந்தர்ப்பத்திற்கேற்ப எந்த எந்த நிபந்தனைகள் விதிக்கத்தக்கனவோ அந்த அந்த நிபந்தனைகளுக்குட்படுத்திக் குறிப்பான காலத்திற்குக் குத்தகைக்கு விடப்படவேண்டும்.

(ii) நிலம் இருப்புப்பாதை நிலைய எல்லையின் அரை மைலுக்குள்ளாக இருப்பின் அத்தகைய நிலத்திற்குப் பொருத்தமாக உள்ள 15 ஆவது நிலை ஆணை, 35 ஆவது பத்தியின் (x) ஆவது உட்பிரிவில்

வகுக்கப்பட்டுள்ள தனி விதிகளின்கீழ் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இவ்விதியின்கீழ் அந்நிலத்தை நிலையாக ஒப்படை செய்ய முடியுமானால் கீழே (iv) ஆவது உட்பிரிவில் குறிப்பிட் டுள்ளவாறு முடிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(iii) நிலம் மேற்கூறப்பட்ட வகைகளின்கீழ் அடங்காத தாய் முதன் முதலில் மனைக்கட்டாக அல்லது நகர மனை நிலமாக இருந்திருக்குமானால், இத்தகைய நிலங்களை அரசினர் நிலங்களைக் கொடுக்க முடிவு செய்வதற்கு எவ்விதிகள் வகுக்கப்பட்டு உள்ளனவோ அவ்விதிகளின்கீழ் கொடுக்க முடிவு செய்ய வேண்டும். (81 ஆவது நில ஆணையைக் காண்க) "மத்திய நிலங்கள் நகர மனைகளைப் போலக் கோட்ட ஆட்சியாளர் வழியாக ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு அதன் விற்று முதல் நில உரிமை பெறுவதற்கான செலவு செய்த துறையின் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்".

8—8—1937 தேதி. 1763, அ.ஆ.வரு.பல.
20—4—1938 தேதி, 36, வ.து.க.செ.அச்சு,
வ.து.க. நில ஆணைகள் தொகுதி 1.

(v). () அல்லது ( ) ஆவது உட்பிரிவின் கீழ் நிலம் நிலையான அனுபோகத்திற்குத் தகுதியற்றது என்று முடிவு செய்யப் படாமலிருந்து, உரிமை பெறப்பட்ட காலத்தில் அது விவசாய நிலமாகவோ அல்லது மேய்ச்சல் நிலமாகவோ இருந்திருக்கு மானால் அத்தகைய நிலங்களை மாநில அரசாங்கத்தில் முன் ஒப் பளிப்பின்றிக் கீழ்க்காணும் விதிகளினின்றும் மாறுமல் அது முடிவு செய்யப்பட வேண்டும்.

சம்பந்தப்பட்ட கிராமங்களில் தமுக்கடிப்பினாலும் எடுப் பான இடங்களில் பகிரங்கமான ஏலத்தில் நிலம் விற்பனை செய்யப் படும் என்பதாக நில விற்பனையைப் பற்றிய அறிவிப்பு விரிவாக விளம்பரம் செய்யப்பட வேண்டும். விளம்பரம் செய்யப்பட்ட தேதிக்கும் விற்பனை தேதிக்கும் இடையே 30 நாட்கள் இருக்கு மாறு விற்பனைத் தேதித் நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும். நிலங்கள், ஆண்டுக்குரிய நீர்வை செலுத்துவதற்குட்பட்டு, பகிரங்க மான ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும். இத்தகைய ஏலத்தில் விற்பனை செய்யப்படும் நிலங்களைப் பொறுத்தவரையில் இருப்புப்பாதைத் துறையினால் உரிமை விட்டுவிடப்பட்ட நிலங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்போது ஏல விற்பனைக்கு முன்னமே அத்துறை ஆட்சியாளர்களுடன் கலந்து ஆலோசனை செய்து ஒரு ஆரம்ப விலையை அல்லது குறைந்த நிலையை நிர்ணயம்

செய்து கொள்ள வேண்டும். இவற்றைத் தவிர மற்றவற்றில் ஆரம்ப விலை எதுவும் இருக்கக்கூடாது. நில விற்பனை சமயத்தில் அந் நிலத்திற்கு அடுத்துள்ள நிலத்தின் உரிமையாளர் அல்லது நிலத் தின் முந்திய உரிமையாளர் அல்லது முந்திய உரிமையாளரின் வாரிசு என்ற முறையில் எவரேனும் நிலத்திற்கு உரிமை கொண் டாடுவார் எனில், அந்நிலத்தின் விற்பனையை நிறுத்திவைத்து, (2), (3) உட்பிரிவுகளில் விவரிக்கப்பட்டுள்ளவாறு அவ்வுரிமையைப் பற்றி ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும். அவரது உரிமை மெய்ப்பிக்கப்படாவிடில் நிலம் பகிரங்கமாக ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும்.

17—5—1945 தேதி, 985, அ.ஆ.வரு.பல.
29—11—1945 தேதி, 2888, அ.ஆ.வரு.பல.
2—6—1945 தேதி, 15, வ.து.க.செ.அச்சு.
11—12—1947 தேதி, 1702, வ.து.க.செ. பலவ.

(2) (அ) அடுத்த நில உரிமையாளருக்கு அன்றி வேறு எவருக்கும் அந்நிலம் பயனுகாது என்றால்; அல்லது

(ஆ) அடுத்த நில உரிமையாளர் அன்றி வேறு எவரேனும் அந்நிலத்தைச் சுவாதீனம் செய்து கொண்டிருப்பதால் அடுத்த நில உரிமையாளர் தமது நிலத்தை அனுபவிப்பதில் அவருக்கு இடையூறு ஏற்படும் என்றால் அந்நில உரிமையாளருக்கு அந்நிலத்தை, அதன் முழு நடப்பு விலை மதிப்புத் தொகையைப் பெற்றுக் கொண்டு, முடிவில் விற்பனை செய்d நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(3) மேலே (2) (அ) அல்லது 2 (ஆ) இனங்களில் கூறப் பட்டுள்ள சூழ்நிலைகள் இல்லாதபோது அல்லது உரிய முறையில் அறிவிப்பு செய்யப்பட்ட பின்னர் அடுத்த நில உரிமையாளர் அந் நிலத்தை எடுத்துக் கொள்ள விரும்பாவிடில், முதன் முதலில் அந்நிலத்தின் இருப்புரிமையும் அனுபோக உரிமையும் பெற்றிருந் தவர்கள் இருப்பின் அவர்களுக்கு அல்லது அவர்கள் வாரிசுகளுக்கு நிலத்தை அதன் அடக்க விலைக்குக் கொடுத்துவிட வேண்டும்.

குறிப்பு.—நிலத்திற்கு இரு வகை உரிமைகளும், அலையாவலை தனி உரிமை அனுபோக உரிமை இரண்டும் இருந்து, உரிமை பெறுவதற்கு முன்னர் அவ்விரு உரிமைகளையும் வேறு வேறு தனிப்பட்டவர்கள் அனுபவித்துக் கொண்டிருப் பார் எனில், (3) ஆவது உட்பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கும்போது, அரசினர் கொடைகள் (1895 ஆம் ஆண்டு XV ஆவது) சட்டத்தில் ஏற்படுத்தியுள்ளவாறு தனி உரிமையை இருப்புரிமைக்கு உட்படுத்திக் கொடுத்துவிட வேண்டும். உரிமை யாளர்களுக்கு இத்தகைய உரிமைகளை அளிக்கும்போது, அளிக்கப்பட்ட ஈட்டுத் தொகையிலிருந்து 15 சதவீதம் கூடுதல் தொகை ஏதேனும் அளிக்கப்பட்டிருந்தால்

அதைக் கழித்து மிகுதித் தொகையையே அதன் விலாவாக எடுத்துக் கொள்ள வேண்டும். அரசினர் வசத்திலிருக்கும்போது அந்நிலம் யாதொரு சீர்கேடுற்ற காரணத்திற்காக வேண்டுமானால், இந்த விலையைக் குறைத்துக் கொள்ளலாம். ஆனால், நிலத்தின் விலை நடப்பு விலையை அனுசரித்து அதன் மதிப்பு அதிகமான காரணத்தினால், அதன் விலையை உயர்த்தக் கூடாது.

(4) முதலில் இருப்புப் பாதைக்கோ அல்லது மத்திய அரசாங்கத்தின் மற்றத் துறைக்கோ அல்லது நீர்ப்பாசனத் திட்டத்திற்கோ அல்லது பாசன வேலைகளுக்கோ அல்லது மூலதனக் கணக்குகளும், வருவாய்க் கணக்குகளும் தனித்தனியே வைக்கப்பட்ட மாநில நீர்ப்பாசன வேலைகளுக்கோ நில உரிமை பெறப்பட்டிருந்தாலன்றி, நிலங்களின் விற்று முதல் நில வருவாய்க்கு வரவு வைக்கப்பட வேண்டும். ஆனால் மேற்கூறிய வற்றிற்கு உரிமை பெறப்பட்டிருந்தால், நிலத்தின் விற்று முதல் இருப்புப்பாதைக்கு அல்லது மத்திய அரசாங்கத்தின் சம்பந்தப் பட்ட துறைக்கு அல்லது நீர்ப்பாசனத் திட்டத்திற்கு அல்லது நீர்ப் பாசன வேலைக்கு அல்லது நில உரிமை பெறுதலுக்குரிய செலவு முதலில் பற்று எழுதப்பட்ட கணக்கின் கீழ் வரவு வைக்கப்பட வேண்டும்.

15—3—1957 தேதி, 161, அ.ஆ.வரு.வாலாய.

(5) நிலம், அரசுக்குடி நில ஒப்படை முறையில் கொடுக்கப்பட்டால் தனியான யாதொரு உரிமைப் பத்திரமும் அளிக்க வேண்டியதில்லை, வருவாய்த் துறைக் கழக 15 ஆவது நிலை ஆணையின்கீழ் நில ஒப்படையில் வழங்குவது போலவே ஒரு சாதாரண ஆணை பிறப்பித்தால் போதுமானது. தனி உரிமையில் உள்ள நிலங்களைப் பொறுத்தவரையில் ஆவது இணைப்பின் 17 ஆவது படிவத்தில் கண்டுள்ளவாறு கலெக்டர்களால் உரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும்.

3—5—1941 தேதி, 1005, அ.ஆ.வரு.பல.
15—11—1941 தேதி, 3065, வ.து.க.செ.பல.

(v) மேலே கூறப்பட்ட (iv) உட்பிரிவின் கீழ் நிலங்களை அளிக்கக் கலெக்டர்களுக்கு அதிகாரம் உண்டு. அவ்வகையில் 2 ஆவது இணைப்பின் 18 ஆவது படிவத்தில் தாசில்தார் கலெக்டருக்கு விண்ணப்பம் எழுதியனுப்பி அவரது ஆணைகளைப் பெறவேண்டும்.

9—6—1940 தேதி, 73, வ.து.க.செ.அச்சு.
24—6—1940 தேதி, 1552, அ.ஆ.வரு.பல.

(vi) மேலே (vi) ஆவது உட்பிரிவின் கீழ் அரசுக்குடி முறையில் தீர்வை செலுத்துவதற்குட்படுத்தப்பட்டு நிலங்கள் விற்பனை செய்யப்பட்டால், அவற்றின் தீர்வை மாவட்டத்தின் நிலத் தீர்வை விதிப்பு மாற்றி அமைக்கப்படும் பொதுத் திட்டத்தில் ஏற்படக்கூடிய மாறுதலுக்கு உட்படும் என்றும் விற்பனை அறிவிப்பில் குறிப்பிட

1 19—6—1897 தேதி, 207, வ.து.க.செ.
3 5—9—1910 தேதி, 2940, அ.ஆ.
3 23—9—1910 தேதி, 266, வ.து.க.செ.
4 17—5—1897 தேதி, 162, வ.து.க.செ.
4 4—1—1898 தேதி, 290, வ.து.க.செ.
5 18—1—1929 தேதி, 114, அ.ஆ.வரு.பலவ.
5 12—11—1897 தேதி, 392, வ.து.க.செ.
5 30—8—1905 தேதி 195, வ.து.க.செ.
7 14—6—1905 தேதி, 557, அ.ஆ.
7 12—7—1905 தேதி, 147, வ.து.க.செ.
11 6—2—1929 தேதி, 8, வ.து.க.செ.
10—4—1957, தேதி 1592, அ.ஆ.வரு.பல.

(vii) மேலே கூறப்பட்ட (iv) ஆவது உட்பிரிவின்கீழ்ச் செய்யப்படும் நிலக் கொடைகள் எல்லாம் அன்பளிப்பாகக் கொடுக்கப்படுகின்றனவென்றும் மாநில அரசினருக்கு இச்சலுகைகளைக் கொடுப்பதற்கும், கொடுக்க மறுப்பதற்கும் முழு உயமை உண்டு என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

9—8—1940, தேதி, 73, வ.து.க.செ.அச்சு.
24—6—1940 தேதி, 1552, அ.ஆ.வரு.பல,
17—5—1957, தேதி, 2065, அ.ஆ.வரு.பல.

33. நில உரிமை பெறல் முடிவாகாத இனங்களின் விவர அறிக்கை.—(i) ஒவ்வொரு அரை ஆண்டிலும் நில உரிமை பெறப்பட்டவற்றைப் பற்றி வருவாய்த் துறைக் கழக 90-ஆவது நிலை ஆணையின் XII ஆவது இணைப்பின் 20 (அ) ஆவது படிவத்தில் கலெக்டர்கள் விவர அறிக்கை தயார் செய்து தங்கள் ஆய்வுரைகளுடன் ஓராண்டிற்கு மேற்பட்ட காலத்திற்கு முடிவாகாமல் இருப்பனவற்றைப் பற்றிய விவரத்தை 20 (ஆ) படிவத்தில் குறித்து அடுத்த 20 ஆம் தேதிக்கு முன்னதாக வருவாய்த் துறைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டும்.

25—5—1944 தேதி, 10 வ.து.க.செ.அச்சு.

9 (ii) வருவாய்த் துறைக் கழகத்திற்கு மேலனுப்பப்படும் விவர அறிக்கையில் நில உரிமை பெறுவதற்காக நியமிக்கப்பட்ட தனி அலுவலர்கள் செய்து முடித்த நடவடிக்கைகளையும் சேர்க்க வேண்டும். அத்தகைய அலுவலர்களின் அதிகார வரம்பு ஒரு

மாவட்டத்திற்கு அதிகமாக இருக்குமானால், அந்த அந்தக் கலெக்டர்கள் தங்கள் தங்கள் மாவட்ட எல்லைக்குச் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளைத் தங்கள் விவர அறிக்கையில் சேர்த்துக் கொள்ள வேண்டும். 9 10 தான் குடியேற்ற அலுவலர்களால் நில உரிமை பெறப்பட்டவற்றை இவ்விவர அறிக்கையிலிருந்து விலக்கிவிட வேண்டும்."

6—6—1911, தேதி. 1693, அ.ஆ.
12—4—1915, தேதி. 119, வ.து.க.செ.
9 25—10—1895, தேதி. 391, வ.து.க.செ.
2 8—5—1918, தேதி. 92, வ.து.க.செ.

34. நில உரிமை பெறும் பதிவுக் கோப்புகளுடன் இணைக்கப்பட வேண்டிய தணிக்கைக் குறிப்பு.— Xii ஆவது இணைப்பு 21 ஆவது படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள படிவத்தில் தயாரிக்கப்பட்ட தணிக்கைக் குறிப்பு ஒவ்வொரு நில உரிமை பெறும் பதிவுக் கோப்பிலும் இணைக்கப்படவேண்டும். பதிவுக் கோப்புகள் இறுதியில் முடிவு செய்யப்படும்போது தணிக்கைக் குறிப்பின் நகல் ஒன்றைக் கலெக்டருக்குத் தவறாமல் அனுப்ப வேண்டும். சரியான முறைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதைப் பார்த்துக் கவனிக்கவும். தேவையானால், விட்டுவிடப்பட்ட வற்றைப் பூர்த்தி செய்ய அல்லது பிழைகளைத் திருத்த உடனடியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவரது கடமையாகும். நிலப் பதிவேடு சம்மந்தமான தணிக்கைக் குறிப்பை ஆராய்ந்து பார்ப்பது நில அளவு வட்ட அலுவலர் அல்லது நில அளவு மாவட்ட அலுவலரால் செய்யப்படும். 5 ஆவது பத்தியின் கீழ்த் தனி அலுவலர் நியமிக்கப்பட்டிருந்தால், அவரது தனிப் பணிக்காலம் நீடித்திருக்குமானால், மேலே 19 ஆவது பத்தியில் குறிக்கப்பட்டுள்ள நில உரிமை பெறலும் சம்பந்தப்பட்ட உட்பிரிவு விவர அறிக்கைகளையும்' மாறுதல்களையும் பற்றிய விவர அறிக்கைகளையும் கிராமக் கணக்குகளிலும் தாலூகாக் கணக்குகளிலும் பதிவு செய்யப்பட்ட பின்னர் தாசில்தாரிட மிருந்து வரப்பெற்றவுடன், கோட்ட ஆட்சியாளர் அவற்றைத் தனி அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

மேலும் தணிக்கைக் குறிப்பில் உள்ள 30, 31, 32 (அ), 33, 35 எண்கள் கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டியதற்குரிய விவரங்களையும் அவருக்குத் தெரியப்படுத்த வேண்டும். பதிவுக் கோப்பு இறுதி முடிவடைவதற்கு முன்னமேயே தனி அலுவலரின் பணிக் காலம் முடிவடைந்து விட்டால், தனி அலுவலர் முடிந்த வரையில் தணிக்கைக் குறிப்பில் உள்ள கேள்விகளுக்குப் பதில்

அளித்து பின்னர், பதிவுக் கோப்புகளை, கோட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும். கோட்ட ஆட்சியாளர் மேலும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து எஞ்சியுள்ள கேள்விகளுக்குப் பதில் எழுதி பதில் கோப்பின் இறுதி முடிவைச் செய்து தணிக்கைக் குறிப்பின் நகல் ஒன்றை மாவட்டக் கலெக்டருக்கு அனுப்ப வேண்டும்

27—8—1928 தேதி, 2865, வ.து.க.செ.பலவ.
20—11—1929 தேதி, 2440, அ.ஆ.வரு.
17—3—1934 தேதி, 542, அ.ஆ.வரு.
17—1—1944, தேதி, 26, அ.ஆ.வரு.
29—9—1928 தேதி, 2275, அ.ஆ.வரு.
28—11—1929 தேதி, 105, வ.து.க.செ.
30—4—1934 தேதி, 58, வ.து.க.செ. அச்சு.
3—2—1944 தேதி, வ.து.க.செ.அச்சு.

91. இருப்புப் பாதையினருடன் செய்து கொள்ளும் நடவடிக்கைகளுக்குரிய விதிகள் 1. இருப்புப் பாதைக் காரியங்களுக்காக நிலத்தின் உரிமை பெறப்பட்டு எல்லை வரையறுத்தல் செய்யும் வருவாய்த் துறை அலுவலருக்காக வகுக்கப்பட்டுள்ள விதிகள்.— இருப்புப் பாதை ஆட்சிக் கழகத்தின் 1921-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ந் தேதியும், 1921-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ந் தேதியும், 1923-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ந் தேதியும், 1924-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ந் தேதியும், 1924-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ந் தேதிகள் சுற்றறிக்கையாலும் 1924-ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ந் தேதி 2 877 ப 23 சுற்றறிக்கையாலும், 1916-ம் ஆண்டு மே மாதம் 15-ந் தேதியும், 1927-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ந் தேதியும், 1927-ம் ஆண்டு மார்ச் மாதம் 4-ந் தேதி, 1928-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ந் தேதிகள் 899 (நுட்ப) சுற்றறிக்கைகளாலும் 1918-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30-ந் தேதி 899 கூ—16 எண் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளன. இவை சம்பந்தமான கடிதப் போக்குவரத்து எல்லாம் அரசாங்கத்தின் வருவாய்த் துறைச் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும். இருப்புப் பாதை ஆட்சிக் கழகத்தின் சுற்றறிக்கையின் 9, 13 பத்திகளில் கூறப்பட்டுள்ள எல்லா முதல் நடவடிக்கைகளையும் தென் இருப்புப் பாதைப் பொது மேலாளர் மாவட்டக் கலெக்டருடன் நேரடித் தொடர்பு கொண்டு நிர்மாளிப்பார்.

? 13—10—1927 தேதி, 2016, அ.ஆ.வரு.
7—8—1928 தேதி, 1791, அ.ஆ.
? 20—10—1927 தேதி, 73, வ.து.க.செ.

11—8—1928 தேதி, 82, வ.து.க.செ.
17—5—1957 தேதி, 2065, அ.ஆ.வரு.பல.

குறிப்பு.—இந்திய அரசினராலும் இருப்புப் பாதைக் கழகத்தாலும் அவ்வப் போது இருப்புப் பாதை நில உரிமை பெறல், மாற்றுதல், நிலத்தின் உரிமை விட்டு விடுதல், குத்தகைக்குக் கொடுத்தல் ஆகிய இவற்றைப் பற்றிப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளின் பகுதி நகல் V-வது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

2. இருப்புப் பாதைக்குத் தேவையான நிலங்களின் பாகுபாடு.—யூனியன் அரசாங்கத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இருப்புப் பாதைகளுக்குரிய நிலங்கள் இரு வகைப்படும். இந்திய யூனியன் அரசாங்கம் நிறுவியுள்ள இருப்புப் பாதைகள் இரண்டு வகுப்புகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன:—

I நிலையான நிலம்.—அதாவது இருப்புப் பாதை வேலைகள் முடிக்கப்பட்டு போக்குவரத்துக்காக இருப்புப் பாதை திறக்கப் பட்ட பின்னரும் நிலையாகத் தேவையாகக் கூடிய நிலம்.

தற்காலிகமான நிலம்.—அதாவது தற்காலிகமான தேவைக்கு உரிய நிலம்—வேலை முடிந்த பின்னர் உரிமை விட்டு விடப்பட வேண்டிய நிலம்.

10—4—1957 தேதி, 1592, அ.ஆ.வரு.

3. அ. (i) அரசினரின் நிலத்தை இருப்புப் பாதை ஆட்சிக்கு மாற்றிக் கொடுத்தல்.—தீர்வை விதிக்கப்பட்ட தரிசு அல்லது புறம்போக்காகப் பதிவு செய்யப்பட்ட அரசினர் நிலம் இருப்புப் பாதைக்குத் தேவையாக இருக்குமானால் மாவட்டக் கலெக்டர் அதை இருப்புப் பாதை ஆட்சிக்கு மாற்றிக் கொடுத்து அதன் நடப்பு விலை மதிப்புத் தொகையை இருப்புப் பாதை மூலதனக் கணக்கில் செலவு எழுத வேண்டும்.

(அ) ஆனால், நிலம் தல ஆட்சி மன்றத்தின் சட்ட உரிமையிலுள்ள புறம்போக்காக இருப்பின் அல்லது.

(ஆ) நிலத்தில் யாதொரு வகையான உரிமையை நிறுத்தி வைத்துக்கொள்ளுதல் அல்லது நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் எவையேனும் விதித்தல் விரும்பத்தக்கது எனத் தோன்றினால்,

மாநில அரசினரின் அனுமதி பெற்று மேற்கொண்டு நட வடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

10—4—1957. தேதி 1592 அ. ஆ. வரு. பல.

( ) சென்னை 1936-ம் ஆண்டு XVII-வது சட்டத்தால் திருத்தி அமைக்கப்பட்ட சென்னை (1908-ம் ஆண்டு I வது எஸ்டேட் நிலச் சட்டத்தின்கீழ் எஸ்டேட்டுகளில் கிராம மக்களின் பொது நலத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை இருப்புப் பாதை ஆட்சிகளுக்கு மாற்றிக்கொடுத்தல்.—(அ) நிலங்களுக்குத் தற்காலிகமான தேவை மட்டும் இருக்குமானால், உரிமை பெறும் நடவடிக்கை முறைகளை மேற்கொள்ளாமலே அத்தகைய நிலம் அனுபோகம் செய்யப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்வதற்குக் கலெக்டருக்கு இடர்பாடு இராது.

(ஆ) நிலங்களுக்கு நிலையான தேவை இருக்குமானால், உரிமை பெறும் சட்டத்தின்கீழ் அவற்றின் உரிமை பெறவேண்டும். அரசினரின் மீட்புரிமைகள் தெளிவாக உள்ளன என மாவட்டக் கலெக்டரால் கருதப்படுவனவற்றிற்கும் அவ்வாறில்லையென அவரால் கருதப்படுவற்றிற்கும். யாதொரு வேறுபாடும் பாராட்டக் கூடாது. இத்தகையவற்றை எவருக்கும் பராதினம் செய்யவும் உரிமை இல்லை என்பதாகப் பாவித்துக் கொண்டு இந்நிலங்களுக்குப் பதிலாக வேறு நிலம் கொடுக்கப்பட ஏற்பாடு செய்யவேண்டுமென்று நிர்ப்பந்திக்கும் அலுவலர்கள் சிவில் நீதிமன்றத்தைக் கேட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

29—1—1941 தேதி, 213, அ.ஆ.வரு.பல.
17—2—1941 தேதி, 14, வ.து.க.செ.அச்சு.
17—5—1957 தேதி, 2065, அ.ஆ.வரு.பல.
அ. 30—12—1897, தேதி, 2699. அ.ஆ.
1 22—11—1927, தேதி, 2355, அ.ஆ.வரு.
1 1—11—1927, தேதி, 2174, அ.ஆ.வரு.

4. தேவைக்கு அதிகமாக உள்ள இருப்புப் பாதை நிலத்தின் உரிமையை விட்டுவிடுதல்.—(1) இருப்புப் பாதை ஆட்சியின் உடனடியான தேவைக்கும் பற்றும் பிற்காலத் தேவைகளுக்கும் போதிய நிலங்களை மட்டும்தான் வைத்துக் கொள்ள வேண்டுமென்பது இருப்புப் பாதை கழகத்தின் கொள்கையாகும். இருப்புப் பாதை ஆட்சியின் வசத்திலிருக்கும், எந்த நிலமானது மத்திய அரசாங்கத்தின் (இருப்புப் பாதைத் துறையின்) வேலைகளுக்குத் தேவையாக இல்லை என்றால், "உரிமையை விட்டுவிடத் தகுதியான நிலம் என்று குறிப்பிட்டு, அதைத் தாமாகவோ அல்லது வருவாய்த் துறைக் கழக 9-வது நிலை ஆணை V-வது இனப்பில் திருத்தியமைக்கப்பட்ட நில

உரிமை பெறும் விதிகளின் VI-வது பிரிவில் கூறப்பட்டுள்ளவாறு (மாநில அரசினர். இசைவார்கள் எனில் அவர்கள் வழியாக) நிலத்தைக் கொடுத்துவிட ஏற்பாடு செய்ய வேண்டும்.

(2) நிலத்தின் உரிமை விட்டுவிடப்படும்போது நிலத்தை வேறொரு இருப்புப் பாதைக்கோ அல்லது மத்திய அரசாங்கத்தின் இதர துறைக்கோ மாற்றிவிடும் நோக்கம் இருப்புப் பாதை ஆட்சியாளருக்கு இருக்குமானால், அதைக் கலெக்டருக்குத் தெரியப்படுத்தினால் அவர் அதில் அவ்வாறு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுத்து ஏற்பாடு செய்வார். இருப்புப் பாதை ஆட்சியினர் நிலத்தின் உரிமையை முற்றிலும் விட்டுவிட்டால், நிலத்தை முடிவு செய்வதைப் பற்றிக் கலெக்டர் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். உரிமை விட்டுவிடப்பட்ட நிலத்தில் கட்டடம் அல்லது கட்டடங்கள் இருப்பின், மாநில அரசினரின் ஆணையின்றிக் கலெக்டர் அந்நிலத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது. முற்றிலும் உரிமை விட்டுவிடப்பட்ட நிலங்களை முடிவு செய்வதில் பின்வரும் நடைமுறையை அனுசரிக்க வேண்டும்:—

(1) உரிமை விட்டுவிடப்பட்ட நிலங்களைக் கலெக்டர் இருப்புப்பாதை ஆட்சியினின்றும் ஏற்றுக்கொண்டு, சாதாரணமாக, வருவாய்த் துறைக் கழக 90-வது நில, ஆணை 32-ஆவது பத்தி (iii) -வது அல்லது (iv) -வது உள்பத்தியில் கூறப்பட்டுள்ளவாறு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இருப்புப்பாதை மாற்றியபோது நிலங்கள் மாநில அரசினரின் நிலங்களாக இருந்திருந்தால், அவை பொதுக் காரியம் எதற்காக வாவது தேவையாயிருக்குமானாலன்றி, அவற்றை வருவாய்த் துறைக் கழக 15-வது நில ஆணையின் கீழ்ச் சிறப்பான மதிப்புள்ள நிலங்களாகக் கருதி, விற்பனை செய்யவேண்டும். இத்தகைய நிலங்களைப் புறம்போக்காக மாற்றுவதற்கு வருவாய்த் துறைக் கழகம் ஒப்பளிக்கலாம். இருப்பினும்,

(அ) நிலம் மாநில அரசினரின் ஏதாவதொரு துறைக்கு தேவையாகக்கூடும் என்று கலெக்டர் கருதினாலும்,

(ஆ) உரிமை விட்டுவிடப்பட்ட நிலத்திற்காக இருப்புப் பாதை ஆட்சிக்கு ஏதாவது தொகை செலுத்த வேண்டுமா என்பதில் சந்தேகம் ஏற்பட்டாலும்

(இ) கவனிக்கத்தக்க முக்கியத்துவம் அல்லது தனி இடையூறு ஏதேனும் இருக்குமானலும், வருவாய்த் துறைக் கழகத்தின் வழியாக மாநில அரசினரின் ஆணைகளைப் பெறவேண்டும்.

(ii) நிலத்தை உடனே வெளிப்படையாக விற்பனை செய்வதில் நிலத்தின் நியாயமான விலை கிடைக்காது என்று தெரியவருமாயின், நிலத்தின் மதிப்பிற்குத் தக்கவாறு விலை கிடைக்கும் வரையில், நில விற்பனையை நிறுத்தி வைக்கலாம். ஆனல் விலை உயர்விற்காக நியாயமாகக் காத்திருக்கத் தக்க கால அளவுக்கும் அதிகமான காலம் இதில் இராது என்ருல் மாத்திரம் இவ்வாறு செய்யலாம். இவற்றில் செய்யப்பட வேண்டிய தெல்லாம் இத்தகைய வகைகளில் விற்கப்படும் வரை நிலம் இருப்புப் பாதைக்குச் சொந்தமானது என்றே வருவாய்க் கணக்குகளில் காட்டப்பட்டு வரவேண்டும் என்பதே.

15—8—1959 தேதி, 62, வ.து.க.செ.அச்சு.
24—7—1939 தேதி, 1360, அ.ஆ.வரு.பல.
17—12—1942 தேதி, 17, கா.வ.து.க.செ.அச்சு.
20—11—1942 தேதி, 2611, அ.ஆ.பல.

குறிப்புகள்.—(அ) மாநில அரசினரின் அனுமதியின்றிக் கலெக்டரோ அல்லது வருவாய்த்துறைக் கழகமோ தவிர, வேறு யாரும் இந்தியக் குடியல்லாத ஒருவருக்கும் இந்நில ஆணையின்கீழ் எந்த நிலமும் கொடுக்கக் கூடாது. இந்தப் பத்தியின்கீழ் நிலம் கொடுப்பதானது அரசாங்கத்தின் அனுமதியின்றி இந்தியக் குடியல்லாத ஒருவருக்கு உரிமை மாற்றப்பட்டால் அது முற்றிலும் செல்லாது என்ற நிபந்தனைக்கு உட்பட்டிருக்கும்.

(ஆ) இந்த நில ஆணையின் கீழ் ஒரு கம்பெனியோ, சங்கமோ, அல்லது அசோசியேஷனே தனக்கு நிலம் விற்பனை செய்யப்பட வேண்டுமெனச் செய்து கொள்ளும் விண்ணப்பம் கம்பெனியோ, சங்கமோ, அசோஷியேஷனே 1956-ம் ஆண்டு கம்பெனிகளின் சட்டத்தின் (1956-ம் ஆண்டு I-வது மத்திய அரசு சட்டம்) 3 (1) (1)-வதுபிரிவில் கண்டுள்ள அச்சொல்லின் பொருள்களுக்குட்பட்டு இருந்தாலன்றி, அல்லது 1960-ஆம் ஆண்டு சங்கங்களின் பதிவுச் சட்டத்தின் (1860-ம் ஆண்டுXXI-வது மத்திய அரசின் சட்டம்) 1880-ம் ஆண்டு சமயச் சங்கங்களின் சட்டம் (1880-ம் ஆண்டு I-வது மத்திய அரசுச் சட்டம்) 1932-ம் ஆண்டு தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் (1932-ம் ஆண்டு தமிழ் நாடு VI-வது சட்டம் 1942-ம் ஆண்டு பல நோக்குகள் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் (1942-ஆம் ஆண்டு VI-வது மத்திய சட்டம்) 1938-ம் ஆண்டு கூட்டுறுதிச் சட்டம் (1938-ஆம் ஆண்டு IV-ஆவது மத்திய அரசுச் சட்டம்) 1926-ம் ஆண்டு இந்தியத் தொழிலாளர்கள் யூனியன்கள் சட்டம் (1926-ம் ஆண்டு XVI-வது மத்தியச் சட்டம்) அல்லது இந்திய யூனியன் பார்லிமெண்டு அல்லது இந்திய யூனியனில் உள்ள மாநிலச் சட்டப் பேரவையின் சட்டம் ஆகிய இவற்றின்கீழ்ப் பதிவு செய்யப் பெற்றிருந்தாலன்றி கவனிக்கப்படமாட்டாது. பதிவு செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிடும் மேலே உள்ள ஆணை ரோமன் கத்தோலிக்கக் கோவில்களுக்கும் திருத்து சமயப் பகுதி களுக்கும் மற்ற ரோமன் கத்தோலிக்க சமயக் குழுக்களுக்கும் காங்கிரஸ் அமைப்பு களுக்கும் பொருந்தாது.

12—10—1949 தேதி, 2649, அ.ஆ.வரு.
12—7—1950 தேதி, 25, வ.து.க.செ.அச்சு.
19—11—1953 தேதி, 20, வ.து.க.செ.அச்சு.
17—5—1957 தேதி, 2085, அ.ஆ.வரு.பல.

(iii) உரிமை விட்டுவிடப்பட்ட எல்லா நிலங்களின் விற்று முதல்களிலிருந்து அவ்வாறு விற்பதற்கு நியாயமாக ஏற்படும் செலவுகளைக் கழித்து நிகரத் தொகையை இருப்புப் பாதை ஆட்சியின் மூலதனக்கணக்கில் வரவு வைக்க வேண்டும்.

10—4—1957 தேதி. 1592, அ.ஆ.வரு.பல.

குறிப்பு.—நில உரிமை பெறும் நடவடிக்கையில் செய்வதுபோல், உரிமை விட்டு விடப்படும் நடவடிக்கைகள் சம்பந்தமாக நியமிக்கப்படும் தனிப்பணியாளர் செலவுகளை மாநில அரசாங்கத்திற்குத் திருப்பிக் கொடுத்து விட வேண்டும்.

17—5—1957 தேதி. 2065, அ.ஆ.வரு.பல.

(3) பாதை, வாய்க்கால், முதலியவற்றை வேறு வழியில் திருப்பி விடுவதற்காக உரிமை பெறப்படும் நிலங்கள், அவற்றின் பாகுபாடு : இருப்புப்பாதை அமைப்பதால் பொது நெடுஞ்சாலை, நீர்வழி இவற்றிற்கு ஏற்படும் குறுக்கீடுகளுக்குத் தக்க வசதிகள் செய்து கொடுத்தல், இருப்புப் பாதை ஆட்சியின் கடமை என்று 1890-ம் ஆண்டு இந்திய இருப்புப் பாதை IX-வது சட்டம் வகுத்திருக்கிறது. அதன் பொருட்டு சாலைகளையோ, ஆறுகளையோ நிலையாக வேறு வழியில் திருப்பி அமைக்கவோ, அல்லது இருப்புப் பாதை அமைப்பதால் ஏற்படும், இதர வேலைகள் போன்றவற்றைப் பொதுக் காரியங்களுக்காக இருப்புப்பாதை எல்லைக்கு வெளியில் உள்ள நிலங்களின் உரிமை அதன் செலவில் பெறப்படும். இவ்வேலைகள் முடிவடைந்ததும், மாற்றி அமைக்கப் பட்ட சாலைகளும், மற்ற வேலைகளும் இருப்புப் பாதை ஆட்சியின் பராமரிப்பில் இரா, அவற்றை இதற்குமுன் பராமரிக்க அதிகாரம் பெற்றவர்களே பின்னரும் பராமரித்து வரவேண்டும். இக்காரியங்களுக்காக உரிமை பெறப்பட்ட நிலங்களை "இருப்புப் பாதைக்கு நிலையாகச் சொந்தமான நிலங்கள்" என்று பதிவு செய்யக்கூடாது. உரிமை பெறப்பட்ட, வுடனேயே நில உரிமை பெறும் சட்டத்தின்கீழ் நிலங்கள் எத்தகை நிபந்தனையுமின்றி முற்றிலும் அரசினரின் உடைமைகள் ஆகின்றன. மாநில அரசினர், அவற்றைத் தங்கள் சொந்தப் பாதுகாப்பில் வைத்துக் கொள்ளலாம்; அல்லது ஒரு தலஆட்சிக் கழகத்தின் பராமரிப்பில் அவற்றை விட்டுவைக்கலாம். மாற்று வழி அல்லது வேறு வேலைகள் முடிவடைந்து விட்டன என்று இருப்புப் பாதை ஆட்சியினரிடமிருந்து செய்தி வரப்பெற்ற வுடனே, கலெக்டர் எக்காரியங்களுக்காக நிலங்களின் உரிமை வரப் பட்டதோ, அவற்றிற்கு ஏற்றவாறு நிலங்களைக் கணக்குகளில் (சாலை, கால்வாய் முதலிய) புறம்போக்காகப் பதிவு செய்ய வேண்டும். தேவையானால், அவற்றைப் பராமரிக்கச் சம்பந்தப்

பட்ட தல ஆட்சிக் கழகத்தாரிடம் விட்டுவைக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். மேலே கூறப்பட்ட வேலைகள் முடிவடைந்த பின்னர். அந்நிலங்களின் உரிமையை விட்டு விடுவதற்கு இருப்புப் பாதை ஆட்சியாளர் வழக்கத்திற்கிசைந்த முறையில் நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை.

2—7—1932 தேதி, 2150, ஈ. அரசாங்கக் குறிப்பு.
21—7—1932 தேதி, 42, வ.து.க.செ.அச்சு.

(4) திருத்தியமைக்கப்பட்ட V-வது இணைப்பு VI-வது பிரிவில் கூறப்பட்டுள்ள அறிவுரைகளை மேற்கொள்ள வேண்டும்.

உரிமை பெறப்பட்ட நிலங்களுக்காகச் செலவு எழுதப்பட வேண்டிய முதலீட்டுத் தீர்வை உரிமை பெறப்பட்ட நிலம் அரசுக்குடி முறை நிலமாயிருந்தால், உரிமை பெறப்பட்ட காலத்தில் விதிக்கப்பட்ட நிலத் தீர்வை, உரிமை அளிக்கப்படாத அல்லது உரிமையளிக்கப்பட்ட இனாம்களாகவாயினும், தனி உரிமை ஜமீன் நிலமாகவாயினும் இருப்பின், முறையே அரசிறைக் கழிவு, இனம் விடுவரிக் கழிவு அல்லது அரசினரால் அளிக்கப் பட்ட ஜமீன் உரிமை வரிக் குறைப்பு இவற்றை முதலீடு செய்து பற்று எழுத வேண்டும். உரிமை பெறப்பட்ட நிலத்திற்குப் பதிலாகப் பரிவர்த்தனையில் அரசினரின் நிலம் அல்லது அரசினருக்கு யாதொரு தீர்வையும் செலுத்தப்படாத தல ஆட்சிக் கழகத்தின் வசந்திலிருக்கும் நிலம் கொடுக்கப்படுவதாலல், நிலத் தீர்வைக்காக யாதொரு செலவும் எழுதக் கூடாது. அரசினருக்கு தேவையான பொது நிலத்தை விட்டுவிட வேண்டும் நிபந்தனைக்குட்படுத்தி நிலம் கொடுக்கப்பட்டால், நிலத் தீர்வைக் காக செலவு எழுத வேண்டும்.

6—6—1933 தேதி, 1000, அ.ஆ.வரு.பல.
16—6—1923 தேதி, 42, வ.து.க.செ.அச்சு.

இருப்புப்பாதை ஆட்சினர் நிலத்தின் உரிமையை விட்டு விட்டால் நில உரிமை பெறப்பட்டபோது, அதன் முதலீடாக் கப்பட்ட நிலத் தீர்வை, நிலத்தின் விலையுடன் சேர்க்கப்பட் டிருந்தால் அந்தத் தொகையும் சேர்த்து நிலத்தின் மதிப்பாகக் கொடுக்கப்பட்ட வேண்டும். இவ்வாறு செய்வதில், நடை முறையில் ஏற்படும் இடைஞ்சல்களைத் தவிர்க்கும் பொருட்டு, இத்தகைய நிலங்கள் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப் படும் போது மத்திய அரசினர் தங்களுக்குரிய நிலத் தீர்வையின் உரிமையை விட்டுவிட முடிவு செய்திருக்கிறார்கள்.

25—5—1938 தேதி, 1335, அ.ஆ.வரு.பல.
10—6—1938 தேதி, 61, வ.து.க.செ.அச்சு.

(5) உத்தரவாதம் அளிக்கப்பட்ட பழைய இருப்புப் பாதைக் கம்பெனிகள் நிலங்களின் உரிமை விட்டுவிடுதல்.— உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள பழைய கம்பெனிகளால் இருப்புப்பாதைக்களுக்குத் தேவையான நிலம் உரிமை பெறுவதற்கு 1861-ம் ஆண்டில் வகுக்கப்பட்டுள்ள விதிகளின் பகுதி நகல் வருவாய்த் துறைக் கழக 90-வது நிலை ஆணையின் VI -வது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது. இவ் விதிகளின்கீழ் உரிமை விட்டுவிடப்பட்ட நிலங்களில் யாதொரு பாகமும் இருப்புப் பாதைக்கு ஒதுக்கப்படவில்லை. இத்தகைய நிலங்களை அரசினருக்கு ஆதாயமான முறையில் முடிவு செய்ய வேண்டும். உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள பழைய கம்பெனிகளாவன :—

(1) சென்னை இருப்புப்பாதைக் கம்பெனி.

(2) தென்னிந்திய இருப்புப்பாதைக் கம்பெனி.

(3) தென் மாாட்டா இருப்புப்பாதைக் கம்பெனி.

அவை முறையே, 1908 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதி, 1891-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதி, 1882 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தேதி வரையில் உத்தரவாதம் பெற்ற கம்பெனிகளாகத் தொடர்ந்திருந்துவந்தன. 1908 ஆம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதி முதல் (திருப்பத்தூர்—திருவண்ணாமலை, மொரப்பூர் தர்மபுரி, நீலகிரி இருப்புப்பாதை இவற்றில் அடங்கிய ஜோலார்பேட்டை—மங்களூர் பிரிவைத் தவிர) பழைய சென்னை இருப்புப்பாதையும், தென்னிந்திய இருப்புப்பாதைப் பிரிவில் காட்பாடி—கூடூர், பாகாலா—தர்மவரம் சேர்ந்த பிரிவுகளையும் தென் மகாராஷ்டிரக் கம்பெனி நடத்துமாறு அதற்கு மாற்றப்பட்டன. இவ்வாறு பெரிதாக்கப்பட்ட கம்பெனிக்கு "சென்னை தென் மகாராஷ்ட்டிரா இருப்புப்பாதைக் கம்பெனி" என்று பெயர் அளிக்கப்பட்டது. மேலே விலக்கப்பட்ட பிரிவு தென்னிந்திய இருப்புப் பாதைக் கம்பெனியின் பொறுப்பில் இணைக்கப்பட்டது. VI -ஆவது இணைப்பின் விதிகளில் வகுக்கப்பட்ட ஏற்பாடுகள், பழைய சென்னை இருப்புப்பாதைக் கிளைகளைத் தவிர 1882 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1-ஆம் தேதி வரையிலும், 1891 ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதி வரையிலும் முறையே சென்னை, தென் வட்ட இருப்புப்பாதை, தென்னிந்திய இருப்புப்பாதைக் கம்பெனிகளைப் பொறுத்த வரையிலும் அமலில் இருந்துவந்தன. பழைய சென்னை இருப்புப்பாதைக் கிளைகளுக்கு இவ்விதிகள் 1908 ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதி வரை அமலில் இருந்து வந்ததை மேலே குறிக்கப்பட்ட தேதிகளுக்கு முன்னர் உரிமை விட்டுவிடப்

புட்ட நிலங்களின் விலை மதிப்புத் தொகையைப் பெற இருப்பு பாதைக்கு உரிமை இல்லை. இத்தகைய நிலங்களைக் கொடுக்க மூடிவு செய்யும்போது, அவற்றின் விலைமதிப்பை மாநில அரசாங்கத்தின் கணக்கில் வரவு வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர இருப்புப்பாதைக்கு அவ்வாறு செய்யக்கூடாது.

16—3—1938 தேதி, 713, அ.ஆ.வரு.பல.
16—5—1938 தேதி, 49, வ.து.க.செ.அச்சு.

5. நெடுங்காலத்திற்குப் பின்னர் தேவையாகக் கூடிய நிலங்களின் மேலாண்மை.—(i) இருப்புப்பாதை ஆட்சியின் வசத்திலிருக்கும் ஒரு நிலம் காலியாக இருந்தும் "விட்டுவிடத் தக்கதாக" இல்லாதிருக்குமானாலும் அது, வாணிப சம்பந்தமான காரியங்களின் வளர்ச்சிக்கு உபயோகப்படத் தக்கதாயிருந்தால் அது உபயோகத்திற்குக் "கிடைக்கக் கூடிய நிலம்" என்று கூறப்படும். அத்தகைய நிலங்களின் மேலாண்மையை இருப்புப் பாதை ஆட்சியினர் மாநில அரசினரிடம் ஒப்புவிக்கலாம். தேவையானல் நிலங்களைக் குத்தகைக்கு விடுவதால் கிடைக்கக் கூடிய மொத்த வருமானத்தில் ஒரு சதவீதத்தை (மாநில அரசினரும் இருப்புப்பாதை ஆட்சியினரும் ஒப்புக் கொள்ளும் முறையில்) மாநில அரசாங்கம் எடுத்துக் கொள்ள இருப்புப் பாதை ஆட்சியினர் அனுமதிக்கலாம். இத்தகையவற்றிற்குத் திருத்தி அமைக்கப்பட்ட நில உரிமை பெறும் சட்டத்தின் V-ஆவது பிரிவில் உள்ள. "நில மேலாண்மை விதிகளின்" 33 ஆவது விதியில் குறப்பட்டுள்ள நிபந்தனை பொருந்தும். மாநில அரசினர் இத்தகைய மேலாண்மைப் பெறுப்புக்காக மொத்த வருமானத்தில் '5' சதவீதம் கமிஷனாக எடுத்துக் கொள்வர். இத்தொகை "நில வருவாய் பலவகை" என்னும் தலைப்பில் வரவு வைக்கப்பட வேண்டும்.

7—7—1936 தேதி, 1437, அ.ஆ.வரு.
22—7—1936 தேதி, 89, வ.து.க.செ.அசசு.
17—5—1957 தேதி, 2065, அ.ஆ.வரு.பல.

(ii) "உபயோகத்திற்குக் கிடைக்கக் கூடிய" நிலத்தின் மேலாண்மையை இருப்புப்பாதை ஆட்சியினர் மாநில அரசினருக்கு கொடுக்கும் போதெல்லாம், இத்தகைய நிலங்களின் பட்டியலையும், அந்த நிலங்களை எவ்வாறு உபயோகப்படுத்தலாம் என்றும் எந்நிபந்தனைகளை அனுசரித்து மேலாண்மை நடத்தப் பட வேண்டும் என்பது போன்ற விவரங்களுடன் கலெக்டருக்கு எழுதி அனுப்ப வேண்டும். கலெக்டர் தேவையான

விசாரணைக்குப் பின்னர் தமது அபிப்பிராயத்துடன் வருவாய்த் துறைக் கழகத்தின் ஆணைக்கு அனுப்பவேண்டும். ஒவ்வொரு வகையிலும் சூழ்நிலைக்கேற்ப வருவாய்த் துறைக் கழகம் ஆணை பிறப்பிக்கும். முக்கியமானவற்றில்--அவையாவன மேலே கூறப்பட்ட 4 (2) (1)-ஆவது பத்தி (அ) (இ) உட்பிரிவுகளில் சம்பந்தப்பட்டவற்றில் மாத்திரம் அரசினர் ஆணையைப் பெற வேண்டும். அவ்வாறு முடிவு செய்பவர், மேலாண்மை செய்வதற்கு ஒப்புக்கொண்ட நிபந்தனைகளுக்கு உட்படுத்தி அம்மேலாண்மை செய்யப்பட வேண்டிய முறையை முடிவு செய்வார். மேலாண்மை செய்யப்படுவதற்கு ஒப்புவிக்கப்பட்ட நிலம் எல்லை சரிவாவரையறுக்கப்பட வேண்டும். தேவையான நிலப்படங்களும் இருக்க வேண்டும்.

(iii) இருப்புப்பாதை நில மேலாண்மை நிகர வருமானத்தைக் கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு நிலத்தின் விலை எந்த மூலதனக் கணக்குகளிலிருந்து எடுக்கப்பட்டதோ சம்பந்தப்பட்ட அந்த இருப்புப்பாதையின் "இருப்புப் பாதை வருவாய்" என்ற கணக்குகளில் சரிக்கட்ட வேண்டும்.

26—10—1934, தெநி. 2183, அ.ஆ.வரு.பல.
8—11—1934, தெநி. 160, வ.து.க.செ.அச்சு.
10—4—1957, தெநி. 1592, அ.ஆ.வரு.பல.

6. ஆற்றின் அடித்தலத்திலிருந்து இருப்புப் பாதை ஆட்சியினர் மணல் எடுத்துக் கொள்ளுதல்.—நீர் வழி, பாலங்கள், மதகுகள் அல்லது ஆற்றங்கரைகள் இவற்றிற்கு எவ்வித சேதமும் ஏற்படாதிருக்குமாறும், கலெக்டரால் விதிக்கப்படும் நிபந்தனைகட்குட்பட்டும், 'இருப்புப்பாதை ஆட்சியினர் ஆறுகளின் அடித்தலத்திலிருந்து மணலை இருப்புப்பாதைக்காக எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர். அதிக அளவு மணல் தேவையானால், முதலில் பொறியியல் பணித் துறைக்கு எழுதிக் கேட்க வேண்டும்.

11—5—1861, தெநி. 363, அ.ஆ.
15—11—1897, தெநி. 398, வ.து.க.செ.
22—5—1914, தெநி. 202, வ.து.க.செ.

~~சென்னைச் சுரங்க நடைமுறை நூலின் VI-ஆவது அத்தியாயம்~~ -ஆவது பிரிவின் 5 (5) விதியைக் காண்க.

குறிப்பு.—1884-ஆம் ஆண்டு தமிழ் நாடு VI-ஆவது ஆற்றுப் பாதுகாப்புச் சட்டத்திற்குட்பட்ட இடமாயிருந்தால், ஆற்றுப் பாதுகாவலர்களுக்கு ஆற்றின் அடித்தலத்திலிருந்து கல்-மண் எடுப்பதை முழுமையும் தடுப்பதற்கோ அல்லது ஒழுங்குப்படுத்துவதற்கோ அதிகாரமுண்டு.

இத்தகையவற்றில் ஆற்றுப் பாதுகாவலர்களைக் கலந்து யோசிக்காமல் கலெக்டர் கல்-மண் எடுக்க எத்தகைய ஒப்பளிப்பும் செய்யக் கூடாது.

5—7—1928, தேதி, 2154, வ.து.க.செ.பலவ.
16—8—1928, தேதி, 81, வ.து.க.செ.
1—8—1928, தேதி, 1701, அ.ஆ.வரு.பலவ.

7. நில அளவையும், எல்லை வரையறுத்தலும்.—உரிமை பெறப்பட்ட நிலங்கள் நில அளவை செய்யப்பட்டு VIII-ஆவது இணைப்பில் கூறப்பட்டுள்ளவாறு கிராமப்படங்களிலும், புலப் படங்களிலும் வரையறைப்படும்.

[1] 9—12—1925, தேதி, 1923, அ.ஆ.வரு.
14—8—1920, தேதி, 1959, அ.ஆ.வரு.
[1] 9—12—1925, தேதி, 72, வ.து.க.செ.
8—2—1921, தேதி, 5, வ.து.க.செ.
17—5—1957, தேதி, 2065, அ.ஆ.வரு.பலவ.

VII-ஆவது அத்தியாயத்தின் இணைப்புகள்

இணைப்பு-I

(நிலை ஆணை எண் 90, பத்தி-9.)

நில உரிமை பெறும் சட்டத்தின் 55 (1)-ஆவது பிரிவின்கீழ் இயற்றப்பட்ட விதிகள்.

விதி 1.—4 (1)-ஆவது பிரிவின் கீழ் அறிக்கை விளம்பரம் செய்யப்பட்ட உடனே நிலம் பொதுக் காரியத்திற்காகத் தேவை அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப நிலத்திற்குத் தேவை ஏற்படலாம் என யோசனை செய்யப்பட்டிருக்கும் நிலத்தின் உரிமை பெறுவதற்கு ஆட்சேபனைகள் எவையேனும் இருக்குமானால், அவற்றை அவ்வறிவிக்கை விளம்பரம் செய்யப்பட்ட 30 நாட்களுக்குள் எழுத்து வடிவில் கலெக்டருக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டும் என நிலத்தில் அக்கறையுள்ள அனைவருக்கும் கலெக்டர் ஓர் அறிவிப்பு அனுப்ப வேண்டும். முன்சொன்ன தலத்தில், வசதியான இடங்களில் இந்த அறிவிப்பு விளம்பரம் செய்யப்படுவதோடு, அதன் நகல்கள் கலெக்டர், தாசில்தார், இவர்கள் அலுவலகங்களிலும், அண்மையிலுள்ள காவல் நிலையத்திலும் ஒட்டி வைக்கப்பட வேண்டும்.

விதி 2.—ஆட்சேபனை செய்கிறவர் தாம் நிலத்தில் எவ்வாறு அக்கறை கொண்டாடுகிறார் என்பதை ஆட்சேபனை அறிக்கையில் தெரிவிக்க வேண்டும்.

விதி 3.—(அ) நிலத்தில் யாதொரு உரிமையுமில்லாத எவராலும் ஆட்சேபனை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டால், அது எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படாமல் உடனடியாகத் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

(ஆ) நிலத்தில் அக்கறை கொண்டுள்ள எவரிடமிருந்தாயினும் 5-A ஆவது பிரிவு (1)-ஆவது உட்பிரிவின் கீழ்க் குறிப்பிட்ட காலத்திற்குள் ஆட்சேபனைகள் எவையேனும் வரப் பெற்றால், அவற்றை விசாரணை செய்வதற்குத் தேதி குறிப்பிட்டு ஆட்சேபனை செய்திருப்பவருக்கும், நிலம் கோரியுள்ள துறை, வருவாய்த் துறை அன்றெனில், அத்துறை அல்லது சம்பெனிக்கும் அவற்றைப் பற்றிய அறிவிப்பு அனுப்ப வேண்டும். வரப்பெற்ற ஆட்சேபனைகளின் நகல்களையும் அத்தகைய துறை அல்லது

கம்பெனிக்கு அனுப்ப வேண்டும். அந்தத் துறை அல்லது கம்பெனி கலெக்டரால் குறிக்கப்பட்ட தேதியிலோ அல்லது அதற்கு முன் ஆட்சேபனைகளுக்குப் பதில் கூறும் வகையில் அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்வதோடு விசாரணையின்போது அங்கு இருக்குமாறு பிரதிநிதி ஒருவரை அனுப்பலாம்.

(இ) விசாரணைக்காகக் குறிக்கப்பட்ட தேதியிலாவது அல்லது விசாரணை ஒத்தி வைக்கப்பட்ட தேதியிலாவது, ஆட்சேபனை தெரிவித்தவர் அல்லது அவர் வழக்கறிஞரையும் அத்துறை அல்லது கம்பெனியின் பிரதிநிதி எவரேனும் வந்திருந் தால் அப்பிரதிநிதியைக் கலெக்டர் விசாரணை செய்து ஆட்சேபனை களுக்கு ஆதரவாகத் தாக்கல் செய்யப்படக்கூடிய சான்றைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

விதி 4.—விசாரணை முடிவுற்ற பின்னர் நில உரிமை பெறும் சட்டத்தின் 5A (2) பிரிவில் வகுக்கப்பட்டுள்ள ஏற்பாட்டை அனுசரித்து கலக்டர் அரசினரால் முடிவு செய்யப்படுவதற் காக இதுபற்றி வருவாய்த்துறைக் கழகத்தின் வழியாக அறிக்கை மேலனுப்பவேண்டும்.

விதி 5.—ஆட்சேபனைகளையும், கலெக்டரின் அறிக்கையையும் கவனித்துப்பார்த்து, நில உரிமை பெறப்பட வேண்டுமென அரசினர் முடிவு செய்வார் எனில், சட்டத்தின் 6 ஆவது பிரிவின் கீழ் அரசினரால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும், மாநில அரசிதழில் விளம்பரம் செய்யப்படுவதற்குமுரிய உறுதிமொழியை மாவட்டக் கலெக்டர் அல்லது சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் கலெக்டர்கள் மேலனுப்பவேண்டும். அவ்வாறன்றி, நில உரிமை பெறுதல் விட்டுவிடப்பட வேண்டும் என அரசினர் முடிவு செய் வார் எனில், சட்டத்தின் 48 (1) ஆவது பிரிவின்கீழ் அந்தகைய நில உரிமை பெறுதல் நடவடிக்கையிலிருந்து பின் வாங்கிக் கொள்வதாக அறிவிக்கை ஒன்றை அரசினர் விளம்பரம் செய் வார்கள்.

விதி 6.—இவ் விதிகளில் கூறப்படும் "அரசினர்" என்றால் தமிழ்நாடு அரசினர் ஆவர்.

21—12—1923, தேதி, 1851, அ.ஆ.வரு.
6—6—1937 தேதி, 1459, அ.ஆ.வரு.பல.
9—2—1926 தேதி, 196, அ.ஆ.வரு.
1—11—1927 தேதி, 2173, அ.ஆ.வரு.
8—9—1938 தேதி, 99, வ.து.க.செ.அச்சு.

இணைப்பு II

(நில ஆணை 90 எண்—பத்தி 20)

1894 ஆவது ஆண்டு 1 ஆவது நில உரிமை பெறும் சட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலத்திற்கு ஈட்டுத்தொகை கொடுப்பதற்குரிய விதிகள்

1. நில உரிமை பெறும் அலுவலர்கள்.—அவ்வப்போது நடைமுறையிலிருக்கும் துறையின் விதிகளுக்கிணங்க மதிப்பீடு தயாரிப்பது முதலிய முன்னேற்பாடுகள் முடிவுற்றவுடன் இச் சட்டத்தின் கீழ்க் கலெக்டரால் அல்லது கலெக்டரின் அலுவல் கனைச் செய்யச் சட்ட முறையில் அதிகாரம் அளிக்கப்பட்டு பொறியியல் பணித் துறையினருடனிருந்து பணி ஆற்ற நியமிக்கப்பட்ட அலுவரால் நில உரிமை பெறும் சட்டத்தின் கீழ் நிலம் எடுத்துக் கொள்ளப்படும். ஆனல் இவ்விரு வகைகளின் நடைமுறையில் வேறுபாடுகள் உள்ளன.

2. சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட தனி அலுவலர் மேற் கொள்ளும் நடைமுறை.—சட்டத்தின் கீழ்க் கலெக்டரின் அலுவல் கனைச் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுப் பொறியியல் பணித் துறையினருடன் இருந்து பணியாற்றும் தனி அலுவலர்கள் பொறியியல் பணிக்காகப் பணம் செலவு செய்பவர் எனக் கருதப் பட்டுப் பொறியியல் பணித்துறை அலுவலர்களுக்கு வேலைகளுக் காகப் பணம் கொடுக்கும் முறையில் இவர்களுக்குள் நிகி ஒதுக் கப்படும். இந்தச் செலவைத் தமிழ்நாடு பொறியியல் பணித் துறைக் கணக்கு விதித் தொகுப்பில் கண்டுள்ள விதிகளின் கீழ், கணக்கில் காட்டவேண்டும். இத்தகைய அலுவலர்கள் கீழ்க் கண்ட நடைமுறையை மேற்கொள்ள வேண்டும்.

3. சட்டத்தின் II ஆவது பிரிவின் கீழ்த் தீர்ப்பு அளிக்கப் பட்டதும் இதனுடன் இணைக்கப்பட்ட (அ எனக் குறிக்கப் பட்டுள்ள படிவத்தில் தீர்ப்பை அனுசரித்து ஒவ்வொரு வருக்கும் அளிக்கப்பட வேண்டிய தொகைகளைக் காட்டும் விவர அறிக்கை ஒன்றைத் தயாரித்து, தீர்ப்பு அளித்த தேதியன்றே அவ் விவர அறிக்கையின் நகல் ஒன்றில் கையெழுத்திட்டு, அதைத் தம் கணக்குகளைத் தணிக்கை செய்யும் அரசாங்கக் கணக்குத்

இருப்புப் பாதை ஆட்சிக்காக நிலங்கள் உரிமை பெறப்படுவனவற்றிலெல் லாம், நிலத்தின் விலை கொடுக்கும் தீர்ப்பு பற்றிய அ. படிவ விவர அறிக்கைகளையே லன்றி தீர்ப்பின் நகல்களும் சம்பந்தப்பட்ட இருப்புப் பாதையின் தலைமைத் தணிக்கையாளருக்கு அனுப்பப்படவேண்டும்.

துறைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும். * அந்நகலில் கையெழுத்திடு முன்னர் நீர்ப்பின் கீழ்க் கொடுக்கப்பட வேண்டிய தொகைகள் சரியாகக் கணக்கிடப்பட்டுக் காண்பிக்கப்பட்டிருக்கின்றனவா என்று கவனமாகச் சரிபார்த்து மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் (6) ஆவது கட்டத்தின் மொத்தத் தொகையை எழுத்தால் அசலிலும் நகலிலும் அவர் தாமே எழுதவேண்டும். மேலே கண்ட விவர அறிக்கையின் (6) ஆவது கட்டத்தில் காட்டப்பட்ட தொகைகளைப் பெற்றவர்கள் அவ்வாறு பெற்றுக் கொண்ட விவரங்களை அ.அ. என்னும் படிவத்தில் ஒரு துணை விவர அறிக்கையைக் கூடுமான விரைவினில் அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவருக்கு அனுப்பவேண்டும். நீர்ப்பளிப்பு நாளில் அ. அ. படிவத்தில் அந்தத் துணை விவர அறிக்கை முழுவதும் தயாரிக்கப்பட முடியாவிடின் அவ்வறிக்கை கிடைக்கப்பெற்ற அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவரின் அலுவலகத்தில் அ. விவர அறிக்கையின் (7) ஆவது கட்டத்தில் விவரங்கள் பதிவு செய்யப்படும்.

4. சட்டத்தின் 36 ஆவது பிரிவின் கீழ் நீதி மன்றத்தால் தீர்ப்பு அளிக்கப்படுமாயின் நீதி மன்றத்தின் முடிவு தெரிந்தவுடன் நில உரிமை பெறும் அலுவலர் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள (ஆ என்று குறிப்பிடப்பட்ட) படிவத்தில் இரண்டாவது தீர்ப்பு விவர அறிக்கை தயார் செய்து அதன் நகலை அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும். இவ்விவர அறிக்கை கிடைக்கப்பெற்றதும், அரசாங்க கணக்குத் துறைத் தலைவர் (1) முதல் (4) கட்டங்களிலுள்ள தொகைகளைத் தீர்ப்பு அளித்த அலுவலரால் அனுப்பப்பட்ட அசல் தீர்ப்புடன் சரி பார்க்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார்.

5. உரிமை பெறும் அலுவலர் அளித்த தீர்ப்பின் பங்கீட்டில், சட்டத்தின் 30 ஆவது பிரிவின்கீழ் நீதி மன்றத்தால் மாறுதல் ஏதேனும் செய்யப்பட்டிருந்தால், தீர்ப்பின் விவர அறிக்கையில் தேவையான திருத்தங்களைச் செய்து கொள்ளும் பொருட்டு அரசாங்கக் கணக்குத்துறைத் தலைவருக்கு அத்தகைய மாறுதல் களைத் தெரியப்படுத்த வேண்டும். மேலும், சட்டத்தின் 31 (3) ஆவது பிரிவின் கீழ் சொக்கமாகவன்றி, இதர வகையில் ஈடு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால், ஈடு அளிக்கும் வகையை விவரமாய்த் தீர்ப்பு விவர அறிக்கையின் குறிப்புரைக் கட்டத்தில் காட்ட வேண்டும்.

13. *Basis of award.*—(i) The award should be drafted carefully and it should contain a summary of the evidence and the reasons on which it is based. The officer who makes an award must, therefore, record the fullest possible information as to the market value of the land and all other matters to be considered in determining the compensation. The statement of each witness should be separately recorded and all documents should be proved and properly exhibited except the statistics of sales obtained from the sub-registration offices. These statistics need not be judicially proved by examining witnesses or getting copies of sale deeds, but it is necessary that the land acquisition officer should be acquainted with any sales on which parties are likely to rely in court and should have considered their bearing on his award. Section 11 of the Act allows a Collector to base his award on the reports of subordinate officers. In cases in which the Collector adopts this course, the report should be regularly filed in the course of enquiry. If the report requires elucidation, the officer who sent the report should be examined as a witness. In cases in which the Collector arrives at his conclusion independently of any report, he should see that the award is full and detailed enough to dispense with the necessity for filing any report in court. The Collector should maintain a careful and detailed record of enquiry conducted by him in the case of each award. In any land acquisition case, it may eventually become necessary to make a reference to the civil court under section 18, if any of the persons interested asks for such a reference. The view which a civil court or the appellate court will take must inevitably be influenced by the method adopted by the Collector in the conduct of his enquiry and his handling of the evidence. It is, therefore, essential, in order that the interests of the Government may not suffer, that the record of every land acquisition case should contain an order sheet (on lines similar to those in criminal cases and

civil suits) which should be maintained by the Collector under his signature or initial in which should be described shortly but clearly against each date of hearing, what the Collector has done at each stage at each hearing.

G.O. 2014, Rev., d. 4-9-16.
G.O. 1400, Rev., d. 9-6-47. B.P. Press 20, d. 25-7-47.

No award should be made unless the Collector has before him a plotted plan of the land to be acquired to which fact he should certify when passing the award. The plan should be prepared in accordance with the instructions given below

(ii) (*a*) If the land to be acquired consists of a whole survey field or sub-division, the plan will be merely a tracing from the field measurement book. [a]Its technical accuracy should be certified to by the Circle Officer or District Surveyor or by the special officer appointed under paragraph 5, as the case may be, before award is passed. The bends on the survey field or sub-division should be demarcated as explained in clause (iii) below[a].

[a] G.O. Mis. 2005, Rev., d. 1-10-29. [a]B.P. Mis. 3078, d. 11-10-29.
G.O. R. 26, Rev., d. 17-1-44. B.P. Press 4, d. 3-2-44.

(*b*) If the land to be acquired is a part only of a survey field or sub-division, then the plan will be prepared in the manner laid down for the demarcation mapping and registration of changes in the Revenue Administration. This applies also to the case of lands acquired for new railways, for which detailed instructions will be found in Appendix VIII.

B.P. 170, Sett., d. 18-7-17. B.P. 58, d. 30-4-34.
G.O. 542, Rev., d. 17-3-34. G.O. Ms. 2065, Rev., d. 17-5-57.

(iii) Care should be taken that in all cases the new fields and sub-divisions are demarcated with durable stones of prescribed dimensions before they are surveyed. All lands acquired for the Public Works Department will, however, be demarcated in the manner laid down in Appendix VII. The demarcation charges to be borne by State Government in connexion with the survey of land acquired for Government will be debited to the head "19. General Administration E.District Administration—U. Other Establishments—A. Taluk Establishments. 3—Office Contingencies" except in the following cases :—

(*a*) when the charges are incurred by special officers acting as public works disbursers ; and

(*b*) when the land is acquired in connexion with commercial or quasi-commercial undertakings or for departments for which capital and revenue accounts are separately kept, whether a special officer has been employed on the acquisition or not.

In the two excepted cases, the incidental charges also should be debited to the works concerned.

G.O. 1079, Rev., d. 11-5-20. B.P. 82, Sett., d. 14-6-20.
G.O. Ms. 2065, Rev., d. 17-5-57.

செலுத்த வேண்டும். முதல் ஆண்டுத் தவணை 19 ... ...

வேண்டும். அவர் செலுத்த வேண்டிய முழுத் தொகையைச் செலுத்த விரும்பினாலன்றி, அதிகமாகச் செலுத்தப்பட்டுள்ள தொகைகள் முதலுக்கு மட்டுமே வரவு வைத்துக் கொள்ளப்பட மாட்டாது. முழுத் தவணைத் தொகையையும் செலுத்த அவர் விரும்பினால், அவர் செலுத்த வேண்டிய தொகை மறுமுறை கணக்கிட்டு நிர்ணயம் செய்யப்படும்.

(7) நிலக் கொடை பெற்றவர் நிலத்திற்கு அவ்வப்போது விதிக்கத்தக்க அல்லது வசூலிக்கத்தக்க தீர்வை, வரிகள் முதலியவற்றைச் செலுத்த வேண்டும்.

(8) (i) நிலக் கொடை பெற்றவர் அரசினரிடமாவது அல்லது இவ்வகையில் அனுமதி அளிக்க அதிகாரம் பெற்றவரிடமாவது எழுத்து வடிவில் அனுமதி பெறாமல் மூப்பது ஆண்டு காலத்திற்கு எவருக்கேனும் விற்பனை, நன்கொடை, அடைமானம் அல்லது எத்தகைய குத்தகை வழியாக நிலத்தைப் பாதீனம் செய்யக் கூடாது.

(அ) இருப்பினும் மேற்கூறியவாறு அனுமதி பெற்று நிலம் விற்கப்பட்டால் நில உரிமை பெறுவதற்கான முழுச் செலவில் அரசினர் உதவித் தொகையாக அளித்திருக்கக்கூடிய விதத்தில் விற்று முதலில் அரசினர் பங்கு பெறுவதற்கு உரிமையுண்டு. (3) (4) நிபந்தனைகளை அனுசரித்துத் தவணைத் தொகைகள் முழுமையும் திருப்பிக் கொடுக்கப்படாவிட்டால், அத்தொகைகளையும் மேற்கண்ட தொகையுடன் சேர்த்துச் செலுத்த வேண்டும்.

(ஆ) நில ஒப்படை பெற்றவர் அரசினரால் கொடுக்கப்பட்ட தொகையையும், (3) (4) நிபந்தனைகளை அனுசரித்துச் செலுத்த வேண்டிய தவணைத் தொகை இருப்பின் அதைச் செலுத்தினாலன்றி நிலம் நன்கொடையாக அளிக்கப்பட அனுமதி கொடுக்கப்பட மாட்டாது.

(ii) மாநில அரசினருக்குச் சேர வேண்டிய வருவாய் அல்லது இதர தொகைகளைப் பெறுவதற்கன்றி, நீதி மன்றத் தீர்ப்பு அல்லது ஆணையினாலன்றி நிலம் ஜப்தி செய்யப்பட அல்லது விற்பனை செய்யப்படக்கூடாது. இருப்பினும், 1864-ஆம் ஆண்டு சென்னை நில வருவாய் வரி வசூல் சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய எல்லா தொகையும் மாநில வருவாய் பாக்கியாகக் கருதப்பட்டு வசூலிக்கலாம் என்பதற்கான மாநில அரசினர் உரிமையை இங்கு கூறப்பட்ட எதுவும் பாதிக்காது.

3—1—1948 தேதி, 116, அ.ஆ.பல.வளர்ச்சி.

11-3-1948 தேதி, 7வது. க.செ.அச்ச.

(9) நிலத்தின் வழியாகச் செல்லும் அல்லது அதன் எல்லையை ஒட்டியுள்ள பாதைகள், ஆறுகள், ஓடைகள், வாய்க்கால் ஆகிய இவற்றில் அரசினருக்கும் பொது மக்களுக்கும் நடைமுறையில் அல்லது வழக்கத்தில் இருந்து வருகிற உரிமைகளையும் முன் சொன்ன நிலத்தின் கீழ் இருக்கும் சுரங்கங்கள், கற்சுரங்கங்கள் இவற்றின் பங்கு உரிமையையும் அரசினர் தங்களுக்கே ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ் வொப்படைப்பினல் அவ்வுரிமைகள் ஒரு வகையிலும் பாதிக்கப் படமாட்டா. இவ்வாரே சென்னை சுரங்க நடைமுறை தூல். XIII ஆவது அத்தியாயம், IX ஆவது இணைப்பில் உள்ள மாதிரிப் படிவத்தில் இரண்டாம் பாகத்தில் விளக்கப் பட்டுள்ளவாறு தடையிலா உரிமை, தடையின்றி எக் காலத்திலும் உள்ளே செல்வது, வெளியேறுவது அவற்றுள் செய்யத்தக்க இவைபோன்றவற்றைக் கொண்டு தங்க கனிப் பொருள் அல்லது மற்ற கனிப் பொருள்கள் அல்லது நிலக்கரி, கல் அல்லது தங்கமும் மற்ற கனிப் பொருள்களையும் கொண் டுள்ள அல்லது கொண்டுள்ளவை என்று கருதத்தக்க பாறை களின் அரசினருக்குரிய உரிமைகளும் ஒதுக்கி வைக்கப்பட் டிருக்கின்றன; ஒப்படை பெற்றவர் அரசினரிடமிருந்து அனுமதி அல்லது உரிய முறையில் உரிமம் பெற்ற பின்னர் அன்றி மேற் சொன்ன தங்கம் அல்லது மற்றக் கனிப் பொருள்களை எடுத்து வேலை செய்வதற்கு உரிமையில்லை.

(10) இக் கிராமம் வருங்காலத்தில் நகரம் என்று முடிவு செய்யப்பட்டால் இந்த நிலத்துக்கு மனைத் தீர்வை விதிக்கும் உரிமையை அரசினர் தம்மிடத்தே ஒதுக்கி வைத்துக் கொண் டிருக்கிறார்கள். அத்தகைய மனைத் தீர்வை, தீர்வை விதிப்பு மாற்றத்தின்போது அமலிலிருக்கும் விதிக்கிணங்க திருத்தி அமைக்கப்படுவதற்கு உட்பட்டதாகும்.

(11) நிலத்தைப் பெற்றவர் அந்த நிலத்தில், அல்லது அதன் பகுதி ஏதாவதொன்றிலும் எவ்வகையானது வாணிபம் அல்லது தொழில் நடத்தக்கூடாது. வீட்டு மனையாகவே அதை உபயோகிக்க வேண்டும். முன்னமே அந்நிலத்தில் வீடு இல்லையாயின் ஆண்டுகளுக்குள் ஒரு குடியிருப்புக்காகவே வீடு கட்டிக் கொள்ள வேண்டும். மாநில அரசாங்கம் அல்லது இதற்காக அதிகாரம் பெற்ற அலுவலர் கருதும் வகையில் அடுத்துள்ள நிலங்களுக்கு சேதம் அல்லது கெடுதல் விளைவிக்கும்படி அல்லது தொல்லை ஆக இருக்குமாறு தாமாக நிலத்தை அல்லது அதன் பாகத்தை உபயோகிக்கவோ அநுபோகம் செய்யவோ அல்லது பிறர்

உபயோகிக்கவோ அநுபோகம் செய்யவோ அனுமதிக்கவோ ஆகாது. கட்டடத்திற்கு முன்னும் பின்னும் வெற்றிடம் விடப்பட வேண்டும். சாலையின் ஓரத்திலிருந்து 5 அடி தூரத்திற்குள்ளாக எத்தகைய கட்டடமும் கட்டலாகாது.

(12) (1) முன் சொன்ன நிபந்தனைகளில் ஏதாவது ஒன்று அனுசரிக்கப்படாவிட்டால் அல்லது நிலம் ஒப்படை பெற்றவர் ஒரு ஆண்டு காலம் வீட்டில் குடியிருப்பில்லையாயின் அவற்றிற்குத் தகுந்த காரணங்கள் காட்டினாலன்றி அரசினர் அல்லது இவ்வகையில் அதிகாரம் பெற்ற அலுவலர் நிலம் ஒப்படை பெற்றவர் செலுத்தியுள்ள வைப்புத் தொகையையும் இதர தொகைகளையும் மாநில அரசாங்கத்திற்குப் பறிமுதல் செய்து நிலத்தை திரும்ப எடுத்துக்கொண்டு நிலத்தில் அல்லது அதன் பகுதியில் பிரவேசிக்கலாம். இவ்வாறு அதை திரும்ப எடுத்து அதில் பிரவேசித்த பின்னர் அல்லது முன் சொன்ன நிலம் அதன் பகுதி அதிலுள்ள கட்டடத்துடன் முற்றிலும் சட்ட உரிமையில் அரசாங்க நிலமாகிவிடும் நிலத்துக்காக அல்லது மேம் பாடுகள் செய்ததற்காக எத்தகைய ஈடு கொடுக்கப்பட வேண்டு மெனக் கேட்பதற்கும் ஒப்படை பெற்றவருக்கு உரியையில்லை.

( ) நிலத்தைப் பெற்றவர் அல்லது அவருடைய சட்ட முறை வாரிசுகளின் வசத்தில் அல்லது உரிமையில் நிலம் இல்லா திருந்தால், அந்த நிலத்திற்காக அவர் வைப்புத் தொகையாக அல்லது மற்ற வகையில் அரசாங்கத்திற்கு செலுத்தியிருக்கும் எல்லாத் தொகைகளும் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்படு வதற்குட்படும். அரசினர் அல்லது அரசாங்கத்தின் அதிகாரம் பெற்ற அலுவலர் நிலத்தின் அல்லது அதன் ஒரு பாகத்தின் கொடையைத் திரும்ப எடுத்துக்கொண்டு அதில் பிரவேசிக்க உரிமையுண்டு.

9—1—1948 தேநி. 116, அ.ஆ.பல.வளர்ச்சி.
11—3—1948 தேநி. 7, வ.து.க.செ.அச்சு.

(13) ஒப்படை செய்யப்படும்பொழுது நிலத்திலிருக்கும் (அதனுடன் சேர்க்கப்பட்டுள்ள விவர அட்டவணையில் குறிக்கப் பட்டுள்ள) எல்லாச் சந்தன மரங்கள், அவற்றின் கிளைகள், வேர்கள் இவற்றின் உரிமையையும் இவ்வாறு ஒப்படை செய்யப் பட்ட நிலங்களில் வளரக் கூடிய சந்தன மரங்கள், அவற்றின் கிளைகள், வேர்கள் இவற்றின் உரிமையையும் அரசினர் தங்களிடமே ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அத்தகைய மரங்கள் அல்லது வேர்கள் அல்லது அவற்றின் கிளைகளையும்

வெட்டி அல்லது அகழ்ந்து எடுத்து அவற்றைச் சம்பந்தப்பட்ட நிலத்திலிருந்து அப்புறப்படுத்தி தங்கள் விருப்பம் போல் அவற்றை விற்பதற்குமான உரிமையை அரசினர் வகித்துள்ளனர். மாவட்டக் கலெக்டர் அனுமதியில்லாமல் அவற்றை வெட்டுவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு அல்லது அவற்றை வெட்டப்படுமாறு செய்வதற்கு அல்லது அப்புறப் படுத்துமாறு செய்வதற்கு கொடை பெற்றவருக்கு உரிமை இல்லை.

(14) சந்தன மரங்கள் களவாடப்படாமல் அல்லது சேத மூறுமல் இருப்பதற்கான பாதுகாப்பும், நிலத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் முதிராத மரங்களுக்கு வேண்டிய கவனமான பாதுகாப்பும் கலெக்டர் மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் ஒத்துக்கொள்ளத்தக்க எல்லா நடவடிக்கைகளையும் ஒப்படை பெற்றவர் எடுக்கவேண்டும்.

(15) அரசாங்க அலுவலர்கள் சந்தன மரங்களின் மீது இடும் அடையாளங்கள் பாதுகாக்கப்படுவதற்கும் மோசக் கருத்துடன் திருத்தப்படாமல் இருப்பதற்கான நடவடிக்கை எடுப் பதில் ஒப்படை பெற்றவர் கவனம் செலுத்த வேண்டும்.

(16) மேல குறிப்பிட்டுள்ள (13) (14) (15) நிபந்தனை களில் ஏதாவது ஒன்று மீறப்படுமாயின் அல்லது அது நிறை வேற்றப்படாவிடின், ஒப்படை பெற்றவர் அவ்வாறு அத்தகைய நிபந்தனையைத் தாம் மீறியதால் அல்லது அதை நிறைவேற்றத் தவறினால் ஏற்படக்கூடிய யாதொரு இழப்பிற்கும் அல்லது சேதத்திற்கும் மாவட்டக் கலெக்டர் எத்தகைய ஈடு செய்யப்பட வேண்டுமென்று நிர்மாணிக்கிறாரோ, அத்தகைய ஈட்டுத் தொகையை, அவர் அரசினருக்குச் செலுத்திவிட வேண்டும். ஒப்படையை ரத்து செய்து நிலத்தில் பிரவேசிக்கவும் அரசினருக்கு உரிமை உண்டு. அதன் பின்னர் அந்நிலம் முழுமையுமே சட்ட உரிமையில் அரசினருக்கு சேர்ந்துவிடும். இந்த நிலையில் ஒப்படை பெற்றவர் யாதொரு ஈடும் பெறுவதற்கு உரிமையுடையவர் ஆகார்.

குறிப்பு.—மேலே கொடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் நிலங்கள் ஒப்படை செய்யப்படும் பொழுது ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள சந்தன மரங்கள் சம்பந்தமான (13) முதல் (16) வரையுள்ள நிபந்தனைகளை அடித்துவிட வேண்டும்.

சென்னை, செங்கற்பட்டு, தஞ்சாவூர்.

~~15—3—1957 தேதி, 161, அ.ஆ.வரு. வாலாயம்.~~
17—5—1957 தேதி, 2065, அ.ஆ.வரு.பல.
13—12—1941 தேதி. 138, வ.து.க.செ.அச்சு.
29—7—1957 தேதி, 2515, அ.ஆ.பல.தொழில்.

உ பதிவேடு.

பிரிவு அ.

மாவட்டம்	கிராமம்.
தாலூகா	சிற்றூர்
தீர்ப்பின் எண்ணுடன் தேதியும்	கேட்பு : நி.மு.எண்.
உரிமை பெறப்பட்ட பரப்பு	நில அளவை எண். பரப்பு.
பொதுக்காரியங்களுக்காக ஒதுக்கப்பட்ட பரப்பு.	நில அளவை எண். பரப்பு.
வீட்டு மனைகளாக ஒப்படை செய்யப்பட்ட நிலத்தின் பரப்பு.	நில அளவை எண். பரப்பு.
நேர்பாடு செய்யப்பட்ட மனைகளின் எண்ணிக்கை.	
மொத்த உரிமை பெறப்பட்டதற்கான செலவு.	ரூபாய்.
கிராம மக்களின் பொது நலத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் விலை.	ரூபாய்
வீட்டு மனைகளின் மொத்த விலை	ரூபாய்
அரசினர் ஏற்றுக்கொண்ட தொகை.	ரூபாய்.

நிலம் ஒப்படை பெற்றவரால் முதல் வைப்புத் தொகையாகச் செலுத்தப்பட்ட தொகை அரசினரால் முன் பணமாகக் கொடுக்கப்பட்டு ஆனால் நிலம் ஒப்படை பெற்றவர்கள் செலுத்த வேண்டிய தொகை ரூபாய் முன் பணம் திருப்பி வசூலிக்கப்பட வேண்டிய ஆண்டுகளின் எண்ணிக்கை.

பிரிவு ஆ.

குறிப்பு.—ஒவ்வொருவரின் கணக்குகளைப் பற்றிக் கீழ்க்கண்ட பக்கங்களைக் காண்க.

நிலம் ஒப்படை பெற்றவரின் பெயர்.
வீட்டு மனையின் எண் பரப்பு

அரசினிடமிருந்து முன் பணமாக வாங்கிய தொகை ரூபாய் முன் பணம் திருப்பி வசூலிக்கப்பட வேண்டிய ஆண்டுகளின் எண்ணிக்கை வட்டியும் முதலும் சேர்ந்த ஆண்டுத் தொகையாகச் சமப் பங்கீடு செய்யப்பட்ட திட்டத்தின் கீழ் அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய தவணைத் தொகை ரூபாய் .

வசூல்கள்

ஆண்டு	செலுத்தப்படவேண்டிய தொகை,	வசூல் செயப்பட்ட தொகையும் வசூலாகாதிகளும்.
முதலாவது ஆண்டு		
இரண்டாம் ஆண்டு		
மூன்றும் ஆண்டு.		
நான்காம் ஆண்டு		
ஐந்தாம் ஆண்டு		

படிவம் I.

* ஹரிஜன நலத் துறையினரிடமிருந்து உதவிகளைப் பெறத் தகுதியுள்ள வகுப்பினர்களுக்காகவும், நிலமில்லாத தொழிலாளர்களுக்காகவும் கிராமங்களில் வீட்டு மனைகளுக்காக நில உரிமை பெறுவதற்குமுன் பணங்களை தாலூகா கிராமத்தில் கிராம அலுவலர்கள் வசூலித்துச் செலுத்துவது.

1. தேதி.

2. யாரால் செலுத்தப்பட்டது.

3. விவரங்கள்.

(i) தீர்ப்பு எண்.

(ii) நில அளவை எண்.

(iii) வீட்டு மனையின் எண்.

(vi) நிலம் ஒப்படை பெற்றவரின் பெயர்

4. வசூலான தொகை விவரம் :—

நாளது வரை செலுத்த வேண்டிய தொகைகளுக்காக—

(i) பாக்கி.

(ii) நடப்பு.

இப்பொழுது செலுத்தப்படுதற்குரியனவாக இல்லாத தொகைகள்.

5. மொத்தம்.

6. குறிப்புரை.

கிராமத் தலைமை அலுவலரின் கையெழுத்து. எழுத்தால் மொத்தம்.

கிராமக் கணக்கரின் கையெழுத்து. செலுத்து சீட்டின் எண் தாலுகாத் தலைமைக் கணக்காளரின் சுருக்கொப்பம்.

படிவம்

தாலுகாவில் ஹரிஜன நலத் துறையினரிடமிருந்து உதவிகளைப் பெறத் தகுதியுள்ள வகுப்பினர்களுக்காகவும், நில மில்லாத தொழிலாளர்களுக்காகவும் கிராமங்களில் வீட்டு மனை களுக்காக நில உரிமை பெறுவதற்குக் கொடுக்கப்பட்ட முன் பணங்களைத் திருப்பிக் கொடுக்கப்பட்டதைக் காட்டும் விவர அறிக்கைகள்.

1. தேதி.

2. செலுத்தும் சீட்டின் எண்.

3. கிராமம்.

4. நில அளவை எண்.

5. தீர்ப்பின் எண்ணுடன் தேதியும்.

6. நாளது வரை செலுத்த வேண்டிய தொகைகளுக்காக—

( ) பாக்கி.

( ) நடப்பு.

7. வருங்காலத் தொகைகளுக்காக.

8. மொத்தம்.

9. குறிப்புரை.

படிவம் II.

[redacted] தாலுகாவில் 1[redacted] மாதத்தில் ஹரிஜன நலத் துறையினரிடமிருந்து உதவி பெறத் தகுதியுள்ள வகுப்பினர்களுக்காகவும், நிலமில்லாத தொழிலாளர்களுக்காகவும் கிராமங்களில் வீட்டு மனைகளுக்காக நில உரிமை பெறுவதற்குக் கொடுக்கப்பட்ட முன் பணங்களின் கேட்பு-வசூல்-நிலுவையைக் காட்டும் விவர அறிக்கை.

விவரங்கள்.	அசல். ரூ.	வட்டி. ரூ.	குறிப்புரை-நிலுவையின் விவரங்கள்	
			இனம்.	தொகை. ரூ.
(1)	(2)	(3)	(4)	(5)
.... ஆண்டின் கேட்பு.			கருவூலக் கணக்கு முடிந்த பின்னர்	..
....மாதத்தின் வசூல்.			உரிமை பெற்ற தாலும் நில ஜப்தி யாலும் அடங்கியது.	..
....மாதம்வரையிலும் வசூல்.			கடிதப் போக்கு வரத்துக் குச் சம்பந்தப் பட்டது.	
மொத்தம்			மொத்தம்	
மாதத்தில் அதிக வசூல்.				
மாதம் வரையில் அதிக வசூல்.				
மொத்தம்				
நிகர வசூல்	..	..		
பாக்கி	..	..		

படிவம் II அ.

கேட்பு-வசூல்-நிலுவை—எடுத்தெழுதப்படும் கிராமப் பதிவேடு.

1. வரிசை எண்.
2. விவரங்கள்—
   வாங்குபவரின் பெயர்.
   நில அளவை எண்.
3. நிலுவைத் தொகை.
4. வசூலான தொகை.
5. அதிக வசூல்.
6. நிலுவை.
7. குறிப்புரை.

படிவம் II ஆ.

கேட்பு-வசூல்-நிலுவை—எடுத்தெழுதப்படும் தாலுகாப் பதிவேடு.

1. வரிசை எண்.
2. விவரங்கள்—
   கிராமப் பெயர்.
   தீர்ப்பின் எண்ணுடன் தேதி.
3. பாக்கித் தொகை.
4. வசூலான தொகை.
5. அதிக வசூல்.
6. பாக்கி.
7. குறிப்புரை.

படிவம் III

அரிஜன நலத் துறையினரிடமிருந்து உதவிகளைப் பெறத் தகுதியுள்ள வகுப்பினர்களுக்காகவும், நிலமில்லாத தொழிலாளர்களுக்காகவும் கிராமங்களில் வீட்டு மனைகளுக்காக நில உரிமை

பெறுவதற்குக் கொடுக்கப்பட்ட முன் பணங்களின் 19 ஆண்டு மாதத்தில் கூடுதல் குறைத்தல் குறிப்பு.

1. தாலுகா
2. மாதத் தொடக்கத்தில் நிலுவை
3. மாதத்தில் கொடுக்கப்பட்ட முன் பணம்
4. மொத்தம்
5. வசூல்—

   மாதம் வரையில்

   மாதத்தில்
6. மொத்தம்
7. நிலுவை
8. குறிப்புரை

19 ஆண்டு மாதத்தில் கொடுக்கப்பட்ட தனி முன் பணங்களின் விவரங்கள்.

1. தேதி
2. செலவுச் சீட்டு எண்
3. தொகை கொடுக்கப்பட்டவரின் பெயர்
4. எதற்காகக் கொடுக்கப்பட்டது, தீர்ப்பு எண், சட்டத் தொகை அளித்த தேதி.
5. தொகை
6. குறிப்புரை

19—2—1942 தேதி, 529 பொ. ப. (தொழிலாளர்) அ.ஆ.பல.

21—3—1942 தேதி, 16, வ.து.க.செ. அச்சு.

27—9—1954 தேதி, 2644, அ.ஆ.தொ.வா.பல.

29—7—1957 தேதி, 2515, அ.ஆ.தொ.தொழி. வா.

இணைப்பு V

(நில ஆணை 91, பத்தி 1.)

நில உரிமை பெறுதல்பற்றித் திருத்தி அமைக்கப்பட்ட விதிகள்.

தோற்றுவாய்.—"ஏஜண்டு" என்னும் சொல் இருப்புப் பாதைக் கழகத்தின்கீழ் நேரிடையாகப் பணி ஆற்றும் தலைமைப் பொறியாளரைக் குறிக்கும்.

"துறை" என்னும் சொல் "கிளை" அல்லது "பணி" இனத்தையும் குறிக்கும். "துறைத் தலைவர்" என்னும் சொற்கள் முதன்மையான அலுவலர்களைக் குறிக்கும்.

பொறுப்பு,—

(அ) நில உரிமை பெறல் அவசியமென்பதிலும்.

(ஆ) நில உரிமை பெறுவதற்குத் தக்க அதிகாரம் பெற்றவரிடமிருந்து ஒப்பளிப்பு பெறுவதிலும்.

(இ) விதிகளுக்கு விலக்காக ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசமிருக்குமாயின் அத்தகைய விதி விலக்கிற்கு இருப்புப் பாதைக் கழகத்தின் ஏற்பு பெற்றிருப்பதிலும்.

(ஈ) கொடுக்கும் விலைத் தொகை நியாயமானதாக இருப்பதிலும்.

(உ) வாங்கப்படுகின்ற நிலத்தின் தகுதியான உரிமை பெறப்படுவதிலும்.

(ஊ) நிலம் மிகச் சிறந்த அனுகூலத்திற்குப் பயனுவதிலும் கவனித்துப் பார்த்தல் இருப்புப் பாதை ஆட்சியின் பொறுப்பாகும்.

(அ) உட்பிரிவைப் பொறுத்தவரையில், நிச்சயமான தேவையில்லாமல் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு நில உரிமை பெறப்படாமல் இருப்பதற்காக உறுதி செய்யும் முதல் பொறுப்பு அத்தகைய துறைகளின் தலைவர்களைச் சார்ந்ததாகும். மேலும். அவர்கள் நில உரிமை பெறலின் அவசியத்தைப் பற்றி ஆட்சித் துறைத் தலைவர் ஒப்புக்கொள்வதற்குரிய அடிப்படைத் தகவல்கள் சரியாய் இருப்பதற்குப் பொறுப்பாளர்களாக்கப்பட்டிருக்கின்றனர். அரசினரிடமிருந்து கிரயமின்றி நிலத்தைப் பெறுவதற்கு உரிமையுள்ளவையாய்ச் சொந்தமாக இருப்புப் பாதையை நடத்திவரும் கம்பெனிகளின் இருப்புப் பாதைத் திட்டங்களுக்கு நில உரிமை பெறப்படுவனவற்றில், நிலம் இருப்புப் பாதைக்கு அது உண்மை

யாகவே தேவையா என்பதைப் பற்றி இருப்புப் பாதைக் கழகத்திற்குக் கருத்து தெரிவிக்க வேண்டியது அரசாங்க ஆய்வாளர்களின் பொறுப்பாகும்.

(ஈ) உட்பிரிவில் கண்டவற்றில் இறுதிப் பொறுப்பு ஏஜண்டையும் இருப்புப் பாதைப் பொறியாளரையும் சாரும்; ஆனால், நிலத்தின் உண்மையான விலை மதிப்பீட்டைப் பொறுத்தமட்டில், அவர்களின் முக்கிய பொறுப்பு அந்த அந்த தலத்து வருவாய்த் துறை அலுவலர்களிடமிருந்து, நில உரிமை பெறற்குரிய நடவடிக்கை தொடங்குவதற்கு முன்னதாகக் கூடுமான வரையில் சரியான விலை மதிப்பீடு பெறுவதில் உள்ளது.

(உ) உட்பிரிவைப் பொறுத்தமட்டில் (i) தேவையான தரைப் படங்கள் வரைந்து, மதிப்பீடு தயார் செய்யப்படுவதற்கும், (ii) தல வருவாய்த் துறை அலுவலர்கள் கேட்கும்போது நிலத்தைச் சுவாதீனம் செய்து கொள்வதும், (iii) நிலத்தின் எல்லை வரையறுப்பதும் அவற்றைத் தரைப்படங்களில் வரைவதும் பொறியியல் பணித் துறையினரின் பொறுப்பாகும்.

(ஊ) உட்பிரிவிலுள்ளதைப் பொறுத்தவரையில், பொறியியல் துறையினரோ அல்லது நிலம் எந்தத் துறையின் வசதியிலிருக்கிறதோ, அத் துறையினரோ அந்நிலம் சிறந்த முறையில் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது என்பதைக் கவனித்துப் பார்க்க வேண்டிய பொறுப்பாளராவார்கள். முக்கியமாக, நிலத்தின் எப் பகுதியேனும் இருப்புப் பாதையின் உபயோகத்திற்கு உடனடியாகத் தேவையில்லை என்றால், பின்னர் தேவையாகும்போது அதைத் திருப்பி அடைவதற்கு வேண்டிய பாதுகாப்பு நிபந்தனையுடன் அதைச் சரியான தொகை குத்தகைக்குப் பிறருக்குக் கொடுக்கலாமா என்பதைக் கவனிக்க வேண்டும்.

11—4—1932 தேதி, 802, அ.ஆ.வரு.பலவ.
21—4—1932 தேதி, 1255, வ.து.க.செ.பலவ.

துவக்கம்.

இருப்புப் பாதையைப் பொறுத்தவரையில் நிலத்தின் உரிமை பெறல், நிலத்தின் உரிமை மாற்றிக் கொடுத்தல், நிலத்தின் உரிமை விட்டுவிடுதல், நிலத்தைக் குத்தகைக்குக் கொடுத்தல் முதலியவற்றைப்பற்றி அவ்வப்போது மத்திய அரசாங்கமும், இருப்புப் பாதைக் கழகமும் பிறப்பித்த ஆணைகளின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதிகள் அரசினரால் அல்லது கம்பெனிகளால் அமைக்கப்பட்டுள்ள அல்லது நடத்தப்பட்டுவரும், எல்லா இருப்புப்பாதை ஆட்சிகளும், அனுசரிக்க வேண்டும்.

குறிப்பு.—இவ்விதிகள் மின்சார டிராம் வழிகளுக்காக எடுக்கப்பட்ட நிலங்களுக்குப் பொருந்தா.

பிரிவு I.

பொது அறிவுரைகள்.

சட்டத்தின் கீழ் தவறுமல் நிலம் எடுக்கப்பட வேண்டும்.

2. அரசினருக்கு முன்னமே சட்ட உரிமையில் இல்லாத எந்நிலமும் இருப்புப் பாதைக்காகத் தேவையாக இருந்தால், 1894-ஆம் ஆண்டு I-வது நில உரிமை பெறும் சட்டத்தின்கீழ் அந்நிலத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், இச்சட்டத்தின்கீழ் உரிமை பெறுவதால் மறுக்க முடியாததான உரிமை கிடைக்கிறது. முன்னமே பொதுச் சொத்தாகவிருந்து அதில் தனிப்பட்டவர் எவருக்காயினும் எத்தகைய உரிமையும் இல்லாதிருப்பின் அதைப்பற்றி நில உரிமை பெறும் சட்டத்தில் நடவடிக்கை எடுக்கக்கூடாது.

3. (i) இச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை தொடங்கு முன்னரே சிக்கனத்தை முன்னிட்டு நில உரிமையாளர்களிடம் நேர்முகமாகவோ அல்லது பிரதிநிதி, தூணவர் அல்லது தரகர் வழியாக தனிப்பட்ட முறையில் அந்நிலத்திற்குக் கொடுக்கப்படவேண்டிய விலைத் தொகையைப் பற்றி ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.

இருப்பினும், அவ்வாறு ஒப்பந்தம் செய்துகொள்ளும் முன்னர் நிலத்தின் விலையை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு உதவும் பொருட்டு, அந்த அந்த தலத்து வருவாய் அலுவலரிடமிருந்து அந் நிலத்தின் தோராயமான விலை மதிப்பு என்ன என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வொப்பந்தத்தைத் தல வருவாய் அலுவலர் அல்லது நில உரிமை பெறுவதற்காக நியமிக்கப்படும் தனி அலுவலருக்கு அறிவிக்க வேண்டும். அவர் அதை ஒப்புக் கொள்ளக் கட்டுப்பட்டவரல்லராகினும், சாதாரணமாக அவ் விலையை தம் தீர்ப்பிற்கு எடுத்துக்கொள்வார். உண்மையில் எல்லா நிலத்தின் உரிமை பெறவேண்டியவற்றையெல்லாம் நில வருவாய் உரிமை பெறல் கட்டத்தின்கீழ் உரிமை பெறப்பட வேண்டும்.

(ii) பெரிய நகரங்களுக்கு அருகில் அல்லது, நெருக்கடியாக உள்ள மற்ற இடங்களில் நிலங்களின் உரிமை பெறப்படும்போது, மேற்சொன்ன தனிப்பட்ட முறையில் ஒப்பந்தம் செய்துகொள்வது விரும்பத்தக்கதா என்பதை எப்போதும் கவனித்துப் பார்க்க வேண்டும். இவ்வாறு செய்யும்போது ஒப்பந்தம் செய்து கொள்ளும்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட விலை சட்டத்தின் 23 (2)

ஆவது பிரிவின்கீழ் அளிக்கப்பட வேண்டிய தொகையுடன் 15 சத வீத கூடுதலான ஈட்டுத் தொகையும் சேர்ந்திருக்கிறதா, இல்லையா என்பதில் விளக்கம் இருக்க வேண்டும்.

ஆகையால் இந்தத் தனிப்பட்ட உடன்படிக்கை ஒரு குறித்த தொகையும், அதற்கு 15 சதவீதம் கூடுதலான தொகையும் சேர்த்து அந்த நிலத்தின் சரியான விலை என்று ஒத்துக்கொண்டு அந்நில உரிமையாளர் அதை அந்த விலைக்கு விற்க சம்மதிப்பதாக, ஓர் உடன்படிக்கை அமைக்கப்பட வேண்டும்.

(iii) இதற்காக ஒரு பிரதிநிதி அல்லது தாகர் அமர்த்தப்பட்டால் அவருக்குக் கொடுக்கவேண்டிய ஊதியம் ஏதாவது இருப்பின் அதற்கு இருப்புப் பாதைக் கழகத்தின் ஒப்பளிப்பு வேண்டும். இத்தகைய ஊதியம் இறுதியில் ஒத்துக்கொள்ளப்பட்ட விலைத் தொகையில் ஒரு சதவீதமாக இருக்கக்கூடாது. மேற்சொன்ன ஊதியம் அனுமதிக்கப்பட்டு கொடுக்கப்பட்டால் அது உரிமை பெறுவதற்கான செலவுடன் சேர்க்கப்பட வேண்டும்.

11—4—1932 தேதி. 802, அ.ஆ.பலவ.
21—4—1932 தேதி. 1255, வ.து.க.செ.வரு.பலவ.

நில உரிமைகள் பெறல் ஏற்பாடுகள் தல அரசினர் மேற்கொள்ள வேண்டும்.

4. இருப்புப்பாதைக்குத் தேவையான நிலத்தின் உரிமை பெற்றதாக மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் எல்லாவற்றையும் உரிமை பெறப்படவேண்டியவை எந்த மாநிலத்திலிருக்கின்றதோ அந்த மாநிலத்தின் அரசினர் அல்லது ஆட்சியினர் இயற்றி முடிக்க வேண்டும். ஆதலினால், உரிமை பெறற்குரிய நடவடிக்கை நடைமுறையும் அது சம்பந்தமாகக் கொடுக்கப்படவேண்டிய தகவலும் அந்த அந்த சம்பந்தப்பட்ட ஒவ்வொரு தல அரசினர் அல்லது ஆட்சியினர் பிறப்பித்துள்ள அறிவுரைகளே ஒத்திருக்க வேண்டும்.

முதலில் இருந்த ஆணைகளைப் பற்றி, மத்திய அரசாங்கம், பொறி இயல் பணித் துறைக் கடிதம் 1904-ம் வருடம் நவம்பர் மாதம் 12-ம் தேதி "ஏ" இணைப்பில் அச்சடிக்கப்பட்டுள்ள 1780 எண் கடிதத்தில் காண்க.

எல்லா நிலங்களும் நிலையான உபயோகத்திற்காகத் தக்கொள்ளப் பட வேண்டும்.

5. சாதாரணமாக இருப்புப்பாதைக்காக தற்காலிகமாகவோ அல்லது நிலையான உபயோகத்திற்கோ, உரிமை பெறப்படும் எல்லா நிலங்களும் முதலில் அவை நிலையான உபயோகத்தின் தேவைக்கென்றே எடுக்கப் படுகின்றன எனக் கொண்டு, அதன் விலையும் அவ்வாறே கணக்கிடப்படவேண்டும். இருப்பினும், நிலம்

தற்காலிகமான உபயோகங்களுக்கு மாத்திரமே தேவையாக இருந்து, அத்தகைய தற்காலிகமான உபயோகத்தின் கால அளவு இறுதி அடைந்த பின்னர், நிலம் அவ்வாறு தற்காலிகமான உபயோகத்திற்கு உடனடியாக, முன்னதாக எந்த உபயோகத்திற்கு நிலம் பயன்படுத்தப்பட்டதோ அந்த உபயோகத்திற்கு அநேகமாகத் தகுதியாகாது என்பதற்கு வாய்ப்பு இருக்கு மேயானால் இத்தகைய தனிச் சந்தர்ப்பங்களில் நில உரிமை பெறல் (1894-ஆம் ஆண்டு I-ஆவது) சட்டத்தின் 35(1) பிரிவின்கீழ், நடவடிக்கை எடுப்பதில் சிக்கனம் ஏற்படுமெனில் அவ்வாறே செய்யலாம் தரிசு அல்லது பயிர் விளைவிக்கத் தக்க நிலம் மூன்று ஆண்டிற்குத் தவணை மேற்படாத காலத்திற்கு மாத்திரம் தற்காலிகமாக அநுபோகம் செய்துகொள்ள முடியும். 1894-ஆம் ஆண்டு நில உரிமை பெறல் சட்டத்தின் 35(1)-ஆவது பிரிவைக் காண்க.

இருப்புப் பாதை நிலங்களின் பாகுபாடு

6. எக்காரியத்திற்காக நில உரிமை பெறப்படுகின்றதோ அக் காரியம் முடிவடைந்த பின்னர் அந் நிலத்தின் நிலைமை எவ்வாறு இருக்கக்கூடும் என்பதை நிச்சயம் செய்யும் பொருட்டு கீழ்க் கண்ட பாகுபாடுகள் மேற்கொள்ளப்படும்.

(அ) அரசாங்கத்தாலோ அல்லது ஒப்பந்தத்தை அனுசரித்தோ நியமின்றி நிலத்தைப் பெற உரிமையில்லாத கம்பெனிகளாலோ அமைக்கப்பட்ட இருப்புப் பாதைகள்.—

(i) நிலையான நிலம்.

(ii) தற்காலிக நிலம்.

என இருவகையின.

(i) நிலையான நிலம்.—இருப்புப் பாதை வேலைகள் முடிவடைந்து போக்குவரத்திற்காக இருப்புப்பாதை திறக்கப்பட்ட பின்னரும் நிலையாகத் தேவையாக உள்ள நிலம், நிலையான இருப்புப்பாதை வழியும் அதன் பக்கக் கரைகள், அவற்றின் சாய்வுகள் வெட்டப்பட்ட பாகங்கள், அவற்றின் சரிவுகளின் இருஓரங்கள், தண்ணீர் வடிவதற்காக வெட்டப்பட்ட பரப்புகள், ஓடைகள், மண் எடுக்கப்பட்ட குழிகள், அல்லது இவற்றில் இருப்புப் பாதையினர் வசம் வைத்துக்கொள்ள வேண்டிய பாகங்கள், குகை வழிகள் இடங்கள், சுரங்க வழிகள், பாலங்கள் கட்டப்பட்ட இடம், அவற்றின் பாதுகாப்பு அல்லது தண்ணீர்ப் போக்கை நேர்படுத்துவதற்கு வேண்டிய இடம், இருப்புப் பாதை நிலையத்தை ஒட்டிய வெளியிடங்கள் இருப்புப் பாதை படகுகள் இறங்குமிடம்,

இருப்புப் பாதைக்குச் சம்பந்தப்பட்ட வேலைகளுக்குத் தேவையான நிலம், அதாவது வாயு நிலையங்கள், தண்ணீர் வசதி ஏற்பாடுகள், நச்சுத் தடைக் குழிகள், வடிகட்டும் தரை மட்டங்கள் படிகைகள், நீர் ஏற்று அமைப்புகள் முதலிய பொருள்கள் சேகரித்து வைக்கும் அல்லது தயாரிக்கும் இடங்கள், சுகாதாரத் துப்புரவு வட்டாரங்கள், கல்லறைகள், கிருத்துவ கோயில்கள், தோப்புகள், தோட்டங்கள், பொழுதுபோக்கு இடங்கள், இருப்புப் பாதை நிலையங்கள், அலுவலகங்கள், பட்டறைகள், இருப்புப் பாதைக்கு வேண்டிய குடியிருப்பு வீடுகள், கட்டடங்கள், பணியாளர்களுக்கு வேண்டிய இட வசதிகள் இவற்றை ஒட்டிய இடங்கள், முற்றங்கள், சாலைகள் முதலியவைகளுக்கான இடங்களும் நிலையான நிலமாகும்.

மேலும் நிலையான இருப்புப் பாதை எல்லைக்கு அப்பால் இருப்புப் பாதை அமைத்ததின் காரணமாகப் பொதுக் காரியங்களுக்கு சாலைகள், நதிகள் இவற்றை நிலையாகத் திருப்பி அமைக்கவும் மற்றும் இருப்புப் பாதைக்குச் சம்பந்தப்பட்ட ஏனைய வேலைகளுக்குத் தேவையாக இருந்த நிலமும் இவ்வேலைகள் நிறைவு பெற்ற பின்னர், இருப்புப் பாதை ஆட்சியினரால் பராமரிக்கப் படாமல் விடப்பட்டவை. இத்தகைய நிலங்களும் இருப்புப் பாதை நிலையான நிலமாகும்.

(ii) **தற்காலிகமான நிலம்.**—தற்காலிக உபயோகத்திற்கு மட்டும் உரிமை பெறப்பட்ட நிலங்கள்.—வேலை முடிந்த பின்னர் அவற்றின் உரிமை விட்டு விடப்படும் நிலங்கள்.

(ஆ) விலையின்றி நிலத்தைப் பெற்றுக்கொண்டு கம்பெனிகளால் அமைக்கப்பட்ட இருப்புப் பாதைகள், கம்பெனிகளால் இலவசமாக உரிமை பெறப்பட்டு இருப்புப் பாதைகள் அமைக்கப் பட்ட நிலங்கள் நான்கு வகைப்படும். அவையாவன:—

(i) "அ" வகுப்பு நிலம்.
(ii) "ஆ" வகுப்பு நிலம்.
(iii) "இ" வகுப்பு நிலம்.
(iv) "ஈ" வகுப்பு நிலம்.

(i) "அ" வகுப்பு நிலம்.—நிலையான உபயோகத்திற்காக அரசாங்க ஒப்பந்தம் அல்லது மற்ற ஏற்பாட்டின் கீழ் இருப்புப் பாதைக்காக கிரயமின்றி பெறப்படும் நிலமாகும். இருப்புப் பாதைக்குச் சம்பந்தப்பட்ட நிலையான வேலைகளுக்கும் இருப்புப்

பாதை அமைக்கப்பட்ட பிறகும் தேவையாக இருக்கக்கூடிய எல்லா நிலங்களும் இவ் வகுப்பில் அடங்கும். இதே வகுப்பில், நிலையான இருப்புப் பாதை வழியும் அதற்குச் சேர்ந்த பக்கச் சரிவுகளும் இரு ஓரங்களும், தண்ணீர் வடிவதற்குள்ள வெட்டுப் பாப்புகள், ஓடைகள் முதலியவற்றிற்குத் தேவையான நிலமும் அடங்கும். ஒப்பந்தம் இறுதி அடையச் செய்யும்போது அல்லது விட்டுவிடப் பட்ட நிலம் முழுவதும் அரசாங்கத்திற்குத் திரும்ப வரும் வரையில் இருப்புப் பாதையினரின் நிலையான உபயோகத்தில் இருந்து வரும்.

(ii) "ஆ" வகுப்பு நிலம்.—தற்காலிக உபயோகத்திற்காக அரசாங்க ஒப்பந்தம் அல்லது மற்ற ஏற்பாட்டில் இருப்புப் பாதையினரால் கிரயமின்றி பெறப்படும் நிலம் இருப்புப் பாதையின் நிலையான வேலைகளைச் செய்வதற்குத் தேவையாயும், அவ்வேலை முழுமையுமோ அல்லது பகுதியோ முடிவடைந்த பின்னர் தேவையாகாத நிலமாகும். அதாவது சரிந்த கரையின் புனரமைப்புக்காக தேவையாக உள்ள மண் வெட்டி எடுத்ததற்குரிய நிலங்கள், வேலை முடியும்வரை இருப்புப் பாதை வசமிருக்கும் பொருள்களை வைத்திருக்கவோ அல்லது வேலை நடக்குமிடத்திற்கு அனுப்பவோ சேமித்து வைக்குமிடம் முதலியன இத்தகைய நிலங்களாகும்.

(iii) "இ" வகுப்பு நிலம்.—இருப்புப் பாதையினர் தங்கள் செலவில் அமைத்துக்கொள்ளும் நிலம். இருப்புப் பாதை வேலை நடப்பதற்குத் தேவையான பொருள்களைச் சேகரிப்பதற்கு அல்லது தயாரிப்பதற்கு வேண்டிய நிலம் அல்லது நிலத்தைக் கிரயமின்றிப் பெறுவதற்கு உரிமை இல்லாவிடினும், இருப்புப் பாதை வேலைக்கு நியாயமாக வேண்டியது என்று அரசினர் கருதக்கூடிய பலவகைக் காரியங்களுக்குத் தேவையான நிலம், இதன் கீழ் வரும்.

(iv) "ஈ" வகுப்பு நிலம்.—இருப்புப் பாதையினர் நேரிடையாக உபயோகப்படுத்தா விட்டாலும் அவர்களின் வேலைக்கு ஏற்படக்கூடிய தேவையின் நிமித்தமாக வேண்டிய நிலம் இவ் வகுப்பில் அடங்கும். இது கிரயமின்றிக் கொடுக்கப்பட்டுப் பிறகு இருப்புப் பாதையினரால் பராமரிக்கப்படாமல் பொது நலனுக்காக இருப்புப் பாதை எல்லைக்கு அப்பாலுள்ள சாலைகள், ஆறுகள் இவற்றின் போக்குகளை மாற்றி அமைக்கவும் சாலைகள் அமைக்கவும் தேவைப்படும் நிலம் இதன் கீழ் வரும்.

மேற்கண்ட பாகுபாடுகள் பொதுவாக இருப்புப் பாதையினருக்குக் கிரயமின்றி கொடுக்கப்படும் நிலத்திற்குப் பொருந்தும். யாகக் கிரயமின்றி நிலம் பெறும் நிபந்தனைகள் மாற்றப்பட்டால்,

சில சந்தர்ப்பங்களில் ஒப்பந்தம் அல்லது மற்ற ஏற்பாட்டின் வழி அத்தகைய சந்தர்ப்பங்களில் அவற்றிற்கேற்ப இத்தகைய பாகு பாடுகளையும் மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படும். உதாரணமாக 'இ' வகுப்பைச் சேர்ந்த நிலத்தை இலவசமாகப் பெறுவதற்கான உரிமையிருந்தால் அத்தகைய நிலம் நிலையாகவோ அல்லது தற் காலிகமாகவோ தேவைப்படுகிறது என்பதை அனுசரித்து அதை 'அ' அல்லது 'ஆ' வகுப்பில் காட்ட வேண்டும்.

நிலத்தை ஓரினத்திலிருந்து மற்றொரு இனத்திற்கு மாற்றும் போது அம்மாறுதலினால் அரசாங்க நிதியில் செலவு ஏற்பட்டால் மாத்திரம், இருப்புப் பாதைக் கழகத்தின் ஏற்பைப் பெறவேண்டும்.

மாநில அரசாங்கம் அல்லது தல ஆட்சியினரது கட்டுப்பாட்டிலுள்ள இருப்புப் பாதைகள்.

8. நிர்வாக முறையில் மாநில அரசாங்கம் அல்லது தல ஆட்சியினரின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட இருப்புப் பாதைக்கு அது இந்திய யூனியன் நிதிக்குச் சம்பந்தப்பட்டிருந்தாலன்றி அத்தகைய மாநில அரசாங்கம் அல்லது ஆட்சியினருக்கு நேராக எழுதிக்கொள்ள வேண்டும். மாநில அரசாங்கம் அல்லது ஆட்சியினர் நில உரிமை பெறுதல்பற்றி ஏதாவது தொழில் நுட்ப அறிவுரை வேண்டியிருப்பின் சம்பந்தப்பட்ட வட்டத்தின் அரசாங்க இருப்புப் பாதை ஆய்வாளர்களின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பிரிவு II.

நில உரிமை பெறும் சட்டம் செயற்படுத்தப்படுமுன் மேற்கொள்ள வேண்டிய துவக்க நடைமுறைகள்.

நிலத்திற்காகச்செய்யப் படும் விண்ணப்பத் தில் குறிப்பிடவேண் டிய விவரங்கள்.

9. இருப்புப் பாதைக் காரியங்களுக்காக நிலம் தேவையாக இருப்பின் அதன் மதிப்பைப்பற்றி ஒரு அறிக்கையும் அந் நிலத்தின் உரிமை பெறுவதற்காக அதற்கு அளிக்கப்பட வேண்டிய வரைவு உறுதிமொழியும் அனுப்புமாறு மாவட்டத்தின் பொறுப்பிலுள்ள அலுவலருக்கு நேராக எழுதிக்கொள்ள வேண்டும். நிலம் எந்த உபயோகத்திற்காகத் தேவை என்பதைத் தெளிவாய்க் குறித்து, அதனுடன் நிலத்தின் பரப்பு முதலிய விவரங்களையும் அதை அடையாளம் கண்டு பிடிக்கத்தக்க விவரங்களையும் கீழ்க் கண்ட பத்திரங்களுடன் அனுப்ப வேண்டும்:—

(அ) மேலே கண்டவாறு தயாரிக்கப்பட்ட தரைப்படங்களின் முழுத் தொகுப்பு.

(ஆ) 'ஆ' இணைப்பில் குறிப்பிட்ட படிவத்தில் அல்லது அந்த அந்த தல நிலைகளுக்கு ஏற்ப அரசாங்கம் அல்லது தல ஆட்சியிலர் குறிப்பிடக்கூடிய படிவத்தில் தயாரிக்கப்பட்ட விவர அட்டவணைகளின் முழுத் தொகுப்பு.

10. உரிமை பெறப்படும் நிலங்கள் ஒரு மாவட்ட எல்லைக்கு அப்பாற்பட்டு ஆனால் ஒரு கோட்டத்தின் எல்லைக்குள் இருக்குமானால் விண்ணப்பம் கோட்ட ஆணையாளருக்கும், சில கோட்டங்களைச் சேர்ந்தவையாக இருப்பின் அந்த *மாநில முதன்மை வருவாய் அலுவலருக்கும் விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும்.

11. பெரிய அளவில் நிலம் உரிமை பெறப்படும்போது, நிலங்களைச் சரியான முறையில் அடையாளங் காட்டுமாறு கீழ்க்கண்ட விவரங்களையும் இருப்புப் பாதைத் துறையினர் மாநில அரசாங்கம் அல்லது தல ஆட்சியினருக்கு அவ் விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும்:—

(அ) இருப்புப் பாதையின் பெயர்.

(ஆ) அவசியமிருப்பின், இருப்புப் பாதை அமைப்பதற்கு ஒப்பளிப்பு கொடுக்கப்பட்ட அரசாங்க ஆணையின் நகல்.

(இ) முக்கியமான எந்தக் கிராமங்கள் அல்லது நகரங்களின் வழியாக அல்லது அருகில் இருப்புப் பாதை செல்ல வேண்டுமென விரும்பப்படுகிறதோ அக்கிராமங்கள் அல்லது நகரங்களின் பெயர்களுடன் இருப்புப் பாதையினர் மேற்கொள்ள வேண்டிய வழியையும் பற்றிய சிறிய விவரக் குறிப்பு.

(ஈ) இருப்புப் பாதைக்காக எந்த எந்த மாவட்டத்தில் நிலம் தேவையென்பதும் ஒவ்வொரு மாவட்டத்திலும் தோராயமாக எவ்வளவு ஏக்கர் நிலம் தேவையென்பதும் அடங்கிய ஒரு குறிப்பு.

(உ) ஒவ்வொரு மாவட்டத்திலும் அதற்குச் சம்பந்தப்பட்ட தரைப் படங்கள், எந்த இடம் அல்லது இடங்களில் பொது மக்கள் பார்வையிடலாம் என்னும் தகவலையுடைய குறிப்பு.

ந.க.—சமயக் கட்டடங்கள், இடுகாடுகள் மற்றும் புனிதமான இடங்கள் அல்லது புனிதமானவை எனக் கருதத்தக்க காரியங்களுக்கு உபயோகப்படும் இடங்களின் உரிமை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமலிருக்கக் கவனித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு சமயக் கட்டடங்கள் முதலியன எவையாயினும் இருப்பின் அவற்றைப்பற்றி விண்ணப்பத்தில் தனியாகக் குறிப்பிட வேண்டும்.

---

*இந்திய அரசாங்கம் இருப்புப் பாதைகள் பொதுப் பணித் துறையின் 1895-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21-ம் தேதி 'ஒ' இணைப்பிலுள்ள 11 என் சுற்றறிக்கையைச் காண்க.

இருப்புப்பாதை செல்லும் வழியைக் காட்டக்கூடிய ஒரு மைலுக்கு ஒரு அங்குல அளவில் வரையப்பட்ட பொது அட்டவணைப் படம் மேற்சொன்ன அறிக்கையுடன் மாநில அரசினரின் தகவலுக்காக அல்லது தல ஆட்சியினரது தகவலுக்காக அனுப்புப்பட வேண்டும்.

12. 1894 ஆம் ஆண்டு ஆவது சட்டம் 35 ஆவது பிரிவின் கீழ்த் தற்காலிக உபயோகத்திற்கு மாத்திரமே நிலம் தேவையாக இருக்குமாலல் அதைப் பற்றித் தனி விண்ணப்பத்தில் எழுதி அனுப்ப வேண்டும்.

நில உரிமை பெறல் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருமுன் மதிப்பீடு தயாரிக்க வேண்டும்.

13. மேற்கூறியவாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் இருப்புப் பாதையினரிடமிருந்து வரப்பெற்றதும், அதற்குப் பொறுப்பு வாய்ந்த வருவாய் அலுவலர் சொத்து மதிப்பை விவரமாகக் கணக்கிடாமல் அதன் தோராய விலையைக் கூடிய வரையில் சரியாக மதிப்பிட்டு, அதனுடன் நில உரிமை பெறல் சட்டம் 6 ஆவது பிரிவின்கீழ் வரைவு உறுதிமொழி ஒன்றையும் எழுதி அனுப்பவேண்டும். அதில் நில உரிமை பெறுவதில் பொதுவாகவோ அல்லது குறிப்பாகவோ எத்தகைய ஆட்சேபணையுமில்லை என்பதைப் பற்றிக் குறிப்பிட வேண்டும்.* பெரிய திட்டங்களில் மேலே குறிப்பிட்ட அறிக்கைக்குப் பதிலாகத் திட்டங்களுக்குச் சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சேர்ந்த வெவ்வேறு வகை நிலங்களில் சராசரி ஏக்கர் விலை விவரத்தைக் கூடுமானவரையில் சரியாகக் கீழ்க்கண்ட மாதிரிப் படிவத்தில் அனுப்ப வேண்டும் :—

மைல்கள்.	ஏக்கருக்கு ரூபாய் வீதம். சாகுபடியானது. நீர்ப் பாய்ச்சப் பட்டது.	நீர்பாய்ச்சப் படாதது.	விவசாயம் செய்யப் படாதது.	குறிப்புரை.
(1)	(2)	(3)	(4)	(5)
3'15	80	30	10	
15.17	300	120	30	இராம்பூர் நகர நிலங்கள்.
17.27	35	25	5	

இந்திய அரசாங்கம் பொதுப்பணித் துறையினரின் 1895 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21-ஆம் தேதி IX ஆவது இருப்புப் பாதை சுற்றறிக்கை ('ஓ' இணைப்பில் காண்க) 3 ஆவது பத்தியில் கூறப்பட்டுள்ள விவரங்கள் அடங்கிய படக்குறிப்பு (அல்லது முன்னமே தயாரிக்கப்பட்டிருந்தால் அத்தகைய விவரமான தரைப் படங்கள்) அனுப்பப்பட்டாலன்றி எக்காரணத்தைக்கொண்டும் வருவாய்த் துறையினரை விலை மதிப்பு விவரம், தோராயமான மதிப்பும் கேட்கக்கூடாது. ஏனெனில், அவ்வாறு படக் குறிப் பின்றி முதல் விலை மதிப்பு செய்வதில் வருவாய்த் துறையினருக்கு தகாத பெரும் பொறுப்பு ஏற்படுகிறது.

14. ஒரு மாவட்டத்தில் நில உரிமை பெறப்படும் நிலத்தின் மதிப்பு 2,500 ரூபாய்க்கு மேற்பட்டாலும் அல்லது ஆணையாளரின் கோட்டத்தில் அது ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மதிப்புள்ளதா யிருந்தாலும் அவ்விவரப் பட்டியல்களில் முறையே நிலம் அமைந் துள்ள கோட்டத்தின் ஆணையாளர் அல்லது மாநிலத் தலைமை வருவாய் அதிகாரியின் மேலொப்பம் பெற வேண்டும்.

15. இவ்வறிக்கை அல்லது விவரப் பட்டியலுள்ள நிலத்தின் மதிப்பு உரிமை அதன் குடி உரிமைகளுடன் கொடுக்கவேண்டிய தொகை உட்பட இருக்க வேண்டும். ஆனால் நிலத்திலுள்ள வீடுகள், மரங்கள், பயிர்கள் முதலியவற்றின் மதிப்பை அதில் சேர்க்கக் கூடாது. இவற்றின் தோராய மதிப்பைப்பற்றி வருவாய்த் துறை அதிகாரிகள் தனியாக எழுதி அனுப்ப வேண்டும். மேற்கூறிய விவரப் பட்டியலுடன் சட்டத்தின் 23(1) பிரிவின் கீழ்க் கொடுக்கப் படவேண்டிய தொகை ஏதாவது இருக்குமானால், அதையும் நில வருவாய்க் கழிவு அல்லது அதற்குப் பதில் வருமான இழப்பிற்காக நில உரிமையாளர்களுக்கு அளிக்க வேண்டிய மூலதனத் தொகை ஏதாவது ஏற்படுமானால் அதையும் பணியாளர் செலவினங்கள் இவற்றையும் பற்றி தோராயமான மதிப்புப் பட்டியல் ஒன்றும் அனுப்ப வேண்டும். இவ்வாறு மதிப்பிடுவதில் தவறுதல் ஏற்படா திருக்கும் பொருட்டு விவரங்கள் சேகரித்தலில், வருவாய்த் துறை யினர் ஒப்பளிப்பு அதிகார வரம்புக்குள் இருக்குமானால் வருவாய் இடைத்த விவரங்களைக் கொண்டு இருப்புப் பாதையினர் சட் டத்தின் 23(1) உட்பிரிவு (1) ஆவது பிரிவின்கீழ் நில விலை மதிப் புடன் நில உரிமையாளர்கள் தாமாகவே நிலத்தை ஒப்படைக்கக்

கூடும் என்றாலன்றி, சட்டத்தின் 23(2) பிரிவின்கீழ் 15 சதவீதம் கொடுக்கப்படவேண்டிய கூடுதல் தொகையும் சேர்த்து மொத்த விலை மதிப்பீடு* தயாரிக்க வேண்டும்.

இவ்வாறு தயாரிக்கும்போது கீழ்க்கண்ட படிவத்தில் தயாரிப்பது நன்று:—

நிலத்தின் மதிப்பு ரூபாயில்.

ரூபாய்

செங்கால் நிலம்
குடும்ப மனை
கடைத்தெரு
(அ) கல் கட்டடம்
(ஆ) கூரை
(இ) மரங்கள்
(ஈ) பயிர்கள்

சட்டத்தின் 23(2) ஆவது பிரிவின் கீழ் நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகை, வீடுகள், மரங்கள், பயிர்கள் இவற்றின் விலைக்கு 15 சதவீதம் கூடுதலான ஈட்டுத் தொகையைச் சேர்க்க.

அதனுடன்—

அரசாங்க நிலம் உரிமை பெறப்பட்டதின் நடப்பு விலை மதிப்புத் தொகை;

சட்டத்தில் 23 (1) ஆவது பிரிவு உட்பிரிவு 2 முதல் 6 வரையில் அடங்கும் இழப்பின் ஈடு.

(அவசியமானால்) அரசாங்க வருவாய் மூலதனத் தொகை.

(அவசியமானால்) பணியாளர் தொகுதிச் செலவு.

சில்லறைச் செலவினங்கள், இவற்றையும் சேர்க்க.

இதைப்பற்றி வருவாய் அலுவலர்களும் கணக்கு துறை அலுவலர்களும் மேற்கொள்ளும் இந்நடைமுறை இந்திய அரசாங்கம் நிதித் துறை 1885-ம் வருடம் ஜூன் மாதம் 29-ம் தேதி 1580 என் ஆணையில் விதிக்கப்பட்டுள்ளது.

சென்னை போன்ற மாநிலங்களில் கோட்ட ஆணையாளர் இல்லாத இடங்களில் மாவட்ட கலெக்டரின் மேலொப்பம் போதுமானது.

இருப்புப் பாதை ஆட்சியினரிடமிருந்து இடைக்கக் கூடிய பெரும் பகுதியான அறிக்கைகளிலும், மதிப்பீடுகளிலும் பார்வையிட்டதில், இம்மதிப்பீடுகள் வருவாய் அலுவலரிடமிருந்து வரப் பெற்ற விவரங்களினின்று தயாரிக்கப்பட்டதாகக் காண வில்லையாதலால், இனி அவ்வாறு இடைத்த விவரத்தில் தயாரிக்கப்பட்டதென்று அறிக்கையிலோ அல்லது மதிப்பீட்டிலோ குறிப்புரை எழுதுவது நன்று.

16. அவ்வாறு, தயாரிக்கப்பட்ட மதிப்பீடு இருப்புப் பாதை யினர் ஒப்பளிப்பு அதிகார வரம்புக்குள் இருக்குமானால் வருவாய் அலுவலரிடமிருந்து நில உரிமை பெறப்படுவதற்கு எத்தகைய ஆட்சேபணையும் வராமலிருக்குமானால் இருப்புப்பாதை பிரதிநிதி அல்லது ஒப்பளிப்பு அளிக்க அதிகாரம் பெற்ற அலுவலர் ஒப்பளிப்பு தந்து போதுமான நிதி ஒதுக்குவார். பின்னர் மதிப்பீட்டிற்கு தலைமைக் கணக்குத் தணிக்கையாளர், அல்லது அரசாங்க நிதி கணக்கு ஆய்வாளரது மேல் ஒப்பம் பெற்று அதையும் அதனுடன் வரைவு உறுதி மொழி, கிரமமாகக் கையெழுத்திடப்பட்ட தரைப்படங்கள், அட்டவணைகளுடன் தல அரசாங்கம் அல்லது ஆட்சியினருக்கு அனுப்ப வேண்டும். அவர்கள் நில உரிமை பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வார்கள்.

இருப்புப் பாதைக் கழகத்தின் ஒப்பளிப்பு தேவையானால் இருப்புப்பாதை ஆட்சியினர் அத்தகைய ஒப்பளிப்பைப் பெற்ற பின்னரே நில உரிமை பெற மாநில அரசாங்கத்தினருக்கு அல்லது ஆட்சிக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

முன்னமே நிலம் உரிமை பெற அரசாங்கத்திற்கு விண்ணப்பம் செய்துகொண்ட பின்னர், நிலத்தின் பரப்பைக் குறைக்கத் தீர்மானித்தால், பரப்பை முன்னமே விளம்பரம் செய்த உறுதிமொழியைத் திருத்தி அமைக்க அல்லது நில உரிமை பெற நடவடிக்கையிலிருந்து பின்வாங்கிக் கொள்ளும் பொருட்டு அதை உடனடியாக அறிவிக்க வேண்டும்.

5—3—1935 தேதி, 578, அ.ஆ.பலவ.
25—3—1935 தேதி, 30 வ.து.க.செ. அச்சு.
14—9—1929 தேதி, 1893, அ.ஆ.வரு.
25—9—1929 தேதி, 2888, வ.து.க.செ.அச்சு.

17. ஒரு நிலத்தின் விலை வேலையின் செலவோடு பூரணமாக இணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இருப்புப் பாதையினருக்கு ஒரு வேலைக்கு ஒப்பளிக்க அதிகாரம் இருக்கிறதா என்று தீர்மானிக்கும்போது நிலத்தின் மதிப்புத் தொகையும், அது யாரால் செலுத்தப்பட்டாலும், அதையும் சேர்த்து, வேலையின் மொத்தச் செலவை எடுத்துக்கொள்ள வேண்டும்.

18. பொதுவாக, கிரமமாக ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட வேலைக்கன்றி நில உரிமை பெறப்படுவதில்லை. ஆனால் யாதொரு குறிப்பிட்ட வேலைக்கும் சம்பந்தப்படாத இருப்புப்பாதை காரியத்திற்கு உதாரணமாக துப்புரவு மண்டலம் முதலியவற்றிற்கான நிலங்களை

உரிமை பெறப்படுவதற்கு இது ஒரு தடையாகாது. 'நிலம் உரிமை பெறப்பட்டதா அல்லது மற்ற வகையில் ஒரு பாதை அல்லது சாலை இருப்புப் பாதையால் தடை செய்யப் பட்டு' அயலாளரின் உரிமை நிலையாகப் பாதிக்கப்பட்டால், அப்பாதைக்குப் பதிலாக வேறிடத்தில் பாதையமைப்பதற்கு நில உரிமை பெறப்பட்ட இருப்புப்பாதை பிரதிநிதிக்கு முழு அதிகாரம் அளிக்கப்பட்டிருக் கிறது.

19. அவசரமாக இருக்கும்போது, வேலையின் மொத்த செலவு தொகை இருப்புப்பாதையினர் வழங்கக்கூடிய ஒப்பளிப்புக்குட்பட் டிருக்குமானால் மூந்திய பத்தி விதியை அனுசரிக்காமல், வேலைக்கு அல்லது நிலத்திற்கு மதிப்பீடு தயாரிப்பதற்கும், ஒப்பளிப்பு பெறு வதற்கும் முன்னதாகவே நில உரிமை பெறலுக்கு ஒப்பளிப்பு செய்ய இருப்புப்பாதையினருக்கு அதிகாரம் இருக்கின்றது. நிலத்தின் மதிப்புத் தொகை அல்லது வேலையின் மதிப்புத் தொகை இருப்புப் பாதை ஆட்சியினரின் ஒப்பளிப்பு அதிகாரத்திற்கு அதிகப்படுமென்று தோன்றினால் நில உரிமை பெறுதலின் அவசர காரணங்களையும், அது எந்த வேலைக்காகத் தேவை என்ற விவரத் தையும் நிலத்தின் மதிப்பையும் வேலைக்காகும் செலவையும் பற்றிய விவரத்துடன் இருப்புப்பாதைக் கழகத்திற்கு நில உரிமை பெறு வதற்கான ஒப்பளிப்பு பெறுவதற்காக எழுத வேண்டும்.

ஒப்பந்தத்தில் இலவசமாக நிலம் பெற்று இருப்புப் பாதை அமைத்து நடத் தும் இருப்புப்பாதைத் தங் களுக்கு வேண்டிய நிலம் பெறுவதற்குரிய நடை முறை.

20. அரசாங்கத்தினிடமிருந்து இலவசமாக நிலம் அடைய உரிமை பெற்றுத் தாங்களே இருப்புப் பாதைகளை அமைத்து நடத்தி வரும் இருப்புப்பாதைக் கம்பெனிகள் கீழ்க்கூறப் பட்டுள்ளவாறு உரிமை பெறவேண்டிய நிலத்தின் தரைப்படங்களையும் அட்டவணை களையும் இரண்டு பிரதிகளில் தயாரித்து நிலம் உரிமை பெறுவதற்காகத் தல அரசாங் கத்திற்கோ அல்லது சம்பந்தப்பட்ட ஆட்சி யினருக்கோ அனுப்புவதற்கு முன்னர் இருப்புப்பாதை ஏஜண்டு அரசாங்க இருப்புப்பாதை ஆய்வாளரின் மேலொப்பத்துக்காக அனுப்ப வேண்டும். *அவற்றை வரப்பெற்ற அரசாங்க இருப்புப் பாதை ஆய்வாளர், அவ்வேற்பாட்டுக்கு ஒப்பளிப்பு செய்து, தரைப் படங்களிலும் அட்டவணைகளிலும் தம் மேலொப்பமிட்டு இருப்புப் பாதை ஆட்சியினருக்குத் திருப்பி அனுப்புவார். இவ்வாறு மேலொப்பம் செய்தல் அந்நிலம் இருப்புப்பாதை காரியங்

*இருப்புப் பாதைக்கழகத்தின் 22—7—1909 தேதி. 2149 என் கற்றறிக்கை யைக் காண்க.

களுக்கு உண்மையில் நிலம் தேவை என்பதைத் தெரிவிப்பதற்கே வன்றித் தரைப்படமும் அட்டவணையும் சரியாய் இருப்பதற்காக அன்று (தரைப்படங்களும், அட்டவணைகளும் பிழையின்றிச் சரியாக இருக்கின்றன என்பதற்கு இருப்புப்பாதை எஞ்சண்டு பொறுப்பாளராவர்). நில உரிமை பெறப்படும் வேலையின் செலவுத் தொகை இருப்புப்பாதை ஆட்சியினர் * அதிகாரத்திற் குட்பட்டதானல் அல்லது நிலத்திற்காகச் செய்யப்பட்டுள்ள ஒப்ப ளிக்கப்பட்ட திட்ட எற்பாட்டிற்குட்படுமானல் தரைப்படங்களும், அட்டவணைகளும் அனுப்பும்போதே தலைமைக் கணக்குத் தணிக்கையாளராலோ அல்லது அரசாங்க கணக்கு ஆய்வாள ராலோ மேலொப்பம் செய்யப்பட்ட முழு விவரங்கொண்ட நிலத்தின் மதிப்பீட்டை அரசாங்க இருப்புப்பாதை ஆய்வாளரின் ஒப்பளிப்பு பெறுவதற்காக அனுப்ப வேண்டும். மற்றவற்றிலெல் லாம் விவரமான விலை மதிப்பீட்டை இருப்புப்பாதை ஆட்சிக் கழ கத்தின் ஒப்பளிப்பு பெறுவதற்காக அனுப்ப வேண்டும். அதனுடன் அரசாங்க இருப்புப்பாதை ஆய்வாளர்கள் மேலொப்பம் செய்த அவ்வேலையின் செலவு விவரப் பட்டியையும், தரைப் படங்கள் அட்டவணைகள் இவற்றின் தொகுப்பையும் அனுப்ப வேண்டும்.

21. கிளைப்பாதைகள், அல்லது மாவட்டக் கழகங்கள் இருப்புப் பாதைகளை அவர்களுக்காக முதன்மைப் பாதை ஆட்சியினரே அமைத்து நடத்தி வரும் இனங்களுக்கு நிலம் தேவையானல் அரசாங்க இருப்புப்பாதை ஆய்வாளருக்குத் தரைப்படங்களும், அட்டவணைகளும் அனுப்ப வேண்டியதில்லை. வருவாய் அதிகாரிகளுக்கு எழுது முன்னர் தரைப்படங்களையும் அட்டவணை களையும் இருப்புப்பாதை ஆட்சி எஞ்சண்டு மேலொப்பம் செய்தல் போதுமானது. இத்தகையவற்றில் நிலத்திற்காகத் திட்ட மதிப்பில் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட வரம்பிற்கு உட்பட்டு மேற் கூறிய எஞ்சண்டு நிலத்தின் விவர மதிப்பீட்டிற்கு "பண உதவி பெறும் கம்பெனிகள்—நிலம்" என்னும் தலைப்பில் ஒப்பளிப்பு செய்யலாம். இத்தகைய கிளைப்பாதைகளோ மாவட்ட கழகங் களைச் சேர்ந்த இருப்புப்பாதைகளோ இவற்றின் வழிக்கு சம்பந்தப்பட்ட வேலைகளுக்குத் தேவையாகும் நிலங்களுக்குரிய தரைப்படங்களையும் அட்டவணைகளையும் மேலொப்பம் செய்வது மின்றி, அவ்வேலையின் செலவு, நிலமதிப்புத் தொகையும் சேர்ந்த

கிளைப் பாதைகளை முதன்மை பாதையினரே அமைத்து நடத்தி வருவனவற்றில் நடை முறை.

நிலத்தின் மதிப்பீட்டிற்கும் "பண உதவி பெறும் கம்பெனிகள்—நிலம்" என்னும் தலைப்பில் ஒப்பளிப்பு அளிக்கலாம். தமது ஒப்பளிப்பு அதிகாரத்திற்கு மேற்பட்டால், இருப்புப்பாதைக் கழகத்திற்கு ஒப்பளிப்பு பெறுவதற்கு அனுப்பவேண்டும்.

அரசாங்கம் இலவசமாக நிலம் கொடுக்கும்போது காலி நிலம் மாத்திரம் கொடுத்தல்.

22. அரசாங்கம் நிலத்தின் உரிமை பெற்று இருப்புப்பாதைக் கம்பெனிக்கு இருப்புப்பாதை அமைப்பதற்காக இலவசமாகக் கொடுக்கப்பட்டால் அவ்வாறு கொடுக்கப்படும்போது அதிலுள்ள பொருள்கள், மரங்கள், கட்டடங்கள் அல்லன எனில் இதர பொருள்கள் இவற்றை முடிவு செய்வதைப் பற்றி இருப்புப் பாதைக்கோ நிபந்தனை ஏதாவது இருந்தாலன்றி இருப்புப் பாதை காரியங்களுக்கு அவற்றை உபயோகித்துக் கொள்ளலாம். ஆனால் அரசாங்கம் அவ்வாறு நிலத்தை ஒப்படைக்கும் முன்னர் நிலத்துடன் வாங்கப்பட்ட அதிலுள்ள பொருள்கள், மரங்கள், கட்டடங்கள் முதலியவற்றைத் தாங்கள் விரும்புமாறு முடிவு செய்யவோ அல்லது அவற்றை முடிவு செய்வதைப் பற்றி நிபந்தனைகள் ஏற்படுத்தவோ, அவர்களுக்கு அதிகாரமுண்டு அவ்வகையில் கிடைக்கக்கூடிய விற்பனைத்தொகையை நில உரிமை பெறுவதற்குரிய செலவின் பாகத்திலிருந்து கழித்துக் கொள்ளலாம் நிலத்திலுள்ள தடைகள் அல்லது இடையூறுகளை நீக்கி இருப்புப் பாதை அமைப்பதற்கு வேண்டியவற்றைச் செய்வது இருப்புப் பாதையினரின் அலுவலாகும். நிலத்தில் எத்தகைய வில்லங்கமுமின்றி* காலி நிலத்தை ஒப்புவிப்பதுதான் அரசினர் ஏற்றுக் கொண்டுள்ள பொறுப்பாகும்.

பிரிவு III

சட்டம் அமலுக்கு வந்த பின்னர் நடைமுறை

உறுதிமொழி வெளியிடப்பட்ட பின்.

23. நில உரிமை பெறும் சட்டத்தின் 6-வது பிரிவின் கீழ் உறுதிமொழி வெளியிடப்பட்ட பின்னர் மாநில அரசினரால் அல்லது தல ஆட்சியினரால் கலெக்டர் அல்லது இதற்காக நியமிக்கப் பட்ட தனி அலுவலரை நில உரிமை பெறும் சட்டத்தின் கீழ் நில உரிமை பெறும் நடவடிக்கை தொடங்கக் கட்டளையிடப்படும். இதன் பிந்திய நடவடிக்கைகள் யாவும் மாநில

*மத்திய அரசாங்க பொறியியல் பணித் துறை 29—6—1961 தேதி. 55 என் கற்றறிக்கையை காண்க.

அரசினராயினும் தல ஆட்சியினராயினும் எடுத்துக் கொள்வார்கள். தீர்ப்புகள் அளிக்கப்பட்ட பிறகு இருப்புப் பாதையினர் நிலத்தை சுவாதீனம் செய்துகொள்ளலாம். ஆனல் அவ்வாறு செய்து கொள்ளும் முன்னர் நில உரிமை பெறும் அலுவலரின் அனுமதி பெற வேண்டும். நிலத்தை சுவாதீனப்படுத்திக் கொண்ட பின்னர் நில உரிமை பெறும் நடவடிக்கைகள் முடிவு பெற்றதும் அதனுடன் நிலம் முற்றிலும் அரசாங்கச் சொத்தாகும். சட்டத்தின்கீழ் நிலத்தை சுவாதீனம் செய்து கொள்ளும் வரையில் நில உரிமை பெறும் நடவடிக்கையிலிருந்து பின்வாங்க அரசாங்கத்திற்கு உரிமை உண்டு. நிலத்தை சுவாதீனப்படுத்திக்கொண்ட பின்னர் அவ்வாறு செய்வதற்கில்லை. உரிமை பெறும் சட்ட நடவடிக்கையி லிருந்து பின்வாங்கினல் முன்சொன்ன சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுத்துக்கொண்டதாலும் அறிவிப்பு அனுப்பியதாலும் நில உரிமையாளருக்கு ஏற்பட்டிருக்கும் இழப்பு ஏதாவது இருப்பின் அதற்கான இழப்பு ஈடு அளிக்க வேண்டியதிருக்கும் என்பதைக் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். [1894 ஆம் ஆண்டு ஆவது சட்டம் 48-(2) ஆவது பிரிவு].

தீர்ப்புக்காக மதிப்பிடு தல்.

24. சட்டத்தின் 11 ஆவது பிரிவின்கீழ் விசாரணை நடத்தி தீர்ப்பு அளிக்கும் நில உரிமை பெறும் அலுவலர் விசாரணைத் தேதியைக் குறித்து இருப்புப் பாதை ஆட்சியினருக்கோ அல்லது அவர் களின் முதன்மையான தலப் பிரதிநிதிக்கோ, ஒரு அறிவிப்பு அனுப்பி அவர்கள்* எழுத்து வடிவிலோ அல்லது நேரிலோ கூறுவனவற்றைக் கவனிக்க வேண்டும். மேலும் தீர்ப்பு அளிக்கும் முன்னர் இருப்புப்பாதை அலுவலர்களுக்கு நேரிலோ அல்லது பிரதிநிதி வழியாகவோ நிலத்தின் விலை மதிப்பைப்பற்றி சான்று ஏதாவது அளிப்பதற்கு ஒரு வாய்ப்பு கொடுக்க வேண்டும். இவ்வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு இருப்புப்பாதையினர் தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துத் தங்கள் உரிமையைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். மேலும் இருப்புப்பாதைக்கு இலவசமாக நிலம் கொடுப்பதானல், அவ்வகைகளில் அரசாங் கத்தின் நிலத்தை உத்தேசித்து மாவட்டக் கலெக்டராயினும் அவர் தீர்ப்பு அளிக்கும் அலுவலர் அல்லராயின் நில உரிமை பெறுவதற்கு அந்தகைய அதிகாரம் அளிக்கப்பட்ட நில உரிமை பெறும் அலுவலர், தீர்ப்பு அளிக்கும் தொகை அசல் மதிப்பீட்டில் குறித்த

*இந்திய அரசாங்க வருவாய் விவசாயத் துறையின் 28—6—1906, தேதி 9—2—39 என் சுற்றறிக்கையைக் காண்க.

தொகைக்கு 10 சத வீதத்திற்கு அதிகமாகவோ அல்லது அதற்கு 10,000 ரூபாய்க்கு அதிகமாகும் போலிருந்தால் மாவட்டக் கலெக்டர் வழியாக அரசாங்க இருப்புப்பாதை ஆய்வாளருக்காயினும் அல்லது இருப்புப்பாதை ஏஜண்டுக்காயினும் அல்லது அவர் பிரதிநிதிக்காயினும் எழுதிக் கேட்க வேண்டும். (மேலே 20, 21 பத்திகளைக் காண்க.) அரசாங்க ஆய்வாளராயினும் அல்லது இருப்புப்பாதை ஏஜண்டாயினும் நேரில் செல்வது உசிதமென்று கருதுவார் எனில், அதைப் பற்றித் தமக்குக் கடிதம் கிடைத்த ஒரு மாத காலத்திற்குள் மாவட்டக் கலெக்டர் வழியாக நில உரிமை பெறும் அலுவலருக்கு தெரிவிக்க வேண்டும். அவ்வாறு ஒருமாத காலத்திற்குள் எத்தகைய அறிவிப்பும் வரப்பெறுவிடில், அரசாங்க ஆய்வாளராயினும், இருப்புப்பாதை ஏஜண்டாயினும் நேரில் வரவில்லையென்றும், தீர்ப்பு அளிப்பதற்கு எத்தகைய ஆட்சேபனையும் இல்லையென்றும் கலெக்டர் கருதலாம். நிலம் வாங்கிக் கொண்டவரின் உரிமை சரியாகப் பாதுகாக்கப்படும் பொருட்டு மேற்கூறப்பட்டுள்ள நடைமுறையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம்.

விசாரணைக் காலத்தில் ஆட்சேபணைகளை விசாரித்து, செய்யப் பட்ட இறுதி முடிவு, நில உரிமை பெறுதலுக்கான அசல் மதிப்பைக் காட்டிலும் 20 சதவீதத்திற்கு அதிகமானாலும் அல்லது நிலத்தின் மதிப்பைப் பற்றிய சான்று மூன்பாடாக இருந்து நீதிமன்றம் அசல் மதிப்பை விட அதிகத் தொகை அளிக்கக்கூடும் என்று நம்பத்தக்கக் காரணங்கள் இருப்பதாகத் தோன்றுமானாலும், நில உரிமை பெறும் அலுவலர் தீர்ப்பு அளிப்பதை ஒத்தி வைத்து, இத்தகைய நிலையை இருப்புப்பாதை ஆட்சியினருக்குத் தெரியப்படுத்த வேண்டும். மேலும் தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதை இருப்புப்பாதை ஆட்சியினர் முடிவு செய்யும்வரை மேற்கொண்டு நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டும். இருப்புப்பாதை ஆட்சியினர் தங்கள் முடிவைத் தெரியப்படுத்துவதற்கு முன்னர் அந்த அதிகத் தொகையானது தங்கள் ஒப்பளிப்பு அதிகாரங்களுக்கு மேற்படுமாயின் அதைப்பற்றி இருப்புப்பாதைக் கழகத்தின் ஆணையைக் கோரி ஒரு அறிக்கை அனுப்பவேண்டும். அவ்வாறு அனுப்பும்போது மேற்சொன்ன நில உரிமை பெறுவதும் அவசியமாகுமா அல்லது அதற்குப் பதிலாக வேறு நிலம் ஏதாவது எடுத்துக்கொள்ள முடியாதா என்பதையும் தெளிவாக விளக்கவேண்டும். இருப்புப்பாதை வழியைச் சற்றுத்

தள்ளி அமைத்தே அல்லது மற்ற வகையில் தங்கள் நோக்கத்தை அதே வகையில் நன்கு நிறைவேற்றிக் கொள்ளக்கூடுமானால், அரசாங்கத்திற்கு அவசியமில்லாத செலவையோ நிலமுடையவர் களுக்கு இன்னலோ ஏற்படுமாறு அதை அமைப்பதைத் தடுக்க இருப்புப்பாதை ஆட்சியினர் எப்போதும் முயற்சி செய்ய வேண்டும்.

தல வருவாய் அதிகாரியோ அவர் பிரதிநிதியோ இருப்புப் பாதைக்குச் சேர்ந்த பொறி இயல் பணித் துறையில் உள்ள உதவிப் பொறியாளரின் பதவிக்குக் குறைந்திராத பதவி வகிக்கும் பிரதிநிதிக்கு நிலத்தின் சுவாதீனத்தை ஒப்புவிப்பார்.

நிலத்தின் பரப்பை தரைப்படத்தில் கண்டுள்ளவாறு சரி பார்த்து அது சரியாயிருந்தால், அதன் பின்னர் கூடிய விரைவினில் நிலையான எல்லை குறிகளால் நிலத்தின் எல்லை வரையறுக்கப்படும்.

அந்த தினத்தில் நிலத்தைச் சரியான முறையில் ஒப்புவிக்கப் பட்டு சுவாதீனப்படுத்திக் கொள்ளப்பட்டது என்ற ஒரு சான்று குறைந்தது இரண்டு பிரதிகளில் எழுதி அவற்றில் இரு திறத்தாரும் கையெழுத்திட்டு வருவாய்த் துறையின் அலுவலர் களும் இருப்புப்பாதை ஆட்சியின் அலுவலர்களும் ஒவ்வொருவரும் ஒரு பிரதி வைத்துக் கொள்ள வேண்டும்.

11—4—1932 தேதி, 802, அ.ஆ.பல.
21—4—1932 தேதி, 1225, வ.து.க.செ.பல.

திருத்த அமைத்த மதிப் பீடுகள்.

25. நில உரிமை பெறும் சட்டம் II ஆவது பிரிவின்கீழ் நடவடிக்கையில் இருக்கும்போது நிலத்திற்கு அளிக்க வேண்டிய தொகை அனுமதிக்கப்பட்ட தொகையைவிட அதிகம் என்று வெளிப்படையாக தோன்றுமானால், நில உரிமை பெறும் அலுவலர் இருப்புப் பாதை ஆட்சியினருக்கு அதைத் தெரியப்படுத்து வதுடன் மதிப்பீட்டை திருத்தி அமைப் பதற்கு வேண்டிய புதிதான விவரங்களையும் அளிக்க வேண்டும். அதன் பின்னர் இருப்புப்பாதை ஆட்சியாளர் முழு விவரங் களடங்கிய மதிப்புப் பட்டியைத் திருத்தியமைத்துக் கூடுதலான தொகை தங்கள் ஒப்பளிப்பு அதிகாரத்துக்குள் இருந்தால் அதற்கு அனுமதியளித்துத் தேவையான கூடுதல் தொகையையும் ஒதுக்கி

கொடுப்பார். மாற்றியமைக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு இருப்புப் பாதைக் கழகத்தின் ஒப்பளிப்பு தேவையானால் அசல் மதிப்பீட்டைவிட 10 சதவீதத்திற்கு அதிகப்பட்ட காரணத்திற்கு விளக்கம் தெரிவித்து அத்தகைய அனுமதி கோர வேண்டும். அசல் மதிப்பீட்டை போலவே மாற்றியமைக்கப்பட்ட மதிப்புப் பட்டிக்கும் பொறுப்பு வாய்ந்த வருவாய்த் துறை அலுவலரின் மேலோப்பம் பெற வேண்டுமே என்பதை கவனிக்க வேண்டும்.

26. நில உரிமை பெறும் நடவடிக்கை முடிவடைந்து தீர்ப்பு அளிக்கப்பட்ட பின்னர் இருப்புப்பாதைக் கழகத்தின் 1914-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் தேதி, 432 இ எண்—4374 சுற்றறிக்கையில் கண்டுள்ளவாறு வேலி நடந்து கொண்டிருக்கும் இருப்புப்பாதைகளுக்காகவும், இருப்புப்பாதை வழிக்காகவும் முடிவு அறிக்கை 18 லட்சமும் அதற்கு மேலும் செலவான இனங்களில் நில உரிமை பெறுதல் சம்பந்தமான உண்மையாகச் செலவைக் காட்டும் ஒரு முடிவு அறிக்கையை இருப்புப்பாதைக் கழகத்தின் ஒப்பளிப்பிற்கு அனுப்ப வேண்டும். அளிக்கப்பட்ட தீர்ப்புகளிலிருந்து இருப்புப்பாதையினர் இம் முடிவு அறிக்கை கூடத் தயார் செய்ய வேண்டும்.

27. இருப்புப்பாதை அதிகாரத்திற்கு அசல் மதிப்பு அல்லது மாற்றி அமைக்கப்பட்ட மதிப்பு அதிகப்பட்டாலன்றி, 18 லட்சத்திற்கு உள்பட்ட இருப்புப்பாதையின் வழி வேலிகள் சம்பந்தப்பட்ட ரயில் இருப்புப்பாதைக் கழகத்திற்கு முடிவறிக்கை அனுப்ப வேண்டியதில்லை.

பிரிவு IV

நிலத்தைப் பொறுப்பில் வைத்திருத்தல்.

28. தம் வசத்திலுள்ள நிலங்களின் உரிமை பாதிக்கப் படாமலும், அவற்றில் எத்தகைய ஆக்கிரமிப்பும் இல்லாதவாறும் பார்த்துக் கொள்வது இருப்புப் பாதையினரின் கடமையாகும். நிலம் தல அரசினரின் மேலாண்மையில் ஒப்புவிக்கப்பட்டிருந்தால் (ஆவது பிரிவைக் காண்க) அந்த மேலாண்மைக் காலத்தில் இப்பொறுப்பு அத்தகையோரைச்சாரும்.

29. கம்பெனியால் நடத்தப்பட்டு வரும் இருப்புப்பாதை சம்பந்தமாக ஏதாவது நிலத்தைப் பற்றி வழக்கு ஏற்பட்டு, இந்திய யூனியனையும் இவ்வழக்கில் கூட்டுவாதியாகச் சேர்க்க

வேண்டும் என்று இருப்புப்பாதை ஆட்சியினருக்குத் தெரிவிக்கப் பட்டால் அவ்வாறு செய்ய இருப்புப்பாதைக் கழகத்தின் அனுமதி பெற வேண்டும். இத்தகைய இனங்களில் அரசாங்கத்தின் உரிமையும் இருப்புப்பாதை ஆட்சியின் உரிமையும் மூரண்பாடின்றி ஒன்றுக இருக்குமானால் இருவருக்காகவும் ஒரே சட்ட அறிவுரை யாளரை நியமிப்பதில் எத்தகைய ஆட்சேபனையுமில்லை. அவர் இருப்புப்பாதையின் சட்ட அறிவுரையாளரால் இந்திய அரசாங் கத்தின் ஒரு தனி ஆணையினால் தங்களுக்காக நடவடிக்கை காரியங்கள் எடுத்து, எழுத்து வாக்குமூலத்தில் கையொப்பம் செய்யவும், அதில் கூறப்பட்டனவற்றைச் சரி பார்க்கவும் நியமிக்கப்பட வேண்டும். தல அரசாங்கம் இதில் தலையிட வேண்டு மெனக் கோரப்பட்டால், இதன் செலவும் இருப்புப்பாதையினரே ஏற்றுக்கொள்வர்.

இந்திய யூனியனுக்காகவோ அல்லது யூனியனுலோ நடத்தப் படும் வழக்குகளில் அதன் சார்பாக அமலிலிருக்கும் விதிகளுக்கு இணங்க, அரசாங்கத்தால் நடத்தப்படும் இருப்புப்பாதைக்குச் சேர்ந்த அலுவலர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள அதிகார முண்டு. சரியான அளவைக் கொண்ட நிலப் படங்கள் உரிய முறையில் வைக்கப்பட்டு அவற்றின் எல்லைகள் முற்றிலும் சரியாக வரையறுக்கப்பட்டு, ஒழுங்கான இடைவேளைகளில் சரி பார்க்கப் பட்டு வந்தால் வழக்குத் தொடர வேண்டிய அவசியம் ஏற்படுவது அரிது.

30. அரசாங்க மேலாண்மையில்லாத பிற நிலங்களின் (அ) உரிமையைப் பற்றிய பதிவுகள் சரிவர பாதுகாக்கப்பட்டு அவை நாளது வரை சரியாக வைப்பதும்; (ஆ) எல்லைகளை அவ்வப்போது, குறிப்பிட்ட காலங்களில் சரி பார்ப்பதும்; (இ) நிலத்தில் காணப் படும் ஆக்கிரமிப்புகளைப் பற்றி உடனடியாக அறிக்கை அனுப்புவதும், அவற்றை அப்புறப்படுத்துவதற்குமான விதிகளை ஏற்படுத்துவதும் இருப்புப்பாதை ஏஜண்டின் பொறுப்பாகும்.

ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்துவதற்கான வழக்கு தொடர்வதை ஒரு அதிகாரியிடம் (மற்றவர்களைக் காட்டிலும் பொறியியல் பணித் துறை அலுவலரிடம்) ஒப்படைப்பது விரும்பத்தக்கதெனினும் (ஆ), (இ) இனங்களில் குறிப்பிடப்பட்ட வற்றிற்குச் சாதாரணமாக நில மேலாண்மை ஒப்படைக்கப்பட்ட அலுவலரே பொறுப்பாளராவார்.

இருப்புப்பாதை ஏஜண்டின் ஒப்பளிப்பின்றி இத்தகையவற்றில் எத்தகைய சட்ட நடவடிக்கையும் எடுக்கக் கூடாது.

பிரிவு V

நிலத்தின் மேலாண்மை.

31. இருப்புப் பாதை நிலங்கள் எல்லாம் வாணிப முறையில் மேலாண்மை செய்யப்படும். இருப்புப் பாதையினர் தங்கள் கையிருப்பில் பயனின்றி இருக்கும் நிலங்கள் உரிமை விட்டுவிடப் படத் தகுதியற்றவை (VI ஆவது பிரிவைக் காண்க) எனினும் அந்நிலங்கள் வளம் பெறுமாறு செய்வதோடு அவை ஆதாரம் தருமாறு பயனுக்கப்பட முயற்சி செய்ய வேண்டும்.

இத்தகைய நிலம் "கிடைக்கக் கூடியது" என இதன் பின் குறிக்கப்படும்.

32. மேலாண்மை நிபந்தனைகள்.—மேலாண்மையில் அடங்கியவை.—

(i) அதன் பொறுப்பு (VI ஆவது பிரிவைக் காண்க).

(ii) "கிடைக்கக் கூடிய" பாகங்களை மிகச் சிறந்த வகையில் ஆதாயம் தருமாறு பயன்படுத்தல்; அவற்றைக் குத்தகைக்கு விடுதல், அல்லது அவற்றை உரிமத்தில் வழங்கல். (அதாவது தக்க குத்தகைக்கு எடுத்துக் கொள்ளத்தக்கவர்களைத் தெரிந்தெடுத்தல், நிலத்தை அவர் வசம் விடுதல், குத்தகையை நிர்ணயித்தல், இவற்றுக்குரிய பதிவேடுகளையும் நிலப் படங்களையும் வைத்துக் கொள்ளுதல், ஒப்பந்த நிபந்தனைகளை நிறைவேற்றுதல் முதலிய ஏற்பாடுகளைச் செய்தல்.)

(iii) நிலத்தை இருப்புப் பாதையின் வசத்திலேயே வைத்துக் கொள்ளுவதற்குத் தகுந்த காரணங்களைத் தேவையானால் எடுத்துக் காட்டுவதும் அல்லது நிலத்தின் உரிமையை விட்டு விடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுதலும் இதைச் சார்ந்ததாகும்.

33. இருப்புப் பாதை ஆட்சியிலுள்ள எல்லா நிலங்களின் மேலாண்மையை மேற்கண்டவாறு சரிவர நடத்துவதற்கு இருப்புப் பாதை ஏஜண்டு தம் யுக்தத்தில் நியமிக்கும் இருப்புப் பாதைத் துறையைச் சேர்ந்த பொறி இயல் பணித் துறை அல்லது இதர துறையினர் பொறுப்பாளராவர். "கிடைக்கக் கூடிய" நிலத்தின் மேலாண்மையை (அ) தல அரசாங்கத்தவரிடமாயினும், (ஆ) இருப்புப்பாதை நிலையக் குழுவினரிடமாயினும் ஒப்பு விக்கலாம்.

(அ) அத்தகைய நிலங்களின் நிர்வாகத்தை மாநில அரசாங்கம் ஏற்றுக் கொள்ள ஒப்புக் கொண்டால் அவ்வாறு கொடுத்து விடலாம். தேவையானால் நிலங்களின் குத்தகை முதலிய வற்றிலிருந்து கிடைக்கும் மொத்த வருமானத்தில் ஒரு சதவிகிதத்தை (மாநில அரசாங்கமும் இருப்புப்பாதையினரும் ஒத்துக் கொள்ளும் முறையில்) மாநில அரசாங்கம் எடுத்துக் கொள்ளவும் அனுமதிக்கலாம். இவை கீழ்க் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டிருக்கும்:—

(i) இத்தகைய ஒப்படைத்தல் இருப்புப்பாதை ஆட்சியில் அனுமதியின்றி நிலத்தை விற்கவோ, பரிவர்த்தனை செய்யவோ எவ்வகையாகவேனும் கொடுத்துவிடவோ, அதிகாரம் அளிக்காது (அதாவது நிலம் இந்திய அரசாங்கத்தின் "வசத்திலேயே" இருக்கும்). அவ்வாறு மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலம் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் அல்லது அனுபவிக்கப்பட வேண்டும் என்பதை இந்திய அரசாங்கம் தமது யுக்தத்தில் நிபந்தனைகளை விதிக்கலாம்.

(ii) போதிய அறிவிப்புக்குப் பின் எவ்வித ஈடுமின்றியும் அவ்விடங்களில் சாதாரணமாக விளைவிக்கப்படும் பயிர்களை அறுவடை செய்து கொள்ளவிடாமலும் ஒரு குறுகிய காலத்துக்குள்ளாகவே நிலம் தேவையாகுமானால் அதற்குரிய நேர்மையான விலையைக் கொடுத்தும் நிலத்தை திருப்பிப் பெற்றுக் கொள்ளும் உரிமை இருப்புப் பாதையினருக்கு உண்டு.

(iii) வரப்பெற்ற தொகையில் ஒத்துக் கொள்ளப்பட்ட ஏதேனுமொரு சதவீதத் தொகையைக் குறைத்து எஞ்சியது இருப்புப்பாதை ஆட்சிக் கணக்கில் வரவு வைக்கப்படும். இருப்புப் பாதை ஆட்சியின் மேலாண்மையிலிருந்தால், இந்நிலத்திற்கு விதிக்கப்படத்தக்க வரிகளை இருப்புப்பாதை ஆட்சியே செலுத்தி வரவேண்டும்.

(v) இருப்புப்பாதையினர் நிலத்தைத் திரும்ப எடுத்துக் கொண்டாலும், அல்லது நிலத்தின் உரிமை விட்டு விடப்பட்ட பின்னர் நிலம் விற்கப்பட்டாலும், மறுக்க முடியாத உரிமை பாத்தியதையுடன் நிலத்தை ஒப்புவிக்க வேண்டும். இந்திய யூனியனின் சார்பில் தல அரசாங்கம் அத்தகைய உரிமையைச் சரியான வகையில் பாதுகாக்க வேண்டும்.

மேலே (ஆ) இனத்தைப் பொறுத்த வரையில் இருப்புப் பாதை ஏஜண்டின் யுத்தத்தில் வரையறுக்கப்பட்ட நிபந்தனைக் குட்பட்டு, தம் அதிகாரத்திற்குட்பட்ட முழு நிலங்களையோ, ஒரு பகுதியையோ இருப்புப்பாதை நிலையக் குழுவின் மேலாண்மையில் விட்டு விடலாம்.

(அ) அல்லது (ஆ) இனத்தின் கீழ் மேலாண்மைக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் சரியான வகையில் எல்லை வரையறுக்கப்பட்டு, தேவையான நிலங்களுடன் ஒப்புவிக்கப்பட வேண்டும்.

34. மேலாண்மை முறை.—வாணிப முறையில் மேலாண்மை நடத்தும் பொருட்டு இருப்புப்பாதைக்குச் சம்பந்தப்பட்ட காரியமானாலும் இல்லாவிடினும், அயலாளருக்கும், பிற துறைகளுக்கும் குத்தகை, அல்லது உரிமத்தில் "கிடைக்கக் கூடிய" நிலத்தின் உரிமையைத் தம் யுக்தம் போல் இருப்புப்பாதை ஆட்சி கொடுக்கலாம்.

இருப்புப்பாதை நடத்துவதற்குச் சாதகமான வேலைகளுக்காக இவ்விதிகளுக்கிசைந்தவாறு (மொத்த எண்ணெய்க் கிடங்குகள் அமைப்பதற்கு அல்லது பண்டசாலை ஏற்படுத்துவதற்கு அல்லது பண்டங்கள் ஏற்றி இறக்கும் துறை, அல்லது சரக்குகள் இருப்புப் பாதையிலிருந்து இறக்கி வைக்கவும் அவற்றை அனுப்புவதற் காகச் சேகரித்து வைக்கவும் வேண்டிய முற்றங்களுக்கு அல்லது நிலையத்தில் விற்பனை செய்பவர்களுக்கு வேண்டிய இடங்கள் முதலியவற்றிற்கு) நிலம் குத்தகை அல்லது உரிமத்தில் கொடுக்கத் தல அரசாங்கம் அல்லது இதர அதிகாரியின் அனுமதி தேவையில்லை. ஆனால் இவற்றைத் தவிர இதர காரியங்களுக்காக நிலம் குத்தகைக்கோ அல்லது உரிமத்திலோ கொடுக்கப்பட வேண்டுமானால் தல அரசாங்கத்தையோ சம்பந்தப்பட்ட வேறு அதிகாரியையோ கலந்து கொள்ளுவது பொருத்தம் அல்லது உசிதம் என்று தோன்றும் சூழ்நிலைகளில் முக்கியமாக நிலையான காரியம் போன்றவற்றிற்குப் பாதீனம் செய்யப்படுவனவற்றிற்கு அவர்களைக் கலந்து ஆலோசனை செய்து நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

சமயச் சார்பான காரியங்களுக்கும் கல்வி சம்பந்தமான காரியங்களுக்கும், இருப்புப்பாதை நிலத்தைக் குத்தகைக்கோ, அல்லது உரிமத்திலோ விட்டுவிடுவதற்கு இருப்புப்பாதை ஆட்சிக் கழகத்தின் அனுமதி பெற வேண்டும்.

நிலத்தைக் குத்தகை, அல்லது உரிமத்தில் விடுவதைத் தவிர நிலத்திலுள்ள புல் வெட்டிக் கொள்வது, மேய்ச்சலுக்கு அனுமதிப்பது பழ வகை, மீன் பிடித்தல், கப்பலுக்கு நங்கூரம் பாய்ச்சுவது முதலியவற்றின் உரிமைகளையும் குத்தகைக்கு விடலாம்.

35. மேலாண்மை ஒப்புக் கொண்டபோது விதிக்கப்பட்ட நிபந்தனைக்குட்பட்டு தல அரசினர் எம்முறையில் நிலத்தின் மேலாண்மை செய்ய வேண்டுமென்பதை அவர்களே தீர்மானித்துக் கொள்ளுவார்கள்.

36. குத்தகை அல்லது உரிமை ஒப்பந்தங்கள்.—நிலம் குத்தகைக்கு விடுவதில் சில தொல்லைகள் நேரிடலாம். இருப் புரிமை தொடர்ந்து கொண்டாட இது ஏதுவாகும், தவிர இந்திய யூனியனுக்காக அதிகாரம் பெற்ற அதிகாரியே குத்தகைப் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும். ஆனாலும் தொடர்ச்சியாக குத்தகைக்கு விடுவதால் கூடுதலான குத்தகை கிடைக்கு மென்றால் அதனை வெகுவாகக் கவனிக்க வேண்டும். கம்பெனி ஆட்சியிலுள்ள இருப்புப்பாதைகளில், எல்லா ஒப்பந் தங்களும் இருப்புப்பாதைக் குழுவின் செயலாளர் எழுதிக் கொடுக்க வேண்டும்.

உரிமம் கொடுக்கப்படுவதால் சில நிபந்தனைகளுக்குட்பட்டு நிலத்தின் சில உரிமைகளையே அனுபவிக்கும் உரிமை உண்டே தவிர வேறு எத்தகைய குடி உரிமையையும் அது உரிமம் பெற்றி ருப்பவருக்கு அளிக்காது. மேலும் இருப்புப்பாதையை அரசாங்கம் நடத்தினாலும், அல்லது கம்பெனி நடத்தினாலும் அத்தகைய இருப்புப்பாதை ஆட்சியே பத்திரம் எழுதிக் கொடுக்கலாம்.

ஒவ்வொரு விதமான உடன்படிக்கைக்குரிய பல்வேறு நிபந் தனையும் குறிப்பிட இயலாது. ஆயினும் பொதுவாக அந்நிபந் தனைகள் கீழ்க் கண்டவாறு இருக்க வேண்டும் :—

(i) இந்திய அரசினர் இருப்புப்பாதை ஆட்சியினர், இவர் களின் உரிமை சரிவர பாதுகாக்கப்பட வேண்டும்.

(ii) கிடைக்கும் வருமானத்தில் சிறிய ஆதாயமும் இருக்க வேண்டும் (ஆனால் இருப்புப்பாதை பணியாளர்கள் தொகுதிக்கு சிறு துண்டு நிலங்களை விவசாயத்திற்கும் மரங்களின் மேற் பலனை அனுபவிக்கவும் இலவசமாகக் கொடுக்கலாம்).

இருப்புப்பாதை வெற்றிட நிலங்களை இருப்புப்பாதை வேலை யாட்களுக்கே அல்லது தேவையானால் அத்தகைய பணியாட் களுக்கு விளையாட வசதி செய்து கொடுக்கும் இருப்புப்பாதைச் சார்பற்ற கழகங்களுக்கும் சொற்ப வாடகைக்கு உரிமத்தில் அளிக்கலாம். ஆனால் ஒவ்வொன்றிலும் ஒரு மாதத்துக்கு மேற் படாத குறுகிய அறிவிப்பினல் நிலத்தில் கட்டப்பட்டிருக்கும் கட்டடங்களாயினும் இதர வசதிகளுக்கு யாதொரு ஈடு கொடுக்கப் படாமல் நிலத்தை விட்டுவிட வேண்டும் என்பது ஒப்பங்களில் தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும்.

14—7—1936 தேதி, 1523, அ.ஆ.பல.
8—8—1936 தேதி, 100, வ.து.க.செ.அச்சு.

(iii) தல அரசாங்கத்திற்கு நில மேலாண்மையை ஒப்படைப் பதற்குரிய திட்டங்களில் இரண்டாவது பிரிவிற் கண்டவாறன்றி, நிலத்தை மீண்டும் எடுத்துக் கொள்வதில் ஈடு கொடுக்கப்பட மாட்டாது. ஆயுதங்கள் சேமிக்குமிடங்கள், நிலையப் பார்வை யாளர்கள் வீடுகள், இவற்றைத் தவிர இதர கட்டடங்கள் அமைப்புகள் இவற்றின் நிலம் மீண்டும் எடுத்துக் கொள்ளப்படுங் கால், விலைக்கு வாங்குவது பற்றி (அதற்கு உரிமையை ஒதுக்கி வைத்துக் கொண்டபோதிலும்) இருப்புப் பாதையின் பொது அல்லது சிறப்பு ஆணையின்றி இருப்புப் பாதையினர் தீர்மானிக் கக்கூடாது.

மொத்த எண்ணெய் கிடங்குகளுக்காகக் கொடுக்கப்படுவ தற்கான மாதிரி உரிமம் படிவம் "ஈ" இணைப்பில் காணலாம். ஆனால் சந்தர்ப்பத்துக்கேற்ப மாறுதல்களுடன் குத்தகைக்கோ, உரிமத்திற்கோ வேண்டிய மற்ற படிவங்கள் தக்க சட்ட முறை அறிவுரையைப் பெற்றுக்கொண்டு அமைத்துக் கொள்ளலாம்.

மற்றொரு இருப்புப்பாதை ஆட்சிக்கோ, இந்திய அரசாங் கத்துறைக்கு அல்லது தல அரசாங்கத்திற்கு நிலம் குத்தகைக்கு விடப்பட வேண்டுமானால் நிபந்தனைகளைப் பற்றி ஒப்பந்தம் முத்திரையில்லாத சாதாரணத் தாளில் எழுதப்பட்டு இரு திறத் தார்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளில் கையொப்பம் பெறப்படுவது போதுமானது :—

இருப்புப்பாதை நில மேலாண்மையால் கிடைக்கும் வருமானம் கீழ்க்கண்டவாறு கணக்குகளில் சரிக்கட்டவேண்டும்.

(i) நிலத்தின் விலை இருப்புப்பாதை மூலதனக் கணக்கில் எழுதாமல் அரசாங்க செலவில் வாங்கப்பட்டால் தலைப்பு XII "ஆதரவுத் தொகை பெறும் கம்பெனிகள்" என்பதற்கும்.

(ii) நிலத்தின் விலை இருப்புப்பாதை மூலதனக் கணக்கிலிருந்து கொடுக்கப்பட்டிருந்தால் "இருப்புப்பாதை வருவாய்" என்பதற்கும் வரவு வைக்க வேண்டும்.

திருஷ்ட் இருப்புப்பாதை சம்பந்தப்பட்ட வரையில் அதன் மூலதனத் தொகையில் நில விலை சேர்த்திருந்தும், முதலீடு செய்யப்பட்ட நிலத் தீர்வை கழிவு சேரவில்லை. வருவாய்த் துறையினர் வசூலிக்கும் நிகர வருமானம் சிவில் துறையில் "நில வருவாய்" என்னும் தலைப்பில் வரவு வைக்கப்படும்.

7—2—1934 தேதி. 244, அ.ஆ.வரு.பல.
2—3—1934 தேதி. 34, வ.து.க.செ.அச்சு.

பிரிவு VI

நில உரிமை விட்டு விடுதல்.

37. இப்பிரிவில் கண்ட அறிவுரைகள் இந்திய அரசாங்க நிதித் துறையில் தீர்மானம் 1925 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் தேதி ஈ 3428 அ எண் (க இணைப்பு) விளம்பரம் செய்யப்பட்ட மத்திய அரசாங்க நிலமாற்ற விதிகளுக்குத் துணை விதிகளாகும். இந்திய அரசினருக்குச் சேர்ந்த எல்லா நிலங்களையும் தங்கள் துறைகளில் (அவையாவன—படத்துறை, வாணிபத் துறை, தபால் தந்தித்துறை இருப்புப்பாதைத் துறை முதலியவற்றில்) யாதொரு துறை தன் வேலையைத் திறம்படச் செய்வதின் பொருட்டாக இந்திய அரசினர் தங்கள் தடையில்லாத கவாதீனத்தில் வைத்துக் கொள்ளும் உரிமை ஒரு பொதுவான நிலையினதாகும்.

அவ்வாறு இனித் தேவையாகாத நிலங்களை சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கத்திற்குக் கொடுத்துவிட வேண்டும். மத்திய அரசாங்க விதிகளில் கண்டிருக்கும் நிபந்தனைகளின் கீழ் நிலத்தை மாநில அரசாங்கம் வாங்கிக் கொள்ள சம்மதிக்காவிடில், தங்களுக்கு யுக்தமாகத் தோன்றும் முறையில் இந்திய அரசாங்கம் அந்நிலத்தைக் கொடுத்து விடலாம்.

இருப்புப்பாதை நிலத்தைப் பொறுத்தமட்டில், அதன் உடனடியான தேவைகளுக்கும் மற்றும் பிற்காலத் தேவைகளுக்கும் போதிய நிலங்களை மட்டுமே வைத்துக்கொள்ள வேண்டும் என்பது இருப்புப் பாதைக் கழகத்தின் கொள்கையாகும். தம் வசமுள்ள நிலம் இருப்புப்பாதைக்கு இன்றியமையாததா என்று பார்த்து, அவ்வாறு இல்லையென்றால் இது "உரிமை விட்டு விடத் தக்க நிலம்" என்று வகுக்கப்பட்டு கீழ்க் கண்ட விதிகளின் கீழ் அதைக் கொடுத்துவிட ஒவ்வொரு இருப்புப் பாதை ஆட்சியும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அவசியமில்லாதவாறு நிலத்தை வைத்துக் கொள்ளக்கூடாது என்றிருப்பினும் அதன் மதிப்புக்குக் குறைவாகவோ, அல்லது இலவசமாகவோ அதைக் கொடுத்துவிடக் கூடாது என்பதையும் அதே சமயத்தில் கவனிக்க வேண்டும்.

38. ஒரு குறிப்பிட்ட நிலம் உரிமை விட்டுவிடத்தக்கதா அல்லது தக்கதில்லையா என்பதை முடிவு செய்வதில், அந்த நிலம் கீழ்க்கண்ட வகைகள் ஒன்றில் அல்லது மற்றொன்றில் சேர்ந்திருக்குமாறு இந்திய அரசாங்க (இருப்புப் பாதைத் துறையின்) கடமைகள் பயனளிக்குமாறு நிறைவேற்றப்படுவதற்கு (தல அரசாங்கம் இதற்கு மாறாக வேறெதற்காவது கொடுத்துக் கொள்ளும் முழு உரிமைக்குப் பாதகமின்றி) அந்நிலம் அவசியம் எனக் கருதப்படக் கூடியது என்பதாக இருப்புப்பாதை ஆட்சி கருதி அவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்.

(அ) இருப்புபாதையின் அனுபோகத்திலிருக்கும் நிலம், அதாவது இருப்புப்பாதையில் நிலையான வேலைகளுக்குத் தேவையாகும் நிலம் அல்லது இருப்புப் பாதை அமைக்கப்படவும், பராமரிக்கப்படவும், பழுது பார்க்கப்படவும் தேவையாகும் நிலம்.

(ஆ) நிலம் அவ்வாறு இல்லாமல், ஆனால் அதை நிலையாக ஒரு அயலாரின் கட்டுப்பாட்டுக்கு மாற்றுவதற்குக் குறிப்பான ஆட்சேபனைகள் இருக்கும் நிலம், அதாவது இருப்புப்பாதையின் நடைமுறை அனுபோகத்திலுள்ள நிலங்களின் மத்தியிலாவது அதற்குச் சேர்ந்தாற் போலாவது இருந்து, அந்நிலத்தைப் பிரித்து மாற்றுவதால் இருப்புப்பாதை உரிமைகளுக்குக் கெடுதல் ஏற்பட்டுக்கூடியவை.

(இ) அதன் பணியாளர்களின் உடல் நலம், நன்மை அல்லது இருப்புப்பாதைச் சொத்துகளின் பாதுகாப்புக்குத் தேவையான நிலங்கள். (உதாரணமாக துப்புரவு வட்டாரம், தீத்தடை வட்டாரங்கள்).

(ஈ) சிந்திக்கத்தக்க எதிர்கால வளர்ச்சிக்குத் தேவையான நிலங்கள்.

39. நிலம் இருப்புப் பாதையின் எந்த துறைக்கும் இனி தேவையில்லை என்பதாக உள்ள குறிப்பிட்ட நிலத்தின் உரிமையை விட்டுவிடலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டால் கீழ்க்கண்ட நடை முறையை அனுசரிக்கவேண்டும்.

(1) நிலம் வேறொரு இருப்புப்பாதைத் துறையினருக்கு அல்லது இந்திய அரசாங்கத் துறையினருக்குச் சேர்ந்த நிலத் திற்கு அடுத்தோ அல்லது அருகிலோ இருக்குமானால் அதை முதலில் அத்தகையோர்க்கு தேவையா என்பதைக் கேட்டறிய வேண்டும்.

அவர்களில் எவரேனும் ஒருவர் தமக்கு நிலம் தேவை என்று தம் விருப்பத்தைத் தெரிவிப்பார் எனில் ஒப்புக் கொள் ளப்பட்ட நிபந்தனைகளில் இதற்காக நியமிக்கப்பட்டுள்ள அந்தத் துறையின் அலுவலர் ஒருவருக்கு இருப்புப்பாதைத் துறையின் பொறுப்புள்ள அலுவலர் நிலத்தை ஒப்புவிக்கவேண்டும். இம் மாறுதலைப்பற்றி வழக்கத்திற்கிசைந்த பதிவு செய்துகொண்டு, தல அரசாங்கத்திற்குத் தெரிவிக்கவேண்டும். இத்தகைய மாறுதல் செய்யும் வேலையைத் தல அரசாங்கம் ஒப்புக் கொண்டால் தல அரசாங்கத்தின் பொறுப்பில் விட்டுவிடலாம்.

(2) நிலம் வேறு இருப்புப்பாதை நிலங்களுக்கோ அல்லது இந்திய அரசாங்கத் துறையின் நிலத்திற்கு அடுத்தோ அல்லது அருகிலோ இல்லாவிடின் அல்லது அவ்வாறு இருப்பினும் அவ் விருப்புப் பாதைக்கோ, அறைக்கோ, அந்நிலம் தேவையில்லா திருப்பின் அந்நிலம் தல அரசாங்கத்திற்குத் தேவையாகுமா என்பதைக் கேட்டறிய வேண்டும். தல அரசாங்கம் அதை வாங்கிக்கொள்ள விரும்பினால் ஒப்புக்கொள்ளப்பட்ட நிபந்தனை களில் வந்த நில உரிமை பெறுவதில் அதைச் சுவாதீனம் செய்வது போலவே தேவையான மாறுதல்களோடு நிலத்தை இதற்காக நியமிக்கப்பட்ட அலுவலரிடம் ஒப்புவிக்கவேண்டும். (இவ்விதி களின் 24 ஆவது பத்தியை காண்க).

3 நிலம் தல அரசாங்கத்திற்குத் தேவையில்லாவிடின் அதைக் கீழ்க் கண்டவாறு மிகவும் ஆதாயமான முறையில் கொடுத்துவிட வேண்டும்.—

(அ) நிலத்தை கொடுத்துவிடுவதைப் பற்றித் தல அரசாங்கத்திற்கு முழு நடவடிக்கையும் விட்டுவிட்டு அவர்கள் செய்யும் ஏற்பாட்டை இருப்புப் பாதையினர் ஒப்புக்கொள்ளலாம்.

(ஆ) தல அரசாங்கம் நில விற்பனைக்கான ஏற்பாடுகளைச் செய்யச் சம்மதிக்காவிடில் இருப்புப்பாதையினர் அத்தகைய ஏற்பாடுகளைச் செய்து அவ்வேற்பாடுகளின் நிபந்தனைகளை அனுசரித்து இறுதி முடிவு செய்யுமாறு இருப்புப் பாதையில் அவ்வாசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளலாம்.

(இ) இந்திய யூனியன் சார்பில் தல அரசாங்கம் நடைமுறை நில மாறுதலைச் செய்யவும் முன்வராவிடில், இருப்புப்பாதையினர் வழக்கத்திற்கு இசைந்த முறையில் (நிலம் வாங்கிக்கொள்பவர் செலவில்) எழுதப்பட்டு கையொப்பமிட்டு நிறைவேற்றத் தகுதியுடைய அதிகாரிக்கு மேலனுப்பப்பட்டுப் பத்திரப் பதிவு செய்யப்பட்ட பின்னர் பொறுப்பு வாய்ந்த அலுவலர் வாங்கியவருக்கு நிலத்தை ஒப்படைக்க வேண்டும். எவ்வகையிலும் நிலத்தை எவ்வாறு கொடுக்கலாம் என்பதையும் நில விற்பனைக்குப் பின்னர் (நிபந்தனைகள் எவையேனும் இருப்பின்) எந்நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுத்தி நிலம் பயன்படுத்தப்படவேண்டும் என்பதையும் இந்திய அரசாங்க வருவாய்—விவசாயத் துறைகளின் 30—10—1896 தேதி 13—44—13 எண் தீர்மானத்தில் (சி—இணைப்பைக் காண்க) கூறப்பட்டுள்ள கொள்கைகளை (அனுசரிக்கப்பட வேண்டிய தவசியமானால்) எந்த அளவிற்கு அனுசரிக்கப்படவேண்டும் என்பது பற்றியும் தல அரசாங்கத்தைக் கலந்து ஆலோசித்துக் கொள்ள வேண்டும்.

(4) வேறு இருப்புப்பாதையோ, இந்திய அரசாங்கத்தின் எத்துறையோ தல அரசாங்கமோ நிலத்தை வாங்கிக்கொள்ள விரும்பாமலிருந்து, வேறு யாரும் நிலத்தை நியாயமான விலைக்குக் கொடுக்குமாறு கேட்காவிடில் அதை மேலே குறிப்பிட்டுள்ள சந்தர்ப்பங்கள் வரும் வரையில் V ஆவது பிரிவிற் கண்டுள்ளவாறு இருப்புப்பாதை ஆட்சியில் நிலத்தை வைத்துக்கொள்ள வேண்டும்.

இருப்புப்பாதை ஆட்சியினர் தம் யுக்தம் போல தங்கள் வசமுள்ள நிலத்தை கொடுத்துத் தங்களுக்கு அதை ஒத்த தகுதியான வேறு நிலத்தைத் தொகை கொடுத்தோ கொடுக்காமலோ பரிவர்த்தனை செய்து கொள்ளலாம். நில உரிமை பெறப்படுவதற்கு விதிக்கப்பட்டுள்ள முறைகளைத் தேவையான மாறுதல்களுடன் இதற்கு அனுசரிக்கவேண்டும்.

இருப்புப்பாதை ஆட்சியும் ஒரு தனியாரும் எத்தகைய நிலப் பரிவர்த்தனையும் செய்யக்கூடாது. தனியாருக்குச் சொந்தமான நிலத்தின் உரிமையை நில உரிமை பெறும் சட்டத்தின் கீழ் எப் போதுமே பெற வேண்டும்.

25—5—1946 தேதி, 1112, அ.ஆ.வரு.பல.
4—6—1946 தேதி, 9, வ.து.க.செ.அச்சு.

படைத் துறை அதிகாரிகளும் அல்லது அவர்களிடமிருந்து நிலம் மாற்றிக்கொள்வதுபற்றி அனுசரிக்கவேண்டிய முறை, இ—இணைப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

40. ஒரு இருப்புப்பாதை நிலம், முதலில் கருதப்பட்ட வேலைக்குப் பயன்படுத்தப்படுவதில்லை என்றும் மேலும் அது இருப்புப் பாதையின் வேலை சரியாக நடத்துவதற்கு இனி தேவையில்லை என்றும் தல அரசாங்கம் நேரிடையாகவாவது அல்லது இந்திய அரசாங்கத்தின் வழியாகவாவது தெரிவிக்கக்கூடியதில் இருப்புப் பாதை ஆட்சியினர் அதை மறுக்கக்கூடுமானால், நிலம் எவ்வாறு அவர்களுக்குத் தேவை என்றோ அல்லது வேறொரு இருப்புப் பாதை அல்லது இந்திய அரசாங்கத் துறைக்கோ அது தேவை என்றோ, தாம் மறுப்பதற்குரிய காரணங்களைத் தல அரசாங்கத்துக்கோ இந்திய அரசாங்கத்துக்கோ தெரிவிக்க வேண்டும். இல்லையேல், நிலம் உரிமை விட்டுவிடத் தக்க நிலம் என்று கருதப்பட்டு அவ்விதிக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

41. உரிமை விட்டுவிடுவதற்குரிய நிபந்தனைகள்.—இருப்புப் பாதை நிலத்தைத் திரும்பக் கொடுப்பதற்குரிய நிபந்தனைகள் கீழே கண்டுள்ளன :—

(அ) தல அரசாங்கத்துக்காயின் இவை இந்திய யூனியன் நில மாற்று விதிகளில் (க—இணைப்பில் காண்க) கூறப்பட்டுள்ளன.

(ஆ) வேறொரு இருப்புப்பாதைக்கோ இந்திய அரசாங்கத் தின் துறை எதற்காகவாயினும், நிலமும் அதிலுள்ள கட்டடங் களின் நடப்பு விலை மதிப்புத் தொகையை பெற்றுக்கொண்டு,

(இ) இதர வகைகளில் நிலத்திற்கு நியாயமாகக் கிடைக்கக் கூடிய உயர்ந்த விலைக்கு எல்லா வகைகளிலும் இரு தரப்பாரும் ஒப்புக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளையும் தடைகளையும் குறிப்பிடவேண்டும். மேலும் நிலத்தின் விலை ஒரு லட்சம் ரூபாய்க்கு அதிகப்படுமானால் இருப்புப்பாதைக் கழகத்திற்கு எழுதிக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

உரிமை விட்டுவிடப்பட்ட இருப்புப்பாதை நிலங்களின் வருமானத்திலிருந்து அவற்றைக் கொடுப்பதற்கு ஏற்பட்ட சரியான செலவைக் கழித்தபின் உள்ள எஞ்சியத் தொகையைக் கீழ்க்கண்ட தலைப்பில் வரவு வைக்கவேண்டும்:—

(அ) நிலம் இந்திய அரசாங்கத்தால் இலவசமாகக் கொடுக்கப்பட்டிருந்தால்—

"XII ஆதாரவுத் தொகை பெற்ற கம்பெனிகள்" என்னும தலைப்பில் வரவு வைக்கவேண்டும்.

(ஆ) மற்ற வகைகளிலெல்லாம் இருப்புப்பாதை மூலதனக் கணக்கில் வரவு வைக்கவேண்டும்.

குறிப்பு.—நில உரிமை பெறும் நடவடிக்கை போலவே நில உரிமை விட்டுவிடப்பட்ட நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்ட தனிப் பணியாளர்களின் தொகுதிச் செலவைத் தல அரசாங்கத்திற்குக் கொடுத்துவிடவேண்டும்.

42. நில உரிமை பெறுதல் போல, நில உரிமை விட்டுவிடும் நடவடிக்கைகள் (நில உரிமை விட்டுவிடும் நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும் வரை நிலத்தின் சுவாதீனத்தைக் கொடுத்துவிடக் கூடாது), நிலத்தின் சுவாதீனம் கொடுக்கப்படும் வரையில் முடிவடைந்ததாகக் கருதப்படமாட்டா. இவை முடிவடையும்வரை நிலம் இந்திய அரசாங்க இருப்புப்பாதைத் துறையின் சட்ட உரிமையிலே இருந்துவரும்.

நில உரிமையை விட்டுவிடும் நடவடிக்கை முடிவடைந்ததும் இருப்புப்பாதை எல்லைகள், நிலப்படங்கள் முதலியவற்றைத் தகுந்தவாறு திருத்தி அமைத்துக்கொள்ள வேண்டும்.

6—6—1933, தேதி 953, அ.ஆ.வரு.பல.

16—6—1933 தேதி, 43 வ.து.க.செ.அ.ச.

பிரிவு VII

எவ்வளவு நிலம் உரிமை பெறவேண்டும்.

43. இருப்புப்பாதைக்கு நில உரிமை பெறத் தேவையான நிலத்தை மதிப்பிடும்போது நிலையாக இருப்புப்பாதை வழிக்கு (அதாவது நிலையாகத் தேவையாகும் நிலம் மட்டுமின்றி) இருப்புப் பாதை அமைப்புக் காலத்தில் வெட்டி அழி மண் கரைகளுக்கும்; பக்க வெட்டுகளுக்கும்; கல் மண் வெட்டி எடுப்பதற்கும்; பொருள் களைச் சேர்த்துவைப்பதற்கும்; தயாரிப்பதற்கும்; தற்காலிகமான அலுவலங்களுக்கும் தேவையான பட்டறைகளும், இருப்புப்பாதை பணியாளர்கள் குடியிருப்பிடங்களுக்கும் மற்றும் பொதுவாகத் தற்காலிகமான காரியங்களுக்குத் தேவையாயும், வேலை முடி வடைந்தும் உரிமை விட்டுவிடப்படக்கூடிய நிலங்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

44. எவ்வளவு நிலம் உரிமை பெறப்படவேண்டும் என்பது கீழ்க் கண்டவாறு இருக்கும்:—

(அ) இருப்புப்பாதை அமைக்கப்பட்ட பதினைந்து ஆண்டு களுக்குள் அதற்குரிய போக்குவரத்து ஒற்றை இருப்புப்பாதை யால் தாங்கமுடியாத அளவுக்கு அதிகமாகும் என்று தோன்றினால், எடுக்கப்பட வேண்டிய நிலத்தின் அகலம் இரட்டை இருப்புப் பாதைக்குத் தேவையானதாகயிருக்கவேண்டும்.

(ஆ) அவ்வாறன்றி 15 ஆண்டுகளுக்குள்ளாக போக்குவரத்து ஒரு இருப்புப்பாதையின் சக்திக்கு நியாயமாக மேற்படாதென்றால் ஒற்றை இருப்புப்பாதைக்குத் தேவையான நிலம் மட்டுமே எடுத்தல் போதுமானது.

சாதாரணச் சந்தர்ப்பங்களில் மேற் குறித்த வகைகளுக் காக எடுக்க வேண்டிய நிலத்தின் குறுமம் அகலங்கள் 'அ இணைப்பு' பிரிவுகளிலும் அட்டவணைகளிலும் குறித்துள்ளவாறு இருக்கவேண்டும். நிலையாகத் தேவையாகும் நிலம், வேலை முடி வடைந்த பின்னர் வெட்டுக்குழிகள் யாவற்றையேனும் வைத்துக் கொள்ள வேண்டுமானால் அவற்றில் எத்தனை குழிகளை வைத்துக் கொள்ள வேண்டுமோ அத்தனை குழிகளைப் பொருத்திருக்கும்.

(இ) அடிப்படையில் தேவையாகும் நிலத்தைக் கணக்கிடும் முன்னர் இருப்புப்பாதை ஆட்சியினர் ஆணையைப் பெறவேண்டும்.

45. ரத்து செய்யப்பட்டது.

46. சில சமயங்களில் இருப்புப்பாதை நிலையங்களில் நிலையாக உரிமை பெறப்படும் நிலத்தை சமப்படுத்தி சீர்திருத்தம் செய்வதைக் கொண்டு இருப்புப்பாதையின் முதன்மையான வழிக்கும், பக்க வழிகளுக்கும் வேண்டிய வெட்டுதல் நிரப்புதல்களை சரிப்படுத்திக்கொள்ளலாம். அவ்வாறு செய்ய இயலாவிடில் பக்கங்களை வெட்டவும், வெட்டி அழிமண் கரைகளுக்கும்* தேவையாகும் கூடுதல் நிலத்தை நிலைய வெளி முற்றத்துக்கு அப்பால் எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். நிலையங்கள் அமைந்துள்ள இடங்களில் போதுமான நிலங்கள் எடுப்பதில் தனிக் கவனம் செலுத்தவேண்டும். பிற்காலத்தில் முற்றத்தின் நியாயமான வளர்ச்சிக்குப் போதுமானதான நிலம் இருக்கவேண்டும்.

47. ரத்து செய்யப்பட்டது.

48. பக்க வெட்டுகளுக்குப் போதுமான நிலம் எடுப்பதில் அதன் அகலம், அந்த இடத்தில் நிலத்தின் மண் வயணம், கரையின் உயரம், மண் கிடைக்கக்கூடிய வசதி இடத்தின் பிற வேறுபாடுகளையும் சாதாரணமாகப் பொருத்திருக்கும். தனிப்பட்ட சூழ்நிலைகளில் எடுத்துக் காட்டாக—பெரிய நகரங்களுக்கு அருகில், அல்லது நிலம் அதிக விலைமதிப்புள்ள இடங்களில் இருந்தால், மண் வெட்டுதலும், குழி நிரப்புதலும் இவ்விரண்டில் ஒன்றுக் கொன்றைச் சரிப்படுத்திக்கொண்டு, கரைகளுக்கு வேண்டிய மண், பக்கத்திலுள்ள வெட்டுகளிலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு இருப்புப்பாதை திறக்கப்பட பின்னரும், கரைகளைப் பழுது பார்க்க மண் வெட்டி எடுக்க நிலம் தேவையாகும் பொழுது இத்தகைய நிலத்தின் உரிமையை நிலையாகப் பெறவேண்டும்:—

கரைக்கும் முதல் வெட்டுக் குழிகளுக்கும் இடையே பழுது பார்க்கும் வேலைகளுக்கெல்லாம் நிலம் ஒதுக்கி வைத்துக்கொள்ளுதல் சிக்கன முறையன்று; மண் சுமக்கவேண்டிய தூரத்தை அது அதிகப்படுத்துமாதலால் செலவு அதிகமாகும். ஆனால் மழைக் காலத்திற்கு முன்பும், பின்பும் நெருக்கடியான சமயங்களில் வெட்டுக் குழிகளில் நீர் நிறைந்திருக்கும் சமயங்களில் மண் வெட்டி எடுக்க ஒரு குறிப்பிட்ட அகலமுள்ள இடத்தை வைத்துக்கொள்ளுதல் விரும்பத்தக்கது. முதலில் வெட்டப்பட்ட குழி வரிசைக்குள் அவசர நிமித்தமாக வெட்டப்படும் குழிகள்

*பெரிய நகரங்களாயினும் குடியிருப்பு இடங்களுக்குள்ளாயினும், அருகில் உள்ள நிலைய முற்றங்களில், சுகாதாரத்தை முன்னிட்டுத் தீங்கு விளைவிக்கக்கூடிய குழிகளைக் கூடிய வரையிலும் வெட்டக்கூடாது. அவ்வாறு வெட்டப்பட்டால் நீர் முழுவதும் வடியுமாறு தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

மூன்று அடி ஆழத்துக்கு மேற்படக்கூடாது. இக்குழிகளுக்கு வேண்டிய நிலத்தின் அகலம் அந்த இடத்திலுள்ள கரை உயரத்திற்குச் சமமாக இருக்கவேண்டும்.

தண்ணீரை வடிப்பதற்கு வேண்டிய வரப்புகள் முதலில் இருக்க வேண்டிய பத்து அடி அகலத்தைத் தவிர அவசரமாகப் பழுது பார்க்கப்படும் வேலைக்காகத் தேவையாகும் அகலமும் (அதாவது கரையின் உயரம்) சேர்ந்த அடிப்படையில் "அ—இணைப்பு" அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மலை இடத்தில் உள்ள 2 அடி 6 அங்குலம் அகலப் பாதைகளின் அமைப்பிற்கும் பராமரிப்புக்கும் தேவையாகும் மண் எடுக்க வேண்டிய வெட்டுக் குழிகளுக்குத் தேவையான நிலத்தின் உரிமையைப் பெறத் தனி ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

பிரிவு VIII

பொது ஏற்பாடுகள், பக்க அகலம் முதலியன.

அகலப் பாதை, ஒற்றைப் பாதை, இரட்டைப்பாதை மீட்டர், ஒற்றைப்பாதை இரட்டைப்பாதை 2அடி6 அங்குலஒற்றைப் பாதை

49. இருப்புப்பாதை நிலையங்களுக்கு இடையே உள்ள பாதைக்களுக்குத் தேவையாகும் நிலத்திற்கு "அ—இணைப்பின்" வெட்டு முகப்படங்களில் கண்டிருக்கும் ஏற்பாடுகளே மேற்கொள்ள வேண்டும்.

வெட்டுக் குழிகள், வெட்டு அழி மண் கரைகள் முதலியவற்றிற்குத் தற்காலிகமாக உரிமை பெறப்படவேண்டிய நிலத்தின் அகலம் வரையறுத்துச் சொல்ல இயலாது. ஏனெனில், இது (1) மண் வயணம், (2) நிலத்திற்குள் நீர் மட்டத்தின் ஆழம், (3) நிலத்தின் விலை, (4) இடத்தின் பிற நிலைகளைப் பொருத்தேயிருக்கும். சாதாரணச் சமவெளி நிலப் பகுதிகளில் நிலம் அதிக விலையுள்ளதாக இல்லாமலும், நிலத்தின் கெட்டியான மண் வயணத்தையும், நிலத்தின் கீழ் நீர் மட்டத்தையும் உத்தேசித்து நிலத்தில் 6 அடி ஆழம் வெட்டக்கூடுமானால் இரண்டு பங்கு நீளத்திற்கு ஒரு பங்கு சரிவுள்ள கரைகள் இடுவதற்கு "அ" இணைப்பு அட்டவணைகளில் கூறப்பட்டுள்ள அகலம் போதியதாகும்.

50. கூடியவரை தாழ்வான கரைகள், ஆழமற்ற வெட்டுகள் அல்லது பக்க வெட்டுகளுக்கும், வெட்டு அழி மண் கரைகளுக்கும் எடுக்கப்படும் நிலங்களின் ஒரு பக்கமாகவே இருக்கவேண்டும். (அ இணைப்பிலுள்ள வரிசை அட்டவணைகளைக் காண்க).

51. இருப்புப்பாதை அமைக்கும்போது, அதை அடைவதற்குச் சரியான பாதைக்காகவும், பக்க வெட்டுகள் நாளடைவில், கரையோரங்களில் ஓடைகளாக மாறுதிருக்கும் பொருட்டும், பக்க வெட்டுகளுக்கு நிலம் ஒதுக்கும்போது, நீர் வடிவதற்குரிய கரை களையும் வசதியாக இடை இடையே அமைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதற்காக 200 அடி நீளத்திற்கு இருபது அடி அகலம் மண் வெட்டாமல் இடையீடு இருப்பது அவசியம். அதாவது ஒரு வெட்டு 180 அடி நீளமுள்ளதாக இருக்குமானால் அடுத்த வெட்டு அதிலிருந்து 20 அடி தள்ளி இருக்கவேண்டும். மேற்சொன்ன அளவுகளைக் கொண்டு "அ" இணைப்பு வரிசை அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

52. வெட்டி எடுத்த குழி மண்களை இடுவதற்காக நிலம் ஒதுக்கும் போது, பக்க நிலத்தினின்று வெட்டின சரிவு வழியாக நீர் ஓடாமலிருக்கும் பொருட்டும் இயற்கை வடிகாலுக்கும், தேவை யானால் சேகரிக்கப்பட்ட நீரை வடிப்பதற்கும், போதிய இடம் இருக்குமாறு கவனித்துக் கொள்ள வேண்டும். சேகரிக்கப்பட்ட நீரை வடிப்பதற்கு வெட்டு அழி மண் கரைக்கு வெளியே, "அ இணைப்பு" வரிசை அட்டவணையில் காண்டுள்ள நிலத்திற்குக் கூடுதலாக அதிக நிலம் இருக்கவேண்டும்.

53. இருப்புப் பாதைக்கு அடுத்தாற்போலுள்ள பக்கவெட்டு களையும் வெட்டு அழி மண் கரைகளின் பக்கங்களையும் (அ இணைப் பின் குறுக்குத் தோற்றப் படங்களில் காட்டியுள்ளவாறு) மண் வேலை முடிவதற்கு முன்னமே சரிவாக நிரப்பவேண்டும். இவ் வாறு பக்க அகலங்கள் அமைக்கப்பட்ட பின்னர் வெட்டுக்குழி அல்லது அழி மண் கரையின் மிகச் சமீபத்தின் வரையில் அனு மதிக்கப்பட வேண்டிய தூரம் இச்சரிவு அமைக்கப்பட்ட பின்னர் வெட்டப்படாத நிலப்பகுதியின் குறிப்பிட்ட அகலம் இருக்குமாறு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

54. இருப்புப் பாதைப் பக்கவெட்டுக் குழிகளின் சரிவானது கரைக்கு ஏற்பட்ட சரிவு அளவிலேயே இருக்கவேண்டும். சாதா ரணமாக இது இரண்டு பங்கு நீளத்திற்கு ஒரு பங்காக இருக்க வேண்டும். வெளிப்புறச் சரிவுகளும் மூடிவுகளும் ஒரு பங்கு அளவு நீளத்திற்கு ஒரு பங்கு சரிவாக இருக்கலாம்.

55. அழி மண் கரைகளின் சரிவு வழக்கமாக இரண்டு பங்கு நீளத்திற்கு ஒரு பங்கு சரிவாக இருக்கவேண்டும்.

56. அழி மண் கரைகளின் வசதியான உயரம் 5 அடி ஆகும். இந்த அளவே 'அ இணைப்பின்' வரிசை அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

57. கரைகளுக்கு நிலம் எடுக்கும்போது, வெட்டுக்குழிகளின் வெளி ஓரத்திற்கு அப்பால் 3 அடி அகலமுள்ள நிலம் வெளியே இருக்குமாறு எடுக்கவேண்டும். தேவையானால் வெட்டுக் குழிகளுக்கு வெளியே வேலி இட இது வசதியாயிருக்கும்.

இருப்புப் பாதை, வெட்டுகளில் அழி மண் கரைகளின் வெளி ஓரத்தின் அடியிலிருந்தே வேலி அமைத்துக்கொள்ளலாம். இதற்கு மேற்கூறியவாறு அதிக நிலம் தேவையில்லை.

58. மேற்கூறிய வகையில் நிலம் எடுக்கப்படும்போது, கூடுமான வரையில் வேலியும் அழி மண்களாயின் பக்க வெட்டின் உட்புறத்தின் ஓரமும், ஒரு நேர்க்கோடாகவே இருக்கவேண்டும். அதாவது கரையின் சராசரி உயரம், வெட்டின் சராசரி ஆழம் இவற்றை அதிகமான தூரத்திற்குக் கணக்கெடுத்து அதை அனுசரித்து நேர்கோடாக இருக்குமாறு அமைக்கவேண்டும். ஒவ்வொரு சங்கிலி அளவிலும் இவை வளைந்து வளைந்து செல்வதைக் கணக்கில் வைத்துக்கொண்டு பக்க அகலங்களை நிர்ணயிக்கக்கூடாது. இப்பக்க அகல அளவுகளில் அதிக வேறுபாடுகள் இல்லையென்றால் அவற்றைக் கவனியாது கொஞ்ச தூரத்திற்கு நேர்க் கோடுகளில் அமைப்பது விரும்பத்தக்கது.

பிரிவு IX

நிலத்தின் தரைப்படங்களும் விவர அட்டவணைகளும்

59. இருப்புப் பாதைக்கான வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு நில உரிமை பெறும் நடவடிக்கை எடுக்க உதவும் வகையிலும் சம்பந்தப்பட்டவர்களின் பார்வைக்காகவும் நிலத்தின் தரைப்படங்கள் சரியான முறையில் வரைந்து வைக்கவேண்டியது அவசியம்*.

60. சாதாரணமாக இத்தரைப்படங்கள் 400 அடிக்கு ஒரு அங்குல அளவில் வரையப்பட வேண்டும். இந்த அளவில் வரையப்படும் படத்தில் தேவையான விவரங்களைத் தெளிவாகக் காட்ட முடியாது என்று தோன்றினால் அதை 100 அடிக்கு 1 அங்

* நில உரிமை பெறும் சட்டம் 6, 8 பிரிவுகளைக் காண்க.

குல அளவில் வரையலாம். குறிப்பான சந்தர்ப்பங்களில் பெரிய நகரங்களின் நெருக்கடியான இடங்களாயிருந்தால் 50 அடிக்கு 1 அங்குல அளவிலும் வரையலாம்.

குறிப்புகள்.—(அ) உரிமை பெறும் நிலம் முன்னமே உரிமை பெறப்பட்ட நிலத்தின் தொடர்ச்சியாயிருந்தால் இவ்விதியினின்று விதி விலக்களிக்கலாம். அப்போது இவை மூலப் படங்களின் அளவில் இருக்கலாம்.

(ஆ) வருவாய்த் துறையில் நடப்பிலிருந்து வரும் படங்கள் 400 அடிக்கு ஒரு அங்குல அளவுக்குச் சிறிய அளவில்லாதிருப்பின், தல அரசாங்கத்தின் சம்மதத்தில் அந்த அளவிலே படங்கள் வரையலாம்.

61. தரைப்படங்கள் தயாரிப்பதற்குரிய விவரங்களை இருப்புப் பாதை அமைக்க நில அளவை நடந்து கொண்டிருக்கும்போதே சாதாரணமாகச் சேகரிக்க வேண்டும். இருப்புப் பாதை திட்டங்களுக்காகப் படங்கள் வரைவதற்குரிய பொது அறிவுரைகள் இருப்புப்பாதை அமைப்புக்குத் தேவையான நிலங்களின் உரிமை பெறுவதற்குரிய படங்கள் தயாரிப்பதற்கும் பொருந்தும்.

62. தரைப் படங்களில் கீழ்க்கண்ட கூடுதலான விவரங்களும் காட்ட வேண்டும் :—

(அ) அரசாங்கத்தால் அமைக்கப்படும் இருப்புப் பாதையாலும், அல்லது ஒரு கம்பெனியின் ஒப்பந்தத்தை அனுசரித்து "நிலையாகத் தேவைப்படும் நிலம்", "தற்காலிகமாகத் தேவையாகும் நிலம்" என இருவகைக்குட்பட்டு ஒரு கம்பெனியால் அமைக்கப்பட்ட இருப்புப் பாதையாலும் முதலில் உரிமை பெறுதலுக்குத் தேவையாகும் நிலத்தைக் காட்டும் படம் நிலத்தின் வெளி எல்லையைக் காட்ட வேண்டும். இந்த நிலமெல்லாம் எந்த வகைக்குப் பயன்படுத்தப்பட்டாலும், இது நிலையான உபயோகத்திற்கான நிலம் எனக் கொள்ளப்படும். இந்த நிலம் தரைப் படத்தில் இளஞ்சிவப்பு நிறத்தில் காட்டப்படும்.

ந.க.—வருவாய்த் துறையினருக்கு நிலம் உரிமை பெறுவதற்காக உபயோகிக்கப்படும் தரைப்படங்களின் நகல்களுக்கு மட்டுமே இவ்விதி பொருந்தும். பொறியாளர் தங்கள் தரைப்படங்களில், நிலையாகத் தேவையாகும் நிலம், தற்காலிகமாகத் தேவையாகும் நிலம் என்னும் விவரத்தையும் இருப்புப் பாதை அமைக்கவும் மற்றும் மதிப்பிடுவதற்கு தேவையான தகவல்களையும் அவர்கள் குறித்தும் கொள்ளலாம்.

இருப்புப் பாதை திறக்கப்பட்ட பின்னர், எந்த எந்த நிலம் உரிமை விட்டுவிடப்படலாம் என்று நிச்சயமாகத் தெரிந்ததும் அசல் படங்களில் நிலையாகத் தேவையான நிலங்களின் எல்லையையும் உரிமை விட்டுவிடப்படும் நிலங்களின் (தற்காலிகமான நிலங்களின்) எல்லையையும் திருத்தி அமைத்தோ அல்லது புதிய படங்களோ கூடிய வரையில் தெளிவாக வரைய வேண்டும். இப்படங்களில் இவ்விருவகை நிலங்களையும் கீழ்க்கண்டவாறு வெவ்வேறு வர்ணத்தில் காட்ட வேண்டும்:—

நிலையான நிலம்—இளஞ்சிவப்பு.

தற்காலிகமான நிலம்—மஞ்சள்.

(ஆ) ஒரு கம்பெனியால் அமைக்கப்படும் இருப்புப் பாதைக்குத் தேவையான நிலங்களை அதன் ஒப்பந்தத்தை அனுசரித்தோ (அல்லது அரசாங்கத்திடம் செய்துகொண்ட வேறு ஏற்பாட்டை அனுசரித்தோ) நிலங்கள் அ, ஆ, இ, ஈ, அல்லது இம்மாதிரியான இதர சந்தர்ப்பங்களில் நிலம் உரிமை பெறப்படும்போது, வருவாய் அலுவலர்கள் நில உரிமை பெறுவதற்காக வரையப்பட்ட படங்கள் நிலத்தின் வெளி எல்லைகளை இளஞ்சிவப்பில் வர்ணமிட்டுக் காட்ட வேண்டும். சம்பந்தப்பட்ட நிலங்களை அவை எக்காரியத்திற்குத் தேவையோ அக்காரியத்தைப் பற்றிக் கவனியாது நிலையாகத் தேவையானதாகக் கொள்ளப்படும். இருப்புப் பாதை அலுவலர்கள் வைத்துவரும் தரைப்படங்களில் ஒவ்வொரு வகை நிலங்களின் எல்லையும் விவரமாகக் காட்டப்பட்டிருக்கும்.

கூடிய விரைவினில் இருப்புப் பாதை திறக்கப்பட்டு வேலைகள் முடிவடைந்ததும் மூலப் படங்கள் திருத்தப்பட்டோ (அல்லது புதிய படங்கள் தயாரிக்கப்பட்டோ) நிலத்தின் வகைகளைக் குறித்துவரையப்படும்—இப்படங்களில் இந்த நான்கு வகை நிலங்களையும் கீழ்க்கண்ட வெவ்வேறு வர்ணங்களில் காட்ட வேண்டும்:—

அ. வகுப்பு நிலம்—வெண் சிவப்பு.
ஆ. வகுப்பு நிலம்—மஞ்சள்.
இ. வகுப்பு நிலம்—கருஞ்சிவப்பு.
ஈ. வகுப்பு நிலம்—பச்சை.

(இ) தனித்த நிலையிலுள்ள துண்டு நிலங்களைச் சரியான வகையில் சுலபமாய் அடையாளம் கண்டுபிடித்துக் கொள்ளும் பொருட்டு, அவை தரைப்படத்தின் பகுதி முதன்மையான

தாளிலுள்ள நிலையாகவிருக்கும் ஏதாவதொரு இடத்தை அணுசரித்து தூரங்களைக் கவராயம் அல்லது குருதுருவக் கோண அளவுகளுடன் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும் அல்லது அருகிலுள்ளவற்றிற்குரிய வெளியிடப்பட்டுள்ள தரைப்படத்திலுள்ளவற்றிற்கு அவ்வாறே குறித்துக் காட்ட வேண்டும். அவ்வாறு தனித்த நிலையிலுள்ள துண்டு நிலங்களுக்குக் கவனம் செலுத்தப்படுவதற்காக அருகிலுள்ள முதன்மையான தாளில் தக்கவாறுக எழுதி வைக்க வேண்டும்.

(ஈ) மேலேயுள்ள (அ) பிரிவு அல்லது (ஆ) பிரிவை அணுசரித்து வரையப்பட்ட எல்லாப் படங்களிலும் ஒவ்வொரு வகை நில எல்லையின் அளவுகளையும் குறிப்பிட வேண்டும். எந்தச் சமயத்திலும் உடனே அடையாளம் கண்டுபிடித்துத் தனிக்கை செய்யும் வகையில் இவ்வளவுகள் சரியாகவும் பூர்த்தியாகவும் இருக்க வேண்டும்.

(உ) ஒவ்வொன்றிலும் நிலம் உள்ள கிராமங்களின் பெயர்களைக் கிராம எல்லைக் கோட்டுடன் சேர்ந்தாற்போலக் கிராம எல்லையைக் காட்டும் வகையில் எழுத வேண்டும். எல்லைக் கோடு இருப்புப்பாதை வழியில் குறுக்கே சென்றால், அதன் மறு பக்கத்திலும் பெயர்கள் திரும்ப எழுதப்பட வேண்டும். குறுக்கேச் செல்லும் இடத்தின் சங்கலித்தூரமும் குறிப்பிட வேண்டும்.

(ஊ) இருப்புப்பாதை நில எல்லை வரையறுக்கப்பட்டு, எல்லைக் குறிகள் நடப்பட்ட பின்னர் தரைப்படங்களில் ஒவ்வொரு எல்லைக் குறியின் இருப்பிடமும் எண்ணும் குறிக்கப்பட வேண்டும். தனித்துள்ள நிலையிலிருக்கும் துண்டு நிலங்களின் குறிப்பைத் தரைப் படத்தில் ஒரு வரிசை அட்டவணையில் அதற்கும் அதற்கு அடுத்த குறிக்குமுள்ள காந்த துருவக்கோண அளவு தூரங்கள் விவரங்களுடன் குறிக்க வேண்டும்.

11–4–1932 தேதி, 802, அ.ஆ.பலவ.
21–4–1932 தேதி, 1255, வ.து.க.செ. பல.

63. தரைப்படங்கள் ஒரு தொடர்ச்சியான பகுதியைக் காட்டும் தொகுப்புகளில் தயாரிக்கப்பட வேண்டும். அதாவது ஒவ்வொரு தொகுப்பும் ஒரு மாவட்ட எல்லையைச் சேர்ந்ததாக அல்லது கலெக்டர் அல்லது துணைக் கமிஷனர் ஆட்சிக்குட்பட்டதாயிருக்க வேண்டும். ஒவ்வொரு தரைப்பட இறுதித் தாளில் (ஆரம்பத்திலும் முடிவிலும்) தேவையானால் இரண்டு தாள்களையும் இணைத்து வைத்துப் பார்க்கவும். அவற்றைக் கொண்டு நகல் வரைபடம்

தொடர்ச்சித் தாள்களில் விவரங்களைத் திரும்ப வரைய வேண்டும். ஒவ்வொரு தொகுப்பைச் சேர்ந்த தரைப்படங்களுக்கும் முற்றிலும் தொடர்ச்சி எண் கொடுத்து அதன் வருவாய் மாவட்டத்தின் பெயரையும் எடுப்பாகத் தெரியுமாறு எழுத வேண்டும்.

64. தேவையான நிலங்களின் விவரங்களைக் காட்டும் அட்டவணைகள் "ஆ" இணைப்பில் 1 முதல் 3 வரையுள்ள படிவங்களில் கண்டுள்ளவாறு தயாரிக்க வேண்டும். இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளிலும் வெவ்வேறு நில உரிமை முறைகள் நடைமுறையிலிருப்பதாலும் ஒவ்வொரு தல அரசாங்கமும் ஆட்சியும் அந்த அந்த நிலப் பகுதிகளுக்கு ஏற்பத் தல வருவாய்த் துறை நடைமுறைகளுக்கும் தக்கவாறு இருப்புப்பாதை ஆட்சி அட்டவணைகள் தயாரிக்கப்பட வேண்டுமாதலால் இப்படிவங்கள் தரப்படுத்தப்படவில்லை.

65. தரைப் படங்களும் அட்டவணைகளும் குறைந்தது இரண்டு பிரதிகளில் ஒன்று வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் மற்றொன்று இருப்புப்பாதை அதிகாரிகளுக்குமாக வரையப்பட வேண்டும்.

66. ஒவ்வொரு தொகுப்புப் படங்களும் அட்டவணைகளும் அவற்றைத் தயார் செய்யும் அலுவலரின் கையொப்பமும் தலைமைப் பொறியாளரின் அல்லது இருப்புப்பாதை தலைமைப் பொறியாளரின் கையொப்பமும் பெற்றிருக்க வேண்டும். முன்னமே நிறக்கப்பட்ட இருப்புப்பாதைக்குத் தேவையான நிலத்திற்குத் தரைப்படங்களையும் அட்டவணைகளையும் ஏஜண்டு மேலொப்பம் செய்து அனுப்ப வேண்டும்.

67. முன்னமேயுள்ள தரைப்படங்களுடன் புதிய தரைப்படங்களைச் சேர்த்துக் கொண்டு தரைப்படங்கள் நாளது வரை சரியாக வைக்கப்பட வேண்டும். சேர்க்கப்படும் ஒவ்வொரு படத்திலும் அந்த இருப்புப்பாதையின் பாகம் எந்த அலுவலரின் பொறுப்பிலிருக்கிறதோ அவரால் சரிபார்க்கப்பட்டு அவர் கையொப்பத்துடன் இருக்க வேண்டும். எந்தச் சமயத்திலும் அந்தத் தேதிவரை இருப்புப்பாதை வசத்திலுள்ள நிலத்தைத் தரைப்படங்கள் சரியாகக் காட்டும் வகையில் வைத்திருக்க வேண்டுமென்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

68. ஒரு முழுப் பாதையின் தரைப்படங்களின் முழுத் தொகுப்பு, இருப்புப் பாதைத் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் வைக்கப்பட வேண்டும்.

பிரிவு X

செலவுகள் சரிக்கட்டப்படுதலும், பணியாளர்த் தொகுதியும், நில வருவாயின் முதலீடு செய்யப்படும் தள்ளுபடியும்.

இருப்புப் பாதைச் செலவில் உரிமை பெறப்பட்ட நிலத்தின் செலவை வகைப்படுத்துதல்.

69. ஒப்பந்தத்தை அனுசரித்து வேறு ஏற்பாடுகள் இருந்தாலன்றி இலவசமாக நிலம் பெற உரிமை இல்லாத இருப்புப்பாதைக்காக நிலையாகத் தேவையாகும் நிலங்களின் செலவு எவ்வளவாயிருந்தாலும் அது மூலதன வேலைக்காகவோ, வருவாய் வேலைகளுக்காகவோ தேவையாக இருப்பின் அது இருப்புப்பாதை மூலதனச் செலவிற்குப் பற்று எழுதப்படும். அரசாங்கத்தால் நடத்தப்பட்ட இருப்புப் பாதைகள் சம்பந்தப்பட்ட வரையில் பொருள்கள் தயாரிக்கப்படுவதற்குத் தேவையான நிலமும் தோண்டி எடுப்பதால் அல்லது சுரங்கங்களிலிருந்து எடுப்பதால் அல்லது தூர்த்தெடுப்பதால் அல்லது வேறு செயல்களினால் பொருள்களின் உரிமை பெறப்படுவதற்காகவும் அவை பற்றிய அரசுரிமைக்காகவும் சுரங்கங்கள் உரிமை முதலியவற்றிற்காகவும் செலுத்தப்படும் கட்டணங்களுக்காகவுமான தொகைகளும் நிலமதிப்பீடுகளில் சேர்க்கப்படலாகாது. ஆயின், அவை மாநில இருப்புப் பாதை நிர்மாணத் தொகுப்பு 147-ஆவது பத்தியில் விதிக்கப்பட்டவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும்; அல்லது அதனிலும் வசதியாக இருக்குமாயின் அவை சம்பந்தப்பட்ட வேலைக்கான செலவில் இறுதியான செலவாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். மற்ற இருப்புப் பாதைகளைப் பொறுத்தவரையில் இத்தகைய செலவுகள் நில மதிப்புடன் சேர்ப்பதோ, சேர்க்காததோ அது ஒப்பந்தத்தைப்பொறுத்ததேயாகும்.

1894-ஆம் ஆண்டு இருப்புப்பாதை தற்காலிகமாக நில உரிமை பெறுவதில் செலவை வகைப்படுத்தல்.

ஆவது சட்டத்தின் 35-ஆவது பிரிவின் கீழ்த் தற்காலிகமான உரிமை பெறப்படும் நிலத்தின் ஈட்டுச் செலவு சம்பந்தப்பட்ட வேலை, அல்லது காரியத்திற்குச் சேரும்.

இலவசமாக நிலம் பெறுவதற்கு உரிமை பெற்றுள்ள இருப்புப் பாதைக்காக நில உரிமை பெறப்பட்ட நிலத்தின் செலவை வகைப்படுத்தல்.

70. ஒப்பந்தம் (அல்லது மற்ற ஏற்பாட்டின்கீழ்) இலவசமாக அரசாங்கம் நிலம் கொடுக்கும் வகைகளில் கம்பெனி அல்லது மற்றக் கழகங்களால் இருப்புப்பாதை அமைக்கப்பட்டால் அதன் செலவெல்லாம் அரசாங்கத்தின் செலவி

லேயே "பண உதவி பெறும் கம்பெனிகள் நிலம்" என்னும் தலைப்பில் காண்பிக்கப் படும். இவ்விதிகளின் 4 ஆவது விதியில் குறிப்பிட்டுள்ளவாறு அ, ஆ, இ, ஈ வகைகளின் கீழோ அல்லது இத்தகைய வேறு நிபந்தனைகளுக்குட்பட்ட நில உரிமை பெறப்படும் "இ" வகுப்பு போன்ற தன்மை நிலத்தின் உரிமை இருப்புப் பாதைச் செலவில் உரிமை பெறப்படும்.

71 முதல் 74 வரையில் நீக்கப்பட்டன.

75. ஒப்பளிப்புப் பஞ்ச நிவாரணத்திற்காக இருப்புப்பாதை வேலைகளுக்கு நில உரிமை பெறல்.

பெருத வேலைகள் பஞ்ச நிவாரணத்தின் பொருட்டு மக்களுக்கு வேலை கொடுத்து உதவும் பொருட்டு, நில உரிமை பெறப் பட்டால், எல்லை வரையறுத்தல் நில உரிமை பெறுதல் முதலிய செலவுகள், அவ்விருப்புப் பாதை திட்டத்தின் வேலை உண்மையில் தொடங்கப்படும் வரை "12 இருப்புப் பாதைப் பலவகைச் செலவு" என்னும் தலைப்பில் செலவு எழுதப் பட்டு, பின்னர் இருப்புப்பாதைத் திட்டத்தின் வேலை தொடங்கப் பட்டதும் திட்டத்தின் முதலீட்டுச் செலவிற்கோ, "11 பண உதவி பெறும் கம்பெனிகள்—நிலம்" என்னும் தலைப்புக்கோ சந்தர்ப்பத் திற்கேற்பச் செலவு எழுதப்படும்.

6—6—1933 தேதி, 998. அ.ஆ.வரு.பல.
16—6—1933 தேதி, 43, வ.து.க.செ.அச்சு.

76 முதல் 79 வரையில் நீக்கப்பட்டன.

80. அரசாங்க ஆணையை அனுசரித்து நில உரிமை பெறுவதற்காக நியமிக்கப்பட்ட தனிப் பணியாளர்களின் தொகுதிக்காகச் சிவில் அலுவலாலோ, பொறி இயல் பணித் துறையில் பணம் செலவு செய்யும் அலுவலாலோ செலவு செய்யப்படும் மூழுச் செலவும் நிலத்தின் விலையுடன் சேரும். "மூழுச் செலவு" என்பது அவ்வாறு நியமிக்கப்பட்ட பணியாளர்களின் சம்பளம் படி, மட்டுமின்றி அப்போது நடைமுறையிலிருக்கும் விதிகளின்கீழ் 1894-ஆம் ஆண்டு I ஆவது நில உரிமை பெறும் சட்டம் 50 (1) ஆவது பிரிவின் கீழ் உரிமை பெறற்குரிய செலவின் ஒரு பகுதியான ஓய்வு ஊதியத்திற்கும் விடுப்புச் சம்பளத்துக்கு மான உதவித் தொகையும் இடை நிகழ் செலவுகளாகும்.

பணியாளர்த் தொகுதி சில்லறைச் செலவு.

3—10—1930 தேதி, 75, வ.து.க.செ.
17—2—1931 தேதி, 16, வ.து.க.செ.

81. இருப்புப்பாதைக்காக நில உரிமை பெறுதலுக்கான சில்லறைச் செலவினங்கள் சிப்பந்திச் செலவு போலக் கணக்கில் சரிக்கட்டப்படும். இருப்புப்பாதை ஆட்சியினரால் நில உரிமையைப் பெறுதலுக்காக நிலத்தின் பாப்பைக் காட்டவும் நிலப் படங்கள், விவர அட்டவணைகள் முதலியன வரைவதற்காக நியமிக்கப்படும் பணியாளர்கள் நிமித்தமாக ஆகும் செலவுகளின் யாதொரு பாகத்தையும் நிலத்தின் விலையுடன் சேர்க்கக் கூடாது என்பதைக் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இத்தகைய செலவுகள் சம்பந்தப்பட்ட வேலைக்கு ஏற்படும் செலவுடன் தனியாய்ச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பிரிவு XI

இந்திய சிற்றரசு நாடுகளிலும் பிரிட்டிஷ் இந்தியப் பிரதேசத்திலும் இருப்புப்பாதைகளுக்காக நில உரிமை பெறுதல் பற்றியது தற்சமய சூழ்நிலையில் தேவையில்லையென விட்டுவிடப்பட்டது.

பிரிவு XII

பலவகை.

நில எல்லை வரையறுத்தல்.

87. 1890 ஆம் ஆண்டு IX ஆவது இந்திய இருப்புப்பாதை சட்டம் 13 (a) ஆவது பிரிவின்கீழ் நில எல்லை வரையறுத்தலுக்காக கீழ்க்கண்ட விதிகள் இந்திய அரசினரால் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

(அ) இருப்புப்பாதைகளுக்காக நிலையாகத் தேவையாகும் எல்லா நிலங்களின் எல்லையையும் நிலத்தில் சுலபமாக உடனடியாக அடையாளம் கண்டுபிடித்துக் கொள்ளுமாறு எல்லை வரையறுக்கப் பட வேண்டும்.

(ஆ) இதற்காக இருப்புப்பாதை நில எல்லையை ஒரு தொடர்ச்சியான சுவர், வேலி அல்லது நீளக் குழி அல்லது தனித் தனியான குறிகள், கம்பங்கள், தூண்கள் இவற்றால் வரை யறுக்கலாம்.

(இ) எல்லைக் குறிகள் தொடர்ச்சியாக இருந்தால் இருப்புப் பாதை நிலத்தின் எல்லை, சுவர், வேலி, நீளக்குழி இவற்றின் வெளிப்புற ஓரத்தில் அமைக்க வேண்டும்—அதாவது சுவர், வேலி, நீளக்குழி முழுவதும் இருப்புப்பாதை நிலத்துக்குள் இருக்க வேண்டும்.

(ஈ) தனிப்பட்ட குறிகள், அதாவது தனித்தனி தூண்கள் கம்பங்கள் இவை உபயோகப்படுத்தப்பட்டால் இருப்புப்பாதை நிலத்தின் எல்லை தூண்கள் கம்பங்கள் இவற்றின் வெளிப் புறத்தோடு அமையும். ஒரு குறிக்கும் மற்றொரு குறிக்கும் இடையே அவற்றின் வெளிப்புறமாக ஒரே நேர்க்கோடாக இருப்புப்பாதையின் எல்லையை எடுத்துக் கொள்ள வேண்டும்.

(உ) தனிப்பட்ட குறிகள் ஒன்றுக்கு ஒன்று (மையத்தி லிருந்து மையத்துக்கு) அரைக்கால் மைலுக்கு (600 அடிக்கு) அதிகமாக இருக்கக் கூடாது. இக்குறிகள் விபத்தாலும், எவரொருவர் செய்யக் கூடிய தீங்கிலும் சேதமடையா திருக்குமாறும் நன்றாகத் தெரியுமாறு கெட்டியான தன்மை உடையவையாகவும் இருக்க வேண்டும்.

(ஊ) ஒவ்வொரு தனித்த நிலையிலிருக்கும் குறிக்கும் ஒரு எண் இட்டு அதன் எண், இருப்பிடம் முதலியவற்றை தரைப் படத்திலும் குறிப்பிட வேண்டும்.

(எ) வேலி, சுவர், அல்லது நீளக் குழி எல்லையைவிட்டு உள்ளே தள்ளியிருந்து அவை சரியான எல்லையைக் குறிக்காவிடில், அத்தகைய வேலி, சுவர், நீளக் குழியுடன் உண்மையான எல்லையைக் காட்டுவதற்காக இவ்விதிகளுக்கிசைந்தவாறு சரியாக வரையறுத்துக் குறிகளை அமைக்க வேண்டும்.

88. மேலே i ஆவது பிரிவின் 4 (ஆ) பத்தியின் கீழ்ப் பாகுபாடு பொருந்தக்கூடியதான இலவசமாக நிலம் பெற உரிமை பெற்றுள்ள கம்பெனி யாரால் அமைக்கப்பட்ட இருப்புப்பாதை சம்பந்தப் பட்டவரை "நிலையாக வசத்திருக்கும் நிலம்" என்பதில் 'இ' பிரிவு நிலம் மட்டுமின்றி அதிக காலத்திற்குத் தேவையாகும் ஆ, இ நிலங்களும் சேரும். எல்லைகளுக்குள்ளிருக்கும் ஆ, இ நிலங்கள் பின்னர் உரிமை விட்டுவிடப்பட்டால், புது நில வரம்பைக் காட்டு வதற்காக எல்லையை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.

89. ஒவ்வொரு இருப்புப்பாதையின் வசத்திலுள்ள எல்லா இருப்புப்பாதை நிலங்களின் எல்லைகளைக் காட்டும் பதிவுகள் சரிவரப் பராமரிக்கப்பட்டு அவற்றின் எல்லை வரையறுக்கப்பட்டு குறித்த காலங்களில் பார்வையிடப்படுதல் அந்த அந்த இருப்புப் பாதையின் பொறுப்பு ஆகும்.

11—4—1932 தேதி, 802, அ.ஆ.வரு. பல.
21—4—1932 தேதி, 1255, வ.து.க.செ.புல.

தனிப்பட்டவர்களின் உபயோகத்துக்கான பக்க இருப்புப் பாதைகள் அமைத்தல்.

90. இருப்புப்பாதை எல்லைக்கு வெளியே தனிப்பட்டவரின் உபயோகத்திற்காகத் தேவையாகும் கிளைப் பாதைகளை அமைப்பதற்கு அவசியமான நிலத்தை, அத்தகைய கிளைப் பாதைகளை உபயோகப்படுத்துபவர்களின் செலவில் நில உரிமை பெறும் சட்டத்தின்கீழ் அந்த இருப்புப்பாதை அமைக்கும் ஆட்சியினரால் நில உரிமை பெறப்படும். நில உரிமை பெறற்காகும் செலவிற்கு ஒரு மதிப்புப் பட்டியல் தயாரித்து இருப்புப்பாதை ஆட்சி, பக்க இருப்புப்பாதைகள் அமைக்குமாறுக் கேட்டுக் கொண்டவர்களுக்கு அனுப்புவார். நில உரிமை பெறும் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னதாக அவர்கள் தேவையான தொகையை வைப்புத் தொகையாகச் செலுத்த வேண்டும். நில உரிமை பெறுதலுக்காகும் கூடுதல் தொகை ஏதாவது ஏற்பட்டால் அதையும் கேட்கப்படும்போது செலுத்துவதாக அவர் ஒப்புக் கொள்ள வேண்டும். இவ்வாறு உரிமை பெறப்படும் நிலங்கள் இந்திய யூனியன் சட்ட உரிமையிலே இருக்கும். பக்கப் பாதை அமைக்கக் கோரியவர்களுக்கு அதில் எத்தகைய உரிமையுமில்லை.

இருப்புப் பாதை கல்லறைகளுக்கான நிலம்.

91. இருப்புப் பாதைக் கல்லறைகளுக்காக நிலம் கோரும் கம்பெனி, தல அரசினர் அல்லது ஆட்சியினருக்கு விண்ணப்பம் செய்து கொண்டால் அவர்கள் நிலம் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்வார்கள். இத்தகைய நிலங்களை அரசினரோ, ஆட்சியினரோ இலவசமாகக் கொடுக்கலாம்; இல்லையேல் அதற்கான நடப்பு விலை மதிப்புத் தொகையைக் கொடுக்குமாறு அவ்விருப்புப் பாதை ஆட்சியைக் கேட்கலாம். இருப்புப்பாதை ஆட்சிக்குச் சம்பந்தப்பட்ட கல்லறை நிலத்திற்கான ஏற்பும் ஒப்பளிப்பும் இருப்புப்பாதைக் கழகம் அளிக்கும் வரையில் இதுபற்றி மாநில அரசாங்கத்திற்கோ ஆட்சியினருக்கோ நிலத்திற்காக எத்தகைய விண்ணப்பமும் செய்யக்கூடாது. எவ்வளவு நிலம் அளிப்பதென்பதை மாநில அரசினர் தம் யுக்தம்போல் தீர்மானிப்பார்கள்.

~~92. ஆயுதங்கள் வைக்குமிடத்தில் பட்டதைகள் கட்ட~~ முடியாவிடில் இத்தகைய இடத்தையும் ஊதியமில்லாத இருப்புப்பாதை படைக்குப் பயிற்சி அளிக்கும் அலுவலர் குடியிருப்பிடமும் ஒரே

* இருப்புப் பாதைக் கழகத்தின் 1909-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 3-ஆம் தேதிய 701 சுற்றறிக்கையைக் காண்க.

இருப்புப் பாசறைகளில் ஆயுதங்கள் வைக்குமிடங்களும் தொண்டர் படையினருக்குப் பயிற்சியளிக்கும் படைத் தலைவர்கள்* குடியிருக்கு இடங்களும் அமைக்கப்படுதல்.

தொகுப்பில், தனித்தனி வாசலுடன் அமைப்பதற்கு ஆட்சேபனை இல்லை. ஆயுத வைப்பிடம் தனியாகவோ அல்லது தற்போது உள்ள இடங்களில், அதாவது பட்டறைகள் பொறியியல் கொட்டகைகளில் அல்லது கருவிச் சேமிப்பிடத்தில் இருந்தால் பயிற்சி அளிக்கும் அலுவலர் குடியிருப்பிடம் அதற்குருகில் இருப்புப்பாதை நிலத்தில் கட்டலாம். இருப்புப்பாதை நிலத்தில் அவருக்காகக் குடியிருப்பு வீடு கட்டப்பட்டால் ஆயுதச்சாலைக் குரிய திட்டங்கள் இதற்கும் பொருந்தும் என்றும், அதாவது அந்நிலம் இருப்புப்பாதை ஆட்சியினர் உடைமையாக இருக்குமென்றும் அதற்காக எத்தகைய வாடகையும் வசூலிக்கக்கூடாதென்றும் படைத் தலைவர்களுக்குப் பயிற்சி தருவோர் அந்த இடத்தில் பணி புரிய வேண்டியதில்லை என்றால் அல்லது அவரது தலைமையிடம் மாற்றப்பட்டால் இக்கட்டடங்கள் இருப்புப்பாதை ஆட்சியினரால் நியாயமான கிரயத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற கூடுதலான நிபந்தனைக்கும் உட்படும்.

சட்ட நடவடிவகைகள்.

93. நில உரிமை பெறும் நடவடிக்கையைப் பற்றிச் சட்டப் பிரச்சினை ஏற்பட்டால், சட்டத்திற்கிணங்கிய நடவடிக்கைகள் எடுக்கும் முன்னர் மாநில அரசாங்கம் அல்லது ஆட்சியாளரிடம் கலந்து கொள்ள வேண்டும்.

இணைப்பு அ.

5 அடி 6 அங்குல அகல ஒற்றை வழிப் பாதைக்காக எடுத்துக்கொள்ள வேண்டிய நில அகலங்களின் விவர அட்டவணை

துணை உள்ளடக்கங்கள்.

கரையின் உயரம்.	மத்திய கோட்டிலிருந்து சரிவின் அடி ஓரம்.	ஓரம். ஒரு பக்கம்.	ஓரம். மறு பக்கம்.	தோண்டப்பட்ட குழியின் மேல் பாகத்தின் அகலம்.	வேலி அமைப்பதற்காகக் குழிகளின் வெளியில் விடப்படக் கூடிய அகலங் கணைச் சேர்க்க.	மத்திய கோட்டிலிருந்து எல்லை வரையுள்ள அகலம். ஒரு பக்கம்.	மத்திய கோட்டிலிருந்து எல்லை வரையுள்ள அகலம். மறு பக்கம்.	நிலத்தின் மொத்த அகலம்.	குறிப்புரை.	குழிகளின் ஆழம். அடி.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
0	10	10	10	..	..	20	20	40	ஒரு பக்கத்திலுள்ள குழிகள்.	..
1	12	11	10	14	3	40	22	62	மே.	2
2	14	12	10	30	3	59	24	83	மே.	3
3	16	13	10	34	3	66	26	92	மே.	3
(i) 1925 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் தேதிக்கு முன்னர் மாற்றப்பட்ட நிலங்களைப் பொறுத்தவரையில் அவ்வாறு மாற்றப்படுமுன் அமலிலிருந்த பழைய விதிகளின் கீழே இருப்புப் பாதை ஆட்சிக்கும் தல அரசாங்கத்திற்கும் கணக்குகளைச் சரிக்கட்ட வேண்டும்.

1925 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் தேதிக்கு முன்னர் நிலம் மாற்றப்பட்டபோதிலும், அத்தகைய நிலம் மாற்றுதலுக்கான தொகை பற்றிய ஏற்பாடுகளைப் புதிய விதிகளின் கீழ்க் கணக்கிடுவதற்கென வேண்டுமென்றே நிறுத்தி வைக்கப் பட்டிருந்தால் அத்தகைய இனங்களுக்குப் புதிய விதிகள் பொருந்தும்.

விதி 1.—இந்திய யூனியன் பொறுப்பிலுள்ள அல்லது இனிமேல் அத்தகைய பொறுப்பிற்குட்படும் நிலத்தின் உரிமை அரசினருடையதாகும். இந்திய அரசாங்கச் சட்டத்தின் கீழ் இந்திய அரசாங்கமோ அல்லது தல அரசாங்கங்களோ சந்தர்ப்பத்திற்கேற்ப இன்றியமையாத வேலைக்காக நிலத்தை உபயோகப்படுத்த உரிமையுண்டு. ஒரு அரசாங்கத்தினின்று மற்றொரு அரசாங்கத்திற்கு நிலம் மாற்றுவதற்கு இந்திய அரசாங்கச் சட்டத்தின் 30 ஆவது பிரிவு பொருந்தாது.

விதி 2 (அ).—இந்திய அரசாங்கத்தின் பொறுப்பில் 1921 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதியில் உள்ள எந்த மாநில அரசினர் நிலமும் எந்தவகைய இடையூறுமின்றி அப்போது அமலிலிருந்த நிபந்தனைக்குட்பட்டு, அந்நிலம் அவர்கள் வேலைக்கு

இன்றியமையாததென்று இருக்கும் வரையில், அவர்கள் அனுபோகத்திலே வைத்துக்கொள்வதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு.

குறிப்பு.—1—4—1921 இந்திய அரசாங்கத்தின் சார்பாக இந்திய அரசாங்க வேலையை இந்திய அரசாங்கத்தின் " பிரதிநிதியாக மாநில அரசாங்கத்தால் பயன்படுத்தப்பட்ட எந்த நிலமும் இந்திய அரசாங்கத்தின் அனுபோகத்திலிருப்ப தாகவே கருத வேண்டும். அது மாநில அரசாங்கத்தின் பொறுப்பிலிருப்பதாகக் கருதக் கூடாது.

(ஆ) மாநில அரசாங்கத்தின் எல்லைக்குள்ளிருந்த போதிலும் அது மத்திய அரசாங்கத்தின் அனுபோகத்திலிருந்தால் அந்நிலத்தை இந்திய அரசாங்கத்தின் அனுமதியின்றிப் பராதீனம் செய்யவோ அல்லது மற்ற வகையில் அதில் தலையிடவோ மாநில அரசாங்கத்திற்கு அதிகாரமில்லை.

விதி 3.—இந்திய அரசாங்கத்தின் அனுபோகத்திலுள்ள ஒரு நிலம் அதற்குக் குறிப்பிட்ட காரியத்துக்கு உபயோகப்படுத்தப் படவில்லை என்றும், அவ்வரசாங்கத்திற்கு இன்றியமையாத வேலைகளுக்காக அது தேவையில்லையென்றும் கருதப்பட்டால் மாநில அரசாங்கம் இதனைப் பற்றி இந்திய அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும். இவ்விரு அரசாங்கத்திற்கும் கருத்து வேற்றுமை இருப்பின் இந்திய யூனியன் தலைவரின் தீர்மானத்துக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளலாம்.

குறிப்பு.—"'இன்றியமையாத தேவை " என்னும் சொற்றொடர்களை ஒரு குறுகிய பொருளில் எடுத்துக் கொள்ளக் கூடாது. ஓர் அளவினதாகிய நிலம் இந்திய அரசாங்கம் அதன் கடமைகளைத் நிறம்படச் செய்வதற்குத் தேவையா அல்லது தேவையில்லையா என்பதை அந்நிலம் இதுபோது உபயோகப் படுத்தப்பட்டிருப் பதைக் கொண்டு முடிவு செய்வதோடு இந்திய அரசாங்கம் தக்கதென்று கருதக்கூடிய தாகவருங்கால வளர்ச்சிகளை அனுசரித்தும், மிகச் சிறந்த ஆட்சித் தரத்தை அனுசரித்தும் முடிவு செய்ய வேண்டும்.

இது தீர்மானத்திலில்லை, ஆனால், தீர்மானத்துக்குக் காரணமான செயலாள ரின் நிலையைச் சார்ந்த பிப்ரவரி மாதம் 12-ந் தேதி, 9 என். அரசாங்கக் கடிதத்தில் உள்ளது.

விதி 4.—இந்திய அரசாங்கத்தின் அனுபோகத்திலிருக்கும் ஒரு நிலம் அதற்குத் தேவையில்லை எனில் எந்த மாநிலத்தில் அந்நிலம் இருக்கிறதோ அந்நிலம் அரசாங்கம் அந்நிலம் முழுமையுமோ அல்லது அதன் ஒரு பகுதியையோ கீழ்க்கண்ட உட்பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு எடுத்துக் கொள்வதற்கு அம்மாநில அரசாங்கத்திற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். ஆனால் (i) ஒரு பகுதியை மட்டும் மாநில அரசாங்கம் எடுத்துக்கொள்ளச் சம்மதித்தால் ஒரு பகுதியை அவ்வாறு பிரித்துக் கொடுப்பதால் மிகுதியாக உள்ள நிலத்தின் மீது

அதிகமாகக் குறைந்து விடாது என்ற மாத்திரமே மாநில அரசாங்கம் அதைப் பெறுவதற்கு உரிமையுண்டு. ( ) பாலியம் அல்லது மற்ற இடத்திலுள்ள தண்டு தண்டாகவுள்ள தனிப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையில்லை என்ற காரணத்தால் அவற்றைப் படைத் துறையினர் விட்டுவிடுமாறு கேட்க மாநில அரசாங்கத்திற்கு உரிமையில்லை.

விதி 5.—எந்த மாநிலத்திலாவது 1921 ஆவது ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதிக்கு முன்னர் அரசாங்கத்தால் உரிமை பெறப்பட்ட நிலம் அத்தேதிக்குப் பின்னர் மாநில அரசாங்கத்திற்காக விட்டு விடப்பட்டால் அதற்காக மாநில அரசாங்கம் இந்திய அரசாங்கத்திற்கு எவ்வளவு ஈட்டுத் தொகை கொடுக்க வேண்டுமென்பதைக் கீழ்க்கண்ட கொள்கைகளை அனுசரித்துத் தீர்மானிக்க வேண்டும்.

I (அ) இருப்புப் பாதை ஆட்சியினால் விட்டு விடப்பட்ட நிலத்தைத் தவிர மற்ற நிலம் விட்டு விடப்பட்டால் அதற்குப் பதிலாக வேறு நிலம் பெறுவதில் இந்திய அரசாங்கத்திற்கு ஏதாவது செலவு ஏற்பட்டாலும், அல்லது படைத் துறையினர் திருப்பிக் கொடுத்துவிட்ட நிலம் அவர்களுடைய வேலைக்காகத் திறம்பட உபயோகப்படுத்தப்பட்டு வந்திருந்தாலும் மாநில அரசாங்கம் ஈடாகக் கொடுக்க வேண்டிய தொகையானது அதில் கட்டடம் ஏதாவது இருந்தால் அதன் நடப்பு விலை மதிப்புத் தொகையும், அதனுடன்

(அ) நில உரிமை பெறுதலுக்கான செலவு ஏதாவது இருந்தால் அத்தொகையையும் நில மேம்பாட்டிற்கான செலவும், அல்லது

(ஆ) நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகையின் பாதி இவற்றுள் எது அதிகமோ அந்தத் தொகையும்.

(ஆ) இதர இனங்களில் தல அரசாங்கம் கொடுக்க வேண்டிய தொகை நிலத்தில் கட்டடம் ஏதேனும் இருந்தால் அதன் நடப்பு விலை மதிப்புத் தொகையும், அதனுடன்

(அ) நில உரிமை பெறுதலுக்கான செலவு ஏதாவதிருந்தால் அத்தொகையும் நில மேம்பாட்டிற்கான தொகையும் அல்லது

(ஆ) நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகை, இவற்றுள் எது குறைந்திருக்குமோ அத்தொகையும் சேர்ந்ததாகும்.

ஆனால் தலைமை நகரங்கள், அல்லது விலை மதிப்புள்ள பாலைய்த்திற்குச் சேர்ந்த நிலங்களைப் படைத் துறையினர் திருப்பிக் கொடுத்துவிட்டால் நிலம் மாற்றப்படும் ஒப்பந்தம் கீழே 10 ஆவது விதியின்கீழ் இரு திறத்தாரும் மனமொப்பிய ஏற்பாட்டை அனுசரித்திருக்க வேண்டும்.

II இருப்புப் பாதை ஆட்சியினரால் உரிமை விட்டு விடப்பட்ட நிலமாயிருப்பின், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப இந்திய அரசாங்கத்திற்காயினும் இருப்புப் பாதை ஆட்சியினருக்காயினும் மாநில அரசாங்கம் அந்த நிலம், கட்டடம் இவற்றின் நடப்பு விலை மதிப்புத் தொகையைக் கொடுக்க வேண்டும்.

குறிப்பு.—'' நடப்பு விலை மதிப்புத் தொகை '' என்பது நிலம் மாநில அரசாங்கத்திற்கு மாற்றப்பட்ட தேதியில் அந்நிலத்துக்குக் கிடைக்கக் கூடிய விலையாகும். மேலும், இந்நடப்பு விலை மதிப்புத் தொகை இந்திய அரசாங்கத்துக்கு நில உரிமை பெறப்படும் போது இருந்த நிலத்தின் விலை முதலீடாக்கப்பட்ட தொகையைக் குறிக்கும்.

விதி 6—5 ஆவது விதியின்கீழ் நிலத்தைச் சுவாதீனம் செய்து கொள்ளும் மாநில அரசாங்கம் அயலாருக்கு நிலத்தை விற்கவோ அல்லது குத்தகைக்கு விடவோ உரிமை உண்டு. ஆனால் நிலத்தைச் சுவாதீனம் செய்து கொண்ட ஐந்து ஆண்டு காலத்திற்குள் (நில வருவாய் அல்லது மனை வரி உட்பட) இத்தகைய குத்தகை, அல்லது விற்பனையில் கிடைத்த விலை முதலீடாக்கப்பட்ட குத்தகை 5 ஆவது விதியின் கீழ் மாநில அரசாங்கம் கொடுக்க வேண்டிய தொகைக்கு இரு மடங்குக்கு மேற்பட்டால், மாநில அரசாங்கம் கொடுக்க வேண்டிய தொகையானது விற்ற விலை அல்லது முதலீடாக்கப்பட்ட குத்தகைக்கு அரை மடங்குக்கு உயர்த்தப்படும். ஆனால்

(i) பிரத்தியேகமானவற்றில் (இத்தகைய இனங்களில் 10 அல்லது 11 விதிகள் அனுசரிக்கப்படலாம்) தனிப்பட்ட காரணங்களிலிருந்தால் இந்திய அரசாங்கம் வாங்கிய விலை அல்லது முதலீடாக்கப்பட்ட குத்தகையில் அதிக விதமோ அல்லது முழுமையுமோ கேட்க உரிமையுண்டு.

(ii) இதைக் கணக்கிடுவதில் மாநில அரசாங்கம் நிலம் தங்கள் அனுபோகத்திலிருக்கும்போது நிலத்தில் எதாவது மேம்பாடு செய்யப்பட்டிருந்தால் அத்தகைய மேம்பாட்டிற்கான செலவைக் கழித்த பின் உள்ள மிகுதியான விற்று முதலே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

விதி 7.—மாநில அரசாங்க நிலம் இந்திய அரசாங்கத்துக்காக 1921 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதிக்குப் பின்னர் உரிமை பெறப்பட்டிருந்தால் அந்நிலம் மறுமுறையும் இந்திய அரசாங்கத்திற்கு மாற்றப்பட்டால் மாநில அரசாங்கம் அந்நிலம், கட்டடம் இவற்றின் நடப்பு விலை மதிப்புத் தொகையைக் கொடுக்க வேண்டும்.

விதி 8.—இந்நிபந்தனைகட்குட்பட்டு நிலத்தை சுவாதீனம் செய்துகொள்ள மாநில அரசாங்கம் சம்மதிக்காவிடில், இந்திய அரசாங்கம் நிலத்தை எவ்வாறு கொடுத்து விடலாம் என்பதிலும் விற்பனைக்குப் பின்னர் என்ன எனன நிபந்தனைகள் விதிக்கலாம் என்பதிலும் மாநில அரசாங்கத்தை இந்திய அரசாங்கம் கலந்து கொண்டு, தம் யுக்தம் போல் அயலாருக்கு நிலத்தைக் கொடுத்து விடலாம்.

குறிப்பு.—(1) இந்த விதியின் கீழ் நிலத்தைக் கொடுத்து விடுவதற்காக இந்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை பகர்வதில் இந்திய அரசாங்கத்திற்கு 30—10—1896 தேதி, 13-44-13 என். வருவாய் வேளாண்மைத் துறைத் தீர்மானத்தில் கூறப் பட்டுள்ள கொள்கைகளைக் கவனிக்க வேண்டும்.

குறிப்பு.—(2) இந்திய அரசாங்கம் இவ்வாறு தனிப்பட்டவர்களுக்கு விற்பனை செய்த நிலத்தின் வருவாய் முதலீட்டுத் தொகை மாநில அரசாங்கத்திற்குக் கொடுக் கப்பட்டிருந்தால் அன்றி அந்நிலம், மாநில அரசாங்க நில வருவாய்ச் சட்டத்துக் குட்பட்டதாகும். பிரத்தியேக மானவற்றைத் தவிர மற்றவற்றில் மாநில அரசாங்கம் முதலீட்டு வருவாய்த் தொகையைத் திருப்பிக் கொடுக்கர்விடில் நிலத்தை எத்தகைய நிபந்தனையுமின்றிக் கொடுத்துவிட இந்திய அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

விதி 9.—மாநில எல்லையிலுள்ள ஒரு நிலம் இந்திய அரசாங்கத்தின் இன்றியமையாத வேலைக்குத் தேவையென்றால்,

(அ) அந்நிலம் மாநில அரசாங்கத்தின் உடனடியான உபயோகத்தில் இல்லாதிருந்தால் நில உரிமை பெறுவதற்கான செலவும்,

(ஆ) அதன் உடனடியான உபயோகத்திலிருந்தால் அதன் நடப்பு விலை மதிப்புத் தொகையும் பெற்றுக் கொண்டு அதன் உரிமை பெறப்பட்டு இந்திய அரசாங்கத்திற்கு ஒப்புவிக்க மாநில அரசினர் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இருப்பினும், கோரப்படும் தொகை நியாயமானதா என்பதைப் பற்றி நடுவர் நீதிமன்றத் தீர்ப்புக்கோ, அல்லது மாநில அரசாங்கத்தின் இசைவில் ஒரு நடுவர் தீர்ப்புக்கோ அதை அனுப்ப இந்திய அரசாங்கத்துக்கு உரிமை உண்டு.

குறிப்பு.(1).—இந்திய அரசாங்கத்திற்கு நிலம் மாற்றுவதால் மாநில அரசாங்கத்திற்கு உண்மையில் நில வருவாய் இழப்பு ஏற்பட்டால் மாத்திரமே உரிமை பெறப்படும் நிலத்தின் வருவாய் முதலீட்டுத் தொகையும் சேர்த்து மாநில அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டும். நிலம் மாநில அரசாங்கத்தின் அனுபோகத்திலிருந்தும், அதிலிருந்து வருவாய் இல்லையேல், அதை மாற்றுவதால் யாதொரு இழப்பும் ஏற்படாது. ஆதலால் ஏற்படாத இழப்பிற்கு ஈடு கேட்பது முறையன்று.

குறிப்பு (2).—அரசியல் அமைப்பின் கீழ் அரசாங்கச் சொத்தான இந்திய அரசாங்கத்தின் அனுபோகத்திலுள்ள யாதொரு நிலத்திற்கும், நில வருவாய் கொடுக்க வேண்டியதில்லை. ஆதலால் மாநில அரசாங்கம் இத்தகைய நிலத்திற்கு நிலத் தீர்வை கேட்கக் கூடாது. இதன் முக்கிய காரணம் என்ன வென்றால் இந்திய அரசாங்கத்தின் அதிகாரத்தின் பெயரிலே தீர்வை விதிப்பதற்கும் இந்திய அரசாங்கத்திடமிருந்து தீர்வை வசூலிப்பதற்கும் இயலாது.

குறிப்பு (3).—இந்திய அரசாங்கத்திற்குத் தேவையான ஒரு நிலத்தின் உரிமைகளில் ஒரு பகுதி, மாநில அரசாங்கத்திற்கும் ஒரு பகுதி தனிப்பட்டவருக்கும் இருக்குமானால், " நில உரிமை பெறுவதற்கான செலவு " என்பது நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகையும் மாநில அரசாங்கம் நில உரிமை பெறுதற்காகச் செலவு செய்த தொகையும் சேர்க்கப்பட்ட தொகையிலிருந்து நில உரிமை பெறுதலால் இழக்கப்பட்ட உரிமையின் மதிப்பைக் கழித்தப் பின்னர் உள்ள தொகை ஆகும்.

குறிப்பு (4).—இந்திய அரசாங்கத்திற்காக மாநில அரசாங்கம் " நில உரிமை தல் " அதற்கு உரித்தான அலுவல் என்றாலும், அதைச் செய்வதில் மாநில ங்கம் ஒரு பிரதிநிதியாகப்பணி புரிவதில்லை என்றாலும், இத்தகைய நில உரிமை ஷ்க்காக மாநில அரசாங்கத்திற்குஏற்படும் தனிச்செலவு ஏதேனும் இருந்தா மாநில அரசாங்கத்திற்கு இந்திய அரசாங்கம்கொடுத்துவிட வேண்டும்.

குறிப்பு (5).—இந்திய அரசாங்கத்தின் அனுபோகத்திலில்லாத எல்லாத் தரிசு நிலங்களிலும் இந்திய அரசாங்கத்தைப் பிரதிகூலமாகப் பாதிக்கக் கூடிய உரிமைகள் யாதொன்றும் இல்லாதிருந்தால் அந்நிலங்கள் மாநில அரசாங்கத்தின் உடனடியாக யாக அனுபோகத்திலிருப்பதாகக் கருதப்படும்.

விதி 10.—இந்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் அல்லது அரசாங்கங்களும் மனமொப்பி எத்தகைய ஒப்பந்தமோ செய்துகொள்ளுதல் இவ்விதிகளுக்கு முரணாக இருந்தாலும், இவ்வாறு செய்து கொள்வதற்கு மேற்கண்ட விதிகள் இடையூறு செய்யா.

விதி 11.—இவ்விதிகளைச் செயற்படுத்துவதில் இந்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் இடையே பிரச்சினை ஏதேனும் எழுமாயின் மாநில அரசாங்கம் விரும்பினால் இந்திய யூனியன் தலைவர் முடிவு செய்யுமாறு எழுதி அனுப்பப்பட வேண்டும்.

விதி 12.—* மேலே கூறப்பட்டுள்ள விதிகளை அனுசரித்தாலன்றி மாநில அரசாங்க எல்லைக்குட்பட்டு இந்திய அரசாங்கத்தின் அனுபோகத்திலுள்ள நிலத்தை அயலார் ஒருவருக்கு அல்லது மற்ற வகையிலோ விற்பனை செய்ய மாநில அரசாங்கத்திற்கு உரிமையில்லை.

*இதனுடன் சேர்க்கப்பட்ட 19—11—1925 தேதி. 54 எண். இந்திய அரசாங்க நிதித் துறைத் தீர்மானத்தின் உள்ளடக்கம்.

6—6—1933 தேதி. 998. அ.ஆ.வரு.பல.

6—6—1933 தேதி. 43. வ.து.க.செ.அச்சு.பல.

குறிப்பு.—இவ்விணைப்பில் அடங்கிய விதிகள் இந்திய அரசாங்கத்தால் நிருத்தி அமைக்கப்பட்டுள்ளன. இந்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் நிலம், கட்டடங்கள் மாற்றுவதைப் பற்றித் திருத்தப்பட்ட அறிவுரைகள் வருவாய்த் துறைக்குழுவின் 23-ஆவது நிலை ஆணையில் அடங்கியுள்ளன.

17—5—1957 தேதி. 2065 அ. ஆ. வரு.பல.

இணைப்பு கா.

அரசாங்கத்தின் அசையாச் சொத்துக்களை பொதுக் காரியங்களுக்காகத் தல அதிகாரிகளுக்குக் கொடுப்பதற்கான நிபந்தனைகள்.

[19—2—1902 தேதி. 914-க. எண். இந்திய அரசாங்க நிதி, வாணிபத் தீர்மானம்.]

1. பார்வையிடப்பட்டது.—அசையாச் சொத்து டெ காரியங்களுக்காகத் தல ஆட்சியினரிடம் கொடுக்கப்பட்டா அதற்காக நிச்சயப்படுத்தப்படும் மற்ற நிபந்தனைகளுடன் அந்நிலம் அரசினரால் எப்போதாவது திரும்ப எடுத்துக்கொள்ளப்பட்டால், அதற்காகக் கொடுக்கப்பட வேண்டிய ஈட்டுத் தொகையானது நிலம் . அரசாங்கம் வழங்கியபோது அரசாங்கம் தொகை கொடுக்கப்பட்டிருந்தால் அவ்வாறு கொடுக்கப்பட்ட தொகையும் தல ஆட்சியினரால் அந்நிலத்தில் செய்யப்பட்டுள்ள வேலைகள், கட்டடங்கள் கட்டுவதற்கான செலவும் சேர்ந்த தொகை அல்லது அதன் தற்கால மதிப்போ இவற்றுள் எது குறைந்ததாகவுள்ளதோ

அதற்கு அதிகப்படாத தொகையாகும் என்ற விளக்கமான நிபந்தனை ஒன்றையும் அக்கொடையில் விதிக்க வேண்டும் என்ற இந்திய அரசாங்க நிதி, வாணிகத் துறையின் 1871 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 ஆம் தேதிய 4374 எண் தீர்மானம்.

தீர்மானம்.—அரசாங்க அசையாச் சொத்து ஒன்று ஒரு பொதுக் காரியத்துக்காக, அதாவது அரசாங்கக் காரியத்துக் காகவோ, சமய சம்பந்தமான காரியத்துக்காகவோ, அல்லது கல்வி சம்பந்தமான அல்லது மற்றக் காரியங்களுக்குக் கொடுக்கப் பட்டால், மேலே கூறப்பட்ட தீர்மானத்தில் குறிக்கப்பட்டுள்ள இத்தகைய நிபந்தனை விதிப்பது விரும்பத்தக்கது என இந்திய அரசினர் கருதுகிறார்கள் மேலும், கொடுக்கப்பட்ட காரியத்திற்கு நிலம் உபயோகப்படுத்தப்படாமல் மற்றொரு காரியத்திற்கு உபயோகம் செய்யப்பட்டாலும் அது அரசினரால் திரும்ப எடுத்துக் கொள்ளப்படுமென்ற மற்றுமொரு நிபந்தனைக்கும் உட்படுத்தப்பட வேண்டும் என்றும் இந்திய அரசினர் கருதுகின்றனர்.

2. எனவே, வருங்காலத்தில் அசையாச் சொத்து எதுவாயினும் கொடுக்கப்பட்டாலும் தனிப்பட்ட வகைகளில் ஒப்புக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளைத் தவிர, கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கும் நிலக் கொடையைத் தெளிவாக உட்படுத்தப்பட வேண்டும் :—

(1) நிலம் கொடுக்கப்பட்ட குறிப்பிட்ட காரியத்தைத் தவிர மற்றொரு காரியத்திற்கு உபயோகம் செய்யப்பட்டால் அரசினரால் திரும்ப எடுத்துக் கொள்ளப்படும்.

(2) எச்சமயத்திலாவது அரசினரால் நிலம் திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டால், அதற்காகக் கொடுக்கப்பட வேண்டிய தொகையானது நிலம் கொடுக்கப்பட்டபோது அதற்காகக் கொடுக்கப்பட்ட தொகையுடன் நிலம் பெற்றுக் கொண்டவரால் நிலத்தில் செய்யப்பட்டுள்ள வேலைகள் எவையேனும் இருப்பின் அவற்றில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் கட்டுவதற்கான செலவுத் தொகையும் சேர்ந்த தொகை அல்லது அவற்றின் தற்கால மதிப்போ இவற்றுள் எது குறைந்ததாகவுள்ளதோ அதற்கு அதிகப்படாத தொகையுமாகும்.

இணைப்பு கி.

நில உரிமை பெறும் சட்டத்தின் கீழ் 1894 ஆம் ஆண்டு ஆவது சட்டம் பொதுக் காரியத்திற்காகக் கட்டாயமாக உரிமை பெறப்பட்ட நிலங்கள் இனி அக்காரியத்திற்குத் தேவை இல்லையென்றால், அவற்றைக் கொடுத்து விடுவதைப் பற்றிய மாநில அரசாங்கத்தின் தீர்மானம்.

30—10—1896 தேதி, 13,44-13 எண். இந்திய அரசினரின் வருவாய், விவசாயத் துறை சிம்லாத் தீர்மானம்.

பார்வையிடப்பட்டது.—

நில உரிமை பெறும் (1894 ஆம் ஆண்டு ஆவது) சட்டத்தின் கீழ்ப் பொதுக் காரியத்திற்காகக் கட்டாயமாக உரிமை பெறப்பட்ட நிலங்கள் இனி அக்காரியத்திற்குத் தேவை இல்லையென்றால் அவற்றைக் கொடுத்துவிடுவதைப் பற்றிய சில யோசனைகளைப் பற்றி மாநில அரசாங்கங்கள், ஆட்சிகளின் கருத்தைக் கேட்பதைப் பற்றிய 1895 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் தேதி 2. 44-1 எண் சுற்றறிக்கை.

மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைக்குக் கிடைக்கப் பெற்ற கீழ்க்கண்ட பதில்களும் பார்வையிடப்பட்டன.

பர்மா முதன்மை ஆணையாளரிடமிருந்து 1895 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27 ஆம் தேதி 574-1-அ 1- எண் குடகு முதன்மை ஆணையாளரிடமிருந்து 1895 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7 ஆம் தேதி 363-18-95 எண். சென்னை அரசாங்கத்திடமிருந்து 1895 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ஆம் தேதி 1426 எண் ஆஜ்மீர், மோர்வாரா முதன்மை ஆணையாளரிடமிருந்து 1895 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி 475 எண்.

வடமேற்கு மாநிலம்—வ. அயோத்தி அரசாங்கத்திடமிருந்து 1895 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் தேதி 1088 எண்.

அஸ்ஸாம் முதல்மை ஆய்வாளரிடமிருந்து 1895 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் தேதி 204. 1612 வரு. எண்.

ஹைதராபாத் அரசாங்கப் பிரதிநிதியிடமிருந்து 1895 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் தேதி 154 எண்.

மத்தியப்பிரதேச மாநில முதன்மை உதவியாளரிடமிருந்து 1895 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8 ஆம் தேதி 3475 எண்.

பம்பாய் அரசாங்கத்திடமிருந்து 1895 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் தேதி 7012 எண்.

பஞ்சாப் அரசாங்கத்திடமிருந்து 1895 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி 667-3 எண்.

வங்காள அரசாங்கத்திடமிருந்து 1895 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் தேதி 861 எண்.

கண்டுரைப்பன.—மூன்னுரையில் குறிப்பிட்ட சுற்றறிக்கையில் பொதுக் காரியத்திற்காகக் கட்டாயமாக நில உரிமை பெறப்பட்ட நிலங்கள் இனி அக்காரியத்திற்குத் தேவையில்லையென்றால் அவற்றைக் கொடுத்துவிடுவதில் அனுசரிக்க வேண்டிய கொள்கைகளைப் பற்றி இந்திய அரசினர் தங்களுடைய கருத்தைக் கூறி மாநில அரசினர் ஆட்சிகள் இவர்கள் கருத்தைக் கோருகிறார்கள். விவசாயம் அல்லது மேய்ச்சல் நிலம் இவ்வாறு உரிமை பெறப்படும்போது பெரும்பான்மையாக நிலத்தின் உரிமையாளருக்கும் அந்நிலங்களில் பயிரிட்டவர்களுக்காகவும் இழப்பு ஏற்பட்டதென்றும் அவ்வாறு ஏற்பட்டது பொது நலத்தின் நிமித்தமாகவேயென்றும் அத்தகைய உபயோகத்தின் அவசியம் முடிவடைந்த இழப்பை ஏற்க நேர்ந்தவர்களை அவர்கள் முன்னிருந்த நிலையிலே நிலத்தில் அமர்த்துவதே நேர்மையும் சிறந்த கொள்கையுமாகும் என்று இந்திய அரசினர் எடுத்துரைத்தார்கள். ஆகையால் கட்டாயமாக உரிமை பெறப்பட்ட நிலம் அத்தகைய அனுபோகத்தினின்றும் விடுவிக்கப்பட்டால் அந்நிலத்தின் உரிமை அல்லது இருப்புரிமையை இழந்தவர்களுக்காயினும் அல்லது அவர்களின் பிரதிநிதிகளுக்காயினும். அரசாங்கத்தின் வசத்திலிருந்த காலத்தில் அந்நிலம் மேய்ச்சல் நிலமாக உபயோகப்படுவதற்கு அல்லது விவசாயம் செய்யப்படுவதற்குரிய தகுதியில் ஏதாவது மாறுதல் இருந்தாலன்றி, அதனை முதலில் அவரிடமிருந்து என்ன விலைக்கு வாங்கப்பட்டதோ, அந்த விலைக்கே கொடுத்துவிட வேண்டுமென்றும் இந்திய அரசினர் யோசனை கூறினர்கள்.

இந்திய அரசாங்கத்தின் கொள்கைகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டன என வாப்பெற்ற எல்லாப் பதில்களும் தெரிவிக்கின்றன. இருப்பினும், விவரங்களைப் பற்றிய அம்சங்களிலும் ஆட்சேபனைகளும் கூடுதலான ஆலோசனைகளும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் முக்கியமானவை சுருக்கமாகக் கவனிக்கத் தக்கவை.

2. தனிப்பட்ட முறையில் அரசினர் நிலத்தை வாங்கும் சந்தர்ப்பங்களிலும் இத்தகைய சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்று யோசனை கூறப்பட்டிருக்கிறது. ஒருவர் தாமாகவே முன்வந்து நிலத்தை விற்கும்போது அது நடப்பு விலை மதிப்புத் தொகைக்கு வாங்கப்பட்டிருந்து அந்நிலத்திற்குத் தேவையில்லை என்று திருப்பிக் கொடுக்கும்போது அரசினர் தம் யுக்தம்போல் அதனைக் கொடுத்து விடுதலில் கட்டுப்பாடு விதிப்பதற்குக் காரணமில்லை. ஆனாலும் ஒரு பொதுக் காரியத்திற்காக நில உரிமை பெறும்போது அந்நிலம் சம்மதத்தில் வாங்கப்பட்ட போதிலும், தேவையானால் கட்டாயமாய் உரிமை பெறப்படும் ஏற்பாடு மேற்கொள்ளப்படக்கூடும் என்பது அதில் ஒரு அம்சமாகவே எப்பொழுதும் இருக்கும். எனவே, இவ்வினங்களிலும் அக்கொள்கைகளே பொருந்தும் என்று இந்திய அரசினர் ஒத்துக் கொள்கிறார்கள்.

3. முதலில் நிலத்தை அனுபவித்து வந்த உரிமையாளர் களுக்கோ அவர்களின் பிரதிநிதிகளுக்கோ நிலம் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதில், "பிரதிநிதிகள்" என்பது எவரைக் குறிக்கிறது என்பது தவறுகப் புரிந்துகொள்ளப் பட்டிருக்கிறது. "அ" என்பவருக்கு 50 ஏக்கர் நிலம் சொந்தமாயிருந்து, அவரிடமிருந்து 20 ஏக்கர் நிலம் அரசினரால் எடுக்கப்பட்டு, பின்னர் எஞ்சியுள்ள 30 ஏக்கர் நிலத்தை "அ" என்பவர் "ஆ" என்பவருக்கு விற்று விட்டார் எனில், இந்த 20 ஏக்கர் நிலத்தை எப்போதும் அனுபவிக்காத "ஆ" என்பவர் "அ" என்பவரின் பிரதிநிதியல்லர் என்பது தெளிவாக விளங்கும். இந்த 20 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட வேண்டியவர் "அ" என்பவரின் பிரதிநிதிகளின் வாரிசும் வழியுரிமையுள்ளவர்களுமேயாவார்கள்.

4. ஆனால் இவ்விதிக்கு விலக்காக அடிக்கடி ஏற்படக் கூடிய இனம் ஒன்று உண்டு. அதனைப் பற்றி பஞ்சாப் அரசினர் பின்வருமாறு கூறியிருக்கிறார்கள். அரசாங்கத்தால் உரிமை பெறப்பட்ட நிலங்களில் இனிமேல் தேவையில்லை என்று திருப்பிக் கொடுக்கப்படும் நிலங்கள் அநேகமாக சிறு துண்டுகளாகவும், அவை பக்க நிலத்தை உடையவருக்கன்றி எவரொருவருக்கும் உண்மையில் எத்தகைய உபயோகத்திற்கும் ஆகாது என்றும் கருதத்தக்க வகையில் அவ்வளவு சிறிய பரப்பு அல்லது வடிவினதாக இருக்கலாம். உதாரணமாக – ஒரு சாலைக்கு ஒரு புறத்தில் உரிமை விட்டுவிடப்பட்ட ஒரு சிறிய காவல் நிலையத்தின்

ஒரு பக்கம்; அல்லது ஒரு மைல் நீளம் அல்லது அதையொத்த நீளமுள்ளதாய் மிக மிகக் குறுகிய அகலமுள்ள கைவிடப்பட்ட சாலை போன்றவை. அந்நிலம் எவர்களிடமிருந்து உரிமை எடுக்கப்பட்டதோ, அவர்களோ, அவர்களின் பிரதிநிதிகளோ அதற்கு சேர்ந்தாற்போலுள்ள நிலத்தை இதுகாறும் தங்கள் சுவாதீனத்தில் வைத்திருப்பார்களெனில் அவர்கள், இந்நிலத்தைப் பிறருக்குக் கொடுப்பதைவிடத் தாங்கள் அதன் உரிமையைக் கட்டாயமாகப் பெற்றுக்கொள்ள உரிமை உடையவராகிறார்கள். ஆனால் அதற்குச் சேர்ந்த நிலங்கள் அயலார்களுக்கு விற்கப் பட்டிருந்தால், இந்நிலத்தை அவர்களுக்கே கொடுக்க வேண்டும். ஆனால் நடப்பு விலை மதிப்புத் தொகையைக் காட்டிலும் குறைந்த தொகைக்குக் கொடுக்க வேண்டும் என்பதற்கு எத்தகைய காரணமுமில்லை.

இக்குறிப்புரைகளை இந்திய அரசாங்கம் முழுமையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

5. நிலம் நிலையாக உரிமை பெறப்பட்டபோதே, அதனுடைய உரிமைகளை இழந்து விடுகிற காரணத்தால் இருப்புரிமைகளைத் திரும்பக் கொடுப்பதில் சட்டத்தை அனுசரித்தும், செயற்படுத்தும் போதும், அநேக இடர்ப்பாடுகள் ஏற்படக் கூடுமென்றும் இதற்கு மறுப்பு கூறப்பட்டிருக்கிறது. உரிமை பெறப்படுவதனால் எல்லாத் தனி உரிமைகளும் இழக்கப்படுகின்றன என்னும் கொள்கை மேல் வார உரிமைகளுக்கும் பொருந்தும். ஆனால் நில உரிமையாளர்களின் வாரிசுகளைக் கண்டுபிடிப்பதை விட இருப்புரிமையாளரின் வாரிசுகளைக் கண்டுபிடிப்பது உண்மையில் சிரமமாக இருக்கும். இவர்களைக் கண்டுபிடிக்க இயலாவிடில் இந்த விதியை அனுசரிக்க வேண்டியதில்லை. ஒரு நிலம் கட்டாயமாய் உரிமை பெறப்படுவதால் நிலத்தை உண்மையில் விவசாயம் செய்பவரே அதிக இழப்பை அடைகிறவர் ஆகிறார். ஆகையால் அநேகமாக இருப்புரிமையைத் திருப்பிக் கொடுப்பதும் மேல் வார உரிமையைத் திருப்பிக் கொடுப்பதைப் போலவே அவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது. அரசுக் கொடை (1895 ஆம் ஆண்டு XV ஆவது) சட்டம் மேல் வார உரிமையை இருப்புரிமைக்குட்படுத்திக் கொடுக்க அரசாங்கத்திற்கு உரிமை அளிக்கிறது. இத்தகைய அதிகாரத்தைக் கூடியவரையில் செயற்படுத்த வேண்டும்.

6. இச்சலுகைகளைக் குறிப்பிட்ட சில ஆண்டுகள் வரையிலுமே அளிக்க வேண்டும் என்று ஒரு கருத்து கூறப்படுகிறது. நிலந்திலுள்ள எத்தகைய உரிமையும் பிடிவாதமாகத்

கொண்டாடப்படுவது இயற்கையாதலால், இதற்குச் சாதாரணமாக, எத்தகைய கால வரையறையும் இல்லை. ஒரு மாநிலத்திலிருந்து வந்துள்ள கருத்தை அனுசரித்து இரண்டாவது அல்லது மூன்றாவது தலைமுறை வரையில் கூட்டுரிமையை ஒப்புக்கொண்டால், கூட்டுரிமையாளர்கள் சம்பந்தப்பட்ட வரையில் இடர்ப்பாடுகள் உண்டாக்குமாதலால், கால வரையறை விதிப்பதையே இந்திய அரசினர் விரும்பவில்லை. ஆனால் நிலத்தின் மூந்திய உரிமையாளரின் பிரதிநிதிகள், அவர்களது தாரப் பாம்பரையாகவோ அல்லது உரிமையாளர் களாகவோயிருந்தால், அவர்களிடமிருந்து நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகையை நியாயமாகக் கேட்கலாம். மேலும், சொற்ப விலைக்கு வாங்கப்பட்ட தங்கல் தளம் இப்போது 50,000 ரூபாய் விலை பெறுமானதாக இருக்கிறதென்று, பஞ்சாப் அரசாங்கம் கூறியுள்ளவாறு, இன்னும் இதுபோல் சில இனங்கள் எவையேனும் சில சமயங்களில் ஏற்படக் கூடும். ஆதலால் வாங்கின விலைக்கே அவற்றைக் கொடுத்தல் உசிதமன்று. இதற்கு மாறுகத் திருப்பிக் கொடுக்கப்படும் நிலம் அநேகமாகச் சீர்கெட்டு விட்டதாகவே இருக்கும். திருப்புப் பாதைகளுக்கான அழி மண் கரைகளுக்காகவும் செங்கல் வினைவுகளுக்காகவும் உரிமை குறைந்திருக்கும். ஆதலால், அதற்கு முதலில் வாங்கப்பட்ட விலையைக் கேட்பது நேர்மையன்று.

7. நிலத்தை மூந்திய உரிமையாளருக்குத் திருப்பிக் கொடுக்கும் போது கூடுதலாக அளித்த 15 சதவீதத் தொகையைக் கழித்துவிட வேண்டும் என்று எல்லா மாநில அரசினர்களும் தெரிவித்திருக் கிறார்கள். நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டதால் ஏற்பட்ட தொல்லைகளுக்காக இத்தொகை கொடுக்கப்பட்டது. பிறகு நிலத்தைத் திருப்பிக் கொடுப்பதானது மூன்பு விளைவிக்கப்பட்ட தொல்லைக்குப் பரிகாரமாகாது.

8. சட்டத்தின் 9 (2) ஆவது பிரிவின் கீழ் உரிமைப் பெறப்பட்ட நிலங்களை இப்போது கொள்கைகளின்று விதி விலக்கு அளிப்பதற்குத் தக்க காரணங்களில்லை என்று பல அரசாங்கங்கள் தெரிவித்துள்ள கருத்தினை இந்திய அரசினர் ஒப்புக் கொள்கிறார்கள். உரிமையாளர் சிற்சில சமயங்களிலே இந்தப் பிரிவின் கீழ்ப் பிடிவாதமாக நடந்துகொள்வதுண்டு. ஆனாலும், நிலத்திலிருந்து ஒரு சிறிய பகுதியை மட்டும் எடுத்துக் கொள்வதால் அதிக இழப்பு அடிக்கடி ஏற்படுகிறது.

தீர்மானம்.—பொதுக் காரியங்களுக்காகத் தனிப்பட்ட வகையிலோ, கட்டாயமாய் உரிமை பெறுதலிலோ, விவசாயம் அல்லது மேய்ச்சல் நிலங்கள் உரிமை பெறப்பட்டு, அத்தகைய காரியங்களுக்காக நிலங்கள் இனிமேல் தேவையில்லை என்றால், அந்நிலங்களைக் கீழ்க்கண்டவாறு கொடுத்துவிட வேண்டும் என்று இந்திய அரசினர் விரும்புகிறார்கள்.

முதலாவதாக, நில உரிமை பெறுதல் செய்யப்பட்டால் இழக்கப்பட்ட மேல் வார உரிமைகள் எல்லாவற்றையும் இருப் புரிமை அல்லது குடிவாரங்களையும், நில உரிமையாளர்களுக்கு அல்லது அவர்களின் வாரிசுகள் கண்டுபிடிக்கப்படக் கூடுமானால் அவர்களுக்கு முதலில் கொடுக்க வேண்டும். (இரு உரிமை களுக்கும் சேர்ந்த நிலமாயிருந்தால்) (1895 ஆம் ஆண்டு XV ஆவது) அரசுக் கொடைச் சட்டத்தின் கீழ் மேல் வார உரிமையை இருப்புரிமைக்கு உட்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இரண்டாவதாக, மேற்சொன்ன உரிமைகளுக்காக நிலம் உரிமை பெறும் சமயத்தில் கொடுக்கப்படும் ஈட்டுத் தொகையில் கட்டாயமாய் நில உரிமை பெறுதலுக்காகக் கூடுதல் தொகை 15 சதவீதம் கொடுக்கப்பட்டிருந்தால் அதனைக் கழித்துக் கொண்டு மீதி விலைக்குக் கொடுக்க வேண்டும். ஆசாங்கத்தின் வசத்திலிருந்த சமயத்தில் நிலத்தின் விளைவு சக்தி குறைந்திருந்தால் இவ்விலை குறைக்கப்படலாம். கீழே குறிக்கப் பட்டுள்ள சந்தர்ப்பங்களைத் தவிர மற்றவற்றில் நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகை உயர்வாக இருக்கிறது என்ற காரணத்தால் அவ்விலையை உயர்த்தக்கூடாது.

அந்நிலம் அதன் பரிமாணத்தாலும், உருவத்தாலும் பக்க நிலத்திற்குரிமையாளர்களைத் தவிர வேறு யாருக்கும் எவ்விதத்திலும் பயன்படாது என்று இருக்குமானால் பக்க நில உரிமையாளர்கள் தங்கள் நிலம் முதலில் அளிக்கப்படுவதற்குள்ள உரிமை இல்லாதவராக இருப்பினும், அவர்களுக்கே அது கொடுக்கப்பட வேண்டும். ஆனால் அதன் விலை சம்பந்தப்பட்ட வரையில், அயலாரைக் காட்டிலும் பக்க நில உரிமையாளர்கள் கொடுக்கத் தயாராக இருக்கும் ஒரு நியாயமான விலையை ஒப்புக் கொண்டு அவருக்கே கொடுப்பதற்கு ஒரு சலுகை உண்டென்றாலும், நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகை கொடுக்குமாறு கேட்பதில் ஆட்சேபனையுமில்லை.

வருவாய்த் துறை மேல்நிலை அதிகாரிக்கு இவ்விதிகளை அமலுக்குக் கொண்டு வருவதில் தங்கள் யுக்தம் போல் செய்ய எப்பொழுதும் அதிகாரம் உண்டு. இதில் தளிப்பட்ட இனங்களுக்கு விதி விலக்குகள் அளிப்பதும் நியாயமாகும்.

உதாரணமாக, நிலத்தைப் பெறுவதற்கு உரிமையுள்ளவர்கள் நிலத்தின் முந்திய நிலமுடையவர்களின் மிக தூரத்திய மரபினர்களாக அல்லது உறவினர்களாக இருந்தால்—அல்லது இதற்கு விலக்களிக்க வேண்டியவாறு நிலத்தின் விலை சாதாரண நிலைக்கு மாறுக வரையற்று உயர்ந்திருந்தால் மேற்கூறப் பட்டவையான பொதுவாகக் கவனிக்கக் கூடிய கொள்கைகளை இந்திய அரசினர் ஒரே திட்டமான விதியை வகுத்துக் கொடுக்கவில்லை.

மேற்கண்ட கொள்கைகள், விவசாய நிலங்களுக்கும், மேய்ச்சல் நிலங்களுக்கும் மட்டுமே பொருந்துமேயல்லாமல் கட்டட இடத்திற்கோ நகர நிலங்களுக்கோ பொருந்தா என்பதைக் கவனிக்க வேண்டும்.

2. மேற்கண்ட கருத்துக்களுக்குப் பொதுவாக ஏற்றிருக்குமாறு ஆங்காங்குள்ள நிலைமைகளுக்குப் பொருத்தமாக மாநில அரசாங்கங்களும், ஆட்சிகளும் அறிவுரைகள் பிறப்பிக்கக் கடமைப்பட்டுள்ளன. அவை நிர்வாக அறிவுரைகளேயாம். ஏதாவது உரிமை அளிப்பது போல் தோன்றுத வகையிலும், அரசாங்கத்துக்கு விரோதமாக இல்லாதவாறு அல்லது தனிப்பட்டவர்கள் இடையே உரிமை வாதத்திற்கு இடம் அளிக்காதவாறு மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இச்சலுகைகள் கருணை காரணமாகக் கொடுக்கப்பட்டவை யென்றும், அரசினர் தங்கள் விருப்பம் போல இவற்றைக் கொடுக்கவோ, மறுக்கவோ முழு உரிமை வகிக்கிறார்கள் என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும்.

6—6—1933 தேதி, 998, அ.ஆ.வரு.பல.
16—6—1933 தேதி, 44, வ.து.க.செ.அச்சு.

இணைப்பு கீ.

சிவில் நீதி மன்றங்களில் கலெக்டரின் தீர்ப்புத் தொகை உயர்த்தப்படும் என்று தோன்றக் கூடியவற்றில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை முறை.

உத்திரப்பிரதேசத்தைத் தவிர மற்ற மாநில அரசாங்கங்களுக்கும் ஆட்சிகளுக்கும் 22—12—1968 தேதி, 11 எண். கல்கத்தாவில் இந்திய அரசாங்கத்தின் வருவாய், விவசாயத்துறைச் சுற்றறிக்கைகள்.

இத்துறையின் 1906 .ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் தேதி 9-292-1 எண் சுற்றறிக்கையின் தொடர்ச்சியாக இலட்சுமணபுரியில் படைத் துறைப் பணிகளுக்காக செங்கல் விளைவுக்காக உரிமை பெறப்பட்ட நிலத்திற்கு அதிக விலை கொடுக்கப்பட்டதைப் பற்றிய கடிதப் போக்குவரத்து * . . . . . மன்றச் சபையிலுள்ள கவர்னர்/உதவிக் கவர்னர்/உங்கள் தகவலுக்காகக் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

* அச்சிடப்படவில்லை.

2. இந்த வழக்கில் கலெக்டர் அளித்த தீர்ப்பு 3,631 ரூபாய் 11 அணா 7 பை (3,631 ரூபாய் 69 ந.பை.) இத்தொகை மேல் முறையீட்டில் 14,665 ரூபாயாக உயர்த்தப்பட்டது. இத்தொகையானது படைத் துறையினர் இதற்காகச் செலவிடத் தயாராயிருந்த மதிப்பிற்கு மிக அதிகமாகக் கலெக்டர் தீர்ப்பு அளித்த உடனேயே நிலத்தைச் சுவாதீனம் செய்து கொள்ளப்பட்டதால் நில உரிமை பெறும் நடவடிக்கையிலிருந்து பின்வாங்க இயலவில்லை. கலெக்டரின் தீர்ப்புத் தொகை மேல் முறையீட்டில் மிக அதிகமாக உயர்த்தப்படக் கூடுமென்று தோன்றுமானால், நிலத்தைச் சுவாதீனம் செய்து கொள்வதில் எச்சரிக்கை வேண்டும் என்று படைத் துறையினரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதுடன். இதுபற்றிப் பொறியியல் பணித் துறை விதித் தொகுப்பு 9 ஆவது பதிப்பு, 801 ஆவது பத்தியும் தக்கவாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மறுமுறையும் ஏற்படாதிருக்கும் பொருட்டும் அரசாங்க உரிமையைக் காப்பாற்றும் பொருட்டும், நில உரிமை பெறும் வேலையில் ஈடுபட்டிருக்கும் வருவாய்த் துறை அதிகாரியின் ஒத்துழைப்பானது கூடுதலான பாதுகாப்பை அளிக்கும் என்று இந்திய அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

3. இது பற்றி உத்திரப் பிரதேச அரசினர் நில உரிமை பெறும் சட்டத்தின் நடைமுறை விதிகளைச் சமீபத்தில் ஆட்சேபணைகளை விசாரித்து இறுதி முடிவுக்கு வந்த கலெக்டரின் தீர்ப்பு 6-ஆவது பிரிவின் கீழ் உறுதிமொழி வெளியிடுவதற்கு முன், இதற்காகத் தயாரிக்கப்பட்ட முதல் மதிப்பைக் காட்டிலும் 20 சதவீதத்திற்கும் அதிகமாகுமானால், அல்லது இதில் உள்ள சான்று மூரண்பாட்டினால் சிவில் நீதி மன்றம் அத்தகைய கூடுதல் தொகையை அளிக்கக் கூடும் என்று தோன்றுமானால் கலெக்டர் தீர்ப்பு அளிப்பதை நிறுத்தி வைத்துக் கொண்டு துறை அதிகாரிகளுக்கு இதைப் பற்றித் தெரியப்படுத்தி நில உரிமை பெறுவதற்கான நடவடிக்கை மேலும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமா வேண்டாமா என்பதில் அவர்கள் ஒரு தீர்மானமான முடிவுக்கு வரும் வரையில் நடவடிக்கையை ஒத்திவைக்க வேண்டும் என்பதாகத் திருத்தி அமைத்திருக்கிறார்கள். இத்தகைய விதி மிகவும் பயன்தரக்கூடியதாயுள்ளது என்று இந்திய அரசாங்கம் கருதுகின்றனராதலால் யாதொரு ஆட்சேபணையுமில்லையானால், இத்தகைய விதியை நில உரிமை பெறும் சட்டத்தின்கீழ் நடைமுறைக்கான விதிகளில் பயனளிக்குமாறு சேர்ப்பது பற்றி ஆராயுமாறு கோரப்படுகிறது.

15—3—1957 தேதி, 161, அ.ஆ.வரு.வாலாய.

இணைப்பு VI.

[91 ஆவது நில ஆணை 4 (5)-ஆவது பத்தி.]

உத்தரவாதம் அளிக்கப்பட்ட பழைய கம்பெனிகளுக்கு இருப்புப் பாதை உபயோகங்களுக்காக நிலம் உரிமை பெறுதல் பற்றி 1861 ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட விதிகள்.

1. இருப்புப் பாதைக் காரியங்களுக்காகத் தேவைப்படும் நிலங்களை அ, ஆ, இ, ஈ என நான்கு வகுப்புகளில் பிரிக்கலாம். முதலாவது 'அ' வகுப்பு நிலம், நிலையான உபயோகத்திற்காக அரசாங்கத்தின் ஒப்பந்தத்தை அனுசரித்து இருப்புப் பாதைக் கம்பெனி கிரயமின்றிப் பெற்றுக் கொள்ளும் வகுப்பைச் சேர்ந்தது. இரண்டாவதாக 'ஆ' வகுப்பு நிலமும் கிரயமின்றி பெற்றுக்கொள்ளத்தக்க நிலமாகும். ஆனால் அது தற்காலிக அனுபோகத்திற்கு மட்டுமே பெற்றுக்கொள்ளத் தக்கது.

மூன்றாவதாக 'இ' வகுப்பு நிலம் இருப்புப் பாதைக் கம்பெனி தன் செலவிலே ஏற்பாடு செய்து பெற்றுக்கொள்ள வேண்டிய நிலம்.

நான்காவதாக 'ஈ' வகுப்பு நிலம் இருப்புப் பாதைக் கம்பெனியின் சுவாதீனத்திற்கு நேரிலே வராத நிலம்.

2. அட்டவணை-பத்தாம் கீழ் இருப்புப் பாதையின் தலையான வேலைகளான பாலங்கள் சுரங்கவழிகள், அவற்றின் பாலங்கள் முதலியனவும், இருப்புப் பாதை அமைக்கப்பட்ட பின்னரும், போக்குவரத்திற்குத் தேவையான எல்லா இருப்புப் பாதை நிலையங்கள், பாட்டைகள், நிலையான இடங்களும் முதலியவற்றிற்காக கையகப்படுத்தி அரசினரால் அளிக்கப்பட வேண்டிய நிலங்கள் அ வகுப்பிலே சேரும். ஒப்பந்தம் முடிவு அடையுமாறு செய்யப்பட்டு நிலம் உரிமை விட்டு விடப்பட்ட நிலம் அரசினரைத் திருப்பிச் சேரும் வரையில் அது உபயோகத்திலிருக்கும். இவ்வகை நிலம் முழுமையும் எவ்விதச் செலவின்றி வழங்கப்படும்.

3. இருப்புப் பாதையின் நிலையான வேலைகளைச் செய்வதற்குத் தேவையாயும், அவ்வேலை முழுமையுமோ, அல்லது அதன் பாகமுமோ முடிவடைந்த பின்னர் தேவைப்படாதாயும் உள்ள நிலமே 'உ' வகுப்பு நிலமாகும். இவ்வகுப்பு நிலமும் கிரயமின்றி வழங்கப்படும். இருப்புப் பாதை வேலை முழுவதையும் வரையில் அபிவிருத்தி செய்தல், தரை அமைக்க அதிக மண் வெட்டி எடுத்தல், கற்களின் போக்கைத் திருப்புதல், இருப்புப் பாதைக் கம்பெனியின் சுவாதீனத்திலிருக்கும் இருப்புப் பாதைப் பிராந்தியங்களின் வேலை நடைகுறித்த அலுவலகம் வரையில் சேமிக்க வைத்தல் முதலியவற்றிற்கு வேண்டிய நிலங்களாகும். அவற்றின் அளவு போகம் தற்காலிகமான இருப்புப் பாதை அதிகாரிகளும் ஆலோசனை கூறும் பொறியாளரும் இவ்வென்றிலும் நிலம் இனிமேல் தேவையில்லை என்று தீர்மானித்த பின்னர், அதனைருக்குச் சிறந்த ஆகாரமான முறையில் அதை விற்பனை செய்தல், வருவாய் அலுவலர்களின் கடமையாகும்.

4. 'இ' வகுப்பு நிலம்-இருப்புப் பாதைக் கம்பெனி தன் செலவில் அமைத்துக் கொள்ளும் நிலமாகும். இது பொருள் கருதுக்கு ஏற்பாடு செய்யவும் நிலவள அளவைத் தயாரிக்கவும், இருப்புப் பாதை வேலைகள் நடப்பதற்குத் தேவையாகவும் உள்ள நிலமாகும். அத்தகைய நிலத்தைச் செயலின்றி நில உரிமை பெறுவதற்குக் கம்பெனிக்கு அரசினர் உரிமை அளிக்காவிடினும்

அது இருப்புப் பாதைக் கம்பெனியின் வேலைக்குச் சேர்ந்தது என்று அரசினர் கருதக்கூடிய பலவகைக் காரியங்களுக்காகவும் தேவையான நிலமாகும். இருப்புப் பாதை வேலைகளுக்குத் தேவையான நிலத்தை மட்டும் கிரயமின்றி அரசினரிடமிருந்து பெற்று, வேலைகளுக்கான எல்லாச் செலவுகளையும் கம்பெனியே ஏற்றுக்கொள்ள வேண்டுமாதலால், வேலைகளுக்கான எல்லாப் பொருள்களைத் தயாரித்தலும், வேலை முடிப்பதற்கான ஏற்பாடுகள் செய்தல் முதலியவையும் இருப்புப் பாதைச் செலவிலேயே செய்ய வேண்டும். இருப்புப் பாதை வேலைகளால் இந்நிலத்தின் ஒரு பகுதி சீர்கேடு அடையலாம். மற்றொரு பகுதி சீர்கேடு அடையாமலும் இருக்கலாம் என்பதைக் கவனத்தில் வைத்துக் கொண்டு நிலத்திற்குரிய குத்தகைத் தொகை விதிக்க வேண்டும். ஆனால் முதலில் இவற்றிலெல்லாம் நடவடிக்கையில் எவ்வித வேறுபாடும் இருக்கத் தேவையில்லை. நிலம் அரசினரால் சுவாதீனம் செய்து கொள்ளப்பட்டு ஒரு நேர்மையான குத்தகைக்கு இருப்புப் பாதைக் கம்பெனிக்குக் கொடுக்கப்படும். கம்பெனியின் வேலை முடிந்த பின்னர், 'ஆ' வகுப்பு நிலத்தைப் போலவே நிலம் இனிமேல் தேவையில்லை என இருப்புப் பாதை அலுவலர்களும், ஆலோசனைப் பொறியாளர்களும் தீர்மானிக்கும்பொழுது அது அரசினருக்கு நிலம் திருப்பிக் கொடுத்துவிடப்படும்.

5. இருப்புப் பாதை வேலைகளுக்குத் தேவைப்பட்டு ஆனால் இருப்புப் பாதைக் கம்பெனி நேரிடையாக அனுபோகம் செய்யப்படாததுமான நிலம் 'ஈ' வகுப்பில் அடங்கும். இது கிரயமுமின்றிக் கொடுக்கப்படும். இருப்புப் பாதை நிலையங்கள், கிரயமுமின்றிக் கொடுக்கப்படும். இருப்புப் பாதை நிலையங்கள் வேலைகளிலிருந்து விலக்கப்பட்ட தனியாக உள்ள பட்டறைகள் முதலியவற்றிற்குச் செல்ல அமைக்கப்படும் புதிய சாலைகள் அல்லது இருப்புப் பாதை வேலைகளினால் பழைய சாலைகளின் வழிகளை மாற்றி அமைக்கவோ தேவையாகும் நிலமே இவ்வகுப்பைச் சேரும்.

6. இருப்புப் பாதைக் கம்பெனிகள் நிலங்களைத் தங்கள் சொந்த முறையில் தங்கள் உடைமையில் வைத்துக்கொள்ள அனுமதிக்கப் பட்டால், அல்லது மேற்கூறியவாறின்றி மற்ற வகையில் அவற்றைத் தங்கள் உடைமையில் வைத்துக் கொண்டால் அதனால் வசதியின்மை ஏற்படலாம். அவர்கள் கிரயமின்றிப் பெற உரிமையில்லாத நிலங்களை மேற்கூறியுள்ளவாறு அரசினரிடமிருந்து குத்தகைக்குப் பெறுதலில், இலகுவான சொத்து உரிமை முறை

APPENDICES I AND J.

Deleted.

G.O. Ms. 998, Rev., d. 6-6-33. B.P. 43, Press, d. 16-6-33

APPENDIX K.

Preparation of estimates of the cost of land required for Railway or other large public projects.

[Government of India, Public Works Department, Circular No. XI-Ry., dated 21st September 1895.]

Cases have recently come to the notice of the Government of India in which the cost of land taken up for railway purposes has exceeded by several hundreds per cent the cost shown in the detailed estimates; and while in some cases this difference appears to have been due to the inadequacy of the estimates, in others it was certainly caused, at least in part, by the exorbitant nature of the Collector's award under the Land Acquisition Act. It appears, therefore, advisable to issue instructions with the view of securing greater accuracy in the estimates and closer supervision over the awards, when land is taken up for large public projects of whatever nature.

2. In paragraph 8, Chapter V, of the rules for the preparation of railway projects, it is laid down that the data for the preparation of estimates of the cost of land should be obtained from the Civil authorities who are responsible for the valuation and assessment of all land taken up for public purposes. This rule has not always been observed in recent instances. Its observance is most important, as the Public Works Department authorities are not in a position to frame an estimate with any approach to accuracy.

3. The Civil authorities should, therefore, be in all cases requested to furnish data in the shape of rates per acre. This, however, they cannot do unless they are furnished with information as to the situation of the land to be taken up, as it is impossible to quote rates which shall be even approximately true for the whole of a large tract. A separate sketch map should, therefore, be furnished for each district traversed by the railway, canal, or other works, showing the exact course of the centre line of the land to be taken up, with reference to villages and towns. This map should be to a scale of one inch to the mile and should show village boundaries wherever they have been surveyed. The distances should also be marked upon it, and the average width of the strip to be taken up should be stated. For land near towns, or which for other reasons is likely to have a specially high value, a map to a sufficiently large scale should be prepared, showing the approximate boundaries of the land likely to be required with a note of any valuable trees, buildings or other property for which compensation will have to be paid in addition to the price of the land itself. The Civil authorities' data will then take some such form as the following:—

Miles.	Rupees per acre			Remarks.
	Cultivated		Uncultivated	
	Irrigated	Unirrigated		
13—15	80	30	10	
15—17	300	120	30	Town lands of
17—27	50	25	5	Rampur.

* *Note.*—Land under tea will average about Rs. 800 per acre.

Note.—Land within municipal limits will cost about Rs. 900 an acre and in the town itself say Rs. 3 a square yard.

Appx V.

3-A. In addition to the data prescribed in paragraph 3, the Civil authorities should give a rough estimate of the amount of such further items (if any) as are likely to be included in an award based on section 23 (1) of the Land Acquisition Act including, when necessary, an estimate of the capitalized value of abeted land revenue and charges for establishment and contingencies. It will rest with the authorities, to whom the data prescribed by this paragraph and paragraph 3 above are supplied, to work out the total estimated cost of the acquisition including (in cases where voluntary surrender is not probable) the additional 15 per cent laid down by section 23 (2) of the Act.

4. When the work is confined to a single district, the application should be made to the district officer; when it extends to more than one district, but lies within a single division, to the Commissioner; when to more than one division, to the chief revenue authority of the province. When the estimated value of the land exceeds Rs. 25,000 in any district or one lakh in any division, the data must be forwarded to the Public Works Department authorities through the Commissioner or chief revenue authority, respectively, who will countersign them and be responsible for them.

5. General rules should be framed in every province for the guidance of officers in estimating the value of land taken up under the Land Acquisition Act. It must be remembered that, while the owner of the land possesses the power of appeal from the award of the Collector, Government is deprived of that power, solely because it possesses executive control over his operations; and it is most important that such control should be efficiently exercised in the interests of the general tax-payer. The rules should lay down the data which should be collected and the principles upon which the award should be based.

6. When any considerable area of land is to be taken up for public purposes, a special officer should be deputed for the purpose, and care must be taken in his selection. Any special instructions that may be considered necessary in addition to the general rules above mentioned, should be carefully framed for his guidance, as for instance when land under tea or indigo has to be taken up. He should be furnished with the data mentioned in paragraph 3, and provision should be made for the exercise of effective control over his operations by the Collector of the district, to whom all his awards should be reported, so far as to show the area, kind of soil, rate per acre, and total amount in each case. Provision should be made that, in case of any proposed award exceeding largely the estimated rate, and the award being such that it will be the basis of or constitute a precedent for any very considerable expenditure, it should be reported for the Collector's approval *before* being announced. And if in the course of his proceedings the special officer finds that his awards are likely to exceed the aggregate estimate for the district by, say, 25 per cent or more, a report should be submitted through the Collector to the Commissioner (and if the excess involved exceeds a lakh of rupees, to the Local Government) and further announcement of awards suspended till the latter's orders are received.

7. Whenever it is found that the original rates were materially under-estimated, and no sufficient reason is apparent, the officers responsible for them should invariably be called on to explain, as in no other way can the importance of framing the original estimates with care be effectually brought home to them. Appx. V.

8. Such are the general principles which the Government of India desire to see observed in the matter. The conditions of the several provinces vary so widely that details must be left to Local Governments. But all Local Governments and Administrations should proceed to frame rules giving general effect to the above principles and indicating the points as to which supplementary instructions will be required, based upon the circumstances of each individual case.

APPENDIX I.

Secretary of State's Rules.

As promulgated in Finance Department Resolution No. D-3428-A of 10th December 1925 and Notes thereto regulating the transfer of State Lands and Buildings between the Government of India and the Local Government of any Governor's Province.

Preamble.—(i) All the rules in this resolution are applicable to lands as well as to buildings, and have effect from the 19th November 1925, the date of the Secretary of State's despatch on the subject.

(ii) Adjustments between Railway Administrations and Local Governments in the case of land transferred prior to 19th November 1925 should be governed by the old rules then in force.

The new rules will, however, be applicable to those cases in which though the transfers were effected prior to 19th November 1925, the settlement of the pecuniary terms of the transfer had been deliberately kept in abeyance with a view to its determination under these rules.

Rule 1.—The ownership of land, now or hereafter in the occupation of a Government in India vests in the Crown; the Government of India or the Local Government, as the case may be, has the right of user for the effective discharge of its duties under the Government of India Act, and section 30 of the Government of India Act has no application to transfers between Government and Government.

Rule 2 (a).—The Government of India has the right to remain in undisturbed possession of any land in its occupation in any province on 1st April 1921, subject to the conditions then ruling, *so long as such occupation is necessary for the effective discharge of its duties.*

Note.— The Government of India, and not the local government should be regarded as having been in occupation, in the 1st April 1921, of any property used on that date for the discharge by a Local Government of its functions as Agent of the Government of India administering a central subject.

Appx. V

(*b*) A Local Government has no power without the consent of the Government of India to alienate *or in any way to interfere* in regard to Land situate within the Provincial boundaries which is in the occupation of the Central Government.

Rule 3.—If the Local Government is of opinion that Land in the occupation of the Government of India is not being used for the purposes originally intended AND is not required by that Government *for the effective discharge of its duties*, the Local Government shall be entitled to make a representation on the subject to the Government of India, and, in the event of a difference of opinion arising between the two Governments, to request that the matter be referred for the decision of the Secretary of State in Council.

(*Note.*—* The phrase "the effective discharge of its duties" is not to be interpreted in any narrow or restrictive sense. Whether a certain quantity of Land is or is not required by the Government of India for the effective discharge of its duties must be judged not merely with reference to the actual circumstances of the moment, but also with reference to further possible developments and the ideal administrative standard that the Government of India can properly contemplate.)

Rule 4.—When the Government of India no longer require Land which is in their possession, the Local Government of the Province in which it is situate shall be given the option of assuming possession of the whole or any portion thereof, subject to the conditions laid down in the following clauses: provided that (i) when the Local Government desires to assume possession of only a portion of the Land surrendered it shall only be entitled to do so if the value of the Land not taken over is not materially reduced by the division, and (ii) a Local Government shall not be entitled to demand the surrender of isolated plots of land within cantonment or other areas on the ground that such plots are not actually required for the discharge of specific military duties.

Rule 5.—In the case of Land acquired by the Government in any Province *before* 1*st April* 1921 and surrendered after that date to the Local Government the amount of compensation, if any, payable to the Government of India by the Local Government to whom possession is surrendered in any given case shall be determined in accordance with the principles set out below:—

I. (A) *In the case of Land other than that relinquished by a Railway Administration* if the surrender of Land involves expenditure to the Government of India for the acquisition of an alternative site, or if, in the case of Land surrendered by the Military Authorities, the Land was actually being used by them for the effective discharge of their duties, the amount of compensation payable by the Local Government shall be limited to the *market value* of the buildings, if any, *plus*—

(*a*) the cost, if any, of acquisition and improvements of the Land, or
(*b*) half the *market value* of the Land, whichever is *greater*.

(B) In other cases the amount payable by the Local Government shall be limited to the *market value* of the buildings, if any, *plus*—

(*a*) the cost, if any, of acquisition and improvements, or
(*b*) the *market value* of the Land, whichever is *less*:

Provided that in the case of Land surrendered by the Military Authorities in Presidency towns, Rangoon, Karachi, or any Cantonments in which the Land has a specially high value, the terms on which the Land shall be transferred shall be decided by mutual arrangement under Rule 10 below.

* Not in the Resolution; but in the Secretary of State's Despatch No. 9-Financial of ... th February leading up thereto.

II. *In the case of land relinquished by a Railway Administration*, the Local Government shall be required to pay to the Government of India or the Railway Administration, as the case may be, the market value of the Land and Buildings surrendered. Appx. V

(*Note.*—"Market value" means the market value on the date of transfer to the Local Government and includes the capitalized value of Land revenue IF such capitalized value was included in the value of the Land at the time of its acquisition for the Central Government.)

Rule 6.—The Local Government will be at liberty to sell or lease to a third party land of which it assumes possession under rule 5; but if such sale or lease takes place within five years from the date of such assumption and the purchase price or capitalized value of the full market rent (including land revenue or ground rent) is more than double the amount payable by the Local Government under Rule 5, the amount so payable shall be raised to half the purchase price or the capitalized value of the rental as the case may be; *provided that*

(i) in exceptional cases (in such cases rule 10 or 11 might be applied) where special reasons exist, the Government of India shall be entitled to claim a larger share, or even the whole, of the purchase price, or the capitalized value of the rental, and

(ii) if improvements have been effected by the Local Government during the period of its occupation of the Land, the disposal value of such improvement shall be deducted from the purchase price before the division of the sale proceeds.

Rule 7.—In the case of Land acquired by the Government of India in any Province *after* 1*st April* 1921, the amount payable by the Local Government on re-transfer shall be the *market value* of the Land and buildings.

Rule 8.—If they do not desire to assume possession on these terms, the Government of India shall be free to dispose of Land to a third party in such manner *as it thinks fit after consultation with the Local Government* regarding the manner of disposal and conditions, if any, which should be laid down for the use of the Land after sale.

